## நசரேயத் திருச்சபை

# சட்டநூல்

2017 - 2021

CHURCH OF THE NAZARENE
HOLINESS UNTO THE LORD

Church of the Nazarene Manual
(*Tamil*)

# நசரேயத் திருச்சபை

# சட்டநூல்

## 2017–2021

வரலாறு

சபை அமைப்பு முறை

ஆளுகை

வழிபாட்டு முறைமைகள்

சபை அமைப்பு முறைமை மற்றும்
கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கை
(1–99 வரிசை)

உள்ளூர் சபை ஆளுகை முறைமை
(100 வரிசை)

மறைமாவட்ட ஆளுகை முறைமை
(200 வரிசை)

பொது ஆளுகை முறைமை

(300 வரிசை)

மேல்நிலைக் கல்வி
(400 வரிசை)

ஊழியம் மற்றும் கிறிஸ்தவ சேவை
(500 வரிசை)

நீதி நிர்வாகம்
(600 வரிசை)

சாக்கிரமெந்துகள் மற்றும் வழிபாட்டு முறைமைகள்
(700 வரிசை)

அகில உலக நசரேய வாலிபர் குழு,
அகில உலக நசரேய அருட்பணிக் குழு, அகில உலக ஓய்வுநாள் பள்ளி மற்றும்
சீஷத்துவ ஊழியங்களின் பிரிவு மற்றும் ஊழிய திட்டங்கள்/அமைப்பு/சட்ட
பிரிவுகள்
(800 வரிசை)

படிவங்கள்
(800 வரிசை)

பிற்சேர்க்கை
(900 வரிசை)

CHURCH OF THE NAZARENE MANUAL - TAMIL
Copyrights 2018
Church of the Nazarene
Published by the authority of the Twentyninth General Assembly held in Indianapolis,
Indiana, USA, 25-29 June 2017

Edition 2017-2021

Copies 100

Editing Committee
DEAN G. BLEVINS
STANLEY J. RODES
TERRY S. SOWDEN
JAMES W. SPEAR
DAVID P. WILSON

Published by
Nazarene Holiness Literature
#3,4th Cross, 2nd Main
Horamavu Main Road
Dodda Banswadi
BANGALORE -560043
Email: holinessliterature@nazareneindia.org

Literature Coordinator
Vinod Jaykumar Tode
16, Natraj Housing Society
Behind Rainbow Market
Gorewada, Nagpur- 440 013
Email: vtode@nazareneindia.org
Mobile: 7620486514, 9326211064

Printed and bound in India by
GS Media, Secunderabad 500 067
E-mail: printing@ombooks.org

# உள்ளடக்கம்


முகவுரை 7

பாகம் I

வரலாற்று அறிக்கை 11

பாகம் II

சபை அமைப்பு முறைமை 21

பாகம் III

கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கை 39

பாகம் IV

சபை ஆளுகை முறைமை 57

பாகம் V

மேல்நிலைக் கல்வி 171

பாகம் VI

ஊழியம் மற்றும் கிறிஸ்தவ சேவை 177

பாகம் VII

நீதி நிர்வாகம் 225

பாகம் VIII

சாக்கிரமெந்துகள் மற்றும் வழிபாட்டு முறைமைகள் 239

பாகம் IX

பிரிவு மற்றும் ஊழிய திட்டங்கள்/அமைப்பு/துணை விதிகள் 263

பாகம் X

படிவங்கள் 337

பாகம் XI

பிற்சேர்க்கை 343

# முகவுரை

தேசங்களின் மத்தியில் கிறிஸ்துவைப்போன்ற சீஷர்களை உருவாக்குவதே நசரேயத் திருச்சபையின் *ஊழிய நோக்கமாகும்.*

நாம் கிறிஸ்தவர்கள், பரிசுத்தம் மற்றும் ஊழிய நோக்கம் ஆகியவையே நசரேயத் திருச்சபையின் *மைய மதிப்பீடுகளாக* இருக்கின்றன.

அர்த்தமுள்ள ஆராதனை, இறையியல்ரீதியான இணக்கம், உணர்ச்சிப்பூர்வமான சுவிசேஷம், குறிக்கோளைக் கொண்ட சீஷத்துவம், திருச்சபை வளர்ச்சி, மறுரூபமாக்கும் தலைமைத்துவம் மற்றும் நோக்கம் சார்ந்த மனதுருக்கம் ஆகியவை நசரேயத் திருச்சபையின் ஏழு *பண்புகளாக* இருக்கின்றன.

"வேதவசனங்களில் குறிப்பிட்டபடியிலான கிறிஸ்தவ பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு, பிரகடனம் செய்வதின்மூலம் தேவனுடைய இராஜ்யம் பரவும்படி செய்வதே நசரேயத் திருச்சபையின் அடிப்படை செயல்நோக்கமாகும்."

"நசரேயத் திருச்சபையின் மிக முக்கியமான செயல்நோக்கங்கள் பரிசுத்த கிறிஸ்தவ ஐக்கியம், பாவிகளின் மனமாற்றம், விசுவாசிகள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல், ஆதி புதிய ஏற்பாட்டு சபைகளில் காணப்பட்ட பரிசுத்தத்திலும், எளிமையிலும், ஆவிக்குரிய வல்லமையிலும் அவர்கள் கட்டியெழுப்பப்படுதல் இவைகளோடுகூட எல்லாச் சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதாகும்." (19)

உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது மற்றும் போதிப்பதின் மூலம் தேவனுடைய ராஜ்யத்தைப் பரவச் செய்வதில் ஒரு கருவியாகப் பயன்படும்படியாகவே நசரேயத் திருச்சபை இருக்கிறது. பாவிகளை மனமாற்றம் செய்வதின்மூலமாகவும், பின்வாங்கிப்போனவர்களைத் திரும்பக் கொண்டுவருவதின்மூலமாகவும், விசுவாசிகள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுவதின்மூலமாகவும் வேதவசனங்களில் கூறப்பட்டுள்ள கிறிஸ்தவ பரிசுத்தத்தைக் காத்துப் பிரகடனம்செய்வதே எங்களுடைய நன்றாக வரையறை செய்யப்பட்ட ஊழியமாக இருக்கிறது.

எங்களுடைய செயல்நோக்கம் ஆவிக்குரிய ஒன்றாக இருக்கிறது. அதாவது "போய் சகல ஜாதியாரையும் சீஷராக்குங்கள்" என்ற கிறிஸ்துவின் பிரதான கட்டளைக்குச் செவிசாய்ப்பதாக இருக்கிறது (மத்தேயு 28:19; மேலும் பார்க்க, யோவான் 20:21; மாற்கு 16:15). கோட்பாடு அடிப்படையிலான விசுவாச ஷரத்துக்கள், காலம் கடந்து நிற்கும் நல்லொழுக்கத் தகுதி நிலைகள் மற்றும் வாழ்க்கை நடைமுறை இவைகளை உள்ளடக்கிய கோட்பாடு அடிப்படையிலான விசுவாச ஷரத்துக்கள்,

ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகளின்மூலமாக இந்த நோக்கத்தை எட்ட முடியும் என்று நாங்கள் உணர்கிறோம்.

*சட்ட நூலின்* இந்த 2017–2021 பதிப்பில் சபையின் சுருக்கமான வரலாற்று அறிக்கை, விசுவாச ஷரத்துக்களை வரையறை செய்யும் சபையின் அமைப்பு முறைமை, சபையைக் குறித்த நமது புரிந்துகொள்ளுதல், பரிசுத்த வாழ்க்கைக்கான கிறிஸ்தவ பண்பு குறித்த உடன்படிக்கை, அமைப்பு மற்றும் ஆளுகை குறித்த கொள்கைகள், இன்றைய சமுதாயத்தின் முக்கிய பிரச்சினைகளைக் குறித்து இடைபடும் கிறிஸ்தவ நடக்கை குறித்த உடன்படிக்கை, உள்ளூர் சபை, மறைமாவட்ட சபை, பொதுச்சபை உட்பட சபை ஆளுகை குறித்த கொள்கைகள் இவை உள்ளடங்கியிருக்கின்றன.

பொதுக் கூடுகையே நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகளை உறுதிப்படுத்தும், சட்டங்களை உருவாக்கும் அமைப்பாக இருக்கிறது. இந்தச் சட்டநூலில் 2017 ஜூன் 25–29 நாட்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இந்தியானா மாநிலத்தில் இந்தியானாபோலீஸ் நகரில் கூடிய இருபத்து எட்டாவது பொதுக் கூடுகையின் குருத்துவ மற்றும் சாமானியப் பிரதிநிதிகளின் தீர்மானங்களும், தீர்ப்புகளும் உள்ளடங்கியிருக்கின்றன. எனவே இது செயல்நடவடிக்கைக்கு அதிகாரபூர்வமான கையேடாக இருக்கிறது. இது சபையின் விசுவாசம் மற்றும் செயல்பாட்டின் அதிகாரபூர்வமான வாசகமாக இருக்கிறபடியாலும், இது வேதாகமப் போதனைகளுக்கு ஒத்துவருவதாக இருப்பதாலும், எங்குமுள்ள நமது மக்கள் இதன் கோட்பாட்டு ஷரத்துக்களையும், பரிசுத்த வாழ்க்கைக்கு வழிகாட்டி உதவும் வழிகாட்டுதலையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். நசரேயத் திருச்சபையில் உறுப்பினராவதற்கான பிரதிக்ஞைகளை முறைப்படி எடுத்துக்கொண்ட பிறகும், இப்படிச் செய்யத் தவறுவது சபையின் சாட்சியைப் பாதிக்கிறது, அதன் மனச்சாட்சியை மீறுகிறது, நசரேயர் என்று அழைக்கப்படும் மக்களின் ஐக்கியத்தைக் குலைக்கிறது.

நசரேயத் திருச்சபையின் ஆளுகை தனிச்சிறப்பானது. ஆளுகை அமைப்பில் அது முற்றிலுமாகப் பிரஸ்பீட்டீரியன் அமைப்பாகவோ அல்லது முழுமையாக காங்கிரிகேஷனல் அமைப்பாகவோ இராமல் பிரதிநிதித்துவ அடிப்படையிலானதாக இருக்கிறது. ஏனென்றால் சபையின் மற்றும் சட்டத்தை உருவாக்கும் பிரிவுகளில் சாமானியரும் குருத்துவம் சார்ந்தோரும் சமமான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதிகாரத்தில் விரும்பக்கூடியதும் ஆற்றலுடையதுமான சமநிலை காணப்படுகிறது. சபையில் பங்கெடுத்து, ஊழியம் செய்வதில் இதை ஒரு வாய்ப்பாக மட்டும் நாம் பார்க்காமல், சாமானியர் மற்றும் குருத்துவம் சார்ந்தவர்களின் கடமையாகவும் பார்க்கிறோம்.

ஒப்படைப்பும் தெளிவான நோக்கமும் முக்கியமானவையாகும். ஆனால் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட செயல்பாடுகளையும், வழிமுறைகளையும் பின்பற்றும், அறிவுசார்ந்த மற்றும் நன்கறிந்த மக்கள் இராஜ்யத்துக்காக இன்னும் வேகமாகக் கிரியைசெய்கிறார்கள், கிறிஸ்துவுக்கான தங்கள் சாட்சியை மேம்படுத்துகிறார்கள். எனவே நமது உறுப்பினர்கள் இந்தச் சட்டநூலை – சபையின் வரலாறு, மெய்யான நசரேயர்களின் கோட்பாடுகள் மற்றும் நல்லொழுக்கச் செயல்பாடுகள் குறித்த

இந்த நூலை – நன்றாகத் தெரிந்து வைத்திருப்பது அத்தியாவசியமானதாகும். இந்தப் பக்கங்களிலுள்ள காரியங்களைப் பின்பற்றுவது, தேவனுக்கும் சபைக்கும் பற்றுறுதியோடும், உண்மையோடும் இருப்பதை ஊக்குவிக்கும், நமது ஆவிக்குரிய முயற்சிகளின் ஆற்றலையும், செயல்திறனையும் அதிகரிக்கச் செய்யும்.

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேதாகமத்தை நமது மேன்மையான வழிகாட்டியாகவும், சட்டநூலை நமது அதிகாரபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்ட விசுவாச வாசகம், செயல்பாடு மற்றும் ஆளுகை முறைமையாக ஏற்றுக்கொண்டு, நாம் புதிய நான்காண்டைச் சந்தோஷத்தோடும், இயேசு கிறிஸ்துவின்மீது உறுதியான விசுவாசத்தோடும் எதிர்நோக்குகிறோம்.

*பொதுக்கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழு*

யூஜினியோ ஆர். டுவார்ட்டி

கஸ்டவோ ஏ. கிராக்கர்

டேவிட் டபிள்யூ. கிரேவ்ஸ்

பிலிமாவோ எம். சாம்போ

டேவிட் ஏ. பூசிக்

கார்லா டி. சன்பர்க்

## பாகம் I

# வரலாற்று அறிக்கை

நசரேயத் திருச்சபையானது தான் ''ஒரே, பரிசுத்த, உலகளாவிய, அப்போஸ்தல'' சபையின் கிளையென்று அறிக்கையிட்டு, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தேவனுடைய மக்களுடைய வரலாறும், அப்போஸ்தலர் காலத்திலிருந்து நம்முடைய காலம் வரையிலான வரலாறும் தனக்குரிய வரலாறு என்று அறிக்கையிட்டுள்ளது. முதல் ஐந்து கிறிஸ்தவ நூற்றாண்டுகளின் பொதுவான விசுவாசப்பிரமாணங்களைத் நமது சொந்த விசுவாசத்தின் வெளிப்பாடுகளாக ஏற்றுக்கொள்ளுகிறோம். தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தல், சாக்கிரமெந்துகளை அளிப்பது, அப்போஸ்தல விசுவாசம் மற்றும் செயல்பாடுகளைச் செய்யும் ஊழியத்தைக் கடைப்பிடித்தல் மற்றும் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கை மற்றும் ஊழியம் செய்வதற்கான விதிமுறைகளைக் கற்பிப்பது போன்ற வரலாற்றுப்பூர்வமான திருச்சபையின் செயல்பாடுகளோடு நாங்கள் அடையாளம் காணப்படுகிறோம். பரிசுத்த வாழ்வு மற்றும் தேவனுக்கென்று பூரணமான பக்தி போன்ற வேதாகம அழைப்பிற்கு முழுமையான பரிசுத்தமாக்குதல் என்னும் எங்களுடைய இறையியல் கோட்பாட்டின் மூலமாக நாங்கள் எடுத்துரைக்கிறோம்.

நம்முடைய கிறிஸ்தவ பாரம்பரியமானது 16ஆம் நூற்றாண்டின் ஆங்கில எழுச்சி மற்றும் 18ஆம் நூற்றாண்டில் எழுந்த வெஸ்லிய எழுப்புதலினாலும் மத்தியஸ்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஜாண் மற்றும் சார்ல்ஸ் வெஸ்லியின் பிரசங்கங்களின் மூலமாக இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து மற்றும் வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த மக்கள் பாவத்திலிருந்து திரும்பி கிறிஸ்தவ ஊழியத்திற்கான அதிகாரத்தைப் பெற்றார்கள். இந்த மறுமலர்ச்சியானது சாதாரண மக்களின் பிரசங்கம், சாட்சியளித்தல், ஒழுக்கம் மற்றும் மிகுந்த ஆர்வம் கொண்ட சீஷர்களைப் பெற்ற ''சங்கங்கள்'', ''வகுப்புகள்'',

“குழுக்கள்” ஆகியவற்றைப் பெற்றிருந்தது. இந்த வெஸ்லிய மறுமலர்ச்சி இயக்கத்தின் இறையியல்சார்ந்த மைல்கற்கள் இவைகளாக இருக்கின்றன: விசுவாசத்தினால் வரும் கிருபையினால் நீதிமானாக்கப்படுதல்; பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது கிறிஸ்தவ பரிபூரணம். இதுவும் விசுவாசத்தினால் வரும் கிருபையினாலேயே ஏற்படுகிறது. கிருபையின் நிச்சயத்துக்காகப் பரிசுத்த ஆவியானவரின் சாட்சி. ஜாண் வெஸ்லி அவர்களுடைய தனித்துவமான பங்களிப்பானது கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவன் முழுமையாக பரிசுத்தமாக்கப்படுதலை தம்முடைய கிருபையின் ஈவாகக் கொடுத்திருக்கிறார் என்பதேயாகும். இந்தப் பங்களிப்புகள் உலகளாவிய அளவில் பரப்பப்பட்டிருக்கின்றன. வட அமெரிக்காவில், மெத்தடிச எபிஸ்கோபல் திருச்சபை 1784ஆம் ஆண்டு நிறுவப்பட்டது, “இந்தக் கண்டத்தைச் சீரமைத்து, இந்தத் தேசங்களெங்கும் ஆவிக்குரிய பரிசுத்தத்தை பரப்புவது.”

கிறிஸ்தவ பரிசுத்தம் பற்றிய முக்கியத்துவம் புதுமலர்ச்சியடைந்து ஐக்கிய நாடுகளின் கிழக்குப் பகுதியில் 19ஆம் நூற்றாண்டில் நாடெங்கிலும் பரவியது. மசாஸ்துசெட் மாகாணத்தைச் சேர்ந்த பாஸ்டன் நகரில் Guide to Christian Perfection என்ற பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்த திமோத்தி மெர்ரிட் ஆர்வத்தைத் தூண்டினார். அமெரிக்காவில் இருக்கும் நியூ யார்க் மாகாணத்தில் இருக்கும் நியூ யார் நகரைச் சேர்ந்த பெபி பால்மர், “பரிசுத்தத்தை முன்னிருத்தும் செவ்வாய்க் கிழமை சந்திப்பை” வழிநடத்தினார். அவர் எல்லோரும் தேடும் பேச்சாளராகவும், ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் விளங்கினார். 1867ஆம் ஆண்டு மெதாடிச போதகர்களான ஜே. ஏ. வுட், ஜாண் இன்ஸ்கிப் மற்றும் பலர் முதல் முதலாக பரிசுத்தத்தைக் குறித்த முகாம்களை அமெரிக்காவில் நியூ ஜெர்சி மாகாணத்தில் உள்ள வெய்ன்யார்ட் என்ற இடத்தில் துவங்கினார்கள். இது உலகம் முழுவதும் வெஸ்லி முறையிலான பரிசுத்தத்தின் தேடுதலை மறுமலர்ச்சி பெறச்செய்தது. வெஸ்லிய மெதாடிஸ்ட்டுகள், ஃபிரீ மெதாடிஸ்ட்டுகள், இரட்சணிய சேனை மற்றும் சில மென்னோனைட்டுகள், பிரத்திரன் மற்றும் குவாக்கர்கள் கிறிஸ்தவ பரிசுத்தத்திற்கு அழுத்தம் கொடுத்தனர். இந்த இயக்கத்தை சுவிசேஷகர்கள் ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்கான்டிநாவியா, இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குக் கொண்டு சென்றார்கள். பரிசுத்தத்தைக் கொண்டு புதிய திருச்சபைகள் எழும்பின. அதில் சர்ச் ஆப் காடும் அடங்கும் (ஆண்டர்சன், இந்தியானா, அமெரிக்கா). பரிசுத்த திருச்சபைகள், கிராமிய ஊழியங்கள் மற்றும் ஊழிய குழுக்கள் இந்த முயற்சியின் மூலமாகத் துவங்கப்பட்டன. இவற்றில் பலவற்றைச் சேர்த்து ஒரே பரிசுத்த சபையாக உருவாக்கும் முயற்சியிலேயே நசரேயத் திருச்சபை உருவாக்கப்பட்டது.

### பரிசுத்தத்தில் ஐக்கியம்

பிரெட் ஹில்லரி மக்கள் சுவிசேஷ திருச்சபையை 1887ஆம் ஆண்டு நிறுவினார் (பிராவிடன்ஸ், ரோட் ஐலாண்டு, அமெரிக்கா). அருட்பணி திருச்சபை (லின், மசாஸ்டுசஸ்ட், அமெரிக்கா) அதைத் தொடர்ந்து 1888ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1890ஆம் ஆண்டு இவர்களும், இவர்களோடு எட்டு நியூ இங்கிலாந்து சபைக்குழுக்கள் சேர்ந்து மத்திய சுவிசேஷ பரிசுத்த சங்கத்தை ஏற்படுத்தின.

அன்னா எஸ். ஹான்ஸ்கம் 1892ஆம் ஆண்டு நசரேய வரலாற்றில் முதன் முதலில் பட்டமளிக்கப்பட்ட பெண் போதகரானார். 1894–1895 ஆண்டுகளில், புரூக்லின், நியூ யார்க், அமெரிக்காவில் வில்லியம் ஹோவார்ட் ஹூப்பிள் என்பவர் மூன்று பரிசுத்த சபைக்குழுக்களை நிறுவினார். இவை அமெரிக்காவின் பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் குழு என்பதை உருவாக்கின. "பெந்தெகொஸ்தே" என்பதற்கு "பரிசுத்தம்" என்ற அர்த்தத்தை இவர்களுக்கும், நசரேய திருச்சபையை நிறுவியவர்களும் கொண்டிருந்தார்கள். ஹில்லாரி மற்றும் ஹூப்பிளின் குழுக்கள் 1896ஆம் ஆண்டு இணைந்து, இந்தியா (1899) மற்றும் கேப் வேர்டி (1901) ஆகிய இடங்களில் தங்களுடைய பணிகளைத் துவங்கினார்கள். அருட்பணி செயலாளரான ஹிராம் எப். ரேனால்ட்ஸ் கனடா நாட்டில் சபைகளை நிறுவினார் (1902). இந்தக் கூட்டம் நோவா ஸ்காட்டியாவிலிருந்து, கனடா சென்று, பின்னர் அமெரிக்காவில் இருக்கும் ஐயோவாவிற்கு 1907ஆம் ஆண்டு சென்றடைந்தது.

ராபர்ட் லீ ஹாரிஸ் அவர்கள் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு திருச்சபையை மிலன், டென்னெஸ்ஸி, அமெரிக்காவில் 1894ஆம் ஆண்டு ஆரம்பித்தார். அவருடைய விதவையான மேரி லீ கேகிள் அதை 1895ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருக்கும் மேற்கு டெக்சாஸ் மாகாணத்திற்கு பரப்பினார். சி. பி. ஜெர்னிகன், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள வான் அலிஸ்டைன் என்ற இடத்தில் முதல் தனிப்பட்ட பரிசுத்த திருச்சபையை நிறுவினார். இந்தத் திருச்சபைகள் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ரெய்சிங் ஸ்டார் என்ற இடத்தில் ஒன்று சேர்ந்து கிறிஸ்துவின் பரிசுத்த சபையை உருவாக்கின (1904). 1908ஆம் ஆண்டிற்குள் அது அமெரிக்காவின் ஜார்ஜியாவிலிருந்து, நியூ மெக்சிகோ வரைப் பரவியிருந்தது. அது இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளில் தன்னுடைய பணியார்களைக் கொண்டு தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டவர்களுக்கும், தேவையில் உள்ளவர்களுக்கும், அநாதைகளுக்கும், திருமணமாகாமல் மகப்பேறு அடைந்த தாய்மார்களுக்கும் உதவி செய்தது.

1895ஆம் ஆண்டு பினியாஸ் எப். பிரெஸ்சி மற்றும் ஜோசப் பி. விட்நி ஆகிய இருவரும் இன்னும் 100 பேரோடு சேர்ந்து அமெரிக்காவில், காலிபோர்னியா மாகாணத்தில் நசரேயத் திருச்சபையை நிறுவினார்கள். விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி, ஏழைகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்று நிலைநாட்டினார்கள். அவர்களுடைய நேரம் மற்றும் பணத்தை ஆத்துமாக்களை இரட்சிக்கும், தேவையில் இருப்பவர்களைச் சந்திக்கும் கிறிஸ்துவைப் போன்ற ஊழியங்களுக்குச் செலவிடவேண்டும் என்று விசுவாசித்தார்கள். அமெரிக்காவின் மேற்கு கடற்கரை முழுவதிலும் நசரேயத் திருச்சபை பிரதானமாகப் பரவியது. சில சபைகள் ராக்கி மவுண்டன்சின் கிழக்குப் பகுதியிலிருந்து, இல்லியானாஸ் வரை இருந்தன. அவை இந்தியாவின் கல்கத்தாவில் இருக்கும் உண்மையான அருட்பணி இயக்கத்திற்கு ஆதரவளித்தது.

1907ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், அமெரிக்காவின் பெந்தெகொஸ்தே திருச்சபைகளின் குழுவும், நசரேயத் திருச்சபையும் சேர்ந்து அமெரிக்காவின்

இல்லியானாஸ் மாகாணத்தின் சிக்காகோ நகரில் கூடினார்கள். அவர்கள் சுயேச்சை நிலையோடு ஒரு கண்காணிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் சபை நிர்வாகத்தை உருவாக்க முற்பட்டார்கள். நிறுவப்பட்ட திருச்சபைகளைப் பார்த்துக்கொள்ளவும், புதிய திருச்சபைகளை ஊக்குவித்து உருவாக்கவும், ஆனால் முழுமையாக நிறுவப்பட்ட திருச்சபையின் நிர்வாகத்தின் தனிப்பட்ட செயல்களில் தலையிடாமலும் கண்காணிப்பாளர்கள் இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இதில் கிறிஸ்துவின் பரிசுத்த திருச்சபையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். முதல் பொதுக்கூடுகையில் இந்த இரண்டு சபையின் பெயர்களையும் சேர்த்து ஒரு புதிய பெயர் உருவாக்கப்பட்டது: நசரேய பெந்தெகொஸ்தே திருச்சபை. பிரசியும், ரேனால்டும் அதன் பொதுக் கண்காணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பின்னர் செப்டம்பர் 1908ஆம் ஆண்டில் எச். ஜி. டிரம்பரின் தலைமையின் கீழ் இருந்த பென்செல்வேனியாவின் பரிசுத்தக் கிறிஸ்தவ திருச்சபை இந்த நசரேய பெந்தெகொஸ்தே திருச்சபைகளோடு சேர்ந்துகொண்டது.

அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் இரண்டாவது பொதுக்குழுக் கூடுகை அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் பைலட் பாயிண்ட் என்ற இடத்தில் கிறிஸ்துவின் பரிசுத்த திருச்சபையின் பொதுக்குழுவோடு நிகழ்ந்தது. அக்டோபர் 13ஆன செவ்வாய்க் கிழமை காலையில் மிட்சம் முன்மொழிய, சி. டபிள்யூ ரூத் பின்வரும் கருத்திற்கு ஆதரவு தெரிவித்தார்: ‘‘தற்போது இந்த இரு திருச்சபைகளின் இணைப்பும் நிறைவேற்றப்படுகிறது.’’பிரெசி இதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்திருந்தார். காலை 10:40 மணிக்கு, உற்சாக வரவேற்புக்கிடையே இணைப்பைக் குறித்தத் தீர்மானம் ஏகமனதான வாக்குகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஜெ. ஒ. மெக்கிளர்கனால் வழிநடத்தப்பட்ட பெந்தெகொஸ்தே மிஷன் திருச்சபை அமெரிக்காவில் இருக்கும் டென்னெஸி மாகாணத்தின் நாஷ்வெல் என்ற இடத்தில் 1898ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இது டென்னெஸியில் இருக்கும் பரிசுத்த மக்களையும், அமெரிக்காவில் இருக்கும் பக்கத்து மாகாணத்து மக்களையும் இணைத்தது. அவர்கள் போதகர்களையும், ஆசிரியர்களையும் கியூபா, கொடிமாலா, மெக்சிகோ மற்றும் இந்தியாவிற்கு அனுப்பினார்கள். 1906ஆம் ஆண்டு கிறிஸ்தவ பரிசுத்தத்தைக் குறித்த வெஸ்லியன் கோட்பாட்டைப் போதிக்கும்படி ஸ்காட்லாந்து நாட்டிலிருக்கும்கிளாஸ்கோ நகரில்பார்க்ஹெட் காங்கிரிகேசனல்திருச்சபையிலிருந்து ஜார்ஜ் ஷார்ப் தேர்ந்தெடுக்கப்பட்டார். பார்க்ஹெட் பெந்தெகொஸ்தே திருச்சபை உருவாக்கப்பட்டது. மற்ற திருச்சபைகளும் உருவாக்கப்பட்டன. ஸ்காட்லாந்து நாட்டின் பெந்தெகொஸ்தே திருச்சபை 1909ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே மிஷனும், ஸ்காட்லாந்து பெந்தெகொஸ்தே திருச்சபையும் 1915ஆம் ஆண்டு பெந்தெகொஸ்தே நசரேயர்களோடு இணைந்தன.

ஐந்தாவது பொதுக்குழு (1919) இந்தப் பிரிவின் அதிகாரப்பூர்வமான பெயரை நசரேயத் திருச்சபை என்று மாற்றியது ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில் ‘‘பெந்தெகொஸ்தே’’ என்ற வார்த்தை வேறு அர்த்தங்களைப் பெறத்துவங்கியிருந்தது.

## உலகளாவிய திருச்சபை

நசரேயத் திருச்சபையின் அடிப்படை பண்புகள் 1915ஆம் ஆண்டுக்குள் இணைந்திருந்த துவக்ககால திருச்சபைகளினால் உருவாக்கப்பட்டுவிட்டது. இதற்கு ஒரு உலகளாவிய பரிமாணம் இருந்தது. இந்தப் பிரிவு அமெரிக்கா, இந்தியா, கேப் வார்டே, கியூபா, கனடா, மெக்சிகோ, குவாத்தமாலா, ஜப்பான், அர்ஜென்டீனா, இங்கிலாந்து, சுவாசிலாந்து, சீனா மற்றும் பெரு போன்ற நாடுகளில் முழுமையாக உருவாகியிருந்த திருச்சபைகளுக்கு ஆதரவளித்துவந்தது. 1930ஆம் ஆண்டுகளில் அது தென் ஆப்பிரிக்கா, சிரியா, பாலஸ்தீனம், மொசாம்பிகு, பார்படோஸ் மற்றும் ட்டிரினிடாட் வரை வளர்ந்திருந்தது. தேசிய தலைவர்கள் இந்தச் செயல்முறைக்குப் பொறுப்பாக இருந்தார்கள். மறைமாவட்ட கண்காணிப்பாளர்களான வி. ஜி. சான்டின் (மெக்சிகோ), ஹிரோஷி கிட்டாகவா (ஜப்பான்) மற்றும் சாமுவேல் புஜ்பால் (இந்தியா) போன்றவர்கள் இதில் முக்கிய பங்காற்றினார்கள். இப்படிப்பட்ட உலகளாவிய பரிமாணம் இன்னும் புதிய சேர்க்கைகளின் மூலமாக வளர்ச்சிப்பெற்றது.

1922ஆம் ஆண்டு ஜெ. ஜி. மாரிசன் அவர்கள் சாமானியர்களின் பரிசுத்த சங்கத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஊழியர்களோடும், அமெரிக்காவில் இருந்த டகோட்டாஸ், மன்னிசோட்டா மற்றும் மான்டானா போன்ற இடங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களோடு திருச்சபையில் சேர்ந்தார். 1930களில் ராபர்ட் சங் கொரிய போதகர்கள் மற்றும் திருச்சபைகளின் கூட்டத்தை நசரேயத் திருச்சபைக்கு வழிநடத்தினார். ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த திருச்சபைகள் 1945ஆம் ஆண்டு ஏ. ஏ. இ. பேர்க் அவர்களின் வழிநடத்துதலின் கீழ் வந்து சேர்ந்துகொண்டன. ஆல்பிரரோட டெல் ரோஸ்ஸோ 1948ஆம் ஆண்டு இத்தாலிய திருச்சபைகளைக் கொண்டுவந்து சேர்த்தார். 1950ஆம் ஆண்டுகளில் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஹெப்சிபா விசுவாச மிஷனரி குழுவும் அமெரிக்காவின் ஐயோவா மாகாணத்தில் டாபரில் இருந்த அவர்களுடைய சபையும் நசரேயர்களோடு இணைந்துகொண்டது.

டேவிட் தாமஸ் அவர்களால் இங்கிலாந்து நாட்டில் இருக்கும் லண்டனில் 1907ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச பரிசுத்த அருட்பணி இயக்கம் டேவிட் ஜோன்ஸ் அவர்களின் கீழ் ஆப்பிரிக்காவின் தென்பகுதியில் பெரிய விரிவாக்கத்தைப் பெற்றது. 1952ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் ஜெ. பி. மெக்லாகன் தலைமையில் இருந்த திருச்சபைகளும், ஆப்பிரிக்காவில் நடந்த பணிகளும் நசரேயர்களோடு இணைக்கப்பட்டன. இங்கிலாந்தில் 1934ஆம் ஆண்டு மேனார்ட் ஜேம்ஸ் மற்றும் ஜேக் போர்ட் ஆகிய இருவரும் கல்வாரி பரிசுத்த திருச்சபையைத் துவங்கினார்கள். அது 1955ஆம் ஆண்டு நசரேயர்களோடு இணைந்துகொண்டது. 1918ஆம் ஆண்டு பிராங்க் கோப் என்பவரால் கனடா நாட்டில் துவங்கப்பட்ட கனடா நற்செய்தி ஊழியர் திருச்சபையானது 1958ஆம் ஆண்டு நசரேயத் திருச்சபையோடு இணைந்துகொண்டது. 1940ஆம் ஆண்டுகளில் நைஜீரியா நாட்டில் சிலர் தனிப்பட்ட நசரேயத் திருச்சபையை நிறுவினார்கள். அது ஜெரேமியா யூ. எகைடெம் என்பவரின் தலைமையின் கீழ் 1988ஆம் ஆண்டு சர்வதேச குழுவோடு இணைந்துகொண்டது.

ஆரம்பகாலத்திலிருந்தே நசரேயர்கள் வேண்டுமென்றே புராட்டஸ்டன்டு கோட்பாடுகளிலிருந்து மாறுபட்டதாகத் தங்களுடைய திருச்சபை இருக்க வேண்டும் என்று மிகவும் கவனமாக இருந்தார்கள். 1976ஆம் ஆண்டு இந்தத் திருச்சபைப் பிரிவின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை நிர்ணயிப்பதற்காக ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் 1980ஆம் ஆண்டு அவர்களுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அதில் சர்வதேசமயமாக்குதல் என்பது இரண்டு கொள்கைகளின் அடிப்படையில் நிகழ வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. முதலாவதாக, நசரேயத் திருச்சபைகளும், மறைமாவட்டங்களும் சர்வதேசரீதியில், "உலகலாவிய விசுவாசிகளின் ஐக்கியத்தைக் கொண்டிருக்கிறது. அதில் அவர்களுடைய கலாச்சாரப் பின்னணியின் கீழ் முழுமையான ஏற்றுக்கொள்ளுதல் இருக்கிறது" என்று எடுத்துரைக்கப்பட்டது. இரண்டாவதாக, "நசரேயத் திருச்சபையின் தனித்துவமான இலக்கிற்கு ஏற்றவாறு பொதுவான ஒப்புக்கொடுத்தல்" என்பதை அடையாளம் காட்டினார்கள். அதில் "நசரேய அடையாளத்தை எடுத்துக்காட்டும் மாற்றமில்லாத கொள்கைகளின் மையப்பகுதியாக ஆவிக்குரிய பரிசுத்தத்தைப் பரப்புவதே முக்கியமான பகுதி" போன்றவை நிலைநாட்டப்பட்டன.

1980ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் விசுவாச கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு "சர்வதேச இறையியல் ஒற்றுமை" என்ற நிலைப்பாடை ஏற்றுக்கொண்டார்கள். எல்லாப் போதகர்களுக்கும் இறையியல்ரீதியான பயிற்சி வழங்கப்படுவதும் மற்றும் ஒவ்வொரு இடத்திலும் இறையியல் கல்வியை வழங்கும் ஸ்தாபனங்களுக்குப் போதுமான உதவி வழங்கப்படுவதும் முக்கியம் என்று முடிவுசெய்யப்பட்டது. சர்வதேச பரிசுத்த ஐக்கியமாக, ஒரே ஒரு தொடர்பு நிலையைக் கொண்டிருக்கும் முதிர்வை நசரேயர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று அழைப்புவிடுக்கப்பட்டது. அந்த நிலையானது மக்களையும் தேசங்களையும் "பலமுள்ள, பெலவீனமான மற்றும் கொடுப்பவர்கள், பெற்றுக்கொள்பவர்கள்" என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்து "இந்த உலகத்தை ஒரு புதிய வழியில் பார்க்கும்: பங்குதாரர்கள் அனைவரின் பலங்களையும் கருத்தில் கொண்டு எல்லோருக்கும் சமநிலையை வழங்குதல்" என்ற வழியை வகுத்தது.

குறிப்பு: இருபதாவது பொதுக்குழு கூட்டம், நசரேயத் திருச்சபை (1980): 232. பிராங்கின் குக், சர்வதேச பரிமாணம் (1984): 49.

புராட்டஸ்டன்டுகளுக்கிடையே நசரேயத் திருச்சபையானது ஒரு தனித்துவமான வளர்ச்சியைப் பெற்றது. 1998ஆம் ஆண்டின்படி நசரேயர்களில் பாதிப்பேர் அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழவில்லை. 2001ஆம் ஆண்டு நடந்த பொதுக்குழு கூடுகையில் 41 சதவீதம் பேர் ஆங்கிலத்தைத் தங்களுடைய இரண்டாம் மொழியாகக் கொண்டிருந்தார்கள். அதே சதவீதம் பேர் ஆங்கிலமே பேசத் தெரியாதவர்களாக இருந்தார்கள். திருச்சபையின் பொதுக் கண்காணிப்பாளராக 2009ஆம் ஆண்டு ஆப்பிரிக்கரான கேப் வார்டேவைச் சேர்ந்த யூஜினோ டுவார்டே தெரிந்தெடுக்கப்பட்டார். 2013ஆம் ஆண்டு மத்திய அமெரிக்க நாடான குவாத்தமாலாவைச் சேர்ந்த கஸ்டாவோ குராக்கர் தெரிந்தெடுக்கப்பட்டார். 2017ஆம் ஆண்டு மற்றொரு ஆப்பிரிக்கரான பிலிமாவோ சாம்போ, மொசாம்பிக்கு நாட்டிலிருந்து

தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். முதன்முறையாக பொதுக் கண்காணிப்பாளர்களின் கூட்டமைப்பில் பாதிக்கும் மேற்பட்டோர் வட அமெரிக்காவிற்கு வெளியே பிறந்து, வளர்க்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2017ஆம் ஆண்டில் 471 மறைமாவட்டங்களில், 160க்கும் மேலான உலக இடங்களில் 2.5 மில்லியன் உறுப்பினர்களைத் திருச்சபைக் கொண்டிருந்தது. இதில் 28 சதவீதம் பேர் ஆப்பிரிக்கர்களாகவும், 29 சதவீதம் பேர் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபிய தீவுகளில் வசிப்பவர்களாக இருந்தார்கள். நான்கில் ஒருபங்கு பேர் ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் கனடாவில் வசிக்கிறார்கள். ஐரோப்பாவில் நிறுவப்பட்ட மறைமாவட்டங்கள் கிழக்கு ஐரோப்பாவிலும் சபைகளை ஸ்தாபிப்பதற்கு உதவி செய்தன. ஆசியாவில் பாரம்பரியமாக கொரியா, ஜப்பான் மற்றும் இந்தியாவில் இருந்த திருச்சபைகள், தென்கிழக்கு ஆசியாவிலும் வரத்துவங்கின. 2017ஆம் ஆண்டின்படி மறைமாவட்டங்களின் அளவில் முதல் மூன்று இடங்கள் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் தான் இருக்கின்றன. ஆராதனை பங்களிப்பில் முதல் மூன்று இடங்களை தென் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளைச் சேர்ந்த திருச்சபைகளே பெறுகின்றன.

## சர்வதேச ஊழியத்தின் தனிச்சிறப்புகள்

வரலாற்றுப்பூர்வமாகப் பார்த்தால் நசரேய உலகளாவிய ஊழியங்கள் சுவிசேஷத்தை அறிவித்தல், காருண்ய ஊழியம் மற்றும் கல்வியைப் பரப்புதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு செயல்பட்டுவருகிறது. பல கலாச்சாரங்களைச் சேர்ந்த மிஷனரிகள் மற்றும் ஆயிரக்கணக்கான உள்ளூர் போதகர்கள் மற்றும் லே பணியாளர்களின் ஒத்துழைப்பினால் நிகழ்ந்து வருகிறது. இவர்கள் தங்களுடைய சொந்த கலாச்சாரங்களில் வெஸ்லிய கொள்கைகளை உட்புகுத்தி செயல்பட்டுவருகிறார்கள்.

*சுவிசேஷத்தை அறிவித்தல்.* ஹிராம் எப். ரேனால்டு அவர்களே பல கலாச்சாரங்கள் சேர்ந்த நசரேய ஊழியங்களை ஸ்தாபித்தவராக இருக்கிறார். பொதுக் கண்காணிப்பாளராக அவர் பணியாற்றிய கால் நூற்றாண்டில் ஊழியம் செய்வதே முக்கியத்துவம் வாய்ந்தது என்று திருச்சபை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். 1915ஆம் ஆண்டு முதல் நசரேய சர்வதேச ஊழியங்கள் (ஆரம்பத்தில் பெண்கள் மிஷனரி சொசைட்டி என்றழைக்கப்பட்டது) இந்த உலகம் முழுவதும் பல திருச்சபைகளில் ஊழியத்தைக் குறித்த கல்வி வழங்குவதற்காக பண உதவி செய்திருக்கிறார்கள். வட அமெரிக்காவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் வீட்டு ஊழியங்களையே மையமாகக் கொண்டிருக்கிறது. தேசிய அளவிலான மிஷனரிகளான ஜான் டியாஸ் (கேல் வார்டே), சாண்டோஸ் எலிசோன்டோ (மெக்சிகோ), சாமுவேல் கிரிகோரியன் (பாலஸ்தீனம்), ஜே. ஐ. நாகமட்சு (ஜப்பான்) மற்றும் ராபர்ட் சாங் (கொரியா) ஆகியோர் ஆதிகாலத்து தலைவர்களாக இருக்கிறார்கள். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஏற்பட்ட மைய நூற்றாண்டின் ஆத்துமாக்களுக்கான எழுப்புதல் என்ற எழுப்புதல் இயக்கம் உலக சுவிசேஷ அறிவிப்பிற்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. வட அமெரிக்காவில் வீட்டு மிஷன்கள் விரிவடைந்தன. மற்ற கண்டங்களில் புதிய இடங்கள் திறக்கப்பட்டன.

நகரமயமாக்கப்படுதலின் காரணமாக ஏற்பட்ட சுவிசேஷத்தின் மூலமாக 1970களில் ஊழியத்தின் முக்கிய மையமாக அவைகளே காணப்பட்டன. புதிய வகையான நகர்ப்புற ஊழியங்கள் துவங்கப்பட்டன. திருச்சபையானது 1980களில் ''நகரங்களுக்குத் தள்ளப்படுதல்'' என்னும் சர்வதேச அழுத்தத்தை எடுத்துக்கொண்டது. 1990களில் இந்தத் திருச்சபை கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்தது. கிழக்கு ஆப்பிரிக்க மறுமலர்ச்சியில் நசரேயர்கள் பங்குகொள்கிறார்கள். அவர்கள் மிகவும் வேறுபட்ட நாடுகளான பங்களாதேஷ் போன்ற இடங்களிலும் ஊழியம் செய்கிறார்கள். அந்நாட்டில் மார்ச் 24, 2010ஆம் ஆண்டில் 193 மூப்பர்கள் ஊழியத்திற்காக ஒரே ஆராதனையில் அர்ப்பணிக்கப்பட்டார்கள். இது கிறிஸ்தவ வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

*கருணையுள்ளம்.* ஆதி நசரேயர்கள் தேவனுடைய கிருபைக்குச் சாட்சியாக பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இந்தியாவிற்கு உதவி செய்து, அனாதைகள், திருமணமாகாத பெண்களுக்கு குழந்தைப்பேறு மையங்கள் மற்றும் போதைக்கு அடிமையானவர்களுக்கும், உறவுகள் இல்லாதவர்களுக்கும் ஊழியம் செய்யும் மிஷன்களையும் உருவாக்கினார்கள். 1920களில் திருச்சபையின் சமுதாய ஊழியங்கள் மருத்துவம் பக்கமாக திரும்பின. சீனா மற்றும் சுவாசிலாந்தில் மருத்துவமனைகள் கட்டப்பட்டன. பின்னர் இந்தியா மற்றும் பபுவா நியூ குனியாவிலும் கட்டப்பட்டன. நசரேய மருத்துவர்கள் வியாதியஸ்தர்களை கவனித்துக்கொண்டார்கள், அறுவை சிகிச்சைகளைச் செய்தார்கள், செவிலியர்களுக்கு பயிற்சியளித்தார்கள் மற்றும் உலகத்தில் மிகவும் ஏழையாக இருக்கும் மக்களின் மத்தியில் நடமாடும் மருத்துவ கிளினிக்குகளை அனுப்பினார்கள். தனித்துவமான கிளினிக்குகளும் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்காவில் தொழுநோய்க்கான பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1980களில் நசரேய கருணையுள்ள ஊழியங்கள் உருவாக்கியதின் மூலமாக இன்றுவரை செயல்படக்கூடிய சமுதாய ஊழியங்கள் நிறுவ முடிந்தது. அதில் சிறுவர் ஆதரவு, பேரிடர் மேலாண்மை, எய்ட்ஸ் கல்வி, ஆனாதைகளுக்கு உதவி செய்தல், தண்ணீர் இல்லாத இடங்களில் தண்ணீர் கொடுத்து உதவி செய்தல் மற்றும் உணவு விநியோகம் ஆகியவை உள்ளடங்கியிருக்கிறது.


*கல்வி.* நசரேய ஞாயிறு பள்ளிகளும், வேதாகம பள்ளிகளும் எப்போதுமே திருச்சபையின் ஒரு பங்காக இருந்து வருகின்றன. அவை கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. திருச்சபையானது அடிப்படை கல்வி மற்றும் கல்வி பயிற்றுவித்தலில் 1905ஆம் ஆண்டு கல்கத்தாவில் பெண்களுக்கான நம்பிக்கைப் பள்ளி துவங்கப்பட்டதிலிருந்து செய்து வருகிறது. சமுதாய, பொருளாதார மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் முழுமையாகப் பங்கெடுப்பதற்கு ஏற்றவாறு மக்களை நசரேய பள்ளிகள் ஆயத்தப்படுத்துகின்றன. ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த ஆதி நசரேய கல்லூரியில் 20ஆம் நூற்றாண்டில் நடுவரை பெரும்பாலும் ஆரம்ப கல்வி நிலையங்களையும், மேல்நிலைப் பள்ளிகளையும் கொண்டிருந்தன. நசரேயத் திருச்சபையின் ஸ்தாபகர்கள் மேற்படிப்பில் குறிப்பிடத்தகும் அளவிற்கு முதலீடு செய்தார்கள். போதகர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், மற்ற கிறிஸ்தவ

பணியாளர்களுக்கும், பிற பணியாளர்களுக்கும் மிகவும் அத்தியாவசியமானது என்று அவர்கள் விசுவாசித்தார்கள். கல்விக்கான சர்வதேச இயக்கம் இந்த உலகம் முழுவதும் 53 நசரேய உயர்க்கல்வி நிறுவனங்கள் இருப்பதாக பட்டியலிட்டிருக்கிறது. அதில் இருக்கும் கலைக் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் ஆப்பிரிக்கா, கனடா, கோரியா, சுவாசிலாந்து, ட்ரினிடாட் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் காணப்படுகின்றன. 30 வேதாகம கல்லூரிகளும், செவிலிய பயிற்சி பள்ளிகளும் இந்தியா மற்றும் பப்பா நியு குனியாவில் இருக்கின்றன. இறையியலில் இளநிலைப் படிப்பைக் கொடுக்கும் பள்ளிகள் ஆஸ்டிரேலியா, கோஸ்டா ரிக்கா, இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் காணப்படுகின்றன.

நசரேயத் திருச்சபை காலப்போக்கில் சர்வதேச சமூகம் என்ற நிலையிலிருந்து சர்வதேச விசுவாசிகளின் சமுதாயமாக மாறியிருக்கிறது. வெஸ்லிய பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு நசரேயர்கள் தாங்கள் கிறிஸ்தவர்களாக, பரிசுத்தமாக, ஊழிய நோக்கோடு இருப்பவர்களாக இருக்கிறோம் என்பதைப் புரிந்து அவர்களுடைய ஊழிய இலக்கை ஏற்றுக்கொள்கிறார்கள்: “தேசங்களின் மத்தியில் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குதல்.”

## சபை அமைப்பு முறைமை ஒழுங்குமுறை வரைபடம் (விளக்கங்களோடு)

♦ அகில உலக நசரேயத் திருச்சபை ♦ அரசாங்கம் மற்றும் கோட்பாடுகள் – சட்டநூல் விதிகள் 22–27 ♦



# பாகம் II

# சபை அமைப்பு முறைமை

முகவுரை
விசுவாசக் கோட்பாடுகள்
திருச்சபை
அமைப்பு மற்றும் நிர்வாகச் சட்டங்கள்
சட்டத் திருத்தங்கள்

## சபை அமைப்பு முறைமைக்கான முகவுரை

தேவனால் அளிக்கப்படும் சிறப்பு உரிமையையும், பரிசுத்தவான்களுக்கு முன்பு அளிக்கப்பட்ட விசுவாசத்தையும் பாதுகாக்கவும், குறிப்பாகப் பரிசுத்தமாக்குதலின் கோட்பாட்டையும், அனுபவத்தையும் கிருபையின் இரண்டாவது கிரியையாகப் பாதுகாக்கவும், மனிதரிடையே தேவனுடைய ராஜ்யம் பரவுகிறதற்கு ஏற்ற வகையில் இயேசு கிறிஸ்துவின் திருச்சபையின் மற்ற அங்கங்களோடு பயனளிக்கும் வகையில் ஒன்றுபட்டுச் செயலாற்றவும், நசரேயத் திருச்சபையின் போதகர்களும், சபையின் உறுப்பினர்களுமாகிய நாங்கள் எங்களுக்கிடையே தீர்மானிக்கப்பட்டுள்ள அமைப்புச் சட்ட விதிகளின் கருத்துக்களுக்கு ஏற்ப, கீழே கொடுக்கப்பட்டுள்ள விசுவாசக் கோட்பாடுகள், பொதுவான விதிகள் மற்றும் நிர்வாக ஆளுகை விதிகள் இவற்றை முன்மொழிந்து, ஏற்றுக்கொண்டு நசரேயத் திருச்சபையின் அடிப்படைச் சட்டம் அல்லது அமைப்பு விதிமுறையாக வெளிப்படுத்துகிறோம்:

## விசுவாசக் கோட்பாடுகள்

குறிப்பு: இந்த விசுவாசக் கோட்பாடுகளுக்கு வேத வசனங்கள் உறுதுணையாக இருக்கின்றன. அவை 1976ஆம் ஆண்டின் பொது அசெம்பிளியின் செயல்பாட்டின் மூலமாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை அமைப்பு முறைமையின் ஒருபகுதியாகக் கருத வேண்டாம்.

## 1. திரியேக தேவன்

**1.** நாம் நித்திய காலமாக ஜீவித்து ஆளுகைசெய்கிறது, முடிவில்லாத, உலகமெங்கும் சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகரும், காப்பவருமாக இருக்கும் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம். அவர் ஒருவரே தேவன். அவர் பண்பிலும், தன்மையிலும், நோக்கத்திலும் பரிசுத்தமானவராக இருக்கிறார். பரிசுத்த அன்பு மற்றும் வெளிச்சத்தில் தேவனாக இருப்பவர் திரித்துவத்தில் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியாக வெளிப்படுத்தப்படுகிறார்.

(ஆதியாகமம் 1; லேவியராகமம் 19:2; உபாகமம் 6:4–5; ஏசாயா 5:16; 6:17; 40:18–31; மத்தேயு 3:16–17; 28:19–20; யோவான் 14:6–27; 1 கொரிந்தியர் 8:6; 2 கொரிந்தியர் 13:14; கலாத்தியர் 4:4–6; எபேசியர் 2:13–18: 1 யோவான் 1:5; 4:8).

## 2. இயேசு கிறிஸ்து

**2.** நாம் திரித்துவ தேவத்துவத்தில் இரண்டாம் நபராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்; அவர் பிதாவானவரோடு நித்தியமாக ஒன்றாக இருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக மனிதரூபமெடுத்து, கன்னி மரியாளிடத்தில் பிறந்து, இரு முழுமையான மற்றும் பூரணமான இயல்புகளாகிய தேவத்துவமும், மனுஷத்துவமும் ஒரே நபரில் ஒன்றுபடும்படி செய்தார். அவர் தெய்வமாகவும், மனிதனாகவும் இருந்து தேவ மனிதனாக உருவெடுத்தார்.

இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை நாம் விசுவாசிக்கிறோம். அவர் மெய்யாகவே மரணத்தை ஜெயித்து, மனித பண்புகள் அனைத்தையும் தம்முடைய சரீரத்தோடு சேர்த்து மறுபடியுமாகப் பெற்றுக்கொண்டு பரலோகத்திற்கு ஏறி, நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பதையும் விசுவாசிக்கிறோம்.

(மத்தேயு 1:20–25; 16:15,16; லூக்கா 1:26–35; யோவான் 1:1–18; அப்போஸ்தலர் 2:22–36; ரோமர் 8:3, 32–34; கலாத்தியர் 4:4,5; பிலிப்பியர் 2:5–11; கொலோசெயர் 1:12–22; 1 தீமோத்தேயு 6:14–16; எபிரெயர் 1:1–5; 7:22–28; 9:24–28; 1 யோவான் 1:1–3; 4:2–3,15)

## 3. பரிசுத்த ஆவியானவர்

**3.** திரித்துவ தேவத்துவத்தின் மூன்றாம் நபரான பரிசுத்த ஆவியானவரை நாம் விசுவாசிக்கிறோம். அவர் எப்போதும் இருக்கிறார் என்றும், கிறிஸ்துவின் சபையில் எப்போதும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்றும், பாவத்தைக் குறித்து இந்த உலகத்திற்கு உணர்த்தி, மனந்திரும்பி விசுவாசிப்பவர்கள் அனைவரையும்

மறுபிறப்பைப் பெறச் செய்து, விசுவாசிகளை பரிசுத்தமாக்கி, இயேசுவில் இருக்கும் எல்லா சத்தியங்களிடத்திற்கும் அவர்களை வழிநடத்துகிறார் என்றும் விசுவாசிக்கிறோம்.

(யோவான் 7:39; 14:15–18, 26; 16:7–15; அப்போஸ்தலர் 2:33; 15:8,9; ரோமர் 8:1–27; கலாத்தியர் 3:1–14; 4:6; எபேசியர் 3:14–21; 1 தெசலோனிக்கேயர் 4:7,8; 2 தெசலோனிக்கேயர் 2:13; 1 பேதுரு 1:2; 1 யோவான் 3:24; 4:13).

## 4. பரிசுத்த வேதாகமம்

**4.** பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் எழுதப்பட்டிருக்கிற அறுபத்தாறு புத்தகங்களும் பரிசுத்த வேதாகமமாக, தெய்வீக ஏவுதலினால் எழுதப்பட்டவையென நாம் விசுவாசிக்கிறோம். நம்முடைய இரட்சிப்பிற்குத் தேவையான எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய சித்தத்தைத் தவறே இல்லாமல் வெளிப்படுத்துகின்றன. எனவே அதில் எழுதப்பட்டிராத எதுவும் விசுவாச கோட்பாட்டுகளில் நம்மால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

(லூக்கா 24:44–47; யோவான் 10:35; 1 கொரிந்தியர் 15:3,4; 2 தீமோத்தேயு 3:15–17; 1 பேதுரு 1:10–12; 2 பேதுரு 1:20–21).

## 5. ஜென்மப் பாவம் மற்றும் தனிப்பட்ட பாவம்

**5.** நம்முடைய ஆதி பெற்றோரின் கீழ்ப்படியாமையின் காரணமாகத்தான் பாவம் இந்த உலகத்திற்குள் வந்தது என்றும், பாவத்தின் மூலமாக மரணம் வந்தது என்றும் நாம் விசுவாசிக்கிறோம். பாவம் இரண்டு வகையானதாக இருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம்: ஜென்மப் பாவம் அல்லது சீர்கேடு, மற்றும் நாம் செய்யும் செயலினால் ஏற்படும் அல்லது தனிப்பட்ட பாவம்.

5.1 ஜென்மப் பாவம் அல்லது சீர்கேடு என்பது நம்முடைய ஆதித் தகப்பனாகிய ஆதாமின் சந்ததியார் யாவருக்கும் உரியதான நம்முடைய குணாதிசயத்தின் சீர்கேடாக இருக்கிறது. இதன் காரணமாக நாம் அனைவரும் சீருஷ்டிக்கப்பட்ட நாளில் நம்முடைய ஆதி பெற்றோர் கொண்டிருந்த நீதி மற்றும் பரிசுத்தத்திலிருந்து நாம் மிகவும் விலகி இருக்கிறோம். இந்தப் பாவம் தேவனுக்கு விரோதமானதாகவும், ஆவிக்குரிய வாழ்க்கை இல்லாததாகவும், தீயதைச் செய்யக்கூடிய தன்மையை உடையதாகவும், அதுவும் தொடர்ந்து செய்யும் உந்துதலைக் கொடுப்பதாகவும் இருக்கிறது. மேலும், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்று நம்முடைய இருதயம் சுத்தப்படுத்தப்படும்வரையில் நாம் மறுபிறப்பின் மூலமாகப் புதிய வாழ்க்கையைப் பெற்றாலும் இந்தப் பாவம் தொடர்ந்து இருக்கும் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

5.2. ஜென்மப் பாவம் என்பது தனிப்பட்ட பாவத்திலிருந்து வேறுபட்டிருக்கிறது. ஜென்மப் பாவமானது நமக்குப் பரம்பரையாக ஏற்றப்பட்ட குணக்கேடின் நிமித்தம் தனிப்பட்ட பாவத்தைச் செய்யத் தூண்டுகிறது. இதற்குத் தேவன் கொடுத்த தெய்வீக

பரிகாரத்தை நாம் புறக்கணியாமலும் அல்லது மறுக்காமலும் இருக்கும் வரை இதற்கு யாரும் கணக்குக் கொடுக்க வேண்டியதில்லை.

5.3 ஒழுக்கரீதியான பொறுப்பைப் பெற்றிருக்கும் ஒரு மனிதன் வேண்டுமென்றே தான் அறிந்த தேவனுடைய நீதியை மீறி செயல்படுவதே தனிப்பட்ட பாவமாகும். இதை தெரியாமல் செய்யும் தவிர்க்கமுடியாத குறைபாடுகள், பெலவீனங்கள், தவறுகள், தோல்விகள் அல்லது பூரணமான நிலையிலிருந்து விலகிநிற்கும் எந்த ஒரு நிலையிலிருந்தும் இதைக் குழப்பிக்கொள்ளக்கூடாது. ஆனால் இப்படிப்பட்ட அறியாமல் செய்யும் விளைவுகள் கிறிஸ்துவின் ஆவியானவருக்கு எதிராகக் கொண்டிருக்கும் மனோபாவத்தையோ அல்லது அணுகுதலையோ உள்ளடக்கியிருக்கவில்லை. இவைகள் பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகச் செய்யப்படும் பாவங்கள் என்று கருதப்படும். தனிப்பட்ட பாவம் என்பது அன்பின் பிரமாணத்தை மீறுவதே என்று நாம் விசுவாசிக்கிறோம். இதை கிறிஸ்துவோடு சம்பந்தப்பட்டிருக்கும் பாவத்தோடு சேர்த்துப் பார்க்கும் போது அதை நாம் அவிசுவாசம் என்று விசுவாசிக்கிறோம்.

(ஜென்மப் பாவம்: ஆதியாகமம் 3; 6:5; யோபு 15:14; சங்கீதம் 51:5; எரேமியா 17:9,10; மாற்கு 7:21–23; ரோமர் 1:18–25; 5:12–14; 7:1–8:9; 1 கொரிந்தியர் 3:14; கலாத்தியர் 5:16–25; 1 யோவான் 1:7,8).

தனிப்பட்ட பாவம்: மத்தேயு 22:36–40 (1 யோவான் 3:4 உடன்); யோவான் 8:24–36; 16:8, 9; ரோமர் 3:23; 6:15–23; 8:18–24; 14:23; 1 யோவான்1:9–2:4; 3:7–10).

## 6. பாவ நிவாரணம்

**6.** இயேசு கிறிஸ்து தம்முடைய பாடுகளினாலும், தம்முடைய சொந்த இரத்தத்தைச் சிந்தியதின் மூலமாகவும், சிலுவையிலே தம்முடைய மரணத்தின் மூலமாகவும் மனிதர்களுடைய எல்லாப் பாவங்களுக்கும் முழுமையான பாவ நிவாரணமாகிவிட்டார் என்று நாம் விசுவாசிக்கிறோம். இந்தப் பாவ நிவாரணமே இரட்சிப்பிற்கு அடிப்படையாக இருக்கிறது. இதுவே ஆதாமின் சந்ததியில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் போதுமானதாக இருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். இந்தப் பாவ நிவாரணமானது மனவளர்ச்சி குன்றியவர்களுக்கும், பாவமறியாத சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கும் கிருபையாகவும், இலவசமாகவும் வழங்கப்படுகிறது. ஆனால் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வயதிற்கு வந்தவர்கள் மனந்திரும்பி, இயேசுவை விசுவாசித்தால் மட்டுமே அவர்களுக்கு இரட்சிப்புக் கிடைக்கும் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

(ஏசாயா 53:5,6,11; மாற்கு 10:45; லூக்கா 24:46–48; யோவான் 1:29; 3:14–17; அப்போஸ்தலர் 4:10–12; ரோமர் 3:21–26; 4:17–25; 5:6–21; 1 கொரிந்தியர் 6:20; 2 கொரிந்தியர் 5:14–21; கலாத்தியர் 1:3,4; 3:13,14; கொலோசெயர் 1:19–23; 1 தீமோத்தேயு 2:3–6; தீத்து 2:11–14; எபிரெயர் 2:9; 9:11–14; 13:12; 1 பேதுரு 1:18–21; 2:19–25; 1 யோவான் 2:1,2).

## 7. தொடர்ந்துவரும் கிருபை

**7.** தேவனுடைய கிருபையானது இயேசு கிறிஸ்துவின் மூலமாக எல்லா மக்களுக்கும் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். அதன்மூலமாக அவர்கள் பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்பி, பாவத்திலிருந்து மன்னிப்பு மற்றும் சுத்திகரிப்பிற்காக இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய பார்வைக்கு ஏற்றுக்கொள்ளும்படியாகவும், பிடித்தமாகவும் இருக்கும் நற்கிரியைகளைச் செய்வார்கள் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். மனிதன் தேவ சாயலாக உருவாக்கப்பட்டதால் அவனுக்கு நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவு தரப்பட்டதென்றும், அவனது செயல்பாடுகளுக்கு அவனே பொறுப்பாகிறான் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் விழுந்துபோன ஆதாமினால் அவன் கேடுள்ளவனாக போனதால் தனது சுய பலத்தினால் அவன் தேவனிடம் திரும்பி விசுவாசத்தின் கிரியையை நடப்பிக்கவும், தேவனை நோக்கிக் கூப்பிடவும் முடியாதவனாக இருக்கிறான்.

(தேவசாயல், நடத்தைக்குப் பொறுப்பு: ஆதியாகமம் 1:26,27; 2:16,17; உபாகமம் 28:1,2; 30:19; யோசுவா 24:15; சங்கீதம் 8:3–5; ஏசாயா 1:8–10; எரேமியா 31:29,30; எசேக்கியேல் 18:1–4; மீகா 6:8; ரோமர் 1:19,20; 2:1–16; 14:7–12; கலாத்தியர் 6:7–8.

சுயபலத்தில் இயலாமை: யோபு 14:4; 15:14; சங்கீதம் 14:1–4; 51:5; யோவான் 3:6அ; ரோமர் 3:10–12; 5:12–14, 20அ; 7:14–25.

கிருபையின் ஈவும் விசுவாசத்தின் கிரியைகளும்: எசேக்கியேல் 18:25–26; யோவான் 1:12–13; 3:6ஆ; அப்போஸ்தலர் 5:31; ரோமர் 5:6–8, 18; 6:15–16, 23; 10:6–8; 11:22; 1 கொரிந்தியர் 2:9–14; 10:1–12; 2 கொரிந்தியர் 5:18–19; கலாத்தியர் 5:6; எபேசியர் 2:8–10; பிலிப்பியர் 2:12–13; கொலோசெயர் 1:21–23; 2 தீமோத்தேயு 4:10அ; தீத்து 2:11–14; எபிரெயர் 2:1–3; 3:12–15; 6:4–6; 10:26–31; யாக்கோபு 2:18–22; 2 பேதுரு 1:10–11; 2:20–22).

## 8. மனந்திரும்புதல்

**8.** பரிசுத்த ஆவியானவர் தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்துகிற எல்லாருக்கும் கிருபையாக இருதய மனஸ்தாபத்தையும் இரக்கத்தின் நம்பிக்கையையும் கொடுத்து பாவ மன்னிப்பும், ஆவிக்குரிய புது வாழ்வையும் அளிக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். மனந்திரும்புதல் என்பது பாவத்திற்கு எதிரான மெய்யான மற்றும் முழுமையான மனமாற்றமாக இருக்கிறது. அது தனிப்பட்ட குற்றஉணர்ச்சி மற்றும் கட்டாயப்படுத்தி பாவத்திலிருந்து திரும்புவதையும் உள்ளடக்கியிருக்கிறது. இது தேவனுக்கு எதிராகச் செயலின் மூலமாகவோ அல்லது நோக்கத்தின் மூலமாகவோ பாவிகளான அனைவரிடத்திலிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது.

எல்லோரும் விசுவாசத்திலிருந்து வீழ்ந்து, துரோகம் செய்வார்கள் என்று நாம் விசுவாசிக்கிறோம். அவர்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பாவிட்டால், நித்தியமாகவும், எந்த நம்பிக்கையும் இல்லாமல் தொலைந்துபோனவர்களாகிறார்கள். மறுபிறப்பைப் பெற்றவர்கள் மறுபடியுமாகப் பாவத்திற்குத் திரும்ப வேண்டாம் என்றும், அவர்கள் தங்களுக்குள்ளே வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் தேவனோடு உடைக்கப்படாத ஐக்கியத்தைக் கொண்டு

வாழ்வார்கள் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவரே நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை நம்முடைய ஆவியில் நமக்குச் சாட்சிகொடுக்கிறவராக இருக்கிறார்.

(2 நாளாகமம் 7:14; சங்கீதம் 32:5,6; 51:1–17; ஏசாயா 55:6–7; எரேமியா 3:12–14; எசேக்கியேல் 18:30–32; 33:14–16; மாற்கு 1:14–15; லூக்கா 3:1–14; 13:1–5; 18:9–14; அப்போஸ்தலர் 2:38; 3:19; 5:31; 17:30–31; 26:16–18; ரோமர் 2:4; 2 கொரிந்தியர் 7:8–11; 1 தெசலோனிக்கேயர் 1:9; 2 பேதுரு 3–9).

## 9. நீதிமானாக்கப்படுதல், மறுபிறப்பு மற்றும் புத்திர சுவீகாரம்

**9.** நீதிமானாக்கப்படுதல் என்பது தேவனுடைய கிருபையும், சட்டரீதியான கிரியையுமாகும். இதன் மூலமாக இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிற எல்லாருக்கும், எல்லாப் பாவங்களுக்கும் முழுமையான பாவ மன்னிப்பு அருளப்படுகிறது என்றும் பாவத்திற்குரிய தண்டனையிலிருந்து பூரண விடுதலையையும் தேவன் அருளி அவர்களை நீதிமான்களென்று அறிவிக்கிறார் என்றும் விசுவாசிசிக்கிறோம்.

9.1. மறுபிறப்பு அல்லது மறுஜென்மம் என்பது தேவனுடைய கிருபையுள்ள கிரியையாகும். எனவே இதனால் மனந்திரும்பிய ஒரு விசுவாசியின் ஒழுக்கரீதியான குணம் ஆவியின்படி உயிர்ப்பிக்கப்பட்டு புதிய ஆவிக்குரிய ஜீவன் அளிக்கப்படுகிறது. இதன்மூலமாக அவன் தேவனில் விசுவாசம் வைக்கவும் அன்புகூரவும் கீழ்ப்படியவும் முடிகிறது என்று நாம் விசுவாசிக்கிறோம்.

9.2. புத்திர சுவீகாரம் என்பது, நீதிமானாக்கப்பட்டு, மறுபிறப்பைப் பெற்ற விசுவாசியைத் தம்முடைய பிள்ளையாக அங்கீகரிக்கும் தேவனுடைய கிருபையுள்ள கிரியை என்று நாம் விசுவாசிக்கிறோம்.

9.3. தேவனைத் தேடும் மனிதர்களின் வாழ்க்கையில் நீதிமானாக்கப்படுதல், மறுபிறப்பு, புத்திர சுவீகாரம் போன்ற அனுபவங்கள் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன. இவை விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்தக் கிரியைக்கும், கிருபையின் செய்கைக்கும் பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

(லூக்கா 18:14; யோவான் 1:12–13; 3:3–8; 5:24; அப்போஸ்தலர் 13:39; ரோமர் 1:17; 3:21–26,28; 4:5–9, 17–25; 5:1, 16–19; 6:4; 7:6; 8:1, 15–17; 1 கொரிந்தியர் 1:30; 6:11; 2 கொரிந்தியர் 5:17–21; கலாத்தியர் 2:16–21; 3:1–14, 26; 4:4–7; எபேசியர் 1:6–7; 2:1, 4–5; பிலிப்பியர் 3:3–9; கொலோசெயர் 2:13; தீத்து 3:4–7; 1 பேதுரு 1:23; 1 யோவான் 1:9; 3:1–2, 9; 4:7, 5:1, 9–13, 18).

# 10. கிறிஸ்தவ பரிசுத்தம் மற்றும் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல்

**10.** பரிசுத்தமாக்கப்படுதல் என்பது விசுவாசிகளைக் கிறிஸ்துவின் சாயலில் மறுரூபமாக்கும் தேவனுடைய கிரியை என்று நாம் விசுவாசிக்கிறோம். இது ஆரம்ப நிலை பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது மறுபிறப்பில் (நீதிமானாக்கப்படுதலோடு சேர்த்து), முழுமையான பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் தொடர்ந்து நடக்கும் பரிசுத்த ஆவியானவரின் பூரணப்படுத்தும் கிரியையோடு தேவனுடைய கிருபையால் பெறப்படுகிறது. இது மகிமைப்படுத்தப்படுதலில் முடிவடைகிறது. மகிமைப்படுத்தப்படுதலில் நாம் முழுமையாக குமாரனுடைய சாயலைப் பெறுகிறோம்.

முழுமையான பரிசுத்தமாக்கப்படுதல் என்பது மறுபிறப்பிற்குப் பிறகு நடக்கும் தேவனுடைய ஒரு கிரியையாகும். இதன் மூலமாக விசுவாசிகள் ஜென்மப் பாவத்திலிருந்து விடுலையாக்கப்பட்டு, முழுமையாகத் தங்களைத் தேவனுக்கு அர்ப்பணம் செய்து வாழும் அன்பினால் கீழ்ப்படிந்து பூரணமான ஒரு நிலைக்குள் வந்து சேருகிறார்கள் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதின் மூலமாக இது நடைபெறுகிறது. இந்த ஒரே அனுபவத்தில் இருதயம் பாவமில்லாமல் சுத்திகரிக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மில் என்றென்றும் வாசம் செய்வதால் விசுவாசிகளான நமது வாழ்க்கையும், பணியும் பெலப்படுகிறது. கிறிஸ்து இயேசுவின் திருரத்தத்தின் மூலமாகவே முழு பரிசுத்தமாக்கப்படுதல் அளிக்கப்படுகிறது. விசுவாசித்து நம்மை முழுவதுமாக அர்ப்பணித்தால் இது உடனே நடைபெறுகிறது. இந்தக் கிரியைக்கும் கிருபையின் நிலைக்கும் பரிசுத்த ஆவியானவரே சாட்சியாக இருக்கிறார்.

இந்த அனுபவத்தை "கிறிஸ்தவனின் பரிபூரணம்," "பரிபூரண அன்பு," "பரிசுத்த இருதயம்," "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்," "பரிபூரண ஆசீர்வாதம்," "கிறிஸ்தவ பரிசுத்தம்," என்று பல பெயரிட்டு அழைக்கிறோம்.

**10.1.** பரிசுத்தமான இருதயத்திற்கும், பக்குவமான பண்பிற்கும் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. பரிசுத்தமான இருதயம் நாம் முழுவதும் பரிசுத்தமாக்கப்படுவதினால் ஒரு நொடியில் கிடைக்கிறது. ஆனால் பக்குவமான பண்பு என்பது கிருபையில் வளர்வதின் மூலமாக ஏற்படும் விளைவாக இருக்கிறது.

கிருபையில் வளர்வதற்கான தூண்டுதல் என்பது முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலின் கிருபையில் அடங்கியுள்ளது என்று நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் இந்தத் தூண்டுதல் தொடர்ந்து வளர்க்கப்பட வேண்டும். ஆவிக்குரிய வளர்ச்சிக்கான தேவைகள், செயல்முறைகள் இவற்றிலும், கிறிஸ்துவைப் போன்ற குணம், ஆள்தத்துவம் இவற்றிலும் முன்னேற்றம் பெறுவதிலும் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய நோக்குடன்கூடிய முயற்சி இல்லாவிட்டால் ஒருவரின் சாட்சி பெலவீனப்படும் நிலை ஏற்படலாம்; கிருபையும்கூட தடுமாற்றமடைந்து இறுதியில் முழுவதுமாக இழக்கப்பட்டுப்போகலாம்.

கிருபையைப் பெறும் வழிகளில் பங்கெடுப்பதின் மூலமாக, அதிலும் குறிப்பாக ஐக்கியம், திருச்சபையின் ஒழுக்கங்கள் மற்றும் சாக்கிரமெந்துகள் போன்றவற்றை கடைப்பிடிப்பதின் மூலமாக, விசுவாசிகள் கிருபையிலும், தேவன் மற்றும் தங்களுடைய அயலாரின் மேல் முழு மனதுடன் கூடிய அன்பைப் பெற்றிருப்பார்கள்.

(எரேமியா 31:31–34; எசேக்கியேல் 36:25–27; மல்கியா 3:2–3; மத்தேயு 3:11–12; லூக்கா 3:16–17; யோவான் 7:37–39; 14:15–23; 17:6–20; அப்போஸ்தலர் 1:5; 2:1–4; 15:8–9; ரோமர் 6:11–13, 19; 8:1–4, 8–14; 12:1–2; 2 கொரிந்தியர் 6:14–7:1; கலாத்தியர் 2:20; 5:16–25; எபேசியர் 3:14–21; 5:17–18; 25–27; பிலிப்பியர் 3:10–15; கொலோசெயர் 3:1–17; 1 தெசலோனிக்கேயர் 5:23–24; எபிரெயர் 4:9–11; 10:10–17; 12:1–2; 13:12; 1 யோவான் 1:7, 9).

(''கிறிஸ்தவனின் பூரணம்'', ''பரிபூரண அன்பு'' உபாகமம் 30:6; மத்தேயு 5:43–48; 22:37–40; ரோமர் 12:9–21; 13:8–10; 1 கொரிந்தியர் 13; பிலிப்பியர் 3:10–15; எபிரெயர் 6:1; 1 யோவான் 4:17–18.

''பரிசுத்த இருதயம்'' மத்தேயு 5:8; அப்போஸ்தலர் 15:8–9; 1 பேதுரு 1:22; 1 யோவான் 3:3

''பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு'' எரேமியா 31:31–34; எசேக்கியேல் 36:25–27; மல்கியா 3:2–3; மத்தேயு 3:11–12; லூக்கா 3:16–17; அப்போஸ்தலர் 1:5; 2:1–4; 15:8,9.

''பரிபூரண ஆசீர்வாதம்'' ரோமர் 15:29.

''கிறிஸ்தவ பரிசுத்தம்'' மத்தேயு 5:1–7:29; யோவான் 15:1–11; ரோமர் 12:1–15:3; 2 கொரிந்தியர் 7:1; எபேசியர் 4:17–5:20; பிலிப்பியர் 1:9–11; 3:12–15; கொலோசெயர் 2:20–3:17; 1 தெசலோனிக்கேயர் 3:13; 4:7–8; 5:23; 2 தீமோத்தேயு 2:19–22; எபிரெயர் 10:19–25; 12:14; 13:20–21; 1 பேதுரு 1:15–16; 2 பேதுரு 1:1–11; 3:18; யூதா 20–21).

## 11. திருச்சபை

**11.** இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கையிடும் சமூகமாகவும், கிறிஸ்துவில் புதிதாக்கப்பட்ட உடன்படிக்கையின் மக்களைக் கொண்டதாகவும், வார்த்தையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் அழைத்து ஒன்றாகக் கூட்டிய கிறிஸ்துவின் சரீரமாகவும் விளங்கும் திருச்சபையை நாம் விசுவாசிக்கிறோம்.

தேவன் தனது உயிர்த்துடிப்பை பரிசுத்த ஆவியானவரின் உறவிலும், ஐக்கியத்திலும் வெளிப்படுத்தவும், வார்த்தையைப் போதிப்பதின் மூலமாகவும், சாக்கிரமெந்துகளைக் கைக்கொள்வதின் மூலமாகவும், தம்முடைய பெயரில் ஊழியம் செய்வதின் மூலமாகவும் வழிபடவும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படிந்தும், பரஸ்பர நேர்மையிலும் செயல்படும்படியாகவும் அவர் திருச்சபையை அழைத்திருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு பரிசுத்த ஜீவியம், நற்செய்தி பகருதல், சீஷத்துவம், ஊழியம் இவற்றின் மூலமாக கிறிஸ்துவின் மீட்பு மற்றும் ஒப்புரவாக்குதலின் பணியைத் தொடர்வதே இந்த உலகில் திருச்சபையின் பணியாகும். சபையானது சுவிசேஷ ஊழியத்தின் மூலம் சீஷராக்குதல், கல்வி, மனதுருக்கம் காட்டுதல், நீதிக்காகச் செயல்படுதல், தேவனுடைய ராஜ்யத்துக்குச் சாட்சி கூறுதல் இவைகளின்மூலமாகத் தனது ஊழியத்தை நிறைவேற்றுகிறது.

திருச்சபையானது பண்பாட்டையொட்டிய அமைப்புகளின் மூலம் தன்னைத்தானே ஒருங்கிணைத்துக்கொள்ளும் ஓர் வரலாற்று உண்மை அம்சமாகும்;

உள்ளூர் சபையாகவும் அதே வேளையில் உலகளாவிய அமைப்பாகவும் நிலவுகிறது; குறிப்பிட்ட ஊழியங்களுக்காக தேவனுடைய அழைப்பைப் பெற்றவர்களைப் பிரித்தெடுக்கிறது. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது ஏற்படும் பூரண நிலையைப் பற்றிய எதிர்பார்ப்போடு, தனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி தேவன் திருச்சபையை அழைக்கிறார்.

(யாத்திராகமம் 19:3; எரேமியா 31:33; மத்தேயு 8:11; 10:7; 16:13–19, 24; 18:15–20; 28:19–20; யோவான் 17:14–26; 20:21–23; அப்போஸ்தலர் 1:7–8; 2:32–47; 6:1–2; 13:1; 14:23; ரோமர் 2:28–29; 4:16; 10:9–15; 11:13–32; 12:1–8; 15:1–3; 1 கொரிந்தியர் 3:5–9; 7:17; 11:1,, 17–33; 12:3, 12–31; 14:26–40; 2 கொரிந்தியர் 5:11–6:1; கலாத்தியர் 5:6, 13–14; 6:1–5,15; எபேசியர் 4:1–17; 5:25–27; பிலிப்பியர் 2:1–16; 1 தெசலோனிக்கேயர் 4:1–12; 1 தீமோத்தேயு 4:13; எபிரெயர் 10:19–25; 1 பேதுரு 1:1–2, 13; 2:4–12, 21; 4:1–2, 10–11; 1 யோவான் 4:17; யூதா 24; வெளிப்படுத்தல் 5:9–10).

## 12. ஞானஸ்நானம்

**12.** நம்முடைய ஆண்டவரால் கட்டளையாகக் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது பாவ நிவிர்த்தியின் பலன்களை ஏற்றுக்கொள்வதை அடையாளப்படுத்தும் சாக்கிரமெந்துவாகவும், கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் ஐக்கியப்படுவதைக் குறிப்பதாகவும் இருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். ஞானஸ்நானம் என்பது இயேசு கிறிஸ்துவே நம்முடைய இரட்சகர் என்பதை எடுத்துரைக்கும் கிருபையின் வழியாக இருக்கிறது. பரிசுத்தம் மற்றும் நீதியில் தங்களுடைய கீழ்ப்படிதலின் முழு நோக்கமும் இருக்கிறது என்பதைக் காட்டும் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். புதிய உடன்படிக்கையில் பங்குபெறுபவர்களாக, சிறு பிள்ளைகளும், மனவளர்ச்சி குன்றியவர்களும் அவர்களுடைய பெற்றோர் அல்லது காப்பாளர்களின் வேண்டுதலுக்கு ஏற்ப ஞானஸ்நானம் கொடுக்கப்படலாம். கிறிஸ்தவ பயிற்சியளிப்பதற்குத் திருச்சபை உறுதிசெய்ய வேண்டும். தெளித்தலின் மூலமாகவோ, ஊற்றலின் மூலமாகவோ, முழுக்கு மூலமாகவோ ஞானஸ்நானம் கொடுக்கப்படலாம்.

(மத்தேயு 3:1–7; 28:16–20; அப்போஸ்தலர் 2:37–41; 8:35–39; 10:44–48; 16:29–34; 19:1–6; ரோமர் 6:3–4; கலாத்தியர் 3:26–28; கொலோசெயர் 2:12; 1 பேதுரு 3:18–22).

## 13. கர்த்தருடைய திருவிருந்து

**13.** நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட திருவிருந்து ஒரு சாக்கிரமெந்து என்றும், அது அவருடைய வாழ்க்கை, பாடுகள், பலியாகக் கொடுக்கப்பட்ட மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் அவர் மறுபடியும் வருவார் என்கிற நம்பிக்கையை எடுத்துரைப்பதாக இருக்கிறது. கர்த்தரின் பந்தி என்பது கிறிஸ்து, ஆவியானவரின் மூலமாகக் காணப்படும் கிருபையின் வழியாக இருக்கிறது. கிறிஸ்துவில் கொண்டிருக்கும் விசுவாசத்தின்படி எல்லோரும்

இதில் பங்குகொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள். பங்குபெற்று வாழ்க்கையில் புதுபிக்கப்பட்டு, இரட்சிப்பைப் பெற்றும் திருச்சபையில் ஐக்கியத்தைப் பெறலாம். எல்லோரும் அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து பயபக்தியோடு வந்து, அதன் மூலமாக ஆண்டவர் வரும்வரையில் அவருடைய மரணத்தைக் காண்பிக்கிறார்கள். கிறிஸ்துவில் விசுவாசத்தைப் பெற்றவர்களும், பரிசுத்தவான்களின் மீது அன்பு கொண்டவர்களும், முடிந்தவரை இதில் பங்குகொள்ளும்படி இயேசு கிறிஸ்துவால் அழைக்கப்படுகிறார்கள்.

(யாத்திராகமம் 12:1–14; மத்தேயு 26:26–29; மாற்கு 14:22–25; லூக்கா 22:17–20; யோவான் 6:28–58; 1 கொரிந்தியர் 10:14–21; 11:23–32).

## 14. தெய்வீக சுகமளித்தல்

**14.** நாம் வேதாகமரீதியாகிய கோட்பாடாகிய தெய்வீக சுகமளித்தலை விசுவாசிக்கிறோம். இதனால் நோயாளிகளைக் குணமாக்க விசுவாசத்தோடு ஜெபத்தை ஏறெடுக்கும்படி நமது சபையாரை ஊக்கப்படுத்துகிறோம். தேவன் மருத்துவ அறிவியலின் மூலமாகவும் குணமாக்குகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

(2 இராஜாக்கள் 5:1–19; சங்கீதம் 103:1–5; மத்தேயு 4:23–24; 9:18–35; யோவான் 4:46–54; அப்போஸ்தலர் 5:12–16; 9:32–42; 14:8–15; 1 கொரிந்தியர் 12:4–11; 2 கொரிந்தியர் 12:7–10; யாக்கோபு 5:13–16).

## 15. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

**15.** இயேசு கிறிஸ்து திரும்ப வருவார் என்று விசுவாசிக்கிறோம். அவர் திரும்ப வரும்போது உயிரோடிருக்கும் நாம் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு முந்திச் செல்வதில்லை என்றும், நாம் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்திருந்தோமென்றால், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடு ஆண்டவரை வானத்தில் சந்தித்து அவருடன் என்றென்றும் இருப்போம் என்றும் நம்புகிறோம்.

(மத்தேயு 25:31–46; யோவான் 14:1–3; அப்போஸ்தலர் 1:9–11; பிலிப்பியர் 3:20–21; 1 தெசலோனிக்கேயர் 4:13–18; தீத்து 2:11–14; எபிரெயர் 9:26–28; 2 பேதுரு 3:3–15; வெளிப்படுத்தல் 1:7–8, 22:7–20).

## 16. உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு மற்றும் கடைசி முடிவு

**16.** நாம் மரித்தோரின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கிறோம். நீதிமான்களின் சரீரங்களும், அக்கிரமக்காரரின் சரீரங்களும் எழுப்பப்பட்டு அதனதன் ஆவியோடு கூடும் என்று விசுவாசிக்கிறோம். "நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்; தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."

**16.1.** பின்வரும் நியாயத்தீர்ப்பின் நாளிலே ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளின் செய்கைகளுக்குத் தக்கபடி தேவனுக்கு முன்பாக நியாயம் தீர்க்கப்படுவான் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**16.2.** இயேசு கிறிஸ்துவை ஆண்டவரென்று நம்பி இரட்சிப்படையும்படி விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்கு மகிமையான நித்திய ஜீவன் அருளப்படும் என்ற நிச்சயம் உண்டு என்றும் கடைசிவரை மனந்திரும்பாத பாவிகள், நித்தியமாக நரக வாழ்க்கையில் பிரவேசிப்பார்களென்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

(ஆதியாகமம் 18:25; 1 சாமுவேல் 2:10; சங்கீதம் 50:6; ஏசாயா 26:19; தானியேல் 12:2–3; மத்தேயு 25:31–46; மாற்கு 9:43–48; லூக்கா 16:19–31; 20:27–38; யோவான் 3:16–18; 5:25–29; 11:21–27; அப்போஸ்தலர் 17:30–31; ரோமர் 2:1–16; 14:7–12; 1 கொரிந்தியர் 15:12–58; 2 கொரிந்தியர் 5:10; 2 தெசலோனிக்கேயர் 1:5–10; வெளிப்படுத்தல் 20:11–15; 22:1–15).

## திருச்சபை

## 1. பொதுவான திருச்சபை

**17.** பரலோகத்தில் தங்களுடைய பெயர் எழுதப்பட்ட ஆவிக்குரிய மறுபிறப்படைந்த விசுவாசிகளை உறுப்பினர்களாக உள்ளடக்கியதே ஆண்டவருடைய திருச்சபை.

## 2. தனிப்பட்ட திருச்சபைகள்

**18.** தேவனுடைய கட்டளையின் அடிப்படையிலும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலாலும், பரிசுத்த உறவு மற்றும் ஊழியங்களில் இணைந்து செயல்படும் இத்தகைய மறுபிறப்படைந்த விசுவாசிகளை உறுப்பினர்களாகக் கொண்டவையே தனிப்பட்ட திருச்சபைகள்.

## 3. நசரேயத் திருச்சபை

**19.** இந்தத் திருச்சபையின் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் பின்பற்றுவதற்குத் தாமாகவே முன்வந்து மற்றவர்களோடு சேர்ந்து செயல்படுகிற விசுவாசிகளைக் கொண்டதே இந்த நசரேயத் திருச்சபை. இவர்கள், பரிசுத்த கிறிஸ்தவ ஐக்கியத்தையும், பாவிகளின் மனந்திரும்புதலையும், விசுவாசிகள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலையும், பரிசுத்தத்தில் வளர்ச்சிபெறுவதையும், புதிய ஏற்பாட்டில் ஆதித் திருச்சபையில் தெளிவாகக் காணப்படும் எளிமையையும், ஆவிக்குரிய வல்லமையையும் எதிர்பார்ப்பதோடு, எல்லோருக்கும் நற்செய்தியை அறிவிப்பதைத் தேடுகிறார்கள்.

## 4. ஏற்றுக்கொள்ளப்பட்ட விசுவாச அறிக்கை

**20.** ஒருவர் மறுபிறப்பு அடைந்திருப்பதால் மட்டுமே திருச்சபையில் உறுப்பினராகும் உரிமையையும், சிலாக்கியத்தையும் பெற்றிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதோடு, கிறிஸ்தவ அனுபவத்திற்கு மிகவும் முக்கியமாகக் கருதப்படும் விசுவாச அறிக்கையின் அம்சங்களே நமக்குத் தேவைப்படுகின்றன. எனவே நாங்கள்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சுருக்கமான அறிக்கைகள் போதுமானவைகள் என்று நினைக்கிறோம். நாம் விசுவாசிப்பவை:

**20.1.** பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற ஒரே கடவுளை விசுவாசிக்கிறோம்.

**20.2.** பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய வேதாகமம் முழுவதும் கடவுளுடைய ஏவுதலினால் எழுதப்பட்டவை. இதில் விசுவாசத்திற்கும், கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் தேவையான எல்லா சத்தியங்களும் இடம்பெற்றிருக்கின்றன என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**20.3.** ஒவ்வொரு மனிதனும் விழுந்துபோன இயல்போடு பிறந்திருக்கிறான். எனவே தொடர்ந்து பாவம் செய்யும் சுபாவத்தோடு அவன் இருக்கிறான் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**20.4.** கடைசிவரை மனந்திரும்பாமல் இருப்பவர்கள் நம்பிக்கையிழந்த நிலையில், நித்தியமான அழிவைப் பெறுகிறார்கள் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**20.5.** இயேசு கிறிஸ்துவின் மூலமாக உண்டான பாவ நிவாரணம் முழு மனுக்குலத்திற்கும் உரியது; மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; மறுபிறப்படைகிறார்கள்; பாவத்தின் ஆளுகையிலிருந்து இரட்சிக்கப்படுகிறார்கள் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**20.6.** நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக, விசுவாசிகள் மறுப்பிறப்படைவதைத் தொடர்ந்து அவர்கள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**20.7.** பரிசுத்த ஆவியானவர் மறுபடியும் பிறப்பதற்கும், விசுவாசிகள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் சாட்சியாக இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**20.8.** நமது ஆண்டவர் திரும்பி வருவார் என்றும், மரித்தோர் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்றும், இறுதி நியாயத்தீர்ப்பு நடைபெறும் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

## 5. கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கை

**21.** காணக்கூடிய திருச்சபையோடு தங்களை இணைத்துக் கொள்வது, கிறிஸ்து இயேசுவில் தங்கள் பாவங்களிலிருந்து மீட்பைப் பெற்ற, பரிபூரணத்தை நாடும் ஒவ்வொருவரின் ஆசீர்வாதமான சிலாக்கியமாகவும், பரிசுத்த கடமையாகவும் இருக்கிறது. நசரேயத் திருச்சபையோடு தங்களை இணைத்துக் கொள்ள விரும்பி, எங்களோடு நல்லுறவில் நடக்க விரும்பும் ஒவ்வொருவரும் தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிப்பைப் பெற்றதற்கு சாட்சியாக தேவனுக்கடுத்த நடக்கையிலும், உண்மையான பக்தி வாழ்க்கையிலும் நடந்துகாட்ட வேண்டும். அவர்கள் தங்களுடைய எல்லா உள்ளான பாவங்களிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட உண்மையான வாஞ்சையைக் கொண்டிருக்க

வேண்டும். கீழ்க்கண்ட செயல்கள் மூலம் தேவனோடுள்ள தங்கள் ஒப்படைப்பை உறுதிசெய்ய வேண்டும்.

**21.1. முதலாவதாக**, நம்முடைய விசுவாசத்திற்கும், நடத்தைக்கும் சட்டமாக இருக்கும் தேவனுடைய வார்த்தைகளில் கூறப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்ய வேண்டும். அவையாவன:

(1) தேவனிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்புகூர வேண்டும். உன்னைப்போல பிறனையும் நேசிக்க வேண்டும். (யாத்திராகமம் 20:3–6; லேவியராகமம் 19:17–18; உபாகமம் 5:7–10; 6:4–5; மாற்கு 12:28–31; ரோமர் 13:8–10).

(2) இரட்சிக்கப்படாதவர்களை நற்செய்தியின் அழைப்பைக் கேட்கும்படி வற்புறுத்தி, அவர்களைத் தேவனுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்படுவதற்குத் தேவையானவைகளைச் செய்ய வேண்டும். (மத்தேயு 28:19–20; அப்போஸ்தலர் 1:8; ரோமர் 1:14–16; 2 கொரிந்தியர் 5:18–20).

(3) எல்லா மனிதர்களையும் மரியாதையோடு உபசரிக்க வேண்டும் (எபேசியர் 4:32; தீத்து 3:2; 1 பேதுரு 2:17; 1 யோவான் 3:18).

(4) கிறிஸ்தவ விசுவாசத்தினால் நம்மோடு பிறந்தவர்களுக்கு உதவி செய்யுங்கள், அன்பினால் ஒருவருக்கொருவர் பொறுமையாக இருங்கள் (ரேமர் 12:13; கலாத்தியர் 6:2, 10; கொலோசெயர் 3:12–14).

(5) எல்லா மனிதர்களின் சரீரத்திற்கும், ஆத்துமாவிற்கும் நன்மை செய்ய முயலுங்கள்; உங்களுடைய தகுதிக்கும், இருப்பிற்கும் ஏற்றவாறு பசியாக இருப்பவர்களுக்கு உணவளியுங்கள்; உடுக்க உடையில்லாதவர்களுக்கு உடை கொடுங்கள்; வியாதியாயிருப்பவர்களையும், சிறையில் அடைபட்டிருப்போரையும் சென்று பாருங்கள்; தேவையில் இருப்போருக்கு உங்களுக்கு வாய்ப்பு வரும்போது உதவி செய்யுங்கள் (மத்தேயு 25:35–36; 2 கொரிந்தியர் 9:8–10; கலாத்தியர் 2:10; யாக்கோபு 2:15–16; 1 யோவான் 3:17–18).

(6) தசமபாகம் மற்றும் காணிக்கைகளைக் கொண்டு ஊழியத்தையும் திருச்சபையையும் ஆதரியுங்கள் (மல்கியா 3:10; லூக்கா 6:38; 1 கொரிந்தியர் 9:14; 16:2; 2 கொரிந்தியர் 9:6–10; பிலிப்பியர் 4:15–19).

(7) தேவனுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதிலும், கிருபையின் வழிகளிலும், பொதுவான தேவ வழிபாட்டிலும் பங்கேற்பதிலும் உண்மையாக நடக்க வேண்டும் (எபிரெயர் 10:25), தேவ வசன ஊழியத்திலும் (அப்போஸ்தலர் 2:42), ஆண்டவரின் பரிசுத்த திருவிருந்து என்னும் சாக்கிரமெந்திலும் (1 கொரிந்தியர் 11:23–30) ஒழுங்காகப் பங்கெடுக்க வேண்டும்; வேத ஆராய்ச்சியிலும் அதன் தியானத்திலும் (அப்போஸ்தலர் 17:11; 2 தீமோத்தேயு 2:15; 3:14–16), குடும்ப ஜெபத்திலும், தனி ஜெபத்திலும் (உபாகமம் 6:6–7; மத்தேயு 6:6) ஈடுபட வேண்டும்.

**21.2. இரண்டாவதாக**, கீழ்க்கண்டவை உட்பட எல்லா வகை பாவங்களையும் விட்டு விலக வேண்டும்.

(1) தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதிருத்தல் (யாத்திராகமம் 20:7; லேவியராகமம் 19:12; யாக்கோபு 5:12).

(2) பரிசுத்தமான வாழ்க்கைக்குப் புறம்பான காரியங்களில் பங்கெடுப்பதாலும், தேவையற்ற உலகப்பிரகாரமான காரியங்களைச் செய்வதின் மூலமும் பரிசுத்த ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கக் கூடாது (யாத்திராகமம் 20:8–11; ஏசாயா 58:13–14; மாற்கு 2:27–28; அப்போஸ்தலர் 20:7; வெளிப்படுத்தல் 1:10).

(3) திருமணத்திற்கு முன்பான பாலுறவுகள், திருமணத்திற்குப் பின்பு கணவனுக்கோ, மனைவிக்கோ துரோகம் செய்துவிட்டு மற்றவர்களுடன் பாலுறவு கொள்ளுதல், அல்லது ஒரே பாலாருடன் உறவுகொள்ளுதல்; தாறுமாறான உறவுகள், அல்லது ஒழுக்கக் கேடுகள் இவற்றில் ஈடுபடுதல் (ஆதியாகமம் 19:4–11; யாத்திராகமம் 20:14; லேவியராகமம் 18:22; 20:13; மத்தேயு 5:27–32; ரோமர் 1:26–27; 1 கொரிந்தியர் 6:9–11; கலாத்தியர் 5:19; 1 தெசலோனிக்கேயர் 4:3–7; 1 தீமோத்தேயு 1:10).

(4) உடல் நலத்தையும், ஆத்தும சுகத்தையும் கெடுக்கக் கூடியதாக அறியப்பட்ட பழக்க வழக்கங்கள். கிறிஸ்தவர்கள் தங்களைப் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகக் கருத வேண்டும் ( நீதிமொழிகள் 20:1; 23:1–3; 1 கொரிந்தியர் 6:17–20; 2 கொரிந்தியர் 7:1; எபேசியர் 5:18).

(5) சண்டை போடுதல், தீமைக்குத் தீமை செய்தல், வீண் பேச்சு, புறங்கூறுதல், மற்றவர்களின் நற்பெயரைக் கெடுக்கும்படியாக சந்தேகங்களைப் பரப்புதல் (2 கொரிந்தியர் 12:20; கலாத்தியர் 5:15; எபேசியர் 4:30–32; யாக்கோபு 3:5–18; 1 பேதுரு 3:9–10).

(6) நேர்மையின்மை, வாங்குவதிலோ விற்பதிலோ மோசடிசெய்தல், பொய்ச் சாட்சி கூறுதல், இருளான செயல்களை விரும்புதல் (லேவியராகமம் 19:10–11; ரோமர் 12:17; 1 கொரிந்தியர் 6:7–10).

(7) ஆடை அணிதல், நடத்தை இவற்றில் பெருமை. நமது மக்கள் பரிசுத்தமாக்கப்படுவதற்குக் கிறிஸ்தவ எளிமையோடும், பணிவோடும் ஆடைகளை அணிய வேண்டும் (நீதிமொழிகள் 29:23; 1 தீமோத்தேயு 2:8–10; யாக்கோபு 4:6; 1 பேதுரு 3:3–4; 1 யோவான் 2:15–17).

(8) தேவனை அவமதிக்கக்கூடிய இசை, இலக்கியம், பொழுதுபோக்குகள் இவற்றில் ஈடுபாடு கொள்ளுதல் (1 கொரிந்தியர் 10:31; 2 கொரிந்தியர் 6:14–17; யாக்கோபு 4:4).

**21.3. மூன்றாவதாக**, திருச்சபையோடு மனப்பூர்வமான ஐக்கிய உணர்வு கொண்டு, அதன் கோட்பாடுகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் எதிர்த்து நிற்காமல் அதற்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து, தொடர்ந்து சாட்சி கூறுதலிலும், நற்செய்திப் பணியிலும் ஆர்வமாக ஈடுபடுபவர்களாக இருக்க வேண்டும் (எபேசியர் 2:18–22; 4:1–3, 11–16; பிலிப்பியர் 2:1–8; 1 பேதுரு 2:9–10).

# அமைப்பு மற்றும் நிர்வாக சட்டங்கள்

## சட்டம் 1. நிர்வாக அமைப்பு

**22.** நசரேயத் திருச்சபை பிரதிநிதித்துவ முறையில் நிர்வகிக்கப்படுகிறது.

**22.1.** நசரேயத் திருச்சபையின் வடிவமைப்பில் மூன்று சட்டபூர்வமான அமைப்புகள் இருக்கின்றன என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம்: உள்ளூர், மறைமாவட்டம், பொது என்பன. பிராந்தியங்கள் அருட்பணி ஊழியச் செயல்திறன் மற்றும் செயல்படுத்துதலுக்கான நிர்வாக அமைப்புக்களாக இருக்கின்றன.

**22.2.** ஸ்தல சபையானது தனது ஊழியத்தையும், நோக்கங்களையும் நிறைவேற்றும் வகையில் உதவி செய்யவும், நிறைவு செய்யவும் ஏற்ற மேற்பார்வை நிர்வாகம் தேவை என்பதை நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். இந்த மேல் நிர்வாகம் மன தைரியத்தை வலுப்படுத்துதல், உந்துதல் அளித்தல், நிர்வாக மற்றும் வழிமுறை உதவிகளை அளித்தல், புதிய சபைகளையும் ஊழியங்களையும் எல்லா இடங்களிலும் அமைத்தல் போன்ற பணிகளைக் கவனிக்கும்.

**22.3.** முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சபையின் தன்னிச்சையான செயல்பாட்டில் மேற்பார்வையாளர்களின் அதிகாரம் குறுக்கிடாது என்பதை நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். ஒவ்வொரு சபையும் தங்கள் குருவானவரைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள்; ஆனால் பொது மாநாடு அவ்வாறு செய்வது நல்லது என்று ஒப்புதல் அளிக்க வேண்டும். ஒவ்வொரு சபையும் பல்வேறு சபைக்கூட்டங்களுக்கு அனுப்பக்கூடிய பிரதிநிதிகளைத் தானே தெரிந்தெடுக்கும்; தனது பண விவகாரங்களைத் தானே நிர்வகித்துக்கொள்ளும்; அந்தச் சபையின் ஸ்தல வாழ்க்கை, பணிகளைச் சார்ந்த அனைத்துக் காரியங்களையும் தானே கவனித்துக் கொள்ளும்.

## சட்டம் II. உள்ளூர் சபைகள்

**23.** ஒரு சபையை நிறுவக்கூடிய அதிகாரம் பெற்றவர்களால், ஒரு சபையாக ஒன்றுகூட்டி இணைக்கப்பட்டவர்களாக இருப்பவர்கள் அனைவரும் அந்தச் சபையின் உறுப்பினர்களாவார்கள். தங்கள் இரட்சிப்பின் அனுபவம், நமது கோட்பாடுகளின் மீதான நம்பிக்கை, நமது நிர்வாக அமைப்புக்குக் கீழ்ப்படிய விருப்பம் போன்றவைகளை அறிக்கையிடும் புதியவர்கள், தகுதிபெற்ற அதிகாரமுடையவர்களால் பகிரங்கமான முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களும் சபையின் உறுப்பினர்களாகிறார்கள். (100–107)

## சட்டம் III. மறைமாவட்ட நிர்வாகம்

**24.** பொதுச்சபையானது திருச்சபையின் உறுப்பினர்களைக் கொண்டு மறைமாவட்ட மாநாடுகளை அமைக்கும். பொதுச் சபை நியாயமானது, சரியானது என்று கண்டறிந்ததற்கேற்ப அந்த மறைமாவட்ட மாநாட்டுக்கான சாமானிய மற்றும்

குருத்துவ பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும்; இத்தகைய பிரதிநிதிகளுக்கான தகுதிகளைத் தீர்மானிக்கும் (அபிஷேகம் பெற்ற குருவானவர்களும்) பொறுப்பைப் பெற்றுள்ள அபிஷேகம்பெற்ற எல்லா குருக்களும் மறைமாவட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பார்கள். மறைமாவட்ட மாநாட்டின் அதிகாரங்கள், கடமைகள் போன்றவற்றைப் பொது சபையானது திட்டம் செய்யும். (200 – 207.6)

## சட்டம் IV. பொதுச்சபை

**25. எவ்வாறு அமைக்கப்படுகிறது?** பொதுச்சபை என்பது நசரேயத் திருச்சபையின் மறைமாவட்ட மாநாடுகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சம அளவிலான சாமானிய மற்றும் குருத்துவ பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒன்றாகும்; பொதுச் சபையானது அந்தந்த வேளைகளில் கட்டளையிடும் அலுவல் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்; இப்படிப்பட்டவர்கள் பொதுச்சபையால் கொடுக்கப்பட்டிருப்பார்கள்.

25.1 **பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல்.** பொதுச்சபை கூடி 16 மாதங்களுக்குள்ளாகவோ, சிறப்பான விசா மற்றும் வேறு நுழைவு ஆயத்தங்கள் செய்ய வேண்டியிருக்கும் பகுதிகளில் 24 மாதங்களுக்குள்ளாகவோ, பொதுச்சபையின் நிபந்தனைகளுக்கேற்ப, சம அளவிலான சாமானிய, குருத்துவ பிரதிநிதிகள் பொதுச் சபைக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; குருத்துவப் பிரதிநிதிகள் (மூப்பர்கள்) நசரேயத் திருச்சபையின் பொறுப்பைப் பெற்ற அபிஷேகம் பெற்ற போதகர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு மறைமாவட்ட மாநாடும் ஒரு சாமானிய பிரதிநிதியையும், ஒரு குருத்துவ பிரதிநிதியையும் பொதுச் சபைக்காகத் தேர்ந்தெடுக்கும். ஒவ்வொரு கட்டம் 3 அசெம்பிளி மறைமாவட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு சாமானிய பிரதிநிதியையும், ஒரு குருத்துவ பிரதிநிதியையும் பொதுச் சபைக்காகத் தேர்ந்தெடுக்கும். பொதுச்சபை நிர்ணயம் செய்ததின் அடிப்படையில் பிரதிநிதிகளின் தேவைக்கேற்ப கூடுதலான பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஒவ்வொரு மறை மாவட்ட மாநாடும் தனது பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்கு இரண்டு மடங்கிற்கு அதிகமாகாமல் மாற்றுப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். பயணத்திற்கான விசா எடுப்பதற்குக் கடினமான இடங்களில் மறைமாவட்ட மாநாடு அந்த மறைமாவட்டத்தின் ஆலோசனைக் குழுவை வேறு மாற்றுப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க அதிகாரமளிக்கலாம். (205. 23, 301–301.1).

**25.2. சான்றிதழ்கள்.** பொதுச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் மற்றும் மாற்றுப் பிரதிநிதிகளுக்கு மறைமாவட்ட மாநாட்டின் செயலாளர் தகுதிச் சான்றிதழ்களை வழங்குவார்; மறைமாவட்ட மாநாடு ஒத்திவைக்கப்பட்ட உடனேயே இந்தத் தேர்வுகளைப் பற்றிய சான்றுப் பத்திரங்களை நசரேயத் திருச்சபையின் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைப்பார்.

**25.3. கூட்டத்தில் இருக்க வேண்டிய குறைந்த பட்ச நபர்களின் எண்ணிக்கை.** பொதுச்சபையின் எந்த ஒரு கூட்டத்திலும் கலந்துகொள்பவர்களின் குறைந்த பட்ச எண்ணிக்கையானது பொதுச்சபையின் சான்றிதழ்தளின் கூட்டமைப்பில்

பதிவு செய்யப்பட்டிருக்கும் வாக்களிக்கும் நபர்களின் பெரும்பாண்மை எண்ணாக இருக்கிறது. இத்தகைய பஞ்சாயத்துநிலை ஏற்கெனவே எட்டப்பட்டிருந்தால் அந்தக் கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்காமல் மீதமிருக்கும் குறிப்புகளைக், குறைந்த எண்ணிக்கையில் மறுபடியும் சபை நடந்தாலும், விவாதிக்கப்பட்டு சம்மதம் அளிக்கப்படலாம்; சபை ஒத்திவைக்கப்படலாம்.

**25.4. பொதுக் கண்காணிப்பாளர்கள்.** பொதுச்சபையானது நசரேயத் திருச்சபையின் மூப்பர்களிடையே வாக்களிப்பின் மூலம் ஆறு பொதுக் கண்காணிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்; இவர்களே பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களாகக் கருதப்படுவார்கள். பொதுச் சபைகளுக்கு இடைப்பட்ட காலத்தில், இந்த நிர்வாகக் குழுவில் காலியிடம் ஏற்படுமானால், நசரேயத் திருச்சபையின் ஒழுங்கான மறைமாவட்ட கண்காணிப்பாளர்கள் மூன்றுக்கு இரண்டு பங்கு பெரும்பாண்மையில் வாக்களிப்பதின் மூலம் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் (305.2, 316).

**25.5. தலைமை அலுவலர்.** பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவினால் நியமிக்கப்படும் பொதுக் கண்காணிப்பாளர் ஒருவர் பொதுச் சபையின் தினசரிக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். இப்படி பொதுக் கண்காணிப்பாளர் எவரும் நியமிக்கப்படாதிருந்தால் அல்லது பங்குபெறாமல் இருந்தால் பொதுச் சபையானது தனது உறுப்பினர்களில் ஒருவரை தற்காலிக தலைமை அலுவலராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். (300.1)

**25.6. ஒழுங்கு விதிகள்.** பொதுச் சபையானது அதன் அமைப்பு வழிமுறைகள், நடப்பு வழிமுறைகள், குழுக்கள் இவற்றை நிர்வாகிக்கவும், அதன் அலுவல்களை ஒழுங்காக நடத்திச் செல்வதற்குத் தேவையான அனைத்துக் காரியங்களிலும் ஒழுங்கு விதிகளை ஏற்படுத்திக் கொள்ளும், தனது சொந்த உறுப்பினர்களின் தேர்தல், தகுதிகள் இவற்றில் தானே நீதிபதியாகத் தீர்ப்பளிக்கும். (300.2–300.3)

**25.7. பொது முறையீட்டு நீதிமன்றம்.** பொதுச் சபையானது நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களிலிருந்து பொது முறையீட்டு நீதிமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்; இந்த நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இவற்றையும் வரையறை செய்யும். (305.7)

**25.8. அதிகாரங்களும் கட்டுப்பாடுகளும்**

(1) இந்த நியமங்களை மீறாமல் நசரேயத் திருச்சபைக்கான சட்டங்களை இயற்றவும், திருச்சபையோடு தொடர்புள்ள அல்லது எந்த வகையிலாவது இணக்கம் கொண்டுள்ள இலாக்காக்களுக்கான விதிகள், ஒழுங்கு விதிகள் இவற்றை இயற்றவும் பொதுச் சபைக்கு அதிகாரம் உண்டு. (300, 305 – 305.9)

(2) அனுமதி பெற்ற உள்ளூர் சபைக்கு தனது குருவானவரை அழைக்க அதிகாரம் உண்டு. இதைப் பொதுச் சபை நலமானது என்று அங்கீகரித்திருக்க வேண்டும். (115)

(3) எல்லா உள்ளூர் சபைகள், அலுவலர்கள், குருவானவர்கள், சாதாரண மக்கள், நியாயமான, ஒழுங்கான விசாரணையைக் கோரிப் பெறவும், மேல் முறையீடு செய்யவும் உரிமை பெற்றுள்ளார்கள்.

## சட்டத் திருத்தங்கள்

**26.** பொதுச் சபையின் அனைத்து உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை மூலமும், நசரேயத் திருச்சபையின் எல்லா ஒழுங்கான மற்றும் கட்டம் 3 அல்லது கட்டம் 2 மறைமாவட்ட மாநாடுகளின் உறுப்பினர்களில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை மூலமும் இந்த நியமங்களை ரத்து செய்யவோ, திருத்தம் செய்யவோ முடியும். எந்தவொரு கட்டம் 3 அல்லது கட்டம் 2 மறைமாவட்ட அசெம்பிளியினால் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமானால் மூன்றில் ஒரு பங்கு வாக்குத் தேவைப்படுகிறது. இந்த மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் முன்மொழிவதில் பொதுச் சபையோ அல்லது எந்த ஒரு ஒழுங்கான மற்றும் கட்டம் 3 அல்லது கட்டம் 2 மறைமாவட்ட மாநாடோ முன்வரலாம். மேற்கூறப்பட்ட வகையில் எந்த ஒரு மாற்றமோ அல்லது திருத்தமோ ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், இந்த வாக்களிப்பின் முடிவு பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவினால் அறிவிக்கப்படும். அப்போதிலிருந்தே அத்தகைய மாற்றமோ அல்லது திருத்தமோ முழு அங்கீகாரமும் பெற்று செயல்முறைக்கு வரும்.

**27.** விசுவாச கோட்பாடுகளைத் (பத்திகள் 1–16.2) திருத்துவதற்கான தீர்மானத்தைப் பொதுச் சபை ஒரு ஆய்வுக் குழுவினால் ஆய்வு செய்யப்படும்படி பொதுக்கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழுவுக்கு அனுப்பும். இதில் நமது திருச்சபையின் உலகளாவிய இயல்பைப் பிரதிபலிக்கும்படி பொதுக் கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழுவினால் நியமிக்கப்பட்ட இறையியல் மற்றும் அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் அங்கமாக இருப்பார்கள். இந்தக் குழுவானது ஏதேனும் பரிந்துரைகள் அல்லது தீர்மானங்கள் இருக்குமானால் அதைப் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவிற்கு அறிவிக்கும். அவர்கள் அதை அடுத்துவரும் பொது அசெம்பிளியில் சமர்ப்பிப்பார்கள்.

## பாகம் III

# கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கை

கிறிஸ்தவ வாழ்க்கை
மனித வாழ்க்கையின் பரிசுத்தம்
மனித வாழ்க்கையில் பாலுணர்வு மற்றும் திருமணம்
கிறிஸ்தவ உக்கிராணத்துவம்
திருச்சபை அதிகாரிகள்
ஒழுங்கு விதிகள்
கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கையில் திருத்தங்கள்

## A. கிறிஸ்தவ வாழ்க்கை

**28.** திருச்சபையானது நாம் கிறிஸ்துவுக்குள் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலையைப் பெற்று, புதுவாழ்வை அனுபவிக்கமுடியும் என்ற நற்செய்தியை மகிழ்ச்சியோடு பறைசாற்றுகிறது. தேவனின் கிருபையால் கிறிஸ்தவர்களாகிய நாம் ‘‘பழையவைகளையும் பழைய நடத்தையையும் பழைய உலகப்பிரகாரமான எண்ணங்களையும் களைந்து போட்டு’’ ‘‘புதியவைகளைத் தரித்துக்கொள்ள வேண்டும்.’’ ஒரு புதிய பரிசுத்தமான வாழ்க்கை முறையையும், கிறிஸ்துவின் சிந்தையையும் தரித்துக் கொள்ள வேண்டும்.

(எபேசியர் 4:17–24)

**28.1.** திருச்சபையின் கோட்பாடுகளும், நியமங்களும் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு கலாச்சாரங்களின் மத்தியிலும் அறியப்பட்டு, புரிந்துகொள்ளப்படும் வகையில் காலத்தால் கட்டுப்படுத்தப்பட முடியாத வேதாகம சத்தியங்களை, தற்கால சமுதாயத்திற்கு ஏற்றபடி எடுத்துக் கூறுவதையே நசரேயத் திருச்சபை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் மறு உறுதி செய்யப்பட்ட வழிமுறையில் பத்துக் கட்டளைகள், இயேசு கிறிஸ்துவின் போதனைகள் முழுமையாகவும், அதிலும் குறிப்பாக பிரதான கட்டளையும், மலைப்பிரசங்கமும் கிறிஸ்தவ நெறியின் அடிப்படையாக விளங்குகின்றன என்றும் அவை எல்லா வகையிலும் கைக்கொள்ளப்பட வேண்டுமென்றும் நாம் நம்புகிறோம்.

**28.2.** பரிசுத்த ஆவியானவரால் ஒளியூட்டப்பட்டு, வழிநடத்தப்படும் கிறிஸ்தவ மனச்சாட்சி என்ற கருத்தில் மதிப்பு உள்ளது என்று அங்கீகரிக்கிறோம். கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு உலகம் முழுவதிலுமான வெளிப்பாடாக விளங்கும் நசரேயத் திருச்சபை, பரிசுத்தமென்னும் கொள்கைக்கு வழிநடத்தக்கூடிய வகையில் கிறிஸ்தவ வாழ்க்கையை ஒருமுனைப்படுத்துவதற்கான வழிகளைத் தேடும் தனது பொறுப்பை உறுதி செய்கிறது. பின்வரும் பகுதிகளில் திருச்சபையின் வரலாற்று பூர்வமான கொள்கைப் பிரமாணங்கள் ஓரளவு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பரிசுத்த வாழ்க்கைக்கான வழிகாட்டிகளாகவும், உதவிகளாகவும் அவை கவனத்துடனும், சுய உணர்வுடனும் பயன்படுத்தப்பட வேண்டும். திருச்சபையின் விசுவாசக் கொள்கையை மீறுபவர்கள் தங்களுக்குத் தாங்களே அழிவை வரவழைத்துக் கொள்கிறார்கள்; திருச்சபையின் சாட்சிக்குக் கேடு விளைவிக்கிறார்கள்; அந்தந்தக் கலாச்சாரத்துக்கு ஏற்றபடியான மாற்றங்கள் பொதுக்கண்காணிப்பாளர் குழுவுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும்.

**28.3.** இந்தப் புதியதும் பரிசுத்தமானதுமான வாழ்க்கை வழி தவிர்க்கப்பட வேண்டிய செயல்பாடுகளையும், நமது அயலாரின் ஆத்துமாக்களுக்காகவும், எண்ணங்களுக்காகவும், சரீரங்களுக்காகவும் செய்ய வேண்டிய அன்பான மீட்பின் செயல்நடவடிக்கைகளையும் உள்ளடக்கியிருக்கிறது என்று நசரேயத் திருச்சபை விசுவாசிக்கிறது. இந்த அன்பின் மீட்பின் செயல்வட்டம் இந்த உலகத்தின் எளியோர்மீது இயேசு கொண்டிருந்த விசேஷித்த உறவையும், தமது சீஷர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் கட்டளையிட்ட உறவையும் உள்ளடக்கியிருக்கிறது. முதலாவதாக, அவருடைய திருச்சபை எளிமையானதாகவும், செல்வம் மற்றும் வீண்செலவுகளை வலியுறுத்தாததாகவும் இருக்க வேண்டும். இரண்டாவதாக, எளியோர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களைப் பராமரித்து, உணவளித்து, உடையளித்து, தங்குவதற்கு இடமளிக்க வேண்டும். வேதாகமம் முழுவதிலும், இயேசுவின் வாழ்க்கை மற்றும் முன்மாதிரியிலும் தேவன் ஏழைகளோடும், ஒடுக்கப்பட்டவர்களோடும், சமுதாயத்தில் தனக்காகப் பேச முடியாத நிலையில் இருப்பவர்களோடும் தம்மை அடையாளப்படுத்தி, அவர்களுக்கு உதவுகிறார். இதுபோல நாமும் ஏழைகளோடு நம்மை அடையாளப்படுத்தி, அவர்களோடு ஒற்றுமையோடு இருக்க வேண்டும். ஏழைகளுக்குச் செய்யப்படும் காருணிய ஊழியத்தில் காருணியச் செயல்கள் மட்டுமின்றி, ஏழைகளுக்கு வாய்ப்பு, சமத்துவம்

மற்றும் நீதியை அளிப்பதற்கான போராட்டமும் உள்ளடங்கியிருக்க வேண்டும் என்று நாம் விசுவாசிக்கிறோம். ஏழைகளுக்கான கிறிஸ்தவப் பொறுப்பு, அன்பின் மூலமாகக் கிரியைசெய்யும் விசுவாசத்தை நாடும் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையின் அத்தியாவசியமான ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். கிறிஸ்தவ பரிசுத்தம் என்பது ஏழைகளுக்குச் செய்யும் ஊழியத்திலிருந்து பிரிக்கப்பட முடியாது என்றும் நாம் விசுவாசிக்கிறோம்; அது கிறிஸ்தவனைத் தனது சொந்த தனிப்பட்ட பரிபூரணத்தை நாடுவதற்கும் அப்பால், நீதியும் சமத்துவமும் கொண்ட சமுதாயத்தையும், உலகத்தையும் உருவாக்கும்படி உந்துதலளிக்கிறது. பரிசுத்தமானது இந்த உலகத்தின் மக்களுடைய அத்தியாவசியமான பொருளாதாரத் தேவைகளிலிருந்து தூர விலகும்படி செய்யாமல் அப்படிப்பட்ட தேவையைச் சந்திக்கும்படியான ஊழியத்தில் நமது ஆதாரங்களைச் செலவழிக்கும்படியும், மற்றவர்களின் தேவைகளுக்கேற்ப நமது விருப்பங்களைச் சரிசெய்துகொள்ளும்படியும் நமக்குத் தூண்டுதலளிக்கிறது.

(யாத்திராகமம் 23:11; உபாகமம் 15:7; சங்கீதம் 41:1; 82:3; நீதிமொழிகள் 19:17; 21:13; 22:9; எரேமியா 22:16; மத்தேயு 19:21; லூக்கா 12:33; அப்போஸ்தலர் 20:35; 2 கொரிந்தியர் 9:6; கலாத்தியர் 2:10)

**28.4.** எவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று பட்டியல் போட முயலும்போது, உலகெங்கிலும் பரவியுள்ள தவறுகளின் பல்வேறு வகைகளை முழுமையாகப் பட்டியல் போடுவது இயலாத காரியம் என்று நாம் ஒப்புக்கொள்கிறோம். எனவே சட்டத்தின் ஓர் எழுத்தையாவது மீறக்கூடிய தீங்கு எது என்பதை உணர்ந்து கொள்ளக்கூடிய உணர்வைப் பெற பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாம் மனப்பூர்வமாக நாட வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்; பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" என்ற எச்சரிப்பை மறவாதிருப்போம்.

(1 தெசலோனிக்கேயர் 5:21–22)

**28.5.** நமது தலைவர்களும், போதகர்களும் பத்திரிக்கைகளின் மூலமும், பிரசங்கங்களின் மூலமும், நன்மை, தீமை இவற்றைப் பகுத்தறியத்தக்க அறிவை வளர்க்கக்கூடிய அடிப்படை வேதாகம சத்தியங்களை அதிகமாக வலியுறுத்தி எடுத்துக் கூறவேண்டும்.

**28.6.** சமுதாயத்தின் சமூக மற்றும் ஆவிக்குரிய நன்மைக்குக் கல்வி அறிவு மிகமிக முக்கியமானது. ஓய்வுநாள் பள்ளிகள், பள்ளிகள் (பிறப்பிலிருந்து இரண்டாம் நிலை வரை), பிள்ளைப் பாதுகாப்பு மையங்கள், பெரியவர்களின் பாதுகாப்பு மையங்கள், கல்லூரிகள், இறையியல் கல்லூரிகள் போன்ற நசரேய கல்வி அமைப்புக்களும் நிறுவனங்களும், சிறுவர், வாலிபர், பெரியோர் அனைவரும் நமது கோட்பாடுகளை நன்கு அறிந்துகொள்ளும் வகையில், வேதாகம சத்தியங்களையும்,நீதிப் பிரமாணங்களையும் போதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவான பள்ளிகளின் பாடத்திட்டத்தோடு அல்லது அதற்குப் பதிலாக செயல்படுத்தப்பட வேண்டும். பொதுவான பள்ளிக் கல்வியோடு, இல்லங்களில் பரிசுத்தம் பற்றிய போதனையும் கொடுக்கப்படவேண்டும். கிறிஸ்தவர்கள் சாட்சிபகருவதற்காகவும்,

தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய உணர்வைத் தூண்டும்படியாகவும் பொதுவான நிறுவனங்களிலும், பொதுவான நிறுவனங்களோடும் பணிபுரியும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

(மத்தேயு 5:13–14).

**29.** கீழ்க்கண்ட பழக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று நாம் குறிப்பாக ஏற்றுக்கொள்கிறோம்.

**29.1. கிறிஸ்தவ நல்லொழுக்கத்தை அழிக்கும் வகையில் இருக்கும் பொழுதுபோக்கு அம்சங்கள்.** நமது மக்கள், தனிப்பட்ட கிறிஸ்தவர்களாகவும், கிறிஸ்தவ குடும்ப அலகில் அங்கம் வகிப்பவர்களாகவும், மூன்று கொள்கைகளால் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள வேண்டும். முதலாவது ஓய்வான நேரத்தைக் குறித்த கிறிஸ்தவ உக்கிராணத்துவமாகும். இரண்டாவது கிறிஸ்தவ குடும்பங்களில் மேலான நன்னடத்தை நிலை இருக்கும்படிக் காத்துக்கொள்வது நமது கிறிஸ்தவ கடமையாக இருக்கிறது. நடத்தை சம்பந்தமான எத்தனையோ குழப்பங்கள் நிலவும் நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது பரிசுத்தமான இல்லத்துக்குள் இத்தகைய தீங்குகள் தற்கால இலக்கியம், வானொலி, தொலைக்காட்சி, தனிப்பட்ட கணினி, இணையதளம் இவற்றின் மூலம் மிகவும் வல்லமையோடு ஊடுருவுவதை நாம் தினமும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே நாம் உலகப்பிரகாரமானவர்களாக ஆகிவிடாதபடிக்குக் கண்டிப்பான தற்பாதுகாப்பு விதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். என்றாலும், பரிசுத்த வாழ்க்கையை ஊக்குவிக்கும் மற்றும் ஆவிக்குரிய மதிப்பீடுகளை மற்றும் திருமண வாக்கின் பரிசுத்தத்தை ஆதரிக்கும், குறிப்பாக திருமண உடன்படிக்கையை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகளை நாம் ஆதரிக்க வேண்டும். கலாச்சாரத்தின் இந்தத் தாக்கம் விளைவிக்கும் பகுதியை அவர்கள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தும்படி ஊடகங்களிலும் கலைகளிலும் அவர்கள் தங்கள் வரங்களைப் பயன்படுத்தும்படி குறிப்பாக நமது இளைஞர்களை நாம் ஊக்குவிக்கிறோம். மூன்றாவதாக, தேவனைத் தூஷிக்கும் பலாத்காரம், சிற்றின்பம், ஆபாச இலக்கியம், தேவ நிந்தனை, துர்ச் சமய லீலைகள் போன்ற சமுதாயத் தீமைகள் வாணிப நோக்குடைய பொழுதுபோக்கு நிறுவனங்களால் பல்வேறு வகைகளில் ஊக்கமளிக்கப்பட்டு வருகையில், அவற்றை எதிர்த்துச் சாட்சி பகரவும், இத்தகைய பொழுதுபோக்குகளைப் பரப்பும் நிறுவனங்கள் தடைசெய்யப்பட வேண்டியதை செய்யவும் முயலுவது நமது கிறிஸ்தவக் கடமையாகும். பலாத்காரம், சிற்றின்பம், ஆபாசம், தேவ நிந்தனை, துர்ச் சமய லீலைகள் அல்லது உலகத் தத்துவங்களைக் கவர்ச்சிகரமாகத் தெரிவிக்கும், அல்லது உலகப்பிரகாரமான காரியங்களுக்கும், சிற்றின்பத்துக்கும், பொருளாசைக்கும் இடம் கொடுக்கும், இருதயத்திலும் வாழ்க்கையிலும் பரிசுத்தம் குறித்த தேவனுடைய தகுதிநிலைகளைக் குறைத்துக் காட்டும் நிகழ்ச்சிகளையும் இவற்றை உருவாக்கும், வெளியிடும் அல்லது ஊக்குவிக்கும் எல்லா வகைப்பட்ட கேளிக்கை சாதனங்களையும், ஊடகங்களின் நிகழ்ச்சிகளையும் தவிர்க்க வேண்டும்.

இதற்காகக் கிறிஸ்தவ வாழ்க்கையின் நல்லொழுக்கத் தகுதி நிலைகளைப் போதிப்பதும் பிரசங்கிப்பதும் அவசியமாகிறது. தொடர்ந்து பரிசுத்த வாழ்க்கையின்

மேன்மையான பாதையைத் தெரிந்துகொள்ளும்படியாக ஜெபத்தோடு கூடிய பகுத்தறிதலைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இந்த ஊடகங்களில் காணப்படும் நன்மையையும் தீமையையும் பகுத்தறியும் கொள்கையை நமது மக்கள் வளர்த்துக்கொள்ளும்படியாக நமது தலைவர்களும் போதகர்களும் பத்திரிகைகளிலும் பிரசங்க மேடைகளிலும் அடிப்படைச் சத்தியங்களை வலுவாக வலியுறுத்த வேண்டும்.

இப்படிப் பகுத்தறிவது குறித்த போதனைக்கு அடிப்படையாக ஜாண் வெஸ்லிக்கு அவருடைய தாயார் கொடுத்த தகுதிநிலையை நாம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம்‘‘எவைகளெல்லாம் உனது பகுத்தறிவைப் பலவீனப்படுத்தின்றனவோ, உனது மனச்சாட்சியின் மென்மையைப் பாதிக்கின்றனவோ, தேவனைக் குறித்த உனது உணர்வை மறைக்கின்றனவோ, அல்லது ஆவிக்குரிய காரியங்களைக் குறித்த வாஞ்சையை எடுத்துப் போடுகின்றனவோ, எவையெல்லாம் உனது சிந்தைக்கு மேலாக உனது சரீரத்தின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்கின்றனவோ அவையெல்லாம் உனக்குப் பாவங்களாகும்.’’ (28.2–28.4, 926–931)

(ரோமர் 14:7–13; 1 கொரிந்தியர் 10:31–33; எபேசியர் 5:1–18; பிலிப்பியர் 4:8–9; 1 பேதுரு 1:13–17; 2 பேதுரு 1:3–11)

**29.2. சட்டப்படி அனுமதி பெற்றிருந்தாலும், சட்ட விரோதமாக இருந்தாலும் லாட்டரிச் சீட்டு மற்றும் பிறவகையான சூதாட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.** இதன் இறுதி விளைவு தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் தீமையையே விளைவிக்கும் என்று திருச்சபை கருதுகிறது.

(மத்தேயு 6:24–34; 2 தெசலோனிக்கேயர் 3:6–13; 1 தீமோத்தேயு 6:6–11; எபிரெயர் 13:5–6; 1 யோவான் 2:15–17)

**29.3. இரகசியப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும் இரகசிய சங்கங்களில் உறுப்பினராவதைத் தவிர்க்க வேண்டும்.** வெளிப்பார்வைக்குச் சமயச் சார்புடையவை போன்று காணப்படும் இந்த அமைப்புகள் நமது கிறிஸ்தவ அர்ப்பணிப்பைக் கெடுக்கின்றன; இவற்றின் இரகசியத் தன்மை கிறிஸ்தவர்களின் வெளிப்படையான சாட்சிக்கு எதிர்மறையானது. சபை உறுப்பினர் தகுதியைப் பொருத்தவரையில் இந்தக் காரியம் பத்தி 112.1 உடன் சேர்த்துக் கவனிக்கப்பட வேண்டும்.

(1 கொரிந்தியர் 1:26–31; 2 கொரிந்தியர் 6:14–7:1; எபேசியர் 5:11–16; யாக்கோபு 4:4; 1 யோவான் 2:15–17)

**29.4. ஆவிக்குரிய வளர்ச்சிபெறுவதைத் தடுத்து, சரியான ஒழுக்கரீதியான பழக்கங்களையும், அடக்கத்துக்கேதுவான நெறிகளையும் உடைக்கும் எல்லாவிதமான நடனங்களும் தவிர்க்கப்பட வேண்டும்.**

(மத்தேயு 22:36–39; ரோமர் 12:1–2; 1 கொரிந்தியர் 10:31–33; பிலிப்பியர் 1:9–11; கொலோசெயர் 3:1–17).

**29.5. போதை தரும் மதுவை அருந்துவது அல்லது விற்பனை செய்வது; இவற்றை விற்பனை செய்யும் கடைகளுக்கான அனுமதி பெற உதவுவது அல்லது வாக்களிப்பது; போதைதரும் கஞ்சா, மாத்திரைகள் இவற்றைப்**

**பயன்படுத்துவது அல்லது விற்பது; புகையிலையை ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்துவது அல்லது விற்பது இவை தவிர்க்கப்பட வேண்டும்.**

போதைதரும் ஒன்றாக ஆல்கஹாலைப் பயன்படுத்துவதின் அழிவைக் கொடுக்கும் பின்விளைவுகளைப் பரிசுத்த வேதாகமமும், மானிட அனுபவமும் உறுதிப்படுத்துவதின் அடிப்படையிலும், மதுவும் புகையிலையும் மனதுக்கும் சரீரத்துக்கும் தீங்குவிளைவிப்பதாக இருக்கின்றன என்ற மருத்துவ அறிவியலின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலும், பரிசுத்த வாழ்க்கை வாழுவதற்கான அர்ப்பணிப்பைக் கொண்டுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தினராகிய நாம் இவைகளை மட்டாகப் பயன்படுத்துவதை அல்ல, முற்றிலுமாக ஒதுக்குவதையே நமது நிலைப்பாடாகக் கொண்டிருக்கிறோம். நமது சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கிறது என்று பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது. நம்மைக் குறித்தும் மற்றவர்களைக் குறித்தும் அன்பான அக்கறை கொண்டிருக்கும்படியாக நாம் போதையளிக்கும் எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும்

மேலும், மற்றவர்களுக்கு மதுவும் புகையிலையையும் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் குறைக்கும்படியாக சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது கிறிஸ்தவர்களாகிய நம்முடைய சமுதாயப் பொறுப்பாகும். உலகமெங்கும் மதுவின் பாதிப்பு அதிகமாக இருக்கிறபடியால் மற்றவர்களுக்குச் சாட்சியாக இருக்கும்படியான ஒரு நிலைப்பாட்டை எடுப்பது அவசியமாக இருக்கிறது. (929–931)

(நீதிமொழிகள் 20:1; 23:29–24:2; ஓசியா 4:10–11; ஆபகூக் 2:5; ரோமர் 13:8; 14:15–21; 15:1–2; 1 கொரிந்தியர் 3:16–17; 6:9–12, 19–20; 10:31–33; கலாத்தியர் 5:13–14, 21; எபேசியர் 5:18).

(பரிசுத்த இராப்போஜனத்தில் புளிக்க வைக்காத திராட்ச ரசம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்) (515.4, 532.7, 533.2, 534.1, 700)

**29.6.** மருத்துவரின் வழிகாட்டுதல் அல்லது கண்காணிப்பின் கீழ் அல்லாமல் ஊக்கமருந்துகளையோ, மயக்க மருந்துகளையோ, தூக்க மாத்திரைகளையோ, சுயநினைவை இழக்கச் செய்யும் வேறு மாத்திரைகளையோ பயன்படுத்தக் கூடாது.

இப்படிப்பட்டவைகளைப் பயன்படுத்துவதால் ஆபத்து ஏற்படும் என்று மருத்துவரீதியாகக் கூறப்பட்டதையும், மனதையும், சரீரத்தையும் சரியான நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆவிக்குரியரீதியாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகளையும் அடிப்படையாகக் கொண்டு, சட்டரீதியாகவும், எளிதிலும் இந்த மருந்துகள் கிடைத்தாலும், நாம் இப்படிப்பட்ட ஊக்கமருந்துகளையோ, மயக்க மருந்துகளையோ, தூக்க மாத்திரைகளையோ, சுயநினைவை இழக்கச் செய்யும் வேறு மாத்திரைகளையோ மருத்துவருடைய சரியான வழிகாட்டுதல் அல்லது கண்காணிப்பு பயன்படுத்தமாட்டோம் என்று தெரிந்தெடுத்திருக்கிறோம்.

(மத்தேயு 22:37–39; 27:34; ரோமர் 12:1–2; 1 கொரிந்தியர் 6:19–20; 9:24–27).

## B. மனித வாழ்க்கையின் பரிசுத்தம்

**30.** நசரேயத் திருச்சபையானது மனித வாழ்க்கையின் பரிசுத்தத்தில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறது. அதனால் அது கருச்சிதைவு, கருவைக் குறித்த ஆய்வுகள்,

கருணைக் கொலை, ஊனமுற்றவர்களுக்கோ அல்லது வயது முதிர்ந்தவர்களுக்கோ பொருத்தமான மருத்துவ உதவி செய்வதைத் தவிர்த்தல் போன்றவற்றிற்கு எதிராகப் பாதுகாப்பளிப்பதை நாடுகிறது.

**30.1. கட்டாயப்படுத்தப்பட்ட கருச்சிதைவு.** சிருஷ்டிகராகிய தேவனால் நிறுவப்பட்டுள்ள மனித வாழ்க்கையின் பரிசுத்தத்தை நசரேயத் திருச்சபை உறுதிப்படுத்துகிறது. இதுவரை பிறக்காத கருவும் கூட இந்தப் பரிசுத்தத்துக்குள் வருகிறது என்று நசரேயத் திருச்சபை விசுவாசிக்கிறது. வாழ்க்கை என்பது தேவனுடைய ஈவாகும். எல்லா மனிதர்களும், கருவிலிருக்கும் சிசு உட்பட, தேவனால் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் போஷிக்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும். கருத்தரித்த கணத்திலிருந்து ஒரு சிசு மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்குரிய எல்லாப் பண்புகளையும் கொண்ட ஒரு மனிதனாக இருக்கிறது. இந்த ஜீவனானது தொடர்ந்து வளர்ச்சிக்காகத் தனது தாயைச் சார்ந்திருக்கிறது. எனவே கருத்தரித்த கணத்திலிருந்து மானிட வாழ்க்கையானது மதிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டுமென்று நாம் விசுவாசிக்கிறோம். தனிப்பட்ட வசதிக்காகவோ அல்லது மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக்காகவோ எந்த வகையிலும் கட்டாயப்படுத்தி உண்டாக்கப்படும் கருச்சிதைவை நாம் எதிர்க்கிறோம். கருச்சிதைவை ஆதரிக்கும் சட்டங்களை நாம் எதிர்க்கிறோம். தாயோ அல்லது பிறக்காத சிசுவோ அல்லது இருவருமோ பிரசவத்தில் பிழைத்திருக்க முடியாத அபூர்வமான ஆனால் உண்மையான நிலை உருவாகலாம் என்பதை உணர்ந்து, உறுதியான மருத்துவ மற்றும் கிறிஸ்தவ ஆலோசனையின் பெயரில் கர்ப்பத்துக்கு முடிவைக் கொண்டுவரலாம்.

பொறுப்புணர்வோடு கருச்சிதைவை எதிர்ப்பது, தாய்க்கும், சிசுவுக்கும் உதவியளிக்கக்கூடிய திட்டங்களை வடிவமைப்பதையும், அவற்றை ஆதரிப்பதையும் நமது கடமையாக்குகிறது. தேவையற்ற தாய்மை நிலை என்ற பிரச்சினை வரும்போது விசுவாசிகளின் குழு ஒன்று (இந்தச் சிக்கலைப் பற்றித் தெளிவாக அறிந்தவர்கள் மட்டுமே இந்தக் குழுவின் பிரதிநிதியாக இருக்க வேண்டும்) அன்பு, ஜெபம், ஆலோசனை இவற்றை அளிப்பதற்காக அழைக்கப்படவேண்டும். இத்தகைய வேளைகளில் ஆலோசனை மையங்கள், கர்ப்பிணிகளுக்கான இல்லங்கள், கிறிஸ்தவ தத்தெடுத்தல், ஊழிய நிலையங்களை நிறுவுதல் அல்லது அத்தகைய நிறுவனங்களின் உதவியை நாடுதல் போன்ற வழிகளில் ஆதரவளிக்கலாம்.

பாலுணர்வுப் பொறுப்பில் கிறிஸ்தவ மாதிரி புறக்கணிக்கப்படுவதினாலேயே, தேவையற்ற கர்ப்பத்தைக் கலைக்க வேண்டியிருக்கிறது என்று நசரேயத் திருச்சபை கருதுகிறது. எனவே மானிடப் பாலுணர்வு பற்றிய புதிய ஏற்பாட்டு அறிவுரைகளைப் பழக்கத்தில் கொண்டுவருமாறு அனைவரையும் திருச்சபை அழைக்கிறது; நல்லொழுக்கத் தீர்மானங்களைப் பெறச் செய்யும் வேதாகமக் கருத்துக்களாகிய விசாலமான ஒழுங்குமுறைக்குள் கருச்சிதைவு பற்றிய பிரச்சினையையும் வைத்து அதற்குத் தீர்வு காணுமாறு திருச்சபை அழைக்கிறது.

(ஆதியாகமம் 2:7, 9:6; யாத்திராகமம் 20:13; 21:12–16, 22–25; லேவியராகமம் 18:21; யோபு 31:15; சங்கீதம் 22:9; 139:3–16; ஏசாயா 44:2, 24; 49:5; எரேமியா 1:5; லூக்கா

1:15, 23–25, 36–45; அப்போஸ்தலர் 17:25; ரோமர் 12:1–2; 1 கொரிந்தியர் 6:16; 7:1.; 1 தெசலோனிக்கேயர் 4:3–6).

கருச்சிதைவின் சோகத்தினால் பலரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நசரேயத் திருச்சபை அங்கிகரிக்கிறது. கருச்சிதைவை அனுபவித்திருக்கும் ஒவ்வொருவருக்கும் தேவனுடைய மன்னிப்பின் செய்தியை அளிக்கும்படி ஒவ்வொரு உள்ளூர் சபையும், தனிப்பட்ட விசுவாசிகளும் வலியுறுத்தப்படுகிறார்கள். வேண்டுமென்றே கருச்சிதைவு செய்துகொண்டதினால் வரும் சரீரப்பிரகாரமான, உணர்வுரீதியான மற்றும் ஆவிக்குரிய வேதனையில் தவிக்கும் எல்லோருக்கும் நமது உள்ளூர் சபையானது மீட்பையும் நம்பிக்கையையும் அளிக்கும் சமுதாயமாக இருக்க வேண்டும்.

(ரோமர் 3:22–24; கலாத்தியர் 6:1)

30.2 **மரபணுப் பொறியியல் மற்றும் மரபணுச் சிகிச்சை**. மரபணுச் சிகிச்சை அளிக்கும்படியாக மரபணுப் பொறியியலைப் பயன்படுத்துவதை நசரேயத் திருச்சபை ஆதரிக்கிறது. மரபணுச் சிகிச்சையானது நோய்களைத் தடுப்பதற்கும், குணமாக்குவதற்கும், உடல் மற்றும் மனம் சம்பந்தமான கோளாறுகளைத் தவிர்ப்பதற்கும், குணமாக்குவதற்கும் உதவியாக இருக்கும் என்பதை நாம் அங்கிகரிக்கிறோம். சமுதாய அநீதியைக் கொண்டுவரும் அல்லது நபர்களின் கண்ணியத்தைக் குறித்துப் பொருட்படுத்தாமல் இருக்கும் அல்லது மற்றவர்கள்மீது இனரீதியாகவும், அறிவுபூர்வமாகவும், சமுதாயரீதியாகவும் மேம்பாட்டை எட்டும்படி செய்ய முயலும் மரபணுப் பொறியியல் முயற்சிகளை நாம் எதிர்க்கிறோம். மனிதக் கருச்சிதைவையோ அல்லது ஜீவனோடு பிறப்பதற்கு மாற்றையோ கொண்டுவரும் டிஎன் ஏ ஆய்வுகளை நாம் எதிர்க்கிறோம். இந்த எல்லாக் காரியங்களிலும் தாழ்மையும், மானிட வாழ்க்கையின் மீறமுடியாத கண்ணியத்தைக் குறித்த மதிப்பும், தேவனுக்கு முன்பாக மனிதர்கள் சமமானவர்கள் என்பதும், இரக்கம் மற்றும் நீதிக்கான அர்ப்பணிப்புமே மரபணுப் பொறியியலையும் மரபணுச் சிகிச்சையையும் ஆளுகை செய்ய வேண்டும்.

**30.3. மனிதக் கரு உயிரணு ஆய்வு மற்றும் கருத்தரித்தலுக்குப் பிறகு மனித வாழ்க்கையை அழிக்கும் மருத்துவ மற்றும் அறிவியல் முயற்சிகள்**. ஒரு வளர்ந்த மனிதனின் திசு, நச்சுக் கொடி, தொப்புள் கொடி இரத்தம், மிருக ஆதாரங்கள், மற்றும் மனிதரல்லாத கரு ஆதாரங்களின் மூலமாக ஸ்டெம் செல் பொறியியலில் தீவிரமான முன்னேற்றத்தை நாடும்படி நசரேயத் திருச்சபையானது அறிவியல் சமுகத்தினரை வலுவாக ஊக்குவிக்கிறது. இது மானிட வாழ்க்கையின் பரிசுத்தத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தாமல் பலருக்கும் குணமாகுதலைக் கொண்டுவர முயலும் நியாயமான முடிவைக் கொண்டிருக்கிறது. மனிதனுடையக் கரு என்பது தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்ட ஒரு நபர் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையில் மனிதனுடையக் கரு உயிரணு ஆய்வைக் குறித்த நமது நிலைப்பாடு இருக்கிறது. எனவே மானிடக் கருவிலிருந்து உருவாக்கப்படும் ஸ்டெம் செல்களை ஆய்வுக்கோ அல்லது குணமாக்கும் முயற்சிக்கோ அல்லது வேறு நோக்கங்களுக்காகவோ பயன்படுத்துவதை நாம் எதிர்க்கிறோம்.

வருங்கால அறிவியல் முன்னேற்றங்கள் புதிய தொழில் நுட்பங்களைக் கொண்டுவரும் என்கிறபடியால், இந்த ஆய்வானது மனித வாழ்க்கையின் பரிசுத்தத்தையோ அல்லது நல்லொழுக்க அல்லது வேதாகமப் பிரமாணங்களையோ மீறாமல் இருக்குமானால் அதை நாம் வலுவாக ஆதரிக்கிறோம். என்றாலும் கருத்தரிப்புக்குப் பிறகு எந்த நோக்கத்துக்காகவும் கருவை அழிப்பதையோ அல்லது அதன் உயிரை அழிக்கக்கூடிய எந்த வகைப்பட்ட ஆய்வுகளையோ நாம் எதிர்க்கிறோம். இந்தக் கண்ணோட்டத்துக்கு ஏற்ப சிதைக்கப்பட்ட மானிடக் கருவின் திசுவை எந்த நோக்கத்துக்காகவும் பயன்படுத்துவதை நாம் எதிர்க்கிறோம்.

**30.4. குளோணிங் முறையில் மனிதர்களை உருவாக்குதல்.** ஒரு தனிப்பட்ட மனிதனைக் குளோணிங் செய்வதை நாம் எதிர்க்கிறோம். மனிதக்குலத்தைத் தேவன் மதிக்கிறார், அவர் நம்மைத் தமது சாயலில் சிருஷ்டித்திருக்கிறார். ஒரு தனிப்பட்ட மனிதனைக் குளோணிங் செய்வது அந்த மனிதனை ஒரு பொருளைப்போல நடத்துவதற்கு ஒப்பாக இருக்கிறது. நமது சிருஷ்டிகரால் நமக்குக் கொடுக்கப்பட்ட தனிப்பட்ட கண்ணியத்தையும் மதிப்பையும் அது மறுக்கிறது.

**30.5. கருணைக்கொலை (சரீரப்பிரகாரமான உதவியோடு செய்யப்படும் தற்கொலை உட்பட).** கருணைக் கொலை (மரிக்கும் நிலையில் இருக்கும் ஒருவருடைய உயிரை நோக்கத்தோடு பறித்தல் அல்லது உடனடியாக மரணத்தைக் கொண்டுவராவிட்டாலும் நோயின் வேதனையிலிருந்து விடுவிப்பதற்காகவோ உயிரைப் பறித்தல்) கிறிஸ்தவ விசுவாசத்துக்குப் பொருந்தாத ஒன்று என்று நாம் விசுவாசிக்கிறோம்.மரிக்கும்படிநோய்வாய்ப்பட்டிருக்கும்நபர்வேண்டிக்கொண்டாலோ (தானாக முன்வரும் கருணைக்கொலை) அல்லது ஒப்புதல் அளிக்க முடியாதபடி மனோரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தாலோ (தானாக முன்வராத கருணைக்கொலை) இரண்டையும் நாம் எதிர்க்கிறோம். வரலாற்றுரீதியாகக் கிறிஸ்தவ சபையானது கருணைக்கொலையை எதிர்ப்பது என்பது வேதாகமத்திலிருந்து வரும் கிறிஸ்தவ உறுதிப்பாடுகளினாலும், இயேசுகிறிஸ்துவே ஆண்டவர் என்ற விசுவாசத்தைச் சபை அறிக்கையிடுவதின் மையமாக இருக்கும் உறுதிப்பாடுகளினாலும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். கருணைக் கொலையானது வாழ்க்கையின் மீதான ஆளுகையைத் தானே எடுத்துக்கொள்கிறது. தேவனே வாழ்க்கையின் இராஜரீகமான ஆண்டவர் என்ற கிறிஸ்தவ நம்பிக்கையை மீறுகிறது. மனித வாழ்க்கை மற்றும் சமுதாயத்தின்மீது வேதாகமம் கொண்டிருக்கும் மதிப்பீடுகளைக் கறைப்படுத்துகிறது; பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவத்தை அது கொண்டுவருகிறது; கிருபையாக ஆளுகைசெய்யும் தேவனுக்கு முன்னால் அது மானிட இறுமாப்பைப் பிரதிபலிக்கிறது. கருணைக்கொலையைச் சட்டபூர்வமாக்கும் எல்லா முயற்சிகளையும் எதிர்க்குமாறு நாம் நமது மக்களை வலியுறுத்துகிறோம்.

**30.6. மரிக்க அனுமதித்தல்.** மனித மரணமானது நெருங்கி வரும்போது, உயிருக்கு ஆதரவாக இருக்கும் சாதனங்களை எடுத்துவிடுவதோ அல்லது வைக்காமல் இருப்பதோ கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் செயல்பாட்டின் எல்லைக்குள்ளாக

அனுமதிக்கப்படக் கூடியது என்று நாம் விசுவாசிக்கிறோம். தொடர்ந்து vegetative என்று அழைக்கப்படும் நிலையில் இருப்பவர்களுக்கும், இத்தகைய அசாதாரணமான சாதனங்களைப் பயன்படுத்துவதினால் ஆரோக்கியத்துக்குத் திரும்ப முடியும் என்ற நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் இது பொருத்தமானதாகும். மரணமானது நெருங்கி வரும்போது மரிப்பதைச் செயற்கையாகத் தள்ளிப்போடுவதற்கான எந்த ஆதாரமும் கிறிஸ்தவ விசுவாசத்தில் இல்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதில் நம்பிக்கை வைத்திருக்கிறோம், நித்திய வாழ்க்கையைக் குறித்த நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம். நமக்காக மரணத்தை ஜெயித்து, அதன் வெற்றியை முறித்துப்போட்ட கிறிஸ்துவின்மீதான நமது விசுவாசத்தின் வெளிப்பாடாக மரணத்தை ஏற்றுக்கொள்ளுவதைக் கிறிஸ்தவர்களுக்கு இது சாத்தியமாக்குகிறது.

## C. மனித வாழ்க்கையில் பாலுணர்வு மற்றும் திருமணம்

**31.** சிருஷ்டித்தவராகிய தேவன் தமது படைப்புகளில் கொண்டிருந்த நோக்கமாகிய பரிசுத்தம் மற்றும் அழகின் ஒரு வெளிப்பாடாகவே மனித வாழ்க்கையில் பாலுணர்வு இருக்கிறது என்று நசரேயத் திருச்சபை கருதுகிறது. எல்லா மனிதர்களும் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அனைவரும் மதிப்பிடவேமுடியாத அளவிற்கு மதிப்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக மனித வாழ்க்கையில் பாலுணர்வு என்பது உணர்ச்சிகள் நிறைந்த அனுபவம் மட்டும் கிடையாது என்றும், அது நம்முடைய முழுமையான சரீரப்பிரகாரமான மற்றும் தொடர்புசார்ந்த சிருஷ்டிப்பை வெளிப்படுத்தும் விதமாகத் தேவனால் வடிவமைக்கப்பட்ட ஈவாக இருக்கிறது என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

பரிசுத்த மக்களாக, நசரேயத் திருச்சபையானது மனித சரீரம் என்பது தேவனுக்கு முக்கியமான ஒன்றாக இருக்கிறது. நம்முடைய சரீரத்திலும், அதைக் கொண்டும் பரிசுத்த ஆவியானவரின் மறுரூபமாக்கும் மற்றும் பரிசுத்தமாக்கும் கிரியையின் மூலமாக தேவனை மகிமைப்படுத்தும்படியாக கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டும், ஆயத்தப்படுத்தப்பட்டும் இருக்கிறார்கள். நம்முடைய உணர்ச்சிகள், பாலுணர்வுரீதியான உணர்ச்சிகள், இன்பத்தை அனுபவிக்கக்கூடிய நம்முடைய திறன் மற்றும் மற்றவர்களோடு தெடார்பு கொள்ள வேண்டும் என்று நாம் கொண்டிருக்கும் ஆசை ஆகியவை தேவனுடைய பண்புகளிலிருந்தே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய சரீரங்கள் நல்லவை. மிகவும் நல்லவையாக இருக்கின்றன.

அன்பின் செயலாக சிருஷ்டிப்பை ஏற்படுத்திய தேவனை நாம் விசுவாசிக்கிறோம். தேவனுடைய பரிசுத்த அன்பை அனுபவித்த நாம், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் அன்பின் ஐக்கியமாகவே திரித்துவம் இருக்கிறது என்று புரிந்துகொண்டிருக்கிறோம். எனவே, நம்முடைய வாழ்வின் முக்கிய புள்ளியாக மற்றவர்களோடு தொடர்புகொள்ளும் ஏக்கம் இருக்கிறது. அந்த ஏக்கமானது நாம் தேவனோடும், சிருஷ்டிப்போடும், தன்னைப்போலவே பிறனையும் நேசிப்பதின் மூலமாகவும் உடன்படிக்கையின் உறவோடு நாம் வாழ்வதின் மூலமாக நிறைவேறுகிறது. சமுதாயத்தோடு தொடர்புகொள்ளும் நபர்களாக நாம் சிருஷ்டிக்கப்பட்டிருப்பது

நல்லதும், அழகானதுமாக இருக்கிறது. தொடர்புசார்ந்த முறையில் நாம் திறன் பெற்றிருப்பதின் மூலமாகவும், அப்படிச் செய்வதற்கு நாம் ஆசை கொண்டிருப்பதின் மூலமாகவும் நாம் தேவனுடைய சாயலை வெளிப்படுத்துகிறோம். கிறிஸ்துவில் ஒன்றுபட்டவர்களாக மக்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். அன்பு மற்றும் கிருபையால் நிறைந்த சமுதாயமாக அவர்கள் இருக்கிறார்கள்.

இந்தச் சமுதாயத்திற்குள், கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையுள்ள உருப்பினர்களாக வாழும்படியாக விசுவாசிகள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய மக்கள் திருமணமாகாமல் இருப்பது திருச்சபையின் ஐக்கியத்தினாலும், பரிசுத்தவான்களின் நற்கருணையாலும் மதிக்கப்படவும், காத்துக்கொள்ளப்படவும் வேண்டும். திருமணமாகாமல் இருப்பது என்பது இயேசுவானவரைப் போலவே சமுதாயத்தோடு நெருங்கி இருந்து, நண்பர்களால் சூழப்பட்டு, வரவேற்கப்பட்டும், வரவேற்போடு இருந்தும், உண்மையுள்ள சாட்சியாக வாழ்வதாகும்.

அதோடு இந்தச் சமுதாயத்தில், சில விசுவாசிகள் திருமணம் செய்துகொள்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதியாகமத்தில் வரையறுக்கப்பட்டிருப்பதைப் போல ‘‘புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்’’ (ஆதியாகமம் 2:24). இந்தத் திருமண உடன்படிக்கையானது தேவனுக்கும், தேவனுடைய மக்களுக்கும் இடையே இருக்கும் உடன்படிக்கையின் வெளிப்பாடாக இருக்கிறது. அது நம்பகத்தன்மையையும், சுயநலமில்லாத ஊழியத்தையும், சமுதாயத்தில் சாட்சியாக இருக்கும் தன்மையையும் கொண்டிருக்கிறது. தேவன் எப்படி அன்பாக இருக்கிறார் என்பதற்குச் சாட்சியாக ஒரு ஆணும் பெண்ணும் எல்லோருக்கும் தெரியும்படி ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுக்கிறார்கள். கிறிஸ்து மற்றும் திருச்சபையின் ஐக்கியத்தை வெளிப்படுத்துவதாகவே திருமணத்தில் காணப்படும் நெருக்கம் இருக்கிறது. அது கிருபையின் இரகசியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சாக்கிரமெந்துகளால் ஒன்றிணைக்கப்படும் ஆணும் பெண்ணும் பாலுணர்வின் சுகத்தை அனுபவித்து, இதன் மூலமாக இந்த உலகத்திற்குள்ளும், சமுதாய அக்கறையின் உடன்படிக்கைக்குள்ளும் புதிய உயிர் நுழைவதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. ஆவிக்குரிய உருவாக்கத்திற்கு மைய இடமாக கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கும் வீடு இருக்கிறது. திருமணத்திற்கு முன்பாக ஆலோசனை கொடுப்பது மற்றும் திருமணத்தின் புனிதத்தன்மையை எடுத்துரைக்கும் போதனைகளைப் போதிப்பதின் மூலமாகத் திருச்சபையானது திருமணத்தின் உருவெடுப்பில் சிறப்பான அக்கறைக் கொள்ள வேண்டும்.

ஆனால் இதைக் குறித்த ஆவிக்குரிய கதையானது மிகவும் சோகமான ஒரு அத்தியாயத்தை வீழ்ச்சியில் பெற்றிருக்கிறது. அது மனிதர்களின் ஆசையில் ஏற்பட்ட அடியைக் காட்டுகிறது. இதன் விளைவாக சுய சர்வவல்லமையை எடுத்துரைத்தல், மற்றவர்களைக் காயப்படுத்தும், குற்றவாளியாக்கும் தன்மையையும், மனிதர்களின் ஆசையின் வழியை இருளடையவும் செய்தது. வீழ்ந்துபோன மனிதர்களாகிய நாம் இந்தத் தீயத் தன்மையை அனைத்துப் படிகளிலேயும் அனுபவித்திருக்கிறோம் –

தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் வெளி வேலைகள். நம்முடைய பாலுணர்வைக் குறித்து இந்த வீழ்ந்துபோன உலகத்தின் அதிகாரமும், கொள்கைகளும் பொய்களைத் திணித்திருக்கின்றன. நம்முடைய ஆசைகள் பாவத்தினால் மாற்றப்பட்டு, நாம் நமக்குள்ளாகவே திரும்பிவிட்டோம். தேவனுடைய அன்பை எதிர்க்கவும், தேவனைத் தவிர்த்து நம்முடைய சுய புத்தியில் வாழ்வதற்கு முயிற்சி செய்யவும் நாமாகவே தெரிந்தெடுத்து சிருஷ்டிப்பை ஊனப்படுத்துவதற்கும் வழிவகுத்திருக்கிறோம்.

பாலுணர்வுரீதியான நம்முடைய உடைந்துபோன தன்மை பல வடிவங்களை எடுக்கிறது. அதில் சில நாமாகவே தெரிந்தெடுப்பதாகும். சில இந்த உடைந்துபோன உலகத்தின் காரணமாக நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவரப்படுபவையாகும். ஆனாலும் நம்முடைய பெலவீனங்களில் தேவனுடைய கிருபையே போதுமானதாக இருக்கிறது. அதுவே குற்றஉணர்ச்சியையும், மனமாற்றத்தையும், பரிசுத்தத்தையும் நம்முடைய வாழ்க்கையில் கொண்டு வருகிறது. எனவே பாவத்தின் உடைந்துபோன தன்மையில் மேலும் மேலும் சேர்த்துக்கொண்டுப் போகாமல் இருப்பதற்கும், நம்முடைய சரீரத்தைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் அழகையும், தனித்துவத்தையும் சாட்சியாகப் பார்ப்பதற்கும், கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களாகிய நாம், ஆவியானவரினால் உதவப்பட்டு பின்வரும் காரியங்களைச் செய்யாமல் இருக்க வேண்டும், இருக்க முடியும்:

- **திருமணத்திற்கு முன்பாகவே பாலுறவு கொள்ளுதல் மற்றும் வேறு ஏற்றுக்கொள்ள முடியாத பாலுறவு நிலைகள்:** ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணுக்கு இடையே மட்டுமே நம்முடைய பாலுணர்வின் உடன்படிக்கை இருக்கவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருக்கிறது என்று நாம் விசுவாசிப்பதால், இத்தகைய செயல்கள் பெரும்பாலும் உறவில் காணப்படும் மற்றவர் ஒரு பொருளைப்போல நடத்தப்படுகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். அது தன்னுடைய எல்லா வடிவங்களிலேயும், நாம் கிறிஸ்தவ திருமணத்தின் அழகு மற்றும் பரிசுத்தத்தில் நம்மை முழுமையாக நுழைப்பதற்கான திறனைப் பாதிப்படையச் செய்கிறது.
- **ஒரே பாலினத்தவர்களுக்கிடையே பாலுறவு.** ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணுக்கு இடையே மட்டுமே நம்முடைய பாலுணர்வின் உடன்படிக்கை இருக்கவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருக்கிறது என்று நாம் விசுவாசிப்பதால், ஒரே பாலினத்தோடு பாலுறவு கொள்வது என்பது தேவன் மனிதர்களுடைய பாலுணர்வைக் குறித்துக் கொண்டிருக்கும் தேவனுடைய சித்தத்திற்கு எதிர்மறையானதாக இருக்கிறது. ஒரு மனிதனுடைய ஒரே பாலின அல்லது இரு பாலின ஈர்ப்பு என்பது கடினமானதும், வேறுபட்டதுமான துவக்கங்களைப் பெற்றிருந்தாலும், பாலுணர்வு சார்ந்த பரிசுத்தத்திற்கு இவை விளைவிக்கும் தீங்கானது மிகவும் மோசமானதாக இருக்கிறது. இப்படிப்பட்ட அழைப்பிற்குத் தேவனுடைய கிருபையே போதுமானது என்று நாம் கருதுகிறோம். கிறிஸ்துவின் சரீரமானது வரவேற்கும் விதமாகவும், மன்னிக்கும் மனப்பான்மையையும், அன்பின் சமுதாயகமாகவும் இருக்கும் கடமையைப் பெற்றிருக்கிறோம் என்றும், அதில் விருந்தோம்பல், உற்சாகமளித்தல், மனமாற்றம் மற்றும் பொறுப்புணர்ச்சி

போன்றவை எல்லோருக்கும் கிடைப்பவையாக இருக்கின்றன என்றும் நாம் ஒப்புக்கொள்கிறோம்.

- **திருமணத்திற்கு அப்பாற்பட்ட பாலுணர்வு தொடர்புகள்.** தேவனுக்கு முன்பாகவும், கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளும் நாம் செய்துகொண்ட பிரமாணங்களை மீருவதாக இப்படி நடந்துகொள்வது இருக்கிறது என்பதை நாம் விசுவாசிக்கிறோம். பிறர் மீது இச்சைக் கொள்வது என்பது சுயநலமான ஒரு செயலாகும். அது குடும்பத்தை அழிக்கும் முடிவாகும். நம்மைத் தூய்மையாகவும், பக்தியோடும் நேசித்த தேவனை எதிர்ப்பதைப் போன்றதாகும்.
- **விவாகரத்து.** திருமணம் என்பது வாழ்நாள் முழுவதும் செய்துகொள்ளும் ஒப்பந்தமாக இருப்பதால், இந்தத் திருமண உடன்படிக்கையை முறிக்கும் விதத்தில் செய்யப்படும் இந்தக் காரியம், அது தனிப்பட்ட முறையில் முன்வைக்கப்பட்டதாக இருக்கலாம், அல்லது துணையின் விருப்பமாக இருக்கலாம், தேவனுடைய சிறப்பான நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. எங்குச் சரியாக இருக்கிறதோ, எங்குச் சாத்தியமான சூழல் இருக்கிறதோ அங்குத் திருச்சபையானது திருமணத்தைப் பாதுகாக்க முயல வேண்டும். விவாகரத்தினால் காயப்பட்டவர்களுக்கு அவர்கள் ஆலோசனைகளையும், கிருபையையும் வழங்க வேண்டும்.
- **பலதார திருமணத்தைச் செய்தல்.** கணவன் மற்றும் மனைவிக்கு இடையே காணப்படும் ஒரு தலையான ஒப்புக்கொடுத்தலில் தேவனுடைய உடன்படிக்கையின் உண்மையுள்ள தன்மை வெளிப்படுத்தப்படுகிறது என்பதை நாம் விசுவாசிப்பதால், இப்படிப்பட்ட பழக்கங்கள் திருமண பந்தத்தில் காணப்படும் ஒரே ஒருவருடன் பாலுறவு என்ற நிலைப்பாட்டின் தனித்தன்மையையும், விசேஷத்தன்மையையும் எடுத்துவிடும்.

  பாலுறவு சார்ந்த பாவம் மற்றும் உடைந்துபோன தன்மையானது தனிப்பட்டதாக மட்டும் இருக்காமல், இந்த உலகத்தின் பழக்கங்களையும், வடிவமைப்பையும் ஊடுருவி வருகிறது. எனவே, தேவனுடைய பரிசுத்த நோக்கங்களின் அழகு மற்றும் தனித்தன்மையின் உண்மைத்தன்மைக்குத் திருச்சபை ஒரு சாட்சியாக இருப்பதைப் போலவே திருச்சபையானது பின்வரும் காரியங்களிலிருந்து விலகி இருந்து, எதிர்க்க வேண்டும்:
- **பாலியல் இன்பத்தைத் தூண்டும் எல்லா வகையான காட்சிகளும்.** இது ஒழுக்கமில்லாமல் இருக்கும் ஆசையினால் ஏற்படுகிறது. சுயநலம் மிகுந்த பாலியல்ரீதியான திருப்திக்காக மக்களைப் பொருளைப்போல பயன்படுத்துவதாகும். சுயநலமில்லாமல் நாம் அன்பைச் செலுத்துவதை இந்தப் பழக்கம் அழிக்கிறது.
- **எந்த வடிவத்திலாகிலும் இருக்கும் பாலியல் வன்முறை, அதில் பாலியல் வன்புணர்வு, பாலியல் துன்புறுத்தல், பாலியல் அராஜகம், வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சு, திருமணத்திற்குப் பிறகு பாலியல் தாக்குதல் நடத்துதல், கட்டாயப்படுத்துதல், பாலியல் தொழில், கட்டாய திருமணம், பெண்களின் உறுப்புகளை நாசம் செய்தல், மிருகத்தைப் போல நடந்துகொள்ளுதல், பாலியல்ரீதியாகத்**

**துன்புறுத்துதல் மற்றும் சிறார்கள் மற்றும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியாதவர்களைத் தவறாகக் கையாளுதல் போன்றவை உள்ளடங்கியிருக்கின்றன.** பாலியல் வன்முறையைச் செய்யும் எல்லா மக்களும், செயல்களும் நம்முடைய அயலானை நேசித்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கட்டளையை மீறுகின்றன. கிறிஸ்துவின் சரீரமானது, பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்பட்ட, துன்புறுத்தப்பட்டுக்கொண்டிருக்கும், தொடர்ந்து துன்புறுத்தப்படும் மக்களுக்கு எப்போதும் நீதி, பாதுகாப்பு மற்றும் சுகமளிக்கும் ஒரு இடமாக இருக்கவேண்டும். 18 வயதிற்குக் கீழ் இருக்கும் எந்த ஒரு மனிதனும் சிறார் என்று கருதப்படுவார்கள். ஒரு நாட்டின் உள்ளூர் சட்டத்தின்படி இந்த வயது வரம்பு வேறாக இருந்தால் இது மாறுபடும்.

எனவே நாம் இதை உறுதிப்படுத்துகிறோம்:

- **பாவம் பெருகும் இடத்தில், கிருபையும் பெருகும்.** பாவத்தின் விளைவுகள் இந்தப் பிரபஞ்சம் சார்ந்ததாகும், முழுமையானதாகவும் இருந்தாலும், கிருபையின் விளைவும் இந்தப் பிரபஞ்சம் சார்ந்ததாகவும், முழுமையானதாகவும் இருக்கிறது. கிறிஸ்துவில், பரிசுத்த ஆவியானவரின் மூலமாக, நாம் தேவனுடைய சாயலில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறோம். பழையவை எல்லாம் போய்விட்டன. புதியவை வந்திருக்கின்றன. ஒரு புதிய ஜீவனாக நாம் உருவாக்கப்படுவது தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருக்கும் ஒரு செயல்முறையாக இருந்தாலும், பாலுணர்வு சார்ந்த காரியங்களில் மனிதர்களுடைய உடைந்துபோன தன்மையைக் கையாளுவதற்குத் தேவனுடைய சுகமளிக்கும் வல்லமைச் செயல்பூர்வமானதாக இருக்கிறது.
- **பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக மனித சரீரம் இருக்கிறது.** தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றவாறு நம்முடைய பாலுணர்வு இருக்கவேண்டும் என்று நாம் மறுபடியும் உறுதிப்படுத்துகிறோம். நம்முடைய சரீரங்கள் நம்முடையவைகள் அல்ல. அவை ஒரு விலைக்கொடுத்து வாங்கப்பட்டிருக்கின்றன. எனவே விளைவிக்கப்பட்டிருக்கும் கீழ்ப்படிதலின் மூலமாக நம்முடைய சரீரங்களினால் தேவனை மகிமைப்படுத்த அழைக்கப்பட்டிருக்கிறோம்.
- **பரிசுத்த அன்பினால் தேவனுடைய மக்கள் முத்திரையிடப்பட்டிருக்கிறார்கள்.** எல்லா நல்லொழுக்கங்களைக் காட்டிலும், தேவனுடைய மக்கள் தங்கள் மீது அன்பு என்னும் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம். நம்முடைய கூட்டத்திற்குள் உடைந்துபோன மக்களை எப்போதுமே தேவனுடைய மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிறிஸ்தவ விருந்தோம்பல் என்பது தனிப்பட்ட கீழ்ப்படியாமையை ஏற்றுக்கொள்வது என்பதோ அல்லது உடைந்துபோன தன்மையின் வேர்கள் எதுவாக இருக்கும் என்பதில் பங்குகொள்ள மறுப்பதோ கிடையாது. இயேசுவைப் போன்ற சாயலில் மக்களைச் சீரமைப்பது என்பது அறிக்கையிடுதல், மன்னிப்பு, உருவாக்கும் செயல்கள், பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் தெய்வீக ஆலோசனை ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கிறது. ஆனால் இவை எல்லாவற்றிற்கும்

> மேலாக, அது அன்போடு வரவேற்பதை உள்ளடக்கியிருக்கிறது. இதன் மூலமாக உடைந்துபோனவர்களைக் கிருபையின் வட்டம் என்று அழைக்கப்படும் திருச்சபைக்குள் வரச்செய்கிறது. நாம் பாவத்தையும், உடைந்துபோன தன்மையையும் எதிர்க்காமல் போனோமானால், நாம் நேசித்திருக்கவில்லை என்று தான் அர்த்தம். நாம் நேசிக்கத்தவறினோமானால், உடைந்துபோன தன்மையைக் குணமாக்கும் தேவனுடைய சுகமளிக்கும் வல்லமையில் பங்குபெற முடியாது.

நம்முடைய உலகத்தில் இருப்பவர்களை, உலகம் முழுவதும் இருக்கும் திருச்சபையானது வரவேற்று, ஊழியம் செய்யும்போது, சபையாக இந்த வாக்கியங்களின் விசுவாசத் தன்மை என்பது கடினமான ஒன்றாக இருக்கிறது. இதை அக்கறையோடும், தாழ்மையோடும் தைரியத்தோடும், பகுத்தறிவோடும் கையாள வேண்டும்.

## D. கிறிஸ்தவ உக்கிராணத்துவம்

**32. உக்கிராணத்துவத்தின் பொருள்.** தேவனே எல்லா மனிதர்களுக்கும், எல்லாப் பொருட்களுக்கும் உரிமையாளராக இருக்கிறார்; தங்கள் வாழ்வுக்கும், உடைமைகளுக்கும் மனிதர்கள் தேவனின் உக்கிராணிகளாக இருக்கிறார்கள்; தேவனின் உரிமையும், மனிதனின் உக்கிராணத்துவமும் அங்கீகரிக்கப்படவேண்டும்; மனிதர்கள் தங்கள் உக்கிராணத்துவத்தைச் செயல்படுத்தும்போது குறிப்பாகத் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று வேதவசனங்கள் போதிக்கின்றன. தமது வழிகள் அனைத்திலும் முறையையும், ஒழுங்கையும் கொண்டுள்ள தேவன், தமது உரிமையையும், மனிதனின் உக்கிராணத்துவத்தையும் அங்கீகரிக்கும் வகையில் கொடுப்பதற்கு ஓர் ஒழுங்குமுறையை ஏற்படுத்தியுள்ளார். இந்த வகையில் அவருடைய பிள்ளைகள் அனைவரும், நற்செய்தி பரவுதலை ஆதரிக்கும்படி தசம பாகத்தையும், காணிக்கையையும் உண்மை உணர்வுடன் கொடுக்க வேண்டும். (140)

> (மல்கியா 3:8–12; மத்தேயு 6:24–34; 25:31–46; மாற்கு 10:17–31; லூக்கா 12:13– 24; 19:11–27; யோவான் 15:1–17; ரோமர் 12:1–13; 1 கொரிந்தியர் 9:7–14; 2 கொரிந்தியர் 8:1–15; 9:6–15; 1 தீமோத்தேயு 6:6–19; எபிரெயர் 7:8; யாக்கோபு 1:27; 1 யோவான் 3:16–18).

**32.1. பண்டகசாலைத் தசமபாகம் அளித்தல்.** உறுப்பினர்கள் தாங்கள் உறுப்பினர்களாக இருக்கும் சபைக்கு உண்மையோடும், ஒழுங்காகவும் வேதவசன ஆதாரத்துடன்கூடிய, செயல்பூர்வமான தசமபாகம் அளிப்பதே பண்டகசாலை தசமபாகம் எனப்படுகிறது; எனவே இந்தப் பண்டகசாலை தசமபாகத்தின் அடிப்படையில் அந்தச் சபையின் நிதி நிலைமை திட்டமிடப்படுகிறது. நசரேயத் திருச்சபையின் உள்ளூர் சபை அதன் மக்களால் ஒரு பண்டக சாலையாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். நசரேயத் திருச்சபையின் அங்கமாக இருக்கும் அனைவரும் தங்கள் வருமானத்தில் பத்திலொரு பங்கை குறைந்த பட்சமாக தேவனுக்குரிய கணக்கைப் பொறுப்பாக உண்மையுடன் அளிக்க வேண்டும் என்றும், தேவன் அவர்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பதின் நிமித்தம் இன்னும் அதிகமாகக்

காணிக்கையை முழு திருச்சபை உள்ளூர் சபை, மறைமாவட்ட மாநாடு, பொது மாநாடு இவற்றின் ஆதரவுக்காகவும் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறார்கள்.

**32.2. நிதி சேகரிப்பும், பகிர்ந்தளித்தலும்.** நற்செய்தியைப் பரப்புவதற்கு ஆதரவாகவும், திருச்சபைக் கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் மட்டுமே தசமபாகமும், காணிக்கைகளும் கொடுக்கப்பட்டன என்ற வேதாகம போதனைகளின் அடிப்படையில், இந்தக் கருத்துக்களுக்கு விரோதமாகவும், நற்செய்தியின் போதனைக்குத் தீங்கு விளைவிக்கும் வண்ணமாகவும், திருச்சபையின் பெயரைக் கரைப்படுத்தும் விதமாகவும், ஏழ்மையானவர்களுக்கு எதிராக அவர்களை வேறுபடுத்திக் காட்டும் நிலையிலும், நற்செய்தியைப் பரப்புவதை விட்டுவிட்டு மக்களின் ஆக்கப்பூர்வமான சக்தியைத் திசை திருப்பிவிடும் வகையிலும், எந்த நசரேய சபையும் வேறுவகையான நிதி சேகரிப்புகளில் ஈடுபடக் கூடாது.

நசரேயத் திருச்சபையின் உள்ளூர், மறைமாவட்ட பிரதேச பொதுச்சபைத் திட்டங்களுக்கு ஏற்றவகையில் இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படுமாறும், உள்ளூர் சபைகள் ஒரு வரவு செலவு திட்டத்தைத் தயாரித்து அதன்படி செயல்படுமாறும், பொதுச் சபை, பிரதேசசபை, மறைமாவட்ட நிதிக் கூறுகளை மாதந்தோறும் ஒழுங்காகச் செலுத்தி வருமாறும், வலியுறுத்தப்படுகின்றன. (130, 153, 154–154.2, 516.13)

**32.3. ஊழியங்களுக்கு ஆதரவளித்தல்.** "அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1 கொரிந்தியர் 9:14). தேவனால் அழைக்கப்பட்டவர்களும், திருச்சபையின் மேற்பார்வையில் தங்களை முழுமையாக ஊழியத்திற்கு ஒப்படைத்தவர்களுமாயிருக்கிற போதகர்களை ஆதரிப்பது திருச்சபையின் கடமையாக இருக்கிறது. இந்தப் புனிதப் பணிக்காக வாரந்தோறும் நிதி சேர்ப்பதின் மூலம் ஊழியத்தை ஆதரிக்கும் சேவையில் திருச்சபையின் அங்கத்தினர்கள் சுயமாகவே முன்வந்து தங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும், வாரந்தோறும் போதகரின் ஊதியம் ஒழுங்காக அளிக்கப்பட வேண்டும் என்றும் திருச்சபை வலியுறுத்துகிறது. (115.4, 115.6, 129.8)

**32.4. வாழ்க்கை வருமாணத்தைத் தானமளித்தல், திட்டமிடப்பட்ட தானம்.** தேவன் ஒரு கிறிஸ்தவன் தனது வாழ்நாளில் எதற்கு உக்கிராணியாக விளங்கவேண்டுமென்று நியமித்திருக்கிறாரோ அந்த அதிகப்படியான வருமானம் மற்றும் சொத்து இவற்றைப் பொருத்து என்ன செய்யவேண்டும் என்பதில் கவனம் செலுத்துவது கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தைச் செயல்படுத்துவதற்கு மிகவும் முக்கியமானது. இந்த வாழ்க்கையில் உண்மையுள்ள உக்கிராணத்துவத்தின் தேவையையும், எதிர்காலத்திற்காக விட்டுச்செல்ல வேண்டும் என்று தேவன் கொடுத்திருக்கும் தரிசனத்தையும் நசரேயத் திருச்சபை நினைத்துப்பார்க்கிறது. இதற்காகத் தான் அது நசரேயத் திருச்சபையின் அறக்கட்டளையை நிறுவியிருக்கிறது. இது திட்டமிட்ட தானத்தின் மூலமாக கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தை மேன்படுத்துகிறது. இந்த வாழ்க்கையில் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் மரணத்திற்குப் பின் சொத்து பிரிக்கப்படுவதற்கு உலகப் பிரகாரமான சட்டங்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை.

ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் கடைசி உயிலை எழுதும்போது கவனத்துடனும், சட்டரீதியாகவும் அதைத் தயாரிக்க வேண்டும். மிஷனரி ஊழியங்கள், நற்செய்தி பகருதல், கல்வி, கொடுத்தல் போன்ற பல ஊழியங்களில் ஸ்தல, மறைமாவட்ட, பிரதேச பொது சபைகள் மூலம் ஈடுபட்டுவரும் நசரேயத் திருச்சபையை அவ்வேளையில் நினைவுகூருமாறு பரிந்துரை செய்கிறோம்.

**32.5. ஊழிய பிரிவுகளுக்குப் பொறுப்பு வகித்தல்.** நசரேயத் திருச்சபையின் ஆளுகை பிரதிநிதித்துவ முறையை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒவ்வொரு உள்ளூர் சபையும் பொது அசெம்பிளியால் வரையறை செய்யப்பட்ட சபையின் ஒட்டுமொத்த ஊழியத்துக்கு ஆதரவளிக்கிறது. உலகளாகிய நற்செய்திப் பணி, கல்வி, குருத்துவ ஆதரவு மற்றும் மறைமாவட்ட ஊழியங்களின் அடிப்படையில் இது பொதுக் கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழுவினால் அமுலாக்கப்படுகிறது.

பொதுக் கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழு மற்றும் பொது நிர்வாகக் குழு ஆகியவை உலக நற்செய்தி ஊழிய நிதியைப் பெறுவதற்கான வழிமுறைகளை வளர்க்கவும், மாற்றியமைக்கவும், செயல்படுத்தவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அசெம்பிளி மறைமாவட்டங்களின் மூலமாக உள்ளூர் திருச்சபைகளுக்கு நிதியைக் குறித்த இலக்குகளையும், பொறுப்புகளையும் பகிர்ந்தளிப்பதற்கான அதிகாரத்தையும், உரிமையையும் பெற்றிருக்கிறார்கள்.

பத்தி 337.1 விதியின்படி, தேசிய நிர்வாகக் குழுக்கள் மற்றும்/அல்லது பிராந்திய ஆலோசனைக் குழுக்களும் தங்கள் பிராந்தியத்தில் குருத்துவ ஓய்வுச் சேமிப்புத் திட்டங்களை நிறுவுவதற்கு அதிகாரத்தையும், உரிமையையும் பெற்றிருக்கின்றன. பத்தி 337.2 விதியின்படி இத்தகைய திட்டங்களைக் குறித்து அறிவிக்க வேண்டும். பத்தி 33.5 இலுள்ள காரியங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஓய்வூதியம் மற்றும் பயன்கள் நிர்வாகக் குழுவுக்குப் பொருத்தமானது அல்ல.

தேசிய நிர்வாகக் குழுக்கள் மற்றும்/அல்லது பிராந்திய ஆலோசனைக் குழுக்களும் தங்கள் பிராந்தியத்தில் மேல்நிலைக் கல்வி நிறுவனங்களை உருவாக்கி ஆதரவளிப்பதற்கு அதிகாரத்தையும், உரிமையையும் பெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு மறைமாவட்டமும், மறைமாவட்ட அசெம்பிளி நிதிக் குழுவின்மூலமாக உள்ளூர் திருச்சபைகளுக்கு நிதி இலக்குகளையும், பொறுப்புகளையும் நிறுவதற்கான செய்ய அதிகாரத்தையும், உரிமையையும் பெற்றிருக்கிறது. (238.1, 317.10, 345, 346.3)

## E. திருச்சபை அதிகாரிகள்

**33.** முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலின் தெளிவான அனுபவத்தைப் பெற்று அறிக்கையிடுபவர்களும், நம்மைப் பரிசுத்த வாழ்க்கைக்கு அழைக்கும் தேவனுடைய கிருபைக்குத் தங்கள் வாழ்க்கையின்மூலம் பொதுவான சாட்சியாக இருப்பவர்களும் நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகள், கொள்கைகள், செயல்முறை இவற்றை ஆதரிப்பவர்களும், தங்கள் தசமபாகத்தாலும், காணிக்கைகளாலும் உண்மையோடு

உள்ளூர் சபையை ஆதரிப்பவர்களுமாகிய இவர்களே உள்ளூர் சபையின் சபை அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று ஸ்தல சபைக்குக் கட்டளை அளிக்கிறோம். இவர்கள் "உலகம் முழுவதிலும் இயேசுவைப்போன்ற சீஷர்களை உருவாக்கும்" முழுமையான ஊழியத்தில் ஈடுபட வேண்டும். (113.11, 127, 145–147)

## F. ஒழுங்கு விதிகள்

**34.** இந்த சட்டநூலில் கூறப்பட்டுள்ள நிர்வாக இணைப்பு மற்றும் துணைவிதிகள், நசரேயத் திருச்சபையின் உள்ளூர், மறைமாவட்ட, பொதுச்சபைகள், நிறுவனத்தின் பிற குழுக்கள் இவற்றின் உறுப்பினர்களின் கூட்டங்கள், செயல்முறைகள் இவை கொடுக்கப்பட்டுள்ள விதிகளோடு, பாராளுமன்ற முறைக்காக *ராபர்ட்டின் ஒழுங்கு விதிகள்* (தற்போதைய பதிப்பு) மூலம் ஒழுங்குபடுத்தப்படும்; கட்டுப்படுத்தப்படும். (113, 203, 300.3)

## G. கிறிஸ்தவ நடத்தைப் பற்றிய உடன்படிக்கையில் திருத்தம்

**35.** ஒரு குறிப்பிட்ட பொது மாநாட்டின் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினரின் அனுமதியைப் பெற்று இந்தச் சிறப்பு விதிகளில் ஏதேனும் அம்சங்கள் நீக்கம் செய்யப்படலாம்; அல்லது திருத்தப்படலாம்.

## பாகம் IV

# சபை ஆளுகை முறைமை

முன்னுரை
உள்ளூர் சபை ஆளுகை முறைமை
மறைமாவட்ட ஆளுகை முறைமை
பொது ஆளுகை முறைமை

## சபை ஆளுகை முறைமையின் முன்னுரை

இயேசு கிறிஸ்துவில் பாவங்கள் மன்னிக்கப்படுவதின் மூலமாகவும், இருதயம் சுத்திகரிக்கப்படுவதின்மூலமாகவும், மாறுதலளிக்கும் தேவனுடைய கிருபையைக் குறித்து எல்லோரும் அறியும்படிச் செய்வதே நசரேயத் திருச்சபையின் பணியாகும். "உலகம் முழுவதிலும் கிறிஸ்துவைப்போன்ற சீஷர்களை உருவாக்குவதும்" விசுவாசிகளை ஐக்கியத்திலும் உறுப்பினர் தகுதியிலும் (சபைகள்) ஒருங்கிணைப்பதும், விசுவாசத்தில் செவிசாய்க்கும் எல்லோரையும் ஊழியத்துக்காக ஆயத்தப்படுத்துவதுமே (போதித்தல்) நமது முதலாவதும் தலையானதுமான ஊழியமாகும். "விசுவாச சமுதாயத்தின்" இறுதியான இலக்கு, கடைசி நாளில் எல்லோரையும் கிறிஸ்துவுக்குள் பரிபூரணராக நிறுத்துவதாகும் (கொலோசெயர் 1:28).

உள்ளூர் சபையிலேயே இரட்சிக்கப்படுதலும், பூரணமாக்குதலும், போதித்தலும், பொறுப்பளித்தலும் நடைபெறுகிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய உள்ளூர் சபை நமது விசுவாசத்தையும், அருட்பணியையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. இந்தச் சபைகள் நிர்வாகரீதியாக மறைமாவட்டங்களாகவும், பிராந்தியங்களாகவும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

நசரேயத் திருச்சபையின் சட்டநூலில் சொல்லப்பட்டுள்ள நம்பிக்கைகளும், ஆளுகைமுறைமையும், வரையறைகளும், செயல்முறைகளுமே நசரேயத் திருச்சபையின் ஐக்கியத்துக்கு அடிப்படைகளாக இருக்கின்றன.

இந்த ஐக்கியத்தின் மையமான அம்சம் சட்டநூலிலுள்ள விசுவாச கோட்பாடுகளில் அறிவிக்கப்பட்டுள்ளது. எல்லாப் பிராந்தியங்களிலும், எல்லா மொழிகளிலும் இருக்கும் சபையார் இந்த நம்பிக்கைகளை மொழிபெயர்த்து – பரவலாக விநியோகித்து – நமது சபைகளில் போதிக்க வேண்டுமென்று நாங்கள் ஊக்குவிக்கிறோம். நாம் நசரேயர்களாக இருப்பதற்கும், செய்பவைகளுக்குமான ஆடையில் இவையே ஊடுபாவப்பட்ட பொன்மயமான நூல்களாக இருக்கின்றன.

இந்த ஐக்கியத்தில் காணக்கூடிய பிரதிபலிப்பைப் பொது அசெம்பிளி பிரதிநிதித்துவம் செய்கிறது. இது "நசரேயத் திருச்சபையின் உச்சமான கோட்பாடுகளை உருவாக்கும், விதிகளை உருவாக்கும் மற்றும் தெரிந்தெடுக்கக் கூடிய அதிகாரமாக இருக்கிறது."

இரண்டாவது பிரதிபலிப்பு முழுச் சபையையும் பிரதிநிதித்துவம் செய்யும் சர்வதேச பொதுக்குழுவாகும்.

மூன்றாவது பிரதிபலிப்பு பொதுக்கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழுவாகும். இது *சட்டநூலுக்கு* அர்த்தம் கூறலாம், கலாச்சார மாற்றங்களுக்கு ஒப்புதலளிக்கலாம் மற்றும் ஊழியத்துக்காகப் பிரதிஷ்டை செய்யலாம்.

நசரேயத் திருச்சபையின் ஆளுகை முறைமை பிரதிநிதித்துவ முறைமையாகும். இதனால் இது பேராய ஆளுகையின் உச்சநிலைகளையும், காங்கிரிகேஷனல் ஆளுகையின் கட்டுப்பாடில்லாத நிலையையும் தவிர்க்கிறது.

சபை ஆளுகைசெய்யும் உலகளாவிய பிராந்தியங்களின் கலாச்சார மற்றும் அரசியல் வேறுபாடுகளின் காரணமாக, பகுதி IV, பகுதிகள் 100, 200, 300 இவைகளில் உள்ளூர், மறைமாவட்ட மற்றும் பிராந்திய சபை ஆளுகைச் செயல்முறைகளில் பொருத்தமான மாற்றங்கள் உண்டாக்க வேண்டியிருக்கலாம். இப்படிப்பட்ட மாற்றங்கள் குறித்த விண்ணப்பங்கள் எழுத்து மூலமாகப் பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டு, ஒப்புதலைப் பெற வேண்டும். (300)

## I. உள்ளூர் சபை ஆளுகை முறைமை

## A. உள்ளூர் சபை அமைப்பு, பெயர், சட்டரீதியான இணைப்பு, சொத்து, தடைகள், இணைப்புகள், கலைப்புகள்

**100.** அமைப்பு. உள்ளூர் சபைகள் மறைமாவட்டக் கண்காணிப்பாளராலோ அல்லது அதிகாரவரம்பைப் பெற்ற பொதுக் கண்காணிப்பாளராலோ அல்லது இவர்களில் ஒருவரால் அதிகாரம் பெற்ற ஒரு மூப்பராலோ அமைக்கப்படலாம். புதுச் சபைகள் பற்றிய அதிகாரப்பூர்வமான அறிவிப்புகள் திருச்சபை விரிவாக்க ஊழியங்கள் அலுவலக ஆவணங்களில் பதிவுசெய்யப்பட வேண்டும் (23, 107, 211.1, 538.15)

**100.1. சபை வடிவிலான ஊழியம்.** பத்தி 100இன்படி ஒழுங்கு செய்யப்படாத புதிய ஊழியங்கள் புதிய ஊழியம் நடைபெறும் இடத்தில், மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலோடுகூட பொதுச் செயலாளரால் ஒரு சபை வடிவிலான ஊழியமாக அங்கிகரிக்கப்படலாம். சபை வடிவிலான ஊழியத்தில் போதகராகவோ அல்லது துணைப்போதகராகவோ ஊழியம் செய்யும் குருத்துவ உறுப்பினர் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலோடு ஒரு பொறுப்பளிக்கப்பட்ட ஊழியராகக் கருதப்படலாம். ஒரு சபை வடிவிலான ஊழியம் பத்தி 102இன்படி ஒருங்கிணைக்கப்பட்டு உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கலாம். (100.2, 107.2, 138.1, 159, 211.6)

**100.2. பல கிளைச் சபைகளைக் கொண்ட சபை.** அமைக்கப்பட்ட உள்ளூர் சபைகள், தமது சபைகளின் வசதிக்கேற்ப பல்வேறு மொழிகளில் வேதாகம வகுப்புகளை அமைப்பதின்மூலம் தங்கள் ஊழியத்தை விரிவுபடுத்தலாம். இந்த வேதாகம வகுப்புகள் சபை வடிவிலான ஊழியங்களாகவோ அல்லது பூரண அமைப்பைப் பெற்ற சபைகளாகவோ வளர்ச்சியடையலாம். இதன் விளைவாக ஒரே கட்டிடத்தில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற்று ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் வழிபடலாம். இவ்வாறு எல்லா தனிப்பட்ட சபைக்கூட்டமும், பூரண அமைப்பைப் பெற்ற சபைகளாக இல்லாத பல கிளைச்சபைகளைக் கொண்ட சபைகளில், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது அதிகாரவரம்பினைப் பெற்ற பொதுக் கண்காணிப்பாளரின் அனுமதியின்பேரில், அத்தகைய சபைக் கூட்டங்களுக்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்பேரில் அமைக்கப்பட்ட உள்ளூர் சபைக்குள்ள அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்கலாம்.

1. இத்தகைய சபைகள் நிறுவப்பட்ட உள்ளூர் சபைகளிலிருந்து தனியாகப் பதிவுசெய்யப்படக் கூடாது.
2. இத்தகைய சபைகள் நிறுவப்பட்ட உள்ளூர் சபைகளிலிருந்து தனியாகச் சொத்துக்களைப் பெற்றிருக்கக் கூடாது.
3. மறைமாவட்ட கண்காணிப்பாளர், நிறுவப்பட்ட உள்ளூர் சபையின் திருச்சபை நிர்வாகக் குழு, மறைமாவட்ட ஆலோசனைக்குழு இவற்றின் அனுமதியைப் பெறாமல் இத்தகைய சபைகள் கடன்படக் கூடாது.
4. மறைமாவட்ட கண்காணிப்பாளர் உள்ளூர் சபையின் போதகரோடு கலந்தாலோசித்த பின்னர் அனுமதியளித்தால் மட்டுமே இத்தகைய சபைகள் ஒரு கூட்டமாக நிறுவப்பட்ட ஸ்தல சபையிலிருந்து பிரிந்து செல்ல முடியும்; அல்லது தனது உறவைத் துண்டித்துக்கொள்ள முடியும். (100–100.1)

**101. பெயர்.** உள்ளூர் சபையானது மறைமாவட்ட கண்காணிப்பாளரோடு ஆலோசனை செய்து, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்றபிறகு, புதியதாக நிறுவப்பட்ட சபையின் பெயரை முடிவுசெய்யும். (102.4)

**101.1. பெயர் மாற்றம்.** நசரேயத் திருச்சபையின் உள்ளூர் சபை தனது பெயரில் மாற்றம் செய்ய முடியும். இதற்கான ஒழுங்குமுறை:

1) இந்த மாற்றத்தைப் பற்றிய விண்ணப்பத்தை உள்ளூர் சபை நிர்வாகக் குழு மறைமாவட்ட கண்காணிப்பாளருக்கு அனுப்புகிறது; அவர் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிடமிருந்து எழுத்துமூலம் ஒப்புதல் பெறுவார்;

2) சபை உறுப்பினர்களைக் கொண்ட வருடாந்திர அல்லது சிறப்புக் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குக்களின்மூலம் உள்ளூர் சபை வாக்களிக்கிறது;

3) மறைமாவட்ட ஆலோசனைக் குழு இந்த மாற்றத்தைப் பற்றி மறைமாவட்ட மாநாட்டுக்குத் தெரிவிக்கிறது; மறைமாவட்ட மாநாடு வாக்களிப்பின்மூலம் ஒப்புதல் அளிக்கிறது. (102.4)

**102. சட்டரீதியான இணைப்பு.** சட்டம் அனுமதிக்கும் அனைத்து இடங்களிலும் காப்பாளர்கள் உள்ளூர் சபையைச் சட்டரீதியாகப் பதிவு செய்ய வேண்டும். மேற்சொல்லப்பட்ட காப்பாளர்களும் அவர்களுக்குப் பின்னர் காப்பாளராக வருபவர்களும் மேற்கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் காப்பாளர்களாகவும் விளங்குவார்கள். அரசின் சட்டத்திற்கு மாறுபட்டதாக இல்லாத இடங்களில் பதிவுசெய்தல் பற்றிய விதிகளே இந்த நிறுவனத்தில் அதிகாரங்களை வரையறை செய்யும்; அந்த நிறுவனம் நசரேயத் திருச்சபையின் நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும்; இந்தச் திருச்சபையின் பொதுச் சபையினால் அவ்வப்போது அதிகாரப்படுத்தப்பட்டு அறிவிக்கப்படும் இந்த விதிகள் திருச்சபையின் சட்ட நூலில் வெளியிடப்படும். இந்த நிறுவனத்தின் அனைத்துச் சொத்துக்களும் உள்ளூர் சபையின் ஒப்புதலின் அடிப்படையில் காப்பாளர்களால் நிர்வாகிக்கப்படும்; கட்டுப்படுத்தப்படும்.

**102.1.** ஒரு உள்ளூர் சபைக்காக மறைமாவட்ட ஆலோசனைக்குழு ஏதேனும் சொத்தை வாங்கி பெருகச் செய்திருந்தால் அல்லது புதிய சபை அமைக்கப்பட்டிருந்தால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினால் முதலீடு செய்யப்பட்டிருந்த பணம் உள்ளூர் சபையினால் திருப்பி அளிக்கப்படும்போது, மறைமாவட்ட ஆலோசனைக் குழு பத்திரத்தை உள்ளூர் சபையின் பெயரில் மாற்றிக் கொடுக்கும்படி ஆலோசனை கூறுவது நல்லது என்று காண்கிறோம்.

**102.2.** ஒரு உள்ளூர் சபை பதிவு செய்யப்படும்போது வழங்கப்படும் அனைத்து சொத்துக்களும் முடிந்தவரையில் அந்தச் சபைக்கு அதன் நிறுவனப் பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட வேண்டும். (102.6)

**102.3.** பதிவு செய்யப்பட்டிருந்தாலும், செய்யப்படாதிருந்தாலும் போதகரும், சபைக் குழுவின் செயலாளரும், முறையே அந்தச் சபையின் தலைவராகவும், செயலாளராகவும் இருப்பார்கள். சட்டநூலில் வேறுவகையாகக் கூறப்படாதிருந்தால், 104–104.3. விதிகளில் கூறப்பட்டுள்ள தடைகளுக்குக் கட்டுப்பட்டு, சபையின் எல்லா சட்டரீதியான பத்திரங்களிலும், விளக்கமாகக் கூறினால், நில மாற்றம், அடமானப்பத்திரம், கடன்பத்திரம் திரும்பப் பெறுதல், ஒப்பந்தங்கள் அனைத்திலும் இவர்களே கையெழுத்திடுவார்கள்; அனைத்தையும் இவர்களே செயல்படுத்துவார்கள்.

**102.4.** ஒவ்வொரு உள்ளூர் சபை பதிவுமுறை விதிகளில் கீழ்க்கண்ட நிபந்தனைகளும் இடம்பெறுகின்றன:

1. நிறுவனப் பெயரில் "நசரேயத் திருச்சபை" என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட வேண்டும்.
2. நசரேயத் திருச்சபையின் சட்டநூலே இந்த நிறுவனத்தின் துணைவிதிகளாக இருக்கும்.
3. அந்தப் பகுதியிலுள்ள வேறு சபைகளுக்குக் கிடைத்துள்ள வரிவிலக்கு, உள்ளூர் சபைக்குக் கிடைக்கக்கூடாத வகையில் பதிவுமுறை விதிகளில் எந்த நிபந்தனையும் இடம்பெற்றிருக்கக்கூடாது.
4. நிறுவனம் கலைக்கப்படும்போது, நிறுவனத்தின் சொத்துக்கள் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேசச் சட்டத்துக்குப் பொருந்தும் வகையில், பதிவுமுறை விதிகளில் கூடுதல் நிபந்தனைகள் சேர்க்கப்படலாம். ஆனால் நசரேயத் திருச்சபையிலிருந்து உள்ளூர் சபையின் சொத்து பிரிக்கப்படக்கூடிய வகையில் எந்த நிபந்தனையும் சேர்க்கப்படக்கூடாது (101– 101.1, 104.3, 106.1–106.3)

**102.5.** பல உட்சபைகளைக் கொண்ட சபையில், ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்பைப் பெற்ற சபைகள் ஒரே இடத்தைப் பயன்படுத்துமானால், தேசிய சட்டங்கள் அனுமதிக்கும் வகையில் கூட்டு முறையில் பதிவு செய்யப்படலாம்.

**102.6.** ஒருங்கிணைத்தலுக்கான சாத்தியக்கூறு இல்லாத பகுதிகளில், சபையின் பெயரில் "நசரேயத் திருச்சபை"என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட வேண்டும். சொத்து ஆவணங்கள், காப்பாளர் ஆவணங்கள் போன்ற சட்டரீதியான ஆவணங்களிலும் இது சேர்க்கப்பட வேண்டும். (102.2)

**103. சொத்து.** உள்ளூர் சபையானது நிலம் வாங்குதல், ஆலயம் கட்டுதல் அல்லது ஆலயச் சார்பான கட்டிடங்கள் கட்டுதல், இந்தக் கட்டிடங்களைப் பெரிய அளவில் மாற்றியமைத்தல், எந்தக் காரணத்துக்காகவாவது நிலத்தைக் குத்தகைக்கு விடுதல் இவற்றில் ஏதேனும் ஒரு தீர்மானத்துக்கு வரும்போது, இந்தத் திட்டம் அவர்களின் பரிசீலனை, ஆலோசனை, ஒப்புதலுக்காக மறைமாவட்ட கண்காணிப்பாளரிடமும் மறைமாவட்ட சொத்து நிர்வாகக்குழுவிடமும் சமர்ப்பிக்கப்படவேண்டும். மறைமாவட்ட காண்காணிப்பாளர், மறைமாவட்ட திருச்சபை சொத்து நிர்வாகக் குழு இவர்களின் எழுத்துமூலமான ஒப்புதல் இல்லாமல், நிலம் வாங்குதல், கட்டிடம் கட்டுதல் அல்லது பெரிய அளவில் மாற்றி அமைத்தல் இவற்றிற்காக அடமானப் பத்திரத்துடனோ, அல்லது அடமானம் இன்றியோ எவ்வகையிலும் கடன் வாங்கக் கூடாது. (236–237.5).

**103.1.** உள்ளூர் சபைக் குழு, மறைமாவட்ட கண்காணிப்பாளர், மறைமாவட்ட திருச்சபை சொத்து நிர்வாகக் குழு இவர்களிடையே ஒப்புதல் ஏற்படாமல் போனால், இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்காக அந்தப் பகுதியில் அதிகாரமுள்ள பொது கண்காணிப்பாளரிடம் விடப்பட வேண்டும். உள்ளூர் சபையோ அல்லது மறைமாவட்ட கண்காணிப்பாளரோ அந்த முடிவின்பேரில் முறையீடு செய்ய வேண்டுமானால் இறுதி முடிவுக்காகப் பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். இத்தகைய எல்லா முறையீடுகளும், முறையீட்டுக்கான பதில்களும், இதையொட்டிய விவாதங்களும் அதிகாரமுள்ள பொதுகண்காணிப்பாளருக்கோ அல்லது பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவுக்கோ எழுத்து மூலமே அனுப்பப்பட வேண்டும்.

உள்ளூர் சபைக் குழுவாலோ அல்லது மறைமாவட்ட கண்காணிப்பாளராலோ அனுப்பப்படும் முறையீடுகள், முறையீடுகளுக்கான பதில்கள், இதையொட்டிய விவாதங்கள் இவற்றில் பிரதிகள் சம்பந்தப்பட்ட எதிர்த்தரப்பாருக்கும் அனுப்பப்பட வேண்டும். முறையீடு பற்றிய உள்ளூர் சபைக் குழுவின் குறிப்புப் பதிவில் முறையீடு பற்றிய தீர்மானம், அதை நியாயப்படுத்தும் விவாதங்கள், வாக்கெடுப்பின் விவரம் இவை பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

**104. கட்டுப்பாடுகள்.** உள்ளூர் சபையானது நிலம் வாங்குதல், விற்றல், அடமானம் வைத்தல், கூடுதல் கடன் பெற்று நிதி பெறுதல், பண்டமாற்று செய்தல் இவற்றில் ஈடுபடும் முன்னர் சபைக்குழுவின் வருடாந்திரக் கூட்டத்திலோ அல்லது இதற்கெனச் சிறப்பாகக் கூட்டப்படும் கூட்டத்திலோ மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். ஏற்கெனவே பெறப்பட்ட கடனுக்கு நிதி பெறுவதற்காக நிதியைப் பெற ஒரு திருச்சபை முடிவு செய்தால், அந்த நிதியானது திருச்சபையின் கடனை அதிகரிக்காவிட்டால், சபையின் சொத்துக்களில் எந்தத் தடையையும் ஏற்படுத்தாவிட்டால், இப்படிப்பட்ட கூடுதல் நிதியைப் பெறுவதற்கு மூன்றில் இரு பங்கு குழுவிடமிருந்து ஒப்புதல் பெறலாம். இதற்குச் சபையின் வாக்குத் தேவையில்லை. உள்ளூர் சபைக்கு நிதி கிடைப்பதற்காக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை விற்பதற்கு மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்று அதைச் செய்யலாம். இதுமட்டுமன்றி மேலே கூறப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும் எழுத்து மூலமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட திருச்சபை சொத்து நிர்வாகக் குழுவின் ஒப்புதலையும் பெற வேண்டும் (113.3–113.4, 113.7–113.8, 237.3–237.4)

**104.1.** உள்ளூர் சபையின் நிலமானது அன்றாட செலவுகளுக்காக அடமானம் வைக்கப்படக்கூடாது.

**104.2.** ஒரு சொத்தை அடமானம் வைக்கவோ அல்லது விற்கவோ செய்யும் அல்லது சொத்திலிருந்து காப்பீட்டுத் தொகையைப் பெறும் உள்ளூர் சபை அந்த வருமானத்தைச் சொத்தை வாங்கவோ அல்லது நிலத்தை மேம்படுத்தவோ, புதிய சபையை நிறுவுவதற்கோ அல்லது மற்ற நிலத்தில் ஏற்பட்ட கடனைச் செலுத்தவோ மட்டுமே செலவழிக்க வேண்டும். மறைமாவட்ட அருட்பணியாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெற்றபிறகே இந்தப் பணம் வேறு காரியங்களுக்குச் செலவிடப்பட வேண்டும்.

**104.3.** காப்பாளர்களோ அல்லது உள்ளூர் சபையோ அல்லது காப்பாளரும் உள்ளூர் சபையுமோ சொத்தின் பலனை நசரேயத் திருச்சபை அனுபவிப்பதிலிருந்து திசை திருப்பிவிடக் கூடாது. (113–113.1).

**104.4. சபைகள் பின்வாங்குதல்.** பொது மாநாட்டின் ஒப்புதல் இன்றி, ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள், திட்டங்கள் இவற்றை விடுத்து, எந்த ஒரு உள்ளூர் சபையும், ஒரே அமைப்பாக நசரேயத் திருச்சபையிலிருந்து விலகவும் முடியாது; திருச்சபையுடனான தனது உறவைத் துண்டித்துக் கொள்ளவும் முடியாது. பொது அசெம்பிளியின் அனுமதி மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மற்றும் திட்டங்களின்படியேதான் இதைச் செய்ய வேண்டும். (106.2–106.3)

**105. இணைப்புகள்.** சம்பந்தப்பட்ட சபைகளால் கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் கூடியுள்ள உறுப்பினர்களில் வாக்கெடுப்பின் மூலம் மூன்றில் இரண்டு பங்கினர் ஒப்புதல் அளித்தால் இண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் சபைகள் ஒன்றாக இணையலாம். இதற்கான நிபந்தனைகள்: சம்பந்தப்பட்ட சபைகளின் நிர்வாகக் குழுவின் அனைத்து அங்கத்தினர்கள் வாக்கெடுப்பின் மூலம் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையில் இணைப்பை ஆதரிக்க வேண்டும்; இணைப்புக்கான ஒப்புதல் எழுத்துமூலம் மறைமாவட்ட கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழு, அதிகாரமுள்ள பொதுக் கண்காணிப்பாளர் இவர்களிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும்.

நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல், குருத்துவ ஒழுங்குகளைத் தீர்மானித்தல் இந்த நோக்கங்களோடு கூட்டப்படும் புது சபையாரின் சிறப்புக் கூட்டத்தில் இணைப்பு உறுதி செய்யப்படும். மறைமாவட்ட கண்காணிப்பாளரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் ஒரு மூப்பரோ இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

இவ்வாறு உருவாக்கப்படும் அமைப்பில் முந்தைய சபைகளின் அனைத்து உறுப்பினர்களும் இணைக்கப்படுவார்கள். அந்தச் சபைகளின் அனைத்து இலாக்காக்களின் உறுப்பினர்களும் ஒன்றிணைக்கப்படுவார்கள். மறைமாவட்டக் காண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழு, அதிகாரத்திலுள்ள பொதுக் கண்காணிப்பாளர் இவர்களின் ஒப்புதலின் பேரில் இந்தச் சபைகளின் சொத்துக்களும், கடன்களும் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ இணைக்கப்படும். இணைப்பின்மூலம் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளும் ஒன்றிணைக்கப்படும்.

மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அறிவிப்பின்பேரில், சபையில் அட்டவணையிலிருந்து இயங்காத சபைகளின் பெயர்களை நீக்க நசரேயத் திருச்சபையின் பொதுச்செயலாளர் அதிகாரம் பெற்றுள்ளார்.

**106. சபைகள் செயல்படாதவை அல்லது அமைப்பு கலைக்கப்பட்டவை என்று அறிவித்தல்.** அதிகாரபூர்வமாக அமைப்பு கலைக்கப்பட்டது, மறுபடியுமாகச் செயல்படுவது அல்லது மறுபடியுமாக அமைப்பு உருவாக்கப்பட்டது என்று அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் செயல்பாட்டின் மூலமாக ஒரு குறிப்பிட்ட காலத்துக்குச் செயல்படாதவை என்று அறிவிக்கப்படலாம்.

**106.1.** ஒரு உள்ளூர் சபை பின்வரும் வழிகளில் கலைக்கப்படலாம்:

1. மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின் பேரிலும்,
2. மறைவாட்டக் கண்காணிப்பாளர் பொறுப்பிலுள்ள பொதுக் கண்காணிப்பாளரோடு கலந்து ஆலோசித்தப் பிறகும்,
3. மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் மூன்றில் இருபங்கு ஒப்புதலின் பேரிலும்,

கலைக்கப்படலாம்.

**106.2.** ஒரு உள்ளூர் சபையின் அமைப்பு கலைக்கப்பட்டால் எந்தவொரு சபைச் சொத்தும் வேறு நோக்கங்களுக்காக மாற்றப்படக்கூடாது; அந்தச் சபை பதிவுசெய்யப்பட்ட

பகுதியின் பிரதிகாரியாக விளங்கும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவுக்கே பத்திரம் மாற்றப்படவேண்டும்; அல்லது நசரேயத் திருச்சபைக்குப் பயன்படும்படியாக மறைமாவட்ட மாநாடு நியமிக்கும் வேறு அதிகாரம்பெற்ற பிரதிகாரிகளின் பெயரில் மாற்றப்பட வேண்டும். அதிகாரத்திலுள்ள பொதுக் கண்காணிப்பாளரின் எழுத்து மூலமான ஒப்புதலின்பேரில், மறைமாவட்ட ஆலோசனைக் குழு அல்லது மறைமாவட்ட மாநாட்டின் மூலம் நியமிக்கப்பட்ட பிரதிகாரியின் மேற்பார்வையில் மட்டுமே கலைக்கப்பட்ட சபைக்கான சொத்துக்களை வைத்திருக்கும் காப்பாளர்கள் அவற்றை விற்க முடியும். மறைமாவட்ட மாநாடு அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் மேற்பார்வையில் மட்டுமே சொத்து மாற்றப்படவேண்டும் அல்லது விற்பனைப் பணம் கட்டப்பட வேண்டும். (104.4, 106, 225.23)

**106.3.** செயல்படாத அல்லது கலைக்கப்பட்ட சபையின் எந்தக் காப்பாளரோ அல்லது காப்பாளர்களோ அல்லது நசரேயத் திருச்சபையிலிருந்து விலகும் அல்லது விலக முயலும் சபையோ அதன் சொத்து நசரேயத் திருச்சபைக்குப் பயன்படுத்தப்படுவதிலிருந்து தடுக்கக் கூடாது. (104.4, 141–144, 225.23)

**106.4.** அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்ட சபைகளின் பெயர்கள் மட்டுமே பொதுச்செயலாளரின் பதிவேட்டிலிருந்து நீக்கப்படவேண்டும்.

**106.5.** ஒரு உள்ளூர் சபை செயல்படாததாக அறிவிக்கப்படும்போது, சபையின் எல்லா நிதி மற்றும்/அல்லது பாதுகாப்புக் கணக்குகளைக் கையாளுபவர்கள் இவைகளை வைப்பீடாக வைக்கும்படி மறைமாவட்ட ஆலோசனைக் குழுவுக்கு மாற்ற வேண்டும். இப்படிச் செய்ய மறுக்கும்போது மறைமாவட்ட ஆலோசனைக் குழு எல்லாக் கணக்குகளையும் முடிவுக்குக் கொண்டுவந்து, சட்டம் அனுமதிக்கிறபடியாக மேற்பார்வையை எடுத்துக் கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கிறது.

## B. உள்ளூர் சபையில் உறுப்பினராகுதல்

**107. முழு உறுப்பினராகுதல்.** ஒரு சபையை நிறுவக்கூடிய அதிகாரம் பெற்றவர்களால், ஒரு சபையாக ஒன்று கூட்டி இணைக்கப்பட்டவர்களும், தங்கள் இரட்சிப்பின் அனுபவம், நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகளின் மீதான நம்பிக்கை, அதன் நிர்வாக அமைப்புக்குக் கீழ்ப்படும் விருப்பம் இவற்றை அறிக்கையிட்டு, போதகராலோ, மறைமாவட்டக் கண்காணிப்பாளராலோ அல்லது பொதுக் கண்காணிப்பாளராலேப் பகிரங்கமான முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களும் அந்தச் சபையின் முழு உறுப்பினர்களாகிறார்கள். எல்லா உறுப்பினர்களையும் ஊழியத்துக்குள் கொண்டுவரவும், பராமரிப்பு மற்றும் ஆதரவின் வட்டத்துக்குள் கொண்டுவரவும் உள்ளூர் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் முயல வேண்டும். (23, 107.2, 111, 113.1, 516.1, 520, 532.8, 538.8–538.9)

**107.1.** திருச்சபையில் சேர விருப்பம் தெரிவிக்கும்பொழுது போதகர் அவர்களுக்கு, சபையின் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்குக் கிடைக்கும் சிலாக்கியங்கள், அவர்களது பொறுப்புகள், விசுவாசக் கோட்பாடுகள், கிறிஸ்தவ நடக்கை குறித்த உடன்படிக்கை மற்றும் கிறிஸ்தவ நடத்தை குறித்த உடன்படிக்கையின்

எதிர்பார்ப்புகள், நசரேயத் திருச்சபையின் நோக்கமும் ஊழியமும் இவைபற்றி விளக்கிக் கூற வேண்டும்.

நற்செய்தி கூறுதல் மற்றும் திருச்சபை உறுப்பினராதல் மேற்பார்வைக் குழுவுடன் கலந்தாலோசித்த பிறகு, ஒரு பொது வழிபாட்டில் குருவானவர் இவர்களைச் சபையின் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்கிறார். இதற்கு உறுப்பினர்களை ஏற்றுக் கொள்வதற்கான ஒப்புதல் படிவம் பயன்படுத்தப்பட வேண்டும். (21, 28–33, 110–110.4, 228, 704)

**107.2. சபை வடிவிலான ஊழிய அமைப்பின் உறுப்பினர்கள்.** உள்ளூர் சபை இன்னும் அமைக்கப்படாத இடங்களில், திருச்சபை போன்ற ஊழிய அமைப்புகள் உறுப்பினர்களை 107, 107.1 முறைப்படி ஏற்றுக்கொண்டு தங்கள் வருடாந்திர புள்ளி விவரக்கணக்கில் அதைப்பற்றி அறிவிக்கலாம்.

**107.3. வாக்களித்தலும், அலுவலக அதிகாரியாகுதலும்.** உள்ளூர் சபையின் முழுமையான மற்றும் செயல்படும் உறுப்பினர்களில் உள்ளூர் சட்டம் அனுமதிக்கிறபடி, பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் அலுவலகப் பொறுப்புக்களை வகிக்கலாம், வருடாந்திர அல்லது விசேஷித்த சபைக் கூட்டங்களில் வாக்களிக்கலாம், மறைமாவட்ட அசெம்பிளியில் சபையைப் பிரதிநிதித்துவம் செய்யலாம்.

**108. இணை உறுப்பினர்கள்.** மறைமாவட்ட மாநாட்டின் அனுமதியோடு உள்ளூர் சபையானது இணை உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். இவர்கள் சபை உறுப்பினர்களின் அனைத்து உரிமைகளையும் பெற்றிருப்பார்கள்; ஆனால் வாக்களிக்கவும், சபையில் பதவிகளைப் பெறவும் உரிமை கிடையாது (205.24).

**108.1.** குருவானவர் மற்றும் நற்செய்தி பரப்புதல் மற்றும் திருச்சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழு தமது முடிவின்படி இணை உறுப்பினர்களை முழு உறுப்பினர்களாக்கவோ அல்லது நீக்கவோ முடியும்.

**109. செயல்படாத உறுப்பினர்கள்.** 109.1, 109.2 விதிகளில் கூறப்பட்டுள்ள காரணங்களின்படி உள்ளூர் சபையானது சிலரை 'செயல்படாத உறுப்பினர்களாக' கருதலாம். (112.3, 133)

**109.1.** உள்ளூர் சபையின் உறுப்பினர் ஒருவர் வேறொரு பகுதிக்கு மாறிச்சென்று தனது உறுப்பினர் தகுதியில் செயல்படாமலிருந்தால், அவர் அந்தப் பகுதியிலுள்ள நசரேயத் திருச்சபையின் சபைக்குச் செல்லுமாறும், அந்தச் சபைக்குத் தனது உறுப்பினர் தகுதியை மாற்றிக்கொள்ளுமாறும் வலியுறுத்தப்படவேண்டும்.

**109.2.** சபை நிர்வாகக் குழுவினால் நியாயமானது என்று ஒத்துக்கொள்ளப்படும் எந்தவொரு காரணமுமின்றி ஒரு சபையின் உறுப்பினர் ஆறு மாதங்களாகத் தொடர்ந்து சபையின் ஆராதனையில் கலந்து கொள்ளாதிருந்தால், அவர் ஆராதனைகளில் கலந்துகொள்ள ஊக்குவிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டும் பலனில்லாதிருந்தால், நற்செய்தி பரப்புதல் மற்றும் திருச்சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழுவின் பரிந்துரையில், சபை நிர்வாகக் குழுவின் நடவடிக்கையின் மூலம் அந்த உறுப்பினர் செயல்படாத உறுப்பினராக அறிவிக்கப்படலாம். சபை

நிர்வாகக் குழு இந்த நடவடிக்கை எடுத்து 7 நாட்களுக்குள்ளாக மீட்பு நோக்கோடு கூடிய போதகரின் கடிதம் இந்த முடிவு பற்றி அவருக்குத் தெரிவிக்கும். சபை நிர்வாகக் குழுவின் இந்த நடவடிக்கைக்குப் பிறகு போதகர் உள்ளூர் திருச்சபையின் உறுப்பினர் பட்டியலில் குறித்துக்கொள்ளுவார், "செயல்படாத உறுப்பினர் வரிசையில், சபை நிர்வாகக் குழுவினால் −−−−−(தேதி) அன்று சேர்க்கப்பட்டது" என்று எழுதி வைக்க வேண்டும்.

**109.3.** உள்ளூர் சபையின் உறுப்பினர் பட்டியலில் செயல்படும் உறுப்பினர்களின் பெயர்களோடு செயல்படாத உறுப்பினர்களின் பெயரும் இருக்கும். இந்த முழு உறுப்பினர் பட்டியல் மறைமாவட்ட மாநாட்டிற்கு அறிவிக்கப்படும்போது 1) செயல்படும் உறுப்பினர்கள், 2) செயல்படா உறுப்பினர்கள் என்று இரு பிரிவுகளாகப் பகுத்துக் கொடுக்கப்படும்.

**109.4.** செயல்படா உறுப்பினர்கள் வருடாந்திரக் கூட்டங்களிலும், சிறப்புக் கூட்டங்களிலும் வாக்களிக்க முடியாது. சபையில் எந்தப் பதவியும் வகிக்க முடியாது.

**109.5.** சபை நிர்வாகக் குழுவானது தனது பெயரை முழு உறுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று செயல்படாத உறுப்பினர் எழுத்துமூலம் வேண்டுகோள் விடுக்கலாம். ஆனால் அதில் அவர் மீண்டும் தனது உறுப்பினருக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதாக வாக்குக் கொடுக்க வேண்டும். உள்ளூர் சபையின் ஆராதனைகளில் புத்துணர்வோடு கலந்துகொள்ள வேண்டும். 60 நாள்களுக்குள்ளாக சபை நிர்வாகக் குழு இந்த விண்ணப்பத்திற்குப் பதிலளிக்க வேண்டும். நற்செய்தி பரப்புதல் மற்றும் திருச்சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழுவின் பரிந்துரையில், சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழுவின் பரிந்துரையில், சபை நிர்வாகக் குழுவின் நடவடிக்கையின்மூலம் அந்த நபருக்கு முழு உறுப்பினர் தகுதி அளிக்கலாம்.

## C. உள்ளூர் சபை நற்செய்தி பரப்புதல் மற்றும் திருச்சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழு

**110.** சபை நிர்வாகக்குழு மூன்று நபர்களுக்குக் குறைவுப்படாத உறுப்பினர்களைக் கொண்ட நற்செய்தி பரப்புதல் மற்றும் திருச்சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்கும்; இந்த உறுப்பினர்கள் போதகருக்கு ஆலோசனை அளிப்பார்கள். போதகரே இந்தக் குழுவின் தலைவராக இருப்பார் (138.3). இந்தக் குழுவின் கடமைகள்:

**110.1.** உள்ளூர் சபையின் நற்செய்தி பரப்புதலை ஊக்குவித்தல், நற்செய்திப் பணியின் கனிகளைப் பராமரித்தல் (107−107.1, 129.24).

**110.2.** சபையின் முழு இயக்கத்திலும் நற்செய்திப் பணியை வலியுறுத்துவதற்கான வழிகளைக் கற்றறிந்து சபை நிர்வாகக் குழுவுக்கும், இலாக்காக்களுக்கும் பரிந்துரை செய்தல்.

**110.3.** பொதுச்சபை மற்றும் மறைமாவட்ட மாநாட்டின் சபைப் பிரிவின் நற்செய்திப் பணித் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளூர் குழுவாகச் சேவை செய்தல்.

**110.4.** தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவதின் மூலம் புது உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போது இவர்கள் நற்செய்திப் பணியின் கனிகளைப் பாதுகாக்க உதவுகிறார்கள் என்பதை நினைவில் கொண்டு, ஒரே சீரான தியான வாழ்வு, வேதாகமத்தையும் சட்ட நூலையும் தனியாகவோ அல்லது குருவானவரின் உறுப்பினர் பயிற்சி வகுப்பிலோ கற்றல் இவற்றின்மூலம் சபையின் உறுப்பினர்களாகும்படி தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று புதிதாக மனம் மாறியவர்களை வலியுறுத்துதல் (20–21).

**110.5.** புது உறுப்பினர்களைச் சபையின் ஐக்கியத்திற்குள்ளும், ஊழியத்திலும் கொண்டுவர முயலுதல்.

**110.6.** புது உறுப்பினர்களின் ஆவிக்குரிய வழிநடத்துதலுக்காகத் தொடர்ச்சியான திட்டம் ஒன்றை வகுப்பதில் போதகரோடு சேர்ந்து பணிபுரிதல்.

**110.7.** உள்ளூர் நற்செய்திக் கூட்டங்களுக்கான நற்செய்தியாளர்களின் பெயரை போதகர் முன்மொழியும்படி அவர்களின் பெயர்களைச் சபை நிர்வாகக் குழுவுக்குப் பரிந்துரை செய்தல். பதிவுபெற்ற அல்லது அழைக்கப்பட்ட ஒரு நற்செய்தியாளரைக் கொண்டு குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு முறையாவது நற்செய்திக் கூட்டம் ஒன்றை நடத்தும்படி பரிந்துரை செய்யப்படுகிறது.

**110.8.** ஒருவரை முழு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுவதற்கு முன்பு, அதுபற்றி போதகர் நற்செய்தி பரப்புதல் மற்றும் திருச்சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழுவினரோடு கலந்தாலோசித்த பிறகே அவரை ஸ்தல சபையின் முழு உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். (107.1).

## D. உள்ளூர் சபை உறுப்பினர் மாற்றம்

**111. இடமாற்றம்.** உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்படும்போது, போதகர் அவருக்கு பெயர் குறிப்பிடப்பட்ட ஒரு உள்ளூர் நசரேயத் திருச்சபைக்கு அவரது உறுப்பினர் தகுதியை மாற்ற அனுமதி அளிக்கலாம் (இதற்கான படிவம் 817இல் உள்ளது). இந்த இடமாற்ற அனுமதி மூன்று மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அவரைப் பெற்றுக்கொள்ளும் உள்ளூர் சபை இதுபற்றிய அறிவிப்பை அனுப்பியவுடன், முந்தைய உள்ளூர் சபையில் அவருக்கிருந்த உறுப்பினர் தகுதி இரத்து செய்யப்படும் (818).

**111.1. நற்சாட்சி சான்றிதழ்.** உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க பெயர் குறிப்பிடப்பட்ட எந்தவொரு சுவிசேஷ சபைக்கும் போதகர் நற்சாட்சி சான்றிதழ் (படிவம் 815 பார்க்க) ஒன்றை அளிக்கலாம். இதன் பிறகு இந்தச் சான்றிதழை அளிக்கும் சபையில் அவரது உறுப்பினர் தகுதி உடனடியாக இரத்து செய்யப்படுகிறது. (112.2, 539.5, 815).

## E. உறுப்பினர் தகுதி இரத்து செய்யப்படுதல்

**112. ஊழியர்கள்.** ஒரு உரிமம் அல்லது அபிஷேகம் பெற்ற ஊழியர் மற்றொரு திருச்சபைப் பிரிவில் சபை உறுப்பினராகவோ அல்லது போதகராகப் பொறுப்பேற்றாலோ, அந்த ஊழியர் உறுப்பினராக இருக்கும் உள்ளூர் சபையின் போதகர் அதை உடனடியாக மறைமாவட்ட குருத்துவ நற்சான்றிதழ் குழுவுக்குத் தெரிவிக்க வேண்டும். மறைவாட்ட குருத்துவ நற்சான்றிதழ் குழு இதை ஆராய்ந்து பார்த்து, அந்த உறுப்பினரின் நிலையை உறுதிப்படுத்தும். அவர் ஊழியர்களின் பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று மறைமாவட்ட குருத்துவ நற்சான்றிதழ் குழு தீர்மானிக்குமானால், இதன் காரணமாக, உள்ளூர் சபைப் போதகர் அவரது உறுப்பினர் தகுதியை உடனடியாக விலக்க வேண்டும். உறுப்பினர்களின் பதிவேட்டில் "மற்றொரு சபை, சபைப் பிரிவில் அல்லது ஊழியத்தில் இணைந்தபடியால் விலக்கப்பட்டார்" என்று எழுதப்பட வேண்டும். (532.9, 538.10, 538.13–538.14)

**112.1. சாமானியர்கள்.** ஒரு உள்ளூர் சபையின் சாமானிய உறுப்பினர் வேறு ஏதாவது சமய அமைப்பில் உறுப்பினர் தகுதியைப் பெற்றிருந்தாலோ, பிரசங்கம் செய்ய அனுமதி பெற்றிருந்தாலோ அல்லது அபிஷேகம் பெற்றிருந்தாலோ அல்லது சுயமாக சபை அல்லது மிஷனரிப் பணியைச் செய்து வந்தாலோ உள்ளூர் சபையில் அவரது உறுப்பினர் தகுதி இரத்து செய்யப்படும். விதிவிலக்காக, அவர் தமது உறுப்பினர் தகுதியைப் பெற்றிருக்கும் சபையில் உள்ளூர் சபை நிர்வாகக் குழுவின் எழுத்து மூலம் வருடாந்தர, அனுமதியையும், அந்தச் சபை இருக்கும் பகுதியின் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்துமூலம் வருடாந்தர, அனுமதியையும் பெற்றிருக்க வேண்டும்.

**112.2. உறுப்பினர் தகுதியிலிருந்து விடுவிப்பு.** ஓர் உறுப்பினரின் வேண்டுகோளின்பேரில் போதகர் அவருக்கு விடுவிப்பு அனுமதிக் கடிதம் (படிவம் 816 பார்க்க) ஒன்றை அளிக்கலாம். உடன்தானே அவரது உறுப்பினர் தகுதி இரத்தாகிறது (111.1, 112).

**112.3.** ஓர் உறுப்பினரின் உறுப்பினர் தகுதி செயல்படாததாக அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின், சபை நிர்வாகக் குழுவின் நடவடிக்கையின் பேரில் அவரது பெயர் உறுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கப்படும். போதகர் அவரது பெயருக்கு எதிரே "சபை நிர்வாகக் குழுவால் ––––தேதியன்று நீக்கப்பட்டார்" என்று எழுதிவைக்க வேண்டும். (109, 133)

## F. உள்ளூர் சபைக் கூட்டங்கள்

**113.** கலந்து பேசுவதற்காகவும், அலுவல்களைக் கவனிக்கவும் உள்ளூர் சபை உறுப்பினர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவது சபைக்கூட்டம் எனப்படும். இது பொருத்தமான சட்டம், சட்டநூலில் ஒருங்கிணைத்தல் மற்றும் ஆளுகைக்குறித்த துணைவிதிகள், உள்ளூர், மறைமாவட்ட மற்றும் பொது நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களின் கூட்டங்கள் மற்றும் செயல்முறைகள், இவை *Robert's Rules of*

*Order Newly Revised (latest edition)* இன்படி ஒழுங்குபடுத்தப்படும். (34, 104, 113.7–113.8, 115, 518)

**113.1.** முழு உறுப்பினர் தகுதியை அடைந்து செயல்படும், 15 வயது முடிந்த உறுப்பினர்கள் மட்டுமே சபைக் கூட்டங்களில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்கள் (107.3, 109–109.4)

**113.2.** சபைக்கூட்டங்களுக்கு வருகைதராமல் வாக்களிக்கும் செயல்முறை எதுவும் கிடையாது.

**113.3. அலுவல்களைக் கவனித்தல்.** வேறு ஏதேனும் சிறப்பான அலுவல்கள் குறிக்கப்படாவிட்டால், சபையின் ஆவிக்குரிய உணர்வுக்கும், ஒழுங்குக்கும் ஏற்றவகையில், தேர்தல் உட்பட அனைத்து அலுவல்களும் சபைக்கூட்டத்தில் கவனிக்கப்படும்.

**113.4. தேசிய சட்டத்துக்கு உட்பட்ட நிலை.** சபைக் கூட்டங்களைக் கூட்டுவதற்கும், நடத்துவதற்கும் தேசிய அளவில் ஏதேனும் சட்டங்கள் இருப்பின் அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் (142).

**113.5. கூட்டத்தின் தலைவர்.** தனது பணியின் நிமித்தமாக உள்ளூர் சபையின் தலைவராக விளங்கும் போதகர், மறைமாவட்டக் கண்காணிப்பாளர், அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளர், மறைமாவட்டக் கண்காணிப்பாளராலோ அல்லது கண்காணிப்பாளராலோ நியமிக்கப்பட்ட ஒருவர் – இவர்களில் ஒருவர் வருடாந்தர மற்றும் சிறப்பு சபைக்கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார் (213.1, 307.10, 516.15)

**113.6. செயலாளர்.** சபை நிர்வாகக் குழுவின் செயலாளரே எல்லா சபைக்கூட்டங்களுக்கும் செயலாளராக இருப்பார். அவர் ஆஜராகாதிருந்தால் தாற்காலிக செயலாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படலாம் (135.4).

**113.7. வருடாந்தரக் கூட்டம்.** மறைமாவட்ட மாநாடு கூட்டப்படுவதற்கு முன்பு 60 நாட்களுக்குள்ளாக வருடாந்தர சபைக் கூட்டம் கூட்டப்படவேண்டும். கூட்டம் நடத்தப்படுவதற்கு முன்பு குறைந்தபட்சம் இரண்டு ஞாயிறு ஆராதனைகளிலாவது பிரசங்க பீடத்திலிருந்து வருடாந்தரக் கூட்டம் பற்றிய பொது அறிவிப்பு கொடுக்கப்படவேண்டும். சபை நிர்வாகக் குழுவின் ஒப்புதலின்பேரில் இந்த வருடாந்தரக் கூட்டம், ஒரு நாளுக்கு மேலாகவோ அல்லது ஒரு வேளைக்கு அதிகமாகவோ நடத்தப்படலாம்.

**113.8. விசேஷித்தக் கூட்டங்கள்.** போதகர் அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது பொறுப்பிலிருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற்று, போதகரோ அல்லது சபை நிர்வாகக் குழுவோ எந்த வேளையிலும் விசேஷித்தக் கூட்டங்களைக் கூட்டலாம். கூட்டம் நடத்தப்படுவதற்கு முன்பு குறைந்தபட்சம் இரண்டு ஞாயிறு ஆராதனைகளிலாவது பிரசங்க பீடத்திலிருந்து விசேஷித்தக் கூட்டம் குறித்த அறிவிப்பு, தேசிய சட்டத்துக்கு உட்பட்ட வகையில் கொடுக்கப்பட வேண்டும். (104, 113.1, 115–115.1, 123–123.7, 137, 139, 142.1, 144)

**113.9. அறிக்கைகள்.** வருடாந்தர சபைக் கூட்டத்தில் போதகர் (515.7), ஓய்வுநாள் பள்ளி மற்றும் சர்வதேச சீஷத்துவ ஊழியங்களின் (SDMI) மேற்பார்வையாளர், அகில உலக நசரேய வாலிப குழுவின் தலைவர், அகில உலக நசரேய மிஷனெரி சங்கத்தின் தலைவர், பெண் உக்கிராணிகள், உள்ளூர் ஊழியர்கள், செயலாளர், சபை நிர்வாகக் குழுவின் பொருளாளர், இவர்கள் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம். (135.2, 136.5, 146.6, 152.2, 508, 516.7, 531.1)

**113.10. நியமனக் குழு.** அலுவலர்கள், நிர்வாகக்குழுக்கள், மறைமாவட்ட மாநாட்டிற்கான பிரதிநிதிகள் இவர்களின் பெயர்களை நியமனம் செய்வதற்கு நியமனக் குழு ஒன்று பயன்படுத்தப்படலாம். இவ்வாறு நியமனம் செய்யப்படுபவர்கள் வேறு எந்தக் குழுவிலும் நியமனம் செய்யப்பட்டிருக்கக்கூடாது.

நியமனக் குழுவில் மூன்று பேருக்குக் குறையாமலும், ஏழு பேருக்கு அதிகமாகாமலும் உறுப்பினர்கள் இருப்பார்கள். போதகரும் இதில் ஓர் உறுப்பினராக இருப்பார். உறுப்பினர்களின் பெயர்கள் போதகரால் முன்மொழியப்பட்டு, சபை நிர்வாகக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்படலாம் அல்லது மறைமாவட்ட கண்காணிப்பாளரால் உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம். போதகர் இந்தக் குழுவின் தலைவராக இருப்பார். இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் விதி எண் 33 இன்படி சபை அலுவலர்களுக்குத் தேவையான தகுதிகளை நிறைவேற்றுவதாக உறுதியளிக்கவேண்டும்.

**113.11. தேர்தல்கள்.** வருடாந்தர சபைக் கூட்டத்தில் உக்கிராணிகள், காப்பாளர்கள், ஓய்வுநாள் பள்ளி மேற்பார்வையாளர், ஓய்வுநாள் பள்ளி மற்றும் சர்வதேச சீஷத்துவ ஊழியங்களின் (SDMI) மேற்பார்வையாளர், இந்தக் குழுவின் உறுப்பினர்கள் இவர்கள் வாக்கெடுப்பின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அடுத்து பதவி வகிப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்கும் வரை இவர்கள் அடுத்த சபை ஆண்டு முழுவதும் பணியாற்றுவார்கள். சட்டம் அனுமதியளிக்கும் இடங்களில், பங்குபெறும் சபை உறுப்பினர்களின் பெரும்பாண்மை வாக்கைப்பெற்று தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் இரண்டு ஆண்டுகள் இந்தப் பதவியில் இருப்பார்கள். இவ்வாறு சபை அலுவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் அனைவரும் நசரேயத் திருச்சபையின் அதே உள்ளூர் நசரேயச் சபையின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

முழுமையாகப்பரிசுத்தமாக்கப்படுதலின் அனுபவத்தை அறிக்கையிடும், நம்மைப் பரிசுத்தமான வாழ்க்கைக்கு அழைக்கும் தேவனுடைய கிருபைக்குப் பொதுவான சாட்சிபகரும் வகையில் வாழுபவர்களும், நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகள், ஆளுகைமுறை, செயல்பாடுகளை ஒப்புக்கொள்ளுகிறவர்களுமாகிய உள்ளூர் சபை உறுப்பினர்களையே உள்ளூர் சபை, சபை அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நாம் நம்முடைய உள்ளூர் சபைகளுக்கு வழிகாட்டுகிறோம்; இவர்கள் உண்மையோடு வருகைதருதல், துடிப்போடு ஊழியம் செய்தல், தசமபாகம் மற்றும் காணிக்கையளித்தலின் மூலமாக உள்ளூர் சபைக்கு ஆதரவளிக்க வேண்டும். சபை அலுவலர்கள் "உலகம் முழுவதிலும் கிறிஸ்துவைப்போன்ற சீஷராக்குவதில்" முழுமையான ஈடுபாடு கொள்ளவேண்டும். (33, 127, 137, 141, 142.1, 145–147)

**113.12.** சட்டம் அனுமதிக்கும் இடங்களில், இத்தகைய முறையும், தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையும் கூடியுள்ள சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் ஒப்புதல் அளிக்கப்பட்டால், சபை நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படலாம். இதன் பிறகு சட்ட எண் 137 மற்றும் 141 இவற்றிற்கேற்றபடி, உக்கிராணிகள், காப்பாளர்கள் இவர்கள் நியமிக்கப்படுவதற்கு விகிதாச்சாரப்படி போதுமான இடங்கள் ஒதுக்கப்படலாம். இவ்வாறு சபை நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படும்போது, இந்தக் குழுவே பல்வேறு பொறுப்புகளைக் கவனிப்பதற்காக தமது உறுப்பினர்களைக் கொண்டே கிளைக்குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். 145ஆம் சட்ட விதிக்கேற்ப ஒரு சபையானது தனது நிர்வாகக் குழுவின் ஒரு பகுதியாகக் கல்விக்குழு ஒன்றையும் தேர்ந்தெடுத்திருந்தால் அந்தக் குழுவே சபை நிர்வாகக் குழுவின் கல்விக் குழுவாக அமையும். ஊழியத்துக்காகவும், அருட்பணி நடவடிக்கைகளுக்காகவும் தன்னைத்தானே ஒழுங்குபடுத்தும் வகையில் ஒரு உள்ளூர் சபை மாற்று நிர்வாகக் குழுவையும், குழு வடிவமைப்பையும் பயன்படுத்தலாம்; இந்த மாற்று ஏற்பாடுகளுக்கு மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிலிருந்து எழுத்துபூர்வமான ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். இந்த வடிவமைப்பு பொதுவான சட்டத்தின் எதிர்பார்ப்புக்களுக்கே ஏற்ற வகையில் இருக்க வேண்டும். (145–145.10)

**113.13.** சட்டம் அனுமதிக்கும் இடங்களில், இத்தகைய முறைமை, ஒழுங்காகக் கூட்டப்பட்டுள்ள ஒரு வருடாந்தரக் கூட்டத்தில் கூடியுள்ள சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் ஒப்புதல் அளிக்கப்பட்டால், மறைமாவட்ட கண்காணிப்பாளரின் எழுத்துமூலமான அனுமதியைப் பெற்றபிறகு, ஒரு சபையானது இரண்டு ஆண்டு காலம் பதவியிலிருக்குமாறு தனது நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிப் பேரைத் தேர்ந்தெடுக்கும். இதே அளவு எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் வருடந்தோறும் தேர்ந்தெடுக்கப்படுவர். சபை நிர்வாகக் குழு இந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படும்போது, தெரிந்தெடுக்கப்படும் உக்கிராணிகள், காப்பாளர்கள் இவர்களின் எண்ணிக்கை 137, 141 எண் விதிகளுக்கு ஒத்ததாக இருக்க வேண்டும்.

**113.14.** மறைமாவட்ட மாநாட்டிற்கான சாமானிய பிரதிநிதிகள், வருடாந்தர சபைக் கூட்டத்தில் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். பிரதிநிதிகள் போதகரால் பரிந்துரை செய்யப்பட்டு, உள்ளூர் சபை நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். விதி எண்கள் 201–201.2ன்படி பொதுச் சபையால் நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதித்துவ அடிப்படையில் இது அமையும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லோரும் உள்ளூர் நசரேய சபையில் செயல்படும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். (107.3, 113.11)

**113.15.** சபை வடிவிலான ஊழியத்திலிருந்து (CTM) மறைமாவட்ட அசெம்பிளிக்கு வரும் பிரதிநிதிகள் 33, 201.1, 201.2 விதிகளின் அடிப்படையில் போதகரால் நியமிக்கப்படலாம். ஒவ்வொரு ஊழியத்தையும் (Nazarene Missions International, Nazarene Youth International, Sunday School and Discipleship Ministries International) குறித்த திட்டவட்டமான

துணைவிதிகள், இயல்பு அல்லது வடிவமைப்பின் அடிப்படையில் போதகர் வருடாந்தர கன்வென்ஷன்களுக்கான பிரதிநிதிகளின் பெயரைக் குறிப்பிடலாம். (100.1, 810, 811, 812)

## G. உள்ளூர் சபை ஆண்டு

**114.** உள்ளூர் சபையின் அமைப்பையொட்டிய வருடகால அளவு நிர்வாக ஆண்டாக அமையும்; இதுவே சபை ஆண்டாக அங்கீகரிக்கப்படும்.

**114.1.** மறைமாவட்ட மாநாடு துவங்குவதற்கு 90 நாட்களுக்கு முன்பாக நிர்வாக ஆண்டு முடிவடையும்; மாநாடு முடிவடைந்த அடுத்த நாளிலிருந்து புதிய நிர்வாக ஆண்டு துவங்கும். இந்தக் கால அளவுக்கு உட்பட்டு இந்த ஆண்டின் சரியான துவக்க நாள், முடிவு நாள் இவற்றை மறைமாவட்ட ஆலோசனைக் குழு முடிவு செய்யும் (225.1)

## H. போதகரை அழைத்தல்

**115.** ஒழுங்காகக் கூட்டப்பட்ட ஒரு வருடாந்தரக் கூட்டத்திலோ அல்லது சிறப்புக் கூட்டத்திலோ கூடியிருக்கும் உறுப்பினர்களில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களின் வாக்குகளில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்மூலம் ஒரு மூப்பரோ அல்லது அனுமதிபெற்ற போதகரோ சபையின் போதகரின் பொறுப்பை ஏற்கும்படி அழைக்கப்படலாம். ஆனால் இதற்கு முன்பாக:

1. மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இந்த நியமனத்துக்கு ஒப்புதல் அளித்திருக்க வேண்டும்.
2. மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினால் இந்த நியமனம் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். நியமனம் செய்யப்படும் நபர் அதே உள்ளூர் சபையின் உறுப்பினராக இருக்க வேண்டும் அல்லது அந்த உள்ளூர் சபையில் சம்பளத்திற்காக வேலை செய்பவராகவோ அல்லது சம்பளம் இல்லாமல் வேலைசெய்பவராகவோ இருக்க வேண்டும். மற்றும்
3. அந்த நபர் சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கு வாக்குகளைப் பெற்று சபையில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

இந்த அழைப்பு பின்வரும் விதிகளுக்கேற்ப மறு ஆலோசனைக்கும், தொடர் பணிக்கும் கட்டுப்பட்டது(119, 122–125.5, 129.2, 159.8, 211.10, 225.16, 514, 532, 533.4, 534.3)

**115.1.** சபைக்கூட்டம் இந்த அழைப்புக்காக வாக்களித்து 15 நாட்களுக்குள்ளாக, குருப்பணிக்காக விடுக்கப்பட்ட இந்த அழைப்பை ஏற்று போதகர் பதில் கொடுக்கவேண்டும்.

**115.2.** சபை நிர்வாகக் குழுவும், போதகரும்ரும் ஒருவருக்கொருவர் தங்கள் நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் பற்றித் தெளிவாக எழுத்துமூலம் பரிமாறிக்கொள்ள வேண்டும். (122, 129.3–129.4)

**115.3.** போதகர் பணிபுரியத் துவங்கிய பின்னர் செயல்முறைப்படி கூடிய விரைவில் சபையாரும், போதகரும் நியமன ஆராதனை அல்லது ஒன்றிணைக்கும் ஆராதனையில் பங்குகொள்ள வேண்டும். தேவனுடைய சித்தத்தின் வழிநடத்துதலுக்கேற்ப ஐக்கியத்தை வலியுறுத்துவதே இந்த ஆராதனையின் நோக்கமாக இருக்க வேண்டும். முடிந்தால் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இதற்குத் தலைமைத் தாங்கலாம்.

**115.4.** பணி செய்ய போதகருக்கு அழைப்பை அனுப்பும்போது உள்ளூர் சபையானது தீர்மானிக்கப்பட்ட ஊதியம் பற்றியும் தெரிவிக்க வேண்டும். இந்த ஊதியத் தொகை சபை நிர்வாகக் குழுவினால் தீர்மானிக்கப்படலாம். சபை அல்லது சபை நிர்வாகக் குழுவுக்கும் போதகருக்கும் இடையே ஒப்புதல் ஏற்படும்போது, போதகரின் ஊதியத்தை முழுமையாகக் கொடுப்பது சபையின் தார்மீகக் கடமையாகிறது. ஆனால் ஒருவேளை சபையானது ஒப்புக்கொண்ட ஊதியத்தைத் தொடர்ந்து கொடுக்க இயலாமல் போனால், அத்தகைய இயலாமையும், தோல்வியும் போதகர் சபைக்கு விரோதமாக சட்டப்படி குற்றஞ்சாட்டுவதற்குப் போதுமான காரணங்களாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. போதகரின் பணிக்காலத்தில் சேகரிக்கப்பட்ட, குறிக்கப்பட்ட ஊழியம் சாராத, அதிகபட்ச நிதிக்கு சபையானது ஒருபோதும் சட்டரீதியான பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. இப்போது இருக்கும் போதகராலோ அல்லது முந்தைய போதகராலோ சபைக்கோ அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவுக்கோ எதிராகப் பொது வழக்குப் போடப்படுமானால், மறைமாவட்டமானது அந்த ஊழியரின் நற்சான்றிதழைப் பெற்று, அதன்பிறகு ஊழியருக்கான பட்டியலிலிருந்து அந்த ஊழியரின் பெயரை நீக்கும் நடவடிக்கையில் ஈடுபடலாம்.

போதகரின் போக்குவரவு, இடமாற்றச் செலவுகளையும் உள்ளூர் சபையே ஏற்றுக்கொள்ள வேண்டும். (32–32.3, 129.8–129.9)

**115.5.** போதகரின் உள்ளூர் சபையில் அதிகாரபூர்வமாக ஊழியம் செய்யும் முதல் ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தைய திங்கட்கிழமையிலிருந்து அவரது ஊதிய கால அளவு கணக்கெடுத்துக் கொள்ளப்படும்.

**115.6.** தங்களுடைய மறைமாவட்டத்திற்கு ஏற்றவாறு போதகருக்கு ஊதியம் வழங்குவதற்கான மாற்று திட்டங்களை உள்ளூர் சபைகள் சிந்தித்துப் பார்க்கலாம்.

**116.** குடும்பத்தின் முக்கியத்துவத்தை மறுபடியும் எடுத்துரைக்கும் விதத்தில், சமாதானமான மற்றும் ஒன்றுசேர்ந்த வாழ்வின் அடையாளமாக போதகர்கள் இருக்கும்படியாகவும் உள்ளூர் சபைகள் போதகருக்கும் அவருடைய துணையாளருக்கும் பேறுகால விடுமுறையளிக்க செயல்பட வேண்டும். பேறுகால ஆண்/பெண் விடுமுறைக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு மறைமாவட்டகக் கண்காணிப்பாளர்கள் உள்ளூர் சபைகளை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுடைய வளர்ச்சியாகத் தேவைப்படுகிறதைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட கொள்கைகள் பின்வரும் குறிப்புகளையும் உள்ளடக்கியிருக்கலாம்:

1. குழந்தை பெறுவதற்கோ அல்லது தத்து எடுப்பதற்கோ முன்பாகவே இந்த ஆண்/பெண் பேறுகால விடுமுறையானது ஒருமனதாக போதகராலும், சபைக் குழுவாலும் தீர்மானிக்கப்பட்டிருக்கப்பட வேண்டும்.

2. இந்தப் பேறுகால விடுமுறையானது பொதுவாக எடுக்கப்படும் விடுமுறையின் ஒரு பங்காக இருக்காமல், அதோடு சேர்த்துக் கொடுக்கப்படும் ஒன்றாக இருக்க வேண்டும்.
3. இந்தப் பேறுகால விடுமுறையின் காலகட்டத்தின்போது ஒரு மாற்றுப்போதகரை நியமிப்பதைக் குறித்து போதகரையும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரையும் உள்ளூர் திருச்சபை ஒப்புதல் பெற வேண்டும்.
4. இந்தப் பேறுகால விடுமுறையின்போது போதகருடைய முழு சம்பளமும், அவர் பெற்றுக்கொண்டிருக்கும் இதர நன்மைகளும் கொடுக்கப்பட வேண்டும். வேறு வகையான ஏற்பாடுகள் எழுத்துவடிவில் எழுதப்பட்டு, போதகராலும், சபை நிர்வாகக் குழுவின் செயலாளராலும், மறைமாவட்டக் கண்காணிப்பாளராலும் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

**117.** ஒரு உள்ளூர் சபை அமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகாமல் இருந்தாலோ அல்லது முந்தைய வருடாந்தர சபைக் கூட்டத்தில் 35க்கும் குறைவான வாக்களிக்கும் உறுப்பினர்களைப் பெற்றிருந்தாலோ அல்லது மறைமாவட்ட மாநாட்டிலிருந்து தொடர்ந்த நிதி உதவியைப் பெற்று வந்தாலோ, அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அனுமதியின்பேரில் மறைமாவட்ட கண்காணிப்பாளரே அந்தச் சபையின் போதகரை நியமிக்க முடியும்; அல்லது வேற்று நியமனம் செய்ய முடியும் (211.17).

**117.1** ஒரு சபையில் வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 35க்கு அதிகமாக இருந்தாலோ அல்லது அந்தச் சபை அமைக்கப்பட்டு குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் ஆகியிருந்தாலோ, அதன் போதகர் நியமிக்கப்பட்ட போதகராகக் குறைந்தபட்சம் இரண்டாண்டுகள் ஊழியம்செய்திருந்தாலோ, "நியமிக்கப்பட்ட தகுதிநிலையிலிருந்து" மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். இந்த நடவடிக்கை சபை/போதகர் மறுஆய்வு, கூடிவரும் சபை நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதல், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் இவைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். வருங்காலத்திய நான்காண்டு ஒழுங்கான சபை/போதகர் மறுஆய்வுக்கான வருடாந்திர நாள் இறுதி ஒப்புதலின் நாளாக இருக்கும்.

**118.** ஒருவேளை போதகரைப்பற்றிய முன்னேற்பாடுகளில் சபை நிர்வாகக் குழுவுக்கும், மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால், சபை நிர்வாகக் குழுவோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ அதிகாரம் பெற்ற பொது கண்காணிப்பாளரின் முடிவுக்காக இந்தக் காரியத்தை அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த முடிவுக்கும் ஒத்துவராவிட்டால் சபை நிர்வாகக் குழுவோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவுக்கு முறையிடலாம். அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளருக்கோ அல்லது பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவுக்கோ அனுப்பப்படும் எல்லா முறையீடுகளும், பதில் முறையீடுகளும், இவை பற்றிய விவாதங்களும் எழுத்து மூலமாகவே அனுப்பப்பட வேண்டும். சபை நிர்வாகக் குழுவாலோ அல்லது மறைமாவட்ட கண்காணிப்பாளராலோ அனுப்பப்படும் முறையீடுகள், பதில் முறையீடுகள், இவை

பற்றிய விவாதங்கள் இவற்றின் பிரதிகள் எதிர்தரப்பாருக்கு அனுப்பப்பட வேண்டும். சபை நிர்வாகக் குழுவின் குறிப்பேட்டில் முறையீடு பற்றிய தீர்மானம், அதை ஆதரிக்கும் விவாதங்கள், வாக்கெடுப்பின் விவரங்கள் இவை பதிவுசெய்யப்பட வேண்டும். ஆலோசனையில் இருக்கும் குரு தனது பெயரை விலக்கிக் கொண்டாலோ அல்லது பரிசீலனைக்காக எந்தக் போதகரும் இல்லாவிட்டாலோ இந்த முறையீட்டு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மறைமாவட்ட கண்காணிப்பாளரும் சபை நிர்வாகக் குழுவும் குருவானவரைப் பற்றிய முன்னேற்பாடுகளைத் தொடர வேண்டும்.

**119.** மறைமாவட்ட மாநாடு முடிவடையும்போது ஓர் இறை ஊழியரின் அனுமதி புதுப்பிக்கப்படாதிருந்தால், உடன்தானே போதகராக அழைக்கப்படும் அவரது தகுதி (மூப்பர் தகுதி) முடிவடையும்.

**120.** போதகர் பொறுப்பிலிருந்து விலக விரும்பும் போதகர்,

1. முதலில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு கலந்தாலோசிக்க வேண்டும்;
2. போதகர் பொறுப்பை விடுவதற்குக் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்பாகச் சபை நிர்வாகக் குழுவுக்கு எழுதப்பட்ட இராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்;
3. அதன் ஒரு பிரதியை மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

இராஜினாமா சபை நிர்வாகக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் போது, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதல் கடிதத்தைப் பெறும்போது, 30 நாட்களுக்குள்ளாக விலகும் நாள் தீர்மானிக்கப்படும்.

**120.1.** பதவி விலகும் போதகர், சபை நிர்வாகக் குழுவின் செயலாளரின் ஒத்துழைப்புடன், சபை உறுப்பினர்களின் சரியான பட்டியலை, அப்போதைய விலாசங்களுடன் தயாரிக்க வேண்டும். தற்போதைய ஆண்டுக்கான புதிய சேர்க்கைகளும், விலகுதலும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பட்டியலின் எண்ணிக்கை அளவு கடைசியாக வெளியிடப்பட்ட மறைமாவட்டப் பொழிப்புகளுக்கு (minutes) ஒத்ததாக இருக்கவேண்டும்.

**121.** சபை நிர்வாகக் குழுவின் பரிந்துரையின்பேரில், மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்று, ஒரு சபையானது ஊழியம் செய்யும்படி துணைப்போதகர்களைத் தேர்ந்தெடுக்கலாம். கீழ்க்கண்ட விதிகளின்படி இதைச் செய்யலாம்:

1. பகிர்ந்துகொள்ளப்பட்ட பொறுப்பை மற்றும் திட்டத்தை உருவாக்கும்படி, துணைப்போதகர்கள் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் வழிநடத்துதலின்படி, சபை நிர்வாகக் குழுவோடு சேர்ந்து பணிபுரிவார்கள்.
2. துணைப்போதகர்கள் குருத்துவப் பணியில் சமமானவர்களாக இருக்கிறார்கள். சட்டத்தின்படி தேவைப்பட்டால், துணைப்போதகர்களில் ஒருவர் சபை நிர்வாகக் குழுவால் தலைமைதாங்கும் அதிகாரியாகக்

குறிப்பிடப்படலாம்; இவர் ஒருங்கிணைப்பின் தலைவராகவும், சபை நிர்வாகக் குழுவின் அலுவல் தலைவராகவும் இருப்பார்.

3. 123–123.7 ஆம் விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளபடி, குருத்துவ மறு ஆய்வுச் செயல்முறை பின்பற்றப்பட வேண்டும்.

4. ஒரு உள்ளூர் சபையில் நியமனம் செய்யப்படாத மற்றும் இரண்டு ஆண்டுகளுக்குமேல் பணியில் இருந்த போதகர் 115இல் காணப்படும் விதிகளின்படி ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்டவர்களையோ துணைப் போதகர்களாக நியமனம் செய்யலாம். மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் அனுமதி பெறப்பட்டு, சபை நிர்வாகக் குழு உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்கைப் பெற்று, சபையானது ஒரு துணைப் போதகரை நியமிக்கவேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்யும். அந்த உள்ளூர் சபையில் துணைப் போதகராக இருப்பதற்கு அந்த நபர் சபையாரிடமிருந்து மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற வேண்டும்.

5. தேவைப்படும் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகள் எட்டப்பட்டப்பிறகு, ஒவ்வொரு ஊழியருக்கும் அதே நாளில் அவர்களுடைய இரண்டு ஆண்டு பதவிக்காலம் துவங்கும். துணைப் போதகர்களின் குருத்துவ ஊழியம் எப்படிப்பட்டதாக இருந்தது என்பதைக் குறித்த மறுஆய்வானது அவர்களுடைய இரண்டாம் வருடாந்தர நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக சபை/போதகர் உறவைக் குறித்த மறுஆய்வு நடைபெறும். (115, 123–123.7)

**121.1.** ஒரு துணைப்போதகர் இராஜினாமா செய்யும்போதோ அல்லது பதவி விலக்கப்படும்போதோ, மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ அறுபது நாட்களுக்குள் பகுதி 123–123.7இல் குறிப்பிடப்பட்டிருக்கும்படி சபை/குருத்துவ உறவுகளைக் குறித்த மறுஆய்வை நடத்த வேண்டும். துணைப்போதகரை அழைக்கவேண்டிய தேவையில்லை என்று சபைக் குழு முடிவுசெய்தால், இந்த முடிவானது மறைமாவட்டக்கண்காணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டு, உள்ளூர் சபை உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.

## I. உள்ளூர் சபை / போதகர் உறவு

**122.** சபை மற்றும் போதகரின் எதிர்பார்ப்புகள், நோக்கங்கள், செயல்திறன் இவற்றை மறு ஆய்வு செய்யும் வகையில், போதகரும், சபை நிர்வாகக் குழுவும் ஆண்டுக்கு ஒருமுறை சுய–ஆய்வு ஒன்றை நடத்த வேண்டும். இந்தச் சுய ஆய்வின்பொழுது, சபைக்கும் போதகருக்கும் இடையே எழுதப்பட்ட உடன்படிக்கை அன்றைய தேதியிடப்பட்டு, புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த எழுதப்பட்ட உடன்படிக்கை மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் கோப்புக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (115.2, 129.4)

**122.1.** போதகரும், சபையினரும் ஒருவருக்கொருவரான எதிர்பார்ப்புகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முயல வேண்டும்; சபைக்குள்ளான ஒப்புரவாகுதலின் ஆவியோடு வேறுபாடுகளைக் களைய வேதாகமக் கருத்துக்களை உண்மையுடன்

பின்பற்ற வேண்டும். வேறுபாடுகளை நீக்குவதற்கு மத்தேயு 18:15–20 மற்றும் கலாத்தியர் 6:1–5 வசனங்களின் மூலம் வேதாகமக் கருத்துக்களை இங்கே காண்போம். சபைக்குள்ளாக ஒத்துழைப்பு மற்றும் ஒப்புரவாகுதலின் ஆவியோடுகூட,

1. சபையின் தனிப்பட்ட அல்லது கூட்டு உறுப்பினர்கள் போதகருடன் நேருக்கு நேர் பேசியோ அல்லது ஒரு சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினரோடு ஜாக்கிரதையாகப் பேசியோ வேறுபாடுகளுக்குத் தீர்வுகாணுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். தனிப்பட்டவர்களோ அல்லது சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களோ போதகரோடு நேருக்கு நேர் விவாதித்து, வேறுபாடுகளுக்குத் தீர்வுகாண்பதை நாட வேண்டும்.
2. முடிவைக் காண நேருக்கு நேரான பேச்சுவார்த்தையால் இயலாவிட்டால், சபையில் அல்லது சபை நிர்வாகக் குழுவில் ஆவிக்குரிய முதிர்ச்சிபெற்ற உறுப்பினர் வேறு ஒருவர் அல்லது இருவரின் உதவியுடன் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.
3. நேருக்கு நேராக பேச்சுவார்த்தை, சிறு குழுவின் முயற்சி இவை தோல்வியடைந்தால் மட்டுமே பிரச்சினைகளை சபை நிர்வாகக் குழுவினரிடம் கொண்டு வாருங்கள். அன்பு, ஏற்றுக்கொள்ளுதல், மன்னிக்கும் உணர்வு இந்த ஆவியுடனே வேறுபாடுகளைக் களையும்படி சபை நிர்வாகக் குழு சபை ஒழுங்குக்கு ஏற்ப, வேறுபாடுகளுக்குத் தீர்வுகாண முயல வேண்டும். (123–126.2, 129.1)

## J. உள்ளூர் சபை / போதகர் உறவைப்பற்றி மறு ஆய்வு செய்தல்

**123. வழக்கமான சபை/குருத்துவ மறு ஆய்வு.** போதகர் தனது போதகப் பணியைத் துவங்கி இரண்டாவது ஆண்டு முடிந்து 60 நாள்களுக்குள்ளாகவும், அதன்பிறகு ஒவ்வொரு நான்கு ஆண்டுகளிலும், சபை நிர்வாகக் குழுவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்ட அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர் அல்லது சாமானியரோடு கூடி குருத்துவ உறவைப் பற்றி மறு ஆய்வு செய்யும். இந்த மறுஆய்வுக் கூட்டத்தில் சபை/குருத்துவ உறவைத் தொடருவதற்கான கேள்வி விவாதிக்கப்படும். ஒழுங்கான சபை நிர்வாகக் குழுவின் வாக்கெடுப்பு இல்லாமல் ஒத்த மனோபாவத்தைக் கண்டறிவதே இதன் செயல்நோக்கமாகும்.

**123.1.** சபை நிர்வாகக் குழுவினரோடான இந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி, நடத்துவது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்ட போதகர் அல்லது சாமானியர் இவர்களது பொறுப்பாகும். குருவானவரோடு கலந்தாலோசித்த பிறகு இந்தக் கூட்டம் (கூட்டங்கள்) ஒழுங்குபடுத்தப்படும். இந்த மறுஆய்வு எந்த வழியில் நடத்தப்படும் என்பதை மறைமாவட்டக் கண்காணிப்பாளர் முடிவு செய்வார். இந்த மறு ஆய்வுக் கூட்டம் அதிகாரமுள்ள தொடர்கூட்டமாக (போதகர் உட்பட சபை நிர்வாகக் குழு) நடத்தப்படும். மறைமாவட்டக் கண்காளிப்பாளரின் தீர்மானத்தின்படி,

இந்த மறுஆய்வின் ஒரு பகுதி போதகர் இல்லாமல் நடத்தப்படும். போதகரின் வாழ்க்கைத் துணை சபை நிர்வாகக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருப்பாரானால், அவர் இந்த மறுஆய்வுக் கூட்டத்தில் பங்கெடுக்கக் கூடாது. மேலும், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் வேண்டுகோளின்படி போதகரின் நெருங்கிய உறவினர்களும் பங்குகொள்ளாமல் விலக்கப்படலாம்.

**123.2.** இந்தச் சபை நிர்வாகக் குழுக் கூட்டத்தைக் குறித்து விளக்கி, பொதுவான மற்றும்/அல்லது அச்சிடப்பட்ட அறிக்கையானது சபை நிர்வாகக் குழுவும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரும் ஒழுங்கான சபை/குருத்துவ மறுஆய்வுக்காகக் கூடிவருவதற்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமையில் சபையாருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

**123.3.** சபை நிர்வாகக் குழு சபை உறுப்பினர்களிடையே போதகரின் அழைப்பைத் தொடரவேண்டுமா என்ற கேள்வியை எழுப்புவதற்கு விரோதமாக பெரும்பான்மை வாக்குகளின்மூலம் தீர்மானித்தால் குருத்துவ உறவு தொடரும்.

**123.4.** இந்த மறு ஆய்வுக் கூட்டத்தில், குருத்துவ உறவு தொடரப்பட வேண்டுமா என்ற கேள்வி விவாதிக்கப்படும். சபை உறுப்பினர்களிடையே போதகரின் அழைப்பைத் தொடரவேண்டுமா என்ற கேள்வி எழுப்புவதை சபை நிர்வாகக் குழு வாக்கெடுப்பின்மூலம் தீர்மானிக்கும். இந்த வாக்கெடுப்பு இரகசியப் பதிவு வாக்கின் முறையில் இருக்கும்; சபை நிர்வாக உறுப்பினர்களின் மூன்றில் இருபங்கு வாக்கின் முடிவே செயல்படுத்தப்படும்.

**123.5.** சபை நிர்வாகக் குழு சபை உறுப்பினர்களிடையே குருவானவரின் அழைப்பைத் தொடர வேண்டுமா என்ற கேள்வியை எழுப்புவதற்கு ஆதரவாக பெரும்பான்மை வாக்குகளின்மூலம் தீர்மானித்தால், இந்தத் தீர்மானம் செய்து 30 நாட்களுக்குள்ளாக, இந்தக் காரணத்திற்காகச் சிறப்பு சபைக் கூட்டம் ஒன்று கூட்டப்படவேண்டும். "தற்போதைய குருத்துவ உறவு நீடிக்கப்படவேண்டுமா?" என்ற கேள்வி எழுப்பப்படும். இரகசிய வாக்கெடுப்பின் மூலம் வாக்களிக்கப்பட்டு, மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையின்மூலம் முடிவெடுக்கப்படும்.

**123.6.** குருத்துவ உறவு நீடிக்கப்பட வேண்டும் என்று சபை உறுப்பினர்கள் வாக்களித்திருந்தால், இத்தகைய ஒரு வாக்கெடுப்பு நிகழவில்லை என்பதுபோல குருத்துவ உறவு தொடரும். ஆனால் விரோதமாக வாக்களிக்கப்பட்டிருந்தால், வாக்கெடுப்புக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்குப் பின்னரும், 180 நாட்களுக்கு முன்னரும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் முடிவு செய்யப்படும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நாளில் சபை/குருத்துவ உறவு முடிவு பெறும். போதகர் சபையாரின் வாக்கெடுப்பை நடத்துவதற்கு எதிரான நிலையைத் தெரிந்துகொண்டிருந்தால் அல்லது வாக்கெடுப்பை ஏற்றுக்கொள்ளாத நிலையைத் தெரிந்துகொண்டிருந்தால் அவர் தனது இராஜினாமாவைச் சமர்ப்பிக்க வேண்டும். இப்படிப்பட்ட வேளையில், போதகர் சபையாரின் வாக்கெடுப்பை நடத்துவதற்கு எதிரான நிலையைத் தெரிந்துகொண்ட அல்லது வாக்கெடுப்பை ஏற்றுக்கொள்ளாத நிலையைத்

தெரிந்துகொண்ட நாளுக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்குப் பின்னரும், 180 நாட்களுக்கு முன்னரும் மறைமாவட்ட கண்காணிப்பாளரால் முடிவு செய்யப்படும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நாளில் சபை/குருத்துவ உறவு முடிவு பெறும். (120)

**123.7.** ஒழுங்கான மறுஆய்வின் ஒரு பகுதியாக, சபையின் அருட்பணி, தரிசனம் மற்றும் முக்கிய மதிப்பீடுகளை நிறைவேற்றும் பணியின் முன்னேற்றத்தைக் குறித்து போதகரும், சபை நிர்வாகக் குழுவும் மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

**124.** கணக்கிடுவோர் நிர்வாகக் குழுவின் தலைவர் இந்த வாக்கெடுப்பின் முடிவு பகிரங்க அறிக்கையாக வெளியிடப்படுமுன்பு, தாமே நேரடியாகக் போதகரைச் சந்தித்து இந்த முடிவைப் பற்றிக் கூறுவார்.

**125. விசேஷித்த சபை/குருத்துவ மறு ஆய்வு.** வழக்கமான மறு ஆய்வுகளுக்கு இடையே, ஒரு உள்ளூர் சபைக்கூட்டம் கூடியிருக்கும் தமது உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையின் மூலம் அதிகாரபூர்வமான விசேஷித்த ஆய்வுக்கூட்டமாக இருக்கும். மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட மூப்பரோ பங்குகொண்டு, தலைமை தாங்க வேண்டும்.

**125.1.** இந்த விசேஷித்த சபை/குருத்துவ ஆய்வுக்கூட்டம் அதிகாரபூர்வமான கூட்டமாக (போதகர் உட்பட சபை நிர்வாகக் குழு) நடத்தப்படும். மறைமாவட்டக் கண்காளிப்பாளரின் தீர்மானத்தின்படி, இந்த மறுஆய்வின் ஒரு பகுதி போதகர் இல்லாமல் நடத்தப்படும். போதகரின் வாழ்க்கைத் துணை சபை நிர்வாகக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருப்பாரானால், அவர் இந்த மறுஆய்வுக் கூட்டத்தில் பங்கெடுக்கக் கூடாது. அதோடு சேர்த்து, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் வேண்டுகோளின்படி போதகரின் நெருங்கிய உறவினர்களும் பங்குகொள்ளாமல் விலக்கப்படலாம்.

**125.2.**சபை உறுப்பினர்கள் மத்தியில் போதகரின் அழைப்பைத் தொடரவேண்டுமா என்ற கேள்வியை எழுப்பவேண்டும் என்று மறைமாவட்ட கண்காணிப்பாளரும், சபை நிர்வாகக் குழுவும் நினைத்தால், தேசச் சட்டம் இதற்கு மாறாக இராதபட்சத்தில் கூடியிருக்கும் தமது உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையின் மூலம் இந்த முடிவுக்கு வரும் சபை நிர்வாகக் குழுவும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரும் விசேஷித்த சபைக் கூட்டத்தில் இந்தக் கேள்வி எழுப்பப்பட வேண்டும் என்று முடிவு செய்யலாம். "தற்போதைய குருத்துவ உறவு நீடிக்கப்பட வேண்டுமா?" என்ற கேள்வி எழுப்பப்படும்.

**125.3.** தேசச் சட்டம் இதற்கு மாறாக இராதபட்சத்தில் வாக்களிக்கும் வயது வந்த கூடியிருக்கும் சபை உறுப்பினர்கள் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையின்மூலம், தற்போதைய குருத்துவ உறவு நீடிக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தால், இத்தகைய ஒரு வாக்கெடுப்பு நடக்காததுபோல, குருத்துவ உறவு தொடரும்.

**125.4.** ஆனால் தற்போதைய குருத்துவ உறவு நீடிப்பதற்கு விரோதமாக சபை உறுப்பினர்கள் வாக்கெடுப்பின்மூலம் தீர்மானித்தால், இந்த வாக்கெடுப்பிற்கு 180

நாள்கள் கழிவதற்கு முன்னால் மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் குறிக்கப்படும் ஒரு நாளில் போதகரின் பணி முடிவு பெறும்.

**125.5.** இப்படிப்பட்ட வேளையில், போதகர் சபையாரின் வாக்கெடுப்பை நடத்துவதற்கு எதிரான நிலையைத் தெரிந்துகொண்ட அல்லது வாக்கெடுப்பை ஏற்றுக்கொள்ளாத நிலையைத் தெரிந்துகொண்ட நாளுக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்குப் பின்னரும், 180 நாட்களுக்கு முன்னரும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் முடிவு செய்யப்படும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நாளில் சபை/குருத்துவ உறவு முடிவு பெறும். (113.8, 123–124)

**126. உள்ளூர் சபையில் நெருக்கடி நிலை.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் கணிப்பில் ஒரு உள்ளூர் சபை நெருக்கடி நிலையிலிருப்பதாக முடிவு செய்யப்பட்டால், இந்த நெருக்கடி நிலையை நெருங்குவதாக முடிவு செய்யப்பட்டால், இந்தச் சூழ்நிலையை மறுஆய்வுசெய்து, இக்கட்டத்தைத் தவிர்ப்பதற்கான செயல்முறைகளை அமுலாக்கும்படி, ஒரு குழுவை நிறுவ மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலோடுகூட ஒரு குழுவை நிறுவ மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அதிகாரம் பெற்றிருக்கிறார். இரண்டு அபிஷேகம் பெற்ற போதகர்களும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் இரண்டு சாமானிய உறுப்பினர்களும் இந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள். மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தலைமைதாங்கும் தலைவராக இருப்பார். (211.3)

**126.1.** மறைமாவட்டக்கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் கணிப்பில் ஒரு உள்ளூர் சபை பொருளாதாரத்திலோ அல்லது ஒழுங்கிலோ அல்லது வேறு காரணத்தினாலோ நெருக்கடி நிலையிலிருப்பதாக முடிவு செய்யப்பட்டால், இந்த நெருக்கடி சபையின் உறுதி நிலைக்கும், வருங்காலத்திற்கும் அபாயமான குந்தகம் விளைவிக்குமாயிருந்தால், (1) 123–123.7ஆம் விதியிலுள்ளதுபோல சபை நிர்வாகக் குழுவே இத்தகைய வாக்கெடுப்பை வேண்டியது என்பதுபோல, மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்ட மறைமாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் ஒருவராலோ, அந்தச் சபையில் குருத்துவ உறவு நீடிக்கப்பட வேண்டுமா என்ற கேள்வி சமர்ப்பிக்கப்படும். அல்லது (2) அதிகாரத்திலுள்ள பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின்பேரில், சபை நிர்வாகக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளின் மூலமும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளின் மூலமும் போதகரின் பதவிக்காலம் முடித்து வைக்கப்படலாம். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலோடுகூட மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நெருக்கடியில் இருப்பதாக அறிவிக்கப்பட்ட சபைக்கான சபை நிர்வாகக் குழு உறுப்பினர்களை நியமிக்கலாம். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் நடவடிக்கை குறித்த அறிவிக்கை 30 நாட்களுக்குள்ளாக அதிகாரத்திலுள்ள பொதுக் கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். (211.3)

**126.2.** மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் கருத்தின்பேரில் நெருக்கடியில் இருப்பதாக அறிவிக்கப்பட்ட ஒரு உள்ளூர் சபை தலையீடுகளை நிறைவேற்றி, இயல்பான சூழ்நிலைகளில் அதன் ஊழியத்தைச் செய்ய ஆயத்தமாக

இருக்குமானால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மை வாக்கின்மூலமாக இது நெருக்கடியிலிருந்து விடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படலாம். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் நடவடிக்கை குறித்த அறிவிப்பை 30 நாட்களுக்குள்ளாக அதிகாரத்திலுள்ள பொதுக் கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். (211.4)

## K. உள்ளூர் சபை நிர்வாகக் குழு

**127. உறுப்பினர்கள்.** ஒவ்வொரு உள்ளூர் சபைக்கும் ஒரு சபை நிர்வாகக் குழு இருக்கும். குருவானவர், SDMI மேலாளர், அகில உலக நசரேய வாலிபர் சங்கத்தின் தலைவர் NYI, அகில உலக நசரேய அருட்பணி சங்கத்தின் தலைவர் NMI, உக்கிராணிகள், சபையின் காப்பாளர்கள், சபையின் வருடாந்திரக் கூட்டத்தில் சபை நிர்வாகக் குழுவின் கல்விக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்படும் SDMI குழுவின் உறுப்பினர்கள் இவர்கள் சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். குருவானவரின் மனைவியே இதற்குத் தலைவராக இருந்து, சபை நிர்வாகக் குழுவில் பங்குகொள்ள விரும்பாவிடில், இச்சங்கத்தின் உபதலைவர் பங்கேற்கலாம். என்றாலும் தலைவர் போதகரின் வாழ்க்கைத் துணையாக இருந்து, குழுவில் பங்கெடுக்கும்படி தீர்மானித்தால், அவர் போதகருக்கான மறுஆய்வுச் செயல்முறையில் பங்கேற்க மாட்டார்.

சபை நிர்வாகக்குழுவில் 25க்கு மேற்படாத ஒழுங்கான உறுப்பினர்கள் இருப்பார்கள். மறைமாவட்டத்தில் பொறுப்பைப் பெறாத அபிஷேகம்பெற்ற மற்றும் மறைமாவட்ட அனுமதி பெற்ற ஊழியர்களும் போதகராலும், மறைமாவட்டக் கண்காணிப்பாளராலும் அங்கிகரிக்கப்பட்ட உறுப்பினர்களைத் தவிர மற்றும் உள்ளூர் சபையில் ஊதியம் பெறுபவர்களும் உள்ளூர் சபை நிர்வாகக் குழுவில் ஊழியம்செய்ய அனுமதிக்கக் கூடாது. ஆனால் மறைமாவட்டக் கண்காணிப்பாளர், போதகர் மற்றும் சபைக் குழுவின் பரிந்துரையின் பேரில் பொறுப்பைப் பெறாத கல்வி கற்றுக்கொண்டிருக்கும் அல்லது நசரேய மேல்நிலைப் பாடதிட்டத்தில் பயின்றுகொண்டிருக்கும் மறைமாவட்ட அனுமதி பெற்ற போதகர்கள் சேர்த்துக்கொள்ளப்படலாம். அப்படிப்பட்ட போதகர்கள் மறைமாவட்ட ஊழியரின் உரிமத்தை புதுப்பிப்பதற்கு ஊழியரைப் பரிந்துரைச் செய்யும் சபைக் குழுவின் செயலிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலின் அனுபவத்தை அறிக்கையிடும், நம்மைப் பரிசுத்தமான வாழ்க்கைக்கு அழைக்கும் தேவனுடைய கிருபைக்குப் பொதுவான சாட்சிபகரும் வகையில் வாழுபவர்களும், நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகள், ஆளுகைமுறை, செயல்பாடுகளை ஒப்புக்கொள்ளுகிறவர்களுமாகிய உள்ளூர் சபை உறுப்பினர்களையே உள்ளூர் சபை, சபை அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்; இவர்கள் உண்மையோடு வருகைதருதல், துடிப்போடு ஊழியம் செய்தல், தசமபாகம் மற்றும் காணிக்கையளித்தலின் மூலமாக உள்ளூர் சபைக்கு ஆதரவளிக்க வேண்டும். சபை அலுவலர்கள் "உலகம் முழுவதும்

கிறிஸ்துவைப்போன்ற சீஷராக்குவதில்" முழுமையான ஈடுபாடு கொள்ள வேண்டும். (33, 113.11, 137, 141, 145–147, 152.2, 159.4)

**127.1.** குருத்துவ மாற்றத்தின் வேளையில் உள்ளூர் சபைக் குழுவின் வருடாந்திரக் கூட்டம் வருமானால், உள்ளூர் பெயர் நியமனம் செய்யும் குழு, மறைமாவட்டக் கண்காணிப்பாளரைக் கூட்டத்தலைவராகக் கொண்டு, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின்பேரில் சபையாருக்குஒரு தீர்மானத்தை அறிவிக்கலாம். வருடாந்திரக் கூட்டத்துக்குக் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்னால் இது அறிவிக்கப்பட வேண்டும். இந்தத் தீர்மானம் வரும் சபை ஆண்டுக்கும் இப்போதைய சபை நிர்வாகக் குழுவைக் கொண்டிருக்கலாம் என்று தீர்மானிக்கும். சபையின் அழைக்கப்பட்ட விசேஷித்தக் கூட்டத்தில் வாக்களிக்கும் சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை மூலமாக இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படலாம். தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால், வருடாந்திரக் கூட்டத்தில் சபை நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படும்.

**128. கூட்டங்கள்.** சபை ஆண்டின் துவக்கத்தில் சபை நிர்வாகக் குழு பொறுப்பை ஏற்கிறது. குறைந்தபட்சம் மாதம் இருமுறை கூட்டம் நடத்தப்படும். போதகராலோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளராலோ அழைக்கப்படும்போது விசேஷித்தக் கூட்டம் நடக்கும். போதகராலோ, போதகரின் ஒப்புதலின்பேரில் செயலாளராலோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளராலோ சிறப்புக் கூட்டங்களுக்கான அழைப்பு விடுக்கப் பெறலாம்; குருவானவர் இல்லாத இடங்களில் சபை நிர்வாகக் குழு சந்திப்புகள், அதில் வாக்களித்தலும் அடங்கும், மின்னணு முறையில் செயல்படுத்தப்படலாம். அப்படிப்பட்ட கூட்டங்களும் வாக்குகளும், ஒரு அறையில் உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து சந்திப்பதற்குப் பெற்றிருக்கும் மதிப்பையே பெற்றிருக்கின்றன. மறைமாவட்டக் கண்காணிப்பாளர் சிறப்புக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கலாம். வருடாந்தர சபைக் கூட்டத்திற்கும் மறைமாவட்ட மாநாட்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அமைப்பு நோக்கங்களுக்காக புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை நிர்வாகக் குழு கூட்டப்படலாம். அப்போது சபைச் செயலாளரும், சபைப் பொருளாளரும் பின்வரும் வழிமுறைகளில் தேர்ந்தெடுக்கப்படலாம். வேறு அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதும் குழுவினரின் கடமையாக இருப்பின் அவர்களும் தேர்ந்தெடுக்கப்படலாம். (129.19–130)

**129. பணி. சபை நிர்வாகக் குழுவின் பணி** பின்வருமாறு:

**129.1.** போதகரோடு இணைந்து சபைக்கடுத்த காரியங்களிலும், வேறு வழிகளில் கவனிக்கப்படாத அதன் பணிகளிலும் அக்கறைக் கொள்ள வேண்டும் (155, 518).

**129.2.** மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு கலந்தாலோசித்த பிறகு, போதகராக வருவதற்குத் தகுதியானவராகத் தீர்மானிக்கும் குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது அனுமதி பெற்ற போதகரின் பெயர் அல்லது மூப்பரின் பெயர் சபைக்காகப் பெயர் குறித்தல். இந்தப் பரிந்துரையானது பகுதி 115இல் காணப்படும் விதிகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். (159.8, 211.10, 225.16)

**129.3.** நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் இவை பற்றிய எழுத்து மூலமான ஓர் அறிக்கையை உருவாக்கப் புதிதாகப் பதவியேற்கும் போதகரோடு ஒத்துழைத்தல் (115.2).

**129.4.** எதிர்பார்ப்புகள், நோக்கங்கள், செயல்திறன் இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு கூடிய சுய ஆய்வை, போதகரோடு சேர்ந்து, குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு முறையாவது நடத்துதல். (122)

**129.5.** சபைக்கான ஒரு நிரந்தரமான போதகர் அழைக்கப்படும்வரை, மறைமாவட்டக் கண்காணிப்பாளரைக் கலந்தாலோசித்து, சபையின் குருத்துவ தேவைகளை நிறைவு செய்தல் (212, 524).

**128.6.** சபைக்காகவும், NMI, NYI, SDMI மற்றும் ஏதேனும் பகல் நேர பராமரிப்பு/ நர்சரி/வாரநாள் பள்ளிகள் இவற்றிற்கான வரவு, செலவுத் திட்டத்தை நிர்ணயிக்கும் சபைக்கான வரவு, செலவுத் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்த உதவுதல்.

**129.7** (1) சபை வரவு செலவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், (2) சபையின் பொருளாதார நிலைமை, ஈடுபாடுகள் இவற்றை சபை நிர்வாகக் குழுவுக்கு அறிவிப்பதற்கான பொறுப்புகளைக் கொண்ட நிர்வாகக் குழுவின் உட்குழு ஒன்றை அமைத்தல்.

**129.8.** போதகர் பெறக்கூடிய ஊதியம், மற்றும் பயன்களை, அதில் ஒய்வுபெறும்போது பெறும் பயனும் அடங்கும், முடிவுசெய்து ஆண்டுக்கு ஒரு முறையாவது மறு ஆய்வு செய்வதும் அவசியம் (32.3, 115.4, 115.6, 123–123.7)

**129.9.** போதகர், குருத்துவ தேவைகள், சபையின் ஊதியம் வாங்கும் வேறு ஊழியர்கள் இவர்களைத் தாங்கக்கூடிய வழிமுறைகளுக்கும், வருவாய்க்கும், வழிசெய்தல்; போதகர், பிற ஊழியர்கள் இவர்களின் தொடர்ந்த கல்வித் தேவைகளையும் கவனித்தல் (115.4).

**129.10.** ஒரு போதகருடைய ஆரோக்கியமான குருத்துவ ஊழியத்தையும், பலமான ஆவிக்குரிய வாழ்க்கையையும் உற்சாகமளிப்பதற்கு, சபை நிர்வாகக் குழுவானது, மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு சேர்ந்து பேசி, ஒரே சபையில் ஒரு போதகர் பல காலம் பணியாற்றி வரும் நிலையில், ஏழு வருடங்களுக்கு ஒரு முறை கட்டாய விடுப்பு வழங்க வேண்டும். போதகர், சபை நிர்வாகக் குழு மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஆலோசனையின் பெயரில் இந்த விடுப்பானது எப்போது இருக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படும். போதகருடைய சம்பளம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் வழிநடத்துவதற்கான வழிகளைச் சபை நிர்வாகக் குழு செய்ய வேண்டும். சபை/ போதகர் மறுஆய்வு செயல்திறனுடைய ஒரு பங்காக இதை மறைமாவட்டக் கண்காணிப்பாளர் கேட்டறிய வேண்டும். இந்தச் செயல்பாடானது முதலில் இரண்டாம் வருடத்திற்குப் பின்பும், அதற்குப் பிறகு ஆறாம் வருடத்திலும் நடக்கும். இது அந்த உறவு தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும் பட்சத்தில் செயல்படுத்தப்படும். சர்வதேச போதகர்கள் வளர்ச்சி குழுமம் இப்படிப்பட்ட கட்டாய விடுப்பைக் குறித்த கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை விளக்கும்

ஆதாரங்கள் உருவாக்கப்பட்டு எல்லோருக்கும் கொடுக்கப்பட வேண்டும். சபை நிர்வாகக் குழு நினைத்தால் இந்தக் கட்டாய விடுப்பு கொள்கையானது குருத்துவ பணியாளர்களுக்கும் செயல்படுத்தப்படலாம்.

**129.11.** ஒரு நற்செய்தி ஊழியர் பெறக்கூடிய பொருளாதார உதவியையும், வீட்டு வாடகைப் படியையும் தீர்மானித்தல். சபை நிர்வாகக் குழு அவரைப் பணிபுரிய அழைக்கும்போது இந்தக் குறைந்தபட்ச ஆதரவைப் பற்றி அவருக்குத் தெரிவித்தல்.

**129.12.** 1) உள்ளூர் இறை ஊழியர் 2) சாமானிய இறை ஊழியர் பதவிகளுக்கு போதகரால் பரிந்துரை செய்யப்பட்டவர்களுக்கு, தமது சொந்த முடிவுப்படி, அனுமதி வழங்குதல் அல்லது அனுமதியைப் புதுப்பித்தல் (503.3–503.5, 531.1–531.3, 813)

**129.13.** இத்தகைய பரிந்துரை செய்தல் *சட்ட நூலின்*படி தேவையெனக் கருதப்பட்டால், உள்ளூர் சபைக்குப் புறம்பேயும் உள்ள அங்கீகரிக்கப்படும் ஊழியங்களுக்கு வாஞ்சையோடு முன்வரும் ஊழிய, சாமானிய பிரதிநிதிகள் அனைவரும் உட்பட, ஊழியத்தின் எந்தவொரு பணிக்காகவும் உரிம பத்திரம் வேண்டுவோரின் பெயரை போதகர் முன்னறிவிக்க, சபை நிர்வாகக் குழுவானது, தமது சொந்த முடிவின்படி, அந்தப் பெயரை மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்குப் பரிந்துரை செய்யலாம்.

**129.14.** அனுமதிப்பெற்ற இறை ஊழியரின் அனுமதிச் சான்றைப் பெற விரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் எந்த ஒரு நபரின் பெயரையும் போதகர் முன்னறிவிக்க, சபை நிர்வாகக் குழு, தமது சொந்த முடிவின்படி, அந்தப் பெயரை மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்குப் பரிந்துரை செய்யலாம். (531.5, 532.1)

**129.15.** 508ஆம் சட்டவிதிக்கு ஏற்றபடி பெண் உதவியாளரின் அனுமதிச் சான்றைப் பெற விரும்பும் நபரின் பெயரை போதகர் முன்னறிவிக்க, சபை நிர்வாகக் குழு, தமது சொந்த முடிவின்படி, அந்தப் பெயரை மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்குப் பரிந்துரை செய்யலாம்.

**129.16.** ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு நியமனம் செய்யப்பட்டவுடன், போதகர் ஒப்புதலோடு, சிறுவர் ஊழிய இயக்குநர் ஒருவரையும், பெரியோர் ஊழிய இயக்குநர் ஒருவரையும் தேர்ந்தெடுத்தல் (145.6).

**129.17.** அகில உலக நசரேய வாலிபக் குழுவின் சட்ட விதிகளுக்கேற்ப, உள்ளூர் சபையின் நசரேய வாலிபர் குழு அமைப்பால் தேர்ந்தெடுக்கப்படும் அகில உலக நசரேய வாலிப குழு உள்ளூர் தலைவருக்கு ஒப்புதல் அளித்தல்.

**129.18.** நசரேய பகல்நேர/நர்சரி/வார நாள் பள்ளிகளின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒப்புதல் அளித்தல். (151, 159.1, 211.13, 516.10)

**129.19.** 33ஆம் சட்டவிதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் சபை அதிகாரிகளின் தகுதிநிலைகளுக்கு ஏற்றபடி சபை உறுப்பினர்களுக்கிடையே இருந்து ஒரு செயலாளரைத் தேர்ந்தேடுத்தல். இப்படிப்பட்ட தேர்தல் புதிய சபை நிர்வாகக் குழு பதிவியேற்று முதல் கூட்டம் நடைபெறும்போது செய்யப்பட்டது. அப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட நபர் அந்தச் சபை ஆண்டு முடிவடையும் வரையிலும், பதில் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பேற்கும் வரையிலும் செயல்படுவார். சபை

உறுப்பினர்கள் ஒழுங்காக அழைத்த கூட்டத்தில் சபை நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே அவருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும். (33, 113.6–113.8, 113.11, 128, 135.1–135.7)

**129.20.** 33ஆம் சட்டவிதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் சபை அதிகாரிகளின் தகுதிநிலைகளுக்கு ஏற்றபடி சபை உறுப்பினர்களுக்கிடையே இருந்து ஒரு பொருளாளரைத் தேர்ந்தேடுத்தல். இப்படிப்பட்ட தேர்தல் புதிய சபை நிர்வாகக் குழு பதிவியேற்று முதல் கூட்டம் நடைபெறும்போது செய்யப்பட்டது. அப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட நபர் அந்தச் சபை ஆண்டு முடிவடையும் வரையிலும், பதில் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பேற்கும் வரையிலும் செயல்படுவார். சபை உறுப்பினர்கள் ஒழுங்காக அழைத்த கூட்டத்தில் சபை நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே அவருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும். போதகருடைய நேரடி குடும்பத்தார் யாரும் உள்ளூர் சபையின் பொருளாளராக, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட நிர்வாக குழுவின் அனுமதியில்லாமல் பணியாற்ற முடியாது. நேரடி குடும்பம் என்பது அவருடைய துணை, பிள்ளைகள், உடன் பிறந்தவர்கள் அல்லது பெற்றோரை உள்ளடக்கியிருக்கிறது. (33, 113.7–113.8, 113.11, 128, 136.1–136.6)

**129.21.** பகல்நேர/நர்சரி/வார நாள் பள்ளி, அகில உலக நசரேய வாலிபர் சங்கம் **NYI**, அகில உலக நசரேய அருட்பணி சங்கம் **NMI**, ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு **SDMI**, ஆகியவை சபையில் பெறப்பட்டு, செலவிடப்படும் பணத்தின் கணக்குவழக்குகள் கவனமாக வைக்கப்படும்படி செய்தலும், இதை வழக்கமான மாதாந்தரக் கூட்டங்களிலும், சபையின் வருடாந்திரக் கூட்டத்திலும் சமர்ப்பித்தல் (136.3–136.5)

**129.22.** சபையால் பெறப்படும் எல்லாப் பணத்தையும் கூட்டி, கணக்கு வைக்க குறைந்தபட்சம் இருவர் அடங்கிய குழுவொன்றை நியமித்தல்.

**129.23.** சபையின் பொருளாளரின் கொடுக்கல் வாங்கல் பதிவுகள், அகில உலக நசரேய வாலிபர் குழு, ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு, நசரேய பகல்நேர/நர்சரி/வாரநாள் பள்ளிகள் இவற்றின் கணக்கு வழக்குகளையும், சபையின் பிற வரவு செலவுக் கணக்குப் பதிவேடுகளையும் ஆண்டுக்கு ஒரு முறையாவது கணக்குப் பரிசோதனை செய்ய கணக்குப் பரிசோதனைக் குழுவையோ அல்லது தனிப்பட்ட பரிசோதனையாளர்களின் குழுவையோ அல்லது தகுதிவாய்ந்த வேறு நபர்களையோ நியமனம் செய்தல்.

**129.24.** குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நற்செய்தி பரப்புதல் மற்றும் சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழு ஒன்றை நிறுவுதல் (110).

**129.25.** சரியென்று கருதப்பட்டால், 75 உறுப்பினர்களுக்கு மிகாத சபைகளில் ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவாகவும் செயல்படுதல் (146).

**129.26.** ஒரு சபை உறுப்பினருக்கு எதிராக எழுத்து மூலமான குற்றச்சாட்டுகள் தீர்த்துவைக்கப்படாமல் இருந்தால் ஐவர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை நியமனம் செய்தல் (605).

**129.27.** ஊதியம் பெறும் உதவியாளர்களுக்காக, போதகர் முன்குறிக்க, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலோடு அவர்களைத் தேர்ந்தெடுத்தல் (151, 159–159.1, 211.13).

**129.28.** மறைமாவட்ட கண்காணிப்பாளரால் வருடந்தோறும் எழுத்து மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டால், ஒரு உள்ளூர் இறை ஊழியரையோ அல்லது உரிமம் பெற்ற போதகரையோ ஊதியம் பெறாத உதவிக் போதகராகத் தேர்ந்தெடுத்தல். (115.6)

**129.29.** பதவிநிமித்தமாக போதகர் தலைவராக விளங்கும் நீண்ட கால திட்டக் குழு ஒன்றைச் சபைக்காக அமைத்தல்.

**129.30.** சபைக்குள் அதிகாரமளிக்கும் பணியிடங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய அதிகாரத்தைத் தங்களுடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்திவிடாமல் இருப்பதற்கும் அல்லது தவறான காரியங்களைச் செய்யாமல் இருப்பதற்கும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துதல். ஒவ்வொரு உள்ளூர் சபையும் தன்னுடைய தனிப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னுடைய திட்டத்தைத் தீட்டிக்கொள்ள வேண்டும்.

**130.** சபை நிர்வாகக் குழுவானது, போதகரோடு சேர்ந்து, உலக சுவிசேஷ நிதி மற்றும் மறைமாவட்ட ஊழியங்களுக்கான நிதியைத் திரட்டுவதற்குப் பொதுக் கண்காணிப்பாளர்களின் குழு பரிந்துரை செய்யும் திட்டங்களைப் பின்பற்ற வேண்டும். இதற்குக் கிடைக்கும் தொகையைத் தொடர்ந்து பொதுப் பொருளாளருக்கும், மறைமாவட்ட பொருளாளரருக்கும் அனுப்பிவைக்க வேண்டும் (317.10, 335.7).

**131. உக்கிராணத்துவத்தின் அர்த்தம்.** 32–32.5இல் காணப்படும் சட்டவிதிகளைப் பார்க்கவும்.

**132.** சபை நிர்வாகக் குழுவானது ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்படும்வரையில் அதனுடைய செயல்களைச் செய்யும். (145)

**132.1.** புதிதாக ஒழுங்குசெய்யப்பட்ட சபையின் சபை நிர்வாகக் குழுவும் போதகரும் ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவின் கண்காணிப்பாளர் எப்போது தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதை முடிவு செய்யலாம். (129.25, 145, 146)

**133.** ஓர் உறுப்பினரின் பெயர் செயல்படாத உறுப்பினராக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகாலம் சென்றபின்னர் சபை நிர்வாகக்குழு சபை உறுப்பினர்களின் பட்டியலிருந்து அவர் பெயரை நீக்கம் செய்யலாம் (109–109.4, 112.3)

**134.** உள்ளூர் சபையின் உரிமப் பத்திரம் பெற்றுள்ள எந்த ஒருவரின் அனுமதியையும் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கவும், இரத்து செய்யவும் சபை நிர்வாகக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

**135. சபைச் செயலாளர். சபை நிர்வாகக் குழுவின் செயலாளரின் கடமைகள்:**

**135.1.** எல்லாச் சபைக் கூட்டங்கள், சபை நிர்வாகக் குழுவின் கூட்டங்கள் இவற்றின் பொழிப்புகளைச் சரியாகப் பதிவு செய்து, உண்மையோடு பாதுகாத்து வைத்தல்; தனது பணிசார்ந்த பிற வேலைகளையும் செய்தல். அந்தப் பொழிப்புகளில் வாக்களிக்கும் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பங்குபெற்றிருக்கிறார்களா அல்லது வராமல் இருக்கிறார்களா என்பதைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். (120.1, 129.19)

**135.2.** சபையின் வருடாந்திரக் கூட்டத்தில், உள்ளூர் சபையின் முக்கிய பணிகளைப் பற்றியும், உறுப்பினர் பற்றிய புள்ளி விவரங்களையும் வருடாந்திர அறிக்கையாக சமர்ப்பித்தல் (113.9).

**135.3.** பத்திரங்கள், காப்பீட்டுப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள், சபை உறுப்பினர் பட்டியல், வரலாற்றுப் பதிவேடுகள், சபை நிர்வாகக் குழுவின் பொழிப்புகள், பதிவு பெற்ற சட்டப் பதிவேடுகள் போன்ற உள்ளூர் சபைக்கான அலுவல் ஏடுகள், பதிவேடுகள், சட்டப்பூர்வமான பத்திரங்கள் உள்ளூர் சபை வளாகத்திலேயே நெருப்பினால் பாதிக்கப்படாத, பாதுகாப்பான இரும்புப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்தல்; முடியுமானால் வங்கிகள், பாதுகாப்பு நிறுவனங்களின் பாதுகாப்புப் பெட்டகங்களில் வைக்குமாறு செய்தல். போதகரும், சபைப் பொருளாளரும், எப்போதுமே தேவைப்பட்டால் இவைகளைஅணுகத்தக்க வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். சபைச் செயலாளருக்குப் பின்னர் அப்பதவியை ஏற்பவர் உடன்தானே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**135.4.** சபையின் எல்லா வருடாந்திரக் கூட்டங்கள், சிறப்புக் கூட்டங்களின் செயலாளராகவும் பணியாற்ற வேண்டும். அந்த வருடாந்திர சிறப்புக் கூட்டங்களையொட்டிய பொழிப்புகள், பதிவுகள் இவற்றைப் பாதுகாப்பவராகவும் இருக்க வேண்டும் (113.6).

**135.5.** போதகரின் அழைப்பு, குருத்துவ உறவை நீட்டித்தல் இவற்றிற்கான வாக்கெடுப்பின் முடிவுகளை மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கு எழுத்துமூலம் சான்று அனுப்புதல்; வாக்கெடுப்பு நடந்து ஒரு வாரத்திற்குள்ளாக இந்தச் சான்று அனுப்பப்பட வேண்டும்.

**135.6.** உள்ளூர் சபைக்குக் போதகர் நியமிக்கப்படாத காலத்தில், எல்லாச் சபைக் கூட்டங்கள், சபை நிர்வாகக் குழுவின் கூட்டங்கள் இவற்றின் பொழிப்புகளின் பிரதிகள் கூட்டம் நடந்து மூன்று நாட்களுக்குள்ளாக மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

**135.7.** போதகரோடு இணைந்து எல்லா நில மாற்றங்கள், அடமானப் பத்திரங்கள், பத்திரங்களை மீட்டல், ஒப்பந்தங்கள், *சட்ட நூலில்* வேறு வழிமுறைகள் கூறப்படாத சட்டரீதியான பத்திரங்கள் இவற்றில் கையொப்பம் இடுதல் (102.3, 103–104.2).

**136. சபைப் பொருளாளர். சபை நிர்வாகக் குழுவின் பொருளாளரின் கடமைகள்.**

**136.1.** வேறு வழிமுறைகள் கூறப்படாத அனைத்துப் பணவரவுகளையும் பெற்று, சபை நிர்வாகக் குழுவின் கட்டளையின் பேரில் அவற்றை விநியோகம் செய்தல் (129.21).

**136.2.** வேறு வகையாகக் கூறப்படாவிட்டால், மறைமாவட்ட நிதியின் மாதாந்திர தவணைகளை மறைமாவட்ட பொருளாளருக்கும், பொது நிதியின் மாதாந்திர தவணைகளைப் பொதுச்சபையின் பொருளாளருக்கும் அனுப்புதல் (516.9).

**136.3.** வரவு செலவுத் திட்டத்திற்கான சரியான பதிவேடுகளை வைத்திருத்தல் (129.21).

**136.4.** சபை நிர்வாகக் குழுவினரிடையே விநியோகிக்கப்படுவதற்காக விவரமான மாதாந்திர நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் (129.21).

**136.5.** சபையின் வருடாந்திரக் கூட்டத்தில் வருடாந்திர நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் (113.7, 129.21).

**136.6.** பொருளாளரின் அலுவலகப் பணிக்காலம் முடிவடையும்போது, பொருளாளர் பதிவேடுகள் அனைத்தையும் சபை நிர்வாகக் குழுவிடம் சமர்பித்தல்.

## L. உள்ளூர் சபையின் உக்கிராணக்காரர்கள்

**137.** சபையின் உக்கிராணக்காரர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கை 3 ஆகவும், அதிகபட்ச எண்ணிக்கை 13 ஆகவும் இருக்க வேண்டும். அடுத்த சபை ஆண்டில் பணியாற்றவும், அவர்களுக்குப் பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பேற்கும் வரையில் பணியாற்றும்படியாகவும், சபையின் உறுப்பினர்களிலிருந்து, சபையின் வருடாந்திர அல்லது சிறப்புக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். (33, 113.7, 113.11, 127)

**138. உக்கிராணக்காரர்களின் கடமைகள்:**

**138.1.** போதகர் தன் பதவி நிமித்தமாக தலைவராக விளங்க, வேறு வகையில் கூறப்படாதவரை சபை வளர்ச்சிக் குழுவாகப் பணி செய்தல்; நற்செய்திப் பணி, சபை விஸ்தாரப் பணி போன்ற பொறுப்புக்களை ஏற்றல்; புதுசபைகள், அருட்பணிகள், இவற்றை நிறுவ உதவுதல்.

**138.2.** தேவைப்படுவோருக்கும், துயரப்படுவோருக்கும் உதவியும், ஆதரவும் அளித்தல். செயல்முறை சேவை ஊழியங்களில் ஈடுபடுவதே குருத்துவம் சாராத தலைவர்களின் பணியென்று வேதாகமம் கூறுகிறது (ரோமர் 12:6–8). எனவே உக்கிராணிகள் தங்கள் நேரத்தையும், ஆவிக்குரிய ஈவுகளையும் சேவை, பராமரிப்பு, ஊக்கமளித்தல், கருணை காட்டுதல், விசாரித்தல் மற்றும் பிற ஊழியங்களில் செலவழிக்க வேண்டும்.

**138.3.** சட்ட விதிகள் 110–110.8 இல் விளக்கப்பட்டப்படி, சபை நிர்வாகக் குழுவின் சுய முடிவுப்படி, நற்செய்தி பகருதல் மற்றும் சபை உறுப்பினர் மேற்பார்வைக் குழுவாகவும் பணியாற்ற வேண்டும்.

**138.4.** கிறிஸ்தவ ஊழியம் செய்யும் வாய்ப்புகளை எல்லா உறுப்பினர்களும் பெறும்படி சபையை அமைப்பதில் போதகருக்கு உதவி செய்தல். சுற்றிலும் அருகிலுமுள்ள சமுதாயத்தினரின் கலாச்சார, சமூக பொருளாதார பின்னணிகளுக்கேற்ப ஊழியங்களை விருத்திசெய்ய சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

**138.5.** சமுதாய கிறிஸ்தவ செயல் குழுக்கள், ஊழிய அமைப்புகள் இவற்றோடு செயல் தெடர்பு கொள்ளுதல்.

**138.6.** உள்ளூர் சபையில் பொது வழிபாட்டிலும், கிறிஸ்தவ உணர்வுகளைப் போற்றி வளர்ப்பதிலும் உதவி செய்தல்.

**138.7.** திருவிருந்துக்கான பொருள்களைப் பெற்று அளித்தல்; போதகரின் வேண்டுகோளின்படி அவற்றை விநியோகம் செய்வதில் அவருக்கு உதவுதல். (29.5, 515.4)

**139.** உக்கிராணத்துவ பதவியில் ஏதேனும் காலியிடம் ஏற்பட்டால், ஒழுங்காகக் கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில் பதில் நபர் தேர்ந்தெடுக்கப்படலாம் (113.8).

**140.** உக்கிராணக்காரர்கள் உக்கிராணத்துவ குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். போதகரின் ஒத்துழைப்பு மற்றும் உக்கிராணத்துவ ஊழியங்களின் அலுவலகத்தின் ஒத்துழைப்போடு உள்ளூர் சபையில் கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தை வாழ்க்கையின் ஆதாரங்களில் செயல்படுத்தும்படி ஊக்குவிப்பதே அவர்களுடைய பணியாகும். (32–32.5)

## M. உள்ளூர் சபையின் காப்பாளர்கள்

**141.** ஒரு சபையின் காப்பாளர்களின் எண்ணிக்கை மூன்றுக்குக் குறையாமலும், ஒன்பதுக்கு அதிகமாகாமலும் இருக்க வேண்டும். அடுத்த சபை ஆண்டில் பணியாற்றவும், பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும்வரை பதிவியிலிருக்கவும், உள்ளூர் சபையின் உறுப்பினர்களிலிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் (33, 113.11, 127).

**142.** தேசச் சட்டப்படி சபைக் காப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நியமிக்கப்பட்டிருந்தால், அந்த முறை கண்டிப்பாகக் கையாளப்பட வேண்டும் (113.4).

**142.1.** தேசச் சட்டப்படி விதிமுறை ஏதேனும் கொடுக்கப்படாவிட்டால், காப்பாளர்கள் உள்ளூர் சபையின் வருடாந்திரக் கூட்டத்திலோ அல்லது இதற்காகச் சிறப்பாகக் கூட்டப்படும் கூட்டத்திலோ இரகசிய வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் (113.6, 133.9).

**143. காப்பாளர்களின் பணிகள் பின்வருமாறு:**

**143.1.** விதி எண் 102–104.4இல் கூறப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு ஏற்றவகையில், உள்ளூர் சபை பதிவு செய்யப்படாத இடங்களிலும் அல்லது தேசிய சட்டம் அவ்வாறு நிர்பந்திக்குமானாலும் அல்லது வேறு காரணங்களுக்காக மறைமாவட்டக் கண்காணிப்பாளராலும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலும் அதுவே சரியெனக் கருதப்பட்டாலும், உள்ளூர் சபையின் காப்பாளர்களாக சபைச் சொத்தின் பத்திரப் பொறுப்பை ஏற்பதும், இதை நிர்வகிப்பதும் இவர்கள் கடமையாகும்.

**143.2.** சபை நிர்வாகக் குழு வேறு வகையில் முடிவு செய்யாவிட்டால், வசதிகளை அதிகரிப்பதிலும், பொருளாதாரத் திட்டமிடுதல்களிலும் ஆலோசனை அளித்தல்.

**144.** காப்பாளர்கள் பதவியில் ஏதேனும் காலியிடம் ஏற்பட்டால், ஒழுங்காகக் கூட்டப்பட்ட சபைக் கூட்டத்தில் உள்ளூர் சபையால் புதிய நபர் தேர்ந்தெடுக்கப்படலாம் (113.13).

## N. உள்ளூர் சபையின் ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு

**145.** ஒவ்வொரு உள்ளூர் சபையும், தங்கள் வருடாந்திரச் சபைக் கூட்டத்தில், சபையின் கிறிஸ்தவ கல்வி ஊழியத்திற்குப் பொறுப்பாக இருக்கும்படி **ஒரு ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவையோ** (SDMI) அல்லது **கல்விக் குழுவையோ** தேர்ந்தெடுக்க வேண்டும். 75 உறுப்பினர்களுக்குக் குறைவாக இருக்கும் சபையில் சபை நிர்வாகக் குழுவே இந்தப் பொறுப்புக்களைக் கவனிக்கலாம். இதன் உறுப்பினர்கள்: பணியின் நிமித்தமாக ஓய்வுநாள் பள்ளி மேலாளர், போதகர், அகில உலக நசரேய அருட்பணி சங்கத் தலைவர், அகில உலக நசரேய வாலிபக் குழுவின் தலைவர், சிறுவர் ஊழிய இயக்குநர், பெரியோர் ஊழிய இயக்குநர், வருடாந்திரச் சபைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் 3 முதல் 9 நபர்கள் சபையின் ஆண்டு கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எல்லா உறுப்பினர்களும் இரண்டு ஆண்டுகள் முடியும் வரையிலும், பதில் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவியேற்கும் வரையிலும் பணிபுரிய வேண்டும். ஏதேனும் காலியிடம் ஏற்பட்டால், ஒழுங்காகக் கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தின் மூலம் அது நிறைவுசெய்யப்படலாம். சபையானது சபை நிர்வாகக் குழுவின் ஒரு பகுதியாக கல்விக் குழுவினரைத் தேர்ந்தெடுத்தால், உக்கிராணிகள், காப்பாளர்கள் இவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையான *சட்டநூலின்* விதிகளைப் பின்பற்ற வேண்டும்; பதவியின் காரணமாக சிலர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்; அவர்களில் சிலர் சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களாக இல்லாமல் கூட இருக்கலாம்.

முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலின் அனுபவத்தை அறிக்கையிடும், நம்மைப் பரிசுத்தமான வாழ்க்கைக்கு அழைக்கும் தேவனுடைய கிருபைக்குப் பொதுவான சாட்சிபகரும் வகையில் வாழுபவர்களும், நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகள், ஆளுகைமுறை, செயல்பாடுகளை ஒப்புக்கொள்ளுகிறவர்களுமாகிய உள்ளூர் சபை உறுப்பினர்களையே உள்ளூர் சபை, சபை அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நாம் உள்ளூர் சபைக்கு வழிகாட்டுகிறோம்; இவர்கள் உண்மையோடு வருகைதருதல், துடிப்போடு ஊழியம் செய்தல், தசமபாகம் மற்றும் காணிக்கையளித்தலின் மூலமாக உள்ளூர் சபைக்கு ஆதரவளிக்க வேண்டும். சபை அலுவலர்கள் "உலகம் முழுவதும் கிறிஸ்துவைப்போன்ற சீஷராக்குவதில்" முழுமையான ஈடுபாடு கொள்ள வேண்டும். (33, 137, 141, 146)

## ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு அல்லது கல்விக் குழுவின் கடமைகளும் அதிகாரங்களும்:

**145.1.** உள்ளூர் சபையில் கிறிஸ்தவ போதனை ஊழியங்களைத் திட்டமிடுதல், ஒழுங்குபடுத்துதல், வளர்ச்சியடையச் செய்தல், நடத்துதல் இவை இக்குழுவின் வேலைகளாகும். பொது நிர்வாகக் குழுவினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சபைக்கடுத்த நோக்கங்கள், தரம் இவற்றிற்கு ஏற்ற வகையிலும், ஓய்வுநாள் பள்ளி ஊழிய இலாகா, மற்றும் பெரியோர், நசரேய வாலிபர் சங்கம், சிறுவர் ஊழியங்களின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும் போதனைகளுக்கு ஒத்த வகையிலும், போதகரின் நேரடியான கவனத்தின் கீழும், ஓய்வுநாள் பள்ளி மேலாளரின் தலைமையிலும், உள்ளூர் சபை நிர்வாகக் குழுவின் மேற்பார்வையிலும் இந்த ஊழியம் நடத்தப்பட வேண்டும். பாடத்திட்டம் தழுவிய மற்றும் திட்டமிடப்பட்ட ஊழியங்களும் இதில் அடங்கும். ஓய்வுநாள் பள்ளியும், பிரசங்க ஊழியமும் சபையானது வேதாகமத்தையும், கோட்பாடுகளையும் கற்பதற்கு மையமாக அமைகின்றன. விடுமுறை வேதாகமப் பள்ளிகள், மணமாகாதோர் ஊழியங்கள், வாலிபர் வேதவினா நேரங்கள் போன்ற வாரநாள் மற்றும் வருடாந்திர/சிறப்பு ஊழியங்களும், பயிற்சிகளும் வேதாகம சத்தியங்களை வாழ்ந்து காட்டுவதற்கும், சபையினரின் வாழ்க்கையில் இவற்றை ஒருங்கிணைப்பதற்கும் வாய்ப்புகளை நல்குகின்றன. (516.15)

**145.2.** கிறிஸ்தவரல்லாத மக்களை கிறிஸ்துவுக்காகவும், சபைக்காகவும் சந்தித்தல், அவர்களுக்குக் கடவுளின் வார்த்தைகளை பயன்தரும் வகையில் போதித்து அவர்களை ஐக்கியத்திற்குள் அழைத்து வருதல், அவர்கள் மீட்புக்காக ஆவன செய்தல்; கிறிஸ்தவ விசுவாசக் கோட்பாடுகளைப் போதித்து கிறிஸ்துவைப் போன்ற குணநலன், மனப்போங்கு, பழக்க வழக்கங்கள் இவற்றைப் பெறும்படி செய்தல்; நல்ல கிறிஸ்தவ இல்லங்களை நிலைநிறுத்த உதவுதல்; சபையின் உறுப்பினர்களாகும்படி விசுவாசிகளைத் தயார் செய்தல், அவர்களுக்கேற்ற கிறிஸ்தவ ஊழியத்தில் அவர்கள் தேர்ச்சி பெற வழிகாட்டுதல்.

**145.3.** வேத ஆய்வுக்கும், கோட்பாடுகளைப் பகுத்தறிவதற்கும் எப்போதுமே நசரேயத் திருச்சபையின் உபகரணங்களைப் பயன்படுத்தி, பல்வேறு ஊழியங்களுக்கும் பாடத் திட்டங்களைத் தீர்மானம் செய்தல்.

**145.4.** ஓய்வுநாள் பள்ளி துணைவிதிகளுக்கேற்ப (812) உள்ளூர் சபையின் முழுமையான ஓய்வுநாள் பள்ளி ஊழியங்களைத் திட்டமிட்டு, ஒழுங்குப்படுத்துதல்.

**145.5.** வருடாந்திர சபைக் கூட்டத்தில், போதகரால் ஒப்புதல்பெற்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை, ஓய்வுநாள் பள்ளி மேலாளர் பதவிக்கான வேட்பாளர்களாக நியமித்தல். பொறுப்பாளியான மேலாளர் இல்லாத ஒரு கூட்டத்தில் இந்த நியமனம் நடைபெற வேண்டும்.

**145.6.** போதகரால் ஒப்புதல்பெற்ற நபர்களை, சிறுவர் ஊழியர் இயக்குநர் பதவிக்காகவும், பெரியோர் ஊழிய இயக்குநர் பதவிக்காகவும், சபை நிர்வாகக் குழுவிற்குப் பெயர்குறித்தல்.

**145.7.** போதகர் மற்றும் ஓய்வுநாள் பள்ளி மேலாளரின் ஒப்புதலோடு, சிறுவர் மற்றும் பெரியோர் ஊழியங்களின் இயக்குநர்களால் பெயர் குறிக்கப்பட்ட நபர்களிலிருந்து சிறுவர் மற்றும் பெரியோர் அவைகளைத் தேர்ந்தெடுத்தல். நியமிக்கப்பட்ட நசரேய அகில உலக வாலிபக் குழு அவை உறுப்பினர்கள், ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவின் சம்மதத்திற்குட்பட்டவர்கள்.

**145.8.** அகில உலக நசரேய வாலிபர் குழுத்தலைவர், சிறுவர் மற்றும் பெரியோர் ஊழிய இயக்குநர்கள் இவர்களால் பெயர் குறிக்கப்பட்டவர்களிலிருந்து, ஒவ்வொரு வயதுக் குழுவினருக்குமான ஓய்வுநாள் பள்ளி மேற்பார்வையாளர்களைத் தேர்ந்தெடுத்தல். இவர்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகவும், தம் வாழ்க்கையில் முன்மாதிரிகளாகவும் விளங்க வேண்டும். நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்றவகையில் வாழ்பவர்களாக இருக்க வேண்டும். இந்த நியமனங்கள் போதகர் மற்றும் ஓய்வுநாள் பள்ளி மேலாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

**145.9.** தொடர்ந்த சாமானியப் பயிற்சிக்காக உள்ளூர் இயக்குநர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல். இவர் ஓய்வுநாள் பள்ளி ஊழியர்களுக்கும், சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒழுங்கான பயிற்சி வாய்ப்புகளைத் திட்டமிட்டு, வளரச் செய்து, மேற்பார்வையிடுவார். ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு, தன் பதவியினிமித்தமாக இந்தக் குழுவில் உறுப்பினராகும்படி தொடர்ந்த சாமானியப் பயிற்சியின் இயக்குநராக ஒரு நபரின் பெயரைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றுள்ளது.

**145.10.** வழக்கமான கூட்டங்களை நடத்துதல்; இவற்றை நடத்த ஒரு செயலாளரையும், தேவைப்படும் பிற அலுவலர்களையும் தேர்ந்தெடுத்தல்; சபை ஆண்டுக்கு ஒத்த ஓய்வுநாள் பள்ளி ஊழிய ஆண்டின் துவக்கத்தில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். போதகரோ அல்லது ஓய்வுநாள் பள்ளி மேலாளரோ சிறப்புக் கூட்டங்களுக்காக அழைப்பு விடுக்கலாம். (114)

**146. அகில உலக ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய கண்காணிப்பாளர்.** வருடாந்திர சபைக் கூட்டத்தில், அதன் முழு உறுப்பினர்களிடையேயிருந்து, ஓராண்டு காலம் அல்லது பதில்வருபவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை பணிபுரியும்படி ஓய்வுநாள் பள்ளி மேலாளர், இரகசிய வாக்கெடுப்பில் பெரும்பான்மையின்மூலம் தேர்ந்தெடுக்கப்படலாம். ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு, போதகரின் ஒப்புதலுடன், பொறுப்பிலிருக்கும் ஓய்வுநாள் பள்ளி மேலாளரே தேர்ந்தெடுக்கப்பட 'சரி' 'இல்லை' என்று வாக்களிக்கும் முறையைப் பின்பற்றலாம். காலியிடம் ஏற்படும்போது, ஒழுங்காகக் கூட்டப்பட்ட சபைக் கூட்டத்தில் உள்ளூர் சபையால் நிரப்பப்படலாம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஓய்வுநாள் பள்ளி மேலாளர், தன் பதவியின் நிமித்தமாக மறைமாவட்ட மாநாடு (201), உள்ளூர் சபை நிர்வாகக் குழு, ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு இவற்றில் உறுப்பினராக இருப்பார்.

முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலின் அனுபவத்தை அறிக்கையிடும், நம்மைப் பரிசுத்தமான வாழ்க்கைக்கு அழைக்கும் தேவனுடைய கிருபைக்குப் பொதுவான சாட்சிபகரும் வகையில் வாழுபவர்களும், நசரேயத் திருச்சபையின்

கோட்பாடுகள், ஆளுகைமுறை, செயல்பாடுகளை ஒப்புக்கொள்ளுகிறவர்களுமாகிய உள்ளூர் சபை உறுப்பினர்களையே உள்ளூர் சபை சபை அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நாம் உள்ளூர் சபைக்கு வழிகாட்டுகிறோம்; இவர்கள் உண்மையோடு வருகைதருதல், துடிப்போடு ஊழியம் செய்தல், தசமபாகம் மற்றும் காணிக்கையளித்தலின் மூலமாக உள்ளூர் சபைக்கு ஆதரவளிக்க வேண்டும். சபை அலுவலர்கள் "உலகம் முழுவதும் கிறிஸ்துவைப்போன்ற சீஷராக்குவதில்" முழுமையான ஈடுபாடு கொள்ள வேண்டும். (33, 113.11, 127, 145, 145.5, 201)

## ஒய்வுநாள் பள்ளி மேலாளரின் கடமைகளும், அதிகாரங்களும் பின்வருமாறு:

**146.1.** உள்ளூர் சபையின் எல்லா ஓய்வுநாள் பள்ளி ஊழியங்களையும் மேற்பார்வை செய்தல்.

**146.2.** ஒய்வுநாள் பள்ளி துணைவிதிகளுக்கேற்ப ஒய்வுநாள் பள்ளியை நடத்துதல். (812)

**146.3.** பதிவு செய்தல், ஆஜராகுதல், தலைவர் பயிற்சி இவற்றில் வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டி மேம்பாடு செய்தல்.

**146.4.** ஒய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு அல்லது உள்ளூர் சபை நிர்வாகக் குழுவின் கல்விக் குழுவின் ஒழுங்கான கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல். தனது கடமைகளைச் செய்வதில் ஒய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவை வழிநடத்துதல்.

**146.5.** ஒய்வுநாள் பள்ளி ஊழியங்களுக்காக ஒரு வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தை சபை நிர்வாகக் குழுவுக்குச் சமர்ப்பித்தல்.

**146.6.** சபை நிர்வாகக் குழுவுக்கு மாதந்தோறும் அறிக்கை சமர்ப்பித்தல் வருடாந்திர சபைக் கூட்டத்தில் எழுதப்பட்ட அறிக்கை சமர்ப்பித்தல்.

**147. சிறுவர் ஊழிய இயக்குநர்/ பெரியவர் ஊழிய இயக்குனர்.** வயதுவாரியான குழுக்களின்மூலம் ஒய்வுநாள் பள்ளி ஊழியங்கள் சிறப்பாக வடிவமைக்கப்படும் சிறுவர், வாலிபர், பெரியோர். ஒவ்வொரு வயதுவாரியான குழுவுக்கும் பணியினை ஒழுங்குபடுத்தும் மற்றும் செயல்படுத்தும் பொறுப்புக்களையுடைய ஆலோசனைச் சங்கம் ஒன்றிருப்பது அவசியம். இந்த ஆலோசனைச் சங்கத்தில் வயதுவாரியான குழு இயக்குநர்/அகில உலக நசரேய வாலிபக் குழுத் தலைவர் மற்றும் ஒய்வுநாள் பள்ளி, பிற ஊழியங்களிலிருந்து சபை இந்த வயதுக் குழுவினருக்காக ஒதுக்கும் பிரதிநிதிகள் இவர்கள் இடம்பெறுவர். அந்த வயதுவாரியான குழு இயக்குநர்/ அகில உலக நசரேய வாலிபக் குழுத் தலைவரோடு இணைந்து, அந்தக் குறிப்பிட்ட வயதுவாரியக் குழுவினருக்கான ஊழியங்களைத் திட்டமிடுவதும், அந்தத் திட்டங்களைச் செயல்முறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை அளிப்பதும் இந்த ஆலோசனைச் சங்கத்தாரின் பணியாகும். ஒரு குறிப்பிட்ட வயதுவாரியக் குழுவின் ஆலோசனை சங்கத்தாரின் எல்லா பணிகளும் அக்குழுவின் இயக்குநர் மற்றும் ஒய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டவை.

### வயதுவாரியக் குழு இயக்குநர்களின் கடமைகள்:

**147.1.** தாங்கள் நிர்வகிக்கும் வயதுவாரியக் குழுவின் ஆலோசனைச் சங்கத்துக்குத் தலைவராக இருந்து, திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும் ஆலோசனைச் சங்கத்தினரை வழிநடத்துதல்; அந்தக் குறிப்பிட்ட குழுவிலுள்ளவர்களை மொத்த ஓய்வுநாள் பள்ளி ஊழியத்தோடு ஒருங்கிணைத்தல்.

**147.2.** ஓய்வுநாள் பள்ளியின் அந்தக் குறிப்பிட்ட பிரிவினருக்கேற்றபடி, உள்ளூர் சபையில் சிறுவர், வாலிபர், பெரியோர் இவர்களின் சேர்க்கை மற்றும் வருகையை அதிகரிக்கச் செய்ய, ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவினரின் துணையோடு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துதல்.

**147.3.** கூடுதலான ஓய்வுநாள், வாரநாள், வருடாந்தர, சிறப்பு ஊழியங்களுக்கும், தாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் வயதுவாரியக் குழுவினருக்கான நற்செய்தி பகருதல் மற்றும் ஐக்கியச் செயல்பாடுகள் இவற்றிற்கும் தலைமை தாங்கி வழிநடத்துதல்.

**147.4.** ஓய்வுநாள் பள்ளி மேற்பார்வையாளர்கள், ஆசிரிய/ஆசிரியைகள், அலுவலர்கள் இவர்கள் உட்பட, தமது வயதுவாரியக் குழுவுக்காக ஒதுக்கப்பட்ட பல்வேறு ஊழியங்களுக்கான தலைமைத் தகுதிக்கு ஏற்ற நபர்களை ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவிற்கு நியமனம் செய்தல். நியமனதாரர்கள் போதகராலும், ஓய்வுநாள் பள்ளி மேலாளராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். (33)

**147.5.** துணைப் பாடத் திட்டத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவினரின் அனுமதியைப் பெற வேண்டும்.

**147.6.** ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவினர், தொடர்ந்த சாமானிய பயிற்சியின் இயக்குநர் இவர்களின் ஒத்துழைப்புடன், வயதுவாரியக் குழு பணியாளர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.

**147.7.** ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு மற்றும்/அல்லது சபை நிர்வாகக் குழுவுக்கு வருடாந்தர வரவு செலவுத் திட்ட விண்ணப்பம் அளித்தல்; அவ்வாறு அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திற்கு ஏற்றபடி நிதியை நிர்வகித்தல்.

**147.8.** தனது மேற்பார்வையின் கீழுள்ள உள்ளூர் சபையின் வயதுவாரிக் குழுப் பிரிவில் நடக்கும் பல்வேறு ஊழியங்களின் அனைத்து அறிக்கைகளையும் சேகரித்தல். ஓய்வுநாள் பள்ளி சேர்க்கை, வருகை, ஊழியச் செயல்பாடுகள் பற்றிய மாதாந்தர அறிக்கையை ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவின் மேலாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

**147.9.** உள்ளூர் சபையின் முழு ஓய்வுநாள் பள்ளி ஊழியத்தோடு ஒன்றிணைக்கப்படும் வகையில் தமது வயதுவாரியக் குழுவினரின் செயல்பாடுகளைப்பற்றிய காலாண்டு நாள்குறிப்பை ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

**148. சிறுவர் ஊழிய ஆலோசனைச் சங்கம்.** உள்ளூர் சபையில் பிறப்பு முதல் 12 வயது வரையுள்ள சிறுவர்/சிறுமியருக்கான முழு ஓய்வுநாள் பள்ளி ஊழியத்தையும்

திட்டமிடுவது சிறுவர் ஊழிய ஆலோசனைச் சங்கத்தின் பொறுப்பாகும். குறைந்தபட்சமாக ஓர் ஓய்வுநாள் பள்ளி பிரதிநிதி, உள்ளூர் சபையில் சிறுவருக்கான பிற ஊழியங்களான சிறுவர் ஆராதனை, விடுமுறை வேதாகமப் பள்ளி, வேதாகமப் புதிர் சங்கம், அருட்பணிக் கல்வி, தொட்டில் சிறாரின் பெற்றோர் சங்கம் போன்ற ஊழியங்களில் இயக்குநர்கள், இன்னும் தேவையெனக் கருதப்படும் பிறர் இவர்கள் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள். தேவைகள் பகுத்தறியப்பட்டு தலைமைப் பதவியோடுள்ள உள்ளூர் சபையின் சிறுவருக்கான ஊழியங்களின் எண்ணிக்கைக்கேற்ப, சங்கத்தின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மாறுபடலாம்.

### சிறுவர் ஊழிய இயக்குநரின் கடமைகள்:

**148.1.** விதி எண்கள் 147.1–147.9இல் எல்லா வயதுவாரியக் குழுக்களின் இயக்குநர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்தல்.

**149.2.** உள்ளூர் சபையின் அகில உலக நசரேய அருட்பணி சங்கத்தின் நிர்வாகக் குழுவோடு சேர்ந்து சிறுவர் அருட்பணிக் கல்வி இயக்குநரை நியமித்தல். இவ்வாறு நியமிக்கப்பட்ட நபர் அகில உலக நசரேய அருட்பணி சங்கம் மற்றும் சிறுவர் ஊழிய ஆலோசனை சங்கம் இவைகளின் உறுப்பினருமாக இருப்பார். இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் போதகர் மற்றும் ஓய்வுநாள் பள்ளி மேலாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

**149. பெரியோர் ஊழிய ஆலோசனை சபை.** உள்ளூர் சபையிலுள்ள பெரியோர்களுக்கான முழுமையான ஓய்வுநாள் பள்ளி ஊழியத்தைத் திட்டமிடுவது பெரியோர் ஊழிய ஆலோசனை சபையின் பொறுப்பாகும். பெரியோர் ஊழிய ஆலோசனைச் சபையின் உறுப்பினர்கள்: குறைந்தபட்சம் ஓய்வுநாள் பள்ளியின் ஒரு பிரதிநிதி, உள்ளூர் சபையில் செய்யப்படும் பிற ஊழியங்களான, திருமணமும் குடும்ப வாழ்வும், வயது முதிர்ந்தோர் ஊழியங்கள், மணமாகாதோர் ஊழியங்கள், வேத ஆய்வு சிறு குழுக்கள், சாமானிய ஊழியங்கள், மகளிர் ஊழியங்கள், ஆண்கள் ஊழியங்கள் இவற்றின் இயக்குநர்கள் மற்றும் தேவையெனக் கருதப்படும் பதவியோடிருக்கும் உள்ளூர் சபையின் பெரியோர்களுக்கான ஊழியங்களின் எண்ணிக்கைக்கேற்ப சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறுபடலாம்.

### பெரியோர் ஊழிய இயக்குநரின் கடமைகள்:

**149.1.** சட்ட விதி எண்கள் 147.1–147.9இல் எல்லா வயதுவாரியான குழுக்களின் இயக்குநர்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்தல்.

## O. உள்ளூர் சபையின் அகில உலக நசரேய வாலிபக் குழு

**150.** நசரேய வாலிப ஊழியமானது உள்ளூர் சபையில் அகில உலக நசரேய வாலிபக் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகிறது. உள்ளூர் குழுக்கள்

உள்ளூர் சபை நிர்வாகக் குழு மற்றும் உள்ளூர் நசரேய வாலிபக் குழுவின் அதிகாரத்தின் கீழ் வருவார்கள்.

**150.1.** உள்ளூர் அகில உலக நசரேய வாலிப குழுவானது அகில உலக நசரேய வாலிப ஊழியத்தின் திட்டத்தின்படி தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக்கொள்ளும் (810.100–810.118). இந்த விதிகள் உள்ளூர் வாலிப ஊழியங்களின் தேவைக்கு ஏற்றவாறு மாறுதல்களோடு பயன்படுத்தப்படலாம் (பார்க்க 810.103). ஆனால் இவை அகில உலக நசரேய வாலிபக் குழுவின் பிரிவு மற்றும் *நசரேயத் திருச்சபையின் சட்டநூலின்* விதிகளுக்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும்.

## P. உள்ளூர் சபை நசரேய கிறிஸ்தவ பகல்நேரப் பள்ளிகள் (பிறப்பிலிருந்து இரண்டாம் நிலை வரை)

**151.** நசரேய பகல் பராமரிப்பு/நர்சரி/ஆரம்ப, நடுத்தர அல்லது உயர்நிலைப் பள்ளிகள், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று உள்ளூர் சபை நிர்வாகக் குழுவால் அமைக்கப்படலாம். அவை சிறுபிள்ளைகள் ஊழியம் மற்றும் ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தகுதிநிலைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட வேண்டும். இயக்குநரும், பள்ளி நிர்வாகக் குழுவும் இதற்குப் பொறுப்புள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் உள்ளூர் சபைக்குழுவிற்கு ஆண்டுதோறும் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள். (129.18, 211.13–211.14, 225.14, 516.15, 517)

**151.1.** பள்ளிகள் மூடப்படுதல். ஒரு உள்ளூர் பள்ளியானது தன்னுடைய சேவைகளை நிறுத்திக்கொள்ளவேண்டிய சூழ்நிலையைச் சந்தித்தால், அது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிடம் ஒரு நிதி அறிக்கையைச் சமர்ப்பித்து அவர்களோடு கலந்தாலோசித்தப்பிறகே செயல்பட வேண்டும்.

## Q. உள்ளூர் சபை அகில உலக நசரேய அருட்பணி சங்கம்

**152.** சபை நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, நசரேய அருட்பணி சங்கத்தின் சட்டஒழுங்கிற்கு உட்பட்ட, உலகளாவிய நசரேய அருட்பணி கூட்டமைப்பு மற்றும் உலகளாவிய அருட்பணி குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வயதுவரம்பைக் கொண்டவர்கள் இந்த உள்ளூர் சபை அகில உலக நசரேய அருட்பணி சங்கத்தில் பங்குபெறலாம் (811).

**152.1.** உள்ளூர் அகில உலக நசரேய அருட்பணி சங்கம் உள்ளூர் சபையின் அமைப்பு விதிக்குட்பட்ட ஓர் அங்கமாகும். போதகர் மற்றும் சபை நிர்வாகக் குழுவினரின் மேற்பார்வைக்கும், நிர்வாகத்திற்கும் இந்தச் சங்கம் கட்டுப்பட்டதாகும் (424).

**152.2.** அகில உலக நசரேய அருட்பணி சங்கத்தின் மூன்று முதல் ஏழு செயல் உறுப்பினர்களைக் கொண்டு, போதகரால் நியமிக்கப்பட்டு, அவரால் தலைமை தாங்கப்படும் ஒரு நியமனக் குழுவினால் உள்ளூர் சங்கத்தலைவரின் பெயர் நியமனம் செய்யப்படும். இந்தக் குழுத் தலைவர் பதவிக்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் பெயர்களை நியமனம் செய்யலாம். கூடியிருக்கும் செயல் உறுப்பினர்களிடையே இரகசிய வாக்கெடுப்பின் மூலம், பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்; ஆனால் இந்தத் தேர்தல் சபை நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டும். இந்தச் சங்கம் பணிசெய்யும் உள்ளூர் சபையின் ஓர் உறுப்பினராக தலைவர் இருக்க வேண்டும். இவர் பதவியின் நிமித்தமாக சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருப்பார் (தலைவர் போதகரின் மனைவியாக இருக்குமிடங்களில், துணைத் தலைவர் சபை நிர்வாகக் குழுவில் இடம் பெறுவார்). தங்கள் பதவி ஆண்டுக்கு முந்தைய மறைமாவட்ட மாநாட்டிலும் உறுப்பினராக இருப்பார். உள்ளூர் சபையின் வருடாந்திரக் கூட்டத்தில் தலைவர் அறிக்கையைச் சமர்ப்பிப்பார் (113.9, 114, 123, 127, 201)

**153.** உள்ளூர் அகில உலக நசரேய அருட்பணி சங்கம் நசரேயத் திருச்சபையின் பொதுவாகக் காரியங்களில் திரட்டும் எல்லா நிதிகளும் உலக சுவிசேஷ நிதிக்கு வழங்கப்படும். பத்து சதவீதம் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விசேஷ அருட்பணிகள் இதில் சேர்க்கப்படமாட்டாது.

**153.1.** உலக சுவிசேஷ நிதிக்கு வழங்குவதே முக்கியமான நோக்கமாக இருந்து நிறைவேற்றப்பட்டப் பிறகு, உள்ளூர் சபைகள் பிற உலகளாவிய அருட்பணிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அருட்பணி விசேஷங்களின் மூலமாக ஆதரவளிக்கலாம்.

**154.** பொதுவான காரணங்களுக்காக தேவைப்படும் நிதியைப் பின்வரும் வழிகளில் திரட்டலாம்:

**154.1.** உலக சுவிசேஷ நிதி மற்றும் பொதுவான காரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிக்கைகள் மற்றும் பரிசுகளைக் கொண்டு.

**154.2.** விசேஷமான காணிக்கைகளாகக் கொடுக்கப்படும் ஈஸ்டர் மற்றும் நன்றி காணிக்கைகள் போன்றவற்றைக் கொண்டு.

**154.3.** மேலே கூறப்பட்டுள்ள நிதியின் ஒரு பங்கும் உள்ளூர் அல்லது மறைமாவட்டத் தேவைக்காகவோ அல்லது வேறு தான தர்மங்களுக்காகவோ பயன்படுத்தக்கூடாது.

## R. நிதியுதவி விண்ணப்பங்களுக்குத் தடை

**155.** ஒரு உள்ளூர் சபை, அதனுடைய அலுவலர்கள் அல்லது உறுப்பினர்கள் மற்ற உள்ளூர் சபைகளுக்கும், அதனுடைய அலுவலர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் தங்களுடைய சபையின் தேவைகளுக்காகவோ அல்லது அவர்கள் ஆதரிக்கும் ஏதாவது ஒரு காரியத்திற்காகவோ நிதி உதவி கேட்பது சட்டத்திற்குப் புறம்பானதாகக் கருதப்படுகிறது. ஆனால் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்து மூலமான ஒப்புதலைப் பெற்றபின் இத்தகைய

வேண்டுகோளை விடுப்பவர் அதே மறைமாவட்ட எல்லைக்குள் உள்ள உள்ளூர் சபைகளுக்கும், சபை உறுப்பினர்களுக்கும் விண்ணப்பம் அனுப்பலாம்.

**156.** பொது நிர்வாகச் சபையாலோ அல்லது அதன் ஏதேனும் ஓர் இலாக்காவினாலோ அதிகாரம் அளிக்கப்பெறாத எந்த ஒரு நசரேயத் திருச்சபை உறுப்பினரும் உள்ளூர் சபையின் ஆராதனைக்கு வருபவர்களிடமிருந்தோ அல்லது அந்தச் சபையின் உறுப்பினர்களிடமிருந்தோ உலக அருட்பணி நிதிக்கு அப்பாற்பட்டு அருட்பணி மற்றும் சொந்தச் செயல்களுக்காக நிதி திரட்டக் கூடாது.

## S. உள்ளூர் சபையின் பெயரைப் பயன்படுத்துதல்

**157.** நசரேயத் திருச்சபையின் பொது நிர்வாகக் குழு மற்றும் பொது கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழு இவற்றின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி, நசரேயத் திருச்சபை, ஏதேனும் உள்ளூர் சபை, நசரேயத் திருச்சபையின் ஒரு பகுதியாகவோ அல்லது எவ்வகையிலாவது அதனோடு தொடர்பு கொண்டதாகவோ விளங்கும் எந்தவொரு மன்றமோ அல்லது நிறுவனமோ இவற்றின் பெயரையோ அல்லது அந்தப் பெயரின் ஒரு பகுதியையோ, நசரேயத் திருச்சபையின் எந்த உறுப்பினரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோ அல்லது எந்த மன்றமோ, பங்கு நிறுவனமோ, கழகமோ, குழுவோ அல்லது எந்தச் செயல் பணியிலும் ஈடுபட்டுள்ள அமைப்போ (வணிகம், சமுதாயம், கல்வி, தருமம், எந்த நோக்குடையதாக இருந்தாலும்கூட) பயன்படுத்தக் கூடாது. நசரேயத் திருச்சபையின் அதிகாரப் பூர்வமான சட்ட நூலினால் அனுமதிக்கப்பட்டுள்ள திருச்சபையின் நடவடிக்கைகளுக்கு இது பொருந்தாது.

## T. சபை உத்தரவாதம் அளிக்கும் நிறுவனங்கள்

**158.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட நிர்வாகக் குழுவின் எழுத்துமூலமான அனுமதியின்றி, எந்த உள்ளூர் சபையோ, உள்ளூர் சபை நிர்வாகக் குழுவோ, மறைமாவட்ட நிறுவனமோ, மறைமாவட்ட நிர்வாகக் குழுவோ அல்லது இவற்றின் உறுப்பினர்கள் இருவரோ அல்லது மேற்பட்டவர்களோ, தனிப்பட்ட முறையிலோ அல்லது வேறு வகையிலோ செயல்பட்டு–நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ திருச்சபையின் உத்திராவதத்தைப் பெற்றதாக எண்ண வைக்கும் அல்லது முதன்மையாகவும், பிரத்தியேகமாகவும் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களின் நலன் மற்றும் ஊழியத்திற்காகவோ நடத்தப்படுவதாக எண்ண வைக்கும் எந்தச் செயல்களிலும் (வணிக நோக்குடையதோ அல்லது சமுதாய நோக்குடையதோ அல்லது கல்வி மற்றும் தர்ம நோக்குடையதோ அல்லது வேறு இயல்புடையதோ) சபை உறுப்பினர்களை ஈடுபட வைக்கும் அல்லது சபை உறுப்பினர்களை பங்கு பெறுபவர்களாகவோ, வாடிக்கையாளர்களாகவோ, குடியிருப்பவர்களாகவோ, கட்சிக்காரர்களாகவோ, உறுப்பினர்களாகவோ அல்லது உதவியாளர்களாகவோ எதிர்பார்க்கும் அல்லது எந்த வகையிலேயினும் நாடும் எந்தச் செயல்களையும் (வணிகம், சமுதாயம், கல்வி மற்றும் தர்மம் நோக்குடையதோ

அல்லது வேறு இயல்புடையதோ) ஊக்குவிக்கும், உத்திரவாதமளிக்கும், முன்னேற்றும் அல்லது எவ்வகையிலேயினும் இந்தச் செயல்களில் ஈடுபடும் மன்றங்கள், சங்கங்கள், பங்கு நிறுவனங்கள், குழுக்கள் இவற்றை நிறுவுவதிலோ அல்லது இவற்றில் உறுப்பினர்களாவதிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டிருக்கக்கூடாது.

## U. உள்ளூர் சபையின் ஊதியம் பெறும் உதவியாளர்கள்

**159.** பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ சபையில் சில குறிப்பிட்ட போதகம்சார்ந்த ஊழியங்களைச் செய்யத் தங்களை ஆயத்தப்படுத்தும்படி சிலர் அழைப்புப் பெற்றுள்ளதாக உணரலாம். திருச்சபை இத்தகைய சாமானிய ஊழியர்களின் பங்கை அங்கீகரிக்கிறது. என்றாலும் அடிப்படையில் அது சுயமாக முன்வந்து பணி செய்யும் அமைப்பைக் கொண்டுள்ளது. தங்கள் திறனுக்குத் தக்கதாக அதன் உறுப்பினர்கள் அனைவருமே தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஊழியம் செய்வதைத் தங்கள் கடமையாகவும் சிலாக்கியமாகவும் எண்ணித் தாமே முன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. உள்ளூர் சபையிலோ அல்லது அதைச் சார்ந்த அல்லது துணை அமைப்புகளிலோ மேலும் அதிகச் செயல்திறனுக்காக ஊழியம் பெறும் உதவியாளர்கள் தேவையென்று கருதப்பட்டால், அது அதன் உறுப்பினர்கள் அனைவரின் இலவச ஊழிய வாஞ்சையைத் தடுக்காத வகையிலும், எல்லா வரவுசெலவுத் திட்டங்களுக்கான தொகை உட்பட சபையின் நிதித் தேவைக்கு ஊரு விளைவிக்காத வகையிலும் இருக்க வேண்டும். பிரத்தியேகமான காரியங்களுக்காக விதிவிலக்கு அளிக்கும்படி மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் மறு ஆய்வுக்காக எழுத்து மூலம் விண்ணப்பம் அனுப்பப்படலாம் (129.27).

**159.1.** ஊதியம் பெறும் அல்லது ஊதியம் பெறாத எல்லா உள்ளூர் உதவியாளர்களும் உள்ளூர் சபையின் பின்னணியில் பிரத்தியேக ஊழியத்தைச் செய்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சபைக்குள் தொழில் சம்பந்தமான ஊழியத்தைச் செய்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் பாலர் பள்ளி/பள்ளிகளின் இயக்குனர்கள் ஆகியயோர் உள்ளடங்கியிருக்கிறார்கள். இவர்கள் போதகரால் நியமனம் செய்யப்பட்டு சபை நிர்வாகக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லா நியமனங்களும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் எழுத்துமூ லமான ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்; மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இத்தகைய விண்ணப்பத்தைப் பெற்று 15 நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும். (159.4, 211.13)

**159.2.** இத்தகைய உதவியாளர்களின் பதவிக் காலம் ஓராண்டுக்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆனால் போதகரின் பரிந்துரையின்பேரில், மறைமாவட்ட கண்காணிப்பாளரின் எழுத்துமூலமான ஒப்புதலுடன், சபை நிர்வாகக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் இவர்கள் பதவிக்காலம் புதுப்பிக்கப்படலாம். போதகரின் பரிந்துரையின்பேரில், மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் எழுத்து

மூலமான ஒப்புதலுடன், சபை நிர்வாகக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் இவர்கள் பதவிக்காலம் முடிவடையுமுன்பே இவர்கள் பதவிநீக்கம் செய்யப்படலாம். அவர்களுடைய பொறுப்புகள் அவர்களிடத்திலிருந்து பரிக்கப்பட்டாலோ அல்லது அவர்களுடைய பதவிக்காலம் புதுப்பிக்கப்படாவிட்டாலோ அதை அவர்களுக்கு 30 நாட்களுக்கு முன்பாகவே தெரிவித்துவிட வேண்டும். (129.27)

**159.3.** இத்தகைய உதவியாளர்களின் பணியையும், ஊழியங்களையும் போதகர் தாமே தீர்மானம் செய்து மேற்பார்வையிடுவார். இத்தகைய உதவியாளர்கள் உள்ளூர் சபையில் தங்கள் பொறுப்பைத் துவங்கி 30 நாட்களுக்குள் அவர்களின் பொறுப்புக்களைப் பற்றிய (பணி விவரம்) தெளிவான, எழுத்துமூலமான அறிக்கை அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

**159.4.** சபையில் ஊதியம் பெறும் எந்த உதவியாளரும் சபை நிர்வாகக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட தகுதியுடையவர் அல்லர். ஒரு சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினர், சபையின் ஊதியம் பெறும் உதவியாளராகும்போது, அவர் தனது உறுப்பினர் தகுதியை இழக்கிறார்.

**159.5.** போதகர் இராஜினாமாவைக் கொடுக்கும் சமயத்தில் அடுத்தப் போதகர் வரும்வரை ஏற்படும் மாற்றத்தின் காலம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் உள்ளூர் சபையின் தொடர்ந்து நடக்கும் ஊழியம், நிலைத்தன்மை மற்றும் ஐக்கியம் முக்கியமானதாகும். இதன் விளைவாக, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் (அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி) சபை நிர்வாகக் குழுவோடு சேர்ந்து பணியாற்றி, பின்வரும் படிகளை எடுப்பார்கள்: 1) இந்த மாறுதல் நடக்கும் காலகட்டத்தில் பணியாற்றுபவர்களில் ஒரு சிலரையோ அல்லது அனைவரையுமோ பணியில் வைத்துக்கொள்வார்கள் 2) புதிய போதகருக்கு விருப்பம் இருந்தால், புதிய உதவியாளர்களைத் தெரிந்தெடுக்க அனுமதியளித்தல், 3) மாற்றத்தச் சந்திக்கும் பணியாளர்கள் தனிப்பட்ட நிலையிலும், தங்களுடைய பணியிலும் ஏற்படும் மாற்றங்களைச் சரிபடுத்திக் கொள்ளும் விதத்தில் ஏற்றுக்கொள்ளத் தகுந்த கால அவகாசத்தை நிர்வாகக் குழு மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அனுமதியின் பெயரில் செயல்படுத்துவது. முதலாவது, போதகர் இராஜினாமா செய்யும்போதோ அல்லது நீக்கப்படும்போதோ அவரோடு சேர்ந்து உதவியாளர்களும் தங்களுடைய இராஜினாமாவைச் சமர்ப்பிக்க வேண்டும். இரண்டாவது, அந்த உதவியாளர்கள் அனைவரும் அல்லது அதில் சிலர் தங்களுடைய பணியில் தொடர அனுமதிக்க வேண்டும் என்று சபை நிர்வாகக் குழு மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடம் வேண்டுதல் வைக்கலாம். இந்த அனுமதியளிக்கப்பட்டால், இது புதிய போதகர் தன்னுடைய பதவியை ஏற்றுக்கொண்டபிறகு 90 நாட்கள் வரையோ அல்லது உள்ளே வரும் போதகர் விதி எண் 159இன் படி தன்னுடைய சம்பளம் வாங்கும் உதவியாளர்களை வரும் ஆண்டிற்காக நியமித்துக் கொள்ளலாம். தொடரும். புதிய போதகர் பதவியேற்கும் பள்ளி ஆண்டின் இறுதியில் முடிவுக்கு வரும்படி வாரநாள் பள்ளிகளின் இயக்குநர்கள் தங்கள் இராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். சபையோடு இணைந்த அல்லது சார்ந்த அமைப்புகளின் மேல் நிர்வாக

அதிகாரிகள், புதிய போதகர் பதிவியேற்கும், தங்கள் ஒப்பந்த கால முடிவில் தங்கள் இராஜினாமாக்களைச் சமர்ப்பிக்கலாம். ஏற்கெனவே பதவியிலிருந்த அலுவலர்களை மீண்டும் பதிவியிலமர்த்தும்படி பரிந்துரைசெய்ய புதிதாக வரும் போதகருக்கு உரிமை உண்டு.

**159.6.** போதகர் மாறும்போது விதி எண் 159.5இன் ஷரத்துக்களை பதவியிலிருப்பவர்களுக்கும், சபை நிர்வாகக் குழுவுக்கும், சபையாருக்கும் நினைவூட்டுவது மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பொறுப்பாகும் (211.13).

**159.7.** விதி எண் 100.2 இன்படி உள்ளூர் சபையாகச் செயல்படும் ஒப்புதல் பெற்ற சபையின் போதகர் சபை அலுவலராகக் கருதப்படமாட்டார்.

**159.8.** மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலின்றி ஊதியம் பெறும் ஊழியராக இருக்கும் எந்த நபரும் தாம் உறுப்பினராக இருக்கும் சபையின் போதகராக அழைக்கப்படும் தகுதியை உரியவர் கிடையாது. (115, 129.2, 211.10, 225.16)

## II. மறைமாவட்ட ஆளுகை முறைமை

## A. மறைமாவட்டத்தின் எல்லையும் பெயரும்

**200.** சபைகளின் உறுப்பினர்களை மறைமாவட்டங்களாகப் பொதுச் சபையானது ஒழுங்குப்படுத்தும்.

ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் உள்ளூர் சபைகள், ஒவ்வொரு உள்ளூர் சபையின் ஊழிய நோக்கத்தைச் செயல்படுத்துவதற்கு, ஒருவருக்கொருவர் ஆதரவளித்து, ஆதாரங்களைப் பகிர்ந்துகொண்டு, இணைந்து செயல்படுவதையே மறைமாவட்டம் என்கிறோம்.

ஒரு மறைமாவட்டத்தின் எல்லையும், பெயரும் பொது எல்லைகளின் குழுவால் அறிவிக்கப்படும். இது அசெம்பிளி மறைமாவட்டங்களால் பெரும்பாண்மை வாக்கெடுப்பில் வெற்றிபெற்று, பொதுக் கண்காணிப்பாளராலோ அல்லது அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளராலோ இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்.

ஒரு கல்விப் பகுதியில் ஒன்றிற்கும் மேற்பட்ட மறைமாவட்டங்கள் இருக்கும் பட்சத்தில், அவை ஒரே மறைமாவட்டமாகச் சேர்ந்துகொள்ள விரும்பும்போது, பொது எல்லைகளின் குழுவானது இந்தப் புதிய மறைமாவட்டமானது எந்த இடத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்பதை முடிவு செய்யும். இது அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளரின் ஆலோசனையின் பெயரில் நடைபெறும்.

**200.1. புதிய மறைமாவட்டங்களை உருவாக்குதல்.** நசரேயத் திருச்சபையில் புதிய மறைமாவட்டங்கள் பின்வருவனவற்றைக் கொண்டு உருவாக்கப்படும்:

1. ஒரு மறைமாவட்டம் இரண்டு அல்லது பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுதல் (அது மறைமாவட்ட அசெம்பிளியின் மூன்றில் இரண்டு பங்கு வாக்கைப் பெற வேண்டும்).

2. இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மறைமாவட்டங்களைச் சேர்த்து எண்ணிக்கையில் வெவ்வேறாக இருக்கும் மறைமாவட்டங்களை உருவாக்குதல்.
3. ஏற்கெனவே இருக்கும் மறைமாவட்டங்களைச் சார்ந்திராத புதிய பகுதிகளைப் புதிய மறைமாவட்டமாக உருவாக்குதல்.
4. இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மறைமாவட்டங்களைச் சேர்த்தல் அல்லது,
5. புதிய மறைமாவட்டத்தை உருவாக்கவேண்டும் என்ற அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளரிடம் வேண்டுதல் சமர்ப்பிக்கப்படும். மறைமாவட்டக் கண்காணிப்பாளர்களும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவும் அல்லது தேசிய குழுவும் இதற்கு அனுமதியளித்து, அதை மறைமாவட்ட மாநாட்டின் வாக்கெடுப்பைப் பெறும்படி அழைப்பார்கள். இது அந்தப் பகுதியைச் சார்ந்த பொதுக் கண்காணிப்பாளரின் அனுமதியையும், பொதுக் கண்காணிப்பாளர்களின் குழுவின் அனுமதியையும் பெற்று நடைபெற வேண்டும். (24, 200, 200.4)

**200.2.** நசரேயத் திருச்சபையின் பணிகள் அவர்கள் முன்னோடியாக இருக்கும் இடத்தில் துவங்கப்பட்டு, அதன் மூலமாகப் புதிய மறைமாவட்டங்களும் மறைமாவட்ட அசெம்பிளியின் எல்லைகளும் உருவாக்கப்படலாம். பின்வரும் ஒழுங்குமுறையின் அடிப்படையில் மூன்று படிகளில் மறைமாவட்டங்கள் உருவாகக்கூடும்.

**படி 1.** புதிய இடத்திற்குள் நுழைவதற்கான வாய்ப்பு ஏற்படும்போது இந்தப் படி 1 மறைமாவட்டம் நியமிக்கப்படும். இது யுக்திசார்ந் வளர்ச்சி மற்றும் சுவிசேஷத்தின் எல்லைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். பிராந்திய இயக்குனரோ அல்லது, அந்த இடம் சார்ந்த ஆலோசனைக் குழுவின் மறைமாவட்டத்தின் மூலமாகவோ அல்லது இதனை முன்வைக்கும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும்/அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் மூலமாகவோ அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் பொதுக் கண்காணிப்பாளரின் குழுவிற்கு முன்பாக வேண்டுதல்கள் வைக்கப்படலாம்.

படி 1ஐ சார்ந்த மறைமாவட்டக் கண்காணிப்பாளர் பிராந்திய இயக்குனரால் நியமனம் செய்யப்படுவார். அவர் அதை உலகளாவிய ஊழிய இயக்குனரை ஆலோசித்து, அதிகாரம் கொண்டிருக்கும் பொதுக் கண்காணிப்பாளரிடம் நியமனம் செய்வார். அவரே அவரை நியமிப்பார். இந்தப் படி1ஐ சார்ந்த மறைமாவட்டத்திற்கு வளர்ச்சியைக் குறித்த ஆதாரங்களைப் பெறுவதற்கு அந்தப் பிராந்தியம் வழிகாட்டும். ஆதரவளிக்கும் மறைமாவட்டங்கள் இருக்கும் பட்சத்தில், ஆதரவளிக்கும் மறைமாவட்டங்களைச் சார்ந்த மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் ஆலோசனைக் குழுக்களின் ஆலோசனையின் அடிப்படையில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரால் நியமனம் செய்யப்படுவார்.

கள யுக்தி ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிராந்திய இயக்குனரின் ஆலோசனையின் பெயரில் ஒரு படி 1ஐ சார்ந்த மறைமாவட்டமானது நெருக்கடியில்

இருந்தால் – நிதி, மனஉறுதி அல்லது வேறு ஏதாவது காரணங்களுக்காக – இந்த நெருக்கடியானது அந்த மறைமாவட்டத்தின் எதிர்காலம் மற்றும் நிலைத்தன்மையை பாதிக்கும் விதத்தில் இருந்தால், அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின் அடிப்படையிலும், உலகளாவிய ஊழிய இயக்குனரின் ஆலோசனையின் அடிப்படையிலும் அந்த மறைமாவட்டமான நெருக்கடியில் இருக்கும் ஒன்றாக அறிவிக்கப்படலாம். அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின் பெயரில் பிராந்திய இயக்குனர் அந்த மறைமாவட்டத்தை நிர்வகிப்பதற்காக ஒரு தாற்காலிகமான குழுவை நியமிக்கலாம். இது அப்போது செயல்பட்டுக்கொண்டிருக்கும் குழுவிற்கு மாற்றுக் குழுவாக இருக்கும். இது அடுத்த மறைமாவட்ட அசெம்பிளி கூடும் வரையில் செயல்பாட்டில் இருக்கும்.

**படி 2.** போதுமான அளவு ஒழுங்குபடுத்தப்பட்ட திருச்சபைகளும், அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்களும், மறைமாவட்டத்திற்கான முதிர்ச்சிபெற்ற கட்டமைப்பும் இருக்கும் பட்சத்தில் இந்தப் படி 2ஐ சார்ந்த மறைமாவட்டம் உருவாக்கப்படலாம்.

இப்படிப்பட்ட நியமனம் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர், உலகளாவிய ஊழிய இயக்குனர், பிராந்திய இயக்குனர் மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரை நியமனம் செய்யும் தனிப்பட்ட நபர்கள் மற்றும் குழுக்களிடம் ஆலோசனைப் பெற்று பரிந்துரை செய்வார். அவருடைய பரிந்துரையின் அடிப்படையில் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு நியமனம் செய்யும்.

குறைந்தது 10 ஒழுங்குபடுத்தப்பட்ட சபைகளும், 500 முழு நேர உறுப்பினர்களும், 5 அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்களும் இருக்க வேண்டும் என்பதே தகுதிபெறுவதற்கான நிலைப்பாடாக இருக்கிறது. நியமிக்கப்படும் வேளையில் மறைமாவட்டத்தை நிர்வகிக்கத் தேவைப்படும் நிதியில் 50 சதவீதம் மறைமாவட்டத்தின் ஊழியங்களின் நிதியின் சம்பாத்தியத்தால் இருக்க வேண்டும். இந்த விதிகளில் ஏதாவது விதிவிலக்குத் தேவைப்பட்டால் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோ அல்லது தேசிய குழுவோ பொதுக் கண்காணிப்பாளரிடம் வேண்டுதல் வைக்கலாம்.

கள யுக்தி ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிராந்திய இயக்குனரின் ஆலோசனையின் பெயரில் ஒரு படி 2ஐ சார்ந்த மறைமாவட்டமானது நெருக்கடியில் இருந்தால் – நிதி, மனஉறுதி அல்லது வேறு ஏதாவது காரணங்களுக்காக – இந்த நெருக்கடியானது அந்த மறைமாவட்டத்தின் எதிர்காலம் மற்றும் நிலைத்தன்மையைப் பாதிக்கும் விதத்தில் இருந்தால், அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின் அடிப்படையிலும், உலகளாவிய ஊழிய இயக்குனரின் ஆலோசனையின் அடிப்படையிலும் அந்த மறைமாவட்டமான நெருக்கடியில் இருக்கும் ஒன்றாக அறிவிக்கப்படலாம். அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின் பெயரில் பிராந்திய இயக்குனர் அந்த மறைமாவட்டத்தை நிர்வகிப்பதற்காக ஒரு தற்காலிகமான குழுவை நியமிக்கலாம். இது அப்போது செயல்பட்டுக்கொண்டிருக்கும் குழுவிற்கு மாற்றுக் குழுவாக இருக்கும். இது அடுத்த மறைமாவட்ட அசெம்பிளி கூடும் வரையில் செயல்பாட்டில் இருக்கும்.

**படி 3.** படி 3ஐ சார்ந்த மறைமாவட்ட நிலைப்பாட்டைப் பெறுவதற்குப் போதுமான அளவிற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட திருச்சபைகளும், அபிஷேகம் பெற்ற போதகர்களும், உறுப்பினர்களும் இருக்கும் பட்சத்தில் அது உருவாக்கப்படலாம். தலைமைத்துவம், கட்டிடங்கள், நிதிநிலைச் சார்ந்தப் பொறுப்புகள் மற்றும் கோட்பாட்டுரீதியான உண்மைத்தன்மை எடுத்துக்காட்டப்பட வேண்டும். படி 3ஐ சார்ந்த ஒரு மறைமாவட்டம் இப்படிப்பட்ட பாரங்களைச் சுமக்கும் தன்மையைப் பெற்றதாகவும், பிரதான கட்டளையின் சவால்களைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு சர்வதேச திருச்சபையின் அமைப்பைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நியமனம் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர், உலகளாவிய ஊழிய இயக்குனர், பிராந்திய இயக்குனர் மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரை நியமனம் செய்யும் தனிப்பட்ட நபர்கள் மற்றும் குழுக்களிடம் ஆலோசனைப் பெற்று பரிந்துரை செய்வார். அவருடைய பரிந்துரையின் அடிப்படையில் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு நியமனம் செய்யும். மறைமாவட்டக் கண்காணிப்பாளர் *சட்டநூலில்* காணப்படும் விதிகளின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுவார்.

குறைந்தது 20 ஒழுங்குபடுத்தப்பட்ட சபைகளும், 1000 முழு நேர உறுப்பினர்களும், 10அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்களும் இருக்க வேண்டும் என்பதே தகுதிபெறுவதற்கான நிலைப்பாடாக இருக்கிறது.

மறைமாவட்ட ஆலோசனை குழுவோ அல்லது தேசிய குழுவோ இப்படிப்பட்ட தகுதிநிலையில் சில விதிவிலக்குகளை ஏற்படுத்திக் கொடுக்கும்படி அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரிடம் வேண்டுதல் செய்யலாம்.

மறைமாவட்ட நிர்வாகத்தைப் பொருத்தவரை படி 3ஐ சார்ந்த மறைமாவட்டமானது 100 சதவீதம் சுய–ஆதரவைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இந்தப் படி 3 மறைமாவட்டங்கள் தாங்கள் இருக்கும் பிராந்தியங்களின் மிக முக்கியமான பங்குகளாக இருக்கின்றன. **பிராந்திய இயக்குனரைக் கொண்டிருக்கும் பகுதிகளில், அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் இந்த மறைமாவட்டத்தோடு தொடர்பு கொள்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் பிராந்திய இயக்குனரின் உதவியை நாடலாம்.**

அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஆலோசனையின் பெயரில் ஒரு படி 3ஐ சார்ந்த மறைமாவட்டமானது நெருக்கடியில் இருந்தால் – நிதி, மனஉறுதி அல்லது வேறு ஏதாவது காரணங்களுக்காக – இந்த நெருக்கடியானது அந்த மறைமாவட்டத்தின் எதிர்காலம் மற்றும் நிலைத்தன்மையைப் பாதிக்கும் விதத்தில் இருந்தால், பொதுக் கண்காணிப்பாளர்களின் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் அந்த மறைமாவட்டம் நெருக்கடியில் இருக்கும் ஒன்றாக அறிவிக்கப்படலாம். அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர், பொதுக் கண்காணிப்பாளர்களின் குழுவின் ஒப்புதலைப் பெற்று பின்வருனவற்றில் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்டவைகளையோ செயல்படுத்தலாம்:

1. மறைமாவட்டக் கண்காணிப்பாளரை நீக்கலாம்;

2. அந்த மறைமாவட்டத்தை நிர்வகிப்பதற்காக ஒரு தற்காலிகமான குழுவை நியமிக்கலாம். இது அப்போது செயல்பட்டுக்கொண்டிருக்கும் குழுவிற்கு மாற்றுக் குழுவாக இருக்கும். இது அடுத்த மறைமாவட்ட அசெம்பிளி கூடும் வரையில் செயல்பாட்டில் இருக்கும்.
3. மறைமாவட்டத்தின் நலனைத் திரும்பப் பெறுவதற்கும், அதனுடைய ஊழியத்தின் செயல்திறன் மேன்மைப்படுவதற்கும் தேவையான விசேஷித்த தலையீடுகளைச் செய்யலாம். (200.1, 205.12, 206.2, 209.1, 307.9, 322)

**200.3. மறைமாவட்டத்தைப் பிரிப்பதற்கான அல்லது மறைமாவட்டத்தின் எல்லைகளில் மாறுதல்களை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள்.** பிராந்திய அலுவலகத்தாலோ, தேசிய குழுவாலோ அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலோ ஒரு மறைமாவட்டத்தை வளர்ச்சியடையச் செய்யவோ அல்லது ஒரு மறைமாவட்டத்தின் எல்லைகளை மாற்றியமைக்கவோ பரிந்துரைகள் இருக்கும் பட்சத்தில், அவை அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட திட்டமானது பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்:

1. முன்மொழியப்படும் புதிய மறைமாவட்டங்களும் அல்லது புதியதாக எல்லைகள் மாற்றியமைக்கப்பட்ட எல்லைகளா அப்படிப்பட்ட மறைமாவட்ட உருவாக்கம் அல்லது மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய மக்கள்தொகையைக் கொண்டவைகளா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.
2. இந்த மறைமாவட்டங்களின் பணிகளைச் செய்வதற்கு ஏற்றவாறு தொடர்புகொள்ளும் வசதியும், பயணம் செய்வதற்கான வசதிகளும் இருக்கின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
3. போதுமான அளவு அபிஷேகம் பெற்ற முதிர்ச்சியான போதகர்களும், சபைக்குழு உறுப்பினர்களும் மறைமாவட்டத்தின் பணிகளைச் செய்வதற்காக இருக்கிறார்களா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
4. ஆதரவளிக்கப்படும் அந்த மறைமாவட்டங்கள், தங்களுடைய படி 3 நிலையைத் தக்கவைத்துக்கொள்வதற்குத் தேவைப்படும் இடங்களில் மறைமாவட்டத்தின் ஊழியங்களைச் செய்யும் அளவிற்கான வருமானத்தைப் பெற்றிருக்கின்றனவா, போதுமான அளவு உறுப்பினர்களையும், ஒழுங்குபடுத்தப்பட்ட திருச்சபைகளையும் பெற்றிருக்கின்றனவா என்பதைக் கவனமாகப் பார்க்க வேண்டும்.

**200.4. இணைப்பு.** இரண்டோ அல்லது அதற்கும் மேற்பட்ட படி 3 மறைமாவட்டங்கள் ஒன்றுசேர்க்கப் படலாம். இதற்கு இதில் சம்பந்தப்பட்டிருக்கும் மறைமாவட்டக் குழுக்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற வேண்டும். இந்த வாக்கெடுப்பு நடப்பதற்கு, இதில் சம்பந்தப்பட்டிருக்கும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுக்களால் நியமிக்கப்பட்டு (மற்றும் தேவைப்படும் இடங்களில் தேசிய குழுக்களும்) இந்த மறைமாவட்டத்தின் கீழ் வரும் இடங்களைச் சார்ந்த மறைமாவட்டக் கண்காணிப்பாளர்களால் எழுத்துப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த இணைப்பும், இது சம்பந்தமான எல்லாக் காரியங்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கும் மறைமாவட்ட அசெம்பிளிகளும், அதனுடைய அதிகாரத்தில்

இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர்களும் நிர்ணயிக்கும் நேரம் மற்றும் இடத்தில் நடைபெற வேண்டும்.

இப்படி உருவாக்கப்படும் ஒழுங்குமுறையானது இதில் சம்பந்தப்பட்டிருக்கும் மறைமாவட்டங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை இணைக்கும்.

படி 1 மற்றும் படி 1ஐ சார்ந்த மறைமாவட்டங்களும் புதிய மறைமாவட்டத்தை உருவாக்குவதைக் குறித்து 200.2 விதிகளில் கொடுத்திருக்கும் முறையில் இணைக்கப்படலாம். (200.1)

**200.5.** இதில் சம்பந்தப்பட்டிருக்கும் மறைமாவட்ட அசெம்பிளிகளில் ஏதாவது ஒன்றோ அல்லது அனைத்துமே செயல்படத் தவறினால் அல்லது மறைமாவட்ட அசெம்பிளிகளின் செயல்பாடுகள் ஒத்துப்போகாமல் இருந்தால், இந்தப் பரிந்துரையானது அடுத்த பொதுக் குழுவில் செயல்படுத்தப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படலாம். இதற்குப் பாதிக்கப்பட்ட மறைமாவட்ட ஆலோசனைக் குழுக்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**200.6.** ஒரு மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அந்த இடத்தைச் சார்ந்த செயல்பாட்டாளர்கள் அல்லது அந்தப் பகுதியின் ஊழிய இயக்குனர்களைப் பின்வரும் காரியங்களில் உதவிசெய்யுமாறு பயன்படுத்தலாம்:

1. அந்த ஊழிய இடம் அல்லது பகுதியைச் சேர்ந்த போதகர்களுக்கு இடையே நல்லிணக்கத்தையும், சமுதாயச் சிந்தனையையும் கட்டமைக்க;
2. குருத்துவ வளர்ச்சி, திருச்சபை வளர்ச்சி, சுவிசேஷத்தை அறிவித்தல், புதிய திருச்சபைகளைத் துவங்குதல் அல்லது மூடப்பட்ட திருச்சபைகளை மறுபடியுமாகத் துவங்குதல் போன்ற கிறிஸ்துவின் நோக்கத்தை ஊக்கப்படுத்த;
3. மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் சார்பில் குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய;
4. உள்ளூர் சபையாருக்கும், மறைமாவட்டத்திற்கும் இடையே இருக்கும் தொடர்பில் ஒரு பாலமாகச் செயல்பட.

## B. உறுப்பினர்களும், மறைமாவட்ட மாநாட்டின் காலமும்

**201. உறுப்பினர்கள்.** மறைமாவட்ட மாநாட்டில், நியமிக்கப்பட்ட அனைத்து மூப்பர்கள், நியமிக்கப்பட்ட அனைத்து டீக்கன்மார்கள், குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர்கள், மறைமாவட்ட செயலாளர், மறைமாவட்டப் பொருளாளர், மறைமாவட்ட மாநாட்டிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும், செயல்படும் அனைத்து மறைமாவட்டக் குழுக்களின் தலைவர்கள், அந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் சபை உறுப்பினர் தகுதியை உடைய நசரேய உயர்கல்வி நிறுவனங்களின் சாமானிய தலைவர்கள், மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி ஊழிய தலைவர், மறைமாவட்ட வயதுவாரி (பெரியோர் மற்றும் சிறியோர்) ஊழியங்களின் இயக்குனர்கள், மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி நிர்வாகக் குழு, அகில உலக நசரேய வாலிபக் குழுவின் மறைமாவட்டத் தலைவர், மறைமாவட்ட அகில உலக நசரேய அருட்பணி சங்கத் தலைவர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுக்களின் மேலாளர் அல்லது துணை

மேலாளர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அகில உலக நசரேய வாலிபக் குழுவின் ஒவ்வொரு உள்ளூர் தலைவர் அல்லது துணைத் தலைவர், ஒவ்வொரு அகில உலக நசரேய உள்ளூர் அருட்பணி சங்கத்தின் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அல்லது துணைத் தலைவர் அல்லது இவர்களுக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமானவர்கள், மறைமாவட்ட மாநாட்டில் இந்த அமைப்புகளின் பிரதிநிதியாக இருக்கலாம். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சாமானிய உறுப்பினர்கள், செயல்பட்டுக்கொண்டிருக்கும் சாமானிய ஊழியக்காரர்கள், அவர்கள் உள்ளூர் சபையின் உறுப்பினர்களாக இருக்கவேண்டும், முன்னாள் சாமானிய ஊழியக்காரர்கள், அவர்கள் உள்ளூர் சபையில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும், ஓய்வுபெறும்போது அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருந்த மிஷனரிகளாக இருந்திருக்க வேண்டும் மற்றும் மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உள்ளூர் சபையிலிருந்தும் அனுப்பப்படும் சாமானிய பிரதிநிதிகள். (24, 113.14–113.15, 146, 152.2, 201.1–201.2, 219.2, 222.2, 224.4, 242.2, 244.2, 505–528.1, 532.8, 533–533.4, 534–534.3, 535–535.1, 536–536.2, 538.9)

**201.1.** 5000 முழு சபை உறுப்பினர்களுக்கும் குறைவான எண்ணிக்கைக் கொண்ட மறைமாவட்டங்களில் உள்ளூர் சபைகள் கீழ்க்கண்ட வகையில் மறைமாவட்ட மாநாட்டில் பிரதிநித்துவம் பெறுகின்றன: 50 அல்லது அதற்கும் குறைவான முழு சபை உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு உள்ளூர் சபையிலிருந்தும் தலா இரண்டு பிரதிநிதிகள், இதற்கு அதிகமான ஒவ்வொரு 50 முழு சபை உறுப்பினர்களுக்கும் ஒரு பிரதிநிதி வீதம், எஞ்சியிருக்கும் முழு சபை உறுப்பினர்கள் 50இல் பெரும்பான்மை பெற்றிருந்தால் ஒரு பிரதிநிதியும் கூடுதலாக அனுப்பப்பட வேண்டும். (24, 113.14–113.15, 201)

**201.2.** 5000 முழு சபை உறுப்பினர்களுக்கும் கூடுதலான எண்ணிக்கைக் கொண்ட மறைமாவட்டங்களில் உள்ளூர் சபைகள் கீழ்க்கண்ட வகையில் மறைமாவட்ட மாநாட்டில் பிரதிநித்துவம் பெறுகின்றன: 50 அல்லது அதற்கும் குறைவான முழு சபை உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு உள்ளூர் சபையிலிருந்தும் தலா இரண்டு பிரதிநிதிகள், இதற்கு அதிகமான ஒவ்வொரு 50 முழு சபை உறுப்பினர்களுக்கும் ஒரு பிரதிநிதி வீதம், எஞ்சியிருக்கும் முழு சபை உறுப்பினர்கள் 50இல் பெரும்பான்மை பெற்றிருந்தால் ஒரு பிரதிநிதியும் கூடுதலாக அனுப்பப்பட வேண்டும். (24, 113.14–113.15, 201)

**202. காலம்.** அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளரால் குறிக்கப்பட்டப்படி மறைமாவட்ட மாநாடு ஆண்டுதோறும் கூடும். கூடும் இடம் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினராலோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளராலோ தீர்மானிக்கப்படும்.

**203. நியமனக் குழு.** மறைமாவட்ட மாநாடு கூட்டப்படுவதற்கு முன்பாக, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஆலோசனையைப் பெற்று மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இந்த மறைமாவட்ட மாநாட்டில் செயல்படும்படி நியமனக் குழுவை உருவாக்குவார். இந்தக் குழு மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டம் கூட்டப்படுவதற்கு

முன்பாக வழக்கமான குழுக்களுக்காகவும், பதவிகளுக்காகவும் நியமனங்களைத் தயார் செய்யலாம். (215.2).

**204.** மறைமாவட்டத்தில் பதிவு செய்யப்படும் எல்லாம் மின்னனு வழியாகவும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவே வாக்களிக்கும் முறை எப்படியிருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும். எல்லாக் கருத்துப்பரிமாற்றங்களும், தேவைப்படும் வாக்குகளும் மின்னனுவின் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## C. மறைமாவட்ட மாநாட்டின் வேலைகள்

**205. கூட்டங்களை நடத்தும் முறை.** கலந்து பேசுவதற்காகவும், அலுவல்களைக் கவனிக்கவும் உள்ளூர் சபை உறுப்பினர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவது சபைக்கூட்டம் எனப்படும். இது பொருத்தமான சட்டம், *சட்டநூலில்* ஒருங்கிணைத்தல் மற்றும் ஆளுகைகுறித்த துணைவிதிகள், உள்ளூர், மறைமாவட்ட மற்றும் பொது நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களின் கூட்டங்கள் மற்றும் செயல்முறைகள், இவை Robert's *Rules of Order Newly Revised (latest edition)* இன்படி ஒழுங்குபடுத்தப்படும். (34).

**205.1. மறைமாவட்ட மாநாட்டின் வேலைகள் பின்வருமாறு:**

**205.1.** மறைவாட்டத்தின் ஊழியத்தைக் குறித்தும், புதிதாக ஒழுங்குப்படுத்தப்பட்ட திருச்சபைகளைக் குறித்தும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் சமர்ப்பிக்கும் ஆண்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வது.

**205.3.** அபிஷேகம் பெற்ற மற்றும் அனுமதிப்பெற்ற எல்லாப் போதகர்களிடமிருந்தும் அல்லது பொறுப்பைப் பெற்ற நற்செய்தியாளர்களிடமிருந்தும் அறிக்கைக்களைப் பெறுதல். எல்லா மூப்பர்கள், டீக்கன்மார்கள் மற்றும் பெண் டீக்கன்மார்களின் பண்புநலன்களைக் குறித்து அறிந்துகொள்ளுதல். செயல்பணியில் ஈடுபடாத அனுமதிப்பெற்ற மூப்பர்கள், டீக்கன்மார்கள், பெண் டீக்கன்மார்கள் மற்றும் போதகர்கள் மற்றும் விதிகள் 505–528.2 வரை கொடுக்கப்பட்டிருப்பவையில் எல்லாவகையான செயல்களையும் செய்வதற்கான சான்றிதழ்களைப் பெற்றிருக்கும் போதகர்களின் வாய்வழியான அறிக்கைகளுக்குப் பதிலாக, மறைமாவட்ட மாநாட்டில் வாக்கெடுப்பின் மூலமாகச் செயலாளரால் பெறப்பட்ட எழுத்துமூலமான அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படலாம். (521, 532.8, 538.9)

**205.4.** கவனமான சோதனைக்குப் பிறகு சபை நிர்வாகக் குழுக்களாகவோ அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலோ பரிந்துரை செய்யப்பட்டவர்களையும், ஊழியத்திற்கு அழைக்கப்படத் தகுதியுள்ளவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டவர்களையும் அனுமதிப் பெற்றப் போதகர்களாகும்படி அனுமதியளித்தல். இறை ஊழியர் அனுமதிச் சான்றுக்குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில் இத்தகைய அனுமதிகளைப் புதுப்பித்தல். (129.14, 531.5, 532.1, 532.3)

**205.5.** கவனமான பரிசீலனைக்குப் பிறகு சபை நிர்வாகக் குழுக்களால் பரிந்துரை செய்யப்பட்டவர்களையும், குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் பரிந்துரையின் பேரில் பெண் டீக்கன்மார் பதவிக்கு அழைக்கப்படத் தகுதியுள்ளவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டவர்களையும், பெண் டீக்கன்மாராகப் பணிபுரிய அனுமதியைப் புதுப்பித்தல். இறை ஊழியர் அனுமதிச் சான்றுக்குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில் இத்தகைய அனுமதிகளைப் புதுப்பித்தல். (129.15)

**205.6.** இறை ஊழியர் அனுமதிச் சான்றுக் குழுவின் பரிந்துரையின்பேரில், இத்தகைய ஊழியங்களுக்கான அனைத்துத் தேவைகளையும் பெற்றுள்ளவர்கள் என்று தீர்மானிக்கப்படும் நபர்களை மூப்பர்களாகவும் அல்லது டீக்கன்மார்களாகவும் தேர்ந்தெடுத்தல். (533.3, 534.3)

**205.7.** இறை ஊழியர் அனுமதிச் சான்றுக் குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில், நசரேயத் திருச்சபையில் பணிபுரியத் தகுதியுடையவர்கள், ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவர்கள் என்று தீர்மானிக்கப்படும் பிற சபைப் பிரிவுகளிலிருந்து வரும் நபர்களின் தகுதிகளையும், ஊழியப் பதவிகளையும் அங்கீகரித்தல். (532.2, 535–535.2)

**205.8.** பிற மறைமாவட்டங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் குருத்துவ சான்றிதழ் பெற்ற நபர்கள், குருத்துவ சான்றிதழ் பெற்ற நபர்கள், குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர்கள் தொடர்ந்து ஊழியப் பணிக்காகத் தகுதிப் பெற்றவர்களாக இவர்களை ஏற்றுக்கொள்ளுதல். இவர்கள் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில் மறைமாவட்ட மாநாட்டில் உறுப்பினராவதற்குத் தகுதியுள்ளவர்களாகத் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் இடைக்கால மாற்றமும் அடங்கும். (231.9–231.10, 505, 508–511.1, 537–537.2)

**205.9.** குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில் வேறு மறைமாவட்டங்களுக்கு மாற்றம்பெற விரும்பும் குருத்துவ அபிஷேகம்பெற்ற போதகர்கள், டீக்கன்மார், அனுமதிப்பெற்ற போதகர்கள் தொடர்ந்து ஊழியப் பணிக்காகத் தகுதி பெற்றவர்கள் இவர்களை மாற்றும்படி உத்தரவு கொடுத்தல். இறை ஊழியர் அனுமதிச் சான்றுக்குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில் இத்தகைய அனுமதிகளைப் புதுப்பித்தல். (505, 508–511.1, 231.9–231.10, 537–537.1)

**205.10.** குருத்துவ அனுமதிச் சான்றுக்குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில், விதி எண்கள் 505–528.2 களில் பெயர் குறிப்பிடப்பட்டு, விளக்கப்பட்டுள்ள ஊழியங்களுக்குத் தகுதியுள்ளவர்களாகத் தீர்மானிக்கப்படும் நபர்களை ஓராண்டு காலத்துக்கு வேலைக்கு அமர்த்துதல் அல்லது பதிவு செய்தல்.

**205.11.** தனது தேர்வுக்குப் பின்வரும் இரண்டாவது மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டத்தின் இறுதி ஒத்திவைப்பிற்குப் பின் முப்பது நாட்கள் வரையிலும், அவருக்குப் பின்வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டு பதவியேற்கும் வரையிலும் பணிபுரியும்படியாக, இரகசிய வாக்குப்பதிவின்மூலம், மூன்றில் இரண்டு பெரும்பாண்மை வாக்குகளில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் பதவிக்காக ஒரு குருத்துவ அபிஷேகம் பெற்ற மூப்பரைத் தேர்ந்தெடுத்தல். ''சரி'' அல்லது ''வேண்டாம்'' எனும் இரகசிய வாக்குப் பதிவு முறையில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மீண்டும்

தேர்ந்தெடுக்கப்படலாம், ஒழுங்கு நடவடிக்கையின்மூலம் ஏதேனும் ஒரு வேளையில் தனது தகுதிப் பத்திரத்தைத் திரும்ப அளித்திருந்த எந்தவொரு குருத்துவ அபிஷேகம் பெற்றப் போதகரும் இந்தப் பதவிக்குத் தேந்தெடுக்கப்படத் தகுதியுடையவர்கள் அல்லர். எந்தவொரு கண்காணிப்பாளரும் தனது 70அவது பிறந்த நாளுக்குப் பின்வரும் மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டத்திற்குப் பிற்பாடு பணியாற்றக்கூடாது.

**205.12.** படி 2 அல்லது படி 3 மறைமாவட்டத்தின் மறைமாவட்டக் கண்காணிப்பாளராக ஒருவர் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் மறைமாவட்ட மாநாடு அவரை மறுபடியுமாக இன்னும் நான்கு வருடங்களுக்குத் தெரிந்தெடுக்க முடியும். இது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின் பேரில் நடைபெறும். பதவி நீட்டிக்கப்படுவதற்கான இந்தத் தேர்தலின் வழிமுறை "சரி" அல்லது "வேண்டாம்" என்னும் இரகசிய வாக்குப் பதிவு முறையில் இருக்க வேண்டும். (200.2)

**205.13.** ஒருவேளை பொதுக்கண்காணிப்பாளரும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவும் மாவட்டக் கண்காணிப்பாளரின் பதிவிக்காலம் தொடரக்கூடாது என்று நினைத்தால், அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவும் மறைமாவட்ட மாநாட்டின் வாக்களிப்பிற்காக இந்தக் கேள்வியைச் சமர்ப்பிக்கலாம். "தற்போதைய மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இந்த மறைமாவட்ட மாநாட்டிற்குப் பிறகும் பதவியில் நீடிக்கலாமா?" என்பதுபோன்று அந்தக் கேள்வி இருக்க வேண்டும்.

மறைமாவட்ட மாநாடானது இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக மூன்றில் இருபங்கு பெரும்பான்மையில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தனது பதவியில் நீடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தால், இத்தகையதொரு வாக்கெடுப்பே நிகழாதது போல அவர் தனது பதவியில் நீடிக்கலாம்.

ஆனால் மறைமாவட்ட மாநாடானது இத்தகைய வாக்கெடுப்பின்மூலமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தன்னுடைய பதவியில் நீடிக்கலாம் என்ற முடிவுக்கு வரத்தவறினால், அவருடைய பணியானது மறைமாவட்ட மாநாடு முடிந்து 30–180 நாட்களுக்குள் நிறைவுபெறும். சரியான தேதியானது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு செய்த ஆலோசனைக்குப் பிறகு முடிவு செய்யப்படும். (206.2, 208, 239)

**205.14.** மறைமாவட்ட மாநாட்டினால் தீர்மானிக்கப்பட்டபடி நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவிலும், அவர்களுக்குப் பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரையிலும் பணிபுரியும்படி ஒன்று முதல் மூன்று அபிஷேகம் பெற்ற போதகர்களையும், ஒன்று முதல் மூன்று சாமானியர்களையும், இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவுக்குத் தேர்ந்தெடுத்தல்.

ஆனால் அந்த மறைமாவட்டத்தின் மொத்த உறுப்பினர் தொகை 5000க்கும் அதிகமாக இருந்தால், கூடுதலான ஒவ்வொரு 2500 உறுப்பினர்களுக்கும், மிஞ்சியிருப்பவர்கள் 2500இல் பெரும்பான்மை பெற்றிருந்தால் அதையும் சேர்த்து தலா

ஒரு கூடுதலான அபிஷேகம் பெற்ற போதகரும், தலா ஒரு கூடுதலான சாமானியரும் தேர்ந்தெடுக்கப்படலாம். (224)

**205.15.** மறைமாவட்டக் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கு, நியமிக்கப்பட்டிருக்கும் அபிஷேகம் பெற்ற போதகர்களில் ஐந்திற்கும் குறைவாக இல்லாமல், அதில் இரண்டு பேர் மறைமாவட்டக் கண்காணிப்பாளராகவும், அபிஷேகம் பெற்றிருந்தால் மறைமாவட்டச் செயலாளராகவும் இருந்து, நான்காண்டுகள் வரையிலும், அவர்களுக்குப் பின்வருபவர்கள் வரும்வரையிலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சாமானியனாக இருக்கும் மறைமாவட்டச் செயலாளர் அந்தக் குழுவின் வாக்களிக்காத உறுப்பினராக இருப்பார். மாநாடு துவங்குவதற்கு முன்பு தனது பணியை முடிப்பதற்கு ஏற்ற வகையில் மறைமாவட்ட மாநாடு கூடுவதற்கு முன்னரே இக்குழு கூடிவர வேண்டும். (229–231.10)

**205.16.** நான்காண்டுகள் கால அளவிலும், பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரையிலும் பணிபுரியும்படியாக ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட அபிஷேகம்பெற்ற போதகர்களைக் கொண்ட மறைமாவட்டக் குருத்துவக் கல்வி நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தல். (232)

**205.17.** அபிஷேகம் பெறுவதற்காகத் தகுதியானவர்களை ஆயத்தப்படுத்துவதைத் துரிதப்படுத்தவும், தன்னுடைய ஊழியர்களுக்கு ஆதரவையும், வளர்ச்சிக்கான வாய்ப்புகளைத் தரவும் ஒரு மறைமாவட்டமானது மறைமாவட்டக் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவிலும், மறைமாவட்டக் குருத்துவக் கல்வி நிர்வாகக் குழுவிலும் மறைமாவட்ட ஊழியக் குழுவாகப் பணியாற்றுவதற்குத் தேவையான எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கும். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட போதகர்கள் நான்கு ஆண்டுகளுக்கு இந்தப் பதவியில் இருப்பார்கள்.

இந்த மறைமாவட்ட ஊழியக் குழுவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளரைத் தலைமையாகக் கொண்டு மறைமாவட்டக் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழு மற்றும் மறைமாவட்டக் குருத்துவக் கல்வி நிர்வாகக் குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புகளைச் செய்யும் மறைமாவட்ட ஊழியக் குழுவாகச் செயல்படும். (216, 229–234.4)

**205.18.** விதி எண் 236க்கு ஏற்ற வகையில் ஒரு மறைமாவட்டத் திருச்சபை சொத்து நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தல். (206.1).

**205.19.** தனது சுய விருப்பத்தின்படி கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இரண்டையுமோ தேர்ந்தெடுத்தல்:

1. மறைமாவட்டக் கண்காணிப்பாளர் உட்பட குறைந்த பட்சம் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட மறைமாவட்ட நற்செய்திக் குழு,
2. மறைமாவட்ட நற்செய்தி இயக்குனர்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அடுத்த மறைமாவட்ட மாநாட்டின் இறுதி ஒத்திவைப்பு வரையிலும், பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரையிலும் பணியாற்றுவார்கள். (206.1, 215)

**205.20.** அவர்களுக்குப் பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரையில் பணியாற்றுவதற்காக, விதி எண் 241இல் கூறப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்றவகையில் ஒரு மறைமாவட்ட ஒய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தல். (206.1, 215)

**205.21.** அடுத்துவரும் மறைமாவட்ட மாநாட்டில் அதன் இறுதி ஒத்திவைப்பு வரை செயல்படும்படி, சம அளவிலான போதக மற்றும் சாமானிய உறுப்பினர்களைக் கொண்ட மறைமாவட்ட மாநாட்டு நிதிநிலைக் குழுவைத் தேர்ந்தெடுத்தல். தங்கள் பதவியின் நிமித்தமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், மறைமாவட்டப் பொருளாளரும் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள். (238–238.3)

**205.22.** நான்கு ஆண்டுகளுக்கு மேலான கால அளவிலும், அடுத்து வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரையிலும் பணிபுரியும்படி, மறைமாவட்டக் கண்காணிப்பாளரை உறுப்பினராகக் கொண்ட, ஐந்து உறுப்பினர்களடங்கிய மறைமாவட்ட மேல் முறையீட்டு நீதிமன்றம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல் (610).

**205.23.** பொதுச்சபை கூடி 16 மாதகங்களுக்குள்ளும், அல்லது பயணத்திற்கான விசா அல்லது பிற அசாதாரணமான ஆயத்தங்களினிமித்தம் தாமதம் ஏற்படும் இடங்களில் 24 மாதங்களுக்குள்ளும், ஒரு சிறப்புக் கூட்டத்தில், இரகசிய வாக்கெடுப்புமூலம் எல்லா சாமானிய பிரதிநிதிகளையும், ஒருவர் தவிர அனைத்துக் குருத்துவ பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்தல்; ஏனெனில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அந்த ஒருவராக இருக்கிறார். ஒவ்வொரு படி 3 மறைமாவட்ட மாநாடும் சம அளவிலான சாமானிய மற்றும் குருத்துவ பிரதிநிதிகளின்மூலம் பொதுச் சபையில் பிரதிநிதித்துவம் பெறும் உரிமையைப் பெற்றுள்ளது. பொதுச் சபைக்கூட்டத்தின்போது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் குருத்துவ பிரதிநிதிகளில் ஒருவராக இருப்பார்; மீதமுள்ள குருத்துவ பிரதிநிதிகள் அபிஷேகம் பெற்ற போதகர்களாக இருப்பார்கள். ஒருவேளை மறைமாவட்டக் கண்காணிப்பாளர் கலந்துகொள்ள முடியாவிட்டாலும் அல்லது பதவியில் காலியிடம் ஏற்பட்டு புது கண்காணிப்பாளர் இன்னும் தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தாலும், மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்குப் பதிலாக, ஒழுங்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுப் பிரதிநிதி கலந்துகொள்வார். குருத்துவ மற்றும் சாமானிய இரு பிரிவுகளிலும், அந்த மறைமாவட்டத்திற்குரிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் போல குறைந்தபட்சம் மூன்று மடங்கு அதிகமான நபர்களின் பெயர்களை நியமனக் குழு வாக்குச்சீட்டில் கொடுத்திருக்க வேண்டும். விதி எண்கள் 301.1–301.3 இன்படி இந்த நியமனதாரர்களிலிருந்து அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பிரதிநிதிகளும், மாற்றுப் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தவிர்க்கமுடியாத தடையேதும் இல்லாதிருப்பின், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் துவக்கம் முதல் கடைசிவரை பொதுச் சபையில் எல்லாக் கூட்டங்களிலும் உண்மையுடன் கலந்துகொள்ள வேண்டும் (25–25.2, 301.1–301.3, 303, 332.1)

**205.24.** தனது சுய தீர்மானத்தின்படி, தனது உள்ளூர் சபைக்கான துணை உறுப்பினர் நியமனத்திற்கான ஒரு முறையை அமைத்தல். (ஆனால்

பிரதிநிதித்துவ காரணத்திற்காக துணை உறுப்பினர்கள் முழு உறுப்பினர்களாக எண்ணப்படக்கூடாது). (108)

**205.25.** ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மறைமாவட்டத் தணிக்கைக் குழுவாலோ அல்லது ஒரு தணிக்கை நிறுவனத்தினாலோ அல்லது ஒரு தகுதிபெற்றப் பொதுக் கணக்காளராலோ மறைமாவட்டப் பொருளாளரின் பதிவேடுகளை தேசிய அல்லது மாநில சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது பிற செயல்படுத்தப்படக்கூடிய நிலைப்பட்டிலோ ஆண்டுதோறும் தணிக்கைச் செய்யப்பட ஏற்பாடு செய்தல். (225.24)

**205.26.** முந்தைய நான்காண்டுகளுக்கான அலுவலகப் பதிவேடுகள், மறைமாவட்டச் செயலாளர்மூலம், பொதுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல். (207.3–207.4, 220.7)

**205.27.** மறைமாவட்டக் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் பரிந்துரையின் பேரில், ஒரு போதகருக்கு ஓய்வுறவு வழங்குதல். மறைமாவட்ட இறை ஊழியர் அனுமதி சான்றுக்குழு மற்றும் மறைமாவட்ட ஊழியக் குழுவின் ஒப்புதலின் பெயரில் இது செய்யப்பட வேண்டும். (231.8, 536)

**205.28.** அந்த மறைமாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட வரையில் நசரேயத் திருச்சபையின் அனைத்துப் பணிகளையும் கவனித்து, கரிசனைக் கொள்ளுதல்.

**205.29.** ஏற்கெனவே பணி ஒதுக்கப்படாத, பணி சார்ந்த பிற அலுவல்களை, நசரேயத் திருச்சபையின் நல்லெண்ணத்திற்கும், ஒழுங்கிற்கும் ஏற்ற வகையில் கவனித்தல்.

**206. மறைமாவட்ட மாநாட்டிற்கான பிற விதிகள்.** தேசிய சட்டம் அனுமதிக்கும் இடங்களில், மறைமாவட்ட ஆலோசனைக் குழு பதிவு செய்யப்பட மறைமாவட்ட மாநாடு அதிகாரமளித்தல். மேற்கூறியபடி பதிவு செய்யப்பட்டால் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, இந்தப் பதிவுக்குத்தேவையான வகையிலும், வசதியான முறையிலும் தனது சொந்தத் தீர்மானத்தின்படி, வாங்கவோ, சொந்தமாக்கவோ, விற்கவோ, மாற்றவோ, அடமானம் வைக்கவோ, நம்பிக்கைப் பத்திரம் பெறவோ, ஈடுவைக்கவோ, குத்தகைக்கு விடவோ, நிலமோ அல்லது பொருளோ எந்தச் சொத்தையும் மாற்றவோ உரிமை உண்டு. (225.6)

**206.1.** *சட்டவிதி நூலில்* வேறு விதமாகக் கூறப்படாமலிருந்தால், கூடிய மட்டும் மறைமாவட்ட நிர்வாகக் குழுக்கள் மற்றும் பிற குழுக்களின் உறுப்பினர்கள் சம எண்ணிக்கையிலான குருத்துவ மற்றும் சாமானிய பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**206.2. படி1 மற்றும் படி 2ஐ சார்ந்த மறைமாவட்டக் கண்காணிப்பாளர்கள் 200.2இல் கொடுக்கப்பட்டிருக்கும் விதியின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.** படி 2 இல் இருக்கும் மறைமாவட்டமானது அதனுடைய தகுதிநிலையை எட்டும் வரையில் சில நேரங்களில் படி 1 மறைமாவட்டத்தகுதி நிலைக்குத் தள்ளப்படும்.

**206.3.** மறைமாவட்ட மாநாட்டின் அலுவல்களை அதற்குரிய அலுவலரால் தொடர்ந்து நடத்த இயலாமல் போனால், மறைமாவட்ட மாநாட்டைத் தள்ளிவைத்தால் அல்லது ரத்து செய்தால் அல்லது ஒத்திவைத்தால், அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளர் பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவோடு கலந்து ஆலோசித்து மறைமாவட்ட

மாநாடு ஒத்திவைக்கப்படுவதற்கு முன்பு தேர்ந்தெடுக்கப்படாத அனைத்து மறைமாவட்ட அதிகாரிகளையும் ஓராண்டு காலம் பணிபுரியும்படி நியமிக்கலாம்.

## D. மறைமாவட்ட மாநாட்டுக் குறிப்பேடு

**207.** இந்தக் குறிப்பேடு மறைமாவட்ட மாநாட்டின் வழக்கமான செயல்களின் பதிவேடாக விளங்கும்.

**207.1.** பொதுச் செயலாளரின் அலுவலகம் அனுமதித்த வகையில் இந்தக் குறிப்பேடு இருக்க வேண்டும். உள்ளூர் தேவைக்காக இவற்றைப் பிரிண்ட் செய்து பிரதிகளை எடுத்துக்கொள்ளலாம்.

**207.2.** பணிகளின் தனித்தனி அம்சங்கள், தனித்தனி பத்திகளில் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

**207.3.** பொதுச் சபை இதைப் பரிசீலனை செய்யும் என்ற நோக்கத்தை மனதில் கொண்டு, இந்தக் குறிப்பேடு கவனத்துடன் தயார் செய்யப்பட வேண்டும் (205.26, 220.7)

**207.4.** ஒவ்வொரு நான்காண்டுக்களுக்கான முழுமையான அலுவலகக் குறிப்பேடும் மறைமாவட்ட மாநாட்டுக் கோப்புகளிலும், பொதுச் சபையின் கோப்புகளிலும் பாதுகாத்து வைக்கப்பட வேண்டும். (220.5, 220.7)

**207.5.** பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவோடு கலந்தாலோசித்து, பொதுச் செயலாளர்தயாரித்தஉள்ளடக்கவரிசைக்கேற்பகுறிப்பேடுவரிசைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மறைமாவட்ட மாநாடு கூட்டப்படுவதற்கு முன்பாக இந்த உள்ளடக்க அட்டவணை மறைமாவட்டச் செயலாளருக்கு அளிக்கப்படும்.

**207.6.** இந்தக் குறிப்பேடானது உள்ளூர் சபைகளில் நியமிக்கப்படும் போதகர்களைப் பற்றிய குறிப்புகளை மட்டுமல்லாது, சபைக்கடுத்த எந்தவொரு ஊழியத்தையும் செய்துவரும் மறைமாவட்ட மாநாட்டின் அனைத்துக் குருத்துவ மற்றும் சாமானிய உறுப்பினர்களின் வழக்கமான மற்றும் சிறப்புப் பணிகளைப் பற்றிய குறிப்புகளையும் கொண்டிருக்க வேண்டும். ஓய்வூதியம் மற்றும் மறை மாவட்டத்தின் பயனுதவி காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பையுடைய ஓய்வூதியக் குழுவிற்கு அவர்கள் உதவி வேண்டி மனுக்களை அனுப்பும்போது இந்தக் குறிப்புகள் அவர்களைப் பற்றிக் கவனம் கொள்ள உதவும் (115).

## E. மறைமாவட்டக் கண்காணிப்பாளர்

**208.** மறைமாவட்ட மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் மாவட்டக் கண்காணிப்பாளர் அந்த மறைமாவட்ட மாநாடு முடிந்து 30 நாட்களுக்குப் பிறகுத் தன்னுடைய பணியைத் துவங்குகிறார். அவர் இரண்டு முழு மறைமாவட்ட மாநாடுகளுக்குப் பொறுப்பாக இருப்பார். அந்த இரண்டாம் மறைமாவட்ட மாநாடு முடிந்து 30 நாட்களுக்குப் பிறகு அவருடைய பதவி காலம் முடியும். இப்படிக்

கூறப்பட்டிருக்கும் மறைமாவட்ட மாநாட்டின்போது இந்தக் கண்காணிப்பாளர் மறுபடியுமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது அவருக்குப் பின்னால் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டுப் பொறுப்புகள் வழங்கப்படலாம். அதிகாரம்பெற்ற பொதுக் கண்காணிப்பாளரால் முதல் முறையாக நியமிக்கப்படும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அந்தச் சபை ஆண்டின் மீதிக் காலத்திலும், அடுத்து வரும் இரண்டு முழு மறைமாவட்ட மாநாட்டு ஆண்டுகளிலும், அவருக்குப் பின்வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டு பொறுப்பேற்கும் மறைமாவட்ட மாநாட்டின் இறுதி ஒத்திவைப்பிற்கு 30 நாட்களுக்குப் பிறகு வரை பணியாற்றுவார். இப்படிக் கூறப்பட்டிருக்கும் மறைமாவட்ட மாநாட்டின்போது இந்தக் கண்காணிப்பாளர் மறுபடியுமாக தேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது அவருக்குப் பின்னால் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டுப் பொறுப்புகள் வழங்கப்படலாம். மறைமாவட்டப் பணியிடத்தில் பணியாற்றும் எந்த மூப்பரும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் மற்றும் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் காண்காணிப்பாளரின் ஒப்புதல் இல்லாமல் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படவோ நியமிக்கப்படவோ முடியாது. (இது 115ஆம் விதியோடு ஒத்திருக்க வேண்டும்). (205.11–205.13)

**209.** மறைமாவட்ட மாநாடுகள் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் பதவியில் காலியிடம் ஏற்பட்டால், பொதுக் கண்காணிப்பாளர்கள் கூட்டாகவோ அல்லது தனிப்பட்டோ மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினரின் ஆலோசனையைக் கேட்டு அதை நிரப்பலாம். இந்த ஆலோசனையானது இந்த முழு குழுவும் நியமனத்திற்குத் தகுதியான பெயர்களை அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் கொடுக்கும் பெயர்களோடு சேர்க்கலாம். (239, 321)

**209.1.** படி 1 அல்லது படி 2இன் மறைமாவட்டக் கண்காணிப்பாளராக இருப்பவரின் பதவியானது அதிகாரத்தைப் பெற்றிருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின் பெயரில் காலியிடமாக அறிவிக்கப்படலாம். படி 3 மறைமாவட்டத்தைச் சார்ந்த மறைமாவட்ட கண்காணிப்பாளரின் பதவியானது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் மூன்றில் இரு பங்கு வாக்குகளைப் பெறுவதின் மூலமாகக் காலியிடமாக அறிவிக்கப்படும். (239, 321)

**209.2.** பதவியில் இருக்கும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தற்காலிகமாகப் பணியைச் செய்ய முடியாவிட்டால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு ஆலோசித்தப்பிறகு அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் இடைக்கான மறைமாவட்டக் கண்காணிப்பாளராகச் செயல்படும்படி தகுதிபெற்ற ஒரு மூப்பரை நியமிக்கலாம். பணியைச் செய்ய முடியாமல் போகும் நிலையைக் குறித்த கேள்வியானது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளராலும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலும் கண்டறியப்படும். (307.8).

**209.3.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இராஜினாமா செய்தாலோ அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ, அந்த மறைமாவட்ட அலுவலகத்தில் பணிபுரிபவர்கள், முதன்மை அதிகாரி அல்லது அவருடைய துணை அதிகாரி மற்றும்

அல்லது மறைமாவட்டத்தால் சம்பளம் கொடுக்கப்படும், மற்றும் கொடுக்கப்படாத உறுப்பினர்களான உதவி கண்காணிப்பாளர் மற்றும் செயலாளர் உடனடியாக தங்களுடைய இராஜினாமாவையும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் கடைசி பணிநாளில் சமர்ப்பிக்க வேண்டும். ஆனாலும் ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்கள் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலைப் பெற்று பணியாற்றலாம். ஆனால் புதிய மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தன்னுடைய பொறுப்பை எடுத்துக்கொண்டபிறகு அவர்கள் பணியாற்ற முடியாது. (245.3).

**209.4.** மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு கலந்து ஆலோசித்தப்பிறகு, அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்றபிறகு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட மறைமாவட்டக் கண்காணிப்பாளர் ஏற்கெனவே பணியாற்றியவர்களைத் தொடர்ந்து அந்தப் பணியில் இருக்கும்படியாக பரிந்துரை செய்யலாம். (245.3).

**210.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் போதகர்களுக்கும், மறைமாவட்டத்தின் சபையில் இருக்கும் உறுப்பினர்களுக்கும் மேற்பார்வையாளராகவும், அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தலைமைத்துவமாகவும் இருப்பதே அவருடைய மாதிரியாகும். அவர் இதை:

- ஜெப வாழ்க்கையின் மாதிரியாகவும், வேத வசனங்களின் மீது பற்றுதலைக் கொண்டும் காண்பிக்கிறார்.
- மறைமாவட்டத்தின் போதகர்களின் இடையே வோதகமரீதியான இறையியல் கோட்பாடுகளை ஊக்குவிக்கிறார்.
- வெஸ்லி பரிசுத்த இறையியலையும், பழக்கவழக்கங்களையும் மறைமாவட்டம் முழுவதும் ஊக்குவிக்கிறார்.
- சுவிசேஷத்தைப் பரப்புதல் மற்றும் மறைமாவட்டத்தில் புதிய திருச்சபைகளை நிறுவுதலைக் குறித்தத் தரிசனத்தை விதைக்கிறார்.
- நிர்வாகம் ஆரோக்கியமாக இருப்பதற்காக மறைமாவட்ட சபை உறுப்பினர்களுக்கு ஆதாரங்களைக் கொடுக்கிறார்.

**211. மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பதவிகள் பின்வருமாறு இருக்கின்றன:**

**211.1.** அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின் பெயரில் தனது மறைமாவட்டத்தின் எல்லைகளுக்குட்பட்ட உள்ளூர் சபைகளை அமைத்தல், அங்கீகரித்தல், மேற்பார்வை செய்தல். (100, 538.15).

**211.2.** கூடுமான வரையிலும், தேவைக்கேற்பட்ட வகையிலும், தனது மறைமாவட்டத்திலுள்ள உள்ளூர் சபைகளைக் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒருமுறையாவது சந்தித்து, ஆவிக்குரிய, நிதிக்கடுத்த மற்றும் குருத்துவ காரியங்களைச் சபை நிர்வாகக் குழுக்களோடு கலந்தாலோசித்து, கண்காணிப்பாளர் சரியெனக் கண்ட உதவிபூர்வமான ஆலோசனைகளை அளித்து வருதல்.

**211.3.** ஒரு சபையானது ஆரோக்கியமில்லாமலும், வீழ்ந்துகொண்டே இருக்கும் நிலையிலும் இருக்கிறது என்பதையும், அது தொடர்ந்தால் அது அந்தச் சபை மற்றும்

அதனுடைய ஊழிய செயல்திறனின் நம்பகத்தன்மையைப் பாதிக்கும் நிலையில் இருக்கும் என்று மறைமாவட்டக் கண்காணிப்பாளர் கண்டுபிடிக்கும் சூழ்நிலையில் அவர் அந்தப் போதகரையோ அல்லது அந்தப் போதகர் மற்றும் சபை நிர்வாகக் குழுவையோ சந்தித்து அந்தக் சூழ்நிலைகளைக் குறித்து ஆராய்ந்துப் பார்ப்பார். ஊழியத்தின் செயல்திறனைப் பாதிக்கும் வகையில் காணப்படும் சூழ்நிலைகள் ஏற்படக் காரணமாக இருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மறைமாவட்டக் கண்காணிப்பாளர் போதகரோடும், சபை நிர்வாகக் குழுவோடும் சேர்ந்து பணியாற்றுவார்.

போதகர் மற்றும்/ சபை நிர்வாகக் குழுவோடு சேர்ந்து பணியாற்றிய பிறகும் அந்தச் சபையில் வெளியில் இருந்து ஊடுருவல் தேவைப்படுகிறது என்று நினைத்தால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அனுமதியோடு அவர் அந்தச் சூழ்நிலையைக் கையாளுவதற்கான சரியான முயற்சியை மேற்கொள்ளலாம். அப்படிப்பட்ட முயற்சிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும், வேறு சில செயல்முறைகளும் செய்யப்படலாம்:

1. போதகரை நீக்குதல்
2. சபை நிர்வாகக் குழுவைக் கலைத்தல்
3. இப்படிப்பட்ட விசேஷ விதமான ஊடுருவல்கள் அந்தச் சபையின் ஆரோக்கியத்தையும், ஊழியத்தின் செயல்திறனையும் சீரமைக்கத் தேவைப்படும் ஒன்றாக இருக்கின்றன.

ஒழுங்குப்படுத்தப்பட்டசபையின் சொத்துக்கள் அந்த உள்ளூர் சபையின் கட்டுப்பாட்டிலேயே தான் இருக்கும். இது விதி 106.5 இல் காணப்படுவதைப் போல செயல்பாடில்லாததாக அறிவிக்கப்பட்டாலோ அல்லது 106.1. விதியில் காணப்படுவதைப் போல ஒழுங்குபடுத்தப்படாத நிலையில் இருந்தாலோ மாறுபடும். எடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளைக் குறித்து 30 நாட்களுக்குள்ளாகப் பொதுக் கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

**211.4.** மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் கருத்தின்படி ஒரு சபையானது நெருக்கடியில் இருக்கிறது என்று விதி 126.1இன்படி அறிவிக்கப்பட்டப்பிறகு அங்கு நியமிக்கப்பட்ட ஊடுருவல்கள் எல்லாவற்றையும் அது பூர்த்திசெய்து, சாதாரண சூழ்நிலையில் தன்னுடைய ஊழியத்தைத் தொடரும் நிலைக்கு வந்தால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அது நெருக்கடியிலிருந்து நீங்கிவிட்டதாக அறிவிக்கப்படும். 30 நாட்களுக்குள் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இதை அதிகாரத்தில் இருக்கும் மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கு அறிவிப்பார்.

**211.5.** ஒவ்வொரு உள்ளூர் சபை நிர்வாகக் குழுவோடும், தொடர்ச்சியாக நடைபெறும் சபை/குருத்துவம் சார்ந்த மறுஆய்வை விதிகள் 123–123.7இன் படி அட்டவணையிட்டு கூட்டம் நடத்துதல். தொடர்ந்து நடைபெறும் சபை/குருத்துவம் சார்ந்த மறுஆய்வுகளைக் குறித்த ஆண்டு அறிக்கையை மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிற்கும், அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளருக்கும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

**211.6.** தன்னுடைய மாநாட்டு மறைமாவட்டத்திற்குள் இருக்கும் நசரேயத் திருச்சபையின் சபை சார்ந்த ஊழியங்களை விசேஷமாக மேற்பார்வை செய்தல்.

**211.7.** மறைமாவட்டச் செயலாளரின் பதவியில் காலியிடம் ஏற்படும்போது யாரையாவது அதை நிரப்பும்படி மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிற்கு நியமனம் செய்தல். (219.1).

**211.8.** மறைமாவட்டப் பொருளாளரின் பதவியில் காலியிடம் ஏற்படும்போது யாரையாவது அதை நிரப்பும்படி மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிற்கு நியமனம் செய்தல். (219.1).

**211.9.** விசேஷமான ஊழியமான நூல் விநியோகத்தின் மூலமாக பரிசுத்த சுவிசேஷத்தை ஊக்குவிக்கவும், விரிவாக்கவும் ஒரு மறைமாவட்ட நூல்விநியோக அதிகாரியை நியமித்தல்.

**211.10.** சபையின் நிர்வாகக் குழுவோடு ஆலோசித்து, ஒரு உள்ளூர் சபைக்குப் போதகராக இருக்கும்படி ஒரு மூப்பரையோ அல்லது உரிமம் பெற்ற ஊழியரையோ நியமனம் செய்தல். இப்படிப்பட்ட நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்தல் அல்லது ஒப்புதல் அளிக்காமல் இருத்தல், விதி 115இல் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல இது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு சேர்ந்து முடிவெடுக்கப்பட வேண்டிய காரியங்களாகும். (129.2, 159.8, 225.16)

**211.11.** சபையின் நிர்வாகக் குழு சபை/குருத்துவ உறவைக் குறித்து மறுஆய்வு செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டு 90 நாட்களுக்குள் ஒரு விசேஷமான சபை/குருத்துவ உறவைக் குறித்த மறுஆய்வை அந்த உறவின் தொடர்ச்சியைக் குறித்து நடத்துதல்.

**211.12.** ஒரு குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகரை அதனுடைய போதகராகக் கொண்டிராத ஒரு உள்ளூர் சபையின் சபை நிர்வாகக் குழுவிடமிருந்து நசரேயத் திருச்சபையின் எந்த ஒரு உறுப்பினராவது உள்ளூர் போதகரின் அனுமதியையோ, உள்ளூர் போதகரின் அனுமதியைப் புதுப்பிக்கவோ விரும்பினால் இவ்வாறு அனுமதி அளிக்கப்படுவதை ஆதரித்தல் அல்லது மறுத்தல். (531.1, 531.3)

**211.13** ஊதியம் பெறாத துணை போதகர்களையோ அல்லது ஊதியம் பெறும் உள்ளூர் உதவியாளர்களையோ (துணை போதகர்கள், ஊழியர்கள் அல்லது கிறிஸ்தவ கல்வியின் இயக்குனர்கள், சிறுவர், வாலிபர், பெரியவர், இசை, பாலர்/பள்ளிகள், மேலும் பல) நியமிக்கும்படி எழுத்துப்பூர்வமாக போதகர் மற்றும் உள்ளூர் சபை நிர்வாகக் குழுவிடமிருந்து பெரும் விண்ணப்பத்தை அங்கீகரித்தல் அல்லது மறுத்தல். ஊதியம் பெறும் உதவியாளர்களை நியமிப்பதில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர்கள் கருதும் கடைசி நிலைப்பாடாக அந்தச் சபை தன்னுடைய உள்ளூர், மறைமாவட்ட மற்றும் பொதுவான கடமைகளை எப்படிச் சந்திக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. குருத்துவ உதவியாளர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுப்பது போதகருடைய பொறுப்பாகும். ஆனாலும், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டவரை வேண்டாம் என்று சொல்வதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். (129.27, 159–159.8)

**211.14.** கிறிஸ்தவ பகல்நேரப் பள்ளித் திட்டங்களை நிறைவேற்ற அனுமதிக்குமாறு உள்ளூர் சபைகள் வேண்டுகோள் அனுப்பும்போது, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினரோடு சேர்ந்து, இதற்கு அனுமதி கொடுத்தல் அல்லது மறுத்தல் (151, 225.14, 517)

**211.15.** அந்த மறைமாவட்டத்தின் அனைத்துச் சட்டபூர்வமான பத்திரங்களிலும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் செயலாளருடன் சேர்ந்து கையொப்பமிடுதல், செயல்படுத்துதல். (225.6)

**211.16.** அந்த மறைமாவட்டத்திலுள்ள ஊதியம் பெறும் உதவியாளர்களின் பெயர்களை மறைமாவட்ட ஆலோசனைக் குழுவுக்கு நியமனம் செய்தல்; அவர்கள் பணியை மேற்பார்வை செய்தல். (245)

**211.17.** விதி எண் 117க்கு ஏற்ப போதகர்களை நியமித்தல்.

**211.18.** ஒரு சபையானது நிறுவப்பட்டு ஐந்தாண்டுகள் முடிவடையாமல் இருந்தாலோ அல்லது அந்தச் சபையின் வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 35க்கும் குறைவாக இருந்தாலோ அல்லது தொடர்ந்து ஒழுங்காக மறைமாவட்டத்திலிருந்து நிதி உதவியைப் பெற்று வந்தாலோ, அல்லது நெருக்கடியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலோ, மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலோ, அந்தச் சபையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் (உக்கிராணிகள், காப்பாளர்கள்), ஓய்வுநாள் பள்ளி ஊழியக் குழுவின் தலைவரையும், பிற சபை அலுவலர்களையும் (செயலாளர், பொருளாளர்) நியமிக்கலாம். (117, 126)

**211.19.** விதி எண்கள் 606–606.3களின்படி, தனது மறைமாவட்டத்திலுள்ள ஒரு போதகருக்கு விரோதமாக எழுத்துமூலம் அனுப்பப்படும் புகார்களைப் பரிசீலனை செய்யும்படிக் கவனித்தல்.

**211.20.** மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு ஆலோசனை செய்து, போதகர் தவறாக நடந்துகொள்ளும் பட்சத்தில் சரியான நேரத்திலும், மீட்கும் படியாகவும் போதகருக்கும், அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினருக்கும், சபைக்கும், சமுதாயத்திற்கும்பதிலளிக்கும்படிதகுதிபெற்றபோதகர்களையும்,சாமானியர்களையும் கொண்ட மீட்புக் குழுவை உருவாக்குதல். இப்படிப்பட்டசூழ்நிலைகள் எழும்போது, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக அனுப்பமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக இந்த மீட்புக் குழுவை, மறைமாவட்டத்தின் திட்டத்தின்படி அனுப்புவார். (225.5, 540.1)

**211.21.** விதி எண் 510.4இன் படி மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அந்தக் காலக்கட்டத்திற்குரிய நற்செய்தியாளரோடு சுய–மதிப்பீடு மற்றும் மறுஆய்விற்கான நேரத்தை உருவாக்கி அதைச் செயல்படுத்துவார்.

**211.22.** மறைமாவட்டத் தலைமைத்துவத்தோடு சேர்ந்து, ஒவ்வொரு உள்ளூர் சபையும் தன்னுடைய தனிப்பட்ட பொதுவான, மறைமாவட்ட மற்றும் கல்விக்குத் தேவையான நிதியைக் குறித்த இலக்கை எட்டுவதற்கு ஊக்கமளித்தல்.

**212.** போதகர் பதவியில் காலியிடம் ஏற்பட்டால், சபை நிர்வாகக் குழுவின் அனுமதியோடு, அடுத்த மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டம் நடக்கும்வரை பணிபுரியும்படி அந்தக் காலியிடத்தை நிரப்பலாம். இவ்வாறு நியமிக்கப்பட்டவரின் பணி சபை நிர்வாகக் குழுவுக்கோ மற்றும் உள்ளூர் சபைக்கோ மனநிறைவைத் தரவில்லையென்றால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அவரைப் பதவிநீக்கம் செய்யலாம். (129.5, 524, 531.6)

**212.1.** சபை நிர்வாகக் குழு மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்று போதகருடைய பதவியில் காணப்படும் காலியிடத்தை நிரப்புவதற்காக நிரந்தர போதகர் வரும்வரை ஒரு தாற்காலிகமான போதகரை நியமிக்கலாம். சபை நிர்வாகக் குழுவோடு கலந்தாலோசித்து இந்தத் தாற்காலிகமான போதகருடைய பணியைத் தேவைப்படும் வேளையில் நீட்டிக்கவும் செய்யலாம். இந்த இடைக்கால போதகர், போதகர் செய்யும் எல்லாப் பணிகளையும் செய்வார். இப்படிப்பட்ட இடைக்கால நியமனம் நடைபெற்றிருக்கும் மறைமாவட்டத்தில் அந்தப் போதகர் உறுப்பினராக இருந்தால் அந்தத் திருச்சபையிலிருந்து மறைமாவட்ட மாநாட்டிற்கு இந்த இடைக்கால போதகர் பிரதிநிதியாகவும் கூட அனுப்பப்படலாம்.

இப்படி நியமிக்கப்பட்ட இடைக்கால போதகர் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் கீழ் எல்லா நேரத்திலும் இருப்பார். சபை நிர்வாகக் குழுவோடு கலந்தாலோசித்துவிட்டு இந்த இடைக்காலப் போதகரை மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நீக்கலாம். (526)

**213.** தனது மறைமாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட உள்ளூர் சபை ஏதேனும் ஒன்றில் போதகரோ அல்லது அதற்குப் பதிலாளோ இல்லாதபோது, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தாமே அந்த உள்ளூர் சபையில் போதகராக அனைத்துப் பணிகளையும் செய்ய அதிகாரம் உடையவராக இருக்கிறார். (514)

**213.1.** உள்ளூர் சபையின் வருடாந்தரக் கூட்டத்திலோ அல்லது சிறப்புக் கூட்டத்திலோ மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தலைவராக இருக்கலாம் அல்லது அந்தப் பணியைச் செய்ய ஒரு பதிலியை நியமிக்கலாம். (113.5)

**214.** மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டத்திற்கு அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளர் வரத் தவறினாலோ அல்லது தனக்குப் பதிலாக ஒரு பிரதிநிதியைக் கூட்டத்திற்கு வரும்படி நியமிக்கத் தவறினாலோ, மறைமாவட்டக் கண்காணிப்பாளரே, மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கூட்டலாம்; மறைமாவட்ட மாநாட்டினால் வேறு ஏற்பாடுகள் செய்யப்படும்வரை கூட்டத்திற்குத் தலைமை வகிக்கலாம். (307.5)

**215.** பின்வரும் குழுக்களில் ஏற்படும் காலியிடங்களை மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நிரப்பலாம்:

1. மறைமாவட்ட சபை நிதி குழு;
2. மறைமாவட்ட தணிக்கைக் குழு;
3. மறைமாவட்ட குருத்துவ கல்வி நிர்வாகக் குழு;
4. மறைமாவட்ட நற்செய்திக் குழு அல்லது மறைமாவட்ட நற்செய்தி இயக்குனர்;

5. மறைமாவட்ட திருச்சபை சொத்து நிர்வாகக் குழு;
6. அகில உலக ஓய்வுநாள் பள்ளி ஊழியக் குழு மற்றும் சீஷத்துவ ஊழியங்கள்;
7. மறைமாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றம்;
8. மற்றும் வேறு மறைமாவட்ட குழுக்கள் மற்றும் உடனடி குழுக்கள். அவை *சட்டநூலில்* கொடுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது மாநாட்டினால் உருவாக்கப்படவில்லை. (205.21, 205.25, 229.1, 232.1, 235, 236, 241, 610)

**215.1.** *சட்டநூலின்*படி ஏற்பாடு செய்யப்படாத அல்லது மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டத்தில் தேர்வு செய்யப்படாத, மறைமாவட்டக் குழுக்கள் மற்றும் நிரந்தரக் கமிட்டிகளின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிக்கு ஏற்றவர்களை மறைமாவட்டக் கண்காணிப்பாளரே நியமிக்கலாம்.

**215.2.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஆலோசனையைப் பெற்று மறைமாவட்ட மாநாடு துவங்குவதற்கு முன்பாகவே ஒரு நியமனக் குழுவை நியமித்து, அவர்களைப் பொதுவாக நடக்கும் குழுக்களுக்கும் பதவிகளுக்கும் நியமனங்களைப் பெறச் செய்தல். (203)

**216.** தன் பதவியின் நிமித்தமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மறைமாவட்ட ஆலோசனைக் கவுன்சில், மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மறைமாவட்டக் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழு இவற்றின் தலைவராக விளங்குவார். (224.2, 230.1)

**216.1.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தான் பணியாற்றும் மறைமாவட்டத்தின் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட, ஏற்கெனவே இருக்கும் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினராக இருப்பார். (205.20–205.21, 237, 241, 810, 811)

**217.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நிதி நிமித்தமான எந்தப் பரிவர்த்தனையும் வைத்துக்கொள்ள மாட்டார், பணத்தை எண்ணவோ கூடாது. மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மை வாக்கைப் பெற்று அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே அவரால் மறைமாவட்டத்திற்கான நிதியைக் கொடுக்க முடியும். அப்படிப்பட்ட செயல் நடந்தால், அது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பொழிப்புகளில் சரியாகப் பதிவுசெய்யப்பட வேண்டும். எந்த மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், அவருடைய நெருங்கிய குடும்பத்தாடும் தடையில்லாமலும், கண்காணிப்பில்லாமலும் நிதி கணக்குகள் அல்லது மறைமாவட்டத்தின் சொத்துக்கள் ஆகியவற்றைக் கையாளமுடியாது. அதற்கு அவர்கள் மிகவும் தெளிவாக வரையறுக்கப்பட்டு, உள் அதிகாரம் வழங்கப்பட்டதாக மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். நெருங்கிய குடும்பம் என்பது துணை, பிள்ளைகள், உடன் பிறந்தவர்கள் அல்லது பெற்றோர். (218, 222–223.2)

**218.** மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் எல்லா அலுவல் சம்பந்தமான செயல்களும் மறைமாவட்ட மாநாட்டின் மறு ஆய்வுக்கும், மாற்றுதலுக்கும் கட்டுப்பட்டவை; மேல் முறையீடு செய்யத் தக்கவை.

**218.1.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் எப்போதுமே அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் பொது கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழுவின் ஆலேசானைகளுக்கு உரிய மதிப்பினை அளிக்க வேண்டும். குருத்துவ ஏற்பாடுகள்

மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பணியைச் சார்ந்த பிற காரியங்களிலும் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்.

## F. மறைமாவட்டச் செயலாளர்

**219.** மறைமாவட்ட மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்படும் மறைமாவட்டச் செயலாளர் ஒன்று முதல் மூன்று வருடங்களுக்கும், அவருக்குப் பின்னால் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியில் அமர்த்தப்படும்வரையிலும் பணியில் இருப்பார். (225.22)

**219.1.** எந்தக் காரணத்தினாலாவது மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மறைமாவட்டச் செயலாளரின் பணி முற்றுப் பெற்றால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அந்தப் பதவியில் மற்றொருவரை நியமனம் செய்து, மறைமாவட்ட ஆலோசனைக் குழு அவரைத் தேர்ந்தெடுக்கும். (211.7)

**219.2.** தன் பதவியின் நிமித்தமாக மறைமாவட்டச் செயலாளர் மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராக இருப்பார். (201)

**220. மறைமாவட்டச் செயலாளரின் பணிகள் பின்வருமாறு:**

**220.1.** மறைமாவட்ட மாநாட்டின் அனைத்துப் பொழிப்புக்களையும் சரியாகப் பதிவு செய்து, உண்மையுடன் பாதுகாத்தல்.

**220.2.** அந்த மறைமாவட்டத்தின் அனைத்துப் புள்ளி விவரங்களையும் சரியாகப் பதிவுசெய்து, பாதுகாத்தல்.

**220.3.** அதிகாரப்பூர்வமான குறிப்பேட்டில் வெளியிடப்படுவதற்கு முன்பாக, தணிக்கைச் செய்யப்படும்படி, அனைத்துப் புள்ளிவிவர அட்டவணைகளையும் பொதுச் செயலாளருக்கு அனுப்புதல். (326.6)

**220.4.** மறைமாவட்ட மாநாட்டின் அனைத்து ஆவணங்களுக்கும் பாதுகாவலராக இருந்து தனக்குப்பின்வருபவரிடம் காலதாமதமின்றி அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

**220.5.** மறைமாவட்ட கோப்புகளுக்காக, ஒவ்வொரு நான்காண்டுகளுக்கான முழுமையான அலுவலகக் குறிப்பேட்டை வைத்தல். (207.4)

**220.6.** பொது அதிகாரிகளுக்கும், நசரேயத் திருச்சபையின் பொதுக் குழுக்களுக்கும் விநியோகம் செய்யப்படும்படி ஒவ்வொரு மறைமாவட்ட மாநாட்டுக்குமான அச்சிடப்பட்ட குறிப்பேட்டின் போதுமான பிரதிகள் பொதுத் தலைமையகத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

**220.7.** மறைமாவட்ட மாநாட்டுக்கான முந்தைய நான்காண்டுகளின் முழுமையான அலுவலகக் குறிப்பேட்டை, பொதுச் சபைக்குச் சமர்ப்பித்தல். (205.26, 207.3–207.4)

**220.8.** தனது பதவிக்கேற்றவகையில் செய்யவேண்டிய பிறகாரியங்களைக் கவனித்தல்.

**220.9.** அந்த வருடம் முழுவதும் தான் செய்யவேண்டிவரும் பணிகளைப் பற்றிய குறிப்புகளை ஏற்ற சபைக் குழுவுக்கோ அல்லது நிரந்த நிர்வாகக் குழுவுக்கோ சமர்ப்பித்தல்.

**221.** மறைமாவட்ட மாநாடு தேர்ந்தெடுத்ததற்கேற்ப மறைமாவட்டச் செயலாளர் அதே அளவு உதவியாளர்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## G. மறைமாவட்டப் பொருளாளர்

**222.** மறைமாவட்ட மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்படும் மறைமாவட்ட பொருளாளர் ஒன்று முதல் மூன்று வருடங்களுக்கும், அவருக்குப் பின்னால் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியில் அமர்த்தப்படும்வரையிலும் பணியில் இருப்பார். (225.21)

**222.1.** எந்தக் காரணத்தினாலாவது மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மறைமாவட்டப் பொருளாளரின் பணி முற்றுப் பெற்றால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அந்தப் பதவியில் மற்றொருவரை நியமனம் செய்து, மறைமாவட்ட ஆலோசனைக் குழு அவரைத் தேர்ந்தெடுக்கும். (211.8)

**222.2.** தன் பதவியின் நிமித்தமாக மறைமாவட்டப் பொருளார் மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராக இருப்பார். (201)

**223. மறைமாவட்டச் செயலாளரின் பணிகள் பின்வருமாறு:**

**223.1.** தனது மறைமாவட்டத்திலிருந்து பொதுச் சபையாலோ அல்லது மறைமாவட்ட மாநாட்டினாலோ அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலோ நிர்ணயிக்கப்பட்ட அல்லது நசரேயத் திருச்சபையின் தேவைகளுக்கேற்ப அனைத்து நிதியையும் பெற்று, மறைமாவட்ட மாநாடு மற்றும்/அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் மேற்பார்வை மற்றும் கொள்கைகளுக்கேற்ப அந்த நிதியைப் பகிர்ந்து அளித்தல்.

**223.2.** அனைத்து பண வரவு மற்றும் செலவுகளைப் பற்றிய சரியான கணக்குகளைப் பதிவுசெய்து, மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடமும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிடமும் சமர்ப்பிக்க மாதாந்திர அறிக்கையையும், மறைமாவட்ட மாநாட்டிற்குக் கொடுக்க வேண்டிய ஆண்டறிக்கையையும், தான் பதில் கூறும் விதத்தில் ஏற்படுத்தி அதைச் சமர்ப்பித்தல்.

## H. மறைமாவட்ட ஆலோசனைக் குழு

**224.** மறைமாவட்ட ஆலோசனைக் குழுவில் தனது பதவியின் நிமித்தமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளரும் மூன்று நபர் வரையிலான அபிஷேகம் பெற்ற போதகர்களும், மூன்று நபர் வரையிலான சாமானியர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது நான்கு ஆண்டுகளுக்கும் மிகாத வகையிலோ பணிபுரியும் கால அளவிலோ, இரகசிய வாக்கெடுப்பு மூலம் மறைமாவட்ட மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் அடுத்த மறைமாவட்ட மாநாட்டின் இறுதி ஒத்திவைப்பு வரையிலும், தமக்குப்

பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பேற்கும் வரையிலும் பணிபுரிவார்கள். ஆனாலும் அந்தக் குழுவில் ஒரு பகுதியானது வருடாவருடம் தேர்ந்தெடுக்கப்படலாம். எனவே அவர்களுடைய பணிக்காலம் மாறுபட்டதாக இருக்கும்.

ஆனால் மறைமாவட்டத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 5000க்கும் மேலிருந்தால், கூடுதலான ஒவ்வொரு 2500 உறுப்பினர்கள் மற்றும் இறுதியில் வரும் 2500இல் பெரும்பான்மை இவற்றிற்கேற்ப தலா ஒரு கூடுதலான அபிஷேகம் பெற்ற போதகரையும், ஒரு கூடுதலான சாமானியரையும் உறுப்பினர்களாகப் பெறுவர். (205.14)

**224.1.** மறைமாவட்ட ஆலோசனைக் குழுவில் ஏதேனும் காலியிடம் ஏற்பட்டால் எஞ்சியுள்ள உறுப்பினர்களால் அது நிரப்பப்படவேண்டும்.

**224.2.** தனது பதவியின் நிமித்தமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் தலைவராக விளங்குவார்.

**224.3.** இந்தக் குழுவானது தன்னுடைய உறுப்பினர்களிலிருந்து ஒரு செயலாளரைத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். அவர் அந்தக் குழுவின் எல்லாக் காரியங்களையும் சரியாகப் பதிவுசெய்து தனக்குப் பின்னால் வருபவரிடத்தில் சரியாக ஒப்படைப்பார்.

**224.4.** மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிலுள்ள சாமானிய உறுப்பினர்கள் தங்கள் பதவியின் நிமித்தமாக மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினர்களாக இருப்பார்கள். மாவட்ட SDMI கூட்டமைப்பு, NMI கூட்டமைப்பு மற்றும் NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களாகவும் இருப்பார்கள்.

**225. மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பணிகள் பின்வருமாறு:**

**225.1.** விதி எண் 114.1.க்கு ஏற்ற வகையில் புள்ளி விவர ஆண்டின் துவக்கம் மற்றும் முடிவுக்குத் தேதிகளைக் குறித்தல்.

**225.2.** அந்த மறைமாவட்டத்திலுள்ள போதகர்கள் மற்றும் உள்ளூர் சபைகளைப் பற்றிய செய்திகளை மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கு அளித்தல்; இவைபற்றி அவரோடு ஆலோசனை செய்தல். (115.6, 519)

**225.3.** மூன்று பொறுப்பில் உள்ள அபிஷேகம் பெற்ற போதகர்களையும், இரண்டு சாமானியர்களையும் கொண்ட குழுவை போதகர்கள்மேல் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் விசாரணைக் குழுவாக நியமித்தல். (606–606.3)

**225.4.** குருத்துவ உறுப்பினர் மீது சாட்டப்படும் குற்றத்தை விசாரிக்க ஒரு விசாரணை நீதிமன்றம் நிறுவுதல். (606.5–606.6)

**225.5.** சட்டநூலில் காணப்படும் வழிகாட்டுதல்களோடு ஒத்துப்போகும் விதத்தில் தக்க நேரத்தில், மனதுருக்கத்தோடு, போதகருக்கல்லாத விதத்தில் நடந்துகொள்ளும் குருத்துவ உறுப்பினர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும், இதில் சம்பந்தப்பட்டிருக்கும் சபையாரைக் கையாளும் விதத்தில் ஒரு எழுத்துப்பூர்வமான திட்டத்தை உருவாக்கி அதை வருடாவருடம் மறுஆய்வு செய்தல். (538.20, 539–539.13)

**225.6.** தேசிய சட்டம் அனுமதிக்கும் இடங்களில், மறைமாவட்ட மாநாட்டின் உத்தரவைப் பெற்று மறைமாவட்ட ஆலோசனைக் குழுவைப் பதிவு செய்தல். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட பிறகு மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, தனது சொந்த தீர்மானத்தின்படி வாங்கவோ, சொந்தமாக்கவோ, விற்கவோ, மாற்றவோ, அடமானம் வைக்கவோ, அனுமதிச் சான்று அளிக்கவோ, ஈடுவைக்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது நிலம் மற்றும் பிற சொத்துக்களை குழுவின் நோக்கத்திற்குத் தேவையானது அல்லது வசதியானது என்ற வகையில் மாற்றவோ அதிகாரம் பெற்றிருக்கும். மறைமாவட்ட ஆலோசனைக் குழு பதிவு பெற்றிருந்தாலும் அல்லது பெறாமலிருந்தாலும், அதனுடைய எல்லா சொத்து மாற்றங்கள், அடமானங்கள், அடமானங்களை விடுவித்தல், ஒப்பந்தங்கள் மற்றும் பிற சட்டப்பூர்வமான பத்திரங்கள் இவற்றில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் செயலாளருமோ அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் செயலாளருமோ அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் உத்தரவைப் பெற்ற பிற நபர்களோ கையொப்பம் இடுவார்கள். (206)

**225.7.** மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது இணைப்பை ஏற்படுத்தும் போது, அதைக் குறித்த சட்டங்களையோ அல்லது துணைச் சட்டங்களையோ அல்லது அதைப் போலவே இருக்கும் பிற நீதித்துறை ஆவணமோ *நசரேயத் திருச்சபையின் சட்டநூலில்* இருக்கும் விதிகள் ஆளுகை செய்யும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர்கள் கூறும் சில காரியங்களை அவர்கள் அதில் சேர்த்துக்கொள்வார்கள். இதன் மூலமாக, அந்த இணைக்கப்பட்ட நிறுவனம் நசரேயத் திருச்சபையை விட்டு விலக நினைக்கும்போது அதனுடைய சொத்துக்கள் நசரேயத் திருச்சபையை விட்டு விலகாமல் இருக்கும். அந்த மறைமாவட்டத்தின் இணைப்பானது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளருடைய பரிந்துரையின்பேரில் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவினால் அங்கீகரிக்கப்படும்போது, அந்த இணைப்பிற்கான சட்டங்கள் பொதுச் செயலாளரின் அலுவலகத்திற்கு மறுஆய்விற்காகவும், பதிவு செய்வதற்காகவும் அனுப்பப்படும். அவர்கள் அதில் விதி எண் 102.4க்கு சம்பந்தமான காரியங்களை அதில் சேர்த்துக்கொள்வார்கள். (225.6)

**225.8.** பதிவு செய்யப்பட அனுமதியளிக்காத தேசிய சட்டங்களைக் கொண்டுள்ள பகுதிகளில் மறைமாவட்ட மாநாடானது, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவையே மறைமாவட்டத்தின் காப்பாளராகத் தேர்ந்தெடுக்கலாம். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, தனது சொந்தத் தீர்மானத்தின்படி வாங்கவோ, சொந்தமாக்கவோ, விற்கவோ, மாற்றவோ, அனுமதிச் சான்று அளிக்கவோ, அடமானம் வைக்கவோ, ஈடு வைக்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது நிலம் மற்றும் பிற சொத்துக்களை அந்த மண்டலத்தில் தனது பணியைத் தொடர்ந்து நிறைவேற்றும் நோக்கத்தோடு தேவையானது அல்லது வசதியானது என்ற வகையில் மாற்றவோ அதிகாரம் பெற்றிருக்கும். (102.6, 106.2, 225.6)

**225.9.** உள்ளூர் சபைகள் பதிவுசெய்துகொள்ளத்தக்கதாகச் சட்டப்பூர்வமான வசதியுள்ள நாடுகளில், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, ஒரு திறமையான சட்டநுணுக்க ஆலோசகரின் ஆலோசனையின்படி, அந்த மறைமாவட்டத்திலுள்ள நாடு மற்றும் நாடுகளுக்கேற்ப மாதிரி பதிவுப் படிவம் ஒன்றை அளிக்க வேண்டும். விதி எண்கள் 102.102.5களில் கூறப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளும், எப்போதுமே இந்த மாதிரிப் பதிவுப் படிவங்களில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

**225.10** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மறைமாவட்ட இலாக்காக்கள், குழுக்கள் இவற்றை மேற்பார்வைப் பார்க்கும் பணியில் அவருக்கு ஆலோசனைக் கூறுதல்.

**225.11.** கண்காணிப்பாளர் ஆரோக்கியமாகச் செயல்படுவதற்கும், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நல்ல பலமான ஆவிக்குரிய வாழ்க்கையைப் பெற்றிருப்பதற்கும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஆலோசனையின்படி மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தொடர்ந்து பணியாற்றும் ஏழாம் வருடத்திலேயோ அல்லது அதற்குப் பிறகோ கட்டாய விடுமுறையை அளிப்பார். இந்தக் கட்டாய விடுமுறையின் நேரத்தில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் பெற்றுக்கொண்டிருக்கும் சம்பளம் மற்றும் இதரச் சலுகைகளும் கொடுக்கப்படும். மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இந்தக் கட்டாய விடுமுறையின் காலத்தில், தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய திட்டம் மற்றும் இந்த விடுமுறையின்போது அவசியமான கடமைகளை எப்படிச் செய்வது போன்றவற்றைக் குறித்து மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு சேர்ந்து ஆலோசனை நடத்துவார்.

**225.12.** ஒரு மறைமாவட்ட மையத்தை உருவாக்குவதற்கான திட்டம் ஏதேனும் திட்டமிடப்பட்டிருந்தால் அது பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன்பு பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவிடமிருந்து எழுத்துமூலமான ஒப்புதலைப் பெற வேண்டும் (319).

**225.13.** போதகராகப் பணிபுரியும் அனுமதிப்பெற்ற போதகரின் அனுமதி புதுப்பிக்கப்பட பரிந்துரை செய்தல். (532.5)

**225.14.** கிறிஸ்தவ பகல்நேர பள்ளித் திட்டங்களை நடத்த அனுமதிகோரி உள்ளூர் சபையிலிருந்து வரும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது அனுமதி மறுத்தல். மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் ஆலோசனைக் குழுவின் சுய தீர்மானத்தின்படி, ஒரு மறைமாவட்டக் கிறிஸ்தவ பகல்நேரப் பள்ளியில் செயல்படுத்தும்படியானக் கொள்கை, வழிமுறைகள் மற்றும் கலை ஞானம் இவற்றை மறைமாவட்ட ஆலோசனைக் குழுவுக்குப் பரிந்துரை செய்தல், அத்தகைய வாரநாள் பள்ளிகள் நிறுவப்பட, தாங்கப்பட, செயல்படுத்தப்பட உதவி செய்தல் இவையே இந்தக் கமிட்டியின் பணியாகும். (151, 211.14, 517)

**225.15.** கருணையுள்ள ஊழிய மையங்களை ஆண்டுதோறும் உருவாக்குவதற்காக பிராந்திய வழிமுறைகளின்படி அனுமதியளித்தல். மறைமாவட்டத்தால் அனுமதியளிக்கப்படும் கருணையுள்ள ஊழிய மையங்கள் மட்டுமே ‘‘அங்கீகரிக்கப்பட்ட

ஊழிய சிறப்புகளாக'' கருதப்படும். அப்படியிருந்தால் மட்டுமே விதி எண் 153.1. இல் காணப்படும் காணிக்கைத் தொடர்பான விதிகள் இதற்குப் பொருந்தும்.

**225.16.** உள்ளூர் சபை நிர்வாகக் குழு அபிஷேகம் பண்ணப்பட்ட போதகரையோ அல்லது உரிமம் பெற்ற போதகரையோ, அந்த நபர் அந்த உள்ளூர் சபையின் உறுப்பினராக இருக்கும் காலத்தில் அல்லது அந்த உள்ளூர் சபையின் சம்பளம் வழங்கப்படும் அல்லது வழங்கப்படாத இணையாக இருக்கும் காலத்தில் அவரைப் போதகர் என்றழைக்கும்படியான அதிகாரத்தை வழங்குதல் அல்லது வழங்காமல் இருத்தல். இந்த முடிவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் உதவி ஆலோசனையின் பேரில் எடுக்கப்படும். (115, 129.2, 159.8, 211.10)

**225.17.** நரசேயத் திருச்சபையின் நேரடியான வழிகாட்டுதலின் கீழ் இல்லாத தனிப்பட்ட சபை செயல்பாடுகளைத் தொடர்ந்து நடத்துவதற்காகக் குருத்துவ உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பத்தை அல்லது தனிப்பட்ட ஊழியம் அல்லது சபையால் அங்கீகரிக்கப்படாத செயல்களைச் செய்ய அல்லது ஒரு தனிப்பட்ட சபையை நடத்தும் பணியாளர்களோடு தொடர்பு வைத்திருத்தல் அல்லது மதரீதியான வேறு குழுக்களோடோ அல்லது வேறு சபைப் பிரிவோடோ சேர்ந்திருத்தலுக்காக அங்கீகரித்தல் அல்லது அங்கீகரிக்காமல் இருத்தல். இப்படிப்பட்ட விண்ணப்பங்களின் மீதான அங்கீகாரம் வருடாவருடம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் (528, 538.13)

**225.18.** மறைமாவட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஊதியம்பெறும் உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிநீக்கம் செய்தல். (245–245.1)

**225.19.** மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஆலோசனையின் பெயரில் மாநாடுகளுக்குகிடையே நிதி சம்பந்தமான கூட்டமைப்பாகப் பணியாற்றுதல். இந்த நேரத்தில் தேவைப்படும் இடத்தில் செயல்பாட்டைக் குறித்த நிதிஅறிக்கையில் தேவைப்படும் மாற்றங்களைச் செய்து அதை மறைமாவட்ட மாநாட்டிற்கு அறிவிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருத்தல். (223.1)

**225.20.** நசரேயத் திருச்சபைக்காக அன்றி, வேறு ஏதேனும் தனிப்பட்ட அல்லது கூட்டு முயற்சிக்குப் பயன்படுத்தப்படாதபடி, மறைமாவட்டத்தின் அனைத்து நிலம் மற்றும் இடத்துக்குரிய சொத்துக்களைச் சரிவரப் பாதுகாத்தல். (102.4, 106.5, 206)

**225.21.** மறைமாவட்டப் பொருளாளரைத் தேர்ந்தெடுக்க. இவர் ஒன்றிலிருந்து மூன்று வருடங்களில் பணியாற்றுவார் அல்லது அவருக்குப் பின்னால் வரும் நபர் தேர்ந்தெடுக்கப்பட்டும் பணியிலமர்த்தப்படும் வரையிலும் பணியில் இருப்பார். (222)

**225.22.** மறைமாவட்டச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க. இவர் ஒன்றிலிருந்து மூன்று வருடங்களில் பணியாற்றுவார் அல்லது அவருக்குப் பின்னால் வரும் நபர் தேர்ந்தெடுக்கப்பட்டும் பணியிலமர்த்தப்படும் வரையிலும் பணியில் இருப்பார். (229)

**225.23.** நிலத்தின் உரிமையைச் சரிசெய்வதற்காக விதி எண் 106.2 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிகளின்படி நசரேயத் திருச்சபையிலிருந்து நீங்கும் அல்லது நீங்க நினைக்கும் உள்ளூர் சபையின் முயற்சியை அங்கீகரித்தல் அல்லது அங்கீகரிக்காமல் விட்டுவிடுதல்.

**225.24.** தேவைப்பட்டால், பின்வரும் மறைமாவட்ட மாநாடு முடியும் வரையில் விதி எண் 205.25இன்படி ஒரு மறைமாவட்டத் தணிக்கைக் குழுவை உருவாக்குதல். (205.25).

**225.25.** இந்தக் குழு செய்த பணிகளைக் குறித்தும், எத்தனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன என்பதைக் குறித்தும் மறைமாவட்ட மாநாட்டிற்கு ஒரு ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

**226.** ஒரு குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகரோ, டீக்கனாரோ, உரிமம்பெற்ற போதகரோ, கிறிஸ்தவ கல்வி போதகரோ, அல்லது ஒரு பெண் டீக்கனாரோ தாங்கள் உறுப்பினர்களாக இருக்கும் மறைமாவட்ட மாநாடு கூடுவதற்கு முன்பு, மற்றொரு மறைமாவட்ட மாநாட்டுக்கு மாற்றப்பட விரும்பினால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது அவர்கள் உறுப்பினர் தகுதியை இடமாற்றி உத்தரவிடலாம். அவர்களைப் பெற்றுக்கொள்ளும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவால் இந்த மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்படலாம். இவ்வாறு பெற்றுக்கொள்ளும் மறைமாவட்டத்தில் மாற்றப்பட்டவர்களுக்கு பூரண உரிமையும், உறுப்பினர் சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும். பெற்றுக்கொள்ளும் மறைமாவட்ட மாநாடானது இப்படிப்பட்ட மறைமாவட்ட ஆலோசனைக் குழு சார்ந்த மாற்றங்களுக்கான விண்ணப்பங்களை மறைமாவட்டக் குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்டக் குருத்துவக் குழுவின் பரிந்துரையின் பெயரில் கடைசி ஒப்புதலைக் கொடுக்கும். (205.8–205.9, 231.9–231.10, 508, 511, 537–537.2)

**226.1.** மற்றொரு சபைப் பிரிவோடு சேரும் வாஞ்சையுடைய, மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினர் ஒருவருக்கு, அவருடைய வேண்டுதலின்பேரில், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது சிபாரிசு சான்றிதழ் ஒன்றை அளிக்கலாம். (815)

**227.** ஒரு குறிப்பிட்ட உரிமம்பெற்ற பெண் டீக்கனார் உறுப்பினராக இருக்கும் உள்ளூர் சபையின் சபை நிர்வாகக் குழுவோடு கலந்தாலோசித்து, நியாயமான விசாரணை நடத்திய பின்னர், திருச்சபையின் நன்மைக்கு அது தேவையானது என்று கண்டால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலோடு அந்த உரிமம்பெற்ற பெண் டீக்கனாரை தாற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யலாம்.

**228.** மறைமாவட்ட மாநாடு நடைபெறும் வேளையில், வேறொரு நற்செய்தி ஆர்வமுள்ள சபைப் பிரிவிலிருந்து நற்சான்றிதழ்களைக் கொண்டுவரும் ஒரு உரிமம் பெற்ற அல்லது அபிஷேகம் பெற்ற போதகர், நசரேயத் திருச்சபையோடு இணைந்துகொள்ள விண்ணப்பம் அளித்தால், அவரது நற்சான்றிதழ்கள் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினால் சோதிக்கப்பட வேண்டும். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் சாதகமான பரிந்துரையின்பேரில் மட்டுமே, அத்தகைய விண்ணப்பத்தாரர்கள் உள்ளூர் சபையில் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். (520, 532.2, 535)

## I. மறைமாவட்ட குருத்துவ அனுமதிச்சான்றுக் குழு

**229.** மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவானது, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் உட்பட, குறைந்த பட்சம் 5 பொறுப்பில் இருக்கும் அபிஷேகம் பெற்ற ஊழியர்களைப் பெற்றிருக்கும். அதில் இரண்டுபேர் மறைமாவட்ட கண்காணிப்பாளராகவும், அபிஷேகம் பெற்றிருந்தால் மறைமாவட்டச் செயலாளராகவும் இருப்பார்கள். சாமானியனாக இருக்கும் செயலாளர் அந்தக் குழுவில் வாக்களிக்கமுடியாத உறுப்பினராகப் பணியாற்றுவார். இப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நான்கு வருடங்களுக்குப் பணியாற்றுவார்கள, அவர்களுக்கு அடுத்து வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்படும்வரை. ஆனால் அவர்களுடைய பணிக்காலம் மாறுபட்டதாக இருக்கும் ஏனென்றால் இந்தக் குழுவின் ஒரு பகுதியானது வருடா வருடம் தேர்ந்தெடுக்கப்படும். (205.15)

**229.1.** மறைமாவட்ட மாநாட்டுக்கு இடைப்பட்ட காலத்தில் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவில் காலியிடம் ஏற்பட்டால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் ஏற்ற நபரை நியமிக்கலாம். (215)

**230.** குருத்துவ அனுமதிச் சான்றுக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டப் பின்னர், கீழ்க்கண்டவாறு அது அமைக்கப்பெறும்படி மறைமாவட்டக் கண்காணிப்பாளர் குழுக் கூட்டத்தைக் கூட்டுவார்:

**230.1.** பதவியின் நிமித்தமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இந்தக் குழுவின் தலைவராக விளங்குவார்; ஆனால் அவருடைய வேண்டுகோளின்பேரில், குழுவானது, அடுத்த மறைமாவட்ட மாநாட்டின் இறுதிவரையில் தலைமைத் தாங்கும்படி ஒரு தாற்காலிகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். (216)

**230.2.** குழுவானது தனது உறுப்பினர்களில் ஒருவரை நிரந்தரச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கலாம். இவர் பதிவேடுகளுக்கான பொருத்தமான முறை ஒன்றை மறைமாவட்ட மாநாட்டின் நிதியைக் கொண்டு ஏற்பாடு செய்வார். இந்தப் பதிவேடுகள் மறைமாவட்டத்தின் உடமைகளாகும். குழுவின் அனைத்துப் பணிகளையும் செயலாளர் கவனமாகப் பதிவு செய்து, இந்தப் பதிவேடுகளையும், குழுவின் பணிகளுடன் சம்பந்தப்பட்ட பிற பதிவேடுகளையும் உண்மையுடன் பாதுகாத்து, தமக்குப் பின்வருபவரிடம் உடன்தானே ஒப்படைக்க வேண்டும்.

**231. குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் பணிகள் பின்வருமாறு:**

**231.1.** குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர், டீக்கனார் பதவிகளுக்காகவும், குருத்துவ அனுமதிப் பெறவும் ஒழுங்கான முறையில் மறைமாவட்ட மாநாட்டுக்குப் பெயர் சமர்ப்பிக்கப்பட்டவர்களைக் கவனத்துடன் ஆய்வு செய்து, அவர்கள் செயல்திறனை அறிதல்.

**231.2.** உள்ளூர் சபைக்கு அப்பாற்பட்டு செயல்படும் ஊழியங்களுக்காகவும் *சட்டநூலில்* கூறப்பட்ட சிறப்புப் பதவிகளுக்காகவும் தாங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையுடைய சாமானிய மற்றும் குருத்துவ விண்ணப்பத்தாரர்கள்

உட்பட ஊழியத்தின் எந்தவொரு குறிக்கப்பட்ட பதவிக்காகவும் அனுமதிச் சான்று பெறவிரும்பும் அனைத்து நபர்களையும் சோதித்து, அவர்கள் செயல்திறனை அறிதல்.

**231.3.** ஒவ்வொரு விண்ணப்பதாரரிடமும் கவனமாகக் கேள்விகள் கேட்டு, இரட்சிப்பைப் பற்றிய அவர் சொந்த அனுபவம், பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கினால் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல் பற்றிய அவரது சொந்த அனுபவம், வேதாகம கோட்பாடுகளைப் பற்றிய அறிவு, திருச்சபையின் கோட்பாடுகள், கிறிஸ்தவ பண்புகளைக் குறித்த உடன்படிக்கை மற்றும் கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கை மற்றும் ஆளுகை இவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல். பெற்றுள்ள கிருபைகள், ஈவுகள், அறிவுப்பூர்வமான, குணநலன் சார்ந்த, ஆவிக்குரிய தகுதிகள் இவைபற்றிய சான்றுகள். தான் அழைக்கப்பட்டுள்ளதாக அந்த விண்ணப்பதாரர் கருதும் ஊழியத்திற்கேற்ற போதுமான சரீர பெலன் இவைபற்றிய ஆய்வுகள் தேவையெனக் கருதினால் அவற்றையும் செய்ய வேண்டும்.

**231.4.** ஒவ்வொரு விண்ணப்பதாரரின் நடத்தையைக் கவனமாக ஆராய்ந்து அவருடைய நடத்தையில் அவர் நடந்துகொள்ளும் விதத்தில் அல்லது நடத்தையின் ஒழுங்கில் அது தொடர்ந்தால் அந்த விண்ணப்பத்தாரர் விண்ணப்பித்திருக்கும் ஊழியத்திற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் அது இருக்குமா என்பதை மிகவும் கவனமாக விசாரணை செய்து பார்த்தல்.

**231.5.** தாற்காலிகமாகத் தேவையின் நிமித்தம் போதகராக நியமிக்கப்பட்ட உள்ளூர் சபை ஸ்தல போதகர், இத்தகைய நியமனத்திற்குப் பின்வரும் மறைமாவட்ட மாநாட்டின் முடிவுக்குப் பின்னரும் அத்தகையப் பணியில் தொடரும்படி, மறு நியமன ஒப்புதல் அளிப்பதற்காக மறுஆய்வு செய்தல். **(531.6)**

**231.6.** ஒரு அபிஷேகம் பெற்ற போதகர் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக மறைமாவட்ட மாநாட்டில் பங்குகொள்ளத் தவறினால் இதற்கான காரணத்தை ஆய்வு செய்து கண்டுபிடித்தல்; குருத்துவ அபிஷேகம்பெற்ற போதகர், டீக்கன்மார்கள், பற்றி வெளியிடப்பட்ட பெயர் அட்டவணையில் இவர் பெயர் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டுமா என்பதுபற்றிய தனது பரிந்துரையை மறைமாவட்ட மாநாட்டிற்கு அளித்தல்.

**231.7.** ஒரு அபிஷேகம் பெற்ற போதகர் வேறொரு சபையில் தனது சபை உறுப்பினர் தகுதியை மாற்றியுள்ளார் அல்லது வேறொரு சபைப் பிரிவு அல்லது கூட்டத்தின் ஊழியத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ளார் அல்லது அதிகாரப்பூர்வமான அனுமதியின்றி தனிப்பட்ட செயல்களில் ஈடுபடுகிறார் என்ற குற்றச்சாட்டுகள் வருமானால் அந்த நபரைப்பற்றி ஆய்வு செய்து, குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர் பட்டியலில் அவரது பெயர் இருக்க வேண்டுமா என்பதுபற்றிய தனது பரிந்துரையை மறைமாவட்ட மாநாட்டிற்குச் சமர்ப்பித்தல். **(112, 538.13)**

**231.8.** ஒரு போதகர் ஓய்வுறவுக்காக வேண்டுகோள் அனுப்பினால், குழுவினரின் கருத்தின்படி, அவர் உடற்குறை அல்லது வயதின் காரணமாகச் செயல்பூர்வமான குருத்துவ ஊழியத்தைத் தொடர இயலாதவர் என்ற முடிவுக்கு வருவதைக் குறித்து மறைமாவட்ட மாநாட்டிற்குப் பரிந்துரை செய்தல். **(205.27, 536)**

**231.9.** மற்றொரு மறைமாவட்டத்திற்கு மாற்றுதல் கேட்கும் குருத்துவ உறுப்பினர்கள் மற்றும் ஊழியத்திற்கான அனுமதியைப் பெற்றவர்கள், மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட இடைக்கால மாற்றங்கள் ஆகியவற்றை மறைமாவட்ட மாநாட்டிற்குப் பரிந்துரை செய்தல். (205.9, 537–537.2)

**231.10.** குருத்துவ சான்றிதழ்களைப் பெற்றவர்களையும், குருத்துவ உறுப்பினர்களையும், ஊழியத்திற்கான அனுமதியைப் பெற்றவர்கள், மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட இடைக்கால மாற்றங்களைக் கொண்டு வருபவர்களை ஏற்றுக்கொள்ளும்படி மறைமாவட்ட மாநாட்டிற்குப் பரிந்துரை செய்தல். (205.8, 537–537.2)

## J. மறைமாவட்ட குருத்துவ கல்விக் குழு

**232.** மறைமாவட்ட குருத்துவ கல்விக் குழு என்பது ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட அபிஷேகம்பண்ணப்பட்ட போதகர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் ஒரு குழுவாகும். அவர்கள் மறைமாவட்ட மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் பணியாற்றுவார்கள். தங்களுக்குப் பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்படும்வரை அவர்களுடைய பணிக்காலம் இருக்கும். ஆனாலும் அவர்களுடைய பணிக்காலச் சில நேரங்களில் மாறுபடும் ஏனென்றால் இந்தக் குழுவின் ஒரு பகுதியானது வருடா வருடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருக்கிறது. (205.16)

**232.1.** மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், மறைமாவட்ட குருத்துவ கல்விக் குழுவில் காலியிடம் ஏற்பட்டால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் ஏற்ற நபரை நியமிப்பார். (215)

**233.** இந்தக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட மறைமாவட்ட மாநாடு முடிவடையும் முன்பு, கீழ்க்கண்ட வகையிலான அமைப்புக்காகவும், பணி ஒதுக்கீட்டிற்காகவும், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது மறைமாவட்டச் செயலாளர் அனைத்து உறுப்பினர்களும் கூடிவரும்படி அழைப்பார்:

**233.1.** குழுவானது தனது உறுப்பினர்களிடையே ஒரு நிரந்தரத் தலைவரையும், ஒரு நிரந்தரச் செயலாளரையும் தேர்ந்தெடுக்கும். இவர்களும் குழுவின் பிற உறுப்பினர்களும் போதகருக்கான நோக்கம் சார்ந்த கல்வித் திட்டத்தின் விண்ணப்பத்தாரர்களைச் சோதிப்பது, அவர்கள் அபிஷேகம் பெறும்வரை தமது கல்வியை முடிப்பதில் அவர்களை வழிநடத்துவது போன்ற பொறுப்புகளைப் பெற்றுள்ளார்கள். அந்த மாணவர் அபிஷேகம் பெறும்வரையிலான அவரது மதிப்பெண்களைப் பற்றிய பதிவேடுகளையும் வைத்திருப்பார்கள். (233.5, 529.1–529.3)

**233.2.** தலைவர் குழுவின் பிற உறுப்பினர்களுக்கு நோக்கம் சார்ந்த கல்வித் திட்டத்தின் பாடங்களில் பயிலும் அனைத்து மாணவர்களையும் மேற்பார்வை செய்யும் பொறுப்பைப் பகிர்ந்தளிப்பார். இருசாராரும் பரஸ்பர ஒப்புதலளிக்கும்படி வேறு ஏற்பாடு

செய்யப்படாவிட்டால், குழு உறுப்பினர்களின் பதிவிக் காலத்தில் அந்த மாணவர்கள் தமது கல்வித் திட்டங்களை முடிக்கும் வரையில் இந்தப் பணி ஒதுக்கீடு தொடரும்.

**233.3.** தவிர்க்க முடியாத எந்தத் தடையில்லாத பட்சத்தில் தலைவர் குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும், பங்கேற்பார். ஒவ்வொரு ஆண்டும் குழுவின் பணியை மேற்பார்வை செய்வார். தேவையின் நிமித்தமாகத் தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாமல் இருக்கும்போது, செயலாளர் அவரது பணியை எடுத்துச் செய்வார்.

**233.4.** மறைமாவட்ட மாநாட்டின் செலவில் செயலாளர் ஒரு பொருத்தமான குருத்துவ கல்வி பற்றிய பதிவேட்டைத் தயாரிப்பார். இது மறைமாவட்ட மாநாட்டின் உடைமையாக விளங்கும்; ‘‘*குருத்துவ கல்வி கையேடு*’’ நூலில் கொடுக்கப்பட்டுள்ள உத்தரவுகளின்படி இந்தப் பதிவேடு பயன்படுத்தப்பட வேண்டும்.

**233.5.** குழுவின் பிற உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் உண்மையோடு கலந்து கொண்டு, அவர்களுக்கு குறிக்கப்பட்ட மாணவர்களைக் கீழ்க்கண்டவாறு மேற்பார்வை செய்ய வேண்டும்: 1) ஊக்கமளித்தல், ஆலோசனை கூறுதல், வழிநடத்துதல், 2) உதாரத்துவமான பயற்சியையும், உரையாடல்களின் மூலமாகக் குருத்துவ உறுப்பினராக இருப்பதில் சம்பந்தப்பட்டிருக்கும் ஒழுங்குமுறைகளைக்குறித்துக் கூறுதல். அதிலும் குறிப்பாகப் பாலியல் சம்பந்தமான தவறுகளைச் செய்யாமல் குருத்துவ உறுப்பினர் எப்படி தவிர்க்கலாம் என்பதைக் குறித்து விசேஷமாகக் கூறப்பட வேண்டும். (233.1)

**233.6.** படிக்கும் பாடத்திட்டத்தின் ஆலோசனைக் கூட்டத்தின் மூலமாக இந்தக் குழுவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கும், அகில உலக குருத்துவ முன்னேற்ற குழுவிற்கும் ஒத்துழைப்பு அளிக்கும். இவர்கள் நசரேய கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பாடத்திட்டங்களைப் படிப்பதற்குத் தேவையான வழிகளில் ஊக்கமளித்து, உதவிசெய்து, வழிநடத்துகிறார்கள்.

**234.** அனுமதிப் பெற்ற போதகர்கள் மற்றும் பல்வேறு வகைக் கல்வித் திட்டங்களைப் பயிலுபவர்களுக்காகக் குழுவானது வகுப்புக்களையும், மாநாடுகளையும் அமைத்து நடத்துதல். ஒப்புதல்பெற்ற மறைமாவட்ட நிதி உதவிக்கேற்ப, தேவைப்படும்போது எல்லா நூல்களையும் படிப்பதற்கு அளிக்கும் மைய நூலகங்களை நிறுவுதல்.

**234.1.** மறைமாவட்ட குருத்துவ கல்விக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஆலோசனையைப் பெற்று குருத்துவ கல்விக்கான ஒரு மதிப்பீடு செய்யப்பட்ட பாடத்திட்டத்தில் ஒரு மாணவரைச் சேர்ப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். (233.1–233.2, 529.1–529.3)

**234.2.** அதிகாரப்பூர்வமான ‘‘*குருத்துவ கல்விக் கையேடு*’’ நூலிற்கு ஒத்த வகையில் குழுவானது தனது பொறுப்புக்களை நிறைவேற்றும்.

**234.3.** வேண்டுகோளின் பேரில் குழுவானது ஒரு மாணவரைப் பற்றிய அனைத்துத் தேவையான குறிப்புக்களையும் மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவுக்கு அளிக்கும். இடத்தில் அமர்த்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் மறைமாவட்ட

மாநாட்டிற்குப் பரிந்துரை செய்யும். குருத்துவ ஊழியங்கள் அலுவலகத்துடன் சேர்ந்து அவர் பல்வேறுப்பட்ட கல்வித் திட்டங்களில் பட்டம் பெறுவதற்குப் பரிந்துரை செய்யும். இப்படிப்பட்ட அமர்த்துவதும், முன்னேற்றுவதும் அல்லது பட்டமளிப்பதும் அகில உலக குருத்துவ முன்னேற்ற குழு, பாடத்திட்ட ஆலோசனைக் குழுவின் மூலமாக வழிகாட்டுதல்களைக் கொடுத்து இதைச் செயல்படுத்தும்.

**234.4.** மறைமாவட்ட குருத்துவ கல்விக் குழுவானது பிராந்திய கல்லூரி மற்றும் அகில உலக குருத்துவ முன்னேற்ற குழு பாடத்திட்ட ஆலோசனைக் குழுவின் மூலமாக, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பொதுக் கண்காணிப்பின் கீழ் மறைமாவட்டத்தில் அபிஷேகம் பெற்ற போதகர்களுக்கும், பிற போதகர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் தேவையான கல்வித்திட்டத்தை முன்னிறுத்தும். இந்த வாழ்நாள் கல்வித்திட்டம் என்பது குருத்துவ உறுப்பினராக இருப்பதில் காணப்படும் ஒழுங்கு முறைகள் அடங்கியிருக்கும். அதிலும் குறிப்பாகக் குருத்துவ உறுப்பினர்கள் பாலியல்ரீதியான குற்றச்சாட்டுகளை எப்படித் தவிர்க்கலாம் என்பது கொடுக்கப்பட்டிருக்கும்.

## K. மறைமாவட்ட நற்செய்திக் குழு அல்லது நற்செய்திப்பணி இயக்குனர்

**235.** மறைமாவட்ட மாநாடானது மறைமாவட்ட நற்செய்திக் குழுவையோ அல்லது மறைமாவட்ட நற்செய்தி இயக்குனரையோ தேர்ந்தெடுக்கலாம். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அடுத்த மறைமாவட்ட மாநாட்டின் இறுதி ஒத்திவைப்பு வரையிலும், தமக்குப் பின்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரையிலும் பணிபுரிவார்கள். (205.19)

**235.1.** மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒத்துழைப்போடு மறைமாவட்ட நற்செய்திக் குழுவினர் அல்லது நற்செய்தி இயக்குனர், பயிற்சிக்கான வாய்ப்புக்களை அளிப்பதின் மூலமும், கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்துவதின் மூலமும், தேவனால் அழைக்கப்பட்ட நற்செய்தியாளர்கள் மூலம் உள்ளூர் சபை எழுப்புதல் கூட்டங்கள் நடத்தப்படுவதின் தேவையை வலியுறுத்துவதின் மூலமும், கூடுமான வரையில் மற்ற எல்லா வழிமுறைகளின் மூலமும் பரிசுத்த நற்செய்தியின் தேவையைப் பறைசாற்றும் வழிவகைகளைத் தேடுவதோடு, கிறிஸ்துவின் சரீரமாகச் செயல்படுவதில் முதல் முன்னுரிமையாக மறைமாவட்டம் முழுவதிலும் இயேசு கிறிஸ்துவின் மாபெரும் கட்டளை பற்றிய தாக்கம் ஏற்படுத்துவதிலும் ஈடுபட வேண்டும்.

## L. மறைமாவட்டத் திருச்சபை சொத்து நிர்வாகக் குழு

**236.** மறைமாவட்டத் திருச்சபை சொத்து நிர்வாகக் குழுவானது பதவியின் நிமித்தமாக மறைமாவட்டக் கண்காணிப்பாளரையும் குறைந்த பட்சம் இரண்டு அபிஷேகம் பெற்ற போதகர்களையும், இரண்டு சாமானியர்களையும்

உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். நான்காண்டு காலம் பணிபுரியும்படியாகவும், அவர்களுக்குப் பின்பவருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்கும் வரைப் பணியிலிருக்கும்படியாகவும் மறைமாவட்ட மாநாட்டில் இதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். மறைமாவட்ட மாநாட்டின் சாதகமான வாக்களிப்பின் மூலம் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவே மறைமாவட்ட திருச்சபை சொத்து நிர்வாகக் குழுவாகவும் பணிபுரியலாம்.

**237. மறைமாவட்ட திருச்சபை சொத்து நிர்வாகக் குழுவின் பணிகள்** பின்வருமாறு:

**237.1.** திருச்சபை விஸ்தரிப்பு ஊழியக் குழுவின் ஒத்துழைப்போடு, அந்த மறைமாவட்டத்தின் எல்லைகளுக்குட்பட்ட பகுதியில், உள்ளூர் சபைகளையும், சபை சம்பந்தப்பட்ட கட்டடங்களையும் கட்டுவதை ஊக்குவித்தல்.

**237.2.** உள்ளூர் சபைச் சொத்துக்கள் பற்றிய பத்திரங்களைச் சரிபார்த்துப் பாதுகாத்தல்.

**237.3.** நிலங்களை வாங்குதல், ஆலயக் கட்டிடங்கள், போதகரின் வீடுகள் கட்டுதல் இவைகளைப்பற்றிய உள்ளூர் சபையின் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை ஆய்வுசெய்து, இத்தகைய சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களைப் பற்றிய ஆலோசனைகளை அவர்களுக்கு அளித்தல். (103–104)

**237.4.** ஆலயக் கட்டிடங்களைக் கட்டும் திட்டங்கள், நிலங்களை வாங்குவது அல்லது கட்டிடங்களைக் கட்டுவது இவற்றிற்கானக் கடன்படுதல் இவை பற்றி உள்ளூர் சபைகள் சமர்ப்பிக்கும் திட்டங்களை, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் இசைவோடு, நிராகரித்தல் அல்லது அவைகளுக்கு ஒப்புதல் அளித்தல். கீழ்க்கண்ட வழிமுறைகளுக்கு ஒத்த வகையிலேயே கடன்வாங்குதலை அதிகரிப்பது பற்றிய ஒரு விண்ணபத்திற்கு திருச்சபை சொத்து நிர்வாகக் குழு பெரும்பாலும் தனது ஒப்புதலை அளிக்கும்:

1. கடன்வாங்குதலை அதிகரிக்க ஒப்புதல் அளிக்கும்படி விண்ணப்பம் அனுப்பும் உள்ளூர் சபையானது விண்ணப்பம் அனுப்புவதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளிலும் எல்லா வரவுசெலவுத் திட்டங்களுக்கும் முழுமையாகப் பணம் செலுத்தியிருக்க வேண்டும்.
2. முந்தைய மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் சராசரியாக எல்லா நோக்கங்களுக்காகவும் வசூலிக்கும் தொகையைவிட மூன்று மடங்குக்கு மிகாமல் மொத்தக் கடன்வாங்குதல் இருக்க வேண்டும்.
3. திட்டம் செய்யப்பட்ட கட்டட மாற்றம் அல்லது கட்டடம் கட்டுதலின் விவரங்கள் திருச்சபை சொத்து நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.
4. கடன்படும் தொகை மற்றும் திரும்பச் செலுத்தும் காலக்கெடு இவை அச்சபையின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கக் கூடாது.

திருச்சபை சொத்து நிர்வாகக் குழுவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலின்பேரில் மட்டுமே இந்த வழிமுறைகளுக்கு ஒத்துவராத விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**237.5.** உள்ளூர் சபைச் சொத்து பற்றிய காரியங்களில் வேறு ஏதேனும் செய்ய வேண்டியதிருந்தால், மறைமாவட்ட மாநாடானது அக்காரியத்தில் வழிநடத்தும்.

## M. மறைமாவட்ட நிதிநிலைக் குழு

**238.** மறைமாவட்ட நிதிநிலைக் குழுவின் பணிகள் பின்வருமாறு:

**238.1.** மறைமாவட்ட மாநாடு நடப்பதற்கு முன்னர் கூடி எல்லா வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் இவற்றை உள்ளூர் சபைகளுக்குப் பகிர்ந்துதளிப்பது பற்றிய பரிந்துரையை மறைமாவட்ட மாநாட்டிற்கு அளிக்கும். (32.5)

**238.2.** மறைமாவட்ட நிதிநிலை பற்றி மறைமாவட்ட மாநாடு பணிக்கும் இதர பணிகளைச் செய்தல். (205.21)

**238.3.** மறைமாவட்ட கையேட்டில், எல்லா நிதி பகிர்தலின் அடிப்படையை நிர்ணயிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட சதவீதங்களையும், வழிகளையும் வெளியிடுதல்.

## N. மறைமாவட்ட ஆலோசனைக் கூட்டம்

**239.** மறைமாவட்ட ஆலோசனைக் கூட்டமானது மறைமாவட்ட ஆலோசனைக் குழு, மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி குழுவின் தலைவர், மறைமாவட்ட NMIயின் தலைவர், மறைமாவட்ட NYIயின் தலைவர், மறைமாவட்டச் செயலாளர் மற்றும் மறைமாவட்டப் பொருளாரர் ஆகியோரை உள்ளடக்கியிருக்கும். தேவைப்படும்போது இந்தக் கூட்டமானது சந்தித்துக்கொள்ளும். இதன் தலைவராக மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ அல்லது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் காண்காணிப்பாளரோ அல்லது அவர்கள் நியமிக்கும் நபர்களோ இருப்பார்கள். (209).

## O. மறைமாவட்ட சாப்ளெய்ன் இயக்குனர்

**240.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் ஒரு மறைமாவட்ட சாப்ளெய்ன் இயக்குனரை நியமிப்பார். அவர் மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு சேர்ந்து, பரிசுத்த சுவிசேஷமான விசேஷ ஊழியமான சாப்ளெய்ன் ஊழியத்தை ஊக்குவிக்கவும் பெரிதுபடுத்தவும் பணியாற்றுவார். இதன் இயக்குனர் இந்தச் சுவிசேஷத்தை தொழில்கள், கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் இராணுவ தளவாடங்களின் மூலமாக முன்னேற்றுவார். நசரேயத் திருச்சபையைச் சேர்ந்த இராணுவ பணியாளர்கள் மற்றும் பிற இராணுவ தளவாடங்களில் பணியாற்றும் உறுப்பினர்களைத் தேடிச் சென்று இந்த உறுப்பினர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் கிறிஸ்துவிற்காக அழைப்பதற்காகவும், அவர்கள் தங்களுடைய நாட்டிற்காகப் பணியாற்றும்போது, நம்முடைய திருச்சபையோடு ஒரு இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் அவர்கள் அருகில் வாழும் போதகர்களுக்கு உதவி செய்தல்.

## P. அகில உலக மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய நிர்வாகக் குழு

**241.** அகில உலக மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய நிர்வாகக் குழுவில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், உலக நசரேய அருட்பணி – மறைமாவட்ட சங்கத்தின் தலைவரும், அகில உலக நசரேய வாலிபர் மறைமாவட்டக் குழு தலைவர் மற்றும் அகில உலக மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் நிர்வாகத் தலைவரும் இருப்பார்கள். இவர்களே நிர்வாகக் குழுவாக இருப்பார்கள். இதில் குறைந்தபட்சம் மூன்று கூடுதல் உறுப்பினர்கள் இருப்பார்கள். இந்தக் கூடுதல் உறுப்பினர்களை மறைமாவட்ட மாநாடு அல்லது மறைமாவட்ட SDMI கூட்டமைப்பு வெவ்வேறு விதமான பணிக்காலங்களைக் கொண்ட உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கும். இந்த மூன்று கூடுதல் உறுப்பினர்களும் ஆறு நியமனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒருவர் மூன்று ஆண்டுகளுக்கும், ஒருவர் இரண்டு ஆண்டுகளுக்கும், ஒருவர் ஒரு ஆண்டிற்கும் என்று தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால் மறைமாவட்டத்தின் மொத்த உறுப்பினர் தொகை 5000க்கும் அதிகமாகும்போது, நியமனதாரர்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாக்கப்படலாம். கூடுமானவரையில் 10 உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 4 பேராவது சாமானியர்களாக இருக்க வேண்டும். மறைமாவட்ட மாநாட்டுக் கூட்டங்களுக்கு இடைப்பட்டகாலத்தில் ஓய்வுநாள் பள்ளி ஊழியங்கள் நிர்வாகக் குழுவில் காலியிடங்கள் ஏற்பட்டால், மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் நியமனத்தின் மூலம் அவை நிரப்பப்படலாம். (215)

### மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய நிர்வாகக் குழுவின் பணிகள் பின்வருமாறு:

**241.1.** உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் கூடி, ஒரு செயலாளர், ஒரு பொருளாளர், பெரியோர் ஊழியங்கள், சிறுவர் ஊழியங்கள் மற்றும் தொடர்ந்த சாமானிய பயிற்சி இவற்றின் இயக்குனர்களைத் தேர்ந்தெடுத்து அமைத்தல். தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள் பதவியின் காரணமாக ஓய்வுநாள் பள்ளி ஊழியங்கள் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். தேவைப்பட்டால் பிற இயக்குனர்களின் பெயர்கள் செயற்குழுவினால் நியமனம் செய்யப்பட்டு, நிர்வாகக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**241.2.** மறைமாவட்டத்திலுள்ள எல்லா ஓய்வுநாள் பள்ளி முயற்சிகளையும் மேற்பார்வை செய்தல்.

**241.3.** சிறுவர் ஊழிய அவை ஒன்றைத் தேர்ந்தெடுத்தல். இதன் தலைவர் சிறுவர் ஊழியங்களின் மறைமாவட்ட இயக்குனராக இருப்பார். இந்த அவையின் பிற உறுப்பினர்கள் சிறுவர் மற்றும் சிறுவர் முகாம்கள், காரவான், விடுமுறை வேதாகமப் பள்ளி, வேதாகமப் புதிர்கள், சிறுவர் ஆலயம், தொட்டில் பிள்ளை, மற்றும் பிற அமைப்புகளின் மறைமாவட்ட இயக்குனர்களாக இருப்பார்கள்.

குறிப்பு: சிறுவர் மற்றும் பெரியோர் ஊழிய அவைகளின் பணிகள் பற்றி மேலும் விவரங்கள் அறிய 'ஓய்வுநாள் பள்ளி ஊழியங்கள் கையேட்டைக்' காண்க.

**241.4.** ஒரு பெரியோர் ஊழிய அவையைத் தேர்ந்தெடுத்தல். இதன் தலைவர் பெரியோர் ஊழியங்களின் மறைமாவட்டத் தலைவராக இருப்பார். இதன் பிற உறுப்பினர்கள் திருமணமும், குடும்ப வாழ்க்கையும், வயது முதிர்ந்தோர் ஊழியங்கள், மணமாகாத பெரியோர் ஊழியங்கள், சாமானியர் முகாம், சிறுகுழு வேத ஆய்வுகள், மகளிர் ஊழியங்கள், ஆண்கள் ஊழியங்கள் மற்றும் தேவைப்படும் பிற அமைப்புகளின் மறைமாவட்ட மேலாளர்களாக இருப்பார்கள்.

**241.5.** ஒரு வருடாந்தர மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி ஊழியங்கள் மாநாட்டை ஏற்பாடு செய்தல். (241)

**241.6.** மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் நிர்வாகக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தேர்தல், மறைமாவட்ட மாநாட்டினால் நடத்தப்பட வேண்டுமா அல்லது மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய மாநாட்டில் நடத்தப்பட வேண்டுமா என்பதை மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு கலந்தாலோசித்து முடிவு செய்தல்.

**241.7.** எல்லா உள்ளூர் ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் தலைவர்கள், வயதுவாரி ஊழியங்களின் இயக்குனர்கள் மற்றும் அகில உலக நசரேய வாலிபக் குழு உள்ளூர் தலைவர்கள் ஆகியோரை மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ மாநாட்டில் கலந்துகொள்ளும்படியும், வாய்ப்புகளுக்கேற்ப பங்கேற்கும்படியும் ஊக்குவித்தல்.

**241.8.** மறைமாவட்டத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, பகுதித் தலைவர்களை நியமித்து, அவர்கள் குழுவின் கட்டளைகளுக்கேற்ப அந்த மறைமாவட்டத்தில் ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய பணிகளை நிறைவேற்ற உதவும்படி செய்தல்.

**241.9.** மறைமாவட்ட அல்லது பகுதிவாரி தொடர்ந்த சாமானிய பயிற்சி வகுப்புக்களைத் திட்டமிட்டு, செயல்படுத்துதல்.

**241.10.** மறைமாவட்ட மற்றும் உள்ளூர் ஓய்வுநாள் பள்ளி ஊழியங்களின் ஆர்வத்திற்கேற்ப செய்திகளைச் சேகரிக்கப் பொது நிர்வாகக் குழுவின் ஓய்வுநாள் பள்ளி ஊழியங்கள் பிரிவுக்கு உதவுதல்.

**241.11.** மறைமாவட்ட நிதிநிலைக் குழுவுக்கு, வருடாந்தர மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி ஊழியங்களிள் குழுவின் வரவுசெலவுத் திட்டத்தைப் பரிந்துரைசெய்தல்.

**241.12.** மறைமாவட்ட சாமானியர் முகாமுக்குப் பொறுப்பேற்றல். பெரியோர் ஊழியங்களின் மறைமாவட்ட இயக்குனர் தன் பதவியின் நிமித்தமாக மறைமாவட்ட சாமானியர் முகாம் கமிட்டியின் உறுப்பினராக இருப்பார்.

**241.13.** மறைமாவட்ட மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கும் குழுத் தலைவரின் அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்.

**241.14.** குழுவின் பொறுப்புக்களைச் செவ்வனே செயல்படுத்துவதற்காகவும், திட்டமிடுவதற்காகவும், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஒய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியக் குழுவின் தலைவர் இவர்கள் அவசியம் என்று கருதும் வேளைகளுக்கேற்ப அவ்வப்போது கூட்டம் கூடுதல்.

**242. மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத் தலைவர்.** மறைமாவட்ட மாநாடோ அல்லது இந்த ஓய்வுநாள் பள்ளி கூட்டமைப்போ இந்த மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்திற்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கும். அவர் மறைமாவட்ட நியமனக் குழுவால் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நியமனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்று அல்லது இரண்டு வருடம் பணியில் இருப்பார். பதவிலிருக்கும் தலைவர் "சரி" அல்லது "இல்லை" என்ற வாக்கெடுப்பின்மூலம் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலோடு, மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் குழுவானது இத்தகைய வாக்கெடுப்புக்குப் பரிந்துரை செய்திருக்க வேண்டும். மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடைப்பட்டகாலத்தில் காலியிடம் ஏற்படுமானால், அவ்விடம் விதி எண் 215இன் படி நிரப்பப்படலாம். (241.6)

### மறைமாவட்ட ஞாயிறு பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் அகில உலக இயக்குனர் பெற்றிருக்கும் கடமைகள் மற்றும் அதிகாரங்கள்:

**242.1.** மறைமாவட்ட ஞாயிறு பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களுக்குப் பின்வரும் காரியங்களில் பொறுப்புள்ள தலைமைத்துவத்தைக் கொடுப்பதற்கு:

1. சேருதல் மற்றும் பங்குகொள்ளுதல் இவற்றில் வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்துல்
2. சிறுவர், மற்றும் பெரியவர்களுக்கான ஊழியங்களின் அனைத்துக் காரியங்களிலும் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுதல்.
3. அகில உலக நசரேய வாலிபர் குழுவின் ஒத்துழைப்போடு, இளம் வாலிபருக்கான ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வு/ சிறு குழுக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.

**242.2.** தனது பதவியின் காரணமாக, மறைமாவட்ட மாநாடு, மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியக் குழுவின் உறுப்பினராக இருத்தல்.

**242.3.** மறைமாவட்ட ஓய்வுநாள் மற்றும் சீஷத்துவ ஊழியக் குழுவானது ஆண்டுதோறும் சமர்ப்பிக்க வேண்டிய கையேட்டிற்காக எழுதப்பட்ட அறிக்கையைக் கொடுத்தல்.

## Q. அகில உலக நசரேய வாலிபர் மறைமாவட்டக் குழு

**243.** நசரேய வாலிப ஊழியமானது அகில உலக நசரேய வாலிபர் குழுவினால், NYI பிரிவின் கீழ், மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மறைமாவட்ட மாநாட்டின் அதிகாரத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது.

மறைமாவட்ட NYI பிரிவின் கீழ் அந்த மறைமாவட்ட மாநாட்டைச் சேர்ந்த நசரேய வாலிபர் குழுவின் உள்ளூர் குழு உறுப்பினர்கள் இருப்பார்கள்.

**243.1.** மறைமாவட்ட NYI பிரிவானது NYI மறைமாவட்ட ஊழியத் திட்டத்தின் படி தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக்கொள்ளும் (810.200–810.219). இதை அந்தந்த மறைமாவட்டத்தின் வாலிபர்களின் தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்ளலாம் (பார்க்க, 810.203) ஆனால் அவை NYI பிரிவிற்கும், நசரேயத் திருச்சபை *சட்டநூலில்* காணப்படும் விதிகளுக்கும் பொருந்தும் வண்ணமாக இருக்க வேண்டும்.

## R. உலக நசரேய அருட்பணி – மறைமாவட்ட சங்கம்

**244.** இந்த மறைமாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து உள்ளூர் சபை உலக நசரேய அருட்பணி சங்கங்களின் இணைப்பே இந்த உலக நசரேய அருட்பணி – மறைமாவட்ட சங்கமாக இருக்கிறது. இது மறைமாவட்ட மாநாட்டின் எல்லைக்கு உட்பட்டதாக இருக்கிறது. இந்த மறைமாவட்ட சங்கம் நசரேய உலக அருட்பணி பொதுச் சங்கத்தின் பிராந்தியமாக இருக்கும். (811).

**244.1.** உலக நசரேய அருட்பணி – மறைமாவட்ட சங்கமானது (NMI) உலக அருட்பணி இலாகாவினால் ஒப்புக் கொள்ளப்பட்ட உலக நசரேய அருட்பணியின் சங்க அமைப்பு விதிகளால் ஆளுகை செய்யப்படுகிறது. இச்சங்கம் மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மறைமாவட்ட மாநாட்டுக்குக் கட்டுப்பட்டது. (811).

**244.2.** உலக நசரேய அருட்பணியின் மறைமாவட்ட சங்கத்தின் தலைவர் ஊதியமின்றிப் பணிபுரிவார். இவர் தனது பதவியின் நிமித்தமாக மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராக இருப்பார்.

## S. ஊதியம் பெறும் மறைமாவட்ட உதவியாளர்கள்

**245.** மறைமாவட்ட நிர்வாகம் மேலும் திறமையுடன் நடக்க ஊதியம் பெறும் உதவியாளர்கள் தேவை என்று கருதப்பட்டால், குருத்துவ அல்லது சாமானிய உதவியாளர்களின் பெயர்கள், மறைமாவட்டக் கண்காணிப்பாளர், அதிகாரம் பெற்ற பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலோடு, நியமனம் செய்ய மறைமாவட்ட ஆலோசனைக் குழு இவர்களைத் தேர்ந்தெடுக்கும். இவர்கள் ஓராண்டுக்கு மேற்படாமல் பணிபுரிவதற்காக நியமிக்கப்படுவார்கள். ஆனால் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின் பேரில், ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் இவர்கள் நியமனம் புதுப்பிக்கப்படலாம் (211.16).

**245.1.** மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின்பேரில், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் இவர்கள் பணிக்காலம் முடிவடையுமுன்பே பணிநீக்கம் செய்யவும்படலாம். (225.16)

**245.2.** இத்தகைய மறைமாவட்ட உதவியாளர்களின் பணிகளும், ஊழியங்களும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் முடிவு செய்யப்பட்டு, மேற்பார்வையிடப்படும்.

**245.3.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இராஜினாமா செய்த பிறகோ அல்லது அவர் நீக்கப்பட்டப்பிறகோ ஊதியம் பெறும் உதவியாளர்களின் பதவிக்காலம் முடிந்தது என்று அர்த்தம்படும், அந்தத் தேசத்தின் பணியாளர்கள் சட்டம் எதிர்ப்பு தெரிவிக்காதவரை இதில் மாற்றம் கிடையாது. ஆனாலும், ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பணியாளர்கள் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலைப் பெற்று பணியில் தொடரலாம் ஆனால் புது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தன்னுடைய பணியைத் துவங்கியவுடன் இவர்களது பணிக்காலம் முடிந்துவிடும். (209.3–209.4)

**245.4.** ஊதியம் பெற்றுக்கொண்டு பணியாற்றும் மறைமாவட்ட உதவியாளர் மற்றொரு மறைமாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம், மறைமாவட்டச் செயாலளர் அல்லது மறைமாவட்டப் பொருளாளர் பணியாற்றுவதைத் தடைசெய்யாது. ஆனால் ஊதியம் பெறும் மறைமாவட்ட உதவியாளர் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்குத் தகுதிபெற்றவர் கிடையாது.

## T. ஒரு மறைமாவட்ட அமைப்பைக் கலைத்தல்

**246.** ஒரு மறைமாவட்டமானது அதே அமைப்பில் தொடர்ந்து இயங்க வேண்டாம் என்று பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவினர் தெளிவாகக் கண்டால், அவர்கள் பரிந்துரையின்பேரில் நசரேயத் திருச்சபையின் பொது நிர்வாகக் குழுவின் சாதகமான மூன்றில் இரு பங்கு வாக்குகளின் மூலம் அந்த மறைமாவட்ட அமைப்பு கலைக்கப்பட்டு, அது பற்றிய முறைப்படியான அறிவிப்பு செய்யப்படலாம். (200)

**246.1.** ஒரு மறைமாவட்ட அமைப்பு அதிகாரப்பூர்வமாகக் கலைக்கப்பட்டால், இருக்கும் எந்தத் திருச்சபை சொத்தும் எந்த வகையிலாவது வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது; பொதுச் சபையின் வரையறையின்படி, நசரேயத் திருச்சபைக்குப் பொதுவாகப் பயன்படும்படி அந்தச் சொத்தானது பொது நிர்வாகக் குழுவின் அதிகாரத்திற்குள் கொண்டுவரப்படும்; சொத்தினைப் பொறுப்பில் வைத்திருக்கும் காப்பாளர்களோ அல்லது அவ்வாறு வைத்திருக்க உருவாக்கப்பட்ட புதியஅமைப்புக்களோ, பொது நிர்வாகக் குழுவினால் நியமிக்கப்பட்ட நசரேயத் திருச்சபையின் பிரதிகாரரின் கட்டளையின் பேரிலும், அவரது மேற்பார்வையிலும் மட்டுமே, அந்தக் கலைக்கப்பட்ட மறைமாவட்டத்திற்காக அந்தச் சொத்தை விற்கவோ, அளிக்கவோ முடியும்; இவ்வாறு கிடைக்கும் தொகை அந்த பிரதிகாரரிடம் அளிக்கப்பட வேண்டும். (106.2, 106.5, 225.6)

# II. பொது ஆளுகை முறைமை

## A. பொது மாநாடு செயல்கள் மற்றும் ஒழுங்குமுறை

**300.** பொது மாநாடு தான் உச்சக்கட்டமாக இருக்கும் கோட்பாடுகளை உருவாக்கும், விதிகளை உருவாக்கும் மற்றும் தேர்ந்தெடுக்கும் அதிகாரமாக இந்த நசரேயத் திருச்சபையில் இருக்கிறது. இது சபையின் அமைப்பு முறைமைக்கு உட்பட்டதாக இருக்கிறது. (25–25.8)

**300.1.** பொது மாநாடு பொதுக் கண்காணிப்பாளர்களால் நடத்தப்படும். (25.5, 307.3)

**300.2.** பொது மாநாடு பணியாற்றுவதற்குத் தேவையான அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து பணியைச் செயல்படச் செய்யும். (25.6)

**300.3. கூட்டங்களை நடத்தும் முறை.** கலந்து பேசுவதற்காகவும், அலுவல்களைக் கவனிக்கவும் உள்ளூர் சபை உறுப்பினர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவது சபைக்கூட்டம் எனப்படும். இது பொருத்தமான சட்டம், *சட்டநூலில்* ஒருங்கிணைத்தல் மற்றும் ஆளுகைக்குறித்த துணைவிதிகள், உள்ளூர், மறைமாவட்ட மற்றும் பொது நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களின் கூட்டங்கள் மற்றும் செயல்முறைகள், இவை *Robert's Rules of Order Newly Revised (latest edition)* இன்படி ஒழுங்குப்படுத்தப்படும். (34).

## B. பொது மாநாட்டின் உறுப்பினர்கள்

**301.** பொது மாநாடு ஒவ்வொரு படி 3 மறைமாவட்டத்திலிருந்தும் சம அளவிலான குருத்துவ மற்றும் சாமானிய உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அதில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் பொறுப்பில் இருக்கும் அபிஷேகம் பெற்ற உறுப்பினராக இருப்பார். மீதமிருப்பவர்கள் அபிஷேகம் பெற்ற குருத்துவ பிரதிநிதிகள், மற்றும் மறைமாவட்ட மாநாடுகளால் தேர்ந்தெடுக்கப்படும் சாமானிய பிரதிநிதிகள், ஓய்வுபெற்றும் பணியில் இருக்கும் பொதுக்கண்காணிப்பாளர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்கள், பொது கண்காணிப்பாளர்கள், அகில உலக நசரேய வாலிப கூட்டமைப்பின் தலைவர், நசரேயத் திருச்சபை நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் அகில உலக பொறுப்புகளைப் பெற்று, பொது நிர்வாகக் குழுவிற்குக் கீழ் இருக்கும் இயக்குனர்கள், அகில உலக பிராந்திய கல்விக் குழுவின் பள்ளி தலைவர்களில் ஒரு பாதி வாக்களிக்கும் உறுப்பினர்களாகவும், மற்றொரு பாதி வாக்களிக்காத உறுப்பினர்களாகவும் இருப்பார்கள். அகில உலக கல்விக் குழுவே தேர்வுசெய்யும் முறையையும் எண்ணிக்கையையும் முடிவு செய்யும், ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு பொது நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அருட்பணியாளர். இதைப் பொது நிர்வாக நியமன அருட்பணியாளர்கள் அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். இப்படிப்பட்ட தேர்தல் நடக்கவில்லையென்றால் அகில உலக அருட்பணி கூட்டமைப்பு இந்த அருட்பணியாளர்களின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும்.

**301.1.** ஒவ்வொரு படி 3 மறைமாவட்டமும் பின்வரும் எண்ணிக்கையில் பொது மாநாட்டில் கலந்துகொள்ள முடியும்: முதல் 6000 உறுப்பினர்கள் அல்லது அதற்கும் குறைவானவர்களுக்கு இரண்டு அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்கள் மற்றும் இரண்டு சாமானியர்கள் அல்லது அடுத்த 4000 முழு உறுப்பினர்களுக்கு ஒரு கூடுதல் அபிஷேகம் பெற்ற போதகர் மற்றும் ஒரு கூடுதல் சாமானியர் மற்றும் ஒவ்வொரு கூடுதல் 5000 முழு உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும். ''பொறுப்புக் கொடுக்கப்பட்ட அபிஷேகம் பெற்ற போதகர்'' மூப்பர்களையும் டீக்கன்மார்களையும் உள்ளடக்கியிருப்பார்கள் (பார்க்க பின்வரும் வரைபடம்)

| **முழு உறுப்பினர்களின் எண்ணிக்கை** | **பிரதிநிதிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 0–6000 | 4 (2 குருத்துவ, 2 சாமானிய) |
| 6,001–10,000 | 6 (3 குருத்துவ, 3 சாமானிய) |
| 10,001–15,000 | 8 (4 குருத்துவ,4 சாமானிய) |
| 15,001–20,000 | 10 (5 குருத்துவ, 5 சாமானிய) |
| 20,001–25,000 | 12 (6 குருத்துவ, 6 சாமானிய) |
| 25,001–30,000 | 14 (7 குருத்துவ, 7 சாமானிய) |
| 30,001–35,000 | 16 (8 குருத்துவ, 8 சாமானிய) |
| 35,001–40,000 | 18 (9 குருத்துவ, 9 சாமானிய) |

(40000 மேல் ஒவ்வொரு 5000 உறுப்பினர்களுக்கும் 1 கூடுதல் சாமானிய மற்றும் 1 கூடுதல் குருத்துவ உறுப்பினர்கள்)

**301.2.** ஒவ்வொரு படி 2 மறைமாவட்டமும் ஒரு பொறுப்பில் உள்ள அபிஷேகம் பெற்ற போதகரையும், ஒரு சாமானியரையும் பொது மாநாட்டிற்குப் பிரதிநிதியாக அனுப்பலாம். இந்தப் பொறுப்பில் இருக்கும் அபிஷேகம் பெற்ற போதகர் மறைமாவட்டக் கண்காணிப்பாளராக இருப்பார். ஒவ்வொரு பிரதிநிதிக்கும் மாற்றுப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**301.3.** ஒரு படி 1 மறைமாவட்டமானது வாக்களிக்கும் உரிமையில்லாத ஒரு பிரதிநிதியைப் பொது மாநாட்டிற்கு அனுப்பலாம். மறைமாவட்டக் கண்காணிப்பாளரே அந்தப் பிரதிநிதியாக இருப்பார். ஆனால் அவர் அந்த மறைமாவட்டத்தின் உறுப்பினராக இருக்க வேண்டும். அந்த மறைமாவட்டத்தில் அந்த மறைமாவட்டக் கண்காணிப்பாளர் உறுப்பினராக இருக்காவிட்டால், அந்த மறைமாவட்டத்திலிருந்து ஒரு மாற்று உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**301.4.** பொறுப்பில் இருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட குருத்துவ பிரதிநிதி தன்னைத் தேர்ந்தெடுத்த மறைமாவட்ட மாநாட்டின் பிரதிநிதியாக இருப்பார். பொது மாநாடு நடப்பதற்கு முன்பாக அவர் மற்றொரு மறைமாவட்டத்தில் இருக்கும் புதிய ஊழியத்திற்கு மாற்றலாகிச் சென்றால் அல்லது நசரேயத் திருச்சபையின் ஊழியத்தை விட்டுச் சென்றால் அவருடைய உரிமம் பறிக்கப்படும். அதோடு மறைமாவட்டத்தினால் ஓய்வு வழங்கப்படும் போதகரும் இந்தப் பொது மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்துகொள்ள முடியாது.

**301.5.** மறைமாவட்ட மாநாட்டினால் பொது மாநாட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாமானிய பிரதிநிதியின் உரிமையானது அவர் வேறு மறைமாவட்டத்தில் இருக்கும் வேறு உள்ளூர் சபைக்குப் பொது மாநாட்டிற்கு முன்பாக மாறுதலாகிப் போகும்போது ரத்து செய்யப்படும்.

## C. பொது மாநாடு நடக்கும் நேரம் மற்றும் இடம்

**302.** ஒவ்வொரு நான்காவது வருடமும் ஜூன் மாதத்தில் பொது மாநாடு கூடும். அந்த நேரம் மற்றும் இடமும் பொது மாநாடு கூட்டமைப்பினால் முடிவு செய்யப்படும். இந்தக் கூட்டமைப்பு சம அளவிலான பொதுக் கண்காணிப்பாளர்கள் மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டிருக்கும். ஏதாவது அவசரம் ஏற்படும் நிலையில் பொது மாநாட்டின் நேரம் மற்றும் சந்திக்கும் இடத்தை மாற்றுவதற்கான அதிகாரத்தை இந்தப் பொது மாநாடு கூட்டமைப்புப் பெற்றிருக்கும்.

**302.1.** பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது பொது நிர்வாகக் குழுவின் நிர்வாகக் கூட்டமைப்பின் ஆலோசனையைப் பெற்று தேவைப்படும் போது பொது மாநாடு நடைபெறுவதற்கான மாற்று இடங்களைத் தேர்ந்தெடுக்கும். இப்படிப்பட்ட இடங்களில் அளிக்கப்படும் வாக்குகள் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் அளிக்கப்படும் வாக்குகளைப் போலவே பிரதிநிதிகளின் ஓட்டுக்களோடு சேர்ந்து அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**302.2.** பொது மாநாடு வேத வாசிப்பு மற்றும் ஊக்கமளிக்கும் ஆராதனையைக் கொண்டு துவங்கும். பணி சம்பந்தமான காரியங்கள் மற்றும் வேறு ஊக்கமளிக்கும் ஆராதனைகள் நடக்கும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். பொது மாநாடு எப்போது முடியும் என்பதை அது முடிவு செய்யும். (25.3)

## D. பொது மாநாட்டின் விசேஷ கூடுகைகள்

**303.** பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு அல்லது அவர்களில் பெரும்பாலானவர்கள், மறைமாவட்டக் கண்காணிப்பாளர்களின் மூன்றில் இரண்டு பங்கு நபர்களின் எழுத்துப் பூர்வமான சம்மதத்தைப் பெற்று அவசர வேளையில் பொது மாநாட்டின் விசேஷ கூடுகை நடைபெறும். அது நடைபெறும் நேரம் மற்றும் இடம் பொதுக் கண்காணிப்பாளர்களாலும், பொதுக் கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழு தேர்ந்தெடுத்தக் கூட்டமைப்பினாலும் முடிவு செய்யப்படும்.

**303.1.** பொது மாநாட்டின் விசேஷ கூடுகை நடைபெறுகிறது என்றால், கடந்த பொது மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் மற்றும் துணைப் பிரதிநிதிகளே இந்த மாநாட்டிற்கும் கருதப்படுவார்கள். அல்லது அவர்களுக்குப் பதிலான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் அவர்கள் அந்த விசேஷ கூடுகையின் பிரதிநிதிகளாகவும், மாற்றுப் பிரதிநிதிகளாகவும் இருப்பார்கள்.

## E. பொது மாநாட்டு ஏற்பாட்டு கூட்டம்

**304.** பொதுச் செயலாளர், பொதுப் பொருளாளர் மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவினால் நியமிக்கப்பட்ட மூன்று நபர்கள் அடுத்தப் பொது மாநாடு நடப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு கூட்டமாக

உருவாக்கப்படுவார்கள். அவர்கள் பொது மாநாடு ஏற்பாட்டுக் கூட்டம் என்று அழைக்கப்படுவார்கள்.

**304.1.** பொது மாநாடு ஏற்பாட்டுக் கூட்டமானது பொது மாநாட்டைச் சார்ந்த எல்லா ஏற்பாடுகளையும் செய்து, தேவைப்பட்டால் சில இடங்களில் ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

**304.2** இந்தப் பொது மாநாடு ஏற்பாட்டுக் கூட்டமானது பொதுக் கண்காணிப்பாளர்களோடு சேர்ந்து, பொது மாநாட்டிற்கான ஒரு திட்டத்தைத் தீட்டும். அதில் ஒவ்வொரு பொது ஆர்வத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும்: திருவிருந்து ஆராதனை மற்றும் பிற ஆவிக்குரிய ஆராதனைகள். இவைகளை பொது மாநாடு அங்கீகரிக்கவேண்டும்.

## F. பொது மாநாட்டின் பணி

**305.** திருச்சபையின் அமைப்பு முறைமையின் விதி எண் 25.8 அடிப்படையில பொது மாநாட்டின் பணி பின்வருமாறு இருக்கிறது.

**305.1.** மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கு முன்பாகத் தன்னுடைய குறிப்புகளைச் சரிபார்க்கும் குழுவின் உதவியோடு, முடிவுகளில் திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் சட்டக்குழுக்களின் மூலமாகச் சொல்லப்படும் மாற்றங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கு முன்பாக விசேஷ கூட்டமைப்புகளின் அறிவிப்புகள் மற்றும் சிறப்பாக கருதப்பட வேண்டிய ஆவணங்கள் அல்லது மாநாட்டைச் சேர்ந்த விசேஷ கூட்டமைப்புகள் அல்லது மதரீதியான கூட்டங்களுடைய கருத்துக்களைக் கருத்தில் கொண்டு சான்றுகளைச் சரிபார்க்கும். ஒரு குறிப்பிட்ட பிராந்தியம் அல்லது பிராந்தியங்களை மட்டும் பாதிக்கும் சட்ட திருத்தங்களை இந்தக் குறிப்புகளைச் சரிபார்க்கும் குழுவானது கொண்டு வரலாம். அவர்கள் அதை அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளிடம் பொது மாநாட்டின்போது செயல்படுத்துவதற்காகக் கொண்டு வருவார்கள். சட்டநூலில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவைகளை முழு பொது மாநாடும் கவனிக்க வேண்டும்.

**305.2.** மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுக்களைக் கொண்டு அதில் இருக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல. அதில் ஆறு பொதுக் கண்காணிப்பாளர்கள் அடுத்த பொது மாநாட்டின் கடைசி ஒத்திவைப்பு நடந்து 30 நாட்கள் வரையும் அல்லது அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் பணியில் அமர்வது வரையும் செயல்படுவார்கள்.

a. முதலில் தற்போது பணியாற்றிக்கொண்டிருக்கும் பொதுக் காண்காணிப்பாளர்களுக்கு ‘‘ஆம்’’ அல்லது ‘‘இல்லை’’ என்ற இரகசிய வாக்கெடுப்பு நடைபெறும்.

b. இரகசிய வாக்கெடுப்பு எல்லாப் பொதுக் கண்காணிப்பாளர்களுக்கும் நடந்து முடிந்தப்பிறகு இருக்கும் காலியிடங்கள் தேர்தலில் மீதமிருக்கும் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக நிரப்பப்படும்.

இந்த வழியாக அந்தப் பதவிக்குப் பொருந்தாத ஒருவர் முதல் இரகசிய வாக்கெடுப்பில் முன்னிலையில் வந்தால், அவருடைய பெயர் அந்த வாக்கெடுப்பிலிருந்து நீக்கப்படும். அந்த முதல் இரகசிய வாக்கெடுப்பின் அறிக்கையில் இந்த வாக்கியம் சேர்க்கப்படும், "இந்தப் பதவிக்குத் தகுதியில்லாத நிலை இருந்தால் ஒன்று அல்லது இரண்டு பேர்கள் நீக்கப்பட்டுவிட்டார்கள்."

ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாகத் தன்னுடைய சான்றிதழ்களை எப்போதாவது சமர்ப்பித்திருக்கும் அபிஷேகம் பெற்ற மூப்பர் இந்தப் பொதுக் கண்காணிப்பாளரின் பதவிக்குத் தகுதியுடையவர் கிடையாது. 35 வயதை எட்டாத அல்லது 68 வயதை எட்டிய நபர்கள் இந்தப் பொதுக் கண்காணிப்பாளரின் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். (25.4, 307.16, 900)

**305.3.** ஒரு பொதுக் கண்காணிப்பாளர் எம்ரிட்டி நிலையில் தேவைப்பட்டால் தேர்ந்தெடுக்கப்படலாம். அவர் முடியாத நிலையிலோ அல்லது ஓய்வுநிலையையோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படி எம்ரிட்டி நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது வாழ்நாள் முழுவதும் தேர்ந்தெடுக்கப்படும நிலை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். (314.1)

**305.4.** ஓய்வுபெற்ற நிலையில் வைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ள பொதுக் கண்காணிப்பாளரை அந்த நிலையில் வைத்தல் அல்லது அவர் சரீரப்பிரகாரமான காரணங்களாலோ அல்லது ஏதாவது ஒருவழியில் தகுதிநிலையை இழந்தாலோ, அதன் மூலமாக அவர் பொதுக் கண்காணிப்பாளரின் பதவியில் தொடர்ந்து இருக்க முடியாத நிலை ஏற்படும்போது பொது மாநாடு இப்படி முடிவு செய்யும். அந்தப் பொதுக் கண்காணிப்பாளர் அந்தப் பதவியில் குறைந்தது ஒரு பணிக்காலமாவது பணியாற்றியிருக்க வேண்டும். பொது மாநாடுகளுக்கு இடையே ஒரு பொதுக் கண்காணிப்பாளர் தான் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்வதாகக் கூறும்போது, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவின் பரிந்துரையின் பேரில் பொதுக் குழு கூடும் சாதாரண கூடுகையில் இந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். (314.1)

**305.5.** ஒவ்வொரு ஓய்வுபெற்ற பொதுக் கண்காணிப்பாளருக்கும் அவருக்கு ஏற்ற ஓய்வூதியத்தை அளித்தல்.

**305.6.** விதி எண்கள் 332.1–333.4 படி ஒரு பொது நிர்வாகக் குழுவை, அடுத்த பொது மாநாடு ஒத்திவைக்கப்படும்வரையிலும், அவர்களுக்குப் பின் வருபவர்கள் பணிக்கு வரும் வரையிலும் செயல்படும்படி தேர்வு செய்யுங்கள்.

**305.7.** பொது மேல் முறையீட்டு நீதிமன்றத்தைத் தேர்வு செய்யுங்கள். அதில் ஐந்து அபிஷேகம் பெற்ற போதகர்கள் அடுத்தப் பொதுக் கூடுகையின் கடைசி ஒத்திவைப்பு வரையும், அடுத்ததாக வருபவர்கள் வந்து சேரும் வகையிலும் அவருடைய பணிக்காலம் இருக்கும். பொதுக் கண்காணிப்பாளரின் நிர்வாகக் குழுவானது தலைவரையும் செயலாளரையும் நியமித்தல். (25.7, 611, 902)

**305.8.** எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியானவரோடு கொண்டுள்ள இணக்கத்தோடு செய்யுங்கள். நசரேயத் திருச்சபையின் பொதுவான காரியங்களில் நலம் இருக்க

வேண்டும் என்றும் கிறிஸ்துவின் பரிசுத்த நோக்கத்திலும், கிறிஸ்துவின் பரிசுத்த காரணத்தினாலும் செய்யலாம். இது சபை அமைப்பு முறைமைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும்.

## G. பொதுக் கண்காணிப்பளார்கள்

**306.** பொதுக் காண்காணிப்பாளர்கள் அப்போஸ்தல மற்றும் தரிசனம் வாய்ந்த ஆவிக்குரிய தலைமைத்துவத்தைப் பின்வரும் வழிகளில் கொடுக்க வேண்டும்:

- தெளிவான இலக்கைக் கொடுத்து
- தரிசனத்தை எடுத்துரைத்து
- குருத்துவ உறுப்பினர்களுக்கு அபிஷேகம் வழங்கி
- இறையியல்ரீதியான ஒத்திசைவை ஏற்படுத்தி மற்றும்
- பொதுவான திருச்சபைக்கு அதிகாரப்பூர்வமான மற்றும் பொது நிர்வாக மேற்பார்வையை அளித்தல்

**307. பொதுக் கண்காணிப்பாளர்களின் கடமைகள் மற்றும் அதிகாரங்கள் பின்வருமாறு இருக்கின்றன:**

**307.1.** நசரேயத் திருச்சபையின் பொதுவான மேற்பார்வையாளராக இருத்தல். பொது மாநாடு ஏற்றுக்கொண்ட சட்டங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்று பார்த்தல்.

**307.2.** பொது மாநாட்டில் தன்னுடைய பதவியின் காரணமாக நேரடி உறுப்பினராகக் கலந்துகொள்ளுதல். (301)

**307.3.** பொது மாநாட்டைக் கண்காணித்தல் மற்றும் நசரேயத் திருச்சபையின் பொது நிர்வாகக் குழுவின் கூட்டங்களையும் கண்காணித்தல். (300.1, 335.3)

**307.4.** சரியான வழியில் மூப்பர்களாகவும், டீக்கன்மார்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அபிஷேகம் அளிக்கவும், மற்றவர்கள் அவர்களுக்கு அபிஷேகம் அளிக்கும்படியாக அவர்களை நியமிக்கவும் அதிகாரத்தைப் பெற்றிருத்தல். (320, 538.5–538.6)

**307.5.** பொதுக் கண்காணிப்பாளர்களின் பொது நிர்வாகக்குழுவானது கொடுத்திருக்கும் பட்டியலின் படி ஒவ்வொரு மறைமாவட்ட மாநாட்டையும் மேற்பார்வைய செய்தல். ஒரு பொதுக் கண்காணிப்பாளர் அபிஷேகம் பெற்ற மூப்பரைத் தலைவராக நியமிக்கலாம். (202, 214)

**307.6.** ஒரு மறைமாவட்ட மாநாட்டில், மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு சேர்ந்து, உள்ளூர் சபையின் பிரதிநிதிகளோடு பங்குபெற்றுக்கொண்டிருக்கும்போது பொதுக் கண்காணிப்பாளர், அழைக்கப்பட்ட போதகர்கள் இல்லாத சபைகளில் உள்ளூர் போதகர்களை நியமனம் செய்யலாம். (218.1)

**307.7.** மறைமாவட்டக் கண்காணிப்பாளர்கள் மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடையே காலியிடம் ஏற்படும்போது மாநாட்டின் மறைமாவட்டங்களில் மறைமாவட்ட கண்காணிப்பாளர்களை நியமிக்கலாம். இதை அவர்கள் மறைமாவட்ட ஆலோசனைக்

குழுவோடு கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும். விதி எண் 208இல் கூறப்பட்டுள்ளபடி எல்லா அபிஷேகம் பெற்ற போதகர்களும் இந்தப் பதவிக்குக் கருதப்படலாம். அதில் அந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த போதகர்களும் உள்ளடங்கியிருக்கிறார்கள். (209, 239)

**307.8.** பதவியில் இருக்கும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தாற்காலிகமாக தன்னுடைய பதவியில் இருக்கமுடியாமல் போனால், அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு கலந்துபேசி, இடைக்கால மறைமாவட்டக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும்படியாக ஒரு இடைக்கால அபிஷேகம் பெற்ற போதகரை நியமிக்கலாம். பதவியில் சரியாக இருக்கமுடியவில்லை என்பதன் கேள்விக்கான பதிலை அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவும் முடிவு செய்வார்கள். (209.2)

**307.9.** அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் படி 3 மறைமாவட்டம் நெடுக்கடியில் இருக்கிறதாக மறைமாவட்டக் கண்காணிப்பாளர்களின் நிர்வகக் குழுவிற்கு அறிவிக்கலாம். (200.2, 322)

**307.10.** அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் ஒரு உள்ளூர் சபையின் ஆண்டு விழா அல்லது விசேஷ கூடுகையில் கலந்துகொள்ளலாம் அல்லது தனக்காக ஒரு பிரதிநிதியை அனுப்பி வைக்கலாம். (113.5)

**307.11.** நசரேயத் திருச்சபையின் எந்த நிர்வாகக் குழுவிலும் எந்த ஒரு பொதுக் கண்காணிப்பாளரும் வாக்களிக்கும் உறுப்பினராக இருக்க முடியாது, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவைத் தவிர. அந்தந்த நிர்வாகக் குழுக்களில் மாற்றங்கள் இருந்தால் ஒழிய இதுவே சரியானதாக இருக்கிறது. (307.12)

**307.12.** பொதுக் கண்காணிப்பாளர் அந்தப் பதவியில் இருக்கும்போது வேறு எந்தப் பொதுப் பதவியிலும் இருக்கக்கூடாது. (307.11)

**307.13.** பொதுக் கண்காணிப்பாளர் செய்யும் எல்லாப் பணி சம்பந்தமான செயல்களும் பொது மாநாட்டின் மறுஆய்வின் கீழ் வருகிறது.

**307.14.** ஒரு பொதுக் கண்காணிப்பாளர் செய்த செயலை, பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவில் இருக்கும் பிற நபர்கள் இரகசியமாக வாக்களித்து அதை இல்லாமல் ஆக்கிவிடலாம்.

**307.15.** பொதுக் கண்காணிப்பாளரின் பதிவியானது, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவில் காணப்படும் மீத உறுப்பினர்களின் வாக்குகள் மற்றும் பொது நிர்வாகக் குழுவிலிருந்து மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று காலியிடம் என்று அறிவிக்கப்படலாம்.

**307.16.** பொது மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக் கண்காணிப்பாளர்கள், அடுத்த பொது மாநாட்டின் ஒத்திவைப்பிற்குப் பிறகு 30 நாட்கள் வரையிலும் அல்லது தங்களுக்கு அடுத்து வருபவர்கள் பணியில் சேரும்வரையிலும் அவர்களுடைய பணிக்காலம் இருக்கும். (305.2)

## H. பொதுக் கண்காணிப்பளார்கள் எம்ரிட்டி மற்றும் ஓய்வுபெற்ற

**314.** எல்லா எம்ரிட்டி மற்றும் ஓய்வு பெற்ற பொதுக் கண்காணிப்பாளர்கள் பொது மாநாட்டில் பதவியின் காரணாக பங்குபெறும் உறுப்பினர்களாகிறார்கள். (301)

**314.1.** ஓய்வுநிலையிலோ அல்லது எம்ரிட்டி என்னும் மதிப்பிற்குரிய நிலையிலோ வைக்கப்படும் ஒரு பொதுக் கண்காணிப்பாளர், பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருக்க முடியாது. ஆனாலும் ஒரு செயலில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் சுகவீனத்தாலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாலும் அல்லது தவிர்க்கமுடியாத அவசரத்தினாலும் ஒரு பணியைச் செய்யமுடியாமல் போனால், பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது ஏதாவது ஓய்வுபெற்ற பொதுக் கண்காணிப்பாளரை உதவிக்கு அழைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. (305.3–305.5, 900.1)

## I. பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு

**315.** பொதுக் கண்காணிப்பாளர்கள் ஒரு நிர்வாகக்குழுவை ஒழுங்குபடுத்தி, அதன் மூலமாக அவர்கள் விசேஷித்த அதிகாரத்தைப் பெறும் பணிகளைத் தீர்மானிப்பார்கள்.

**316. காலியிடம்.** பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவில் காலியிடம் ஏற்படும்போது, அந்தக் காலியிடத்தை நிரப்புவதற்கு ஒரு தேர்தலை நடத்தவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைப் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவே தீர்மானிக்கும். நிர்வாகக் குழுவின் முடிவைப் பெற்றப்பிறகு, பொதுச் செயலாளர் பொது நிர்வாகக்குழுவின் எல்லா உறுப்பினர்களுக்கும் இந்தத் தகவலைக் கொடுப்பார். ஒருவேளை தேர்தல் அழைக்கப்பட்டிருந்தால், பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் இந்தக் காலியிடத்தை நிரப்பும்படியாகவும், பொதுக் கண்காணிப்பாளரின் பணியை அடுத்த பொது மாநாட்டின் ஒத்திவைப்பிற்குப் பிறகு 30 நாட்கள் அல்லது அடுத்தவர் பதவிக்கு வரும்வரை செயல்படும்படியாக மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைக் கொடுத்து நசரேயத் திருச்சபையின் அபிஷேகம் பெற்ற ஒரு போதகரைத் தேர்ந்தெடுக்கலாம்.

**316.1.** பொதுச் செயலாளர் இந்த இரகசிய வாக்கெடுப்பின் முடிவு என்னவென்று பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவிற்கு அறிவிப்பார். அவர்கள் அந்த முடிவுகளை வெளியில் தெரிவிப்பார்கள்.

**317. பொதுக் கண்காணிப்பாளரின் நிர்வாகக் குழுவின் கடமைகள் பின்வருமாறு:**

**317.1.** பொதுத் திருச்சபையை மேற்பார்வை செய்து, அதற்கு வழிகாட்டுதல் மற்றும் ஊக்கத்தை வழங்குதல். அதற்கு அகில உலக நசரேயத் திருச்சபையின் எல்லா மறைமாவட்டங்கள், பிரிவுகள் மற்றும் ஊழியங்களுக்கு தலைமைத்துவம் மற்றும் இறையியலில் சரியான கவனத்தைச் செலுத்துவதின் மூலமாகச் செயல்படுத்துதல்.

**317.2.** அகில உலக அருட்பணி இயக்கத்தின் இயக்குனரோடும், தேசிய நிர்வாக இயக்குனர்கள் அல்லது/மற்றும் பிராந்திய இயக்குனர்களோடும் ஆலோசித்து புவியியல் சார்ந்த இடங்களில் பொது நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்று சில மாற்றங்களைச் செய்தல்.

**317.3.** திருச்சபைச் சார்ந்த கொள்கைகள் மற்றும் திட்டங்களின் கடைசி முடிவெடுக்கும் அதிகாரமாக இருத்தல் மற்றும் பொது நிர்வாகக் குழு மற்றும் அதனுடைய குழுக்கள் மற்றும் நசரேயத் திருச்சபையின் நிர்வாகக் குழுக்களைப் பிற காரியங்களில் ஆலோசனை வழங்குதல். பொது நிர்வாகக் குழுவிற்கும், மற்ற கூட்டமைப்புகளுக்கும் தேவைப்படும் என்று நினைக்கும் இடத்தில் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது பரிந்துரைகளைச் செய்யும். பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது அகில உலக அருட்பணி கூட்டமைப்பு, அருட்பணியாளர்களை நியமிக்கும் நிர்வாகக் குழுவிடம் செய்யும் எல்லா நியமனங்களையும் சேர்த்துக்கொள்ளவும் செய்யலாம் அல்லது நிராகரிக்கவும் செய்யலாம்.

**317.4.** பொது நிர்வாக கூட்டமைப்பில் ஒரு நியமன குழுவாக செயல்பட்டு, பொதுச் செயலாளர் மற்றும் பொதுப் பொருளாளரின் நியமனத்தின்போது இன்னும் ஒன்று அல்லது இரண்டு பெயர்களைச் சேர்க்கலாம்.

**317.5.** பொதுச் செயலாளர், பொதுப் பொருளாளர் அல்லது ஒரு துறையின் இயக்குனரின் பதவிகளை மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று காலியிடமாக அறிவித்தல்.

**317.6.** பொது மாநாடுகளுக்கு இடையே பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் காலியிடங்கள் ஏற்பட்டால், அந்தக் காலியிடங்களை உடனடியாக நிரப்புதல் மற்றும் அந்த நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் செயலாளரைத் தேர்ந்தெடுத்தல். **(305.7, 612, 902)**

**317.7.** பொது மாநாடு அல்லது பொது நிர்வாகக் குழுக்களுக்கு இடையே விசேஷமான கூட்டமைப்புகள் அல்லது கூடுகைகளில் காலியிடங்கள் ஏற்படும்போது அவைகளை நிரப்புதல்.

**317.8.** அகில உலக கல்விக் குழுவோடு சேர்ந்த கல்வி நிறுவனங்களில் ஆலோசனை வழங்கும் இடங்களில் பொதுக் கண்காணிப்பாளர்களை நியமித்தல். **(905)**

**317.9.** அகில உலக குருத்துவ வளர்ச்சி குழுமத்தின் கூட்டணியோடு குருத்துவ, சாமானிய அல்லது சான்றிதழ் பெற்றவர்கள் குருத்துவம் சார்ந்த படிப்புகளைப் படிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல். **(529–530)**

**317.10.** அகில உலக அருட்பணி செயல்களுக்கு உயிர்நாடியாக விளங்கும் உலக அருட்பணி நிதிக்காக திட்டமிட்டு, இடைவிடாமல் அதை முன்னேற்றுவதற்கான வழிகளைச் செய்தல். உள்ளூர் திருச்சபைகள் எவ்வளவு உலக அருட்பணி நிதியைத் திரட்டவேண்டும் என்ற இலக்கை, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவும், பொது நிர்வாகக் குழுவும் அங்கீகரிக்க முடியும். **(32.5, 130, 335.7)**

**317.11.** முன்னாள் அபிஷேகம் பெற்ற மூப்பர் அல்லது டீக்கனாருக்கு அவர்களுடைய சான்றிதழ்களைத் திரும்பக் கொடுப்பதற்கு அங்கீகாரம் வழங்குதல். (539.11, 540.8, 540.12)

**318.** நசரேயத் திருச்சபையின் சட்டம் மற்றும் கோட்பாடுகளை அர்த்தம்காணும் அதிகாரத்தைப் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுக்கள் மட்டுமே பெற்றிக்கிறார்கள். அவர்களே *சட்டநூலில்* காணப்படும் காரியங்களை அர்த்தம்காணவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். ஏதாவது மேல்முறையீடு செய்யவேண்டுமானால் அவர்கள் பொது மாநாட்டிற்குத் தெரிவிப்பார்கள்.

**319.** மறைமாவட்ட மையங்களுக்கான திட்டங்களை அங்கீகரித்தலை பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது கவனிக்கும். எழுத்துப் பூர்வமாக பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவிடமிருந்து அனுமதிப் பெறாமல் எந்தத் திட்டங்களையும் செயல்படுத்தமுடியாது. (225.12)

**320.** விவாகரத்து பெற்ற நபர்களுக்கு அபிஷேகம் கொடுக்கும் அதிகாரத்தைச் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு முடிவுகளை எடுக்கும்படியாகப் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. (307.4, 533.3, 534.3)

**321.** படி 2 அல்லது படி 1ஐ சார்ந்த மறைமாவட்டத்தின் மறைவாட்டக் கண்காணிப்பாளரின் பதவியைக் காலியிடமாக அறிவிக்க முடியும். அதற்கு அந்த இடத்தைச் சார்ந்த அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் பரிந்துரையைப் பெற்றிக்க வேண்டும். படி 3 மறைமாவட்டங்களின் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பதவியைக் காலியிடமாக அறிவிப்பதற்கு மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது மூன்றில் இருபங்கு வாக்குகளைக் கொடுக்க வேண்டும். (209.1, 239)

**322.** படி 3ஐ சேர்ந்த மறைமாவட்டமானது நெருக்கடியில் இருக்கிறது என்று பொதுக் கண்காணிப்பாளரின் நிர்வாகக் குழுவினால் அறிவிக்க முடியும். (200.2, 307.9)

**323.** ஒவ்வொரு பொது மாநாட்டையும் தொடர்ந்து, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது வெளியிடப்பட வேண்டும் என்று அறிவிக்கும் தேதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்ட *நசரேயத் திருச்சபையின் சட்டநூலானது* எல்லா மொழிகளிலும் மாற்றங்களோடு வெளிவந்திருக்க வேண்டும்.

**324.** பொதுத் திருச்சபையின் விதிகள் மற்றும் சபை அமைப்பு முறைமையோடு ஒத்து பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது நசரேயத் திருச்சபையின் பணிகளில் எதையும் செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

## J. பொதுச் செயலாளர்

**325.** பொது நிர்வாகக் குழுவின் துணை விதிகளுக்கு ஏற்ப பொதுச் செயலாளர் பொது நிர்வாகக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் அடுத்த மறைமாவட்ட மாநாட்டின் ஒத்திவைப்பு வரையில், அந்தப் பதவியின் அடுத்த உறுப்பினர் பணியில்

சேரும்வரை பணியாற்றுவார். அல்லது அவர் விதி 317.5க்கேற்ப நீக்கப்படும்வரை பணியாற்றுவார். (900.2)

**325.1.** பொதுச் செயலாளர் பொது மாநாட்டில் பதவியின் காரணமாகக் கலந்துகொள்ளும் உறுப்பினராக இருக்கிறார். (301)

**325.2.** பொது மாநாடுகளுக்கு இடையே காலியிடம் இந்தப் பொதுச் செயலாளரின் பதவியில் ஏற்படும்போது, அது விதி 317.4இல் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல பொது நிர்வாகக் குழுவினால் நிரப்பப்படும்.

**325.3.** பொதுச் செயலாளர் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவிற்கும், பொது நிர்வாகக் குழுவிற்கும் கட்டுப்பட்டிருப்பார்.

**326. பொதுச் செயலாளரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:**

**326.1.** பதவியின் காரணமாக நசரேயத் திருச்சபையின் ஸ்தாபனத்தில் செயலாளராகவும், பொது நிர்வாகக் குழுவிலும், பொது மாநாட்டிலும் பணியாற்றுதல். அங்கு நடக்கும் எல்லாக் காரியங்களையும் பதிவுசெய்து பாதுகாப்பாக வைப்பார்.

**326.2.** நசரேயத் திருச்சபையின் பொதுவான புள்ளிவிவரங்களைப் பதிவு செய்து வைத்தல்.

**326.3.** பொது மாநாடு சம்பந்தமான ஆவணங்களைப் பாதுகாத்து, தனக்குப் பின்னால் வருபவரிடம் பத்திரமாக ஒப்படைத்தல்.

**326.4.** பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நிரந்தரமான பதிவுகள் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பத்திரமாகப் பாதுகாத்தல். (614)

**326.5.** போதகர்களின், அடுக்கப்பட்ட, கொடுக்கப்பட்ட, நீக்கப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற சான்றிதழ்களைப் பத்திரமாக வைத்தல். அதைப் பெற்றுக்கொண்ட மறைமாவட்டத்திலிருந்து சரியான வழியில் வேண்டுதல் வரும்போது அவற்றைக் கொடுத்தல். (539–539.3, 539.8)

**326.6.** மறைமாவட்ட புள்ளிவிவர வரைபடங்களைத் தணிக்கை செய்தல். (220.3)

**326.7.** மறைமாவட்ட போதகர் என்று உரிமம் பெற்றவர்களின் பதிவுகளைப் பாதுகாத்து வைத்தல்.

**326.8.** பொது மாநாட்டின் பொழிப்புகளைப் பிரதிநிதிகள் பெற்றுக்கொள்ளும் விதத்தில் வைத்திருத்தல்.

**326.9.** சட்டநூலின் கடைசிப் பதிப்பானது கிடைக்கும்படியாக எப்போதும் வைத்திருத்தல்.

**326.10.** அந்தப் பதவியில் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்காகச் செய்யவேண்டிய பிற வேலைகளைச் செய்தல்.

**327.** பொதுத் திருச்சபைக்குச் சொந்தமான சட்டரீதியான ஆவணங்களை நம்பிக்கையின் அடிப்படையில் பொதுச் செயலாளர் வைத்திருப்பார்.

**327.1.** அந்தப் பிரிவின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு வரலாற்றுப்பூர்வமான காரியங்களைச் சேகரித்து, இந்தப் பதிவுகள் மற்றும் காரியங்களைப் பத்திரமாகக் காத்துக்கொள்ளுதல்.

**327.2.** வரலாற்றுப்பூர்வமான இடங்களைக் குறித்த பதிவேட்டைப் பொதுச் செயலாளர் வைத்திருப்பார். இது 913ஆம் விதியில் காணப்படுகிறது.

**328.** பொதுச் செயலாளர் பொதுக் கண்காணிப்பாளரின் கூட்டணியோடு சேர்ந்து, பொது மாநாடு துவங்குவதற்கு முன்பாகத் தேவைப்படும் படிவங்களை ஏற்படுத்துவார்கள். அதில் *“சட்டநூலில் செய்ய வேண்டிய மாற்றங்களைக் குறித்த விதிகள்”* போன்றவையும் அடங்கும். பொது மாநாட்டின் பணிகளைச் செய்வதற்கான எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். இதற்கு ஏற்படும் செலவுகள் பொது மாநாட்டின் செலவுகள் நிதியிலிருந்து கொடுக்கப்படும்.

**328.1.** பொதுச் செயலாளர் எத்தனைத் துணைப் பணியாளர்களை வேண்டுமானாலும் பொது மாநாடு தேர்ந்தெடுப்பதைப் பொறுத்து வைத்துக்கொள்ளலாம். அல்லது பொது மாநாடுகளுக்கு இடையே என்றால், பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு நியமிப்பவர்களை வைத்துக்கொள்ளலாம்.

## K. பொதுப் பொருளாளர்

**329.** பொது நிர்வாகக் குழுவின் துணை விதிகளுக்கு ஏற்ப பொதுப் பொருளாளர் பொது நிர்வாகக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் அடுத்த மறைமாவட்ட மாநாட்டின் ஒத்திவைப்பு வரையில், அந்தப் பதவியின் அடுத்த உறுப்பினர் பணியில் சேரும்வரை பணியாற்றுவார். அல்லது அவர் விதி 317.5க்கேற்ப நீக்கப்படும்வரை பணியாற்றுவார். (900.3)

**329.1.** பொதுப் பொருளாளர், பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினராகத் தன்னுடைய பதவியின் காரணமாகக் கலந்துகொள்வார்,. (301)

**329.2.** பொதுப் பொருளாளர் அகில உலக அருட்பணி மையத்தின் நிதி அலுவலகத்தின் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர், பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு மற்றும் பொது நிர்வாகக் குழுவிற்குக் கட்டுப்பட்டிருப்பார்.

**330. பொதுப் பொருளாளரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:**

**330.1.** நசரேயத் திருச்சபையைச் சார்ந்த பொது ஆர்வங்களின் நிதியைப் பாதுகாப்பாக வைத்திருப்பார்.

**330.2.** அகில உலக நிர்வாகம் மற்றும் நிதி கூட்டமைப்பு, அகில உலக கல்வி மற்றும் குருத்துவ வளர்ச்சி கூட்டமைப்பு, அகில உலக அருட்பணி கூட்டமைப்பு, மற்றும் பொது நிர்வாகக் குழுவின் பிற நிதி அல்லது அதனுடைய பிரிவுகளின் நிதி, பொதுக் கண்காணிப்பாளரின் நிதி, பொது உதவி திருச்சபை நிதி, அகில உலக வாலிபர்

குழுவின் நிதி மற்றும் அகில உலக அருட்பணி இயக்கத்தின் நிதி ஆகியவற்றைப் பெற்றிருப்பார். (331.3)

**330.3.** பொது நிர்வாகக் குழுவானது வழிகாட்டும் விதத்தில், ஒரு நம்பகமான நிறுவனத்தில் பாண்டுகளைக் கொடுத்தல்.

**330.4.** பிரிவுகள் மற்றும் குழுக்களுக்கு அவர் நிதிப் பாதுகாவலராக இருக்கையில் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

**330.5.** நசரேயத் திருச்சபையின் நிதிநிலையைக் குறித்த ஆண்டு அறிக்கையை பொது நிர்வாகக்குழுவிற்கு அளித்தல். அதில் பணம் போடப்பட்டிருக்கும் இடங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும். (335.12)

**330.6.** சரியான பாதுகாப்புக் கொள்கைகளைப் பெற்று, இப்படிப்பட்ட கொள்கைகள் எந்த விதத்திலும் நஷ்டத்தை ஏற்படுத்திவிடாதபடி ஒருவர் மரிக்கும்போது பெறும் பணத்தை நிலங்களை வாங்குவதில் ஈடுபடுதல்.

## L. பொது நிர்வாகக் குழு

**331.** நசரேயத் திருச்சபையானது லாபமில்லாத நிறுவனமாக அமெரிக்காவில் இருக்கும் மிசௌரியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பொது நிர்வாகக் குழுவில் இருக்கும் உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பொது மாநாட்டில் விதிகள் 332.1–333.5 கொடுத்திருப்பதைப் போல நியமிக்கப்பட்ட நபர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பொது நிர்வாகக் குழுவில் ஒரு உறுப்பினராக ஒரு சபையின் பிராந்தியத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அந்த நபர் அந்த பிராந்தியத்தில் வாழ வேண்டும். அந்தப் பிராந்தியத்தில் இருக்கும் உள்ளூர் சபையின் உறுப்பினராகவும் இருக்க வேண்டும். (305.6, 334)

**331.1.** நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தில் அல்லது நசரேயத் திருச்சபையிலிருந்து நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் எவரும் பொது நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருப்பதற்கோ தகுதியைப் பெற்றிருக்கவில்லை. பொதுத் திருச்சபையிலிருந்து நிதியைப் பெறும் மறைமாவட்டத்தைச் சார்ந்த தனிப்பட்ட நபர்களும் வேறு சிலரும் இதற்குத் தகுதியானவர்கள் கிடையாது.

**331.2.** பொதுச் செயலர் பதவியின் காரணமாக நசரேயத் திருச்சபையின் நிறுவனத்திலும், பொது நிர்வாகக் குழுவிலும் செயலாளராக இருப்பார்.

**331.3.** பொதுப் பொருளாளர் பதவியின் காரணமாக நசரேயத் திருச்சபையின் நிறுவனத்திலும், பொது நிர்வாகக் குழுவிலும் பொருளாளராக இருப்பார். அதோடு நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தின் பிரிவுகளிலும் அதே பதவியைக் கொண்டிருப்பார்.

**332. பொது நிர்வாகக் குழுவிற்கான நியமனங்கள்** பின்வருமாறு செய்யப்பட வேண்டும்:

**332.1.** பொது மாநாட்டிற்கான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டப்பிறகு ஒவ்வொரு படி 3 மறைமாவட்ட கூட்டமும் பொது நிர்வாகக்குழுவில் சேர்வதற்கான நியமனங்களைச் சேர்ப்பதற்குப் பின்வருமாறு கூடும். ஒவ்வொரு படி 3 மறைமாவட்டமும் இரண்டு பொறுப்பில் இருக்கும் அபிஷேகம் பெற்ற போதகர்களையும், இரண்டு சாமானியர்களையும் நியமனம் செய்யும். அந்த மறைமாவட்டத்தில் பல வகைப்பட்ட கலாச்சார கூடுகைகள் இந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டும். பிராந்திய ஆலோசனைக் குழுவைக் கொண்டிருக்கும் பிராந்தியங்களில், முதலில் அந்த நபர்களின் பெயர்கள் தேசிய நிர்வாகக் குழுவிற்கு அனுப்பப்படும். பிறகு, பிராந்திய ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பப்படும். அங்கு அந்தக் கூட்டம் வாக்களிக்கவேண்டிய ஒவ்வொரு உறுப்பினருக்கும் மூன்று பேர் என்று தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதன்பிறகு இந்தப் பெயர்கள் பொதுச் செயலாளரின் அலுவலகத்திற்கு அனுப்பப்படும். அங்கு ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் பொது மாநாட்டில் கலந்துகொள்வதற்கான பிரதிநிதிகளின் இரகசிய வாக்கெடுப்பு பட்டியலில் சேர்க்கப்படும். (205.23)

**332.2.** இந்த விண்ணப்பத்தாரர்களின் பட்டியலிலிருந்து பொது மாநாட்டிற்குப் பின்வரும் வழிகளில் ஒவ்வொரு பிராந்தியத்தைச் சேர்ந்த பொது மாநாட்டின் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்படுவார்கள்:

100,000 அல்லது அதற்கும் குறைவான முழு உறுப்பினரைக் கொண்டிருக்கும் ஒரு பிராந்தியம் ஒரு பொறுப்பில் இருக்கும், ஒரு அபிஷேகம் பெற்ற போதகரையும், ஒரு சாமானியரையும் அனுப்பும். 100,000 மேலும், 200,000 வரையிலும் இருக்கும் பிராந்தியமானது இரண்டு அபிஷேகம் பெற்ற போதகரையும், ஒரு மறைமாவட்டக் கண்காணிப்பாளரையும், ஒரு போதகர் அல்லது நற்செய்தியாளர் மற்றும் இரண்டு சாமானியர்கள் மற்றும் ஒரு கூடுதல் சாமானியர் மற்றும் ஒரு கூடுதல் சாமானியர் 200,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தால் அனுப்ப வேண்டும். அது பின்வருமாறு நிகழும்:

உறுப்பினர்கள் 200,000 மேலாக இருக்கும் பிராந்தியங்களில் ஒரு பொறுப்புக் கொடுக்கப்பட்ட அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியர் போதகராகவோ அல்லது நற்செய்தியாளராகவோ இருப்பார். மற்றொருவர் மறைமாவட்டக் கண்காணிப்பாளராகவும், மற்ற பொறுப்புக் கொடுக்கப்பட்ட அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியர் எந்தப் பிரிவில் வேண்டுமானாலும் இருக்கலாம்.

பொது நிர்வாகக் குழுவில் ஒரு மறைமாவட்டத்திற்கு இரண்டு உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஒரு பிராந்தியத்திற்கு ஆறு உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. (இதில் கல்விக் கூடங்களைச் சார்ந்த பிரதிநிதிகள், நசரேய அருட்பணி இயக்கம் மற்றும் நசரேய வாலிபர் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் சேர்க்கப்படவில்லை). ஒரு மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு விண்ணப்பத்தாரர்கள் அதிகமான வாக்குகளைப் பெறும்போது, அடுத்த அதிகபட்ச வாக்கைப் பெற்ற மறைமாவட்டத்தின் நபர் அந்தப் பிராந்தியத்தின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஒவ்வொரு பிராந்தியத்திலும், சாமானியர், போதகர் அல்லது நற்செய்தியாளர் மற்றும் அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் ஆகியோர் அதிகப்படியான வாக்குகளைப் பெறும்போது அவர்களுடைய பிரிவுகளில் பெரும்பான்மை வாக்குப் பெற்றதாக பொது நிர்வாகக் குழுவிற்கு நியமனம் செய்யப்படுவார்கள். பெரிய பிராந்தியங்களில் ஆறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலையில், அடுத்த பெரிய வாக்கு எண்ணிக்கையைப் பெறும் சாமானியரும், பொறுப்பில் உள்ள அபிஷேகம் பண்ணப்பட்ட போதகரும் கூடுதல் நியமனங்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

பிராந்திய ஆலோசனைக்கூட்டமைப்பானது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் பொது மாநாட்டில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று கண்டுபிடித்தால், அந்தப் பிராந்தியத்திற்கான கூட்டத்தின் வாக்குகள் தபால் மூலமாகவோ அல்லது மின்னனுவின் மூலமாகவோ பொது மாநாடு துவங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாகவே நடத்தப்பட்டிருக்க வேண்டும். பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் பொது மாநாட்டில் கலந்துகொள்வதற்கு நியமனம் செய்யும் இந்த விசேஷமான முறையானது பிராந்திய ஆலோசனைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு பொதுச் செயலாளரின் அலுவலத்தில் செயல்படுத்துவதற்கு முன்பாக அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பப்படும். (305.6, 901)

**332.3.** அகில உலக கல்வி நிர்வாகக் குழுவானது கல்வி நிறுவனங்களிலிருந்து நான்கு நபர்களை நியமனம் செய்யும். அதில் இரண்டுபேர் அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியர்கள், இரண்டு பேர் சாமானியர்கள். பொது மாநாடு இரண்டு பிரதிநிதிகளை பொது நிர்வாகக் குழுவிற்காகத் தேர்ந்தெடுக்கும். ஒருவர் அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியர், மற்றொருவர் சாமானியர். (331.1)

**332.4.** அகிலஉலகநசரேயவாலிபர்குழுவானதுபுதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அகில உலக NYIயின் தலைவரை நியமனம் செய்யும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அந்தப் பொதுக் குழு நிர்வாகத்தில் செயல்பட முடியாவிட்டால், அகில உலக நசரேய வாலிபர் கூட்டமைப்பானது தன்னிடத்திலிருந்து மற்றொருவரை நியமனம் செய்யும். (343.4)

**332.5.** அகில உலக நசரேய அருட்பணிச் சங்கமானது அகில உலக NMI கூட்டமைப்பிலிருந்து ஒருவரை நியமனம் செய்யும். பொது மாநாடு ஒருவரை பொது நிர்வாகக் குழுவிற்காகத் தேர்ந்தெடுக்கும். (344.3)

**332.6.** பிராந்திய ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அகில உலக SDMIயின் இயக்குனர் ஒரு நபரைப் பொது மாநாட்டிற்கு நியமனம் செய்வார். பொது மாநாடு ஒருவரை பொது நிர்வாகக் குழுவிற்காகத் தேர்ந்தெடுக்கும்.

**333. பொது நிர்வாகக் குழுவின் தேர்தல் பின்வருமாறு நிகழும்:**

**333.1.** ஒவ்வொரு பிராந்தியத்தைச் சேர்ந்த நியமனதாரர்களும் பெரும்பான்மை பெறும் “ஆம்” என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பொது மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**333.2.** அகில உலக கல்வி நிர்வாகக் குழுவினால் கொண்டு வரப்பட்டிருக்கும் பிரதிநிதிகளின் நியமனத்திலிருந்து இரண்டுபேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களுள் ஒருவர் அபிஷேகம் பெற்ற போதகராகவும், மற்றொருவர் சாமானியராகவும் இருப்பார்கள்.

**333.3.** அகில உலக நசரேய வாலிபர் கூட்டமைப்பினால் கொடுக்கப்பட்டிருக்கும் நியமனங்களிலிருந்து ஒருவரை "ஆம்" என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பொது மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (343.4, 903)

**333.4.** அகில உலக அருட்பணி இயக்கத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் நியமனங்களிலிருந்து ஒருவரை "ஆம்" என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பொது மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (343.4, 903)

**333.5.** பிராந்திய ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அகில உலக SDMIயின் இயக்குனர் கொடுத்த நியமனங்களில் ஒருவரை "ஆம்" என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பொது மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (332.6)

**334.** பொது நிர்வாகக் குழுவிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் அடுத்த பொது மாநாடு தள்ளிவைக்கப்பட்டு, அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிக்கு வரும்வரை பணியாற்றுவார்கள். அந்தப் பொது நிர்வாகக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் தான் இப்போது இருக்கும் மறைமாவட்டத்திலிருந்து தன்னுடைய சபையின் உறுப்பினர் உரிமத்தையோ அல்லது வீட்டையோ மாற்றிச் சென்றுவிட்டால் அல்லது ஊழியர் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியப் பொறுப்பிலிருந்து மாற்றுப் பொறுப்பிற்கு மாறினால் அல்லது ஒரு ஊழியர் பொறுப்பில்லாமல் இருந்தால் அல்லது ஒரு சாமானியர் வேண்டுதலின் பெயரில் மறைமாவட்ட ஊழியரின் உரிமத்தைப் பெற்றால் அவருடைய உறுப்பினர் பதவி உடனடியாக முடிந்துவிடும். இப்படி வரும் காலியிடம் உடனடியாக நிரப்பப்படும். (331)

**334.1. பொது நிர்வாகக் குழு உறுப்பினர்களிடத்தில் ஏற்படும் காலியிடங்கள் மற்றும் கூட்டமைப்புகள் பொதுக் கண்காணிப்பாளரின் நியமனத்தினால் நிரப்பப்படும்.** அவர்கள் பொதுச் செயலாளரிடம் காலியான இடத்தைக் கொண்ட மறைமாவட்டத்திலிருந்து மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின் படி அந்தப் பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக இரண்டு நபர்களின் பெயர்களைப் பெறுவார்கள். அவர்களில் பெரும்பான்மை வாக்குகளின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். படி 2 மற்றும் 3 மறைமாவட்டங்களின் ஆலோசனைக் குழுவானது ஒரு வாக்கைப் பெறும். கல்வியைக் குறித்த பிரதிநிதித்துவத்தில், நியமனவாதிகள் பொது நிர்வாகக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவார்கள். அதில் ஒருவர் பெரும்பான்மை ஓட்டைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுவார். நசரேய வாலிபர் குழுவிலிருந்து வரும் பிரதிநிதியானவர் அகில உலக NYI கூட்டமைப்பில் பெரும்பான்மை வாக்கைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுவார். அதே போலவே நசரேய அருட்பணி இயக்கத்தின் நியமனங்கள் அகில உலக NMI கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவிலிருந்து அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின்

ஆலோசனையைப் பெற்றும் அகில உலக NMIயின் கூட்டமைப்பானது ஒருவரைப் பெரும்பான்மை வாக்கின் மூலமாகத் தேர்ந்தெடுக்கும். ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்தில் நியமனங்கள் பொது நிர்வாகக் குழுவிற்கு அனுப்பப்படும். அவர்கள் ஒருவரைப் பெரும்பான்மை வாக்கைப் பெற்றுத் தேர்ந்தெடுப்பார்கள். (332.3–332.6)

**335. பொது நிர்வாகக் குழுவின் கடமைகள்.** நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தின் பொது நிர்வாகக் குழு இயக்குனர்களாக பொது நிர்வாகக் குழு இருக்கும். அது இறையியல் சாராத கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கு முதன்மை அதிகாரத்தைப் பெற்றிருக்கும். பொது நிர்வாகக் குழுவானது எல்லா தேசிய, பிராந்திய, மறைமாவட்ட மற்றும் உள்ளூர் நிர்வாகக் குழுக்கள் நசரேயத் திருச்சபையின் இலக்கை ஊக்குவிக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறது. அந்த இலக்கானது வெஸ்லிய பாரம்பரியத்தில் காணப்படும் கிறிஸ்தவ பரிசுத்தத்தை எடுத்துரைத்து உலகம் முழுவதிலும் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குவதேயாகும். அது ஒவ்வொரு தேசம் அல்லது பிராந்தியத்தில் அகல உலக திருச்சபையின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும். நசரேய திருச்சபையின் நிறுவனத்தைச் சார்ந்த எல்லாக் கூட்டமைப்புகளின் நிதிநிலை மற்றும் பிற காரியங்களைப் பொது நிர்வாகக் குழுவானது ஊக்குவிக்கும். இது பொது மாநாட்டின் விதிமுறைகளின்படி செய்யப்படும். நசரேயத் திருச்சபை நிறுவனத்தில் செய்யப்படும் எல்லாக் காரியங்களும் ஒன்றுபட்ட கொள்கையாக வருவதற்கு ஒருங்கிணைத்து, ஒன்றுபடுத்திப் பார்த்து, திட்டங்களைச் சேர்க்கும். அதனுடைய எல்லாப் பிரிவுகளிலும், நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தைச் சார்ந்த சட்டரீதியான எல்லாவற்றையும் தணிக்கைச் செய்வதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. அது நசரேயத் திருச்சபை நிறுவனத்தின் தொழில் மற்றும் நிர்வாகக் காரியங்களை வழிநடத்தும். இந்தப் பிரிவுகளும் காரியங்களும் பொது நிர்வாகக் குழுவின் ஆலோசனை மற்றும் பரிந்துரையின் பெயரில் செய்யப்படும்.

**335.1.** பொது நிர்வாகக் குழுவானது, வாங்க, சொந்தமாக வைத்துக்கொள்ள, நிர்வகிக்க, அடமானம் வைக்க, விற்க, தெரிவிக்க மற்றும் தானமாகக் கொடுக்க அல்லது சொத்துக்களை பெற்றுக்கொள்ள மற்றும் விற்க முடியும். இந்தச் சொத்துக்கள் நசரேயத் திருச்சபையின் நிறுவனத்திற்கு விற்கப்பட்டு, எழுதிக்கொடுக்கப்பட்டு, தானமாகக் கொடுக்கப்பட்டு அல்லது தெரிவிக்கப்பட்டு இருக்கலாம். அது டிரஸ்டாக சட்டரீதியான நோக்கத்திற்காகவும் இந்த டிரஸ்டைச் செயல்படுத்துவதற்காகவும் இருக்கும். நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தின் சட்டப்பூர்வமான நோக்கங்களுக்காக இது கடன்வாங்குவதற்கோ அல்லது கடன் கொடுப்பதற்கோ கொடுக்கப்படலாம்.

**335.2.** பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவில் ஏற்படும் காலியிடத்தைப் பொது நிர்வாகக் குழு விதிகள் 316 மற்றும் 305.2 ஆகிய விதிகளின்படி நிரப்பும்.

**335.3.** பொது மாநாடு ஒத்திவைக்கப்பட்டவுடன் அல்லது அதற்கு முன்போ பொது நிர்வாகக் குழுவானது சந்திக்கும். அது அதிகாரிகள், கூட்டமைப்புகள் மற்றும் இந்தக் கூட்டமைப்புகளுக்கான உறுப்பினர்கள் என்று சேர்க்கை மற்றும் துணை விதிகளைக்

குறித்த அதனுடைய கோட்பாடுகளின் அடிப்படையில் செய்யும். அது அந்த நான்கு ஆண்டுகளுக்குச் சேவை செய்யும். அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை இது நடக்கும். பொது நிர்வாகக் குழுவின் கூட்டங்களைப் பொதுக் கண்காணிப்பாளர் நடத்துவார்.

**334.4.** கூட்டங்கள். பொது மாநாட்டிற்கு இடையே இந்தப் பொது நிர்வாகக் குழுவானது குறைந்தது மூன்று முறையாவது சந்தித்துக்கொள்ளும். குறிப்பிட்டப்பட்ட நிர்வாகக் குழுவின் முடிவிற்கு ஏற்ப நேரம் மற்றும் இடம் கூறப்படும் அல்லது இது ஏதாவது ஒரு விசேஷக் கூட்டத்தில் பேசப்படும். அந்த முடிவு பொதுக் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூட்டமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டிற்காகக் எடுக்கப்பட்டிருக்கிறது.

**335.5.** விசேஷமான கூட்டங்கள். பொது நிர்வாகக் குழுவின் விசேஷ கூட்டங்களைப் பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழு அல்லது தலைவர் அல்லது செயலாளரால் அழைக்கப்படும்.

**335.6.** உலக அருட்பணி நிதி. ஒவ்வொரு திருச்சபையும் அகில உலக நோக்கமான உலகம் முழுவதிலும் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குதல் என்பதின் ஒரு பகுதியாக இருக்கிறது. உலக அருட்பணி நிதியானது பொதுவான ஊழியம் மற்றும் அதனுடைய செயல்பாடுகளின் ஆதரவு, நிர்வாகம் மற்றும் மேம்பாட்டிற்காகப் பயன்படும். பொது சபையின் நிதி பட்ஜெட்டில் இதற்காகக் கொடுக்கப்படும் நிதியானது எவ்வளவாக இருக்கும் என்பது முன்னமே எடுத்துரைக்கப்பட்டிருக்கும். அது பொதுச் சபையின் பிரிவுகள், மற்றும் நிர்வாகங்கள் மூலமாகவும் பொதுப் பொருளாளரின் மூ லமாகவும் அறிந்துகொள்ளலாம். நேரத்திற்கு நேரம் பொது நிர்வாகக் குழுவானது ஒவ்வொரு பிரிவு மற்றும் நிதியிலிருந்து இந்த உலக அருட்பணி நிதிக்கு எவ்வளவு ஒதுக்கவேண்டும் என்பதை முடிவு செய்யும். இப்படிப்பட்ட பிரிவுகள் ஒப்புதல் பெறப்பட்டப்பிறகு அவை பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக்குழுவில் சேர்ப்பிக்கப்படும். அங்கிருந்து ஆலோசனைகள் அல்லது திருத்தங்கள் பெறப்பட்டு கடைசியாகப் பொது நிர்வாகக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**335.7.** பொது நிர்வாகக் குழு மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு ஆகிய இரண்டும் உலக அருட்பணி இயக்கத்திற்கான நிதியை உள்ளூர் சபைகளிலிருந்து பெறுவதற்கான இலக்குகளை உருவாக்கவும், பொறுப்பாக இருக்கவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**335.8.** ஒரு பிரிவு கேட்கும் நிதியைக் குறைக்கவோ அல்லது கூட்டுவதற்கோ பொது நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் இருக்கிறது. பொது மாநாடால் ஏற்றுக்கொள்ளப்படும் நிதி சம்பந்தமான காரியங்கள் பொது நிர்வாகக்குழுவிற்குப் பரிந்துரை செய்யப்படும். அவர்கள் இருக்கும் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு பொதுச் சபையின் முழு நிதி ஒப்படைப்பையும் கணக்கில் கருதி ஆண்டுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்வார்கள்.

**335.9.** உலக அருட்பணி நிதியிலிருந்து நசரேய இறையியல் செமினரிக்கும் (அமெரிக்கா) நசரேய வேதாகமக் கல்லூரிக்கும் (அமெரிக்கா) நிதியைப்

பிரித்துக்கொடுக்கும்படியான அதிகாரத்தைப் பொது நிர்வாகக் குழு பெற்றிருக்கிறது. இது நிதி இருக்கும் விதத்தின் அடிப்படையில் செய்யப்படும்.

**335.10.** பொது மாநாடுகளுக்கு இடையே பொது நிர்வாகக்குழுவானது வருடா வருடம் பொதுக் கண்காணிப்பாளர்களின் சம்பளங்களை மறுஆய்வு செய்யும். அதிலும், சம்பந்தப்பட்ட பயன்களிலும் தேவையான மாற்றங்களைச் செய்யும்.

**335.11.** அறிக்கைகள். பொது நிர்வாகக் குழுவானது தன்னுடைய கூட்டங்களில் கடந்த ஆண்டு செய்யப்பட்ட செயல்பாடுகளைக் குறித்த விளக்கமான அறிக்கையை ஒரு நிதி அறிக்கையோடு சேர்த்து சமர்ப்பிக்கும். ஒவ்வொரு பிரிவும் அடுத்த வருடத்திற்கான தேவையைக் குறித்த செலவுகளின் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

**335.12.** பொதுப் பொருளாளர் வருடாவருடம் பொது நிர்வாகக் குழுவிடம் ஒரு விரிவான நிதி அறிக்கையைத் தாக்கல் செய்வார். அதில் கடந்த ஆண்டு அவர் பாதுகாப்பில் இருந்த நிதி எத்தகைய வழியில் செலவு செய்யப்பட்டது என்பதற்கான ரசீதுகள் சேர்க்கப்பட்டிருக்கும். அதில் டிரஸ்ட் நிதிகள் மற்றும் கொடுக்கப்பட்ட நிதியும் சேர்ந்திருக்கும். அடுத்து வரவிருக்கும் ஆண்டில் ஏற்படவிருக்கும் செலவுகள் மற்றும் நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தின் பிரிவுகளில் சேர்க்கப்படாத செலவுகளும் குறிப்பிடப்பட்டிருக்கும். அதிகாரப்பூர்வமான கடமைகளை உண்மையுள்ளவராகச் செய்வதற்குப் பொதுப் பொருளாளர் பொது நிர்வாகக் குழுவிற்குக் கடமைப்பட்டிருக்கிறார். (330.5)

**335.13.** பொது நிர்வாகக் குழுவானது பொது மாநாடு நடப்பதற்கு முன்பாகவோ அல்லது நடந்த உடனேயோ சந்திக்கும். அவர்கள் ஒரு பொதுச் செயலாளரையும், பொதுப் பொருளாளரையும் தேர்ந்தெடுப்பார்கள். அது பொது நிர்வாகக் குழுவின் துணைவிதிகளின் படி நடைபெறும். அவர்கள் அடுத்த பொது மாநாடு தள்ளிவைக்கப்படும்வரை, அல்லது அவர்களுக்கு அடுத்தவர்கள் பணிக்கு வரும்வரை பணியில் இருப்பார்கள்.

**335.14.** அமெரிக்காவைச் சேர்ந்த பொது நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அமெரிக்காவிற்கான ஓய்வூதிய மற்றும் பலன்கள் என்ற கூட்டமைப்பை உருவாக்குவார்கள். அதில் அமெரிக்காவின் ஒவ்வொரு பிராந்தியத்திற்கு ஒருவர் என்று உறுப்பினர்கள் இருப்பார்கள். ஒருவர் பொதுவானவராக இருப்பார். இதற்கான நியமனங்கள் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவினால் அளிக்கப்படும். இது அமெரிக்காவிற்கான ஓய்வூதிய மற்றும் பலன்களின் துணை விதிகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. (337)

**335.15.** பொது நிர்வாகக் குழுவானது ஒரு நசரேய வெளியீட்டாளர் குழுவை ஒவ்வொரு பொது மாநாட்டின் முடிவிலும் உருவாக்கும். அவர்கள் அடுத்த பொது மாநாடு தள்ளிவைக்கப்படும்வரை, அவர்களுக்கு அடுத்தவர்கள் பணிக்கு வரும்வரை பணியில் இருப்பார்கள்.

**335.16.** ஒரு குறிப்பிட்ட தேசம் அல்லது பிராந்தியத்தை மட்டுமே பாதிக்கும் காரியம் பொது நிர்வாகக்குழுவின் அட்டவணையில் காணப்பட்டால், அது பொது நிர்வாகக்குழுவின் நிர்வாகக் குழு, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக்

குழுவின் பரிந்துரையின்பேரில் அந்தக் குறிப்பிட்ட பிராந்தியம் அல்லது தேசத்தின் பொது நிர்வாக உறுப்பினர்கள் ஒரு கூட்டமாகச் சந்தித்துக்கொள்ளலாம்.

**335.17.** பொது நிர்வாகக் குழுவானது பொது மாநாடு அல்லது பொது நிர்வாகக் குழுவிற்கு சில பிரிவுகள் அல்லது ஒரு முழு கூட்டமைப்பு ஆகியவற்றைப் பிரித்துக்கொடுக்கும். அவர்கள் அதனுடைய பணிகளை நிர்ணயித்து, பொறுப்புகளைக் கவனித்து, நிதிநிலையையும் அறிக்கை செய்வார்கள்.

**335.18. பிரிவுகளின் இயக்குனர்கள்.** பொது நிர்வாகக்குழுவானது நசரேயத் திருச்பையின் நிறுவனத்தின் பிரிவுகளில் பணியாற்றுவதற்கான இயக்குனர்களைத் தேர்ந்தெடுக்கும். இதற்கான விதிகளைப் பொது நிர்வாகத் துணை விதிகள் மற்றும் பொது நிர்வாகக் கொள்கைகளின் சட்டநூலில் பார்க்கலாம். அவர்கள் அடுத்த பொது மாநாடு தள்ளிவைக்கப்படும்வரை, அவர்களுக்கு அடுத்தவர்கள் பணிக்கு வரும்வரை அல்லது ஏதாவது காரணங்களுக்காக நீக்கப்படும்வரை பணியாற்றுவார்கள். (317.5)

**335.19. பிரிவுகளின் இயக்குனர்கள் பின்வரும் வழிமுறைகளின் மூலமாக நியமனம் செய்யப்படுவார்கள்.** ஏற்கெனவே பணியில் இருக்கும் இயக்குனரை நியமன கூட்டமைப்பானது ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்னும் வாக்குகளைக் கொண்டு பரிந்துரை செய்யலாம் அல்லது பல நியமனங்களைக் கொடுக்கலாம். இதற்குப் பொருத்தமாக இருக்கும் நபர்களைத் தேடுவது பொது நிர்வாகத் துணை விதிகளின் இயக்கத்தால் கொடுக்கப்படும் கூட்டமைப்பினால் தேடப்படும். இந்தக் கூட்டமைப்பானது இரண்டு அல்லது மூன்று பெயர்களை நியமன கூட்டமைப்பிற்குக் கொடுக்கும். தாங்கள் ஏன் இவர்களைப் பரிந்துரை செய்கிறார்கள் என்பதற்கான காரணமும் அதில் கொடுக்கப்பட்டிருக்கும்.

நியமன கூட்டமைப்பானது ஆறு பொதுக் கண்காணிப்பாளர்களையும், தேர்தல் நடைபெறும் பிரிவிற்கான அதிகாரிகளைக் கொண்ட கூட்டத்தையும் கொண்டிருக்கும். அவர்கள் ஒன்று அல்லது இரண்டு பெயர்களைப் பொது நிர்வாகக் குழுவின் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல தேர்தலுக்காகப் பொது நிர்வாகக் குழுவிற்குப் பரிந்துரை செய்வார்கள்.

**335.20. நிர்வாகிகளின் சம்பளம்.** ''செயல்பாடுகளைக் குறித்த மதிப்பீட்டை'' பொது நிர்வாகக் குழு செய்து சம்பளத்தை நிர்வகிக்கும் ஒரு திட்டத்தை வைத்திருக்கும். அதில் பிரிவுகளின் இயக்குனர் மற்றும் அருட்பணி இயக்குனர்கள் உள்ளடங்கியிருப்பார்கள். அது பொறுப்பு மற்றும் திறமையைக் கணக்கில் கொண்டு சம்பளத்தைக் கணக்கிடும். இந்தப் பிரிவுகளின் இயக்குனர்களுக்கான சம்பளத்தையும் பொது நிர்வாகக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற அதிகாரிகளின் சம்பளத்தையும் பொது நிர்வாகக் குழுவானது ஆண்டுதோறும் மறுஆய்வு செய்து அங்கீகரிக்கிறது.

**335.21.** பொது நிர்வாகக் குழுவானது பொது மாநாடுகளுக்கு இடையே ஏதாவது காலியிடம் ஏற்பட்டால் பொது நிர்வாகக்குழுவின் துணை விதிகள் மற்றும் விதி எண் 317.4இன்படி விதிகள் 335.13 மற்றும் 335.18 கொடுக்கப்பட்டிருக்கும் பதவிகளின் காலியிடங்களை நிரப்பும். பொது நிர்வாகக் குழுவினால், பொது மாநாடால் அல்லது

அவர்கள் தேர்ந்தெடுத்த கூட்டமைப்புகளால் உருவாக்கப்பட்டஅலுவலகங்களும் இதில் அடங்கும்.

336.335.13 மற்றும் 335.18 விதிகளில் பட்டியலிடப்பட்டிருக்கும் இயக்குனர்கள் மற்றும் நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தால் நியமிக்கப்படும் பிரிவின் தலைவர்களின் **ஓய்வுகாலம்** என்பது அவர்களுடைய 70ஆம் வயதிற்குப் பிறகு நடக்கும் பொது நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் நடைபெறும். காலியிடங்கள் இருக்கும்போது அது சட்டநூலில் காணப்படும் செயல்முறைகளைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும்.

## M. ஓய்வூதிய திட்டங்கள்

**337.** ஓய்வூதியத்திற்கு என்று ஒரு தனி கூட்டமைப்பு அல்லது அதற்கு நிகரான அதிகாரத்தைக் கொண்ட நிர்வாகக் குழுவானது ஒவ்வொரு சபை சம்பந்தமான ஓய்வூதிய திட்டத்திற்கான பொறுப்பைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு ஓய்வூதிய திட்டமானது ஒழுங்கமைப்பின் நிலை அல்லது மறைமாவட்டம், பல மறைமாவட்டங்கள், தேசிய, பிராந்திய, அல்லது பல பிராந்தியங்களை உள்ளடக்கிய என்று தேவைகளுக்குத் தக்கவாறு செயல்படுத்தப்படும். (335.14)

**337.1.** பொது நிர்வாகக் குழுவானது உலக அளவில் இருக்கும் ஓய்வூதிய திட்டங்களுக்குப் பொருத்தமான ஆலோசனைகளை நிர்வகிக்கும். ஒரு ஓய்வூதிய திட்டம் நஷ்டத்தையே சந்திக்காது என்றோ அல்லது குறைவுபடாது என்றோ பொது நிர்வாகக் குழுவானது உத்திரவாதம் அளிக்கவில்லை. ஒரு நபருக்குக் கொடுக்கவேண்டிய ஓய்வூதிய பணமானது ஒரு ஓய்வூதிய திட்டத்தில் குறைவான நிதி இருக்கும்போதும் அந்த நபருக்குப் பணம் கொடுக்கப்படும் என்ற உத்திரவாதத்தை இந்தக் குழு அளிக்கவில்லை. (32.5)

**337.2.** எல்லா ஓய்வூதிய திட்டங்களும் பொது நிர்வாகக் குழுவிற்கு கேட்கப்படும் வடிவத்தில் ஓய்வூதியம் மற்றும் பலன்களைக் குறித்தப் பிரிவின் மூலமாக ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## N. நசரேயத் திருச்சபை நிறுவனத்தின் துணை நிறுவனங்கள்

**338.** நசரேயத் திருச்சபை நிறுவனத்தின் துணை நிறுவனங்கள் பின்வரும் கொள்கைகளுக்கு ஏற்றவாறு ஒழுங்குப்படுத்தப்பட்டு, நிர்வகிக்கப்படும்:

a. ஒரே உறுப்பினர்
    i. அமெரிக்க நாட்டில் நிறுவப்பட்ட எல்லா துணை நிறுவனங்களின் ஒரே உறுப்பினர் “நசரேயத் திருச்சபை நிறுவனமாகத்” தான் இருக்க வேண்டும்.

b. உறுப்பினர்களின் நிர்வாகக் குழு இயக்குனர்கள்

i. ஆக்கம்: ஒவ்வொரு ஒழுங்குமுறையும் அதனுடைய தேவை மற்றும் நோக்கத்திற்கு ஏற்றவாறு இயக்குனர்களை முடிவு செய்யும். குறைந்தபட்ச தேவைகள் இவைகளாக இருக்கின்றன:
1. பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவின் இயக்குனர் ஒருவர் பதவியின் காரணமாக அதன் உறுப்பினராக இருப்பார்.
2. மூத்த பணியாளர் ஒருவர் பொதுக் கண்காணிப்பாளரின் நிர்வாகக் குழுவால் நியமிக்கப்பட்டிருப்பார்.

ii. எல்லா இயக்குனர்களும் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவினால் நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இதை அவர்கள் அந்த நிறுவனத்தின் பிற இயக்குனர்களோடு கலந்தாலோசித்தப்பிறகு செய்வார்கள்.

iii. எல்லா இயக்குனர்களும் ஒரே உறுப்பினருக்குப் பதிலாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு அடுத்து வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிக்குவரும் வரை அவர்கள் பணியில் இருப்பார்கள்.

iv. நீக்கம்: ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட இயக்குனர்கள் எந்த நேரத்திலும் காரணம் இருந்தும் இல்லாமலும் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவின் ஓட்டெடுப்பின் மூலமாக நீக்கப்படலாம். இந்தப் பொதுக் கண்காணிப்பாளர்கள் ஒரே உறுப்பினருக்குப் பதிலாகச் செயல்படுகிறார்கள். இந்தச் செயல் இதற்காக என்று அழைக்கப்படும் கூட்டத்தில் நிறைவேற்றப்படும்.

c. அதிகாரிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகள்: அவர்களுடைய துணை விதிகளின் அடிப்படையில் அதிகாரிகளின் எண்ணிக்கை மற்றும் பதவிகள் நிர்ணயிக்கப்படும்.

d. நிறுவனத்தின் கூட்டங்கள்

i. ஒரே உறுப்பினரின் (நசரேயத் திருச்சபை நிறுவனம்) கூட்டங்கள் ஒரே உறுப்பினரின் காலப்பதிவேட்டில் குறிக்கப்பட்டிருக்கும் தேதி மற்றும் இடத்தில் நடைபெறும்.

ii. நிறுவனத்தின் முடிவிற்கேற்ப இயக்குனர்களின் கூட்டங்கள் நடைபெறும்.

e. நிறுவனத்தின் நிர்வாக அதிகாரிகள்: அந்தத் துணைநிறுவனத்தின் துணை விதிகளுக்கு ஏற்றவாறு அவர்கள் நியமிக்கப்பட்டு நீக்கப்படுகிறார்கள்.

f. நிதி ஆண்டு: நசரேயத் திருச்சபையின் நிறுவனத்தின் நிதி ஆண்டுக் கணக்கிற்கு ஒப்பாக இருக்கும் நிதி ஆண்டு கணக்குகளையே எல்லாத் துணை நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

g. கலைக்கப்படுதல்: இந்த நிறுவனம் கலைக்கப்படும்போது, அதனுடைய சொத்துக்கள் அத்தனையும் ஒரே உறுப்பினருக்கு மாற்றப்படுகின்றன.

h. நிறுவனம் மற்றும் அதன் துணை விதிகள்

i. துணை நிறுவனங்கள் ஒரே உறுப்பினரின் நிர்வாகக் குழுவின் மூன்றில் இரு பங்கு வாக்குகளைப் பெற்று நிறுவப்பட வேண்டும்.

அந்த நிறுவனத்தின் கோட்பாடுகள் மற்றும் துணை விதிகள் ஒரே உறுப்பினரின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக இருக்கிறது.

ii. திருத்தங்களும் அந்த நிறுவனத்தின் இயக்குனர்களின் நிர்வாகக் குழுவினால் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று நடத்தப்படுகின்றன. அவை ஒரே உறுப்பினரின் நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதின் அடிப்பையில் செயல்படுத்தப்படுகின்றன.

## O. நசரேய புத்தக வெளியீட்டு நிறுவனம்

**339.** நசரேயத் திருச்சபையின் நலனுக்காகவும், இந்தத் திருச்சபையின் இலக்குகளோடு ஒத்துப்போகும் பிற கிறிஸ்தவ நிறுவனங்களுக்கும் உதவும் வகையில் வெளியிடுவது, சொந்தமாகக் கொள்வது மற்றும் நிர்வகிப்பதே நசரேய வெளியீடுகளின் நோக்கமாக இருக்கிறது. நசரேயத் திருச்சபை மற்றும் அதனுடைய கிளைகளைப் பாதுகாத்து, அதனுடைய தொலைத்தொடர்பு சொத்துக்களை நிர்வகிப்பதற்காக நசரேயத் திருச்சபையானது நசரேய வெளியீடுகளுக்கு இந்த முக்கியமான பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறது.

## P. பொதுவான கிறிஸ்தவ செயல்பாட்டு கூட்டம்

**340.** பொது மாநாட்டைத் தொடர்ந்து, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது ஒரு **பொதுவான கிறிஸ்தவ செயல்பாட்டு கூட்டத்தை** நியமிப்பார்கள். அவர்களில் ஒருவராகப் பொதுச் செயலாளர் இருப்பார். அவரே இந்தக் கூட்டமைப்பின் பணிகளைக் குறித்துப் பொது நிர்வாகக் குழுவிற்குத் தெரிவிப்பார்.

### பொதுவான கிறிஸ்தவ செயல்பாட்டு கூட்டத்தின் கடமைகள் பின்வருமாறு:

**340.1.** மது, புகையிலை, போதைப் பொருட்கள், சூதாட்டம் மற்றும் தற்காலத்திய ஒழுக்கரீதியான மற்றும் சமுதாயம் சார்ந்த பிரச்சினைகளைக் குறித்து திருச்சபைகளின் கோட்பாடுகளோடு ஒப்பிட்டு அதற்கு ஏற்றாற்போல ஆக்கப்பூர்வமான தகவல்களைக் கொடுக்க வேண்டும். இந்தத் தகவல்களைத் தொடர்புநிலையில் தெரிவிக்க வேண்டும்.

**340.2.** திருமணத்தின் பரிசுத்தத்தைக் குறித்து அழுத்தம் கொடுத்து, கிறிஸ்தவ குடும்பத்தின் பயபக்தியான நிலையைக் குறித்து எடுத்துரைத்து, விவாகரத்தின் தீயநிலையையும் பிரச்சினைகளையும் எடுத்துரைத்தல். அதிலும் குறப்பாக, திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமான உடன்படிக்கை என்ற வேதாகமரீதியான திட்டம், அதை மரணம் மட்டுமே உடைக்க வேண்டும் என்பதை இந்தக் கூட்டமைப்பு அழுத்தமாகக் கூறவேண்டும்.

**340.3.** பொது நிறுவனங்களில் தலைமைத்துவப் பதவிகளில் பணிபுரியும் மக்களை சமுதாயத்தில் உண்மையுள்ளவர்களாக சேவை செய்யும்படி உற்சாகமளித்தல்.

**340.4.** தேவனுடைய நாள் என்பதைக் கடைப்பிடித்தல், இரகசியமாக வாக்குக் கொடுக்கும் குழுக்கள், கிறிஸ்தவ ஒழுக்கத்திற்குப் புறம்பான கேளிக்கைகள் மற்றும் பிற உலகப்பிரகாரமான காரியங்களைக் குறித்து மக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருதல். (29.1)

**340.5.** ஒவ்வொரு மறைமாவட்டமும் ஒரு கிறிஸ்தவ செயல்பாட்டு கூட்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்று உற்சாகமளித்தல். இப்படிப்பட்ட கூட்டத்திற்கு ஒவ்வொரு உள்ளூர் சபையின் மூலமாகவும் தற்காலத்திய ஒழுக்கம் சார்பான பிரச்சினைகளை ஒவ்வொரு மறைமாவட்ட கூட்டமைப்பிற்கும் தெரிவித்தல்.

**340.6.** தேசிய மற்றும் அகில உலக முக்கியத்துவத்தைப் பெறும் ஒழுக்கரீதியான பிரச்சினைகளைக் கண்காணித்தல். வேதாகமரீதியான பார்வையை எடுத்துரைத்தல்.

## Q. தேவனால் அழைக்கப்பட்ட நற்செய்தியாளரின் கூட்டம்

**341.** தேவனால் அழைக்கப்பட்ட நற்செய்தியாளரின் கூட்டமானது எழுப்புதல் ஒருங்கிணைப்பாளரைக் கொண்டிருக்கும். அவரே தன்னுடைய பதவியின் காரணமாக இந்தக் கூட்டத்தின் தலைவராக இருப்பார். அதோடு நான்கு பதவியில் இருக்கும் நற்செய்தியாளர்களும், ஒரு போதகரும் இருப்பார்கள். அமெரிக்க/கனடா அதிகாரி, இந்த எழுப்புதல் ஒருங்கிணைப்பாளரோடு கலந்து ஆலோசித்து, நியமனம் செய்யப்படுகிறவர்களின் பெயர் பட்டியலைப் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக்குழுவிடம் அங்கீகாரத்திற்காகவும், பணியில் அமர்த்தப்படுவதற்காகவும் கொடுப்பார். இந்தக் கூட்டம் அல்லது அதனுடைய நிர்வாகி தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நற்செய்தியாளர்களை நேர்காணல் செய்வார். இவர்கள் தங்களுடைய மறைமாவட்ட மாநாடுகளால் "பணியில் அமர்த்தப்பட்ட நற்செய்தியாளர்களாகத்" தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். இது நசரேயத் திருச்சபையில் பயணித்துக்கொண்டே இருக்கும் நற்செய்தியாளரின் நிலையையும் மறுஆய்வு செய்யும். இது எழுப்புதல் குறித்த பரிந்துரைகளையும், பொது நிர்வாகக் குழுவில் சரியான பிரிவுகளுக்கு நற்செய்தியாளர்களையும் பரிந்துரை செய்யும். காலியிடங்கள் பொதுக் கண்காணிப்பாளரின் நிர்வாகக் குழுவினரால், அமெரிக்க/கனடா இயக்குனர் எழுப்புதல் ஒருங்கிணைப்பாளரின் கருத்துக்களைக் கேட்டுக் கொடுக்கும் பரிந்துரைகளின் மூலமாகப் பணியில் அமர்த்தப்படுவார்கள்.

## R. அகில உலக பாடத்திட்ட ஆலோசனைக் கூட்டம்

**342.** பொது மாநாட்டைத் தொடர்ந்து, அகில உலக குருத்துவ மேம்பாட்டு இயக்குனர், பிராந்திய கல்வி ஒருங்கிணைப்பாளரோடு ஆலோசித்து அகில உலக பாடத்திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பணியாற்றக்கூடியவர்களின் பட்டியலைச்

சமர்ப்பிப்பார். இந்தக் கூட்டமைப்பில் பணியாற்றுவதற்கான நியமனங்களில் குருத்துவ, நிர்வாக, கல்வி மற்றும் சாமானிய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இந்தக் கூட்டமைப்பின் ஆக்கமே அகில உலக திருச்சபையின் வெளிப்பாடாக இருக்கிறது. பொதுக் கண்காணிப்பாளரின் பொது நிர்வாகக் குழுவானது நான்கு ஆண்டுகள் பணியாற்றும்படியாக இந்த அகில உலக பாடத்திட்ட ஆலோசனைக் கூட்டத்தை ஏற்படுத்தும்.

இந்த அகில உலக பாடத்திட்ட ஆலோசனைக் கூட்டமானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அகில உலக குருத்துவ மேம்பாட்டுக் கழகம் குறிக்கும் இடத்தில் சந்திக்கும். (529.1–529.2, 529.5).

## S. அகில உலக நசரேய வாலிபர் குழு

**343.** நசரேய வாலிபர் ஊழியமானது உலக அளவில் நசரேய வாலிபர் குழுவின் (NYI) கீழ் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கிறது. இது NYI பிரிவின் கீழும், NYIக்கான அதிகாரத்தைப் பெற்ற பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் பொது நிர்வாகக் குழுவின் கீழ் இருக்கிறது. அகில உலக NYI யானது இந்த உலகம் முழுவதும் இருக்கும் நசரேய வாலிபர் குழு உறுப்பினர்கள், உள்ளூர் குழுக்கள் மற்றும் மறைமாவட்ட ஒழுங்கினைப்புகளை உள்ளடக்கியிருக்கிறது. அகில உலக NYIயானது NYI பிரிவினாலும், NYI அகில உலக ஊழியத் திட்டத்தாலும் ஆளுகை செய்யப்படுகிறது. இந்தத் திட்டம் பொது மாநாட்டால் அங்கீகரிக்கப்பட்டது.

**343.1.** நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை அகில உலக நசரேய வாலிபர் சங்கக் கூடுகை நடக்கும். அது பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு குறிப்பிடும் நேரம் மற்றும் இடத்தில் அகில உலக நசரேய வாலிபர் கூட்டமைப்போடு கலந்தாலோசித்துச் சந்திக்கும். NYI அகில உலக ஊழிய திட்டத்தில் பதவிகள் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுப்பினர்களே இந்த நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் சங்கக்கூடுகையில் கலந்துகொள்வார்கள் (810).

**343.2.** இந்தச் சங்கம் ஒரு அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும். அகில உலக NYI கூட்டமைப்பின் துணைத் தலைவர் இந்தக் கூடுகையின் முதல் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்த முதல் கூட்டம் பொது மாநாடு நடைபெறும்போதோ அல்லது அது முடிந்தப்பிறகோ நடக்கும். அகில உலக NYI) கூட்டமைப்பின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் அகில உலக நசரேய வாலிபர் குழுவின் நேரடியான பதவியின் காரணமாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் சம்பளம் இல்லாமல் பணியாற்றுவார்கள்.

**343.3.** அகில உலக நசரேய கூட்டமைப்பு தலைவர், துணைத் தலைவர், மற்றும் NYI அகில உலக ஊழிய திட்டத்தின்படி ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் பிரதிநிதிகள் இடம்பெற்றிருப்பார்கள். நசரேய வாலிபர் குழுவின் இயக்குனர் இந்தக் கூட்டமைப்பில் பதவியின் காரணமாக உறுப்பினராகக் கலந்துகொள்வார். அகில உலக அருட்பணி கூட்டமைப்பு மற்றும் NYIக்கான அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் மூலமாகப் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக்

குழுவிற்குக் கட்டுப்பட்டிருப்பார்கள். இது NYI பிரிவு மற்றும் NYI அகில உலக ஊழிய திட்டத்தின் அதிகாரத்தின் கீழ் தானாகவே பணியாற்றும். அகில உலக NYI கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அடுத்தப் பொது மாநாடு முடியும் வரையிலும், அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிக்கு வரும் வரையிலும் பணியில் இருப்பார்கள். (810)

**343.4.** அகில உலக நசரேய வாலிபர் குழுவானது நசரேயத் திருச்சபையின் பொது நிர்வாகக் குழுவில் அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவரால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. இவர் அகில உலக NYI கூட்டமைப்பின் நியமனத்தின் பேரில் பொது மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

**343.5.** அகில உலக நசரேய வாலிபர் குழுவானது பொது மாநாட்டில் அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவரால் தன்னுடைய பணிக்காலம் முடியும்போது பிரதிநிதித்துவம் செய்யப்படும். (301)

## T. அகில உலக நசரேய அருட்பணி இயக்கத்தின் கூட்டமைப்பு

**344.** அகில உலக நசரேய அருட்பணி இயக்கத்தின் அகில உலக கூட்டமைப்பானது (NMI) அகில உலக தலைவர், அகில உலக இயக்குனர் மற்றும் NMIயின் அமைப்பு முறைமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

**344.1.** அகில உலக கூட்டமைப்பானது NMI முறைமையினால் ஆளுகை செய்யப்படும். இந்த அகில உலக கூட்டமைப்பானது பொது நிர்வாகக் குழுவின் அகில உலக அருட்பணி கூட்டமைப்பிற்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும். (811)

**344.2.** அகில உலக NMI இயக்குனரை நியமித்தல் மற்றும் தேர்ந்தெடுத்தல்: அகில உலக NMI நிர்வாகக் குழு மற்றும் அதிகாரத்தில் உள்ள பொதுக் காண்காணிப்பாளர் ஆகியோர் அகில உலக NMI இயக்குனரின் பதவிக்கு ஏற்றவாறு இருக்கும் நபர்களைத் தேடும் தேடுதல் கூட்டமாக இருப்பார்கள். இரண்டு சாத்தியமான விண்ணப்பத்தாரர்கள் பொது நிர்வாகச் சபையைச் சேர்ந்த அகில உலக அருட்பணி கூட்டமைப்பிடம் சமர்ப்பிக்கப்படும்.

பொது நிர்வாகச் சபையைச் சார்ந்த அகில உலக அருட்பணி கூட்டமைப்பானது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரோடு சேர்ந்து, சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பெயர்களைப் பார்த்து, கடைசியில் இரண்டு பெயர்கள் மட்டுமே பொதுக் கண்காணிப்பாளர்களின் குழு தேர்ந்தெடுக்கும்படியாகப் பரிந்துரை செய்யும்.

பொது நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அகில உலக அருட்பணி கூட்டமைப்பானது சமர்ப்பிற்கும் பெயர்களில் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பொதுப் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது அகில உலக NMI இயக்குனரைத் தேர்ந்தெடுக்கும்.

அகில உலக NMI இயக்குனர் பதவியின் காரணமாக அகில உலக நசரேய அருட்பணி கூட்டமைப்பு மற்றும் அகில உலக மிஷனுடைய உறுப்பினராக இருப்பார்.

**344.3.** அகில உலக நசரேய அருட்பணி இயக்கமானது பொது நிர்வாகக் குழுவில் அதனுடைய அகில உலக கூட்டமைப்பினால் பொது மாநாட்டிற்குக் கொடுக்கப்பட்ட நியமனங்களிலிருந்து ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார். (332.5, 333.4)

**344.4.** எனவே அகில உலக நசரேய அருட்பணி இயக்கத்தின் அகில உலக கூட்டமைப்பின் வழிகாட்டுதலின் கீழ் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கக்கூடுகை நடைபெறும். இது பொது மாநாட்டின் கூட்டத்திற்கு முன்பாக நடைபெறும். இந்தக் கூட்டமானது நசரேய அருட்பணி இயக்கத்தின் அகில உலக கூட்டமைப்பைத் தேர்வு செய்யும். இது அமைப்பு முறைமைக்கு ஒத்ததாக இருக்கும். இந்தச் சங்கம் ஒரு அகில உலக தலைவரைத் தேர்ந்தெடுக்கும். அவர் அகில உலக நசரேய அருட்பணி இயக்கத்தின் அகில உலக கூட்டமைப்பில் பதவியின் காரணமாகத் தலைவராக இருப்பார். (811)

## U. தேசிய நிர்வாகக் குழு

**345.** பொதுக் காண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவின் பரிந்துரையின் பெயரில், ஒரு நாட்டின் திருச்சபையின் நோக்கம் மற்றும் யுக்திகளைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் என்று தெரிந்தால், ஒரு தேசிய நிர்வாகக் குழுவானது தேர்ந்தெடுக்கப்படும். இந்தத் தேசிய நிர்வாகக் குழுவானது பிராந்திய இயக்குனர் மற்றும் படி 3 மறைமாவட்ட ஆலோசனைக் குழுக்களின் அதிகாரங்களைப் பெறும். அது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் அந்தத் தேசத்தின் மறைமாவட்டங்களோடு ஆலோசித்து பிராந்தியத்தின் யுக்திகளை நிறைவேற்றுவதற்குத் திருச்சபையின் சார்பில் செயல்படும். தேவைப்படும்போது பிராந்திய இயக்குனரால், அந்தப் பகுதியில் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் அறிவுரையைக் கேட்டு அந்தத் தேசத்தின் பதிவு செய்யப்பட்ட சட்டரீதியான அதிகாரத்தைக் கொண்டிருக்கச் செய்யலாம். இலக்கை நிறைவேற்றுவதற்கோ அல்லது சட்டரீதியான தேவைக்கோ இனி தேவையில்லை என்ற நிலை வரும்போது, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது இதைக் கலைத்துவிடலாம்.

பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு அங்கீகரிக்கும் முறையில் இந்தத் தேசிய நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஒழுங்குமுறை இருக்கும்.

இந்த ஒழுங்குமுறை அல்லது நிறுவனத்தின் கோட்பாடுகள் உடனடியாகப் பொதுச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படும். இந்தக் கோட்பாடுகளில் ஏதாவது மாறுதல்கள் இருந்தால், அவை உடனடியாக மாற்றப்பட்ட பொதுச் செயலாளரிடம் உடனடியாகக் கொடுக்கப்படும். திருச்சபையின் நோக்கம் மற்றும் யுக்திகளைச் செயல்படுத்துவதற்காக தேசிய நிர்வாகக் குழுவினால் செய்யப்படும் தொழில்ரீதியான பரிமாற்றங்கள் பிராந்திய இயக்குனரோடு ஆலோசித்தப்பிறகே செய்யப்பட வேண்டும். தேசிய நிர்வாகக் குழுவின் ஆண்டு மற்றும் விசேஷக் கூட்டங்களின் பொழிப்புகள்

பிராந்திய ஆலோசனைக் குழுவினால் ஆராயப்பட்டு, பின்னர் மறுஆய்விற்காகவும் பொது நிர்வாகக் குழுவின் கருத்தைக் கேட்பதற்காகவும் பொதுச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படும். (32.5)

## V. பிராந்தியம்

**346. துவக்கம் மற்றும் நோக்கம்.** உலக அளவில் திருச்சபையின் வளர்ச்சியால் பல ஒழுங்குப்படுத்தப்பட்ட மறைமாவட்டங்கள் அவைகள் இருக்கும் பூகோள இடத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டன. அவைகளே பிராந்தியங்கள். நசரேயத் திருச்சபையின் கீழ் இருக்கும் மறைமாவட்டங்களின் கூட்டமானது, ஒரு இடம் அல்லது கலாச்சாரத்தின் அடையாளத்தைக் கொண்டு ஒரு நிர்வாகப் பிராந்தியமாகப் பிரிக்கப்படும். இது பொது நிர்வாகக் குழுவினால் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலின் பேரில் செயல்படுத்தப்படும்.

**346.1. பிராந்திய கொள்கைகள்.** இந்த நிறுவனத்தின் நிர்வாகம் சமச்சீரில்லாத வழியில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது பிராந்திய ஆலோசனைக் குழுவின் ஆலோசனையைப் பெற்று குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு இதனுடைய வடிவமைப்பு, நிர்வாக பிராந்தியங்களைக் கண்டுபிடிக்கும். அது பின்னர் வரக்கூடிய பிரச்சினைகள், நடைமுறையில் இருக்கும் நிலைகள், மாறுபட்ட கலாச்சார மாறுதல்கள் மற்றும் கல்விப் பின்னணிகளை அவர்களின் பூலோக இடங்களை வைத்துப் பார்ப்பார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், பொதுக் கண்காணிப்பாளர் பேச்சுவார்த்தைக்கே இடமில்லாத விசுவாச கோட்பாடுகள், பரிசுத்த கோட்பாடுகள் மற்றும் வாழ்க்கைமுறைக்கு உண்மையுள்ளவர்களாக இருத்தல் மற்றும் வெளிப்புற கூட்டங்களின் மூலமாக அருட்பணி செய்தல் ஆகியவற்றை எடுத்துரைப்பார்.

**346.2. பிராந்தியங்களின் முக்கியமான கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:**

1. ஆதி இடங்கள், மறைமாவட்டங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் மூலமாக நசரேயத் திருச்சபையின் நோக்கத்தைச் செயல்படுத்துதல்.

2. பிராந்தியத்தைக் குறித்த விழிப்புணர்வு, ஐக்கியம் மற்றும் பிரதான கட்டளையை நிறைவேற்றுவதற்கு உரிய யுக்திகளை வளர்த்து, மறைமாவட்ட மற்றும் கல்வி நிறுவன அதிகாரிகளைத் திட்டமிடுதல், ஜெபம் மற்றும் ஊக்கத்திற்காகச் சந்திக்கச் செய்தல்.

3. பொது நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் விதமாகப் பொது மாநாடு மற்றும் அகில உலக சங்கங்களில் நபர்களை நியமனம் செய்தல்.

4. *சட்டநூலில்* குறிப்பிடப்பட்டிருக்கும் விதிகளுக்கு உட்பட்டு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களை நிறுவுதல்.

5. கொள்கைக்கு ஏற்ப அருட்பணிக்காக வந்திருக்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் குறித்து எல்லாக் காரியங்களையும் தெரிந்துகொள்ளும் அதிகாரத்தைப் பெறுதல்.

6. பிராந்திய ஆலோசனைக் குழு கூட்டங்களையும், மாநாடுகளையும் அந்தப் பிராந்தியத்திற்காகத் திட்டமிடுதல்.

7. விதி எண்கள் 345 மற்றும் 346.3இல் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல தேசிய நிர்வாகக் குழுக்களை உருவாக்கியச் செயல்படுத்துதல்.

**346.3. பிராந்திய ஆலோசனைக் குழு.** ஒரு பிராந்தியம், ஒரு ஆலோசனைக் குழுவைப் பெற்றிருக்கும். அவர்கள் பிராந்திய இயக்குனரோடு சேர்ந்து, அந்தப் பிராந்தியத்திற்கான யுக்திகளை உருவாக்கி, தேசிய நிர்வாகக் குழுவின் கூட்டங்களின் பொழிப்புகளைப் பொதுச் செயலாளரின் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு முன்பாக அதை அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ செய்து, அகில உலகில் பணியில் அமர்த்தப்படுவதற்காக அருட்பணியாளர்களாக விண்ணப்பித்திருப்பவர்களை நேர்காணல் செய்து பொது நிர்வாகக் குழுவிற்குப் பரிந்துரை செய்தல். மற்றும் பிராந்திய இயக்குனரிடமிருந்து அறிக்கைகளைப் பெறுதல், கள யுக்தி ஒருங்கிணைப்பாளர் மற்றும் அருட்பணி ஒருங்கிணைப்பாளரிடமிருந்தும் அறிக்கைகளைப் பெறுதல்.

இந்த ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் தேவைக்கு ஏற்றவாறு இந்தக் குழுவை மாற்றிக்கொள்ளும் நோக்கில் மாற்றியமைக்கப்படும் வகையில் இருக்கிறார்கள். இந்த ஆலோசனைக் குழுவில் எத்தனைப்பேர் இருக்க வேண்டும் என்று அகில உலக அருட்பணி இயக்குனருக்கும், அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளருக்கும் பிராந்திய இயக்குனர் பரிந்துரை செய்து, அங்கீகாரம் பெறுவார். இதில் அந்தப் பிராந்தியத்திற்கான அதிகாரத்தைப் பெற்ற பொதுக் கண்காணிப்பாளர், அகில உலக அருட்பணி இயக்குனர் மற்றும் பிராந்திய இயக்குனர்கள் பதவியின் காரணமாக இதில் உறுப்பினர்களாக இருப்பார்கள். பிராந்திய இயக்குனரே இதன் தலைவராக இருப்பார். அகில உலக அருட்பணி இயக்கத்தின் பணியாளர்கள் இந்த ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக முடியாது ஆனால் ஆதாரங்களை அளிக்கும் நபர்களாக அவர்கள் பணியாற்றலாம். இந்தக் குழுவின் உறுப்பினர்கள் பொது மாநாட்டின் பிராந்திய கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பொது மாநாடுகளுக்கு இடையே ஏற்படும் காலியிடங்களை இந்த ஆலோசனைக் குழுவானது நிரப்பிக் கொள்ளலாம்.

பிராந்திய இயக்குனர், இந்தக் குழுவோடு சேர்ந்து ஆலோசித்து, பிராந்திய மாநாட்டையோ அல்லது அந்தப் பகுதியின் நற்செய்தி மாநாட்டையோ நடத்தலாம். (32.5)

**346.4. பிராந்திய இயக்குனர்.** பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவினால், அகில உலக அருட்பணி இயக்குனர் மற்றும் பொது நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்ற ஒரு பிராந்திய இயக்குனரைத் தேர்ந்தெடுக்க முடியும். அவர் நசரேயத் திருச்சபையின் கொள்கைகளோடு ஒத்துப்போய் பணியாற்றுவார். மறைமாவட்டங்கள், திருச்சபைகள், மற்றும் கல்வி நிறுவனங்களுக்குத் தலைமைத்துவத்தைக் கொடுத்து, நோக்கம், யுக்திகள் மற்றும் திருச்சபையின் நிகழ்ச்சிகளை நிறைவேற்றுவார்.

பிராந்திய இயக்குனர் மறுபடியுமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாக, நிர்வாகரீதியாக அகில உலக அருட்பணி இயக்கம் மற்றும் பொது நிர்வாகக் குழுவிற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். பிராந்திய பிரிவுகளின் காரியங்களில் பொதுக் கண்காணிப்பாளரின் பொது நிர்வாகக் குழுவிற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

**346.5. கள யுக்தி ஒருங்கிணைப்பாளர்.** தேவைப்படும்போது பிராந்திய இயக்குனர் ஒரு பிராந்தியத்திற்கு கள வடிவமைப்பைக் கொடுப்பார். அதை அகில உலக அருட்பணி இயக்குனருக்குப் பரிந்துரை செய்வார். அவர் Global Mission Policy and Procedure Manual என்பதற்கு ஏற்றவாறு கள யுக்தி ஒருங்கிணைப்பாளரை பணியில் அமர்த்துவார். இந்த கள யுக்தி ஒருங்கிணைப்பாளர் பிராந்திய இயக்குனருக்குக் கட்டுப்பட்டு இருப்பார்.

**346.6. பிராந்திய கல்வி ஆலோசனைக் குழு (RCOSAC).** இது பிராந்திய கல்வி ஒருங்கிணைப்பாளரைக் கொண்டிருக்கும். அவர் தன்னுடையபதவியின் காரணமாக இந்தக் குழுவின் தலைவராக இருப்பார். பிராந்திய இயக்குனரோடு ஆலோசித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதில் இருப்பார்கள். RCOSAC இந்தக் குழு அருட்பணி கல்வியில் ஆர்வமாக இருக்கும் அனைவரின் பிரதிநிதியாக இருக்கிறது (அதாவது போதகர்கள், நிர்வாகிகள், கல்வியாளர்கள், சாமானியர்கள்).

**346.7. பிராந்திய கல்வி ஆலோசனைக் குழுவின் (RCOSAC) கடமைகள். முக்கியக் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:**

1. பிராந்திய அளவிலான *குருத்துவ கல்வி கையேடு* உருவாக்கலாம். அதில் அந்தப் பிராந்தியத்தில் அபிஷேகம் பெறுவதற்குக் குறைந்தபட்சமாக எந்த கல்வித் தகுதி இருக்கவேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த அபிஷேகத்தைக் குறித்த புத்தகமானது *சட்டநூலில்* கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படைத் தகுதிகளை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இது International Sourcebook on Developmental Standards for Ordination என்ற புத்தகத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. அந்தப் பிராந்தியத்திற்கான குருத்துவ கல்வி பாடத்திட்டங்களுக்கான ஏற்றுக்கொள்ளப்படும் மதிப்பீடுகளை உருவாக்குதல். அவை பிராந்திய COSAC மற்றும் ICOSAC ஏற்றவாறு தகுதிகளைப் பெற்றிருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்.

3. பிராந்தியத்தில் இருக்கும் கல்வியாளர்களிடம் சேர்ந்து குருத்துவ கல்வி திட்டங்களை அர்த்தம்காணுதல்.

4. குருத்துவ கல்வி திட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பவை பிராந்திய Sourcebook and International Sourcebook தகுதிக்கு ஏற்றவாறு இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும்.

5. பிராந்திய குருத்துவ கல்விப் பாடத்திட்டங்கள் அகில உலக கல்வி ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்தல்.

## பாகம் V

# மேல்நிலைக் கல்வி

திருச்சபையும், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம்
அகில உலக மேல்நிலைக் கல்விக் குழு
அகில உலக கல்வி நிர்வாகக் குழு

## I. திருச்சபையும், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களும்

**400.** துவக்க காலத்திலிருந்தே நசரேயத் திருச்சபையானது மேல்நிலைக் கல்வியில் ஒப்படைப்புக் கொண்டுள்ளது. மாணவர்கள், நிர்வாக மற்றும் போதனை தலைமை, நிதிநிலை பற்றும் ஆவிக்குரிய ஆதரவுடன் திருச்சபையானது பல கல்லூரிகளையும்/ பல்கலைக்கழகங்களையும் உருவாக்கியுள்ளது. இந்தக் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் திருச்சபையின் இளைஞர்களுக்குக் கல்வியைப் புகட்டுகின்றன; திருச்சபையின் அநேக பெரியோர்களும்கூட கல்வி பெறுகிறார்கள்; இவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சி பெறும்படி இக்கல்லூரிகள் வழிகாட்டுகின்றன; திருச்சபைக்குப் புத்துணர்வு ஊட்டுகின்றன; சிந்தைசெய்யக்கூடிய, அன்புகாட்டக்கூடிய கிறிஸ்துவின் ஊழியர்களை உலகிற்கு அனுப்புகின்றன. திருச்சபைக் கல்லூரியோ அல்லது பல்கலைக்கழகமோ ஒரு உள்ளூர் சபையைப் போல இல்லாவிட்டாலும், திருச்சபையோடு இணைந்த ஒரு முக்கியமான பகுதியாக இருக்கிறது. இது திருச்சபையின் ஒரு வெளிப்பாடாகும்.

நசரேயத் திருச்சபையானது மனித வாழ்வின் முக்கியத்துவத்தையும், கண்ணியத்தையும் நம்புகிறது; மக்கள் மீட்படையவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும், அறிவுபூர்வமாகவும், சரீரப்பிரகாரமாகவும் "பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டது" (2 தீமோத்தேயு

2:21) வசனத்தின்படியும் புத்துணர்வடையுமாறு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதின் தேவையையும் நம்புகிறது. அடிப்படைப் பணியும் மற்றும் உள்ளூர் சபைச் செயல்பாடுகளின் பழக்கவழக்கங்களின் வெளிப்பாடுகளுமாகிய – நற்செய்தி அறிவித்தல், சமயக் கல்வி, கருணையுள்ளம் சார்ந்த ஊழியங்கள், வழிபாட்டு ஆராதனைகள் – இவை திருச்சபை கொண்டிருக்கும் தேவன்மீதான அன்பையும், மனிதர்கள் மீதான கரிசனையையும் எடுத்துக்காட்டுகின்றன.

உள்ளூர் சபையைப் பொருத்தவரை, வெவ்வேறு வகையான வளர்ச்சி நிலையில் உள்ள இளைஞர்களுக்கும், பெரியோர்களுக்குமான கல்வி, நற்செய்தியின் நற்பயன்களைப் பரப்புகிறது. சபைகள் தங்கள் நோக்கங்களிலும், செயல்பாட்டிலும் சிசுவகுப்பு முதல் மேல்நிலைப் பள்ளி வரை ஏதேனும் ஒரு நிலையிலோ அல்லது அனைத்து நிலைகளிலுமுள்ள வாரநாள் கல்வித் திட்டங்களையும் கொண்டிருக்க வேண்டும். பொதுவான சபையைப் பொருத்தவரை, மேல்நிலைக் கல்வி அல்லது குருத்துவ ஆயத்தம் அளிக்கும் கல்வி நிறுவனங்களைக் கொண்டிருக்கும் காலம் காலமாக வரும் பழக்கம் தொடரப்பட வேண்டும். இத்தகைய கல்வி நிறுவனங்கள் எங்கெல்லாம் இயங்குகின்றனவோ, அங்கெல்லாம் அவை பொதுச் சபையால் நிறுவப்பட்டு, *சட்டநூலின்* மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகள் மற்றும் இறையியல் கொள்கைகளுக்குள்ளும் இயங்க வேண்டும்.

**400.1. கல்விப்பணி அறிக்கை.** வெஸ்லிய மற்றும் பரிசுத்த இயக்கங்களின் வேதாகமத்துக்குரிய மற்றும் இறையியல் ஒப்படைப்புகளில் வேரூன்றியதாகவும், இந்தச் சபைப் பிரிவின் அறிவிக்கப்பட்ட அருட்பணி நோக்கத்தைச் சார்ந்ததாகவும் உள்ள நசரேயத் திருச்சபையின் கல்விப்பணி, அதை ஏற்றுக்கொள்வதின்மூலமாக எதிர்ப்பார்ப்பவர்களுக்கு, ஆவிக்குரிய வளர்ச்சியிலும், சமுதாய மற்றும் தனிமனித வாழ்க்கை பற்றிய முரணற்ற மற்றும் ஒன்றிணைந்த கிறிஸ்தவ புரிந்துகொள்ளுதலோடு திருச்சபைக்கும் உலகுக்குமான ஊழியங்களிலும் தங்களை வெளிப்படுத்தும்படி வழிகாட்டக்கூடிய நோக்கத்தைக் கொண்டுள்ளது. மேலும், ஒரு பாடத்திட்டத்தையும், தரமான போதனையையும், பட்டதாரிகள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பணிகளிலும், வேலைகளிலும் திறனுள்ளவர்களாகச் செயல்படும்படி அந்தப் பட்டதாரிகளுக்குப் போதுமான ஆயத்தமளிக்கும் கல்விசார்ந்த சாதனைக்கான நிரூபணத்தையும், இந்த மேல்நிலைக் கல்வி நிறுவனங்கள் அளிக்க முயற்சி செய்யும்.

**400.2.** பட்டமளிக்கும் கல்விக் குழுமங்களை நிறுவுவதற்கு சர்வதேச கல்விக் குழுவின் பரிந்துரையின் பேரில் பொது மாநாட்டின் அங்கீகாரம் தேவைப்படுகிறது.

ஏற்கெனவே இருக்கும் கல்வி நிறுவனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவோ அல்லது நிலையை மாற்றவோ சர்வதேச கல்விக் குழுவின் பரிந்துரையின் பேரில் பொது மாநாட்டின் அங்கீகாரம் தேவைப்படுகிறது.

சர்வதேசக் கல்விக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறாமல் எந்தவொரு உள்ளூர் சபையோ அல்லது சபைகளின் குழுவோ, பிரதிநிதித்துவம் செய்யும் நபரோ, திருச்சபையின் சார்பாக ஒரு மேல்நிலைப் பள்ளி நிலைக்கு மேற்பட்ட கல்வி

நிறுவனத்தையோ அல்லது குருத்துவ பயிற்சி நிறுவனத்தையோ, நிறுவவோ அல்லது உத்தரவாதமளிக்கவோ கூடாது.

## II. அகில உலக மேல்நிலைக் கல்விக் குழு

**401.** ஒவ்வொரு பல்கலைக்கழம் மற்றும் நசரேயத் திருச்சபையின் பட்டதாரி நிலைக் கல்வி நிறுவனங்களின் தலைவர், முதல்வர், அதிபர் அல்லது இயக்குனர் (அல்லது அவரால் நியமிக்கப்படும் பிரதிநிதி) இவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அகில உலக மேல்நிலைக் கல்விக் குழு அமைக்கப்படும். பிராந்திய இறையியல் கல்வி ஒன்றிணைப்பாளர்கள், கல்வி விசாரணை அதிகாரி, உலக அருட்பணித் துறை இயக்குனர், சர்வதேச கல்வி நிர்வாகக் குழுவுக்குப் பொறுப்பாகவுள்ள பொதுக் கண்காணிப்பாளர் போன்றவர்களும் இந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

## III. அகில உலகக் கல்வி நிர்வாகக் குழு

**402.** அகில உலகக் கல்வி நிர்வாகக் குழுவானது, உலகெங்கிலுமுள்ள நசரேயத் திருச்சபையின் கல்வி நிறுவனங்களுக்கான பொதுவான திருச்சபை நியாயப்பீடமாக விளங்கும்.

இந்தக் குழுவில் பன்னிரண்டு உறுப்பினர்கள் இருப்பார்கள்: பொது நிர்வாகக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு உறுப்பினர்களும், பின்வரும் பதவியில் இருப்பவர்களும்: பொது நிர்வாகக் குழுவைச் சேர்ந்த இரண்டு கல்விப் பிரதிநிதிகள், அகில உலக அருட்பணித் துறை இயக்குனர், குருத்துவ ஊழியங்கள் இயக்குனர் மற்றும் கல்வி விசாரணை அதிகாரி. கல்வி விசாரணை அதிகாரி, உலக அருட்பணித் துறை இயக்குனர், பொது நிர்வாகக் குழுவிலுள்ள இரு கல்விப் பிரதிநிதிகள், அகில உலகக் கல்வி நிர்வாகக் குழு மற்றும் உலக அருட்பணித் துறை ஆகியோர் பொதுக் கண்காணிப்பாளர்களின் ஒப்புதலைப் பெற்று பொது நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக எட்டுப் பேரை நியமனம் செய்வார்கள்.

திருச்சபை முழுவதும் பரந்துவிரிந்து பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என்பதற்காக நியமனக் குழுவானது பின்வரும் நியமிகளை நியமிக்க வேண்டும்: பிராந்திய கல்வி ஒருங்கிணைப்பாளர், மூன்று சாமானியர்கள், அகில உலக அருட்பணித்துறையிலிருந்து கல்வி விசாரணை அதிகாரித் தெரிந்தெடுக்கப்படாத பகுதிகளிலிருந்து இரண்டு அபிஷேகம்பெற்ற போதகர்கள்; இரண்டு ''யாராகவும் இருக்கலாம்'' என்ற நியமனதாரர்கள். ஒவ்வொரு பகுதியிலிருந்தும் பிரதிநிதிகளைப் பெறாமல் எந்த ஒரு அகில உலக அருட்பணித் துறையும் ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை அகில உலகக் கல்வி செயற்குழுவில் பெற்றிருக்கக்கூடாது.

இந்த நியமனம் மற்றும் தேர்ந்தெடுப்பு செயல்முறை முழுவதிலும், கலாச்சார பரிவர்த்தனை தொலைநோக்கம் கொண்ட கல்வியாளர்களாக இருப்பவர்களின் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**அகில உலகக் கல்வி நிர்வாகக் குழுவின் பணிகளாவன:**

**402.1.** நிறுவனங்கள் அந்தந்த நிர்வாகக் குழுக்களின் சட்டபூர்வமான அதிகாரத்திற்குள் இயங்குகின்றனவா என்றும் இந்த நிர்வாகக் குழுக்களின் அமைப்பு விதிகளும், துணைச் சட்டங்களும் அந்தந்தப் பதிவு விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் ஒத்தவைகளாக இருக்கின்றனவா என்றும், இவை *நசரேயத் திருச்சபையின் சட்டநூலில்* கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைப் படி இருக்கின்றனவா என்றும் கண்காணித்தல்.

**402.2.** நசரேய நிறுவனங்களின் நிர்வாகக் குழுக்களின் உறுப்பினர்கள், நசரேயத் திருச்சபையில் நன்மதிப்புப் பெற்ற உறுப்பினர்களாக இருக்கும்படி கண்காணித்தல். நசரேயத் திருச்சபையின் *சட்டநூலில்* கொடுக்கப்பட்டுள்ள திருச்சபை வழக்கங்கள் மற்றும் முழுமையான பரிசுத்தமாக்கப்படுதலின் கோட்பாடு உட்பட நம்பிக்கைப் பிரமாணங்களுக்கு முழுவதும் ஏற்றவகையில் நடக்க வேண்டும். கூடுமானவரையில், அதிகாரத்திலுள்ள மேல்நிலைக் கல்வி நிர்வாகக் குழுக்களின் உறுப்பினர்களில் சம அளவு எண்ணிக்கையிலான சாமானிய மற்றும் குருத்துவ உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

**402.3.** நன்கொடைகள், காணிக்கைகள், மரண சாசன தானம் மூலமாக கல்விப் பணிக்காக அளிக்கப்படும் நிதி உதவிகளைச் சேகரித்தல்; பொது நிர்வாகக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட கொள்கைக்கேற்ப, ஒவ்வொரு கல்வி நிறுவனத்திற்கும், இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட ஆண்டுதோறும் பரிந்துரை செய்தல். நமது கல்வித் திட்டம், அமைப்புத் திட்டங்கள், நிதிநிலை அறிக்கைகள் இவற்றை அகில உலகக் கல்வி நிர்வாகக் குழுவில் பதிவு செய்யாத கல்வி நிறுவனங்கள், ஒழுங்கான ஆதரவைத் தொடர்ந்து பெற முடியாது.

**402.4.** எல்லாப் பல்கலைக்கழக மற்றும் பட்டதாரி கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் கீழ்க்கண்ட செய்திகளைத் தொகுத்து, கல்வி விசாரணை அதிகாரி அனுப்பும் ஆண்டறிக்கையைப் பெற்று, அதற்கேற்றபடி நிர்வாகம் செய்தல்: 1) புள்ளிவிவர ஆண்டறிக்கை, 2) தணிக்கை ஆண்டறிக்கை 3) வரும் ஆண்டுக்கான வருடாந்தர வரவு செலவுத் திட்டம்.

**402.5.** கல்வி நிறுவனங்களுக்கு ஆலோசனை அளிப்பதே இதன் பணியாக இருந்தாலும்கூட, பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழு மற்றும் பொது நிர்வாகக் குழுவிடம் பரிந்துரை செய்தல், ஆதரவளித்தல் மற்றும் நியாயத்திற்காகப் பரிந்து பேசுதல்.

**402.6.** கல்வி நிறுவனங்களுக்கும் பொதுவான திருச்சபைக்குமான உறவுகள் பலப்படும்படி, நசரேயக் கல்வி நிறுவனங்களோடு சம்பந்தப்பட்ட காரியங்களில் சபைக்கு உதவுதல்.

**402.7.** அதனுடைய அலுவல்களையும், பரிந்துரைகளையும் பொது நிர்வாகக் குழுவில் காணப்படும் அதற்குரிய பிரிவில் சமர்ப்பித்தல்.

**403.** அனைத்து கல்வி நிறுவன அமைப்பு விதிகளிலும், துணைச் சட்டங்களிலும் கலைக்கப்படுவதைப் பற்றியும், சொத்துக்களை ஒழுங்குபடுத்துவது பற்றியும் ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதன்படி திருச்சபையின் கல்விப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும்படி நசரேயத் திருச்சபையே அந்தச் சொத்துக்களை ஏற்றுக்கொள்ளும்.

# பாகம் VI

# ஊழியம் மற்றும் கிறிஸ்தவ சேவை

போதகரின் அழைப்பு மற்றும் அவரது தகுதிகள்
ஊழியத்தின் வகைகள்
ஊழியத்தின் பதவிகள்
போதகர்களுக்கான கல்வி முறை
தகுதிகளும் ஊழியர் விதிகளும்

## I. போதகருடைய அழைப்பு மற்றும் அவரது தகுதிகள்

குறிப்பு: *சட்டநூல்* பதிப்புக் குழுவானது விதி எண் 500இல் காணப்படும் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து, இந்தப் பிரிவை வெளிப்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்த முயற்சி செய்திருக்கிறது. ஆனாலும், *சட்டநூலின்* இந்தப் பகுதியின் பண்புகளின்படி, "போதகர்" என்ற வார்த்தையானது சான்றுகளைப் பெற்றவரைக் குறிக்கிறது. அந்தச் சான்று அனுமதியாகவோ, அபிஷேகமாகவோ அல்லது கட்டளையாகவோ இருக்கலாம்.

**500.** எல்லா விசுவாசிகளும், எல்லா மக்களுக்கும் ஊழியம் செய்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நசரேயத் திருச்சபை உறுதியாக நம்புகிறது.

கிறிஸ்து தாம் விரும்பிய சில ஆண்களையும் பெண்களையும் குறிப்பிட்ட மற்றும் பொது ஊழியத்திற்காகத் தம்முடைய 12 சீஷர்களை அழைத்ததைப் போலவே அழைக்கிறார். பரிசுத்த ஆவியானவரால் தெளிவுபடுத்தப்படும் திருச்சபையானது இந்த அழைப்புகளை அங்கீகரித்து, வாழ்நாள் முழுவதும் அந்த நபர் ஊழியத்தில் சேவிப்பதற்காக உதவியையும் ஆதரவையும் அளிக்கிறது.

**501. ஊழியத்தில் பெண்களைக் குறித்த இறையியல் கோட்பாடு.** தேவன் கொடுத்திருக்கும் ஆவிக்குரிய வரங்களைப் பெண்கள் திருச்சபைக்குள் பயன்படுத்துவதற்காகக் கொண்டிருக்கும் உரிமையை நசரேயத் திருச்சபை ஆதரிக்கிறது. பெண்கள் தேர்ந்தெடுக்கப்படும்படியும், நசரேயத் திருச்சபைக்குள் தலைமைத்துவ பதவிகளில் செயலாற்றும்படியும், மூப்பர் மற்றும் டீக்கன்மார்கள் உட்பட, வரலாற்றுப்பூர்வமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமையை அது உறுதிப்படுத்துகிறது.

கிறிஸ்துவின் மீட்பின் கிரியையின் நோக்கமே தேவனுடைய சிருஷ்டிப்பை வீழ்ச்சியின் சாபத்திலிருந்து விலக்கிக் காப்பதுதான். "கிறிஸ்துவில்" இருக்கும் அனைவரும் புதிய சிருஷ்டிகளாக இருக்கிறார்கள் (2 கொரிந்தியர் 5:17). இந்த மீட்கப்பட்ட சமுதாயத்தில், சமுதாய நிலை, இனம் அல்லது பாலினத்தின் அடைப்படையில் யாரும் பிரித்துப்பார்க்கக்கூடாது (கலாத்தியர் 3:26–28). தீமோத்திக்கும் (1 தீமோத்தேயு 2:11–12), கொரிந்தியர்களுக்கும் (1 கொரிந்தியர் 14:33–34) பவுல் அப்போஸ்தலனால் உருவாக்கப்பட்ட முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரையை அடிப்படையாகக் கொண்டு, ஊழியத்தில் பெண்களின் பங்களிப்பைக் கட்டுப்படுத்துவது என்பது ஆவிக்குரிய தலைமைத்துவ பதவிகளில் பெண்கள் பங்கெடுப்பதை ஊக்குவிக்கும் இந்த வசனங்களுக்கு நேர் எதிர்மறையாக இருக்கிறது என்றும் (யோவேல் 2:28–29; அப்போஸ்தலர் 2:17–18; 21:8–9; ரோமர் 16:1, 3, 7; பிலிப்பியர் 4:2–3), அது வெஸ்லிய–பரிசுத்த பாரம்பரியத்தின் ஆவியையும், பழக்கத்தையும் மீறுகிறது என்றும் நாம் விசுவாசிக்கிறோம். கடைசியாக, வேத வசனங்கள் முழுவதிலும் கூறப்பட்டிருக்கும் தேவனுடைய பண்புநலனுக்கும், அதிலும் குறிப்பாக இயேசு கிறிஸ்துவாகிய நபரில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பண்புநலனுக்கும் அது ஒத்துப்போகாத நிலையாக இருக்கிறது என்று நாம் கருதுகிறோம்.

**502. அபிஷேகத்தைக் குறித்த இறையியல் கோட்பாடு.** இந்தப் பிரபஞ்சம் சார்ந்த குருத்துவம் மற்றும் எல்லா விசுவாசிகளின் ஊழியம் ஆகியவற்றைக் குறித்த ஆவிக்குரிய கொள்கைகளை உறுதிப்படுத்துவதோடு, அபிஷேகம் என்பது தேவன் குறிப்பிட்ட ஆண்களையும் பெண்களையும் திருச்சபையில் காணப்படும் ஊழிய தலைமைத்துவத்திற்காக அழைத்து, அவர்களுக்கு வரங்களைக் கொடுத்திருக்கிறார் என்ற வேதாகமரீதியான விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. அபிஷேகம் என்பது திருச்சபையின் உறுதிப்படுத்தும், அதிகாரமளிக்கும் செயலாக இருக்கிறது. அது ஊழிய தலைமைத்தவத்திற்கு உக்கிராணிகளாகவும், சுவிசேஷத்தையும் இயேசு கிறிஸ்துவின் திருச்சபையை எடுத்துரைப்பவர்களாகவும் தேவனுடைய அழைப்பைக் கண்டு, அதை உறுதிப்படுத்துகிறது. அதோடு, அபிஷேகம் என்பது இந்தப் பிரபஞ்சம் சார்ந்த திருச்சபைக்கும், உலகத்திற்கும் இந்த நபர், பரிசுத்தமான வாழ்க்கையையும், பொது ஊழியம் செய்வதற்கான வரங்களையும் கிருபைகளையும் பெற்றிருக்கிறார் என்றும், அறிந்துகொள்வதற்கான தாகத்தை, அதிலும் குறிப்பாக தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள்வதற்கான தாகத்தைப் பெற்றிருக்கிறார் என்றும், கோட்பாடுகளைச் சிறப்பாக எடுத்துரைக்கும் திறனைப் பெற்றிருக்கிறார் என்றும் காண்பிக்கும் எடுத்துக்காட்டான வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கிறது.

(அப்போஸ்தலர் 13:1–3; 20:28; ரோமர் 1:1–2; 1 தீமோத்தேயு 4:11–16; 5:22; 2 தீமோத்தேயு 1:6–7)

**502.1.** போதகர்களுடைய ஆவிக்குரிய தகுதிநிலைகள், பண்பு மற்றும் வாழ்க்கை முறையின் மீதே நசரேயத் திருச்சபை அதிகமாகச் சார்ந்திருக்கிறது. (538.17).

**503.2.** நசரேயத் திருச்சபையில் நற்செய்தியை அறிவிக்கும் போதகர் தாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவனோடு சமாதானத்தைப் பெற்றுள்ளார் என்பதையும், தாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தால் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளார் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். இந்தப் போதகர் விசுவாசிகள் அல்லாதவர்கள் மீது ஆழமான அன்பைக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அழிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்களும் இரட்சிப்பின் செய்தியை அறிந்துகொள்ளும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்றும் விசுவாசிக்கவேண்டும்.

**502.3.** கிறிஸ்துவின் போதகரானவர் எல்லாக் காரியங்களிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும் – நேரந்தவறாமை, முடிவெடுக்கும் திறன், உழைப்பு, ஊக்கம், பரிசுத்தம், நீடிய சாந்தத்திலும், அன்பிலும், தேவனுடைய வல்லமையின் சத்தியத்திலும் இருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 6:6–7).

**502.4.** விசுவாசிகள் தங்களின் அன்பானது அறிவிலும், எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாகப் பெருகும்படிக்கு (பிலிப்பியர் 1:9) செயல்முறை வாழ்க்கையில் கிறிஸ்தவ கிருபைகளை வளர்த்துக்கொண்டு படிப்படியாக பூரணநிலையை நோக்கி முன்னேற வேண்டியதின் அவசியத்தையும் போதகர்கள் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். நசரேயத் திருச்சபையில் ஊழியம் செய்பவர் இரட்சிப்பைப் பற்றியும், கிறிஸ்தவ கோட்பாடுகளைப் பற்றியும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும்.

**502.5.** போதகர், எதிர்கால ஊழியர்களையும், ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்றவர்களையும் வழிகாட்டுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**502.6.** போதகர்கள் தங்கள் பணிக்கான கிருபையோடு, ஈவுகளையும் பெற்றிருக்க வேண்டும். அறிவை நாடும் வாஞ்சை, குறிப்பாக வேத வசனத்தின்மேல் வாஞ்சை கொண்டிருக்க வேண்டும். வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிய திடமானக் கருத்து, பூரண அறிவு, தெளிவான பார்வை இவற்றைக் கொண்டிருக்க வேண்டும். அவர்களது ஊழியத்தின் மூலம் பரிசுத்தவான்கள் பக்திவிருத்தியைப் பெறுவார்கள்; பாவிகள் மனந்திரும்புவார்கள். ஜெப ஜீவியத்தில் நசரேயத் திருச்சபையில் சுவிசேஷத்தை ஊழியம் செய்பவர் முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

## II. ஊழியத்தின் வகைகள்

## A. சாமானியனின் ஊழியம்

**503.** அனைத்துக் கிறிஸ்தவர்களும் தாங்கள் கிறிஸ்துவின் போதகர்கள் என்ற நோக்கோடு, அவர்களுக்குப் பொருத்தமான ஊழியத்தைத் தெரிந்துகொள்ள ஆண்டவரின் சித்தத்தை நாட வேண்டும். (500)

**503.1.** சாமானியர்களின் ஊழியத்தை நசரோயத் திருச்சபையானது அங்கீகரிக்கிறது. சாமானியர்கள் திருச்சபையின் பல பதவிகளில் ஊழியம் செய்ய வேண்டும் என்பதையும் அங்கீகரிக்கிறது (எபேசியர் 4:11–12). மறைமாவட்ட மாநாடு ஒரு சாமானியனை நியமிக்கக்கூடிய பதவிகளாகப் பின்வரும் பதவிகளை நசரேயத் திருச்சபைப் பார்க்கிறது: போதகர், நற்செய்தியாளர், ஊழியர், ஆசிரியர், நிர்வாக அலுவலர், சாப்லெய்ன் மற்றும் சிறப்பு ஊழியம். இந்த வகைகளைப் பூர்த்தி செய்வதற்கு சாமானியர்களுக்கான பயிற்சி என்பது பொதுவாகத் தேவைப்படுகிறது அல்லது பெரிதும் ஆசைப்படப்படுகிறது. (605.3)

**503.2. சாமானிய போதகர்.** சபை நிறுவனர், ஓய்வுநேர போதகர், ஆசிரியர், சாமானிய நற்செய்தியாளர், சாமானிய பாடல் நற்செய்தியாளர், உக்கிராணத்துவ போதகர், சபை அலுவலர் போதகர் மற்றும்/அல்லது சபையின் சார்பாகப் பிற சிறப்பு ஊழியங்களில் பங்குபெற அழைக்கப்பட்டுள்ளதாக உணரும் நசரேயத் திருச்சபையின் எந்த உறுப்பினரும், தற்போது அபிஷேகம் பெற்ற போதகராகும்படியான சிறப்பு அழைப்பை உணராதிருந்தால், சாமானிய ஊழியத்துக்கான சான்றிதழ் பெறும்படியான ஒரு பாடத்திட்டத்தில் பயிற்சிபெறலாம்.

**503.3.** போதகரின் பரிந்துரையின் பேரில் சபை நிர்வாகக் குழுவானது, ஒரு சாமானிய போதகரை முதலில் அவரது இரட்சிப்பைப் பற்றிய சுய அனுபவம், சபை ஊழியங்களில் ஈடுபடும் திறன், சபையின் பணிகளைப் பற்றிய அறிவு இவைப்பற்றி ஆய்வுசெய்து, அத்தகைய ஊழியத்தில் அந்தச் சாமானிய போதகருடைய தகுதிகளில் திருப்தி தெரிவிக்க வேண்டும்.

**503.4.** ஒவ்வொரு சாமானிய போதகருக்கும் உள்ளூர் சபை நிர்வாகக் குழுவானது போதகராலும், சபை நிர்வாகக் குழுவின் செயலாளராலும் கையொப்பமிடப்பட்ட சான்றிதழை வழங்கலாம்.

**503.5.** போதகரின் பரிந்துரையின் பெயரில் சாமானிய போதகரின் சான்றிதழானது வருடாவருடம் சபை நிர்வாகக் குழுவினால் புதுப்பிக்கப்படலாம். இதற்கு தொடர்ந்து நடக்கும் சாமானிய பயிற்சி பாடத்திட்டத்தில் சுருக்கப்படுத்திக் காண்பிக்கப்பட்டிருப்பதின் படி இரண்டு தலைப்புகளை அந்தச் சாமானிய போதகர் படித்து முடித்திருக்க வேண்டும். சாமானிய போதகர் ஆண்டுதோறும் சபை நிர்வாகக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்.

**503.6.** மறைமாவட்டப் பொறுப்பில் சபை நிறுவனராகவோ, அனுப்பப்படும் போதகராகவோ, ஓய்வுநேர போதகராகவோ, மற்றும்/அல்லது பிற சிறப்பு ஊழியங்களிலோ பணிபுரிந்துவரும் ஒரு சாமானியப் போதகர், தேவையான கல்வித்

திட்டத்தைப் பயின்று முடித்த பிறகு, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் செயலாளர் கையொப்பமிட்ட, சாமானிய ஊழியத்திற்கான சான்றிதழை மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினிடமிருந்து பெறலாம். மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின் பேரில், இந்தச் சாமானிய ஊழியத்திற்கான சான்றிதழ் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவால் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படலாம்.

**503.7.** தான் உறுப்பினராக இருக்கும் உள்ளூர் சபைக்கு வெளியே பணிபுரியும் ஒரு சாமானிய போதகர், நியமனம், மேற்பார்வை இவற்றைப் பொருத்தமட்டில் மறைமாவட்டக் காண்காணிப்பாளருக்கும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவுக்கும் கட்டுப்பட்டவர். ஆண்டுதோறும் இவர்களுக்கு அவர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். மறைமாவட்டப் பொறுப்பு முடிவடையும்போது, அந்தச் சாமானியப் போதகர் உறுப்பினராகவுள்ள உள்ளூர் சபைக்கு புதுப்பித்தல் மற்றும் அறிக்கையைச் சமர்ப்பித்தல் நிமித்தமாக அறிவிக்கப்பட வேண்டும்.

**503.8.** குருத்துவ கல்வி திட்டத்தில் முதல் படியைப் பயின்று முடித்தபின்னர், சாமானியப் போதகர் தான் தெரிந்துகொண்ட ஊழியத்திற்கான கல்வியில் சிறப்புக் கவனம் செலுத்தில தொடர்ந்து நடக்கும் பயிற்சிப் பாடதிட்டத்தில் சேர்ந்து படிக்கலாம்.

**503.9.** ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து ஆகிய சாக்கிரமெந்துகளை அளிப்பதற்கும், திருமணங்களை நடத்திவைப்பதற்கும் சாமானியப் போதகர்கள் தகுதி பெற்றவர்கள் அல்லர்.

## B. போதகரின் ஊழியம்

**504.** அபிஷேகம் பெற்ற போதகர் என்ற பிரசங்க ஊழியத்தின் ஒரே ஒரு பதவியை நசரேயத் திருச்சபை அங்கீகரிக்கிறது. அபிஷேகம் பெற்ற போதகரும், அபிஷேகம் பெற்ற டீக்கனாரும், உரிமம்பெற்ற போதகரும் சபையின் பல்வேறுபட்ட பொறுப்புகளில் பணிபுரிகிறார்கள் என்பதையும் திருச்சபை அங்கீகரிக்கிறது (எபேசியர் 4:11–12) திருச்சபையானது பின்வரும் பொறுப்புகளை உறுதிப்படுத்துகிறது. இந்தப் பொறுப்புகளில் மறைமாவட்ட மாநாடானது ஒரு அபிஷேகம் பெற்ற போதகரையோ, டீக்கனாரையோ அல்லது தேவைப்படும் தருணத்திற்கேற்ப ஒரு உரிமம் பெற்ற போதகரையோ, நியமிக்கலாம்: போதகர், நற்செய்தியாளர், அருட்பணியாளர், ஆசிரியர், நிர்வாக அதிகாரி, சபைப் போதகர், சிறப்பு ஊழியங்கள். “பொறுப்பைப் பெற்ற போதகர்” என்று கூறப்படும் இந்த வகை ஊழியங்களில் வரவிருப்பவர்களுக்குச் சாதாரணமாகக் குருத்துவ பயிற்சியும், அபிஷேகமும் தேவைப்படுகிறது. Sourcebook on Ordination என்ற புத்தகம் ஒவ்வொரு வகையான ஊழியத்தைப் பற்றியும் குறிப்புகளை அளிக்கிறது. பொறுப்பைப் பெற்றுள்ள போதகருக்கான தேவைகளைத் தெரிந்துகொள்வதற்கு இந்தக் கையேடு மறைமாவட்ட குழுக்களுக்கு உதவுகிறது. பொறுப்பைப் பெற்றுள்ள போதகர்கள் மட்டுமே மறைமாவட்ட மாநாட்டில் வாக்களிக்கக்கூடிய உறுப்பினர்களாக இருப்பார்கள்.

**504.1.** ஒரு குறிப்பிட்ட பொறுப்புக்காக நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஆண்டுதோறும், பொறுப்பை அளிக்கும் மறைமாவட்ட மாநாட்டிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**504.2.** ஒரு குறிப்பிட்ட பொறுப்புக்காக நியமிக்கப்படும் ஒவ்வொருவரும் பொறுப்பை அளிக்கும் மறைமாவட்டத்திடம் விண்ணப்பித்து, அவர் ஊழியப் பொறுப்புக்கான சான்றிதழை ஆண்டுதோறும் பெறலாம். இந்தச் சான்றிதழில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், மறைமாவட்டச் செயலாளரும் கையொப்பமிடுவர்.

**504.3.** ஊழியத்தின் ஒரு குறிப்பிட்ட பொறுப்புக்காக நியமிக்கப்படும் ஒருவர், ஒப்புக்கொள்ளப்பட்ட மருத்துவ அதிகாரியால் செயலிழந்த நிலையில் இருக்கிறார் என்று தீர்மானிக்கப்படும்போது, அவர் 'பொறுப்பைப் பெற்ற ஆனால் செயலிழந்தவர்' என்ற பட்டியலில் இடம் பெறுகிறார்.

## III. ஊழியத்தின் பதவிகள்

**505. ஊழியத்தின் பதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:**

**506. அலுவலக அதிகாரி.** பொதுச் சபையால் பொது அதிகாரியாகப் பணிபுரியும்படி தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அபிஷேகம்பெற்ற போதகரோ அல்லது டீக்கனாரோ அலுவலக அதிகாரி என்று அழைக்கப்படுகிறார். அல்லது பொது ஆலயத்தில் பணிபுரிய பொது நிர்வாகக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ள ஒரு அபிஷேகம் பெற்ற போதகரோ, டீக்கனாரோ அல்லது உரிமம் பெற்ற போதகரோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளராக மறைமாவட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது மறைமாவட்டத்தின் ஊழியத்தில் முழுநேரப் பணிபுரியும்படி தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டவர். இவரே பொறுப்பைப் பெற்றுள்ள போதகராவார்.

**507. சபைப் போதகர்.** சபைப் போதகர் என்பவர் அபிஷேகம் பெற்ற போதகராக இருக்கிறார். அவர் இராணுவம், நிறுவனம் சார்ந்த அல்லது தொழில்சார்ந்த போதகத்தைச் செய்யும்படியாக தெய்வீக வழிநடத்துதலைப் பெற்றவராக இருக்கிறார். இப்படிப்பட்ட பதவியில் சேவை செய்ய வேண்டும் என்று விரும்பும் போதகர்கள் அனைவரும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர் இந்தப் பதவியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது பெறும் முக்கியமான பணியாக இருப்பது பொறுப்பைப் பெற்றுள்ள போதகராக இருப்பதுதான். அவர் வருடாந்த அறிக்கையை மறைமாவட்ட மாநாட்டிற்குச் சமர்ப்பிக்க வேண்டும். மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஆலோசனைகளுக்குத் தலைசாய்க்க வேண்டும். இந்தப் போதகர் ஐக்கியத்தின் மூலமாக வரும் உறுப்பினர்களை நசரேயத் திருச்சபைக்குள் வரவேற்பார். அவர் அதிகாரப்பூர்வமாக ஒழுங்குப்பண்ணப்பட்டிருக்கும் நசரேயத் திருச்சபையின் விதிகளைப் பின்பற்றி, சட்டநூலில் காணப்படும் சாக்கிரமெந்துகளை செயல்படுத்தி வரவேற்பார். அவர் குருத்துவ அக்கறை, கவலையில் இருப்பவர்களுக்கு ஆறுதல்,

கண்டித்து, ஊக்குவித்தல் மற்றும் பாவிகளின் மனமாற்றம், விசுவாசிகள் பரிசுத்தவான்களாக்கப்படுதல், மேன்மையான பரிசுத்த விசுவாசத்திலே தேவனுடைய மக்களை வளர உதவி செய்வார். (519, 538.9, 538.13)

**508. பெண் டீக்கன்மார்கள்.** நசரேயத் திருச்சபையின் உறுப்பினரான, பிணியாளிகளுக்கும், தேவையிலுள்ளவர்களுக்கும் ஊழியம் செய்வதிலும், துயரப்படுபவர்களுக்கு ஆறுதலளிப்பதிலும், கிறிஸ்தவ பரோபகாரப் பணிகளைச் செய்வதிலும் தேவ அழைப்பைப் பெற்றுள்ளதாக விசுவாசிப்பவரும், தனது திறமை, கிருபை, பயன்படும் தன்மைபற்றி தன் வாழ்க்கையின்மூலம் நிரூபித்திருப்பவரும், 1985க்கு முந்தைய ஆண்களில் பெண் டீக்கனாராக அனுமதி பெற்றிருப்பவரும் அல்லது அபிஷேகம் பெற்றிருப்பவருமான பெண்மணி இந்தத் தகுதியைப் பெறுகிறார். முழு நேர ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்ற ஆனால் பிரசங்கம் பண்ணுவதற்கான அழைப்பைப் பெறாத பெண்மணிகள் டீக்கன்மாராக அபிஷேகம் செய்யப்படுவதற்கான தகுதிகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். கருணை ஊழியங்களுக்கான அனுமதிச் சான்றைப் பெறவிரும்பும் பெண்மணிகள் ஒரு சாமானிய போதகருக்கான தகுதிகளைப் பெற முயலவேண்டும். (113.9, 503.2–503.9)

**509. கல்விப் பணியாளர்.** ஒரு கல்விப் பணியாளராகப் பணிபுரிபவர் ஒரு அபிஷேகம் பெற்ற போதகர், டீக்கனார், உரிமம் பெற்ற போதகராக அலுவல நிர்வாகத்திலோ அல்லது நசரேயத் திருச்சபையின் கல்வி நிறுவனங்கள் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றுகிறவராக இருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு நபரையே மறைமாவட்டமானது தங்களுடைய ஊழியப் பொறுப்புகளில் கல்விப் பணியாளராக நியமிக்க வேண்டும்.

**510. நற்செய்தியாளர்.** பல இடங்களுக்கும் சென்று நற்செய்தியை அறிவிப்பதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஒரு அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது உரிமம் பெற்ற போதகரோ நற்செய்தியாளர் என்று அழைக்கப்படுகிறார். எழுப்புதல் கூட்டங்களை விருத்தி செய்யவும், நாடெங்கிலும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பவும் இவர் சபையின் அதிகாரத்தைப் பெற்றவர். நசரேயத் திருச்சபையானது மூன்று வகையான நற்செய்தி அறிவிப்புப் பணிகளை அங்கீகரிக்கிறது: இவற்றிற்காக மறைமாவட்ட மாநாடு போதகர்களுக்குப் பொறுப்பளிக்கலாம்: பதிவுபெற்ற நற்செய்தியாளர், பணியிலமர்த்தப்பட்ட நற்செய்தியாளர் மற்றும் ஊழிய உரிமைபெற்ற நற்செய்தியாளர். தனது முக்கிய பொறுப்பாக நற்செய்தியை அறிவிப்பதில் தனது முழு நேரத்தையும் செலவிடுபவரும், திருச்சபையிலோ அல்லது அதன் துறைகள் அல்லது நிறுவனங்களிலோ ஓய்வுறவை அனுபவியாதவருமானவர் ஒரு பொறுப்பைப் பெற்ற போதகராவார்.

**510.1.** நற்செய்தி பரப்புதலுக்காகத் தனது முழு நேரத்தையும் அர்ப்பணிக்கும் நோக்கத்தை அறிவித்துள்ள ஒரு அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது உரிமம் பெற்ற போதகரோ பதிவுபெற்ற நற்செய்தியாளர் ஆவார். ஓராண்டுக்கு மட்டுமே இத்தகைய பதிவுகள் செல்லுபடியாகும். மறைமாவட்ட மாநாடு கூடுவதற்கு முந்தைய வருடத்தில் நற்செய்திப் பணியில் அவரது உண்மையான முழு நேர சேவையின் அடிப்படையில் அடுத்துவரும் மறைமாவட்ட மாநாடு புதுப்பித்தலுக்கு அனுமதியளிக்கலாம்.

**510.2.** குறைந்தபட்சம் இரண்டு முழு ஆண்டுகளுக்காவது ஒரு பதிவுபெற்ற நற்செய்தியாளருக்கான தகுதிகளை நிறைவேற்றிய ஒரு அபிஷேகம் பெற்ற போதகரே பணியிலமர்த்தப்பட்ட நற்செய்தியாளராவார். இந்தப் பணி ஓராண்டுக்கானது. தொடர்ந்து இந்தத் தகுதிகளை நிறைவேற்றிவரும் ஒருவருக்கான உரிமையை அடுத்துவரும் மறைமாவட்ட மாநாடுகள் புதுப்பிக்கலாம்.

**510.3.** ஊழிய உரிமைப் பெற்ற நற்செய்தியாளர் என்பது பணியிலமர்த்தப்பட்ட நற்செய்தியாளருக்கான தகுதிகளை நான்கு ஆண்டுகளாகப் பணியாற்றியவராக இருப்பார். ஊழிய உரிமைப் பெற்ற நற்செய்தியாளராக அவர் மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழுவிலோ அல்லது மறைமாவட்ட அருட்பணி குழுவில் விண்ணப்பிப்பதற்கு முந்தைய வருடங்களில் இப்படி பணியாற்றியிருக்க வேண்டும். அவருடைய விண்ணப்பமானது தேவனால் அழைக்கப்பட்ட நற்செய்தியாளரின் அக்கறைகளைக் குறித்த குழு மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்தப் பதவியானது ஒரு நற்செய்தியாளர் பணியலமர்த்தப்பட்ட நற்செய்தியாளராக இருப்பதற்கான தகுதிகளை நிறைவேற்றவேண்டாம் என்ற கட்டத்திலிருந்து துவங்குகிறது. இது அவருக்கு ஓய்வு அளிக்கப்படும்வரை தொடரும். (231.2, 536).

**510.4.** சபை/குருத்துவ உறவைக் குறித்துத் தொடர்ந்து நடத்தப்படும் மறுஆய்வைப் போலவே சுய–மதிப்பீடும் மறுஆய்வையும் நற்செய்தியாளரும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரும் இப்படிப்பட்ட பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டப்பிறகு குறைந்தது நான்கு வருடங்களுக்கு ஒருமுறையாவது செய்துவிட வேண்டும். இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு மறைமாவட்டக் கண்காணிப்பாளரே பொறுப்பாளராக இருக்கிறார். நற்செய்தியாளரோடு ஆலோசனை செய்தபிறகு இந்தக் கூட்டம் நடத்தப்படும். இந்த மறுஆய்வு செய்துமுடிக்கப்பட்டபிறகு, இதனுடைய முடிவுகள் தேவனால் அழைக்கப்பட்ட நற்செய்தியாளரின் அக்கறைகளைக் குறித்த குழுவிடம் தொடர்ந்து உரிமம் பெறுவதற்காக ஆய்வு செய்ய அனுப்பப்படும். (211.21)

**510.5.** ஒரு மூப்பரோ அல்லது உரிமம் பெற்ற போதகரோ சபையோடும் அதனுடைய வேறு ஏதாவது பிரிவுகளோடும் ஓய்வுபெற்ற உறவுமுறையில் இருந்தால், எழுப்புதல் கூட்டங்கள் அல்லது நற்செய்திக் கூட்டங்களின் மூலமாக ஊழியம் செய்ய விரும்பினால் அவர்கள் "ஓய்வுபெற்ற நற்செய்தி பணிகள்" என்ற சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தச் சான்றிதழ் ஒருவருடத்திற்குப் பயன்படுத்தலாம். இதை மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நியமனம் செய்ய மறைமாவட்ட மாநாடு வாக்கெடுப்பின் மூலமாகத் தீர்மானிக்கலாம். மாநாடு நடப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக அவர்களுடைய பணி ஆய்வு செய்யப்பட்டு, அடுத்துவரும் மாநாட்டில் இந்தச் சான்றிதழ் புதுப்பிக்கப்படலாம்.

**510.6.** மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஒரு அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது உரிமம் பெற்ற போதகரோ நற்செய்தி பகரும் பணியில் ஈடுபட விரும்பினால், மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின் பேரில், நற்செய்தி ஊழியங்களின் பொது அலுவலகம் அவர்களை அங்கீகரிக்கலாம். பதிவு

செய்வது அல்லது பணியிலமர்த்துவது பற்றி, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின்பேரில் மறைமாவட்ட மாநாடு வாக்கெடுப்பின்மூலம் தீர்மானிக்கும்.

**510.7.** குருத்துவ கல்வி பற்றிய கையேட்டில் நற்செய்தியாளர்களின் பொறுப்புக்களைச் சான்றுப்படுத்துவதுபற்றிய ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் காணலாம்.

**511. கிறிஸ்தவ கல்வி போதகர்.** ஒரு உள்ளூர் சபையின் கிறிஸ்தவ கல்வித் திட்டத்தில் போதகப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ள ஒரு அபிஷேகம் பெற்ற போதகரோ, டீக்கனாரோ அல்லது உரிமம் பெற்ற போதகரோ கிறிஸ்தவ கல்வி போதகராகப் பொறுப்பைப் பெற்றுள்ளார்.

**511.1.** 1985ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுகளில் ஒரு கிறிஸ்தவ கல்வி போதகராக உரிமத்தையோ, பதவியோ பெற்றுள்ள ஒரு நபர், நன்மதிப்பில் தொடருவார். ஆனால் கிறிஸ்தவ கல்வி போதகர் பணியில் சேர விரும்புவோர், இந்த ஊழியத்திற்கான சான்றாக, டீக்கனார் பதவிக்கு அபிஷேகம் பெறுவதற்கான தகுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

**512. இசை போதகர்.** இசை ஊழியத்திற்காக அழைக்கப்பட்டுள்ளதாக உணரும் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர் ஒருவர் மறைமாவட்ட மாநாட்டினால் ஒரு ஆண்டுக்கு இசை போதகராக பதவியிலமர்த்தப்படலாம். ஆனால் அவர் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:

1. அவர் உறுப்பினராக உள்ள உள்ளூர் சபையின் சபை நிர்வாகக் குழு இந்தப் பணிக்காகப் பரிந்துரை செய்திருக்க வேண்டும்.
2. கிருபை, ஈவுகள், மற்றும் பயன்படும் தன்மைபற்றிய சான்றுகளை அளித்திருக்க வேண்டும்.
3. இசை ஊழியத்தில் குறைந்த பட்சம் ஓராண்டு அனுபவமாவது பெற்றிருக்க வேண்டும்.
4. தகுதிபெற்ற ஆசிரியரிடம் ஓராண்டாவது இசைப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இசை போதகர்களுக்கான கல்வித் திட்டத்தையோ அல்லது அதற்குச் சமமான பயிற்சியையோ பயின்றுகொண்டிருக்க வேண்டும் அல்லது பயின்று முடித்திருக்க வேண்டும்.
5. இசை போதகராக ஒழுங்காகப் பணிபுரிந்திருக்க வேண்டும்
6. எந்த மறைமாவட்டத்தின் எல்லைக்குள் அவர் சபை உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ளாரோ அந்த மறைமாவட்ட மாநாட்டின் மேற்பார்வையில், அவரது அறிவுத்திறன், ஆவிக்குரிய தகுதிகள், இந்தப் பணிக்கான பொதுவான தகுதி இவற்றிற்காகக் கவனமாகச் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும். (205.10)

**512.1.** இந்த ஊழியத்தில் முழுநேரப் பணிபுரிவதைத் தங்கள் முதன்மையான பொறுப்பாகவும், வாழ்க்கைப் பணியாகவும் கொண்டுள்ளவரும், குருத்துவ அனுமதிச் சான்றுகளைப் பெற்றவரும் மட்டுமே பணியிலமர்த்தப்பட்ட போதகராகக் கருதப்படுவார்.

**513. அருட்பணியாளர்.** உலக அருட்பணித் துறையின் கண்காணிப்பின்கீழ் ஊழியம் செய்யும் ஒரு அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது சாமானியரோ அருட்பணியாளர்

என்று அழைக்கப்படுவார். குருத்துவ அனுமதிச் சான்றுகளைப் பெற்ற ஒரு அருட்பணியாளர் பணியிலமர்த்தப்பட்ட போதகராகக் கருதப்படலாம்.

**514. போதகர்.** உள்ளூர் சபையைக் கண்காணிக்கும்படி, தேவன் மற்றும் அவரது மக்களின் அழைப்பைப் பெற்ற ஒரு போதகரே போதகர் என்பவர். உள்ளூர் சபையில் பொறுப்பை ஏற்றுள்ள ஒரு போதகர், பணியிலமர்த்தப்பட்ட போதகராவார். (115, 213, 533.4)

**515. போதகருடைய கடமைகள் பின்வருமாறு:**

**515.1.** ஜெபித்தல்

**515.2.** வார்த்தையைப் பிரசங்கித்தல்

**515.3.** ஊழியத்தின் பணிகளைச் செய்வதற்கு பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்துதல்

**515.4.** கர்த்தரின் இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் என்னும் சாக்கிரமெந்துகளை அளித்தல். குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறையாவது திருவிருந்தின் சாக்கிரமெந்து அளிக்கப்பட்டிருக்க வேண்டும். கிருபையைப் பெற்றுக்கொள்ளும் இந்த வழியைப் போதகர்கள் அடிக்கடிச் செய்யும்படி முன்னேற வேண்டும் என்று ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். விதி எண் 532.7இல் கீழ் காணப்படுவனவற்றில் பொருந்தாத மறைமாவட்ட உரிமம் பெற்ற போதகர் அபிஷேகம் பெற்ற போதகர் இந்தச் சாக்கிமெந்துவை அளிக்குமாறு ஏற்பாடு செய்யலாம். வீட்டிலிருந்து வெளிவரமுடியாத நபர்கள், போதகரின் கண்காணிப்பின் கீழ் அங்கு சென்று இந்தச் சாக்கிரமெந்து அளிக்கப்படலாம். (531.7, 700)

**515.5.** குருத்துவ சந்திப்புகளின் மூலம், மக்களுக்காக, குறிப்பாக நோய்வாய்ப்பட்டிருப்பவர்களுக்காகவும், தேவையிலிருப்பவர்களுக்காகவும் கரிசனை கொண்டிருத்தல்.

**515.6.** இழப்பினால் வருந்துவோரை ஆறுதல்படுத்துதல்.

**515.7.** நீடிய தாங்கும் தன்மையோடும், கொள்கைப் பிடிப்போடும் கடிந்துகொள்ளுதல், கண்டித்துப் புத்தி கூறுதல்.

**515.8.** எல்லா வழிவகைகளிலும், பாவிகளின் மனந்திரும்புதலையும், மனந்திரும்பியவர்கள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலையும், தேவனுடைய மக்கள் பரிசுத்தமான விசுவாசத்தில் வளர்க்கப்படுதலையும் நாடுதல். (19)

**515.9.** திருமணத்தை நடத்துவதில் அக்கறை எடுத்துக்கொள்ளுதல். கிறிஸ்தவ திருமணத்தின் புனிதத்தன்மையைக் குறித்து வெளிப்படுத்துவதில் தன்னுடைய சொந்த திருமண நிலையான எல்லா வகையான தொடர்புகொள்ளுதல்களும் சரியாக இருக்கிறதா என்பதைக் கவனமாகக் கவனித்து, மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். திருமணத்திற்கு முன்பாக ஆலோசனை வழங்குவதின் மூலமாகவும், திருமணம் நிகழ்வதை நடத்தி வைப்பதின் மூலமாக இதைப் பரப்ப முடியும். (538.19)

**515.10.** கிறிஸ்தவ ஊழியத்தைக் குறித்த மக்கள் கொண்டிருக்கும் அழைப்பை ஊக்குவித்தல் மற்றும் அத்தகைய மனிதர்களுக்குப் போதித்து, ஊழியத்திற்காகச் சரியான பாதையில் அவர்களை வழிநடத்துதல்.

**515.11.** வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்ற தேவனுடைய மற்றும் சபையின் முழு எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுதல். (538.18)

**515.12.** ஊழியம்செய்யும்வருடங்களில்தன்னுடைய அழைப்பைவளர்த்துக்கொள்ளுதல். தன்னுடைய சொந்த ஆத்துமாவை ஊக்குவிக்கும் வகையில் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையை நடத்துதல், திருமணம் செய்திருந்தால், அந்தத் திருமண உறவின் உண்மைத்தன்மையையும், முக்கியத்துவத்தையும் காத்துக்கொள்ளுதல்.

**516.** போதகருடைய **நிர்வாகரீதியான கடமைகள்** பின்வருமாறு கொடுக்கப்பட்டிருக்கின்றன:

**516.1.** விதி எண்கள் 107 மற்றும் 107.1இன் படி உள்ளூர் சபையின் உறுப்பினர்களாக நபர்களை ஏற்றுக்கொள்ளுதல்.

**516.2.** உள்ளூர் சபையின் அனைத்துத் துறைகளின் பணிகளையும் கவனித்தல்.

**516.3.** விதி எண் 145.8இன் அடிப்படையில் ஓய்வுநாள் பள்ளி ஆசிரியர்களை நியமித்தல்.

**516.4.** ஒவ்வொரு வருடமும் சபையாருக்கு நசரேயத் திருச்சபையின் ஆளுகை விதிகளையும், கிறிஸ்தவ நடத்தைக்குரிய உடன்படிக்கையையும் வாசித்துக்காண்பித்தல். இது விதிகள் 1–21 மற்றும் 28–33 ஆகியவற்றில் சட்டநூலில் காணப்படுகின்றன. இல்லையென்றால் சட்டநூலின் இந்தப் பகுதியை மட்டும் அச்சிட்டு ஒவ்வொரு வருடமும் சபையாருக்கு வழங்குதல். (114).

**516.5.** உள்ளூர் சபையின் எல்லாத் துறைகளின் புள்ளி விவர அறிக்கைகள் தயாரிக்கப்படுவதை மேற்பார்வை செய்து, குறித்த நேரத்தில் அவை மறைமாவட்ட செயலாளரின்மூலம், மறைமாவட்ட மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்படி செய்ய வேண்டும், (114.1.)

**516.6.** மறைமாவட்ட மற்றும் பொதுச்சபையின் சபை அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் திட்டங்கள் இவற்றிற்கு ஏற்றபடி, உள்ளூர் சபையின் நற்செய்தி அறிவித்தல், கல்வி, தியானம் மற்றும் சபை அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட வழிகாட்டுதல்.

**516.7.** உள்ளூர் சபை மற்றும் அதன் துறைகளின் நிலை, சபையின் அலுவலர்கள் அல்லது துறையின் பயிற்சி மற்றும்/அல்லது அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திற்கான எதிர்கால செயல்திட்டங்கள் இவைபற்றிய சபையின் பரிந்துரைகளைக் குறிப்பிட்ட எதிர்காலத் தேவைகளைப் பற்றிய விவரங்களை உள்ளடக்கிய அறிக்கையுடன் கூடிய, ஓர் அறிக்கையை வருடாந்திர சபைக்கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

**516.8.** ஒரு சபை உறுப்பினருக்கு விரோதமாகக் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்படுமானால் அதை விசாரணை செய்ய மூவர் அடங்கிய விசாரணைக் குழுவை அமைத்தல். (605)

**516.9.** உள்ளூர் அருட்பணி சங்கத்தின் மூலமாக வசூலிக்கப்படும் பொது வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி முழுமையும், அவ்வப்போது பொதுப் பொருளாளருக்கு

அனுப்பப்படுவதைக் கண்காணித்தல்; மறைமாவட்ட ஊழியத்தைச் சேர்ந்த நிதி அனைத்தும் அவ்வப்போது மறைமாவட்டப் பொருளாளருக்கு அனுப்பப்படுவதைக் கண்காணித்தல். (136.2)

**516.10.** உள்ளூர் சபையில் ஊதியம் பெறும் ஊழியர்கள் அனைவரின் பெயரையும் சபை நிர்வாகக் குழுவுக்கு நியமனம் செய்தல்; அவர்களை மேற்பார்வை செய்தல். (159.1–159.3)

**516.11.** சபைச் செயலாளரோடு சேர்ந்து, நில ஊர்ஜிதம், அடமானப் பத்திரங்கள், அடமானப் பத்திரங்களைத் திருப்புதல், ஒப்புதங்கள் மற்றும் *சட்டநூலில்* வேறு வழிவகைகள் கூறப்படாத பிற பத்திரங்கள் இவற்றில் கையொப்பமிடுதல். (102.3, 103–104.3)

**516.12.** ஒரு உறுப்பினரோ அல்லது உள்ளூர் சபை அல்லது அதன் ஏதேனுமொரு துறையின் நண்பரோ, அதே மறைமாவட்ட எல்லைக்குள் இடம் மாறிச் சென்று, முந்தைய உள்ளூர் சபையோடு அவருக்குள்ள உயிர்த்துடிப்பான உறவைத் தொடர இயலாமற்போகும் நிலையேற்படும்போது, அந்த உறுப்பினர் அல்லது நண்பரின் விலாசத்தை மற்ற உள்ளூர் சபைக்கு அறிவிக்க வேண்டும்.

**516.13.** சபை நிர்வாகக் குழுவோடு சேர்ந்து, உள்ளூர் சபைக்கு என்று குறிக்கப்பட்டிருக்கும் இலக்குகள் அனைத்தையும் ஒழுங்குசெய்து அதற்கான நிதியைத் திரட்டுதல். இதில் உலக சுவிசேஷ நிதி, செயல்படத் தகுந்த மறைமாவட்ட ஊழிய நிதிகள் மற்றும் பிராந்திய அல்லது தேசிய குழுக்கள் கொடுத்த நிதி சம்பந்தமான மற்ற இலக்குகள் இதில் அடங்கும். (32.2, 130, 153)

**516.14.** சபை உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க, போதகர் அவருக்கு இடமாற்ற அனுமதி, நற்சாட்சிச் சான்றிதழ், விடுவிப்பு அனுமதிக் கடிதம் இவற்றை அளிக்கலாம். (111–111.1, 112.2, 815–818)

**516.15.** போதகர் தனது பதவியின் நிமித்தமாக, உள்ளூர் சபையின் தலைவராகவும், சபை நிர்வாகக் குழுவின் தலைவராகவும், அவர் பணியாற்றும் சபையைச் சார்ந்த அனைத்து தேர்வுசெய்யப்பட்டவர்களுக்கும், தாற்காலிகக் குழுக்களுக்கும், கூட்டமைப்புகளுக்கும் தலைவராவார். உள்ளூர் சபையைச் சார்ந்த எல்லா ஆவணங்களையும் போதகரால் கையாள முடியும். (127, 145, 150, 151, 152.1)

**517.** உள்ளூர் சபையின் எல்லா துறைகள் மற்றும் நசரேய வாரநாள் பள்ளி நிறுவனங்கள் இவற்றின் பதவிக்கு நியமனம் செய்வதில் போதகர் தனது விருப்பத்தைக் கூற உரிமையுண்டு.

**518.** போதகரும் போதகருடைய நெருங்கிய குடும்பத்தினரும் நிதி குறித்த வாக்குறுதிகளையோ, நிதியைச் செலவுசெய்வதையோ, பணம் எண்ணுவதையோ, அல்லது தடையில்லாமல் சபையின் நிதி கணக்குகளைக் கையாளுவதைதோ தடைசெய்யப்பட்டிருக்கிறது. சபை நிர்வாகக் குழுவோ அல்லது சபைக் கூட்டமோ பெரும்பான்மை வாக்கைப் பெற்று மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடமிருந்து விதிவிலக்கை விண்ணப்பிக்கலாம்.

மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவில் பெரும்பான்மையினரும் இந்த விதிவிலக்கை அனுமதித்தால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் எழுத்துப்பூர்வமாக ஒரு அனுமதிச்சீட்டை சபைக் குழு செயலாளருக்கு வழங்குவார். அவர் அதைச் சபைக் குறிப்புகளில் குறித்துக் கொள்வார். நெருங்கிய குடும்பத்தினர், துணை, பிள்ளைகள், உடன்பிறந்தோர் அல்லது பெற்றோர். (129.1, 129.21–129.22)

**519.** போதகர், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் ஆலோசனைக் குழுவின் ஆலோசனைகளுக்குப் போதிய மரியாதை கொடுக்க வேண்டும். (225.2, 538.2)

**520.** மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், மற்றொரு சபைப் பிரிவிலிருந்து நற்சான்றுகளைக் கொண்டுவரும் ஒரு உரிமம் பெற்ற அல்லது அபிஷேகம் பெற்ற போதகர், உள்ளூர் சபையின் உறுப்பினராக விண்ணப்பம் எடுத்தால், முதலில் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் சாதகமான பரிந்துரையின்றி போதகர் அவரை ஏற்றுக்கொள்ளக்கூடாது. (107, 228)

**521.** இந்தப் பதவியில் செயல்படும்போது, போதகர் மறைமாவட்ட மாநாட்டுக்குக் கட்டுப்பட்டவர். இந்த மாநாட்டுக்கு அவர் ஆண்டுதோறும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். தனது சுய கிறிஸ்தவ அனுபவத்தைப் பற்றிய சுருக்கமான சாட்சியையும் அளிக்க வேண்டும், (205.3, 532.8, 538.9)

**522.** தான் போதகராக இருக்கும் சபையில் இயல்பாகவே உறுப்பினராக அவர் இருப்பார். அவர் ஒன்றிற்கும் மேற்பட்ட சபைகளைக் கவனித்துவந்தால், அவருக்கு விருப்பமான சபையில் உறுப்பினராக இருக்கலாம். (538.8)

**523. குருத்துவ சேவை** என்பது போதகர் அல்லது உதவி போதகர் செய்யும் ஊழியங்களை உள்ளடக்கியதாகும். இவர்கள் ஊழியத்தின் விசேஷித்த இடங்களில் பணியாற்றிக்கொண்டிருப்பார்கள். இந்த இடங்கள் அதற்குரிய ஆளுகை, அனுமதி மற்றும் ஆதரவு பெற்ற நிறுவனங்களால் கையாளப்படும். இத்தகையப் பணிகளுக்கு அழைக்கப்பட்டுள்ள ஒரு அபிஷேகம்பெற்றப் போதகக் குழுவைச் சேர்ந்தவர் பதவியிலமர்த்தப்பட்ட போதகராகக் கருதப்படலாம்.

**524. தற்காலிக போதகர்.** கீழ்க்கண்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டவகையில் பணிபுரியக்கூடிய தற்காலிக போதகர்களை நியமிப்பதற்கு மறைமாவட்டக் கண்காணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு:

1. தற்காலிக போதகர் வேறொரு பொறுப்பில் ஊழியம் செய்யும் நசரேய சபையைச் சேர்ந்த ஒரு அபிஷேகம் பெற்ற போதகராகவோ, டீக்கனாராகவோ அல்லது உரிமம் பெற்ற போதகராகவோ இருக்கலாம். நசரேயத் திருச்சபையின் உள்ளூர் போதகரோகவோ அல்லது சாமானிய போதகராகவோ இருக்கலாம்; மற்றொரு சபைப் பிரிவிலிருந்து மாறுதல் பெறும் நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருக்கும் போதகராகவோ, மற்றொரு சபைப் பிரிவைச் சேர்ந்த போதகராகவோ இருக்கலாம்.
2. தற்காலிக போதகர் பிரசங்கம் செய்வதற்கும், ஆவிக்குரிய ஊழியம் செய்வதற்கும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்; வேறு அடிப்படையில்

அவருக்கு இந்த உரிமைகள் இருந்தாலொழிய, அவர் வெறும் இந்தப் பதவியின் அடிப்படையில் சாக்கிரமெந்துகளை அளிக்கவும், திருமணங்களை நடத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவராகமாட்டார். மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலொழிய, அறிக்கைகளைக் கோப்பிலிடுவதைவிட போதகரின் பிற நிர்வாக அதிகாரங்கள் இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. தற்காலிக போதகரின் சபை உறுப்பினர் தகுதி, அவர் தற்போது பணிபுரியும் சபைக்கு இயல்பாகவே மாற்றப்பட மாட்டாது.
4. அதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள படிவத்தில் இடைக்காலப் பணிபுரியும்படி தற்காலிகமாக எடுக்கப்படும் போதகருக்கு அதிகாரமளிக்கும் சான்றிதழ் அளிக்கப்படும். வேறு ஏதேனும் உரிமையின்படி இருந்தாலொழிய அவர், மறைமாவட்டத்தின் வாக்குரிமையில்லாத உறுப்பினராகவே இருப்பார்.
5. ஒரு தற்காலிக போதகர் எந்த நேரத்திலும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்; வேறு ஒருவரை அந்த இடத்தில் நியமனம் செய்யலாம்.

**525. தாய் சபையோடு இணைக்கப்பட்ட சபையின் போதகர்.** அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது உரிமம் பெற்ற மறைமாவட்ட போதகரோ ஒரு தாய் சபையோடு இணைக்கப்பட்ட சபையின் போதகராக இருந்தால் அவர் பொறுப்பு கொடுக்கப்பட்ட போதகராக இருப்பார். அவர் அந்தச் சபையால் தாய் சபை இணைப்புப் போதகர் என்று அழைக்கப்படுவார்.

**526.** இடைக்கால போதகர். மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பெயரில் அபிஷேகம் செய்யப்பட்ட போதகர் மறைமாவட்ட நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு ஒரு மறைமாவட்ட இடைக்கால பணியமர்த்தப்பட்டபோதகராகச் செயல்படலாம். மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் உள்ளூர் சபைக் குழு அவரை அழைக்கும்போது, அவர் வந்து தம்முடைய சேவையைச் செய்ய வேண்டும். (212.1)

**527.** பாடல் நற்செய்தியாளர். பாடல் நற்செய்தியாளர் நசரேயத் திருச்சபையின் ஒரு உறுப்பினர். இசைமூலம் நற்செய்தி ஊழியத்தைச் செய்வதில் தனது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவழிப்பதே அவர் நோக்கம். குருத்துவ அனுமதிச் சான்றைப் பெற்றிருப்பவரும், தனது முக்கிய பொறுப்பாக முழுநேர நற்செய்தி அறிவித்தலைக் கொண்டிருப்பவரும், சபையாலே அல்லது அதன் துறைகளிலோ அல்லது அதன் நிறுவனங்களிலோ ஓய்வுறவைப் பெற்றிராதவருமாகிய ஒரு பாடல் நற்செய்தியாளர் ஒரு பதவியிலமர்த்தப்பட்ட போதகராவார்.

**527.1.** பாடல் நற்செய்தியாளரின் பணிகளைச் சான்றுப்படுத்துவதற்கான வழிமுறைகளையும், செயல்முறைகளையும் குருத்துவ கல்வி கையேட்டில் காணலாம்.

**528. சிறப்பு ஊழியம்.** குறிப்பிட்ட பொறுப்பில் இல்லாத ஆனால் செயல் பணியிலிருக்கும் ஒரு அபிஷேகம்பெற்ற போதகரை சிறப்பு ஊழியத்திற்கென்று அனுமதிக்கலாம். இந்த ஊழியம் மறைமாவட்ட மாநாடால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் மறைமாவட்டத்தால் பொறுப்பைப் பெற்ற போதகர் என்று

குறிக்கப்படுவார். சிறப்பு ஊழியம் செய்வதற்காக நியமிக்கப்படும் நபர்கள் நசரேயத் திருச்சபையோடு உறவை வைத்துக்கொள்ள வேண்டும். ஆண்டறிக்கையை அவர்கள் மறைமாவட்ட ஆலோசனைக் குழு, மறைமாவட்ட அருட்பணி சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழுவிற்கு தாங்கள் நசரேயத் திருச்சபையோடு கொண்டிருக்கும் தொடர்பைக் குறித்து எழுத வேண்டும்.

**528.1.** சபைக்குச் சேவை செய்யும், சபைத் தொடர்புள்ள நிறுவனத்தில் ஒரு அதிகாரியாகக் குருத்துவத் தகுதயில் நியமிக்கப்பட்ட அல்லது நேரடியாகச் சபையோடு சம்பந்தப்படாத ஒரு கல்வி நிறுவனத்திலோ, நற்செய்தி அல்லது அருட்பணி அமைப்பிலோ பணிபுரியும்படி மறைமாவட்ட மாநாடு மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவால் கவனத்தோடு ஆய்வுசெய்யப்பட்டபின் ஒப்புதலளிக்கப்படும் ஒரு அபிஷேகம் பெற்ற குருத்துவ உறுப்பினரை 538.13. விதியின்படி சிறப்பு ஊழியத்தில் நியமிக்கலாம்.

**528.2.** குருத்து குழுவைச் சேர்ந்த உறுப்பினர், ஆனால் வேலைகளுக்கு இடையே நேரம் பெற்றிருந்தாலோ அல்லது பணியிலிருந்து விடுப்பு பெற்றிருந்தாலோ அவர் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின் பேரில் மறைமாவட்ட ஆலோசனை குழுவினால் சிறப்பு ஆராதனைக்கு என்று நியமிக்கப்படலாம்.

## VI. போதகர்களுக்கான கல்வி முறை

## A. அபிஷேகம் பெற்ற ஊழியத்திற்கான கல்வி

### அடிப்படைகள்

**529.** நற்செய்தி அறிவிக்க வாய்ப்பளிக்கக்கூடிய புதிய பகுதிகளில், பரிசுத்தம் பற்றிய நற்செய்தியின் விருத்திக்கும், நீடிப்புக்கும் யாருடைய ஊழியம் அத்தியாவசியமானதோ தேவனின் அழைப்பைப் பெற்ற அந்தப் போதகர்களின் பயிற்சிக்கு உதவியாக இருக்கும்படி திட்டமிட்டதே குருத்துவ கல்வி திட்டமாகும். "போய்...சீஷராக்கும்படி" மத்தேயு 28:19,20 வசனங்களில் கிறிஸ்து நமது அருட்பணியைத் தெளிவாகப் புரிந்துகொள்வதின் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம். பயிற்சிகளில் பெரும்பாலானவை, நசரேயத் திருச்சபையின் ஊழியத்தில் அபிஷேகம் பெறுவதற்கு இட்டுச் செல்லும் வகையில், அடிப்படையில் இறையியல் மற்றும் வேதாகமம் சார்ந்தவையே. மறைமாவட்ட குருத்துவ கல்விக் குழு எல்லாத் தேர்வுகளையும் மேற்பார்வை செய்யும்; மதிப்பிடும்; மாணவர்களின் தேர்வுநிலைக்கேற்ப பாடத்திட்டத்தில் மாணவனின் தகுதி நிலையையும் தீர்மானம் செய்யும்.

**529.1.** இந்த உலகம் முழுவதிலும் பல வகையான கல்வி நிறுவனங்களையும் பாடத்திட்டங்களையும் நசரேயத் திருச்சபையானது கொடுக்கிறது. சில உலகப் பகுதிகளில் கிடைத்திருக்கும் ஆதாரங்களைக் கொண்டு ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களை வளர்ச்சிப்பெறச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. இவை ஊழியத்திற்கான கல்வி அடித்தளத்தைக் கொடுக்கின்றன. ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய சபையால் தன்னுடைய இடத்தில் கொடுக்கப்படும் கல்வி வாய்ப்பைச்

சரியாகப் பயன்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறார்கள். அப்படி முடியாத நிலையில், சபையில் ஊழியம் செய்யவேண்டும் என்று தேவன் அழைத்திருக்கும் ஒவ்வொரு நபரையும் ஆயத்தப்படுத்துவதற்கு தேவையானதைச் சபையானது ஏற்பாடு செய்யும். மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மறைமாவட்ட அருட்பணி கல்வி குழுவால் கொடுக்கப்படும் பாடத்திட்டத்தையோ அல்லது நசரேய மேல்நிலை கல்வி நிறுவனத்தினால் இயற்றப்பட்ட பாடத்திட்டத்தையோ பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் இந்தப் பாடபுத்தகங்களில் காணப்படும் ஒவ்வொரு காரியமும் International Sourcebook on Developmental Standards for Ordination மற்றும் the regional Sourcebook on Ordination கொடுக்கப்பட்டுள்ள தகுதிநிலைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.

**529.2.** உரிமம் பெற்ற போதகர் திருப்பதிகரமான முறையில் ஒரு பாடத்திட்டத்தைக் கற்று முடிக்கும்போது, கல்வி கொடுப்பவர் அதைக் கற்று முடித்ததற்கான சான்றிதழைப் போதகருக்கு அளிப்பார். அதைப் போதகர் மறைமாவட்ட அருட்பணி கல்வி குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் அதை மறைமாவட்ட மாநாட்டில் அவர்களுக்கு அதற்கான பட்டமளிப்புத் தருவதற்கான பொறுப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

**529.3. குருத்துவ தயார்படுத்துதலுக்கான பொதுப் பாடத்திட்டம்.** பாடத்திட்டம் என்பது வெறுமனே கல்வி சம்பந்தமானதுதான் என்று நினைக்கப்படுகிறது. ஆனால் இதன்பின்னணி அதையும் தாண்டி பெரியதாக இருக்கிறது. பாடம் நடத்துபவரின் பண்புநலன், மாணவர்களும் பாடம் நடத்துகிறவர்களும் கொண்டிருக்கும் இணக்கம், சூழ்நிலை மற்றும் மாணவர்களுடைய முன் அனுபவம் போன்றவை அந்தப் பாடத்திட்டத்தோடு சேர்ந்து முழுமையான பாடத்திட்டத்தை ஏற்படுத்துகின்றன. ஆனாலும், குருத்துவ தயார்படுத்துதலுக்கான பாடத்திட்டத்தில் ஊழியம் செய்வதற்கான அடிப்படையைக் கொடுக்கும் பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கும். கலாச்சார மாறுதல்கள் மற்றும் வேறு பல ஆதரங்களின் காரணமான பாடத்திட்டத்தின் ஒழுங்குமுறை மாறுபடும். ஆனாலும் அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்களுக்குக் கொடுக்கப்படும் எல்லா கல்வித் திட்டங்களும் அகில உலக போதகர் வளர்ச்சி குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். பொதுக் கண்காணிப்பாளர்களின் குழு ஒப்புக்கொண்ட நசரேயத் திருச்சபையின் ஊழிய நோக்கத்தை நிறைவேற்றும் விதத்தில் நான்கு முக்கியமான கருத்துக்களை எல்லாப் பாடத்திட்டங்களும் பெற்றிருக்க வேண்டும்.

"உலகம் முழுவதிலும் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குதலே நசரேயத் திருச்சபையின் ஊழிய நோக்கமாகும்."

"வேதவசனங்களில் குறிப்பிட்டபடியிலான கிறிஸ்தவ பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு, பிரகடனம் செய்வதின்மூலம் தேவனுடைய இராஜ்யம் பரவும்படி செய்வதே நசரேயத் திருச்சபையின் அடிப்படை செயல்நோக்கமாகும்."

"நசரேயத் திருச்சபையின் மிக முக்கியமான செயல்நோக்கங்கள் பரிசுத்த கிறிஸ்தவ ஐக்கியம், பாவிகளின் மனமாற்றம், விசுவாசிகள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல், ஆதியில் புதிய ஏற்பாட்டுச் சபைகளில் காணப்பட்ட பரிசுத்தத்திலும், எளிமையிலும், ஆவிக்குரிய வல்லமையிலும் அவர்கள்

கட்டியெழுப்பப்படுதல் இவைகளோடுகூட எல்லாச் சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதாகும்." (19)

ஒரு மதிப்பிடப்பட்ட பாடத்திட்டமானது பின்வரும் பிரிவுகளில் விளக்கப்பட்டிருக்கிறது:

- உள்ளடக்கம் – பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் உள்ளடக்கங்களையும், கிறிஸ்தவ விசுவாசத்தின் இறையியலையும், திருச்சபையின் வரலாறு மற்றும் நோக்கத்தைத் தெரிந்துகொள்வது ஊழியத்திற்கு மிகவும் முக்கியானதாகும். வேத வசனங்களை எப்படிப் புரிந்துகொள்வது என்பதையும், பரிசுத்தத்தைக் குறித்த கோட்பாட்டையும், நம்முடைய வெஸ்லிய தனித்துவங்களையும், நசரேயத் திருச்சபையின் வரலாறு மற்றும் அமைப்பு முறைமையைக் குறித்து அறிந்துகொள்வதும் இந்தப் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.
- ஆற்றல் – பேச்சு மற்றும் எழுத்து மூலமாகத் தொடர்புகொள்ளுதல், நிர்வாகம் மற்றும் தலைமைத்துவம், நிதி மற்றும் பகுத்தறிவு சிந்தனை எல்லாம் ஊழியத்திற்குத் தேவையானவைகள். பொதுவான கல்வியோடு சேர்த்து, பிரசங்கித்தல், குருத்துவ அக்கறை மற்றும் ஆலோசனை, வேதாகமரீதியான விளக்கவுரை, ஆராதனை, செயல்பூர்வமாக சுவிசேஷத்தை அறிவித்தல், வேதாகமரீதியான உக்கிராணத்துவம் போன்ற வாழ்க்கைக்குத் தேவையானவையும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட பாடத்திட்டத்தில் படித்துத் தேர்ச்சி பெறுதல் என்பது கல்வியை அளிப்பவரோடு உள்ளூர் சபை கூட்டணிவைத்து மாணவர்களை ஊழியம் சார்ந்த பயிற்சிக்கும், ஆற்றல் மற்றும் திறமையை மேம்படுத்துவதற்கும் கற்றுக்கொள்ளச் செய்யலாம்.
- பண்புநலன் – பண்புகள், ஒழுங்கம், ஆவிக்குரிய தன்மை மற்றும் தனிப்பட்ட, குடும்ப உறவுகளில் தனிமனித வளர்ச்சி என்பது ஊழியத்திற்கு மிகவும் முக்கியமானவைகளாக இருக்கின்றன. கிறிஸ்தவ ஒழுக்கம், ஆவிக்குரிய உருவாக்கம், மனிதர்களின் வளர்ச்சி, போதகராகிய நபர், மற்றும் திருமணம் மற்றும் குடும்பத்தைக் குறித்த கட்டமைப்பு ஆகியவைச் சேர்க்கப்பட வேண்டும்.
- பின்னணி – போதகருக்கு வரலாற்றுப்பூர்வமான பின்னணியும் தெரிந்திருக்கவேண்டும். அதே வேளையில் தற்காலத்திய பின்னணியும் தெரிந்திருக்க வேண்டும். இது இந்த உலகப் பார்வையையும், திருச்சபை சாட்சியாக இருக்கும் கலாச்சாரத்தில் சமுதாய சூழ்நிலையையும் புரிந்துகொள்ள உதவும். மானிடவியல், சமூகவியல், கலாச்சார மாற்று தொடர்புநிலை, கள ஊழிய பயிற்சி மற்றும் வரலாறும், அரசாங்கமும் கற்றுத்தரப்பட வேண்டும்.

**529.4.** நசரேய பள்ளிகள் அல்லாத பள்ளிகள் அல்லது நசரேயன் அல்லாத ஆதரவைச் சேர்ந்த கல்வியிடங்கள் மறைமாவட்ட அருட்பணி கல்வி குழுவினால் மதிப்பீடு செய்யப்படும். ஆனால் இந்தப் பாடபுத்தகங்களில் காணப்படும் ஒவ்வொரு காரியமும் International Sourcebook on Developmental Standards for Ordination மற்றும்

the regional Sourcebook on Ordination கொடுக்கப்பட்டுள்ள தகுதிநிலைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.

**529.5.** எல்லாப் பாடங்களும், கல்வியியல்ரீதியான தேவைகளும், நிர்வாகம் சார்ந்த விதிமுறைகளும் அகில உலக போதகர் வளர்ச்சி இயக்கத்தோடு சேர்ந்து அந்தப் பிராந்தியம்/மொழி வாரியாகப் பிரிக்கப்பட்ட The regional Sourcebook on Ordination என்பதின் கல்வி தேவைகள் மற்றும் நிர்வாகம் சார்ந்த விதிகளைச் சார்ந்தே பாடத்திட்டம் இருக்க வேண்டும். இந்தப் பிராந்திய புத்தகமானது போதுமான மாற்றங்கள் செய்யப்பட்டு உலக போதகர் வளர்ச்சி இயக்கம், பொது நிர்வாகக் குழு மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்களின் கூட்டமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு சர்வதேச பாடத்திட்ட ஆலோசனைக் கூட்டமைப்பினால் முன்மொழியப்படும். இந்தப் புத்தகமானது சட்டநூலோடும், International Sourcebook on Developmental Standards for Ordination என்ற புத்தகத்தோடும் ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். இந்தப் புத்தகமானது உலக போதகர் வளர்ச்சி இயக்கத்தினால் சர்வதேச பாடத்திட்ட ஆலோசனைக் கூட்டமைப்போடு சேர்த்து வெளியிடப்படுகிறது. இந்தச் சர்வதேச பாடத்திட்ட ஆலோசனைக் கூட்டமைப்பு பொதுக் கண்காணிப்பாளர்களின் கூட்டத்தினால் நியமிக்கப்படும்.

**529.6.** ஒரு போதகர் மதிப்பூட்டப்பட்ட ஒரு பாடத்திட்டத்தை ஊழியத்திற்காகக் கற்றுத்தேர்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்துமுடித்தப்பிறகு அவர் வாழ்நாள் முழுவதும் தேவன் தன்னை அழைத்திருக்கும் ஊழியத்தை மேம்படுத்துவதற்காக இப்படிப்பட்ட கல்வியைக் கற்றுக்கொண்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் 20 மணி நேரம் என்று வாழ்நாள் முழுவதும் கல்விக்காக செலவிட வேண்டும் அல்லது பிராந்திய மொழியில் உருவாக்கப்படும் அந்த ஆதாரப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு செலவிடப்பட வேண்டும். எல்லாப் பொறுப்பும் கொடுக்கப்பட்ட உரிமம் பெற்ற மற்றும் அபிஷேகம் பெற்ற போதகர்கள் வாழ்க்கை முழுவதும் கற்கும் தங்களுடைய பாடத்திட்டத்தைக் குறித்து தங்களுடைய அறிக்கையின் ஒரு பகுதியாக மறைமாவட்ட மாநாட்டிற்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்களுடைய வாழ்நாள் கல்வித்திட்டம் குறித்த தகவல்கள் சபை/குருத்துவ உறவு மறுஆய்வில் பயன்படுத்தப்படும். இது ஒரு போதகர் அழைக்கப்படுதலின் செயல்முறையில் ஒரு பகுதியாக இருக்கிறது. அந்தப் பிராந்தியத்திற்கான அபிஷேகத்தைக் குறித்த ஆதாரப் புத்தகமானது மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைத் தயார்செய்தலைக் குறித்த செயல்முறைகளைக் கொண்டிருக்கும்.

**529.7.** இரண்டு வருடங்கள் தொடர்ந்து இந்த வாழ்நாள் கல்வித் திட்டத்தில் செயல்படாமல் இருப்பது ஒரு அபிஷேகம் பெற்ற போதகரை அதனுடைய ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்ட நேரத்தில் மறைமாவட்ட அருட்பணிக் கல்வி குழுவைச் சந்திக்கச் செய்யும். இந்தக் குழுமமே இந்தப் பாடத்திட்டத்தை எப்படி செயல்படுத்தலாம் என்று போதகருக்கு வழிகாட்டும். (115, 123, 515.11, 538.18)

## B. அபிஷேகம் பெற்ற ஊழியத்திற்கான கல்வி அடித்தளங்களில் கலாச்சாரரீதியான தழுவல்கள்

**530.** இந்த உலகம் முழுவதும் காணப்படும் பல வகையான கலாச்சாரரீதியான மாற்றங்களினால் எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டத்தைக் கொண்டிருப்பது சரியானதாக இருக்காது. இந்த உலகத்தின் ஒவ்வொரு பிராந்தியமும் குறிப்பிட்ட பாடத்திட்ட தேவைகளைக் கொண்டிருக்கும். அதன் மூலமாக அந்தப் பகுதியில் ஊழியம் செய்வதற்குத் தேவையான ஆதாரங்கள் மற்றும் எதிர்ப்பார்ப்புகளைக் கற்றுக்கொடுக்கும். பிராந்தியரீதியாக உருவாக்கப்பட்ட ஒரு பாடத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்பாகப் பொது நிர்வாகக் குழு, சர்வதேச கல்வி ஆலேசானைக் கூட்டமைப்பு மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்களின் குழுவிடமிருந்து அங்கிகாரம் பெற வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்குள்ளேயும் பல வகையான கலாச்சாரரீதியான எதிர்ப்பார்ப்புகளும், ஆதாரங்களும் காணப்படுகின்றன. இதன் காரணமாகக் கலாச்சாரரீதியான சகிப்புத்தன்மை மற்றும் வளைந்துகொடுத்தல் ஆகியவை ஊழியத்திற்கான கல்வி அடித்தளத்தின் பிராந்திய வாரியான கல்வியமைப்பின் பண்புகளாக இருக்கின்றன. இவை மறைமாவட்ட அருட்பணி கல்வி குழுவினால் மேற்பார்வையிடப்பட வேண்டும். ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஏற்றவாறு செய்யப்படும் கலாச்சாரரீதியான தழுவல்கள் அகில உலக போதகர் மேம்பாட்டு குழுவாலும், சர்வதேச கல்வி ஆலோசனைக் கூட்டமைப்பினாலும், பிராந்திய கல்வி ஒருங்கிணைப்பாளரோடு கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும். (529.5)

**530.1.** ஒருவர் அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கன்மாராகுவதற்கு அல்லது ஊழியத்தின் பிரிவுகள் மற்றும் பகுதிகளில் சான்றுகளைப் பெறுவதற்கு எப்படிப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பாடத்திட்டத்தைப் படிக்க வேண்டும், அதைச் செய்துமுடிப்பதற்காக தேவைப்படும் காரியங்கள் என்னென்ன என்பவை பிராந்திய வாரியான அபிஷேகத்தைக் குறித்த ஆதாரப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும்.

**530.2.** எல்லா மதிப்பீடுகளும் செய்யப்பட்ட பாடத்திட்டங்கள் பிராந்திய வாரியான அபிஷேகத்தைக் குறித்த ஆதாரப் புத்தகத்தினால் நிர்வாகம் செய்யப்படும். (529.2–529.3, 529.5).

## V. தகுதிகளும் ஊழியர் விதிகளும்

## A. உள்ளூர் சபை ஸ்தல போதகர்

**531.** உள்ளூர் சபை ஸ்தல போதகர் சபை நிர்வாகக் குழுவின் அனுமதியைப் பெற்ற, நசரேயத் திருச்சபையின் ஒரு சாமானிய உறுப்பினராவார். இவர் போதகரின் மேற்பார்வையின்கீழ் இயங்குவார். வாய்ப்புக் கிடைக்கும்பொழுது செயல் இயக்கம், பணியில் அமர்த்தப்படுதல், குருத்துவ ஈவுகளையும், பயன்படும் விதத்தையும் வளர்த்துக் கொள்ளுதல் இவற்றிற்காக அவர் பக்குவம் செய்யப்படுவார்.

**531.1.** ஒரு குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகரைப் போதகராகக் கொண்டுள்ள உள்ளூர் சபையின் சபை நிர்வாகக் குழு, போதகரின் பரிந்துரையின்பேரில் தேவனால் தாம் பிரசங்கம் செய்யவோ அல்லது சபையின் மூலம் ஆயுட்காலம் வரை ஊழியம் செய்யவோ அழைக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வைப் பெற்றுள்ள, நசரேயத் திருச்சபையின் எந்த உறுப்பினருக்கும், உள்ளூர் சபை ஸ்தல போதகராக ஓராண்டுக்கான அனுமதி கொடுக்கலாம். ஒரு அபிஷேகம் பெற்றவரைப் போதகராகப் பெற்றிராத உள்ளூர் சபையில், அத்தகைய அனுமதியை போதகர் பரிந்துரை செய்து, மறைமாவட்ட கண்காணிப்பாளரின் ஒப்புதலையும் பெற்ற பின்னர் சபை நிர்வாகக் குழுவே அனுமதியை வழங்கலாம். விண்ணப்பத்தாரர் முதலில் இரட்சிப்பைப் பற்றிய தனது சொந்த அனுபவம், வேதாகம சத்தியங்களைப் பற்றிய அறிவு, சபையின் ஒழுங்குகளைத் தெரிந்திருத்தல் இவைபற்றி ஆய்வுசெய்யப்பட்டிருக்க வேண்டும். கிருபை, ஈவுகள், பயன்படும் தன்மை இவற்றின்மூலம் அழைப்பை நிரூபிக்க வேண்டும். உள்ளூர் சபை செய்யும் பின்னணி சோதனையை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தச் சபையின் போதகர் வருடாந்திரக் கூட்டத்தில் தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பார். (113.9, 129.12, 211.12)

**531.2.** சபை நிர்வாகக் குழுவானது ஒவ்வொரு உள்ளூர் சபை ஸ்தல போதகருக்கும், சபையின் போதகர் மற்றும் சபை நிர்வாகக் குழுவின் செயலாளர் இவர்கள் கையொப்பமிட்ட அனுமதிச் சான்றிதழை அளிப்பார். மறைமாவட்ட அனுமதி பெறாத ஒரு நபர் ஒரு சபையில் பணிபுரிய அனுப்பப்பட்டிருந்தால், அவருக்கு மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பரிந்துரையின்பேரில், உள்ளூர் சபை ஸ்தல போதகர் என்ற அனுமதியையோ அல்லது புதுப்பிக்கப்பட்ட அனுமதியையோ கொடுக்கலாம். (211.12, 225.13)

**531.3.** ஒரு அபிஷேகம் பெற்ற போதகரைத் தலைவராகக் கொண்டிருக்கும் உள்ளூர் சபையில், அந்தப் போதகரின் பரிந்துரையின் பேரில் சபை நிர்வாகக் குழுவானது உள்ளூர் சபை ஸ்தல போதகரின் அனுமதியைப் புதுப்பிக்கலாம்; ஒரு அபிஷேகம் பெற்றவரைப் போதகராகக் கொண்டிராத சபையில், போதகரால் பரிந்துரைசெய்யப்பட்டு, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் சபை நிர்வாகக் குழுவானது உள்ளூர் சபை ஸ்தல போதகரின் அனுமதியைப் புதுப்பிக்கலாம். (129.12, 211.12)

**531.4.** மறைமாவட்ட குருத்துவ கல்வி நிர்வாகக் குழுவின் மேற்பார்வையில் உள்ளூர் சபை ஸ்தல போதகர்கள், போதகர்களுக்கான கல்வித் திட்டத்தில் பயிலலாம். அவர் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக, தனது கல்வித் திட்டத்தில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களையாவது முடித்திராவிட்டால், இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் எழுத்துமூலமான ஒப்புதலின்றி அவரது உரிமம் புதுப்பிக்கப்படக் கூடாது.

**531.5.** ஒரு உள்ளூர் சபை ஸ்தல போதகர், குறைந்தபட்சம் ஓராண்டாவது தனது பணியில் தரித்திருந்து, தேவையான கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்தால், அவருக்கு போதகருக்கான உரிமம் வழங்கப்படும்படி, சபை நிர்வாகக் குழுவானது மறைமாவட்ட

மாநாட்டிற்கு பரிந்துரை செய்யலாம். ஆனால் இந்த அனுமதி பெறப்படாவிட்டால் அவர் தமது முந்தைய பதவியிலேயே இருப்பார். (129.12, 529, 532.1)

**531.6.** ஒரு உள்ளூர் சபை ஸ்தல போதகர் தற்காலிக போதகராக நியமிக்கப்பட்டிருந்தால், அந்த நியமனத்திற்குப் பின்வரும் மறைமாவட்ட மாநாட்டின் நிறைவுக்குப் பிறகு, மறைமாவட்ட அனுமதிச் சான்றுக் குழுவின் ஒப்புதலின் பேரில் இந்தப் பணியில் தொடர முடியாது. (212, 231.5, 524)

**531.7.** ஒரு உள்ளூர் சபை ஸ்தல போதகர் ஞானஸ்நானம், திருவிருந்து போன்ற சாக்கிரமெந்துகளை அளிக்கத் தகுதியுடையவர் அல்லர்; அவர் திருமணங்களை நடத்திவைக்கவும் கூடாது. (532.7)

## B. உரிமம் பெற்ற போதகர்

**532.** போதகருக்கான உரிமத்தின்மூலம், மறைமாவட்ட மாநாட்டினால் தனது குருத்துவ அழைப்பு மற்றும் ஈவுகளுக்காக அங்கீகாரம் செய்யப்பட்டவரே உரிமம் பெற்ற போதகர். இதன்மூலம் அவர் ஒரு உள்ளூர் சபை ஸ்தல போதகருக்கானதைவிட மேலான உரிமைகளை மற்றும் பொறுப்புக்களைப் பெற்று இன்னும் அதிகமான பகுதிகளில் ஊழியம் செய்ய முடியும். இது குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கன்மாராக அபிஷேகம் பண்ணப்படுவதற்கு ஒரு முன்னோடியாகும். (532.7)

**532.1.** ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்றுள்ளதாக உணரும் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில் மறைமாவட்ட சபையானது போதகருக்கான உரிமத்தையை அளிக்கலாம்.

1. அவர்கள் ஒரு முழு ஆண்டுக்காவது ஸ்தல போதகருக்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.
2. போதகர்களுக்கான கல்வியில் கால் பகுதி அளவைக் கற்று முடித்திருக்க வேண்டும்; சட்டநூலையும், நசரேயத் திருச்சபையின் வரலாற்றையும், பரிசுத்தத்தின் கோட்பாடுகளைப் பாராட்டுவதையும், ஏற்றுக்கொள்வதையும், செயல்படுத்துவதையும் எடுத்துக்காட்டும் விதமாக மதிப்பீடு செய்யப்பட்ட பாடத்திட்டத்தின் சம்பந்தப்பட்ட பகுதிகளைப் படித்து முடித்திருக்கலாம்.
3. தாங்கள் உறுப்பினராக உள்ள உள்ளூர் சபையின் சபை நிர்வாகக் குழுவினால் இந்தப் பணிக்காகப் பரிந்துரை செய்யப்பட்டு, அந்தப் பரிந்துரையோடு, கவனமாக நிரப்பப்பட்ட போதகர் அனுமதிக்கான விண்ணப்ப படிவமும் அனுப்பப்பட வேண்டும்.
4. கிருபை, ஈவுகள், பயன்படும் தன்மை இவை சான்றுகளுடம் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்
5. தங்கள் ஆவிக்குரிய, அறிவுசார்ந்த, சரீரப்பிரகாரமான தகுதிக்காக, அவர்கள் உறுப்பினர்களாக இருக்கும் உள்ளூர் சபை எந்த மறைமாவட்ட எல்லைக்குள் அமைந்திருக்கிறதோ, அந்த மறைமாவட்ட மாநாட்டின் மேற்பார்வையில் கவனமாகச் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும்

6. உரிமம்பெற்ற போதகர்கள், அபிஷேகம் பெறக் காத்திருக்கும் விண்ணப்பத்தாரர்கள் இவர்களுக்காகக் குறிக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை உடனடியாகப் படிக்கத் துவங்குவதாக வாக்களித்திருக்க வேண்டும்.
7. மறைமாவட்ட மாநாட்டினால் கொடுக்கப்பட்ட தகுதியின்மை குறிப்பைப் பெற்றிருந்தால், இந்தத் தகுதியின்மைக் குறிப்பு அளிக்கப்பட்ட மறைமாவட்டத்தின் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்துமூலமாகத் தகுதியின்மைக் குறிப்பு நீக்கப்பட்டுவிட்டதற்கான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களது திருமண உறவு அவர்கள் மறைமாவட்ட அனுமதி பெறவோ அல்லது அபிஷேகம் பெறவோ அவர்களைத் தகுதியற்றவர்களாக ஆக்கியிருக்கக் கூடாது.
8. ஏற்கெனவே விவாகரத்து பெற்று மறுமணம் செய்துகொண்டிருந்தால், ஆதரவான சான்றுகளோடு, மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக்குழுவின் பிரிந்துரையும், பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும். பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக்குழு அனுமதி பெறவோ அல்லது அபிஷேகம் பெறவோ இது ஒரு தடையாக இராதபடி நீக்கம் செய்யும்.

அந்தப் போதகர் இதற்கு சமமாக இருக்கும் மதீப்பீடு செய்யப்பட்ட நசரேயத் திருச்சபையின் பாடத்திட்டங்களில் கால் பங்காவது படித்திருக்க வேண்டும். விண்ணபத்தாரர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட சபையில் போதகராகப் பொறுப்பேற்றிருப்பவராகவோ, ஒப்புதல்பெற்ற கல்வித்திட்டத்தில் பயிலுவதற்குப் பதிவு பெற்றவராகவோ இருக்க வேண்டும். தனது உரிமம் புதுப்பிக்கப்படுவதற்காகச் *சட்டநூலில்* குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சக் கல்வி பகுதிகளையாவது ஆண்டுதோறும் முடித்துவர வேண்டும் என்பனபோன்ற விதிவிலக்குகளை மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்று குழுவினால் அல்லது மறைமாவட்ட குருத்துவ நிர்வாகக் குழுவினால் அளிக்கப்படலாம்.

இரட்சிப்பிற்கு முன்பாகக் குற்றவாளியாக இருந்தது பின்னணி சோதனைக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால், விதி 540.9 பிரகாரம் இல்லாமல் வேறு எந்த வகையிலும் தன்னிச்சையாகவே அவர் நீக்கப்பட்டுவிட வேண்டும் என்று மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்று குழுவினால் அல்லது மறைமாவட்ட குருத்துவ நிர்வாகக் குழுவினால் அர்த்தம்கண்டுவிடக்கூடாது. (129.14, 207.6, 531.5)

**532.2.** கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில், நசரேயத் திருச்சபையோடு தங்களை இணைத்துக்கொள்ள விரும்பும், வேறு சபைப் பிரிவுகளைச் சேர்ந்த உரிமம் பெற்ற போதகர்களுக்கு அவர்கள் தாங்கள் முன்பு உறுப்பினராக இருந்த சபைப்பிரிவினால் அளிக்கப்பட்ட தகுதிச் சான்றை முன் வைத்தால், மறைமாவட்ட மாநாட்டினால் போதகருக்கான அனுமதி அளிக்கப்படலாம்.

1. குறைந்த பட்சம் நசரேயத் திருச்சபையானது ஸ்தல போதகர்களுக்காக நியமித்திருக்கும் பாடத்திட்டத்தில் கால் பங்காவது ஒரு பாடத்திட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். *சட்டநூலையும்*, நசரேயத் திருச்சபையின் வரலாற்றையும், பரிசுத்தத்தின் கோட்பாடுகளைப் பாராட்டுவதையும்,

ஏற்றுக்கொள்வதையும், செயல்படுத்துவதையும் எடுத்துக்காட்டும் விதமாக மதிப்பீடு செய்யப்பட்ட பாடத்திட்டத்தின் சம்பந்தப்பட்ட பகுதிகளைப் படித்து முடித்திருக்கலாம்.

2. அவர்கள் உறுப்பினர்களாக இருக்கும் நசரேயத் திருச்சபையின் உள்ளூர் சபையின் சபை நிர்வாகக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டிருக்க வேண்டும்.
3. கிருபை, ஈவுகள், பயன்படும் தன்மை பற்றிய சான்றுகளை அளித்திருக்க வேண்டும்.
4. இத்தகைய பணிக்காக அவர்களது ஆவிக்குரிய, அறிவுப் பூர்வமான, சரீரப்பிரகாரமான தகுதிகள் மறைமாவட்ட மாநாட்டின் மேற்பார்வையில் கவனமாகச் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும்.
5. உரிமம்பெற்ற போதகர்கள், அபிஷேகம் பெறக் காத்திருக்கும் விண்ணப்பத்தாரர்கள் இவர்களுக்காகக் குறிக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை உடனடியாகப் படிக்கத்துவங்குவதாக வாக்களித்திருக்க வேண்டும்.
6. மறைமாவட்ட மாநாட்டினால் கொடுக்கப்பட்ட தகுதியின்மை குறிப்பைப் பெற்றிருந்தால், இந்தத் தகுதியின்மைக் குறிப்பு அளிக்கப்பட்ட மறைமாவட்டத்தின் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்து மூலமாகத் தகுதியின்மைக் குறிப்பு நீக்கப்பட்டுவிட்டதற்கான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களது திருமண உறவு அவர்கள் மறைமாவட்ட அனுமதி பெறவோ அல்லது அபிஷேகம் பெறவோ அவர்களைத் தகுதியற்றவர்களாக ஆக்கியிருக்கக் கூடாது.
7. ஏற்கெனவே விவாகரத்து பெற்று மறுமணம் செய்துகொண்டிருந்தால், ஆதரவான சான்றுகளோடு, மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக்குழுவின் பிரிந்துரையும், பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும். பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக்குழு அனுமதி பெறவோ அல்லது அபிஷேகம் பெறவோ இது ஒரு தடையாக இராதபடி நீக்கம் செய்யும். (532.1)

**532.3.** அடுத்த மறைமாவட்ட மாநாட்டின் இறுதியோடு போதகருக்கான உரிமத்தின் காலவரம்பு முடிவுபெறும். கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில், மறைமாவட்ட மாநாட்டின் வாக்கெடுப்பின் மூலம் அவரது உரிமம் புதுப்பிக்கப்படலாம்:

1. புதுப்பிக்கப்படுதலுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரர் போதகர் உரிமத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தைக் கவனமாகப் பூர்த்திசெய்து, மறைமாவட்ட மாநாட்டிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
2. விண்ணப்பத்தாரர் வாசிக்கும் பாடத்திட்டத்திற்கான பாடங்களைத் தவிர, அந்த ஆண்டுக்குரிய பாடத்திட்டத்தில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களையாவது பூர்த்திசெய்திருக்க வேண்டும்.
3. விண்ணப்பத்தாரர் போதகரால் நியமனம் செய்யப்பட்டு, அவர் உறுப்பினராக இருக்கும் உள்ளூர் சபையின் சபை நிர்வாகக் குழுவால், உரிமம் புதுப்பிக்கப்படுதலுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஒருவேளை அவர் குறிக்கப்பட்ட பாடத்திட்டத்தை முடிக்காமலிருந்தால், இந்தத் தோல்விக்கான எழுத்துமூலமான விளக்கம் அளிக்கப்பட்டபின் மறைமாவட்ட

மாநாட்டினால் அவரது உரிமம் புதுப்பிக்கப்படலாம். இந்த விளக்கம் மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவுக்குத் திருப்தியளிக்கும் வகையிலும், தலைமை வகிக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்றதாகவும் இருக்க வேண்டும். மறைமாவட்ட மாநாடானது ஏதேனும் விளைவுக்காக மற்றும் தனது சுயதீர்மானத்தின்படி ஒரு போதகரின் உரிமத்தைப் புதுப்பிக்கப்படுவதற்கு எதிராக வாக்களிக்கலாம்.

மதிப்பீடு செய்யப்பட்ட பாடத்திட்டத்தைப் படித்துப் பட்டம்பெற்ற உரிமம் பெற்ற போதகர்கள், மறைமாவட்ட மாநாட்டினால் ஓய்வுபெற்ற நிலையில் வைத்திருக்கும்போது, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்பேரில் மறைமாவட்ட போதகர் உரிமம் புதுப்பித்தல் படிவம் நிரப்பப்படாமலேயே அவருக்கு உரிமம் புதுப்பிக்கப்படும். (205.4)

**532.4.** அபிஷேகம் பெறுவதற்கான தகுதியை அடைய முதல் மறைமாவட்ட அனுமதியைப் பெற்று 10 ஆண்டுகளுக்குள்ளாகத் தங்கள் பாடத் திட்டத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இயல்புக்கு மாறான சூழ்நிலைகளினால் விதிவிலக்கு அளிக்க வேண்டியிருந்தால், இந்த விதிவிலக்கு, அதிகரிக்கப்பட்ட கால அளவு குறிக்கப்பட்டு, மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவால், மறைமாவட்ட மாநாட்டுக்குப் பரிந்துரை செய்யப்பட வேண்டும்; இந்த விதிவிலக்கு அதிகாரம்பெற்றப் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

வயது மற்றும் குறிப்பிட்ட காலவரம்புக்குள்ளாக பாடத் திட்டத்தை முடிக்காமலிருத்தல் போன்ற காரியங்களினால் ஒரு உரிமம்பெற்ற போதகர், அபிஷேகம் செய்யப்படுவதற்குத் தகுதிபெறாதவர் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தால், மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழு இவற்றின் பரிந்துரையின் பேரில் அவரது போதகருக்கான உரிமம் புதுப்பிக்கப்படலாம். இப்படிப்பட்ட அனுமதியானது அந்தப் போதகர் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு பாடத்தைப் படித்துமுடித்ததையும் அல்லது கடந்த ஆண்டில் இரண்டு பாடத்திட்டங்களையாவது முடித்திருக்கிறார் என்பதின் அடிப்படையிலும் வழங்கப்படும்.

**532.5.** போதகராகப் பணிப்புரியும் உரிமம் பெற்ற போதகர்களின் உரிமம் புதுப்பிக்கப்பட மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது பரிந்துரை செய்யும். (225.13)

**532.6.** அதிகாரம் பெற்றப் பொதுக் கண்காணிப்பாளர், ஒவ்வொரு உரிமம்பெற்ற போதகருக்கும், தம்மாலும், மறைமாவட்டக் கண்காணிப்பாளராலும், மறைமாவட்ட செயலாளராலும் கையொப்பங்கள் இடப்பட்ட போதகருக்கான உரிமத்தை வழங்குவார்.

**532.7.** குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகருக்கான ஆயத்தம் பெற்றுவரும் உரிமம்பெற்ற போதகர்களுக்கு வேதாகமத்தைப் பிரசங்கம் செய்யும் அதிகாரம் வழங்கப்படும். அவர்கள் தங்கள் பாடத்திட்டத்தில் ஆண்டுதோறும் குறிக்கப்பட்ட பாடங்களில் தேர்ச்சிபெற்று வந்தாலும், தங்கள் குருத்துவ உறுப்பினர் தகுதியை உடைய மறைமாவட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முழு நேர செயல்பூர்வ ஊழியத்தில் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் தங்கள் சொந்த சபைகளில், ஞானஸ்நானம்,

திருவிருந்து என்ற சாக்கிரமெந்துகளை அளிக்கும் அதிகாரத்தையும் பெறுவார்கள். தேசிய சட்டம் தடை செய்யாவிட்டால் அவர்கள் திருமணங்களையும் நடத்தி வைக்கலாம். (511–512, 515, 515.4, 523, 532.8, 533–533.2, 534–534.2, 700, 701, 705).

**532.8.** எல்லா உரிமைப்பெற்ற போதகர்களும் தாங்கள் உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ள மறைமாவட்டத்தின் மறைமாவட்ட மாநாட்டில், குருத்துவ உறுப்பினர்களாக இருப்பார்கள். வருடந்தோறும் அதற்கேற்ற ஆண்டு அறிக்கைப் படிவத்தையோ அல்லது மறைமாவட்ட போதகரின் உரிமத்தைப் புதுப்பித்தலுக்குரிய படிவத்தையோ சமர்ப்பிக்கலாம். (201, 205.3, 521)

**532.9.** ஒரு உரிமம் பெற்ற போதகர் மற்றொரு சபைப் பிரிவின் சபையிலோ அல்லது ஊழியத்திலோ ஐக்கியமாகிவிட்டால், இந்த உண்மையின் காரணமாக நசரேயத் திருச்சபையில் அவரது சபை உறுப்பினர் மற்றும் குருத்துவ உறுப்பினர் தகுதிகளை உடனடியாக இழந்துவிடுவார். மறைமாவட்ட மாநாடு தனது பொழிப்புப் பதிவில் கீழ்க்கண்ட வாசகத்தைப் பதிவுசெய்ய வேண்டும்: "மற்றொரு சபைப்பிரிவில் ஐக்கியமானதின் காரணமாக நசரேயத் திருச்சபையின் சபை உறுப்பினர் தகுதி, ஊழியத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார்." (107, 112)

## C. டீக்கன்மார்

**533.** ஊழியத்திற்கான தேவனுடைய அழைப்பு, ஈவுகள் பயன்படும் தன்மை இவற்றில் தன் செயல்மூலம் சான்று பெற்றுவரும், சரியான பயிற்சி மற்றும் அனுபவத்தின் மூலம் வளர்ச்சி பெற்றவருமான, போதகரே டீக்கனார் ஆவார். மறைமாவட்ட மாநாட்டின் வாக்களிப்பினாலும், அபிஷேகத்தினாலும் கிறிஸ்துவின் ஊழியத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டவர். கிறிஸ்தவ ஊழியத்தின் சில குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்காக அதிகாரம் கொடுக்கப்பட்டவர்.

**533.1.** டீக்கனார் பிரசங்கம் செய்வதற்கான குறிப்பிட்ட அழைப்பைப் பெற்றவர் அல்ல. வேதாகமம் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில், தேவன் இத்தகைய குறிப்பிட்ட அழைப்பைப் பெறாதவர்களுக்கும், வாழ்நாள் முழுவதற்குமான ஊழியத்திற்கான அழைப்பைக் கொடுக்கிறார் என்பதைத் திருச்சபை அங்கீகரிக்கிறது. அத்தகைய ஊழியத்திற்காக அழைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் தேவைகளைச் சந்திக்க வேண்டுமென்றும், திருச்சபையினால் ஏற்படுத்தப்பட்ட பொறுப்புகள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் திருச்சபை நம்புகிறது. இது ஊழியத்தின் ஒரு நிரந்தரமான அழைப்பாகும்.

**533.2.** டீக்கனார் இந்தப் பதவியின் கல்விக்கான தகுதிகளை நிறைவேற்ற வேண்டும்; பொருத்தமான வரங்களையும், கிருபைகளையும் வெளிக்காட்ட வேண்டும்; திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேற்பார்வையிடும் ஒரு குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகரின் வழிகாட்டுதலுக்கேற்ப சாக்கிரமெந்துகளை அளிக்கும் அதிகாரம் டீக்கனாருக்கு உண்டு; அவர் ஞானஸ்நானம் மற்றும் கர்த்தரின் பந்தியை நடத்தலாம். மாநிலத்தின்

சட்டங்கள் தடைசெய்யாவிட்டால் அவர் திருமணங்களையும் நடத்தலாம். தேவைப்படும்போது ஆராதனை நடத்தவும், பிரசங்கம் செய்யவும் அதிகாரம் உண்டு. ஆண்டவரும், சபையும் இந்த நபரின் ஈவுகளையும், கிருபைகளையும் பல்வேறுபட்ட துணை ஊழியங்களில் பயன்படுத்தலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சரீரத்தின் சேவக ஊழியத்தின் அடையாளமாக, டீக்கனார் நிறுவன சபைக்கும் அப்பாற்பட்ட பொறுப்புகளில் தனது ஈவுகளைப் பயன்படுத்தலாம்.

**533.3.** டீக்கனார் தேவனால் இந்த ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருக்க வேண்டும். தற்போது மறைமாவட்ட உரிமத்தைப் பெற்றிருக்கும் ஒரு நபர் இதற்கு முன்பாக தொடர்ந்து மூன்று வருடங்களுக்கும் குறையாமல் உரிமத்தைப் பெற்றிருந்திருக்க வேண்டும். அதோடு இந்த நபரின் மறைமாவட்ட உரிமத்தைப் புதுப்பிக்கும்படியாக அவர் உறுப்பினராக இருக்கும் உள்ளூர் சபையின் நிர்வாகக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதோடு இந்த நபர்:

1. திருச்சபையின் எல்லா எதிர்ப்பார்ப்புகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்,
2. உரிமம் பெற்ற போதகர் மற்றும் டீக்கனாக அபிஷேகம் செய்யப்படவிருக்கும் நபர் இவர்களுக்கான அனைத்து பாடத் திட்டங்களையும் வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். மற்றும்,
3. மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலோ பரிந்துரை செய்யப்பட்டிருக்கவேண்டும். குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவினால் கவனத்துடன் ஆய்வுசெய்யப்பட்டு, மறைமாவட்ட மாநாட்டிற்குச் சாதகமான அறிக்கைச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த நபர்கள் மறைமாவட்ட மாநாட்டில் மூன்றில் இரு பெரும்பான்மையின் மூலம் டீக்கனாராகத் தேர்ந்தெடுக்கப்படவும் குறைந்தபட்சம் மூன்று தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்காவது பொறுப்பபைப்பெற்ற போதகராக இருந்திருக்க வேண்டும்; பகுதி நேரமாகக் கொடுக்கப்பட்ட பொறுப்பாக இருந்தால், தொடர்ந்து பணியாற்றும் வருடங்கள் இன்னும் கூட்டிக் கொடுக்கப்படும். உள்ளூர் சபை ஊழியத்தில் அவர்களுடைய பங்களிப்பு எவ்வளவாக இருக்கிறது, அவர்களுடைய சாட்சியும், ஊழியமும் மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் ஊழியத்திற்காகத் தாங்கள் அழைக்கப்பட்டதையோ பெரிதாக நினைக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. மறைமாவட்ட மாநாட்டினால் கொடுக்கப்பட்ட தகுதியின்மைக் குறிப்பு அளிக்கப்பட்ட மறைமாவட்டத்தின் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்துமூலமாகத் தகுதியின்மைக் குறிப்பு நீக்கப்பட்டுவிட்டதற்கான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களது திருமண உறவு அவர்கள் அபிஷேகம்பெற அவர்களைத் தகுதியற்றவர்களாக ஆக்கியிருக்கக்கூடாது. **(205.6, 320, 529)**

**533.4.** அபிஷேகம் பெற்ற டீக்கனார் தனது பணியைத் தொடரும்போது, பிரசங்க ஊழியத்திற்காக அழைப்பைப் பெற்றுள்ளதாக உணர்ந்தால், அவர் குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர் பதவிக்குள்ளான தகுதிகளை நிறைவேற்றி,

டீக்கனாருக்குள்ளான உரிமச் சான்றிதழைத் திரும்பக் கொடுத்துவிட்டு, குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகராக அபிஷேகம் பண்ணப்படலாம்.

## D. குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர்

**534.** பிரசங்கம் பண்ணுவதற்கான தேவனுடைய அழைப்பு, ஈவுகள், பயன்படும்தன்மை இவற்றில் தன் செயல்மூலம் சான்று பெற்றவரும், சரியான பயிற்சி மற்றும் அனுபவத்தின் மூலம் வளர்ச்சி பெற்றவருமான போதகரே குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர் ஆவார். இவர் மறைமாவட்ட மாநாட்டின் வாக்களிப்பினாலும், அபிஷேகத்தினாலும், கிறிஸ்துவின் ஊழியத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். கிறிஸ்தவ ஊழியத்தின் எல்லாப் பணிகளையும் செய்வதற்காக அதிகாரம் கொடுக்கப்பட்டவர்.

**534.1.** குருத்துவ அபிஷேகம்பெற்ற போதகர் என்ற பிரசங்க ஊழியத்தின் ஒரு பதவியை நாம் அங்கீகரிக்கிறோம். இது திருச்சபையின் ஒரு நிரந்திர பதவியாகும். சபையை நன்முறையில் ஆளுகை செய்வது, நற்செய்தியைப் பிரசங்கிப்பது, ஞானஸ்நானம், திருவிருந்து என்ற சாக்கிரமெந்துகளைக் கொடுப்பது, திருமணங்களை நடத்திவைப்பது, இவையனைத்தையும் திருச்சபையின் தலையாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலும், அவருக்குப் பணிந்தும் நடத்திவைப்பது இவரின் பணியாகும். (31, 514–515.3, 515.4, 515.9, 538.15)

**534.2.** இந்த அதிகாரப்பூர்வமான ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட ஒருவர் வார்த்தையின் உக்கிராணக்காரராக இருக்க வேண்டுமென்றும், வாழ்நாள் முழுவதும் அதை அறிவிப்பதற்குத் தன் முழுபலத்தையும் அளிக்க வேண்டும் என்றும் திருச்சபை எதிர்பார்க்கிறது.

**534.3.** குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர் தேவனால் இந்த ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருக்க வேண்டும். தற்போது மறைமாவட்ட உரிமத்தைப் பெற்றிருக்கும் ஒரு நபர் இதற்கு முன்பாகத் தொடர்ந்து மூன்று வருடங்களுக்கும் குறையாமல் உரிமத்தைப் பெற்றிருந்திருக்க வேண்டும். அதோடு இந்த நபரின் மறைமாவட்ட உரிமத்தைப் புதுப்பிக்கும்படியாக அவர் உறுப்பினராக இருக்கும் உள்ளூர் சபையின் நிர்வாகக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதோடு இந்த நபர்:

1. திருச்சபையின் எல்லா எதிர்ப்பார்ப்புகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்,
2. உரிமம் பெற்ற போதகர் மற்றும் டீக்கனாக அபிஷேகம் செய்யப்படவிருக்கும் நபர் இவர்களுக்கான அனைத்துப் பாடத் திட்டங்களையும் வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். மற்றும்,
3. மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலோ பரிந்துரை செய்யப்பட்டிருக்கவேண்டும். குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவினால் கவனத்துடன் ஆய்வுசெய்யப்பட்டு, மறைமாவட்ட மாநாட்டிற்குச் சாதகமான அறிக்கைச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த நபர்கள் மறைமாவட்ட மாநாட்டில் மூன்றில் இரு பெரும்பான்மையின் மூலம் டீக்கனாராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் குறைந்தபட்சம் மூன்று தொடர்ந்து

வரும் ஆண்டுகளுக்காவது பொறுப்பபைப்பெற்ற போதகராக இருந்திருக்க வேண்டும்; பகுதி நேரமாகக் கொடுக்கப்பட்ட பொறுப்பாக இருந்தால், தொடர்ந்து பணியாற்றும் வருடங்கள் இன்னும் கூட்டிக் கொடுக்கப்படும். உள்ளூர் சபை ஊழியத்தில் அவர்களுடைய பங்களிப்பு எவ்வளவாக இருக்கிறது, அவர்களுடைய சாட்சியும், ஊழியமும் மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் ஊழியத்திற்காகத் தாங்கள் அழைக்கப்பட்டதைப் பெரிதாக நினைக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. மறைமாவட்ட மாநாட்டினால் கொடுக்கப்பட்ட தகுதியின்மைக் குறிப்பு அளிக்கப்பட்ட மறைமாவட்டத்தின் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்துமூலமாக தகுதியின்மைக் குறிப்பு நீக்கப்பட்டுவிட்டதற்கான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களது திருமண உறவு அவர்கள் அபிஷேகம்பெற அவர்களைத் தகுதியற்றவர்களாக ஆக்கியிருக்கக்கூடாது. **(205.6, 320, 529)**

## E. தகுதிகளை அங்கீகரித்தல்

**535.** நசரேயத் திருச்சபையோடு தங்களை ஐக்கியப்படுத்திக்கொள்ள விருப்பமுள்ள, வேறு சுவிசேஷ சபைப் பிரிவுகளைச் சேர்ந்த அபிஷேகம் பெற்ற போதகர்கள், தங்கள் அபிஷேகச் சான்றுகளைச் சமர்ப்பித்தப்பின், மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவினால் தனிப்பட்ட அனுபவத்திற்காகவும், கொள்கைப் பிடிப்பிற்காகவும் திருப்திகரமான முறையில் ஆய்வுசெய்யப்பட்டபிறகு. கீழ்க்கண்ட தகுதிகளை நிறைவேற்றினால், இவர்களது அபிஷேகம் மறைமாவட்ட மாநாட்டினால் அங்கீகரிக்கப்படும்:

1. நசரேயத் திருச்சபையின் வரலாறு, சட்டநூலின் செய்திகள் மற்றும் பரிசுத்தத்தின் கோட்பாடு பற்றிய தேர்வுகளை திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும்.
2. அபிஷேகம் பண்ணப்படுவதற்கான விண்ணப்பத்தாரர்கள் மற்றும் தகுதிகளை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பம் செய்யும் குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகருக்கான விடைத்தாளைக் கவனமாகப் பூர்த்திசெய்து, மறைமாவட்ட மாநாட்டிற்குச் சமர்ப்பித்திருக்க வேண்டும்.
3. விதி எண்கள் 533–533.3 அல்லது 534–534.3 படி அபிஷேகம் பண்ணப்படுபவர்களுக்காகக் கூறப்பட்டுள்ள தகுதிகளை நிறைவேற்றியிருக்க வேண்டும்.
4. அந்த விண்ணப்பத்தாரர் ஒரு ஊழியத்தில் பொறுப்பில் பணி செய்துகொண்டிருக்க வேண்டும். (205.7, 228, 529, 532.2)

**535.1.** இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட குருத்துவ அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்களுக்கு அதிகாரம் பெற்றப் பொதுக் கண்காணிப்பாளர், தமது கையொப்பத்தோடு, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்டச் செயலாளர் கையொப்பமிட்ட அங்கீகரிப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்குவார். **(538.6)**

**535.2.** வேறொரு சபையிலிருந்து வரும் போதகர் ஒருவரின் அத்தாட்சிப் பத்திரம் இவ்வாறு ஒழுங்கான முறையில் அங்கீகரிக்கப்பட்டப்பின், மேற்கூறப்பட்ட

சபை அவருக்கு வழங்கிய அத்தாட்சிப் பத்திரத்தின் பின்புறம் கீழ்க்கண்ட வாசகங்கள் எழுதப்பட்டோ அல்லது முத்திரையிடப்பட்டோ அவருக்குத் திரும்ப வழங்கப்படவேண்டும்.

நசரேயத் திருச்சபையின் மறைமாவட்ட மாநாட்டினால் _______________ அன்று புதிய அத்தாட்சிப் பத்திரத்திற்கு ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

________________________________, பொதுக் கண்காணிப்பாளர்

___________________________________, மறைமாவட்டக் கண்காணிப்பாளர்

______________________________________, மறைமாவட்டச் செயாலாளர்

## F. ஓய்வுபெற்ற போதகர்

**536.** மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக்குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி நிர்வாகக் குழுவின் பரிந்துரையின்பேரில், தாம் குருத்துவ உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ள மறைமாவட்ட மாநாட்டினால் ஓய்வுறவு தகுதியில் அமர்த்தப்பட்டுள்ளவரே ஓய்வுபெற்ற போதகர். இந்தப் பதவியில் எந்த மாற்றமும், மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக்குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி நிர்வாகக் குழுவின் பரிந்துரையின் பேரில் மறைமாவட்ட மாநாட்டினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**536.1.** ஓய்வு பெறுதல் என்பது குருத்துவப் பணிகளிலிருந்து முழுமையாக விடுபட வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை; இதன் காரணமாக மறைமாவட்ட மாநாட்டில் அவரது உறுப்பினர் தகுதி இழக்கப்படுவதுமில்லை. குறிப்பிட்ட ''பொறுப்பில்'' ஊழியம் செய்த ஒரு போதகர் ''ஓய்வு பெற்ற பொறுப்பிலுள்ள'' தகுதியைப் பெறுவார். அவர் மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராக இருப்பார். ஆனால் ஓய்வுபெறும்போது குறிப்பிட்ட பொறுப்பைப் பெற்றிராத போதகர் ''ஓய்வுபெற்ற குறிப்பிட்ட பொறுப்பைப் பெறாத'' தகுதியைப் பெறுவார். அவர் மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராக இருக்க மாட்டார். **(201, 538.9)**

**536.2.** ஓய்வுபெற்ற ஊழியர்கள் (பொறுப்பிலுள்ள, பொறுப்பில் இல்லாத) வருடந்தோறும் மறைமாவட்ட மாநாட்டிற்கு அறிக்கைக் கொடுக்க வேண்டும். தங்களால் கட்டுப்படுத்தமுடியாத காரணங்களால் அறிக்கையைச் சமர்ப்பிக்கமுடியாத ஓய்வுபெற்ற போதகர்களுக்கு, மறைமாவட்ட மாநாடு, மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக்குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி நிர்வாகக் குழுவின் பரிந்துரையின்பேரில் ''விடுவிக்கப்பட்டவர்'' என்ற நிலையைப் பெறுவார். இதன் காரணமாக அவர் ஆண்டுதோறும் அறிக்கையை அளிக்க வேண்டியதில்லை. **(538.9)**

## G. போதகர்களின் இடமாற்றம்

**537.** ஒரு குருத்துவ உறுப்பினர் மற்றொரு மறைமாவட்டத்திற்கு இடமாற்றம் பெற விரும்பினால், அவர் தமது குருத்துவ உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ள மறைமாவட்ட மாநாட்டின் வாக்கெடுப்பு மூலமாகவோ அல்லது மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவாலோ குருத்துவ

உறுப்பினர் தகுதி இடமாற்றம் அளிக்கப்படலாம். இந்த இடமாற்றம் மறைமாவட்ட மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரை ஏற்றக்கொள்ளும் மறைமாவட்டத்தில் அந்தப் போதகருக்கு முழு உரிமைகளும், உறுப்பினர் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். ஆனால் அந்த இடமாற்றம் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழு மற்றும் மறைமாவட்ட மாநாட்டின் இறுதி ஒப்புதலைப் பெற வேண்டும். (205.8–205.9, 226, 231.9–231.10)

**537.1.** இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட உரிமம் பெற்ற போதகரின் பாடத்திட்டத்தில் அவர் பெற்றமதிப்பெண்கள் பற்றிய விவரமான பதிவேடு, இதை அளிக்கும் மறைமாவட்ட மாநாட்டின் மறைமாவட்ட குருத்துவ கல்வி நிர்வாகக் குழுவின் செயலாளரால் ஏற்ற முறையில் சான்றளிக்கப்பட்டு, பெற்றுக்கொள்ளும் மறைமாவட்டத்தின் மறைமாவட்ட குருத்துவ கல்வி நிர்வாகக் குழுவின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட பிறகே இந்த இடமாற்றம் செல்லுபடியாகும். பெற்றுக்கொள்ளும் மறைமாவட்டத்தின் மறைமாவட்ட குருத்துவ கல்வி நிர்வாகக் குழுவின் செயலாளர் அனுமதி பெற்ற போதகரின் மதிப்பெண் பற்றிய பதிவேடு பெற்றுக் கொள்ளப்பட்டதென்று தனது மறைமாவட்டச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இடமாற்றம் பெற்ற போதகர், தனது பாடத் திட்டத்தைத் தொடரும்போது, தனது மதிப்பெண்கள் பற்றிப் பெற்றுக்கொள்ளும் மறைமாவட்டத்திற்கு அறிவிப்பதில் கவனமாக இருக்க வேண்டும். (233.1–233.2)

**537.2.** இடமாற்றல் அறிவிப்பைப் பெற்றுக்கொள்ளும் மறைமாவட்ட மாநாடு அனுப்பும் மறைமாவட்ட மாநாட்டுக்கு இடமாற்றம் பெறும் நபரின் உறுப்பினர் தகுதியைப் பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்க வேண்டும். இந்த இடமாற்றல் பெற்றுக் கொள்ளும் மறைமாவட்ட மாநாட்டின் வாக்கெடுப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் வரை, அந்த நபர் அவரை அனுப்பும் மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராகவே இருப்பார். விண்ணப்பிக்கப்பட்ட மறைமாவட்ட மாநாட்டின் அனுப்புதல் தேதிக்கு அடுத்த கூட்டத்தொடரின் முடிவுவரையே இத்தகைய இடமாற்றல் செல்லுபடியாக இருக்கும். (205.8, 226, 231.10)

## H. பொது விதிகள்

**538.** நசரேயத் திருச்சபையின் போதகர்களுக்கான பொது விதிகளில் பயன்படுத்தப்படும் **பதங்களின்** விவரம் பின்வருமாறு:

**குருத்துவ உறுப்பினர்கள்** – அபிஷேகம் பெற்ற போதகர், டீக்கனார் மற்றும் உரிமம் பெற்ற போதகர்கள். (530, 531, 532)

**சாமானியர்** – குருத்துவ உறுப்பினர்கள் அல்லாத நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்கள்.

**செயல்பாட்டில் இருக்கும்** – கொடுக்கப்பட்டுள்ள பதவியில் இருக்கும் குருத்துவ உறுப்பினர்.

**பொறுப்பைப் பெற்ற** – விதிகள் 505–528வரை பட்டியலிடப்பட்டிருக்கும் பதவிகள் ஒன்றில் செயல்படும் குருத்துவ உறுப்பினர்.

**பொறுப்பைப் பெறாத** – நன்மதிப்புள்ள ஆனால் தற்போது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பில் செயல்படாத போதகர்.

**ஓய்வுபெற்ற பொறுப்பில் உள்ளவர்** – ஓய்வுபெற்ற குருத்துவ உறுப்பினர் ஓய்வுபெறும் நேரத்தில் அவர் இருந்த பொறுப்பைப் பெற்றவர்.

**ஓய்வுபெற்ற பொறுப்பில் இல்லாதவர்** – ஓய்வுபெறும் நேரத்தில் எந்தப் பொறுப்பையும் பெற்றிராத குருத்துவ உறுப்பினர்.

**போதகர்களின் பட்டியல்** – இது அந்த மறைமாவட்டத்தின் போதகர்களின் பட்டியலாக இருக்கிறது. நன்மதிப்பைப் பெற்றிருக்கும் அபிஷேகம் பெற்ற மற்றும் உரிமம் பெற்ற குருத்துவ உறுப்பினர்கள் ஆனால் தங்களுடைய அனுமதிச் சான்றிதழைக் கோப்பிலிடவில்லை.

**நன்மதிப்பு** – தீர்க்கப்படாத குற்றச்சாட்டுகளையோ, ஒழுங்குமுறையில் வைக்கப்படாதவராகவோ இருக்கும் குருத்துவ உறுப்பினரின் நிலையைக் குறிக்கிறது.

**நீக்கப்பட்டது** – தங்களுடைய சான்றிதழைக் கோப்பிலிட்டோ அல்லது இராஜினாமா செய்தோ அல்லது ஒப்படைத்திருந்தாலோ அல்லது அவர்களுடைய சான்றிதழ் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது திரும்பப் பெறப்பெற்றிருந்தாலோ அந்த குருத்துவ உறுப்பினர்களின் பெயர்கள் போதகர்களின் பட்டியலிலிருந்து நீக்கப்படும். இந்தச் செயலை மறைமாவட்ட மாநாடு செய்யும்.

**ஒழுக்கப்படுத்தப்பட்டது** – முழுமையாகவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தோடோ ஒழுக்கரீதியான நடவடிக்கையின் காரணமாகக் குருத்துவ உறுப்பினரின் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகள் பெறப்பெற்றிருப்பவர்.

**இடைக்கால தடை** – ஒழுக்கரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல். அதில் சான்றிதழ்களை ஒப்படைக்கச் சொல்வது சேர்க்கப்படவில்லை. இந்த நடவடிக்கைகளின் மூலமாகத் தாற்காலிகமாக அந்தக் குருத்துவ உறுப்பினர் தன்னுடைய உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைப் பெறாமல் இருப்பார். இது தக்க தகுதிகள் சந்திக்கப்பட்டால் மறுபடியும் மாற்றப்படும்.

**நீக்கப்படுதல்** – சான்றிதழ்கள் திரும்பப்பெறப்பட்டு, நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களிலிருந்து நீக்கப்பட்ட குருத்துவ உறுப்பினர்.

**கோப்பிலிடப்பட்ட அனுமதிச் சான்று** – நன்மதிப்பைப் பெற்றுள்ள போதகர், ஊழியத்தில் செயல்படாத காரணத்தால் தனது சான்றை, உரிமைகளைச், சலுகைகளை மற்றும் கடமைகளைத் தன்னுடைய சான்றைப் பொதுச் செயலாளரிடம் பதிவு செய்ததின் மூலமாக இந்த நிலைக்குவருகிறார். இப்படித் தன்னுடைய சான்றுகளைக் கோப்பில் கொடுத்திருக்கும் நபர் குருத்துவ உறுப்பினராக இருப்பார். விதி எண் 539.10இன் படி மறுபடியும் சான்றிதழ் கொடுக்கப்பட்டு குருத்துவ உறுப்பினராக இருந்து பெரும் உரிமைகளையும், சலுகைகளையும், கடமைகளையும் பெறுவார்.

**ஒப்படைக்கப்பட்ட அனுமதிச் சான்று** – தவறான நடத்தை, குற்றச்சாட்டுகள், ஒப்புக்கொள்ளுதல், ஒழுங்கு நடவடிக்கைக் குழு மேற்கொண்ட செயலின் விளைவு என்பவைப்போன்ற காரணங்களினால் ஒரு போதகருடைய சான்றிதழ்கள்

ஒப்படைக்கப்பட்டிருக்கும். இதைத் தவிர்த்து பொறுப்பில் இல்லாமல் இருப்பது இந்தப் பிரிவில் கணக்கிடப்படமாட்டாது. அத்தகைய நபர் குருத்துவ குழுவின் உறுப்பினராக இருந்து பெற்ற உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகள் அவரிடமிருந்து நீக்கப்படும். ஒப்படைக்கப்பட்ட சான்றிதழ்களைக் கொண்ட நபர் ஒழுக்க நடவடிக்கையின் கீழ் இருக்கும் குருத்துவ குழுவின் உறுப்பினராகக் கருதப்படுவார். நன்மதிப்பையும், சான்றிதழையும் திரும்ப பெறும் நேரத்தில் குருத்துவ உறுப்பினராக இருப்பதினால் பெறப்படும் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகள் திரும்பவும் கொடுக்கப்படும்.

**இராஜினாமா செய்தவரின் சான்றிதழ்கள்** – திருச்சபையின் சாமானிய உறுப்பினராக இருக்கும்படியாகக் குருத்துவ உறுப்பினராகத் தான் இருக்கும்போது பெற்றிருந்த உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளை வேண்டாம் என்று கொடுக்கும் நபரின் சான்றிதழ்களின் நிலை. நன்மதிப்பைப் பெறாத குருத்துவ உறுப்பினர் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று தன்னுடைய சான்றிதழ்களை ராஜினாமா செய்யலாம். (539.1, 539.5)

திரும்பப் பெற்ற சான்றிதழ் – ஊழியத்திலிருந்தும், நசரேயத் திருச்சபை உறுப்பினர் பதவிலிருந்தும் நீக்கப்பட்ட குருத்துவ உறுப்பினரின் சான்றிதழ்களின் நிலை. சான்றிதழ்கள் திரும்பப் பெற்ற போதகரின் பெயர் போதகர் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

சான்றிதழ்களைத் திரும்பப் பெறுதல் – சான்றிதழ்கள் கோப்பிலிடப்பட்டோ, இடைக்காலத் தடைசெய்யப்பட்டோ, இராஜினாமா செய்யப்பட்டோ அல்லது திரும்பப் பெறப்பெற்றோ இருக்கும் நிலையில் அந்தக் குருத்துவ உறுப்பினரின் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்பி வழங்கும் நிலை.

மீட்டுக் கொண்டுவருதல். தாமாகவோ அல்லது வேறு விதமாகவோ குருத்துவ உறுப்பினராகத் தான் பெற்ற உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளை விட்டுவிட்டவரின் அல்லது அவருடைய துணை மற்றும் குடும்பத்தின் ஆரோக்கியம் மற்றும் முழுமையைத் திரும்பப் பெறுதல். அந்தப் போதகருக்கு அவருடைய சான்றிதழைத் திரும்பக் கொடுப்பது சரிதானா என்று ஆராய்வதுதைத் தனியாகச் செய்யப்பட வேண்டும். இது திரும்பக் கொண்டுவருவதின் முயற்சியாக மட்டும் இருக்கிறது.

**மறுபடியும் கொடுத்தல்** – சான்றிதழ் கோப்பிலிடப்பட்டோ, இடைக்கால தடைவிதிக்கப்பட்டோ, ஒப்படைக்கப்பட்டோ, இராஜிமானா செய்யப்பட்டோ அல்லது திரும்பப்பெறப்பட்டோ இருக்கும் குருத்துவ உறுப்பினரை நன்மதிப்பு மற்றும் தேவையான அங்கிகாரங்களைப் பெற்று அவரின் மறுபடியுமாக அவர் பெற்றிருந்த உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்ப பெற செய்தல்.

**குற்றம் சாட்டுதல்** – நசரேயத் திருச்சபையின் உறுப்பினரைக் குற்றம்சாட்டி நசரேயத் திருச்சபையின் இரண்டு உறுப்பினர்களாவது கையொப்பமிட்ட எழுத்துப்பூர்வமான ஆவணம். குற்றம்சாட்டப்பட்டவரின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், சட்டநூலின் விதிகளின்படி அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறிவு** – தன்னுடைய சொந்த புலன்களைப் பயன்படுத்தி உண்மைகளை அறிந்துகொள்ளுதல்.

**தகவல்** – மற்றவர்களிடமிருந்து தெரிந்துகொண்ட உண்மைகள்

**நம்பிக்கை** – அறிவு மற்றும் தகவல்களின் அடிப்படையில் நல்ல விசுவாசத்தோடு எடுக்கப்பட்ட முடிவு.

**விசாரணைக் குழு** – சட்டநூல்களின் விதியின் படி குற்றம்சாட்டப்பட்ட நடத்தைக் கேடுகளைக் குறித்த தகவல்களைச் சேகரிக்கும் கூட்டம்.

**குற்றச்சாட்டுகள்** – நசரேயத் திருச்சபையின் உறுப்பினரின் நடத்தையைக் குறித்து மிகவும் கவனமாக விவரிக்கும் ஒரு எழுதப்பட்ட ஆவணமாகும். இதை நிரூபித்தால் சட்டநூலின் விதிகளின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**538.1.** குருத்துவ உறுப்பினர் தாங்கள் தகுதிபெற்ற மறைமாவட்டத்தின் மறை மாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்து மூலமான ஒப்புதலைப் பெறாமலோ அல்லது பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவின் எழுத்துமூலமான ஒப்புதலைப் பெறாமலோ, நசரேயத் திருச்சபையின் மேற்பார்வையின்கீழ் வராத தனிப்பட்ட சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்தாலோ அல்லது மற்றொரு சமயப் பிரிவைச் சேர்ந்த தனிப்பட்ட சபையில் செயல்படும் அலுவலர்களோடு தொடர்பு கொண்டிருந்தாலோ ஒரு போதகருக்கான ஒழுங்கு நடவடிக்கைச் சட்டத்தின்கீழ் விசாரணைக்கு ஆளாகிறார்கள். **(538.13, 606.1)**

**538.2.** குருத்துவ உறுப்பினர் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒருங்கிணைந்த ஆலோசனைக்கு எப்போதுமே உரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். **(519)**

**538.3.** மறைமாவட்ட மாநாட்டின் ஒப்புதலின்பேரில் ஒழுங்கான, முழுநேர செயல் பணியில் ஒரு போதகர் பொறுப்பைப் பெற்ற போதகராகவோ அல்லது நற்செய்தியாளராகவோ அல்லது அங்கீகரிக்கப் பெற்ற பிற பொறுப்புகளிலோ பணிபுரிந்திருந்தாலொழிய பிற குருத்துவ பணியில் இருக்கும் நபரோ அல்லது அவர்களுடைய குடும்பத்தினரோ செயலிழந்த அல்லது வயது முதிர்ந்த போதகர்களுக்கு உதவியாகவோ அல்லது ஆதரவாகவோ திருச்சபை கொண்டுள்ள அல்லது இனி கொண்டு வரவிருக்கும் திட்டங்களிலோ அல்லது நிதியிலோ தமக்கும் பங்குண்டு என்று உரிமை எழுப்ப முடியாது. அதில் பங்கேற்பதிலிருந்து இந்தச் சட்டம் இவர்களை விலக்கி வைக்கிறது.

**538.4.** பொறுப்புகளைப் பெற்ற போதகராகவோ அல்லது நசரேயத் திருச்சபையின் துணைப் போதகராகவோ இருக்கும் உரிமம் பெற்ற போதகர் மறைமாவட்ட மாநாட்டின் வாக்களிக்கும் உறுப்பினராக இருப்பார். **(201)**

**538.5.** அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கனார் தகுதிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரு பிரதிநிதி, தலைமை வகிக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் மேற்பார்வையில், பொதுக் கண்காணிப்பாளர் மற்றும்

அபிஷேகம் பெற்றுள்ள போதகர்கள் இவர்களின் கரங்கள் தம்மீது வைக்கப்பெற்று, பொருத்தமான வழிபாட்டு முறைமைகளுடன், அபிஷேகம் செய்யப்படலாம். (307.4)

**538.6.** இவ்வாறு அபிஷேகம் செய்யப்பட்ட நபருக்கு, அதிகாரம் பெற்றப் பொதுக் கண்காணிப்பாளர், தம்முடைய மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்டச் செயலாளர் இவர்களின் கையொப்பமிட்ட அபிஷேக நற்சான்றிதழை வழங்குவார். (535.1)

**538.7.** ஒருவேளை ஒரு அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கனாரின் அபிஷேகம் பெற்றதற்கான சான்றிதழ் தவறிப்போய்விட்டாலோ, கிழந்துபோய்விட்டாலோ அல்லது அழிந்துபோய்விட்டாலோ மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்பேரில் அவருக்கு நகல் சான்றிதழ் வழங்கப்படலாம். இத்தகைய பரிந்துரை நேரடியாக அதிகாரம் பெற்றப் பொதுக் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டும். அவரது ஒப்புதலின்பேரில் பொதுச் செயலாளர் நகல் சான்றிதழை அளிப்பார். அந்தச் சான்றிதழின் பின்புறத்தில் அசல் நற்சான்றிதழின் எண்ணும், பிரதி என்றவார்த்தையும் எழுதப்பட்டிருக்க வேண்டும். அசல் நற்சான்றிதழில் கையொப்பமிட்ட பொதுக் கண்காணிப்பாளரோ, மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ அல்லது மறைமாவட்ட செயலாளரோ தற்போது இல்லையென்றால், அதிகாரம் பெற்றப் பொதுக் கண்காணிப்பாளர், நகல் சான்றிதழை வேண்டும் என்று கேட்ட மறைமாவட்டத்தின் கண்காணிப்பாளர், மறைமாவட்டச் செயலாளர் இவர்கள் இந்தச் சான்றிதழில் கையொப்பமிடுவார்கள். சான்றிதழின் பின்புறத்தில் கீழ்கண்ட அறிக்கை எழுதப்பட்டிருக்க வேண்டும். அல்லது எழுதவும் அச்சிடவும் பட்டிருக்க வேண்டும். அதிகாரம்பெற்றப் பொதுக் கண்காணிப்பாளர், மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்டச் செயலாளர் இவர்கள் கையொப்பமிட வேண்டும்.

பெயர் அவர்களுக்கு ______________ ஆம் ஆண்டு ___________மாதம்________ ஆம் நாளன்று, .....(அபிஷேகம் கொடுக்கும் அமைப்பு)........ அமைப்பினால் கொடுக்கப்பட்ட அசல் அபிஷேகச் சான்றிதழுக்குப் பதிலாக இந்தச் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. இந்த நாளன்று அவர் அபிஷேகம் பண்ணப்பட்டார். அவரது அசல் நற்சான்றிதழ் .....(பொதுக் கண்காணிப்பாளர்)...., .....(மறைமாவட்டக் கண்காணிப்பாளர்).... மற்றும் ......மறைமாவட்ட செயலாளர்........

முந்தைய சான்றிதழ் (தவறிப்போய்விட்டது, கிழிந்துபோய்விட்டது, அழிந்துபோய்விட்டது)

_________________________, பொதுக் கண்காணிப்பாளர்
____________________________, மறைமாவட்டக் கண்காணிப்பாளர்
____________________________, மறைமாவட்டச் செயலாளர்

**538.8.** எல்லாக் குருத்துவ உறுப்பினர்களும் (பொறுப்பில் இருப்பவர்கள் மற்றும் பொறுப்பில் இல்லாதவர்கள்) ஏதேனும் ஒரு உள்ளூர் நசரேயச் சபையில் உறுப்பினர்களாக இருப்பார்கள். அவர்கள் அங்கு வருகையில் உண்மையுள்ளவர்களாகவும், தசமபாகத்தைச் சரியாகக் கொடுப்பவர்களாகவும், சபையின் ஊழியங்களில் கலந்துகொள்வதில் உண்மையுள்ளவர்களாகவும்

இருப்பார்கள். இந்தத் தேவைகளுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தால், அது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் உத்தரவின் பேரில் இருக்கும். தன்னுடைய உரிமம் இருக்கும் மறைமாவட்டத்தில் இருக்கும் உள்ளூர் நசரேயத் திருச்சபையின் உறுப்பினராக இல்லாத குருத்துவ உறுப்பினர், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிலிருந்து எந்த அனுமதியும் பெறாமல் இருந்தால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். (522, 538.10)

**538.9.** எல்லா அபிஷேகம் பெற்ற போதகர்களும், டீக்கன்மார்களும் தாங்கள் உறுப்பினர் தகுதி பெற்றுள்ள மறைமாவட்டத்தின் மறைமாவட்டச் சபையில் குருத்துவ உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்த மறைமாவட்டச் சபைக்கு ஆண்டுதோறும் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள். எந்தவொரு அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது டீக்கனாரோ தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக, நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ மறைமாவட்டச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்காவிட்டால், மறைமாவட்டச் சபையின் தீர்மானத்தின்படி அவரது உறுப்பினர் தகுதி முடிவுபெறலாம். (201, 205.3, 521, 536.1)

**538.10.** எந்த ஒரு குருத்துவ உறுப்பினரும், குருத்துவ உறுப்பினர் அனுமதியைக் கொண்டிருக்கும் மறைமாவட்ட மாநாட்டில் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அனுமதியில்லாமல், நசரேயத் திருச்சபையின் மேற்பார்வையின்கீழ் இல்லாத தனிப்பட்ட சபை அல்லது தனிப்பட்ட மிஷன் பணிகளையோ சேர்க்கக்கூடாது. அப்படிச் சேர்த்தால் அவருடைய உறுப்பினர் அனுமதி உடனடியாக ரத்து செய்யப்படும். மறைமாவட்ட மாநாடு பின்வரும் வாக்கியத்தைப் பொழிப்புகளில் சேர்த்துக்கொள்ளும், "மற்றொரு சபைப் பிரிவோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டதால், நசரேயத் திருச்சபையின் ஊழியத்திலிருந்தும் உறுப்பினர் தகுதியிலிருந்தும் நீக்கப்படுகிறார்." (107, 112)

**538.11.** நன்மதிப்பைப் பெற்றிராத நிலையில் உள்ளூர் சபை உறுப்பினராக இருந்து விலகிய அல்லது நீக்கப்பட்ட எந்த ஒரு முன்னாள் குருத்துவ உறுப்பினரும் தான் விலகிய மறைமாவட்டத்தைச் சேர்ந்த மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று மறுபடியுமாகச் சேர்ந்துகொள்ளலாம். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது அந்த முன்னாள் போதகர் அந்தத் திருச்சபையில் ஒரு சாமானியராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையையோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற்று மறுபடியுமாகக் குருத்துவ உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளலாம். அவர் ஒழுங்கு நடவடிக்கையின் கீழ் இருக்கும் போதகராக இருப்பார். முன்னேறும் செயல்முறையில் அவர் மெய்யாகவே மனமுவந்து பணிகளைச் செய்கிறார் என்பதையும் தொடர்ந்து செய்கிறார் என்பதையும் காண்பிக்க வேண்டும். (539.6)

**538.12.** மறைமாவட்ட மாநாட்டின் போதகர்களின் பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்ட ஒரு அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கன்மார் தன்னுடைய சான்றிதழ்களைக் கோப்புகளில் கொடுக்காவிட்டால், அவருடைய பெயர் நீக்கப்பட்ட மறைமாவட்ட

மாநாட்டிலிருந்து எழுத்துப் பூர்வமான ஒப்புதலைப் பெறாவிட்டால் எந்த ஒரு மறைமாவட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார். வேறு காரணங்கள் சொன்னால் அன்றி இதில் மாற்றமிருக்காது. மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது மாநாடுகளுக்கு இடையே மாற்றத்திற்கான வேண்டுதல் வரும்போது அதன்படி செயல்படும். (538.11)

**538.13.** குருத்துவ உறுப்பினர் யாராக இருந்தாலும், பின்வரும் காரியங்களைச் செய்வதற்கு மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலை ஆண்டுதோறும் பெற வேண்டும்:

- நசரேயத் திருச்சபையின் வழிநடத்துதல் இல்லாத தனிப்பட்ட சபைக் காரியங்களை நடத்துதல் அல்லது
- தனிப்பட்ட மிஷன் பணிகளையோ அல்லது அதிகாரம் பெறாத சபைப் பணிகளையோ அல்லது
- தனிப்பட்ட சபை அல்லது பிற சமயக் குழுக்கள் அல்லது சபைப்பிரிவுகளின் செயல் அலுவலர்களோடு தொடர்பு கொள்ளுதல்

இந்தத் தேவைகளைச் சந்திக்கத் தவறிய குருத்துவ உறுப்பினர் குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் அனைத்து உறுப்பனர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளின்மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, மறைமாவட்ட மாநாட்டின் நடவடிக்கையின்மூலம் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர் தகுதியிலிருந்தும், ஊழியத்திலிருந்தும் நீக்கப்படலாம். ஏதேனும் குறிப்பிட்ட செயல் ''தனிப்பட்ட மிஷன்'' அல்லது ''அதிகாரம் பெறாத சபைப் பணி'' என்று தீர்மானிப்பதில் இறுதிமுடிவு பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவைச் சேர்ந்தது. (112–112.1, 532.9)

**538.14.** தனிப்பட்ட திருச்சபை செயல்களில் ஈடுபடுவதற்கு ஒரு குருத்துவ உறுப்பினருக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பாக மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது, இப்படிப்பட்ட கலந்துகொள்ளுதல் ஒன்றிற்கும் மேற்பட்ட மறைமாவட்ட உள்ளடக்கியிருந்தாலோ அல்லது அந்தப் போதகர் உறுப்பினராக இல்லாத மறைமாவட்டத்தில் நடத்தினாலோ பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவின் எழுத்துப்பூர்வமான அங்கீகாரத்தைப் பெற வேண்டும். பொதுக் கண்காணிப்பாளரின் நிர்வாகக் குழுவானது இதற்குரிய மறைமாவட்ட ஆலோசனைக் குழுக்களிடம் இதற்கான பதில் இன்னும் கொடுக்கப்படவில்லை என்று கூறிவிடும்.

**538.15.** பிராந்திய பொறுப்பிலிருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அதிகாரத்தைப் பெற்று ஒரு பொறுப்பைப் பெற்ற போதகர் ஒரு உள்ளூர் சபையைத் துவங்கலாம். அதிகாரப்பூர்வமான அமைப்பு அறிக்கைகள் பொதுச் செயலாளரின் அலுவலகத்தில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் பதிவு செய்யப்பட வேண்டும். (100, 211.1)

**538.16.** செயல்பூர்வமாக ஊழியம் செய்துவரும், அத்தியாயம் 505–528இல் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல தன்னுடைய குருத்துவ பணிகள் ஒன்றில் தன்னுடைய அழைப்புக்கேற்றப்படியான ஊழியத்தில் பணிபுரிந்துவரும் பொறுப்பைப்

பெற்ற போதகரோ அல்லது போதகரோ தங்கள் பதவியின் காரணமாக மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினர் தகுதிகளைப் பெறுகிறார்கள்.

**538.17.** ஆலோசனைக் கேட்கும்போதோ அல்லது ஆவிக்குரிய வழிகாட்டுதலைக் கொடுக்கும்போதோ கூறப்படும் இரகசியங்களைப் போதகர் மிகவும் நம்பிக்கையுடனும் உண்மையுடனும் வைத்துக்கொள்ள வேண்டும். கூறிய நபருடைய அனுமதியில்லாமல் அதை யாரிடமும் சொல்லக் கூடாது. சட்டப்பூர்வமாகக் கேட்கப்படும்போது சொல்ல வேண்டும்.

எங்கே கூறமுடியுமோ, எவ்வளவு சீக்கிரம் கூறமுடியுமோ, போதகர் பின்வரும் காரியங்களில் நம்பிக்கையை உடைத்து, வெளிப்படுத்த வேண்டும்:

1. பாதிப்பு ஏற்படும் ஆபத்து தனக்கோ அல்லது மற்றவருக்கோ இருக்கும்போது,
2. வயதில் குறைந்தவருக்கோ, நடக்கமுடியாத நபருக்கோ, வயதானவருக்கோ அல்லது பாதிப்பிற்கு உள்ளாகும் எந்த வகையான நபர் என்று சட்டத்தால் கூறப்படுகிறவருக்கோ துன்புறுத்தல் நடைபெறுகிறது என்ற சந்தேகம் எழுந்தால். இந்த அறிக்கை எவ்வளவு மோசமானது என்றோ அல்லது இதன் பின்னணி என்னவென்றோ பார்க்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. வெறுமனே அதற்குரிய அதிகாரிகளிடம் தன்னுடைய சந்தேகத்தைக் கூறினால் போதும். வயதில் குறைந்தவர் அல்லது மைனர் என்பவர் 18 வயதிற்கும் கீழ் இருப்பவர். சில நாடுகளில் இந்த வயது கொஞ்சம் கூடுதலாகவும் இருக்கலாம்.
3. நீதிமன்றத்தின் உத்தரவின்படி ஆதாரம் அளிப்பதற்காகப் பேச வேண்டிய நிலையில். ஆலோசனை நேரங்களில் பேசியதைக் குறித்தும், கூறப்பட்ட வெளிப்பாடுகள் குறித்தும், ஒப்புதல் பெறப்பட்டதைக் குறித்தும் போதகர் பதிவுகளைச் சரியாக வைத்திருக்க வேண்டும்.

இப்படிப் பணிநிமித்தமாகப் பெறப்படும் அறிவைப் போதிப்பதிலோ, எழுதுவதிலோ, பிரசங்கத்திலோ அல்லது பிற பொது எடுத்துரைப்புகளிலோ பயன்படுத்தலாம். ஆனால் பேசியவரின் அடையாளமும், நம்பிக்கையும் எந்த வகையிலும் பாதித்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சிறுபிள்ளைக்கு ஆலோசனை வழங்கும்போது, அந்தப் பிள்ளைக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படவிருக்கிறது என்பதைப் போதகர் அறிந்தால், நம்பிக்கையோடு பெற்றோரிடமோ அல்லது பாதுகாவலரிடமோ சொல்லும் அவசியம் இருந்தால், அந்தச் சிறுபிள்ளையின் ஆரோக்கியம் மற்றும் நலனைக் காக்கும் விதத்தில் தேவைப்படும் தகவல்களை வெளியிடத்தான் வேண்டும்.

**538.18.** எல்லா அபிஷேகமும்பெற்ற போதகர்களும், டீக்கன்களும் ஒவ்வொரு வருடமும் 20 மணிநேரம் வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொள்ளும் பாடத்திட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று மறைமாவட்ட குருத்துவ பாடக்குழு எதிர்ப்பார்க்கிறது. **(529.6)**

**538.19.** கவனமாக ஆலோசனை வழங்கப்பட்டு, திருமணத்திற்கான வேதாகமரீதியான அடிப்படையைக் கொண்டவர்களை மட்டுமே ஒரு போதகர் திருமணம் செய்துவைக்க வேண்டும்.

ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என்ற உறவில் மட்டுமே வேதாகமரீதியான திருமணம் காணப்படுகிறது. (31, 515.9)

**538.20.** ஒவ்வொரு மறைமாவட்டமும் சட்டநூலில் காணப்படும் வழிகாட்டுதல்களோடு ஒத்துப்போகும் விதத்தில் தக்க நேரத்தில், மனதுருக்கத்தோடு, போதகருக்கல்லாத விதத்தில் நடந்துகொள்ளும் குருத்துவ உறுப்பினர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும், இதில் சம்பந்தப்பட்டிருக்கும் சபையாரைக் கையாளும் விதத்தில் ஒரு எழுத்துப்பூர்வமான திட்டத்தை உருவாக்கி அதை வருடாவருடம் மறுஆய்வு செய்ய வேண்டும். இதில் ஒரு போதகரின் நிலையில், அதாவது உரிமை, சலுகைகள் மற்றும் கடமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமாக இருந்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவைப் பதிவுசெய்யப்பட வேண்டும். இந்தப் பதிவில் கேள்விக்குரியாக இருக்கும் குருத்துவ உறுப்பினரின் நிலையோடு தொடர்புடைய எல்லா பேச்சுவார்த்தைகளும், கடிதங்களும், அதிகாரப்பூர்வமான செயல்களும், மீட்புக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நபர்களின் பெயர்கள் மற்றும் வரவிருக்கும் தேதி ஆகியவையும் விதி எண் 540.1இன் படி கொடுக்கப்பட வேண்டும். (225.5).

## I. குருத்துவ சான்றிதழ் குற்றம்சாட்டப்படுதல், தடைசெய்யப்படுதல், இராஜினாமா செய்தல் அல்லது திரும்பப் பெறப்படுதல்

**539.** நன்மதிப்பைப் பெற்றிருக்கும் குருத்துவ உறுப்பினர், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு ஊழியத்தில் எந்தச் செயலையும் செய்யாமல் இருக்கும்போது அவருடைய சான்றிதழ்களைக் கோப்பில் வைக்கவேண்டும் என்று நினைக்கும்போது அதைப் பெற்று அதைப் பத்திரமாக வைத்துக்கொள்ளும் அதிகாரத்தைப் பொதுச் செயலாளர் பெற்றிருக்கிறார். இந்தச் சான்றிதழைக் கோப்பில் வைக்கும்போது இந்தச் சான்றிதழ் ஒழுக்கநடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காகக் கோப்பில் வைக்கப்படவில்லை என்று அந்தப் போதகரின் மறைமாவட்ட மாநாட்டைச் சேர்ந்த மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது உத்திரவாதம் அளிக்கும். குருத்துவ உறுப்பினராக இருக்கும் அவர் இந்தச் சான்றிதழ்கள் கோப்பில் இருப்பதால் ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து தப்பிக்க முடியாது. பொதுச் செயலாளரிடம் தங்களுடைய சான்றிதழ்களைக் கோப்பில் வைக்கும் குருத்துவ உறுப்பினர்கள் அதை மறுபடியும் பெற்றுக்கொள்ளலாம். (539.10)

**539.1.** நன்மதிப்பைப் பெற்றிருக்கும் குருத்துவ உறுப்பினர் ஓய்வுபெறும் நிலை அளிக்கப்படாமல், நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட தொடர்ச்சியான வருடங்கள் எந்தப் பொறுப்பும் இல்லாமல் இருக்கும்போது அவர் குருத்துவத்தின் பங்களிக்கும் உறுப்பினராகக் கருதப்படமாட்டார். அவர் தன்னுடைய சான்றிதழ்களைக் கோப்பில் வைக்கக் கொண்டுவர வேண்டும். மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழு ஆகியன இதைக் குறித்து மறைமாவட்ட மாநாட்டிடம் கூறுவார்கள். கேள்வியில் இருக்கும் அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது

டீக்கனாரின் "சான்றிதழ்கள் மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழு அகியவற்றால் கோப்பில் இடப்பட்டிருக்கின்றன" என்று மறைமாவட்ட மாநாட்டிடம் அறிவிக்கப்படும். இந்தச் செயலானது வெறுப்பினால் செய்யப்படுவது கிடையாது. தங்களுடைய சான்றிதழ்களைக் கோப்பில் வைக்கும் குருத்துவ உறுப்பினர்கள் அதை மறுபடியும் பெற்றுக்கொள்ளலாம். (539.10)

**539.2.** நன்மதிப்பைப் பெற்ற அபிஷேகம் பெற்ற போதகர் பொறுப்பு கொடுக்கப்பட்ட ஊழியத்திலிருந்து விலகி நசரேயத் திருச்சபையின் குருத்துவ உறுப்பினரல்லாத வேறு ஒரு அழைப்பையோ அல்லது பணியையோ செய்யச் சென்றால், அவர் ஒரு குருத்துவ உறுப்பினராகத் தன்னுடைய உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளை இராஜினாமா செய்கிறார். அவர் இருக்கும் மறைமாவட்ட மாநாடானது அந்தச் சான்றிதழைப் பெற்றுப் பொதுக் கண்காணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் வைத்துவிடும். மறைமாவட்டத்தின் பொழிப்புகளில், "போதகர்களின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது, அவருடைய சான்றிதழை இராஜினாமா செய்ததால்" என்று எழுதப்பட்டிருக்கும். இப்படி இராஜினாமா செய்யும் குருத்துவ உறுப்பினரின் சான்றிதழ் திருப்பிக் கொடுக்கப்படும். (539.11)

**539.3.** ஓய்வுபெறாத அபிஷேகம் பெற்ற போதகர் செயல்பாடுகளிலிருந்து விலகி, குருத்துவ உறுப்பினர் பதவியில் செயல்படாமல், பொது வேலையில் முழுமையாகச் செயல்படும்போது, இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவர் மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழு அகியோரினால் தங்களுடைய குருத்துவ பதவியை இராஜினாமா செய்யும்படி அழைக்கப்படுவார்கள். அவர்கள் அவர்களுடைய சான்றிதழைப் பொதுச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த இரண்டு வருட காலம் என்பது குருத்துவ உறுப்பினராக வருவதை நிறுத்தத் துவங்கி மறைமாவட்ட மாநாட்டின் ஒத்திவைப்பிலிருந்து கணக்கிடப்படும் மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழுவானது தான் செய்த செயல்களை மறைமாவட்ட மாநாட்டிடம் அறிவிப்பார்கள். இந்தச் செயலானது வெறுப்பிற்கு எதிரானதாக இருக்கிறது.

**539.4.** குருத்துவ உறுப்பினர் மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழு ஆகியவற்றிற்குத் தன்னுடைய புதிய விலாசத்தை ஒருவருடத்திற்குள் கொடுக்காமல் மாற்றியிருந்தால் அவருடைய உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகள் இடைக்கால நீக்கம் பெற்று, அவருடைய பெயர் போதகரின் பட்டியலிலிருந்து நீக்கப்படும். அல்லது அவர் விதிகள் 532.8 மற்றும் 532.9இல் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பிக்காவிட்டாலும் இது நிகழும். இப்படி இடைக்கால தடைச் செய்வது மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழுவின் பொறுப்பாகும்.

**539.5.** தன்னுடைய உள்ளூர் சபையிலிருந்து பாராட்டு சான்றிதழ் பெறும் குருத்துவ உறுப்பினர் அடுத்த மறைமாவட்ட மாநாட்டிற்கு முன்பாக அடுத்த நசரேயத் திருச்சபையில் சேராவிட்டால் அல்லது எழுத்துப்பூர்வமாகத் தான் நசரேயத் திருச்சபையிலிருந்து விலகிவிட்டதாகத் தெரிவித்தால் அல்லது மற்றொரு சபைப்

பிரிவில் உறுப்பினராகவோ அல்லது போதகராகவோ சேர்ந்துவிட்டால், அவர் நசரேயத் திருச்சபையிலிருந்து நீக்கப்படலாம். இது மறைமாவட்ட மாநாட்டினால் செய்யப்படும். இது மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழுவின் பரிந்துரையை ஏற்றுச் செய்வதாகும். அவருடைய பெயர் போதகர்களின் பட்டியலிலிருந்தும், சபையின் உறுப்பினர் பட்டியலிலிருந்தும் நீக்கப்படும். (111.1, 815)

**539.6.** நன்மதிப்பைப் பெறாத குருத்துவ உறுப்பினர் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலின் பெயரிலேயே தன்னுடைய சான்றிதழை இராஜினாமா செய்ய முடியும். (540).

**539.7.** விதிகள் 539.5 மற்றும் 540.10இல் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவும் அல்லது விதிகள் 606–609இன் ஒழுங்கு நடவடிக்கையின் மூலமாக ஒரு குருத்துவ உறுப்பினர் நசரேயத் திருச்சபையிலிருந்து நீக்கப்பட முடியும.

**539.8.** ஒரு அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கன்மார் நீக்கப்படும்போது, அந்தக் குருத்துவ உறுப்பினரின் சான்றிதழ் குறிக்கப்பட்டு, நீக்கப்படும்போது அந்த அபிஷேகம் பெற்ற போதகரோ அல்லது டீக்கனாரோ இருந்த மறைமாவட்டத்தின் மறைமாவட்ட மாநாட்டின் உத்தரவின் பேரில் பொதுச் செயலாளரால் குறிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். (326.5)

**539.9.** போதகர்கள், உள்ளூர் சபை நிர்வாகக் குழு மற்றும் சபையில் பொறுப்புகளைப் பெறும் வேறு சிலர் நன்மதிப்பைப் பெறாத குருத்துவ உறுப்பினரை எந்த ஒரு ஊழியச் சம்பந்தமான பதவியிலோ அல்லது நம்பிக்கைக்குரிய பதவியிலோ வைக்கக்கூடாது. (வேதாகம ஆய்வை வழிநடத்துதல், ஓய்வுநாள் பள்ளி வகுப்பு அல்லது ஆராதனையை வழிநடத்துதல்). இது நன்மதிப்பைப் பெறும்வரையில் செய்யப்படக்கூடாது. இதில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமானால் அதற்கு அந்தப் போதகர் உறுப்பினராக இருக்கும் மறைமாவட்டத்தின் கண்காணிப்பாளருக்கும், அவர் அவருடைய உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளை விட்டுக்கொடுக்கும்போது அதே மறைமாவட்டத்தைச் சேர்ந்த பொதுக் கண்காணிப்பாளராலும் எழுத்துமுறையில் அங்கீகரிக்கப்பட வேண்டும். (540.4)

**539.10. கோப்புகளில் இருக்கும் நற்சான்றிதழைத் திரும்பப் பெறுதல்:** ஒரு அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கனார் நன்மதிப்போடு தன்னுடைய சான்றிதழைக் கோப்புகளில் வைத்திருந்தால், அவர் திரும்பக் கேட்கும் நேரத்தில் அந்த அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கனார் நன்மதிப்பைப் பெற்றிருந்தால், மறைமாவட்ட மாநாட்டின் உத்தரவின்பேரில் கோப்பில் வைக்கப்பட்டிருந்த அவருடைய நற்சான்றிதழ் திரும்பக் கொடுக்கப்படும். அதற்கு மறைமாவட்டக் கண்கணிப்பாளரும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவும் பரிந்துரை செய்யவேண்டும். மறைமாவட்ட மாநாடுகளுக்கு இடையே மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது வாக்கெடுப்பை நடத்திக் கோப்பில் இருக்கும் ஒரு போதகரின் நற்சான்றிதழை வெளியே எடுக்கலாம்.

**539.11. இராஜினாமா செய்த அல்லது திரும்பப் பெற்ற சான்றிதழ்களைத் திரும்பப் பெறுதல்:** ஒரு அபிஷேகம் பெற்ற போதகர் அல்லது டீக்கனார், நல்ல நன்மதிப்பில் இருக்கும்போது தன்னுடைய ஊழியத்தின் கட்டளையிலிருந்து

இராஜினாமா செய்தால் அல்லது அவர் மற்றொரு சபை அல்லது சபைப் பிரிவில் சேர்ந்ததால் திரும்பப் பெறப்பெற்றிருந்தால் அவர் அபிஷேகம் சார்ந்த கேள்விப் படிவத்தை நிரப்பி, ஊழித்தின் வாக்குகளை மறுபடியும் உறுதிப்படுத்தி, மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழுவினால் நன்றாக ஆராயப்பட்டு சாதகமாக பரிந்துரைச் செய்யப்பட வேண்டும். இதற்கு முதலில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற வேண்டும் (539.2)

**539.12.** மரிக்கும்போது நன்மதிப்பைப் பெற்று மரித்தப் போதகரின் நற்சான்றிதழ் கோப்புகளில் இருக்கும்போது, பொதுச் செயலாளருக்கு எழுத்து வடிவில் குடும்பத்தினர் ஒரு கடிதத்தைக் கொடுக்கும்போது, அது அந்தக் கோப்பு இருக்கும் மறைமாவட்டத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளரின் அனுமதியின் பேரில் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

**539.13. பிரிவு/விவாகரத்து.** விவாகரத்து சமர்ப்பிக்கப்பட்டு 48 மணி நேரத்தில் அல்லது சட்டரீதியான முடிவு/ பிரிவு ஏற்பட்ட போதகர் அல்லது சரீரப்பிரகாரமாகப் பிரிந்த போதகரும் அவருடைய துணையும் இனிமேல் சேர்ந்து இருக்கப்போவதில்லை என்ற முடிவை எடுத்து 48 மணி நேரத்திற்குள், அ) மறைமாவட்டக் கண்காணிப்பாளரைத் தொடர்புகொள்ள வேண்டும். செய்யப்பட்டிருக்கும் செயலைக் குறித்து அவரிடம் தெரிவிக்க வேண்டும். ஆ) எல்லோரும் ஒப்புக்கொள்ளும் நேரம் மற்றும் இடத்தில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரையும், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒரு உறுப்பினரையும் சந்திக்க ஒப்புக்கொள்ளுதல் அல்லது எல்லோருக்கும் ஒத்துப்போகும் நேரம் இல்லாத பட்சத்தில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் குறிப்பிடும் நேரத்தில் சந்தித்தல். இ) இரண்டாம் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் கூட்டத்தில் செய்யப்பட்டிருக்கும் செயலுக்கான சூழ்நிலையை எடுத்துரையுங்கள். திருமண பந்தத்தில் ஏற்பட்ட பிரச்சினையை எடுத்துக்கூறுங்கள், நன்மதிப்பைப் பெற்ற போதகராக இருக்கும் அந்த நபர் தொடர்ந்து குருத்துவ உறுப்பினராகச் செயல்படுவதற்கான வேதாகமரீதியான ஆதாரத்தோடு ஏன் என்று கூறுங்கள். மேலே கொடுக்கப்பட்டிருக்கும் பிரிவுகளுக்குள் குருத்துவ உறுப்பினர் வராவிட்டால், அவர் அப்படிச் செய்யாமல் இருந்தது ஒழுங்கு நடவடிக்கையை எடுக்க வழிவகுக்கும். செயலில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இத்தகைய விதிகளுக்கு உட்பட்டவர்கள். அவர்கள் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் கூட்ட ஆலோசனைக்கு உரிய மதிப்பு வழங்க வேண்டும். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஓட்டு இல்லாமல் எந்த ஒரு செயலில் இருக்கும், பொறுப்பை வகிக்கும் உறுப்பினரும் அந்தக் குருத்துவ பதவியில் தொடர முடியாது.

## J. குருத்துவ உறுப்பினர்கள் தகுதி மற்றும் நன்மதிப்பைத் திரும்பக் கொண்டுவருதல்

**540.** தேவனுடைய மீட்கும் மற்றும் புதியதாக்கும் கிருபையின் நம்பிக்கை மற்றும் சுகத்தைத் தன்னுடைய சொந்தப் போதகர்களிடமும் காண்பிப்பதற்குக் கடமைப்பட்டிருப்பதை நசரேயத் திருச்சபை ஒப்புக்கொள்கிறது. இந்தப் போதகர்கள் தங்களுடைய சான்றிதழ்களை தன்னிச்சையாகவோ அல்லது வேறு விதமாகவோ ஒப்படைத்ததின் மூலமாக ஒரு குருத்துவ உறுப்பினரின் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போதகருக்கு ஒப்பில்லாத நடத்தையில் ஈடுபட்டதால் இந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள். தேவனுடைய அன்பின் அக்கறைக்குள் பாதிக்கப்பட்ட துணை, குடும்பம், திருச்சபை மற்றும் அந்தப் போதகரின் சமுதாயத்தையும் கொண்டு வரவேண்டும் என்ற கடமையைத் திருச்சபையானது ஏற்றுக்கொள்கிறது. இந்தக் காரணத்திற்காகத் தான் ஒரு போதகருடைய நன்மதிப்பைத் திரும்பக் கொண்டுவரும் செயல்முறையில் இரண்டு முக்கியமான படிகள் இருக்கின்றன:

1. மீட்பு. அந்தப் போதகர் செய்த காரியத்தின் மோசமானத் தன்மையைக் கணக்கில் கொள்ளாமலும், அவர் குருத்துவ சேவைக்குத் திரும்பி வருவாரா மாட்டாரா என்பதைப் பார்க்காமலும் அல்லது கிருபை மற்றும் உதவியின் கரங்களை அவர் ஆரம்பத்தில் எப்படி ஏற்றுக்கொள்வார் என்பதைப் பார்க்காமலும், அந்தப் போதகரின் நலன் திரும்புவதும் (ஆவிக்குரிய மற்றும் வேறு), அவருடைய துணை மற்றும் குடும்பமானது மிகவும் மெதுவாக, ஜெபத்தோடு, உண்மையுள்ளவர்களாகப் பின்தொடரப்பட வேண்டும். இதை மறைமாவட்டமானது விதி எண் 540.1–540.7இன்படி செய்ய வேண்டும். எனவே மீட்பே இந்தப் படியின் ஒரே இலக்காக இருக்கவேண்டும்.

2. திரும்பப் பெறுதல். போதகரின் நன்மதிப்பை மீட்டு, அவருடைய சான்றிதழைத் திரும்பக் கொடுப்பதற்கான பரிந்துரையைச் செய்வது என்பது தனியான ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. முதலில் போதகர் மற்றும் அவருடைய துணை மற்றும் குடும்பத்தினரின் உடல்நிலை மற்றும் நலன் திரும்ப வருவதே முக்கியமாக இருக்கிறது. (540.6–540.12)

**540.1. ஒரு மீட்புக் குழுவை நியமித்தல்.** அந்தப் போதகரின் தவறான நடத்தை வெளிப்படையாகத் தெரியும்போது, சரியான நேரத்தில் சரியான மற்றும் மனதுருக்கத்தோடு இடைபடுதலே அந்தப் போதகருக்கும், அவருடைய துணை மற்றும் குடும்பம், சபை மற்றும் சமுதாயத்திற்கும் நல்லதாகும். இப்படிப்பட்ட நிலைகள் எப்போதுதாவதுதான் எதிர்ப்பார்க்கப்பட்டு, ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு, தகுதியுள்ளவர்களைச் சரியாகத் தேர்ந்தெடுத்து, குருத்துவ மற்றும் சாமானிய, மீட்பைத் துரிதப்படுத்துவதே இந்த மறைமாவட்ட பதில் திட்டத்தின் முக்கியமான அம்சமாக இருக்கிறது. இந்த நபர்கள் மறைமாவட்டக் கண்காணிப்பாளரால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின் பெயரில் பணியில் அமர்த்தப்படவேண்டும். போதகர்கள் தவறாக நடந்துகொள்ளும் சூழ்நிலைகள் ஏற்படும்போது, ஒரு மீட்புக் குழுவாகச் செயல்படும்படி இந்தக் குழுவானது

மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அனுப்பப்படும். இது மறைமாவட்டத் திட்டத்திற்கு ஏற்றவாறு இருக்கும். இப்படி அனுப்பப்பட்ட மீட்பு குழுவானது மூன்று நபர்களுக்கும் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். (211.20, 225.5, 540)

**540.2. மீட்புக் குழுவின் கடமைகள்.** போதகர் மற்றும் அவருடைய துணை மற்றும் குடும்பத்தினரின் உடல்நிலை மற்றும் நலம் மேம்படுவதற்கு இந்த மீட்புக் குழுவே பொறுப்பாக இருக்கிறார்கள். அந்தப் போதகருக்கு அவருடைய குருத்துவ பதவியும், அதோடு சேர்ந்துவரும் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்பக் கொடுக்கவேண்டுமா என்பதை இந்தக் குழுவானது பார்க்காது. சூழ்நிலை அனுமதிக்கும்போது, மீட்புக் குழுவானது பின்வரும் கடமைகளைப் பெற்றிருப்பார்கள்:

1. போதகரின் துணை மற்றும் குடும்பத்திற்கும், போதகருக்கும் அக்கறையை அளித்தல்.

2. மீட்பின் செயல்முறை மற்றும் நோக்கத்தைக் குறித்தத் தெளிவைப் போதகருக்கும் அவருடைய துணைக்கும் கொடுத்தல்.

3. தவறாக நடந்துகொள்ளுதல் வெளிவந்தப் பிறகு ஏற்படும் நிதி, வீடு, மருத்துவ, உணர்சிப்பூர்வமான, ஆவிக்குரிய மற்றும் பிற தேடுதல்களின் அவசரத்தைக் கையாளுவதற்காக போதகர், மறைமாவட்டம் மற்றும் திருச்சபையின் உதவியோடு ஒரு திட்டத்தை ஏற்படுத்துதல்.

4. மறைமாவட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுதல். தன்னுடைய சுய முயற்சிகளைக் குறித்தும், போதகர் மற்றும் அவருடைய துணை, குடும்பம் ஆகியவற்றின் உடல்நிலை மற்றும் பொது நலனைக் குறித்துத் தெரிவித்தல்.

5. போதகர் மற்றும் அவருடைய துணையோடு பேசுவது, மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு பேசுவது, தன்னுடைய வேலை நிறைவேறப்போகிறது என்ற நிலைமைத் தெரிந்தால் அதற்குப் பொறுப்பான மறைமாவட்டக் குழுவோடு அவர்கள் சந்தித்திருக்கும் முன்னேற்றத்தைக் குறித்துப் பேசுதல்.

6. மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழுவிற்கு அல்லது வேறு ஏதாவது நியமிக்கப்பட்ட குழுவிற்கு திரும்பப் பெறுதலைக் குறித்து அறிக்கை அளித்தல். போதகர் ஒருவேளை தன்னுடைய சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்து, குருத்துவ உறுப்பினரின் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்பப் பெற எண்ணினால், அந்தப் போதகரை நன்மதிப்பிற்குத் திரும்ப அனுப்புவது சரியானதுதானா என்ற பரிந்துரையை அளித்தல்.

**540.3.** மீட்பு செயல்முறைக்கு ஒழுங்குமுறை நடவடிக்கைக்குக் கீழ் இருக்கும் போதகர் சரியான பதிலைக் கொடுக்காவிட்டால், போதகரின் துணை மற்றும் குடும்பம் சீக்கிரமாக சரியாகுவதற்கான முயற்சிகள் செய்யப்படவேண்டும். போதகரை மீட்பில் ஆழ்த்துவதற்கு ஏதாவது வழியிருக்கிறதா என்பதைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். மீட்பு முயற்சிகளை மறுஆய்வு செய்து, போதகரின் துணை மற்றும் குடும்பத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இந்த

மீட்புக் குழுவை நீக்கியோ அல்லது முடித்தோ அல்லது வேறு வழியில் செல்லவோ முடிவுசெய்வார்.

ஒருவேளை ஒரு மறைமாவட்டம் மீட்புக் குழுவை அனுப்பாவிட்டால் அல்லது மீட்புக் குழுவானது தன்னுடைய கடமைகளை அந்தப் போதகர் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டு 180 நாட்களுக்குள் பொறுப்பெடுத்துக்கொள்ளாவிட்டால், பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவிற்குத் தன்னை மாற்றும்படியாக விண்ணப்பிக்கலாம். தன்னுடைய மீட்பைக் கண்காணித்து, தனக்கு மறுபடியும் பழைய நிலைத் தரப்படுமா என்பதைப் பார்க்க விண்ணப்பிக்கலாம். நன்மதிப்பிற்குத் தன்னைத் திரும்ப வைக்கும்படியாகத் தான் கேட்டுக்கொண்டதற்கு மறைமாவட்டம் பதில் அளிக்காத பட்சத்தில் அவர் இந்தக் குழுவில் கேட்கலாம். (540–540.2, 540.4–540.12)

**540.4.** நன்மதிப்பை இழந்தக் குருத்துவ உறுப்பினர் திருச்சபையில் நம்பிக்கைக்குரிய அல்லது அதிகாரத்தைக் கொண்ட பதவியைப் பெறக்கூடாது. பிரசங்கிக்கவோ, ஆராதனை நடத்தவோ, ஓய்வுநாள் பள்ளி வகுப்பு நடத்தவோ, வேதாகம ஆய்வுக் குழுவை வழிநடத்தவோ அல்லது சிறு குழுவை நடத்தவோ கூடாது. மறைமாவட்டத்தால் நியமனம் செய்யப்பட்ட மீட்புக் குழுவானது போதகருக்குச் சாதகமான பரிந்துரையைக் கொடுத்தால், அது மறைமாவட்ட ஆலோசனைக் குழு, மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது அருட்பணியாளர்களின் குழு, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சாதகமான பரிந்துரை என்பது அந்தப் போதகரும் அவருடைய குடும்பத்தாரும், மீட்பு நடவடிக்கையில் தகுந்த முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறார்கள் என்றும் இதன் காரணமாக நம்பிக்கை மற்றும் அதிகாரத்தின் பதவியை அவர்கள் மறுபடியும் பெறலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. கட்டுப்பாடுகளோடு அல்லது கட்டுப்பாடுகள் இல்லாமல் நம்பிக்கை அல்லது அதிகாரத்தில் பணியாற்றும் வாய்ப்பு மறுபடியுமாக வழங்கப்படலாம். மீட்புக் குழுவின் ஆலோசனையின் பேரில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் அதைத் திரும்பப் பெறவும் செய்யலாம். (606.1–606.2, 606.5, 606.11–606.12)

**540.5.** நன்மதிப்பிற்குத் திரும்பவுமாக அனுப்ப வேண்டும் என்று போதகர் விண்ணப்பம் அளித்தப்பிறகு விதி எண் 540.6இல் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல மீட்புக் குழுவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடமும், அதைச் சார்ந்த மறைமாவட்ட குழுவிடமும் அல்லது நியமிக்கப்பட்ட கூட்டத்திடமும் விதி எண் 540.8இன் படி இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுமாறோ அல்லது அந்தப் போதகர் தொடர்ந்து இன்னும் கொஞ்சக் காலம் மீட்பில் இருந்துவிட்டு மறுபடியும் விண்ணப்பிக்கலாம் என்றோ கூறும்.

மீட்புக் குழுவானது தன்னுடைய வேலையை முடித்துவிட்டு, மீட்பில் இருக்கும் போதகர் நன்மதிப்பைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்யவில்லையென்றால், அந்தப் போதகர் ஒழுங்குரீதியான நடவடிக்கையின் கீழ் தான் இருப்பார். 1) நசரேயத் திருச்சபையின் உறுப்பினர் மற்றும் ஊழியங்களிலிருந்து அவர் நீக்கப்படும்வரை அல்லது 2) தன்னுடைய குருத்துவ சான்றிதழை இராஜினாமா

செய்துவிட்டு ஒரு சாமானியனாக அந்தத் திருச்சபையில் இருக்கலாம். ஒரு போதகர் தன்னுடைய சான்றிதழை இராஜினாமா செய்யும்போது அவர் போதுமான அளவு மீட்கப்பட்டிருந்தால், இப்படிப்பட்ட முன்னேற்றத்தை அக்கறையோடு கொண்டாட வேண்டும். (539.5, 540.10)

**540.6. நன்மதிப்பிற்குத் திரும்ப அனுப்பும்படியாக விண்ணப்பித்தல்.** குருத்துவ உறுப்பினராக இருப்பதினால் கிடைக்கும் உரிமை, சலுகைகள் மற்றும் கடமைகள் பறிக்கப்பட்ட போதகர் விதி எண் 540.7இன்படி நன்மதிப்பிற்குத் தன்னைத் திருப்பும்படியும், தன்னுடைய சான்றிதழைத் தரும்படியாகவும் கேட்கும்போது அந்த விதியின்படி சாத்தியமாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட விண்ணப்பமானது அடுத்த மறைமாவட்ட மாநாட்டிற்கு ஆறு மாதத்தற்கு முன்பாகவே மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது மறைமாவட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்திற்கு உகந்ததாக இருக்கவேண்டும். இந்த விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதை முப்பது நாட்களுக்குள் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் தெரிவிப்பார்.

**540.7.** மறுபடியுமாக நன்மதிப்பிற்குத் திரும்ப வேண்டும் என்றும் தன்னுடைய சான்றிதழ்கள் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் போதகர் கேட்கலாம். அதற்கு மீட்புக் குழு அவருக்குச் சாதகமாக அந்த விண்ணப்பத்தை ஆதரவளிக்க வேண்டும். அந்தப் போதகர் மீட்பு நடவடிக்கைகளில் உற்சாகமாகக் கலந்துகொண்டார் என்றும் குறைந்தது இரண்டு வருடங்களாவது அந்த மீட்புக் குழுவின் கண்காணிப்பின் கீழ் இருந்தார் என்றும் அத்தாட்சி வழங்க வேண்டும். இப்படிப்பட்ட மீட்பு நடவடிக்கையில் தன்னிச்சையாகவே நான்கு வருடங்கள் பங்குபெற்றிருந்தால் மீட்புக் குழுவின் பரிந்துரை இல்லாமலேயே அவர் அந்த விண்ணப்பத்தை அனுப்பலாம்.

ஒழுங்குநடவடிக்கையின் கீழ் இருக்கும் போதகர் துவக்கத்திலிருந்து மீட்பை ஏற்றுக்கொண்டு நன்மதிப்புக்குத் திரும்பும்படியான விண்ணப்பத்தைப் போதகருக்கும் அந்த மீட்புக் குழுவிற்கும் இடையே நடக்கும் முதல் சந்திப்பிற்குப் பிறகோ அல்லது ஒரு மீட்புக் குழு நியமிக்கப்பட்ட 60 நாட்களுக்குப் பிறகோ விண்ணப்பிக்கலாம். ஒருவேளை போதகர் மீட்புக் குழுவோடு பணியாற்றுவதைத் தள்ளிப்போடவோ அல்லது இடையில் செய்யாமலோ இருந்தால் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மீட்புக் குழுவோடு ஆலோசனை செய்து நன்மதிப்பைப் பெறுவதற்காக அவர் விண்ணப்பிக்கும் காலம் சரியாகத் தான் இருக்கிறதா என்று பார்ப்பார்கள். (538, 540.3)

**540.8. நன்மதிப்பிற்குத் திரும்பச் செல்வதற்கு அளித்த விண்ணப்பத்திற்கான பதில்.** மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணி குழு அல்லது இதற்காக மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் நிறுவப்பட்ட குழுவானது மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் பெறப்பட்ட நன்மதிப்பிற்குத் திரும்பச் செல்வதற்கு அளித்த விண்ணப்பங்களைப் பார்க்கும்:

1. அந்த விண்ணப்பம் செல்லுபடியாகுமா என்றும், அதில் விண்ணப்பிப்பதற்கான எல்லாத் தகுதிகளும் இருக்கிறதா என்று பார்க்கும்.
2. மீட்புக் குழுவின் பரிந்துரையைக் கேட்டு, ஆய்வு செய்யும்.

3. நன்பதிப்பிற்குத் திரும்ப விரும்பும் போதகரைச் சந்தித்தல். நேர்காணல் செய்வதற்குப் பொருத்தமான மற்றவர்களையும் அழைக்கலாம்.
4. குருத்துவ உறுப்பினர் கொண்டிருக்கும் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்பவும் அந்தப் போதகருக்குக் கொடுத்து அவருடைய சான்றிதழைத் திரும்பக் கொடுக்கலாமா என்று தீர்மானித்தல்.

அடுத்த மறைமாவட்ட மாநாடு நடப்பதற்கு குறைந்தது 180 நாட்களுக்கு முன்பாகவே ஒரு விண்ணப்பம் அனுப்பப்படும்போது அந்த விண்ணப்பம் முழுமையாக நிரப்பப்பட்டதும், மீட்புக் குழுவின் பரிந்துரையைப் பெற்றதாகவும் இருக்கிறது என்றால் மறைமாவட்ட மாநாட்டிற்கு முன்பாக மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடம் பரிந்துரை செய்யப்படும். பாலியல்ரீதியான தவறான நடத்தையின் காரணமாக உரிமைகள் பறிக்கப்பட்ட குருத்துவ உறுப்பினரின் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்பக் கொடுப்பதற்கு மறைமாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற வேண்டும். இந்தப் பரிந்துரையானது பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும். இது அந்தப் போதகர் அளித்த சமீபத்திய விண்ணப்பத்தின் ஒரு வருடத்திற்குள் நடக்க வேண்டும். இதில் கூறப்படாதபடி ஏதாவது செயல்படுத்தப்பட வேண்டுமென்றால் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் எழுதப்பட்ட அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். (540.2, 540.3, 540.6, 540.7, 540.12)

**540.9.** பாலியல்ரீதியான தவறான நடத்தையில் சிறுபிள்ளைகளிடம் நடந்த நபர் ஒருபோதும் நன்மதிப்பைப் பெறும் குருத்துவ உறுப்பினராக மறுபடியும் பதவியில் வைக்கப்படக்கூடாது. அந்த நபர் சிறுபிள்ளைகளிடம் பாலியல்ரீதியான தவறுகளைச் செய்திருந்தால், அவர் ஒருபோதும் சிறுவர்களைச் சார்ந்த ஊழியத்தில் எந்தப் பொறுப்பையும் வகிக்கக்கூடாது. அந்த உள்ளூர் சபையிலும் எந்த ஒரு தலைமைத்துவ பதவிக்கும் தேர்ந்தெடுக்கப்படவோ, நியமிக்கப்படவோ கூடாது. வயதுவரம்பை எட்டாத சிறுபிள்ளைகள் 18 வயதுக்கும் கீழ் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இது அந்த நாட்டின் அல்லது மாநிலத்தின் உள்ளூர் சட்டத்தின்படி வேறாக இருக்குமானால் இது மாறுபடும். (129.30, 600, 606.1–606.2, 606.5, 606.11–606.12, 916)

**540.10.** மறைமாவட்ட ஆலோசனைக் குழு, மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணியாளர்களின் குழு அல்லது இந்தப் பணியைச் செய்யும் கூட்டமானது நன்மதிப்பைத் திரும்பப் பெறுவதற்காகச் சரியான கால அளவில் விண்ணப்பிக்கப்பட்ட ஒரு விண்ணப்பத்தைப் பார்த்தப் பிறகு, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் இதற்குரிய கூட்டமைப்புகளுக்குப் பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப் பரிந்துரை செய்வார்கள்.

1. அந்தப் போதகரை நன்மதிப்பிற்குத் திரும்பிச் செல்லும்படிச் செய்து, அவருடைய சான்றிதழைத் திரும்பக் கொடுக்கலாம்.
2. அந்தப் போதகர் குறிப்பிட்ட காலம் மீட்புக் குழுவின் கண்காணிப்பில் இருந்து மறுபடியுமாக நன்மதிப்பைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை அளிக்கலாம்.
3. அந்த மீட்புக் காலம் கூட்டப்பட்டு, மீட்பிற்கான திட்டம் மறுஆய்வு செய்யப்பட வேண்டும் (ஊழியத்தில் வேறு பணி கொடுத்தல், புதிய மீட்புக்

குழுவை அனுப்புதல், அல்லது தனிப்பட்ட, திருமண அல்லது குடும்பப் பிரச்சினைகளைக் கேட்டறிதல்).

4. அந்தப் போதகர் தொடர்ந்து ஒழுங்குநடவடிக்கையின் கீழ் இருக்கட்டும்.
5. அந்தப் போதகர் நன்மதிப்பிற்குத் திரும்பக் கூடாமல் இருந்தால். ஆனால் மீட்பின் அறிகுறி காணப்பட்டு அதற்காகக் கொண்டாடப்படுதல். அந்தப் போதகர் தன்னுடைய சான்றிதழை இராஜினாமா செய்யும் வாய்ப்பு வழங்கப்படுதல்.
6. அந்தப் போதகர் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர் மற்றும் ஊழியத்திலிருந்து நீக்கப்படுதல். (539.5, 540.7, 540.12)

**540.11.** ஒழுக்கவிதிகளின் கீழ் கண்காணிப்பின் கீழ் இருக்கும் போதகர் மறுபடியமாக நன்மதிப்பைப் பெறுவதற்காக அனுப்பிவைத்த இரண்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால், பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது அந்தப் போதகருடைய மீட்பு மற்றும் நன்மதிப்பைப் பெறும் வாய்ப்பை மற்றொரு மறைமாவட்டத்திற்கு மாற்றலாம். நன்மதிப்பைப் பெறுவதற்கும், குருத்துவ பதவிகளில் கிடைக்கும் உரிமைகள், சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்பப் பெறுவதற்கும் அனுப்பப்பட்ட விண்ணப்பமானது மூன்றாவது முறையாகவும் நிராகரிக்கப்பட்டால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அனுமதியின் பெயரில் அவர் சாமானியனாகிவிடலாம்.

**540.12. குருத்துவ உறுப்பினராக இருக்கும்போது கிடைக்கும் உரிமைகள்,** சலுகைகள் மற்றும் கடமைகளைத் திரும்பப் பெறுதல். நன்மதிப்பை இழந்த குருத்துவ உறுப்பினர் அனுப்பிய நன்மதிப்பைத் திரும்பப் பெறும் விண்ணப்பம் ஏற்றுக்கொண்டு, அவருடைய உரிமைகள் சலுகைகள் மற்றும் கடமைகள் திரும்பக் கிடைக்கும் பட்சத்தில் அந்த நன்மதிப்புக்குத் திரும்புதல் பின்வரும் செயல்முறையால் நிறைவேறும்:

1. மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலின் பேரில்,
2. மறைமாவட்ட ஆலோசனைக் குழு, மறைமாவட்ட குருத்துவ சான்றிதழ் குழு அல்லது மறைமாவட்ட அருட்பணியாளர்களின் குழு ஒப்புதல் அளித்தால்
3. மறைமாவட்ட ஆலோசனைக் குழு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் அளித்தால்.
4. பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெறுதல் மற்றும்
5. நன்மதிப்பை இழந்த மறைமாவட்ட மாநாட்டில் அது திரும்ப அளிக்கப்படுதல்.

(606.1–606.2, 606.5, 606.11–606.12)

# பாகம் VII

# நீதி நிர்வாகம்

தவறான நடக்கையை விசாரித்தல் மற்றும் திருச்சபை ஒழுங்கு
தவறாக நடந்து கொள்ளுதலுக்குப் பதிலளித்தல்
நம்பிக்கைக்குரிய அல்லது அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் தவறாக நடப்பதைக் கையாளுதல்
ஒரு சாமானியருக்கான ஒழுங்கு நடவடிக்கை
ஒரு போதகருக்கான ஒழுங்கு நடவடிக்கை
நடைமுறை விதிகள்
மறைமாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றம்
பொது மேல்முறையீட்டு நீதிமன்றம்
பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றம்
உரிமைகளுக்கான உத்திரவாதம்

## I. தவறான நடக்கையை விசாரித்தல் மற்றும் திருச்சபை ஒழுங்கு

**600.** திருச்சபை ஒழுங்கின் நோக்கம் தவறு செய்பவர்களுக்குத் தண்டனை வழங்குவதல்ல, மாறாக உண்மையை நிலைநாட்டுவதும், சபையைத் தூய்மைப்படுத்துவதும், கவனக் குறைவாயிருப்போருக்கு எச்சரிப்பளிப்பதும், குற்றம் புரிந்தோரைச் சீர்ப்படுத்தி, திருச்பையின் பெயரையும் மற்றும் ஆதாரங்களையும்

பாதுகாப்பதுமே. கிறிஸ்தவ பண்புகளின் உடன்படிக்கைக்கோ அல்லது கிறிஸ்தவ நடக்கையின் உடன்படிக்கைக்கோ அல்லது தங்கள் உறுப்பினர் உறுதிமொழிகளை வேண்டுமென்றே தொடர்ந்து மீறும் சபை உறுப்பினர்களும், அவர்களது குற்றங்களின் தன்மைக்கேற்ப, கருணையோடு ஆனால் உண்மையோடு நியாயம் தீர்க்கப்பட வேண்டும். இருதயம் மற்றும் வாழ்க்கையின் பரிசுத்தம் புதிய ஏற்பாடு கூறும் பிரமாணமாக இருக்கிறபடியால், நசரேயத் திருச்சபை தூய்மையான ஊழியத்தை வலியுறுத்துகிறது. போதகராக அதன் அனுமதிச் சான்றுகளைப் பெற்றோர் கொள்கைப் பிடிப்பில் பழைமைவாதிகளாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவது என்பது தண்டனை விதிப்பதில்லை. ஆனால் தவறான நடத்தைக்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் சபை உறவு பற்றித் தீர்மானிக்கப்படுதலேயாகும்.

## II. தவறாக நடந்துகொள்ளுதலுக்குப் பதிலளித்தல்

**601.** ஒரு ஜாக்கிரதையான நபர் நம்பகமானது என்று நம்பத்தகும் அளவில் ஒரு தகவலைக் குறித்து அதிகாரத்தில் இருக்கும் ஒரு நபர் அறியும்போது அதற்குப் பதிலளிப்பது சரியாகிறது. அதோடு சேர்த்து, திருச்சபைக்கோ அல்லது தவறாக நடத்தப்பட்டு பாதிப்புக்குள்ளானவர்களுக்கோ அல்லது வேறு யாருக்கோ திருச்சபைக்குள் அதிகாரத்தில் அல்லது நம்பிக்கைத் தரும் பதவியில் இருக்கும் நபர் தவறாக நடந்துகொண்டதின் விளைவாக ஏதாவது பாதிப்பு ஏற்படும் என்ற தகவல் வரும்போதும் பதிலளிப்பது சரியானதாகும்.

**601.1.** திருச்சபையைச் சேர்ந்த அதிகாரமில்லாத நபர் நம்பகமானது என்று ஒரு ஜாக்கிரதையான நபர் நம்பத்தகும் அளவில் ஒரு தகவலைக் குறித்து அறியும்போது, அதன்மூலமாக ஜாக்கிரதையான நபருக்கு அதிகாரத்தில் அல்லது நம்பிக்கைக்குரிய பதவியில் இருக்கும் நபரால் சபைக்குள் தவறு நடக்கும் என்று விசுவாசித்தால், அந்தத் தகவலைக் கொண்டிருக்கும் அந்த நபர் இப்படிப்பட்ட தகவலுக்குரிய பதிலை அளிக்கக்கூடிய அதிகாரம் பெற்ற திருச்சபையின் பிரதிநிதியிடம் அதை அளித்து அவரைப் பதில் சொல்ல வைக்க வேண்டும்.

**601.2.** இதற்காகப் பதிலளிக்கும் அதிகாரத்தைக் கொண்ட நபர், தவறாக நடந்துகொண்ட நபர்களின் பதவியின் அடிப்படையில் பின்வருமாறு இருக்கிறார்கள்:

| *குற்றம்சாட்டப்பட்ட நபர்* | *இதற்குப் பதிலளிக்கும் அதிகாரத்தைக் கொண்ட நபர்* |
|---|---|
| உறுப்பினரல்லாதவர் | கேள்விக்குரியாக இருக்கும் நடத்தை நடந்த திருச்சபைப் போதகர் |
| சாமானியர் | சாமானியர் உறுப்பினராக இருக்கும் திருச்சபையின் போதகர் |
| போதகக் குழுவின் உறுப்பினர் | மறைமாவட்டக் கண்காணிப்பாளர் (மறைமாவட்ட |

| | |
|---|---|
| | ஆலோசனைக் குழுவோடு சேர்ந்து) குற்றம் சாட்டப்பட்ட நபர் உறுப்பினராகவோ அல்லது அந்த உள்ளூர் சபையின் போதகராகவோ அல்லது அந்த நபர் பணிபுரியும் உள்ளூர் சபையின் போதகராகவோ இருக்கலாம் |
| மறைமாவட்டக் கண்காணிப்பாளர் | அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் |
| பிராந்திய இயக்குனர் | அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் |
| கள யுக்தி ஒருங்கிணைப்பாளர் | அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் |
| வேறு யாராவது | பொதுச் செயலாளர் |

பதிலளிக்கக்கூடிய அதிகாரத்தில் இருக்கும் நபர் பதிலளித்து, அதோடு சரியான நேரத்தில் அந்த மறைமாவட்டத்தில், களத்தில், பிராந்தியத்தில் அல்லது உலகளாவிய அளவில் அதற்குரிய நபர்களிடம் இந்தக் குற்றச்சாட்டுகளைக் குறித்துத் தெரிவிக்க வேண்டும். உண்மையைக் கண்டுபிடிப்பதற்கோ அல்லது பதிலளிப்பதற்கோ பதிலளிக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றவர் மற்றவர்களின் உதவியையும் நாடலாம்.

**601.3.** எந்த ஒரு குற்றச்சாட்டும் வைக்கப்படவில்லையென்றால், பாதிப்பைத் தடுக்கவோ அல்லது ஏற்கெனவே ஏற்பட்ட பாதிப்பின் தாக்கத்தைக் குறைக்கவோ ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க விசாரணை நடத்தப்படும். பாதிப்பைத் தடுக்கவோ அல்லது பாதிப்பின் தாக்கத்தைக் குறைக்கவோ இதற்குமேல் எந்தச் செயலும்செய்யப்பட வேண்டியதில்லை என்று ஜாக்கிரதையாக இருக்கும் நபர் முடிவுசெய்யும் சூழ்நிலைகளில் குற்றச்சாட்டு கொடுக்கப்படும்வரை எந்த விசாரணையும் மேற்கொள்ளப்பட மாட்டாது. விசாரணையின்போது கண்டுபிடிக்கப்படும் உண்மைகளே குற்றஞ்சாட்டுதலுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படலாம்.

## III. நம்பிக்கைக்குரிய அல்லது அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் தவறாக நடப்பதைக் கையாளுதல்

**602.** நம்பிக்கைக்குரிய அல்லது அதிகாரத்தில் இருக்கும் ஒரு நபரின் தவறான நடக்கையினால் ஒன்றும் அறியாதவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்து பதிலளிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் நபர் அறிந்துகொள்ளும்போது இதற்குச் சரியான வகையில் திருச்சபை பதிலளிக்குமாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தவறான நடக்கையால் பாதிக்கப்பட்டவர்கள்

மேலும் பாதிப்பை அனுமதிக்காதபடியும், அந்தப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கும், இந்தத் தவறான நடக்கையால் பாதிப்புக்குள்ளாகும் வேறு எந்த நபருடைய தேவைகளுக்கு பதிலளிக்கவும் இந்தச் சரியான பதில் உதவி செய்யும். குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடைய மனைவி மற்றும் குடும்பத்தின் தேவைகளைக் குறித்து விசேஷமான அக்கறை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அந்தப் பதிலானது உள்ளூர் சபை, மறைமாவட்டம் மற்றும் பொதுவான திருச்சபையின் தேவைகளான பொதுத்தொடர்பு, சட்டரீதியான நடவடிக்கையிலிருந்து பாதுகாப்பு மற்றும் திருச்சபையின் நம்பகத்தன்மையைக் காத்துக்கொள்ளுதலுக்கு உதவியாக இருக்கும்.

திருச்சபைக்குப் பதிலளிப்பவர்கள், தாங்கள் சொல்லும் காரியங்கள் பொது சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கக்கூடும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். திருச்சபையின் கடமையானது கிறிஸ்தவ அக்கறையின் அடிப்படையில்தான் இருக்கிறது. சபை நிர்வாகக் குழுவின் நடவடிக்கையில்லாமல் யாராலும் ஒரு உள்ளூர் சபையின் நிதி பொறுப்புகளை எடுத்துக்கொள்ள முடியாது. அதுபோலவே மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் நடவடிக்கையில்லாமல் மறைமாவட்டத்தில் எதுவும் செய்ய முடியாது. எப்படிப்பட்ட நடவடிக்கைச் சரியானதாக இருக்கும் என்பதைக் குறித்து உறுதியான சிந்தனை இல்லாதவர்கள் அதற்குரிய பணியாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுச் செயல்பட வேண்டும்.

**602.1.** ஒவ்வொரு உள்ளூர் திருச்சபையிலும், அங்கு ஏற்படும் எந்த ஒரு நெருக்கடிக்கும் சபை நிர்வாகக் குழு பதிலை உண்டாக்குவதே சரியான காரியமாக இருக்கிறது. ஆனாலும் குழு கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாகப் பதிலளிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அவசரரீதியில் பதிலளிப்பதைக் குறித்தத் திட்டத்தை ஒவ்வொரு உள்ளூர் சபையும் கொண்டிருத்தல் மிகவும் நன்மையளிக்கும்.

**602.2.** மறைமாவட்டத்தைப் பொருத்தவரை அங்கு ஏற்படும் எந்த ஒரு நெருக்கடிக்கும் பதிலளிக்கும் முக்கிய பொறுப்பானது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிற்கே இருக்கிறது; ஆனாலும் குழு கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக பதிலளிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அவசரரீதியில் பதிலளிப்பதைக் குறித்த திட்டத்தை ஒவ்வொரு மறைமாவட்டமும் கொண்டிருத்தல் மிகவும் நன்மையளிக்கும். இந்தத் திட்டத்தில் ஒவ்வொரு மறைமாவட்டமும் பதிலளிக்கும் குழு என்று ஒன்றை நியமிப்பது அடங்கும். அதில் இருக்கும் உறுப்பினர்கள் ஆலோசனைத் தருபவர்களாகவும், சமுதாயப் பணியாளர்களாகவும், தொடர்புகொள்ளுதலில் பயிற்சிப் பெற்றவர்களாகவும், செயல்படுத்தக்கூடிய சட்டங்களைக் குறித்து அறிந்தவர்களாகவும் இருக்கும் விசேஷித்த தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**603. சபையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல் மற்றும் ஒப்புரவாகுதல்.** கருத்துவேறுபாடு என்பது வாழ்க்கையின் ஒருபகுதியாக இருக்கிறது. சபைக்கும் இது பொருந்தும். ஆனால் ஒரு கருத்துவேறுபாடு பிரச்சினையாக மாறி சபையைப் பிரிக்கவோ அல்லது சபையின் ஐக்கியத்தைக் குலைக்கவோ செய்தால், தீர்வுகாணுதல் என்னும் அதிகாரப்பூர்வமான செயல்முறைக்கு முன்பாகப் பகுத்தறிதலுக்காகச்

செயல்முறை முதலில் செயல்படுத்தப்பட வேண்டும். அது அதிகாரப்பூர்வமாகவோ அல்லது அப்படி இல்லாமலோ இருந்தாலும், தீர்வுகாணுதலும், ஒப்புரவாகுதலுமே அதனுடைய இலக்காக இருக்க வேண்டும்.

**603.1.** அதிகாரப்பூர்வமில்லாத செயல்முறை: திருச்சபையில் பிரச்சினை எழும்போது எல்லா மக்களோடுச் சமாதானமாக வாழும்படியாகப் பகுத்தறிதலுக்கும், ஆலோசனைக்கும் காலம் ஒதுக்கப்பட வேண்டும். இதில் சம்பந்தப்பட்டிருக்கும் அனைவரும் தேவனுக்கு முன்பாக இந்தக் காரியத்தைக் குறித்துத் தெரிவிக்க ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இந்த முழு செயல்முறையுமே ஜெபத்தால் நினைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒப்புரவாகுதலின் நம்பிக்கையோடு இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருக்கும் தனிப்பட்ட நபர்கள் மனத்தாழ்மையோடு ஒருவரையொருவர் சந்திக்க வேண்டும்.

**603.2.** அதிகாரப்பூர்வமான செயல்முறை: மேலே சொல்லப்பட்ட செயல்முறையால் தீர்வு காணமுடியாதபோது அதில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் அதிகாரப்பூர்வமாக இதற்குத் தீர்வு காண முயற்சி செய்யலாம். திருச்சபையில் முதிர்ச்சியோடும், பாகுபாடில்லாமலும் இருக்கும் பிரதிநிதிகளின் குழுவைக்கொண்டு இந்தப் பிரச்சினை மத்தியஸ்தம் செய்யப்பட வேண்டும். தவறு கண்டுபிடிக்கப்பட்டால், விதி 604இல் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல நடவடிக்கை எடுக்க அந்தக் குழு பரிந்துரை செய்யலாம்.

**604. ஒழுங்குரீதியான காரியங்களுக்கு ஒப்புதலின் மூலமாகத் தீர்வு காணுதல்.** *சட்டநூலில்* கொடுக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு நடவடிக்கையானது குற்றச்சாட்டுகளைக் குற்றம்சாட்டப்பட்டவர் எதிர்க்கும்போது அதனால் ஏற்படும் காரியங்களுக்குத் தீர்வு காணுவதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. பல சூழ்நிலைகளில், இப்படிப்பட்ட ஒழுங்குநடவடிக்கைகளை ஒப்புதலின் மூலமாக தீர்வுகாண்பது சரியாக இருக்கும். இப்படிப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் ஒப்புதலின் பேரில் தீர்வுகாணுவது உற்சாகப்படுத்தப்படுகிறது. நடைமுறையில் சாத்தியமாக இருக்கும் எல்லா இடங்களிலும் இது செயல்படுத்தப்பட வேண்டும்.

**604.1.** உள்ளூர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் அதிகாரத்தின் கீழ் வரும் எந்த ஒரு காரியமும் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கும், போதகருக்கும் இடையே எழுத்துப்பூர்வமாக ஒப்புதலின் மூலமாகத் தீர்வுகாணப்படலாம். ஆனால் இதைச் சபை நிர்வாகக் குழுவும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரும் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த ஒப்புதல் சீட்டில் காணப்படும் விதிகள் உள்ளூர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஒப்பானதாகவே இருக்கும்.

**604.2.** மறைமாவட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் கட்டுப்பாட்டிற்குள் வரும் எந்தக் காரியமும் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கும், மறைவாட்டக் கண்காணிப்பாளருக்கும் இடையே எழுத்துப்பூர்வமான ஒப்புதலின் மூலமாகத் தீர்வுகாணப்படலாம். ஆனால் இது மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட ஒப்புதல் சீட்டில்

காணப்படும் விதிகள் மறைமாவட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழுவால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஒப்பானதாகவே இருக்கும்.

## IV. ஒரு சாமானியருக்கான ஒழுங்கு நடவடிக்கை

**605.** கிறிஸ்தவத்துக்கு விரோதமான நடத்தையுள்ளவர் என்று ஒரு சாமானியர் குற்றம்சாட்டப்பட்டு, ஆய்வுக்கான விண்ணப்பம் விடுவிக்கப்படும்போது, அந்தக் குற்றச்சாட்டுக்கள் எழுதப்பட்டு, குறைந்தபட்சம் ஆறு மாதங்களாவது ஆலய வருகையில் உண்மையுள்ளவர்களாக இருக்கும் இரு உறுப்பினர்களால் கையொப்பம் இடப்பட வேண்டும். மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்று, போதகர் உள்ளூர் சபையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழு ஒன்றை நியமிப்பார். இந்தக் குழு தனது ஆய்வுகளைப் பற்றி எழுத்துமூலமான அறிக்கை கையொப்பமிடப்பட்டு, சபை நிர்வாகக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆய்வு மற்றும் அறிக்கைக்குப் பிறகு, உள்ளூர் சபையில் நன்மதிப்பைப் பெற்ற எவரேனும் இரு உறுப்பினர்கள் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகக் குற்றங்களைக் கூறி கையொப்பமிட்டு, சபை நிர்வாகக் குழுவிடம் அதைச் சமர்ப்பிக்க வேண்டும். இதன் பிறகு சபை நிர்வாகக் குழுவானது, மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஒப்புதலோடு, ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவை நியமிக்கும். இந்த உறுப்பினர்கள் பக்கம் சாராதவர்களாகவும், நீதியுடனும், பாரபட்சமின்றியும் இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டுத் தீர்ப்பளிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். கடிந்துகொள்ளுதல், தாற்காலிக இரத்து, உள்ளூர் சபையின் உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கப்படுதல் இவற்றில் ஏதேனும் ஒரு வகையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம். (516.8).

**605.1.** உள்ளூர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் தீர்ப்பின் மீதான மேல் முறையீடு, 30 நாட்களுக்குள்ளாகக் குற்றம் சாட்டப்பட்டவராலோ அல்லது சபை நிர்வாகக் குழுவாலோ மறைமாவட்ட மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படலாம்.

**605.2.** ஒரு சாமானிய உறுப்பினர், உள்ளூர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினால் உள்ளூர் சபையின் உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கப்பட்டிருந்தால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலின் பேரில் மட்டுமே, அதே மறைமாவட்டத்தின் நசரேயத் திருச்சபையில் மீண்டும் சேர்ந்து கொள்ள முடியும். சபை உறுப்பினர்களை ஏற்றுக்கொள்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில், உள்ளூர் சபையில் உறுப்பினராகச் சேருவதற்குப் பயன்படுத்த வேண்டும் (21, 28–33, 112.1–112.4, 704)

**605.3.** தலைமைத்துவ பதவியில் இருக்கும் சாமானியர்கள் மிகவும் உயர்வான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தவறு நடக்கும்போது, அதனுடைய தாக்கம் மிகவும் மோசமானதாக இருக்கும். அந்த நபர் சிறுபிள்ளைகளிடம் பாலியல்ரீதியான தவறுகளைச் செய்திருந்தால், அவர் ஒருபோதும் சிறுவர்களைச் சார்ந்த ஊழியத்தில் எந்தப் பொறுப்பையும் வகிக்கக்கூடாது. அந்த உள்ளூர் சபையிலும் எந்த ஒரு தலைமைத்துவ பதவிக்கும் தேர்ந்தெடுக்கப்படவோ, நியமிக்கப்படவோ கூடாது.

வயதுவரம்பை எட்டாத சிறுபிள்ளைகள் 18 வயதுக்கும் கீழ் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இது அந்த நாட்டின் அல்லது மாநிலத்தின் உள்ளூர் சட்டத்தின்படி வேறாக இருக்குமானால் இது மாறுபடும். (503.1)

## V. ஒரு போதகருக்கான ஒழுங்கு நடவடிக்கை

**606.** நசரேயத் திருச்சபையின் நிரந்தரத்தன்மை மற்றும் செயல்திறன் ஆகியவை அதனுடைய குருத்துவ உறுப்பினர்களின் ஆவிக்குரிய தகுதிநிலைகள், பண்புகள் மற்றும் அவர்களுடைய வாழ்க்கைமுறை ஆகியவற்றைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. குருத்துவ உறுப்பினர்கள் மேன்மையான அழைப்பைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட நபர்களாகக் கருதப்படுகிறார்கள். திருச்சபையின் நம்பிக்கை அவர்கள் மீது வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தாங்கள் ஊழியம் செய்வதால் மிகவும் மேன்மையான இடத்தில் வைக்கப்பட்டுப் பார்க்கப்படுவார்கள் என்பதை அறிந்தே இந்த அழைப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் மீது காணப்படும் மேன்மையான எதிர்ப்பார்ப்புகளின் காரணமாக, குருத்துவ உறுப்பினர்களும், அவர்களுடைய ஊழியமும் எந்த வகையிலும் தவறான நடத்தையினால் கலங்கப்பட்டுவிடுகிறது. எனவே தேவனுடைய மக்களுக்கு உரியதான வேதாகமரீதியான ஞானம் மற்றும் முதிர்ச்சியைக் கொண்ட பின்வரும் செயல்முறைகளைப் பயன்படுத்தலாம்.

**606.1.** போதகருக்கு உரியதல்லாத அல்லது நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகளுக்கு ஒத்திராத கோட்பாடுகளைத் தவறாகப் போதிப்பது போன்ற காரணங்களைக் கொண்டு ஒரு போதகர் குற்றஞ்சாட்டப்பட்டால் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எழுத்துமூலமாகக் கொடுக்கப்பட்டு, நசரேயத் திருச்சபையைச் சார்ந்த நற்பெயரை உடைய இரண்டு உறுப்பினர்களால் கையொப்பமிடப்படும். இந்த எழுத்துப்பூர்வமான குற்றச்சாட்டு மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவர் அதை அந்தப் போதகர் உறுப்பினராக இருக்கும் மறைமாவட்டத்தைச் சார்ந்த மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பித்துவிடுவார். இந்தக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுவிடும்.

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்று நடைமுறைச் சார்ந்த ஏதாவது ஒரு வழியில் எழுத்துப்பூர்வமான குறிப்பு அனுப்பப்படும். இப்படிச் செய்யமுடியாத பட்சத்தில், அந்தப் பகுதியில் சட்டரீதியான குறிப்புகள் கொடுக்கப்படும் வழிமுறையில் கூட அவைகளைக் கொடுக்கலாம். குற்றம்சாட்டப்பட்டவரும், அவருக்கு ஆலோசனை வழங்குபவரும் அந்தக் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்துபார்க்க உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டின் பிரதியைக் கேட்கும் பட்சத்தில் அது அவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும். (540.4, 540.9, 540.12)

**606.2.** குருத்துவ உறுப்பினருக்கு எதிராகக் கொடுக்கப்படும் குற்றச்சாட்டில் ஒரு நபர் கையெழுத்திடும்போது, அந்தக் குற்றச்சாட்டில் காணப்படும் அனைத்துத் தகவல்களும், நம்பிக்கைகளும் போதுமான அளவு விசாரணைக்குப் பிறகு, அந்தக்

குற்றச்சாட்டு உண்மைதான் என்று கண்டறிந்தபிறகே கொடுக்கப்பட்டது என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. (540.4, 540.12)

**606.3.** எழுத்துமூலமான குற்றச்சாட்டு பதிவு செய்யப்படும்போது, உண்மைகளையும், சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளையும் ஆராயும்படி, மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட அபிஷேகம் பெற்ற போதகர்களையும், இரண்டிற்கும் குறைவுபடாத சாமானியர்களையும் மறைமாவட்ட ஆலோசனைக் குழு சரி என்று நினைக்கும் விதத்தில் குழு ஒன்றை நியமிக்கலாம். இவர்கள் தங்கள் கண்டுபிடிப்புக்களை எழுத்துமூலம் பதிவுசெய்ய வேண்டும். பெரும்பான்மையோர் இதில் கையொப்பமிட வேண்டும். குழுவின் அறிக்கையைப் பரிசீலித்தப் பிறகு, குற்றம் சாட்டுவதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் காணப்பட்டால், அந்தக் குற்றச்சாட்டுகள் எழுதப்பட்டு, ஏதேனும் இரு அபிஷேகம் பெற்ற போதகர்களால் கையொப்பமிடப்பட வேண்டும். இந்தக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டப் பிறகு மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது அந்தக் குற்றஅறிவிப்பை அனுப்பும். அப்படி அனுப்ப முடியாவிட்டால், அந்த இடத்தில் சட்டரீதியான குறிப்புகள் எப்படிக் கொடுக்கப்படுகின்றனவோ அப்படியே கொடுக்கப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரோ அல்லது அவரது வக்கீலோ குற்றச்சாட்டுக்களையும், குறிப்புக்களையும் பரிசீலனை செய்ய உரிமை உண்டு. இதற்கான விண்ணப்பம் அனுப்பப்படும்போது குற்றச்சாட்டின் பிரதி உடனடியாக அனுப்பி வைக்கப்படும். இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள வகையில், தெரிவிக்கப்படாத எந்தக் குற்றச்சாட்டுக்கும் குற்றம் சாட்டப்பட்டவர் பதிலளிக்க வேண்டிய தேவையில்லை. (225.3)

**606.4.** விசாரணைக்குப் பிறகு குருத்துவ உறுப்பினருக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு உண்மைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் வேண்டுமென்றே பதிவு செய்யப்பட்டிருந்தால், இப்படிப்பட்ட குற்றச்சாட்டைப் பதிவுசெய்யப்பட்டதைக் காரணமாகக் கொண்டு அந்தக் குற்றச்சாட்டில் கையொப்பமிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

**606.5.** குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்படும்போது, வழக்கை விசாரணை செய்து, சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்மானிக்கும்படி, மறைமாவட்ட ஆலோசனைக் குழு மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து அபிஷேகம் பெற்ற போதகர்களையும், இரண்டு சாமானியர்களையும் நியமிக்கும். மேற்கூறப்பட்ட இந்தக் குழுவானது மாநாட்டின் சட்டங்களுக்கேற்ப வழக்கை விசாரணை செய்து, தீர்ப்பளிப்பதற்கான மறைமாவட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை அறிவிக்கவோ இந்த ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு அதிகாரம் உண்டு. மனந்திரும்புதல், தவறுகளை அறிக்கை செய்தல், தற்காலிக நீக்கம், அனுமதிச் சான்றுகளை இரத்து செய்தல், சபை ஊழியத்திலிருந்தோ அல்லது சபை உறுப்பினர் தகுதியிலிருந்தோ அல்லது இரண்டிலுமிருந்தோ நீக்கப்படுதல், பொது இடத்தில் அல்லது தனிப்பட்ட வகையில் கண்டித்தல் அல்லது ஓராண்டுக்கு மிகைப்படாத அளவுக்கு தாற்காலிக நீக்கம் அல்லது குறிப்பிட்ட காலம் சோதனை நிலையில் ஒழுங்கு நடவடிக்கையைத் தள்ளி வைத்தல் – இவை போன்ற ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். (225.4, 540.4, 540.12, 606.11–606.12)

**606.6.** குற்றம் சாட்டப்பட்டவரோ அல்லது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோ விண்ணப்பித்தால், ஒழுங்கு நடவடிக்கைக் குழு, பிராந்திய ஒழுங்கு நடவடிக்கைக் குழுவாக இருக்கலாம். குற்றம் சாட்டப்பட்டவர் உறுப்பினர் தகுதியை உடைய மறைமாவட்டத்தின் பொறுப்பிலுள்ள பொதுக் கண்காணிப்பாளரால், ஒவ்வொரு வழக்குக்குமான பிராந்தியக் குழு நியமிக்கப்படும்.

**606.7.** எந்த நிலைமையிலும் படி 1இலுள்ள மறைமாவட்டம் ஒரு மிஷனரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது.

**606.8.** ஓர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் தீர்மானம் ஏகோபித்தத் தீர்மானமாக இருக்க வேண்டும். எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்படவேண்டும். எல்லா உறுப்பினர்களாலும் கையொப்பம் இடப்பட வேண்டும். ஒவ்வொரு குற்றத்தைப் பொருத்தமட்டிலும், கண்டுப்பிடிக்கப்பட்டதற்கேற்ப, "குற்றம்புரிந்தவர்" அல்லது "குற்றமற்றவர்" என்று குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**606.9.** மேற்கூறப்பட்ட வகையிலான ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் எந்தவொரு விசாரணையும், குற்றங்கள் பதிவு செய்யப்பட்ட மறைமாவட்டத்தின் எல்லைக்குள்ளாக, குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் குழுவினால் குறிக்கப்படும் இடத்தில் நடைபெறும்.

**606.10.** கீழே கூறப்படும் "நடைமுறை விதிகளுக்கேற்ப" விசாரணை முறைகள் நடத்தப்பட வேண்டும். (225.3–225.4, 532.9, 538.13, 609)

**606.11.** ஒரு போதகர் தகுதியில்லாத நடத்தையினால் குற்றம்சாட்டப்பட்டு, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டாலோ அல்லது குற்றம் சாட்டப்படாமல் அவர் தாமாகவே முன்வந்து குற்றத்தை அறிக்கையிட்டாலோ மறைமாவட்ட ஆலோசனைக் குழுவே விதி எண் 606.5இல் கூறப்பட்டுள்ள ஏதேனும் ஒரு ஒழுங்கு நடவடிக்கையைத் தீர்மானிக்கலாம். (540.4, 540.12)

**606.12.** ஒரு போதகர் தகுதியில்லாத நடத்தையினால் குற்றம்சாட்டப்பட்டு, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டாலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்கு முன்பாக வருவதற்கு முன்பாகவே தாமாகவே முன்வந்து குற்றத்தை அறிக்கையிட்டாலோ மறைமாவட்ட ஆலோசனைக் குழுவே விதி எண் 606.5இல் கூறப்பட்டுள்ள ஏதேனும் ஒரு ஒழுங்கு நடவடிக்கையைத் தீர்மானிக்கலாம். (540.4, 540.12)

**607.** ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினரின் தீர்மானத்திற்குப் பிறகு, குற்றஞ்சாட்டப்பட்டவரோ, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோ, அல்லது இந்தக் குற்றச்சாட்டுகளில் கையொப்பம் இட்டவர்களோ இந்தத் தீர்மானத்தை எதிர்த்து பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம். தீர்மானத்திற்கு 30 நாட்களுக்குள்ளாக மேல்முறையீடு துவங்கப்பட வேண்டும். நீதிமன்றமானது விசாரணை பற்றிய முழு பதிவுகளையும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மறு ஆய்வு செய்யும். எந்த ஒரு நபரின் உரிமைக்கும் பாதகம் விளைவிக்கும் வகையில் குறிப்பிடத்தக்க தவறு நேர்ந்துள்ளது என்று நீதிமன்றமானது கண்டுபிடிக்குமானால், முந்தைய வழக்குத் தொடர் மூலமாகவோ அல்லது தீர்மானம்

மூலமாகவோ பாதிக்கப்பட்டுள்ள நபருக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில், ஒரு புதிய விசாரணை நடத்தப்படுவதைக் கட்டளையிடுவதின்மூலம் இந்தத் தவறைச் சரிசெய்யும்.

**608.** ஒரு ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் தீர்மானம் ஒரு குற்றம்சாட்டப்பட்ட போதகருக்கு விரோதமாக இருந்து, ஊழியத்திலிருந்து தாற்காலிக நீக்கம் அல்லது அனுமதிச் சான்றுகளை இரத்து செய்தல் என்ற முடிவுகள் தீர்மானிக்கப்பட்டிருக்குமானால், அந்தப் போதகர் உடனடியாகத் தனது குருத்துவ ஊழியங்களை நிறுத்திவிட வேண்டும்; அவர் அவ்வாறு செய்ய மறுத்தால், அந்தக் காரணத்துக்காகவே அவருக்குள்ள மேல்முறையீட்டு உரிமை பறிமுதல் செய்யப்படும்.

**608.1.** ஒரு ஒழுங்கு நடவடிக்கைக்குழு தாற்காலிக நீக்கம் அல்லது அனுமதிச் சான்றுகளை இரத்து செய்தல் என்ற தீர்மானத்தை எடுக்கும்போது, குற்றம்சாட்டப்பட்ட போதகர் மேல்முறையீடு செய்ய விரும்பினால், இந்த முறையீட்டைச் செய்யும் நீதிமன்றத்தின் செயலாளரிடம், மேல்முறையீடு பற்றிய அறிவிப்பு பதிவு செய்யப்படும்போது, தனது போதகருக்கான எழுத்து மூலமான அனுமதிச் சான்றுகளை ஒப்படைக்க வேண்டும். அவர் இதன்படி செய்வதைப் பொருத்தே, மேல்முறையீடு செய்வதற்கான அவரது உரிமை நிலைநிறுத்தப்படும். இத்தகைய அனுமதிச் சான்றுகள் ஒப்படைக்கப்படும்போது, விசாரணை முடியும்வரை, மேற்கூறப்பட்ட செயலாளர் அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து வரவேண்டும்; நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அவை இரத்து செய்யப்படலாம்; அல்லது அந்தப் போதகரிடமே திருப்பிக் கொடுக்கப்படலாம்.

**608.2.** ஒரு பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் மீது, குற்றம் சாட்டப்பட்டவரோ அல்லது ஒழுங்கு நடவடிக்கைக் குழுவோ பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம். பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பிற முறையீடுகளுக்குரிய விதிகளும், நடைமுறைகளும் இந்த முறையீட்டுக்கும் பொருந்தும்.

## VI. நடைமுறை விதிகள்

**609.** ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் முன்பாக வழக்குகளுக்கு ஒரே மாதிரியான நடைமுறை விதிகள் பொது மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானம் செய்யும். இத்தகைய விதிகள் வரையறை செய்யப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட பிறகு, எல்லா நீதி வழக்கு விசாரணைகளுக்கும் இவையே இறுதியான அத்தாட்சிகளாக அமையும். பொதுச் செயலாளர் அச்சடிக்கப்பட்ட நடைமுறை விதிகளை விநியோகம் செய்யலாம். எந்த வேளையிலும் இந்த விதிகளில் மாற்றங்களையும், திருத்தங்களையும் பொது மேல்முறையீட்டு நீதிமன்றம் வரையறை செய்யலாம். இவை வரையறை செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டபிறகு, எல்லா வழக்குகளைப் பொருத்தமட்டிலும் செல்லுபடியாகும்; அத்தாட்சியாகவும் விளங்கும். அதன் பின்னர் நடத்தப்படும் எந்தவொரு வழக்கு விசாரணையும், இந்த மாற்றம் அல்லது திருத்தத்திற்கு ஏற்ற வகையிலேயே நடத்தப்பட வேண்டும். **(606.1)**

## VII. மறைமாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றம்

**610.** அமைப்பைப் பெற்ற ஒவ்வொரு மறைமாவட்டமும் ஒரு மறைமாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றத்தைக் கொண்டிருக்கும். விதி எண் 205.22படி மறைமாவட்ட மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அபிஷேகம் பெற்ற போதகர்களும், இதில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரும் உள்ளடங்கியிருக்கிறார்கள், இரண்டு சாமானியர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்த நீதிமன்றமானது சபை உறுப்பினர்கள்உள்ளூர் சபையிலோ அல்லது சபை நிர்வாகக் குழுவின் நடவடிக்கையாலோ, பாதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது துயரமடைந்திருந்தாலோ, அவர்களது முறையீடுகளை விசாரணை செய்யும். அந்த நடவடிக்கைக்கோ அல்லது அதுபற்றி விண்ணப்பத்தாரர் தெரிந்து கொண்டதற்கோ 30 நாட்களுக்குள்ளாக மேல் முறையீடு பற்றிய அறிவிப்பு எழுத்துமூலமாகக் கொடுக்கப்பட வேண்டும். இந்த அறிவிப்பு மறைமாவட்ட மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கோ அல்லது அதன் உறுப்பினர்கள் ஏதேனும் ஒருவரிடமோ அளிக்கப்பட்டு, அந்த அறிவிப்பின் பிரதி உள்ளூர் சபையின் போதகருக்கும், சம்பந்தப்பட்ட சபை நிர்வாகக் குழுவின் செயலாளருக்கும் அளிக்கப்பட வேண்டும். (205.22)

**610.1.** ஒரு சாமானியர்மீதான ஒழுங்கு நடவடிக்கைக்காக நியமிக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் நடவடிக்கைமீதான சாமானியர் மற்றும் சபைகளின் எல்லா மேல்முறையீடுகளையும் விசாரணை செய்யவும், தீர்ப்பைத் தீர்மானிக்கவும் மறைமாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

## VIII. பொது மேல்முறையீட்டு நீதிமன்றம்

**611.** பொது மாநாடு, ஒவ்வொரு நான்காண்டு காலஅளவிலும், பதில் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்கும் வரையிலும் பணிபுரிவதற்காக ஐந்து அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்களை உறுப்பினராகக் கொண்ட பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்தைத் தேர்ந்தெடுக்கும். இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்புகள் பின்வருமாறு:

**611.1.** ஏதேனும் ஒரு மறைமாவட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் அல்லது பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நடவடிக்கை மற்றும் தீர்மானத்தின் மீதான எல்லா மேல்முறையீடுகளையும் விசாரணை செய்து, தீர்ப்பை முடிவு செய்தல். (305.7)

**612.** பொது மாநாடுகளின் இடைப்பட்ட காலத்தில் பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் காலியிடம் ஏற்பட்டால், பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவின் நியமனத்தின் மூலம் அது நிறைவு செய்யப்படலாம். (317.6)

**613.** பொது மேல்முறையீட்டு நீதிமன்ற உறுப்பினர்களுக்கான செலவுப்படி, பொதுக்குழு உறுப்பினர்களின் செலவுப் படிக்குச் சமமானதாகும். இது நீதிமன்ற உறுப்பினர்கள் நீதிமன்ற அலுவல் பணியில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகும். இதற்கான தொகை பொதுச் செயலாளரால் வழங்கப்படும்.

**614.** பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நிரந்தரப் பதிவேடுகள் மற்றும் தீர்மானங்களுக்கு, பொதுச் செயலாளர் பாதுகாவலராக இருப்பார். (326.4)

## IX. பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றம்

**615.** ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றம் இருக்கும். ஒவ்வொரு பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றமும் ஒவ்வொரு பொது மாநாட்டிற்குப் பின்வரும் பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து அபிஷேகம் பெற்ற போதகர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். ஏற்படும் காலியிடங்கள் பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவினால் நிறைவு செய்யப்படும். சபை *சட்டநூல்* மற்றும் *நீதிசார்ந்த சட்டநூலிலும்* குறிப்பிட்டுள்ளபடி, பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்குரிய நடைமுறை விதிகளே பிராந்திய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நடைமுறை விதிகளாகவும் இருக்கும்.

## X. உரிமைகளுக்கான உத்தரவாதம்

**616.** ஒரு குற்றம்சாட்டப்பட்ட போதகர் அல்லது சாமானியருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்பற்றிய நியாயமும், சார்பற்றதுமான விசாரணைக்குள்ள உரிமை அவர்களுக்கு மறுக்கப்படக்கூடாது; தேவையற்ற வகையில் தள்ளிவைக்கப்படவும் கூடாது; குற்றமற்றோர் ஏற்றுக்கொள்ளப்படவும், குற்றம்புரிந்தோர் ஒழுங்கு நடவடிக்கைக்குக் கொண்டுவரப்படவும் ஏற்றவகையில், எழுத்துமூலமான குற்றச்சாட்டுகள் கூடியவிரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். குற்றம் புரிந்தவராக நிரூபிக்கப்படும் வரையில், குற்றம் புரியாதவராகக் கருதப்படுவதற்கு குற்றம்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஒவ்வொரு குற்றச்சாட்டு மற்றும் குறிப்புகளைப் பொருத்தவரையில், நியாயமான சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட வகையிலும், குணநலன் சார்ந்த நிச்சயத்துடனும் குற்றத்தை நிரூபிக்கும் பாரம் வாதிக்கு இருக்கும்.

**616.1.** ஒரு போதகருடைய ஒரு விசாரணைக்கான பதிவுகள், விசாரணையின்போது அளிக்கப்பட்ட சாட்சிகளின் வார்த்தைக்கு வார்த்தை பதிவுகள், இவை பொது மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய உதவும் நோக்கத்துடன் பதிவு செய்யப்படுகின்றன, ஆகியவை விசாரணை நடந்த மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட மறைமாவட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும். மேல்முறையீடு செய்யும் ஒவ்வொரு போதகரும் தனது முறையீடு மீதான வாய்மொழியான மற்றும் எழுத்து மூலமான விவாதம் புரிய உரிமையுண்டு.

ஒரு சாமானியனுடைய ஒரு விசாரணைக்கான பதிவுகள், விசாரணையின்போது அளிக்கப்பட்ட சாட்சிகளின் வார்த்தைக்கு வார்த்தை பதிவுகள், இவை மறைமாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய உதவும் நோக்கத்துடன் பதிவு செய்யப்படுகின்றன, ஆகியவை விசாரணை நடந்த மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட உள்ளூர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும். மேல்முறையீடு செய்யும்

ஒவ்வொரு சாமானியரும் தனது முறையீடு மீதான வாய்மொழியான மற்றும் எழுத்து மூலமான விவாதம் புரிய உரிமையுண்டு.

**616.2.** ஒரு போதகர் மேல்முறையீடு செய்யக்கூடிய உயர் நிலையில் பொது மேல்முறையீட்டு நீதிமன்றம் இருக்கிறது. ஒரு சாமானியன் மேல்முறையீடு செய்யக்கூடிய உயர் நிலையில் மறைமாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றம் இருக்கிறது.

**616.3.** தவறான நடத்தை மற்றும் *சட்ட நூலுக்கு* விரோதமான செயல் இவற்றிற்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள எந்தவொரு போதகருக்கும் மற்றும் சாமானியருக்கும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமுன்பு, நேருக்குநேராகக் குற்றம்சாட்டியவர்களைச் சந்திக்கவும், வாதியின் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் உரிமை உண்டு.

**616.4.** ஒரு சாட்சியின் சாட்சிக்கூற்று வாக்குறுதி அளிக்கப்படாமலோ, உண்மைக்கான உறுதியளிக்கப்படாமலோ கூறப்படும்போது, ஒழுங்கு நடவடிக்கைக் குழுவானது அந்தச் சாட்சியை ஏற்றுக்கொள்ளக்கூடாது; ஆதாரமாகக் கருதப்படக்கூடாது.

**616.5.** குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும்படியாக ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு முன்பாக ஒரு சாமானியரோ அல்லது போதகரோ அழைத்துவரப்படும்போது, அவர் தனது சுய தேர்வுப்படியான ஒரு ஆலோசகரைப் பிரதிநிதித்துவம் பண்ணும்படி செய் அவருக்கு எப்போதும் உரிமை உண்டு; ஆனால் அந்த ஆலோசகர் நன்மதிப்பைப் பெற்ற நசரேயத் திருச்சபை உறுப்பினராக இருக்க வேண்டும். தனக்கு எதிராக எந்தவொரு எழுத்துமூலமான குற்றச்சாட்டும் விசாரணையிலிராத, ஒழுங்காக அமைக்கப்பட்ட சபை ஒன்றின் உறுப்பினர் நன்மதிப்பைப் பெற்றுள்ளவராகக் கருதப்படுவார்.

**616.6.** குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு செயலுக்காக, ஒரு போதகரோ அல்லது சாமானியரோ பதிலளிக்க வேண்டிய தேவையில்லை; குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற காரியத்துக்கான எந்தச் சாட்சியும், எந்த விசாரணையிலும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட முடியாது. ஆனாலும், இப்படிப்பட்ட செயலால் பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்கும் கீழ் இருந்தாலோ அல்லது அந்தக் குற்றச்சாட்டையோ அல்லது குற்றப்பதிவையோ ஏற்படுத்தும் அளவிற்கான மனநிலையில் இல்லாதபோது இந்த ஐந்து ஆண்டுகள் என்ற நிலைப்பாடு பாதிக்கப்பட்ட நபர் 18 வயதாகும் வரையிலோ அல்லது மனநிலை சரியாகும் வரையிலோ துவங்காது. வயது வரம்பிற்குக் கீழ் இருக்கும் பிள்ளைகளைப் பாலியல்ரீதியாகத் துன்பத்தில் ஆழ்த்துவதற்கு ஒரு காலக்கெடு என்று ஒன்றும் கிடையாது. பதினெட்டு வயதிற்குக் கீழ் இருக்கும் எந்த மனிதனும் மைனர் என்று அழைக்கப்படுவார்கள். இது அந்த நாட்டின் அல்லது மாநிலத்தின் விதிகளின் படி கூடுதல் வயதாகவும் இருக்கலாம். அந்நிலையில் அது பொருத்தமானதாக எடுத்துக்கொள்ளப்படும்.

ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் ஒரு போதகர் தவறு செய்திருக்கிறார் என்று நிரூபிக்கப்பட்டால், அவர் தன்னுடைய சான்றுகளை மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒழுங்கு நடவடிக்கைக் குழு ஏற்கெனவே இதில் சம்பந்தப்பட்டிருக்காவிட்டால், அந்தப் போதகரின் விண்ணப்பத்தின்படி,

மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது இந்தக் குற்றச்சாட்டுக்களின் சூழ்நிலையை ஆராய்ந்து, தவறேதும் இல்லை என்று கண்டால் அந்தச் சான்றுகளைத் திரும்பக் கொடுக்கலாம்.

**616.7.** எந்தவொரு போதகரோ அல்லது சாமானியரோ ஒரே குற்றத்திற்காக இரண்டு முறை விசாரணைக்குட்படுத்தப்படக் கூடாது. ஆனால் ஒரு ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் முன்னர் நடைபெற்ற விசாரணைக்கான குற்றத்தை மீண்டும் செய்ததினால் மறுபடியும் விசாரணைக்குட்பட்டுள்ளதாக ஒழுங்கு நடவடிக்கைக் குழுவால் கண்டுபிடிக்கப்படுமானால், மேற்கூறப்பட்ட உரிமை அவருக்குரியதாகாது.

## பாகம் VIII

# சாக்கிரமெந்துகள் மற்றும் வழிபாட்டு முறைமைகள்

குறிப்பு: இந்தச் சாக்கிரமெந்துகள் மற்றும் வழிபாட்டு முறைமைகள் என்ற இந்தச் *சட்டநூல்* பகுதியில் எந்த மாற்றங்கள் இருந்தாலும் அல்லது கூடுதல் விவரங்களைச் சேர்ப்பதாக இருந்தாலும் பொது மாநாட்டின் நடவடிக்கைத் தேவைப்படுகிறது.


கர்த்தருடைய இராப்போஜனம்

விசுவாசிகளின் ஞானஸ்நானம்

சிசுக்கள் அல்லது சிறுபிள்ளைகள் ஞானஸ்நானம்

சிசுக்கள் அல்லது சிறுபிள்ளைகளை அர்ப்பணம் செய்தல்

சபை உறுப்பினர்களை வரவேற்றல்

திருமணம்

அடக்க ஆராதனை

சபை அலுவலர்களைப் பணியமர்த்துதல்

உள்ளூர் சபையை ஒழுங்குபடுத்துதல்

சபையை அர்ப்பணித்தல்

## I. சாக்கிரமெந்துகள்

## 700. கர்த்தருடைய இராப்போஜனம்

பொருத்தமான பிரசங்கம், 1 கொரிந்தியர் 11:23–29; லூக்கா 22:14–20 அல்லது வேறு பொருத்தமான வேத வாசிப்பதின் மூலமும் ஆண்டவருடைய இராப்போஜனம் அளிப்பதுபற்றிய அறிமுகம் கொடுக்கப்பட வேண்டும். அதன் பிறகு போதகர் கீழ்க்கண்ட அழைப்பை விடுக்க வேண்டும்.

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட இந்தத் திருவிருந்து ஒரு சாக்கிரமெந்தாகும். அது அவருடைய வாழ்க்கையையும், அவருடைய பாடுகளையும், அவருடைய தியாக மரணத்தையும், உயிர்த்தெழுதலையும், அவர் மறுபடியுமாக வருவார் என்ற நம்பிக்கையையும் பறைசாற்றுகிறது. அது அவர் திரும்பவும் வருமளவும் ஆண்டவருடைய மரணத்தைக் குறித்து எடுத்துக்காட்டுகிறது.

இந்தத் திருவிருந்தானது கிறிஸ்து ஆவியானவரின் மூலமாக இங்கிருக்கும் ஒரு கிருபையின் வழியாக இருக்கிறது. அது கிறிஸ்து செய்த கிரியைகளுக்காகக் காண்பிக்கப்படும் பயபக்தியோடுள்ள நன்றியோடும் பாராட்டுதலோடும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

மெய்யாகவே மனவருத்தப்பட்டு, தங்களுடைய பாவங்களையெல்லாம் விட்டுவிட்டு, இரட்சிப்பிற்காக கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்குபெறும்படி அழைக்கப்படுகிறீர்கள். நாம் வாழ்க்கையிலும், இரட்சிப்பிலும் புதுப்பிக்கப்பட்டு, ஆவியானவரால் ஒன்றாக்கப்படுவதற்காக இந்த மேசைக்கு வருகிறோம்.

திருச்சபையோடு ஐக்கியப்பட்டு, நாம் நம்முடைய விசுவாசத்தை அறிக்கை செய்கிறோம்; கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து எழும்பினார், கிறிஸ்து மறுபடியுமாக வருவார். எனவே நாம் ஜெபிப்போம்:

போதகர் பாவ அறிக்கை மற்றும் மன்றாட்டு ஜெபங்களை ஏறெடுத்தபின் பின்வரும் பிரதிஷ்டை ஜெபத்தைச் செய்யவேண்டும்.

பரிசுத்த தேவனே,

நாங்கள் இந்த மேசையின் அருகே உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கூடியிருக்கிறோம். அவரே உம்முடைய ஆவியானவரின் மூலமாக ஏழைகளுக்கு நற்செய்தியையும், பிடிபட்டவர்களுக்கு விடுதலையையும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலையையும் பறைசாற்றும்படியாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார். கிறிஸ்து சுகவீனர்களைச் சுகமாக்கினார், பசியாயிருந்தவர்களுக்கு உணவளித்தார், பாவிகளோடு உண்டார், மற்றும் பாவ மன்னிப்பிற்காக ஒரு புதிய உடன்படிக்கையை நிறுவினார். நாம் அவர் மறுபடியும் வருவார் என்ற நம்பிக்கையில் வாழ்கிறோம்.

அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவிலே, அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, தமது சீஷர்களுக்குக் கொடுத்து, ‘‘இது உங்களுக்காகக்

கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்.''

பின்னர் போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து. ஸ்தோத்திரம்பண்ணி, தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து, ''நீங்கள் எல்லோரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்'' என்றார். எங்களுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம், ஆமென்.

(மத்தேயு 26:27–29; லூக்கா 22:19)

அவருடைய இரத்தத்தால் மீட்கப்பட்ட நாங்கள் இதன்மூலமாக இந்த உலகத்திற்குக் கிறிஸ்துவின் சரீரமாய் இருக்க அருள்புரியும். உம்முடைய பரிசுத்த ஆவியை எங்கள்மேலும், அப்பத்தின் மேலும், ரசத்தின் மேலும் ஊற்றும். உம்முடைய ஆவியின் வல்லமையைக் கொண்டு கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்திற்கு ஞாபகச் சின்னங்களாக ஆசீர்வதியும். இதன்மூலமாக நாங்கள் இந்த உலகத்திற்கு கிறிஸ்துவின் சரீரமாக இருந்து, அவருடைய இரத்தத்தால் மீட்கப்படுவோம்.

கிறிஸ்துவின் வெற்றியில் அவர் வரும்வரையிலும் இந்த உலகம் முழுவதற்கும் அவருடைய ஊழியத்தில் நாங்கள் இணைந்திருக்கச் செய்யும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே. ஆமென்.

இப்போது நம்முடைய இரட்சகரான கிறிஸ்து நமக்குப் போதித்தது போல நாம் ஜெபிப்போம்: (ஆண்டவருடைய ஜெபத்தை இப்போது சபையார் அனைவரும் ஜெபிக்க வேண்டும்)

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

அப்பத்தை விநியோகிப்பதில் பங்கெடுப்பதற்கு முன்பாக, போதகர் கூற வேண்டியதாவது:

உன்னைக் குற்றமற்றவனாக்கி, நித்திய ஜீவனைப் பெறும்வரை காப்பாற்றும்படி, உனக்காகக் கொடுக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. கிறிஸ்து உனக்காக மரித்தார் என்பதை நினைவுகூரும்படி இதை எடுத்துப் புசித்து நன்றி சொல்வாயாக.

திராட்சரசத்தை விநியோகிப்பதில் பங்கெடுப்பதற்கு முன்பாக, போதகர் கூற வேண்டியதாவது:

உன்னைக் குற்றமற்றவனாக்கி, நித்திய ஜீவனைப் பெறும்வரை காப்பாற்றும்படி, உனக்காகச் சிந்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமாயிருக்கிறது. கிறிஸ்து உனக்காக மரித்தார் என்பதை நினைவுகூரும்படி இதைப் பருகி, நன்றியுள்ளவனாக இரு.

அனைவரும் பங்கெடுத்தபின்பு போதகர் இறுதியாக நன்றிகூறுதல் மற்றும் ஒப்படைப்பு ஜெபத்தை ஏறெடுக்கலாம் (29.5, 515.4, 532.7, 533.2, 534.1)

**குறிப்பு: பரிசுத்த இராப்போஜனத்தில் புளிக்க வைக்காத திராட்சரசம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.**

## 701. விசுவாசிகளின் ஞானஸ்நானம்

அன்பானவர்களே: கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் விசுவாசத்தினால் பங்கெடுப்பதையும், அவருடைய சரீரமாகிய திருச்சபைக்குள் இணைக்கப்படுவதையும் குறிக்கும் ஒரு சாக்கிரமெந்துவாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவே ஆண்டவராகவும், இரட்சகராகவும் இருக்கிறார் என்பதைப் பிரகடனப்படுத்தும் ஒரு கிருபையின் வழியாக இருக்கிறது.

கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறும் அனைவரும் அவருடைய மரணத்தில் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எடுத்துரைக்கிறார். கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததைப் போலவே, நாமும் நம்முடைய புது வாழ்வில் நடப்பதற்காக எழுப்பப்பட்டிருக்கிறோம். இதற்காகவே நாம் ஞானஸ்நானத்தின் மூலமாக அவரோடு அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறோம். நாம் அவருடைய மரணத்தில் அவரோடு ஐக்கியப்பட்டிருப்பதைப் போல அவருடைய உயிர்த்தெழுதலிலும் அவரோடு ஐக்கியப்பட்டிருப்போம்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற வந்திருக்கும் கிறிஸ்தவ விசுவாசமானது அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தினால் உறுதிப்படுத்தப்படுகிறது. நாம் அதை அறிக்கையிடுவோம்:

போதகர் விசுவாசப் பிரமாணத்தை உறுதிபடுத்தும்படியாக சபையாரை வழிநடத்துவார்.

‘‘வானத்தையும், பூமியையயும் படைத்த நம்முடைய பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறோம்;

‘‘அவருடைய ஒரே பேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தல் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு பாதாளத்திலிறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

"பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்; இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த திருச்சபையும், பரிசுத்தவான்களின் ஐக்கியமும், பாவ மன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்."

நீர் இந்த விசுவாசத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறீரா?

*பதில்:* சம்மதிக்கிறேன்.

நீர் இயேசு கிறிஸ்துவை உமது சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் அறிக்கையிடுகிறீரா? அவர் தற்போது உம்மை இரட்சிக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீரா?

*பதில்:* ஆம் விசுவாசத்தினால் அறிவேன்.

இயேசு கிறிஸ்துவின் திருச்சபையின் உறுப்பினராக நீர் உம்முடைய வாழ்நாள் முழுவதும் அவரைப் பின்பற்றி, கிருபையிலும், தேவனுடைய மற்றும் அயலானின் அன்பிலும் வளருவீரா?

*பதில்:* தேவனுடைய உதவியோடு நடப்பேன்.

ஞானஸ்நானம் பெறுபவரின் முழுப்பெயரையும் அறிவித்தபின்பு, தெளித்தல், ஊற்றுதல் அல்லது மூழ்குதல் இவற்றில் தெரிந்துகொள்ளப்பட்ட ஞானஸ்நான முறைமையைப் பின்பற்றி, போதகர் கூற வேண்டியது:

_________________, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

## 702. சிசுக்கள் அல்லது சிறு பிள்ளைகளின் ஞானஸ்நானம்

ஆதரவளிப்பவர்கள் பிள்ளையை (அல்லது பிள்ளைகளை) போதகரின் முன்னால் கொண்டுவந்தபிறகு, போதகர் கூற வேண்டியது:

அன்பானவர்களே: ஞானஸ்நானமானது, புதுவாழ்வு அளிக்கக்கூடிய ஆண்டவரின் கிருபையை நமக்கு அளிக்கிறது என்று நாம் கருதாவிட்டாலும்கூட, கிறிஸ்துவானவர் புதிய உடன்படிக்கையின் அடையாளமாகவும், முத்திரையாகவும் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை அளித்தார் என்று நாம் விசுவாசிக்கிறோம். கிறிஸ்துவுக்குள்ளான ஆண்டவருடைய பெரிதான கிருபையின் அடிப்படையில், ஆண்டவர் கிருபையாய் இந்தக் குழந்தையை ஏற்றுக்கொள்கிறார் என்பதற்கு இந்தக் கிறிஸ்தவ ஞானஸ்நானம் அடையாளமாக இருக்கிறது.

இந்தக் குழந்தையை ஞானஸ்நானத்திற்காக முன்னால் கொண்டுவந்ததின் மூலம் நீர் உமது சுயமான கிறிஸ்தவ விசுவாசத்திற்கும், இந்தக் குழந்தையைச் சிறு பிராயத்திலேயே கிறிஸ்துவைத் தனது இரட்சகராக அறிந்துகொள்ளும் அறிவில் வழிநடத்துவதே உமது நோக்கமாக இருக்கிறது என்பதற்கு சாட்சிபகருகிறீர். இந்தக் குழந்தை கற்றறியும் வயதை அடைந்தவுடனே, இந்த பரிசுத்த சாக்கிரமெந்தின்

இயல்பையும், நோக்கத்தையும் அதற்குக் கற்றுக் கொடுப்பதும், இந்தக் குழந்தை வழிவிலகிப் போகாமல் அது சரியாகப் போதிக்கப்படுவதைக் கவனிப்பதும், அதன் இள மனதை பரிசுத்த வேதாகமத்தை நோக்கிச் செல்லும்படி வழிநடத்துவதும், தீய உறவுகள் மற்றும் பழக்க வழக்கங்களிலிருந்து அதைத் தடுப்பதும் உமது கடமையாகிறது; இந்தக் குழந்தையை ஆண்டவருக்குரிய போஷாக்கிலும், கண்டிப்பிலும் வளர்ப்பது உம்மேல் விழுந்த பொறுப்பாகிறது.

நீர் ஆண்டவரின் துணையோடு இவ்வாறு செய்ய முயற்சிப்பேன் என்று வாக்களிப்பீரா? அப்படியானால், ''வாக்களிப்பேன்'' என்று கூறும்.

போதகர் அந்தக் குழந்தையின் பெயரைச் சொல்லுமாறு பெற்றோரிடமோ அல்லது போஷகர்களிடமோ கேட்க வேண்டும், அதன்பிறகு அந்தக் குழந்தையின் முழுப்பெயரையும் அறிவித்து ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். கீழ்க்கண்டவாறு சொல்ல வேண்டும்,

____________________, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

*போதகர்*: கிறிஸ்தவ விசுவாசத்தின் சமூகத்திற்குள் இந்தக் குழந்தை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதையும் ஞானஸ்நானம் அடையாளப்படுத்துகிறது. நான் தற்போது சபையாராகிய உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்தப் பெற்றோர் இந்தக் குழந்தைக்கான பொறுப்புகளை நிறைவேற்றும்போது அவர்களுக்கு ஆதரவும், ஊக்கமும் அளிக்கவும், ஆவிக்குரிய முதிர்ச்சி அடையும்படி போஷிப்பில் வளர இந்தக் குழந்தைக்கு உதவவும், நீங்கள் உங்களை கிறிஸ்துவின் சரீரமாக ஒப்புக்கொடுப்பீர்களா?

*பதில்:* ஆம், உறுதியளிக்கிறோம்.

இதன்பிறகு போதகர் கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுக்கலாம் அல்லது சுயமாக ஜெபிக்கலாம்.

பரலோக பிதாவே, நீர் இந்தக் குழந்தையை உமது அன்பான பராமரிப்பில் ஏற்றுக்கொள்ளுமாறு ஜெபிக்கிறோம். உமது பரலோக கிருபையினால் இவனை (அல்லது இவளை) அபரிமிதமாகப் போஷித்தருளும்; சிறு பிராயத்தின் ஆபத்துக்களின் மத்தியில் இவனை (அல்லது இவளை) பத்திரமாகக் கொண்டு செல்லும்; வாலிபப் வயதின் சோதனைகளிலிருந்து இவனை (அல்லது இவளை) விலக்கிக் காத்தருளும்; கிறிஸ்துவைத் தனது இரட்சகராக அறிந்துகொள்ளும் அறிவில் வழிநடத்தியருளும்; ஞானத்திலும், அறிவிலும், தேவன் முன்பும் மனிதர் முன்பும் தயவிலும், இவன் (இவள்) வளர்ச்சியடையும்படி உதவிசெய்து, கடைசிமட்டும் இவனை (அல்லது இவளை) பாதுகாத்தருளும். தங்கள் ஞானமுள்ள யோசனைகளினாலும், பரிசுத்த நன்னடக்கையினாலும், இந்தக் குழந்தையின் பெற்றோர் இந்தக் குழந்தைக்கும், உமக்குமுள்ள தங்கள் பொறுப்புக்களை உண்மையாய் நிறைவேற்றும்படி, அவர்களை உமது அன்பான பராமரிப்பினால் தாங்கியருளும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே. ஆமென்.

## II. வழிபாட்டு முறைமைகள்

## 703. சிசுக்கள் மற்றும் சிறு குழந்தைகளை அர்ப்பணம் செய்தல்

ஆதரவளிப்பவர்கள் பிள்ளையை (அல்லது பிள்ளைகளை) போதகரின் முன்னால் கொண்டுவந்தபிறகு, போதகர் கூற வேண்டியது:

“அப்பொழுது, சிறுபிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” (மத்தேயு 19:13–14).

இந்தக் குழந்தையை அர்ப்பணம் செய்வதற்காக முன்னால் கொண்டுவந்திருப்பதின்மூலம், நீர், கிறிஸ்தவ கொள்கைமீதுள்ள உமது விசுவாசத்தை வெளிப்படுத்துவதோடு, இந்தக் குழந்தை இளம் வயதிலேயே ஆண்டவரின் சித்தத்தை அறிந்து அதைப் பின்பற்றும்படியும், ஒரு கிறிஸ்தவனாக (கிறிஸ்தவளாக) வாழ்ந்து, மரித்து நித்திய ஆசீர்வாத நிலைக்குள் வரவேண்டுமென்ற உமது வாஞ்சையையும் அறிவிக்கிறீர்.

இந்தப் பரிசுத்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, இவனை (இவளை) சிறு வயதிலிருந்தே ஆண்டவரைப் பற்றிய பயத்தில் வளர்ப்பதும், இவன் (இவள்) வழிவிலகிப் போகாமல் சரியான கல்வி பெறுவதைக் கவனிப்பதும், இவனது (இவளது) இள மனதைப் பரிசுத்த வேதாகமத்தை நோக்கித் திருப்புவதும், இவனது (இவளது) கால்கள் அடைக்கலத்தை நோக்கிச் செல்லும்படி வழிநடத்துவதும், தீய உறவுகள் மற்றும் பழக்கங்களிலுமிருந்து இவனை (இவளை) தடுப்பதும் உமது கடமையாகிறது; இந்தக் குழந்தையை ஆண்டவருக்குரிய போஷாக்கிலும், கண்டிப்பிலும் வளர்ப்பது உம்மேல் விழுந்த பொறுப்பாகிறது.

நீர் ஆண்டவரின் துணையோடு இவ்வாறு செய்ய முயற்சிப்பேன் என்று வாக்களிப்பீரா? அப்படியானால், “வாக்களிப்பேன்” என்று கூறும்.

*போதகர்*: கிறிஸ்தவ விசுவாசத்தின் சமூகத்திற்குள் இந்தக் குழந்தை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதையும் ஞானஸ்நானம் அடையாளப்படுத்துகிறது. நான் தற்போது சபையாராகிய உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்தப் பெற்றோர் இந்தக் குழந்தைக்கான பொறுப்புகளை நிறைவேற்றும்போது அவர்களுக்கு ஆதரவும், ஊக்கமும் அளிக்கவும், ஆவிக்குரிய முதிர்ச்சி அடையும்படி போஷிப்பில் வளர இந்தக் குழந்தைக்கு உதவவும், நீங்கள் உங்களை கிறிஸ்துவின் சரீரமாக ஒப்புக்கொடுப்பீர்களா?

*பதில்:* ஆம், உறுதியளிக்கிறோம்.

எங்கள் அன்பான பரலோக பிதாவே, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, இங்கே, இப்போது ______________________ என்ற இந்தக் குழந்தையை அர்ப்பணம் செய்கிறோம். ஆமென்.

இதன்பிறகு குருவானவர் கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுக்கலாம் அல்லது சுயமாக ஜெபிக்கலாம்.

பரலோக பிதாவே, நீர் இந்தக் குழந்தையை உமது அன்பான பராமரிப்பில் ஏற்றுக்கொள்ளுமாறு ஜெபிக்கிறோம். உமது பரலோகக் கிருபையினால் இவனை (அல்லது இவளை) அபரிமிதமாகப் போஷித்தருளும்; சிறு வயதின் ஆபத்துக்களின் மத்தியில் இவனை (அல்லது இவளை) பத்திரமாகக் கொண்டு செல்லும்; வாலிபப் வயதின் சோதனைகளிலிருந்து இவனை (அல்லது இவளை) விலக்கிக் காத்தருளும்; கிறிஸ்துவைத் தனது இரட்சகராக அறிந்துகொள்ளும் அறிவில் வழிநடத்தியருளும்; ஞானத்திலும், அறிவிலும், தேவன் முன்பும் மனிதர் முன்பும் தயவிலும், இவன் (இவள்) வளர்ச்சியடையும்படி உதவிசெய்து, கடைசிமட்டும் இவனை (அல்லது இவளை) பாதுகாத்தருளும். தங்கள் ஞானமுள்ள யோசனைகளினாலும், பரிசுத்த முன்னடக்கையினாலும், இந்தக் குழந்தையின் பெற்றோர் இந்தக் குழந்தைக்கும், உமக்குமுள்ள தங்கள் பொறுப்புக்களை உண்மையாய் நிறைவேற்றும்படி, அவர்களை உமது அன்பான பராமரிப்பினால் தாங்கியருளும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே. ஆமென்.

## 704. சபை உறுப்பினர்களை வரவேற்றல்

உறுப்பினர்களாக ஆக விரும்புகிறவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிட்டு, நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகளும், வழக்கங்களும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டிருக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் சபைக்கு முன்பாக நிற்க முன்வர வேண்டும். போதகர் பின்வருமாறு கூற வேண்டும்:

அன்பானவர்களே: இயேசு கிறிஸ்துவின் சபையில் ஒன்றாக ஐக்கியப்படுவதின்மூலம் நாம் பெறும் சிலாக்கியங்களும், ஆசீர்வாதங்களும் மிகவும் புனிதமானவையாகவும், விலைமதிப்பற்றவையாகவும் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஐக்கியம், அக்கறை மற்றும் ஆலோசனையானது தேவனுடைய குடும்பத்தைத் தவிர வேறு எங்கும் பார்க்கமுடியாது.

திருவசன போதனையின்மூலமாக போதகர்கள் தெய்வீகப் பராமரிப்பை அளிக்கிறார்கள். சமூகமாக ஒன்றுகூடி வழிபடுவதின்மூலமாகப் பலனளிக்கும் தூண்டுதல்களைப் பெறுகிறோம். சேவையில் ஒத்துழைப்பு வேறுவகையில் செய்து முடிக்கப்பட முடியாத காரியங்களையும் நிறைவேற்றும்படி செய்கிறது.

இன்று நாம் திருச்சபையின் கோட்பாடுகளையும் பழக்கங்களையும் மறுபடியுமாக உறுதிபடுத்துவோம்.

*நாம் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்.*

*மனிதர்கள் பாவத்தில் பிறந்திருக்கிறார்கள் என்றும், கிறிஸ்துவின் மூலம் மன்னிப்பின் கிரியையும், பரிசுத்த ஆவியானவரின் மூலம் மறுபிறப்பும் அவர்களுக்குத் தேவை என்றும், இதைத் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரின் உள்ளான நிறைவினால் இருதய சுத்திகரிப்பு அல்லது முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலின் தீவிரமான பணி நடைபெறுகிறது என்றும், இந்தப் பணிகள் ஒவ்வொன்றுக்கும் பரிசுத்த ஆவியானவரின் கிருபை சாட்சி கொடுக்கிறது என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.*

*நம்முடைய ஆண்டவர் திரும்பவும் வருவார் என்றும், மரித்தோர் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்றும், அனைவரும் வெகுமதியைப் பெறவோ அல்லது தண்டனையைப் பெறவோ இறுதி நியாயத்தீர்ப்பு வரவேண்டும் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.*

குறிப்பு: போதகர் பின்வரும் ஒப்புக்கொள்ளப்பட்ட விசுவாச அறிக்கையை மாற்றாகப் பயன்படுத்தலாம் (சட்டநூல் விதி 20).

இன்று நாம் மறுபடியுமாக நசரேயத் திருச்சபையின் ஒப்புக்கொள்ளப்பட்ட விசுவாச அறிக்கையை உறுதிபடுத்துவோம்:

*பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறோம். வேதாகமத்தின் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு பகுதிகளில், விசுவாசத்திற்கும், கிறிஸ்தவ வாழ்வுக்கும் போதுமான சத்தியங்கள் தெய்வீக ஏவுதலினால் எழுதப்பட்டிருக்கின்றன என்பதை விசுவாசிக்கிறோம். மனிதன் வீழ்ந்துபோன சுபாவத்தோடு பிறந்திருப்பதினால் தீய காரியங்களைத் தொடர்ந்து செய்கிறான் என்பதை விசுவாசிக்கிறோம். கடைசிவரை மனந்திரும்பாத பாவிகள் அனைவரும் நம்பிக்கையில்லாதவர்களாகவும், நித்தியமாகத் தொலைந்துபோனவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை விசுவாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பெறப்படும் பாவநிவிர்த்தியானது முழு மனுக்குலத்திற்கும் உரியது; மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அனைவரும் நியாயந்தீர்க்கப்பட்டு, மறுபிறப்பைப் பெற்று, பாவத்தின் அதிகாரத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறார்கள் என்றும் விசுவாசிக்கிறோம். விசுவாசிகள் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்றும், இது மறுபிறப்பைத் தொடர்ந்து நடக்கவேண்டும் என்றும், இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது கொண்டிருக்கும் விசுவாசத்தினால் ஏற்படுகிறது என்றும் விசுவாசிக்கிறோம். இந்தப் புதிய பிறப்பிற்கும், விசுவாசிகள் பூரணமாகப் பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் பரிசுத்த ஆவியானவரே சாட்சியாக இருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறோம். நம்முடைய ஆண்டவர் மறுபடியும் வருவார் என்றும், மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்றும், கடைசி நியாயத்தீர்ப்பு நிகழும் என்றும் விசுவாசிக்கிறோம். (சட்டநூல், விதிகள் 20.1–20.8).*

நீங்கள் முழு இருதயத்தோடு இந்தச் சத்தியங்களை விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் “ஆம், விசுவாசிக்கிறோம்” என்று கூறுங்கள்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உமது சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் அறிக்கையிடுகிறீர்களா? அவர் தற்போது உங்களை இரட்சிக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

*பதில்:* ஆம், விசுவாசிக்கிறோம்.

நசரேயத் திருச்சபையோடு இணைய விருப்பும் நீங்கள், உங்களுடைய இருதயம், ஆத்துமா, சிந்தனை மற்றும் பலத்தோடு தேவனை நேசித்து, உங்களை நேசிப்பதைப் போல உங்களுடைய அயலானையும் கிறிஸ்தவ பண்பு மற்றும் நடத்தை உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளதைப் போல ஒப்புக்கொள்கிறீர்களா? நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகள், ஐக்கியம் மற்றும் கிரியைகளின் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தேவனுடைய ஊழியத்திற்கு உங்களை ஒப்புக்கொடுக்கிறீர்களா? நீங்கள் நசரேயத் திருச்சபையின் போதனைகளுக்கு ஆதரவளித்து, தேவனுடைய உதவியோடு, திருச்சபையின் சாட்சியை உயர்த்தும் விதத்தில் அதே வழியில் நடப்பீர்களா? தாழ்மையான நடக்கை, தேவனுக்கடுத்த உரையாடல், பரிசுத்த ஊழியம் மற்றும் எவ்வகையிலும் தேவனை மகிமைப்படுத்த முயற்சி செய்வதற்கு உங்களுடைய ஆதாரங்களைப் பக்தியோடு கொடுத்து, கிருபையின் வழிகளில் உண்மையுள்ளவராகப் பங்குகொள்வீர்களா? உங்களுடைய வாழ்க்கையில் எல்லா நாட்களிலும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி, எல்லாத் தீமைகளிலிருந்தும் விலகி, தேவனுக்குப் பயப்படும் பயத்தால் இருதயத்திலும் வாழ்க்கையிலும் ஏற்படும் பரிபூரண பரிசுத்தத்தைத் தேடுவீர்களா?

*பதில்:* ஆம், அப்படியே செய்வேன்.

நசரேயத் திருச்சபைக்குள்ளும் மற்றும் அதனுடைய உள்ளூர் சபையின் ஐக்கியத்திற்குள்ளும்அதனுடைய பலன்கள் மற்றும் பொறுப்புகளோடு சேர்த்து உங்களை நான் வரவேற்கிறேன். திருச்சபையின் மேன்மையான தலையானவர் உங்களை ஆசீர்வதித்து, உங்களைக் காத்துக்கொள்வாராக. அவரே நீங்கள் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உண்மையுள்ளவராக உங்களை இருக்கச் செய்வாராக. உங்களுடைய வாழ்க்கையும், சாட்சியும் ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அக்கறையளிப்பதிலும் பிறரை கிறிஸ்துவிடம் வழிநடத்துவதிலும் செயல்பூர்வமாக இருப்பதாக.

## 705. திருமணம்

இந்த உலகத்தில் பல்வேறு வகையான மற்றும் கலாச்சார பின்னணியைக் கொண்டதாக திருமணம் காணப்படுவதால், நசரேயத் திருச்சபையானது பின்வரும் கொள்கைகளை முன்வைக்கிறது:

கணவன் மற்றும் மனைவிக்கிடையே சம உரிமை

கிறிஸ்துவிற்கும், அவருடைய திருச்சபைக்கும் இருக்கும் உறவை வெளிப்படுத்தும் விதத்தில் இருக்கும் உடன்படிக்கையின் உறவு

சட்டரீதியாகவும், கலாச்சாரரீதியாகவும் சரியான மொழிகளைப் பயன்படுத்துதல். இந்த வழிபாட்டு முறையானது எந்த ஒரு நாட்டின் சட்டரீதியான விதிகளுக்கு பதிலாகக் கொள்ளவோ அல்லது அவை இல்லாமல் செய்யவோ கொடுக்கப்படவில்லை.

பின்வரும் வழிபாட்டு முறையானது ஒரு ஆதாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பரிசுத்த விவாகத்திற்காகக் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று குறித்த நேரத்தில் திருமணம் செய்து கொள்ளவிரும்புகிறவர்கள் – சட்டப்படி தகுதி பெற்றவர்களாக உறுதிப்படுத்தப்பட்டு, போதகரால் கவனமான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் கொடுத்தப்பிறகு – சேர்ந்து நிற்க வேண்டும். அவர்கள் இருவரும் போதகரைப் பார்த்தப்படி இருப்பார்கள். போதகர் சபையாரைப் பார்த்துக் கூறவேண்டியது:

அன்பானவர்களே: ஏதேன் தோட்டத்தில் பாவமறியாமல் இருந்த காலத்தில் தேவனால் நிறுவப்பட்டதும், ஏற்படுத்தப்பட்டதும், கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையேயுள்ள ஐக்கியத்திற்கு அடையாளமாகக் கூறப்பட்டதுமான கௌரவமிக்க நிலையான, பரிசுத்த விவாகத்தில் (மணவாளனின் பெயர்) மற்றும் (மணவாட்டியின் பெயர்) ஒன்றாக இணைக்கும்படியாக, இந்தச் சாட்சிகளின் முன்பாகவும், ஆண்டவரின் பிரசன்னத்திலும் நாம் இங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறோம். கலிலேயாவிலுள்ள கானாவூரிலே நடந்த விவாகத்தில் கிறிஸ்து பிரசன்னராயிருந்து, தமது முதல் அதிசயத்தைச் செய்து விவாக அமைப்பை மகிமைப்படுத்தி அழகாக குறித்தார். இது எல்லா மனிதருக்கிடையேயும் கௌரவமானது என்று எபிரெய நிருபத்தை எழுதியவரால் போற்றப்பட்டுள்ளது. எனவே அலட்சியத்தோடு இந்த விவாகத்தில் கலந்துகொள்ளாமல் மதிப்போடும், கவனத்தோடும் ஆண்டவரைப் பற்றிய பயத்தோடும் கலந்து கொள்வோமாக.

இந்தப் பரிசுத்த விவாகத்தில் இணையும்படி இங்கு இவர்கள் வந்திருக்கிறார்கள்.

திருமணம் செய்துகொள்ளவிரும்புகிறவர்களைப் பார்த்து போதகர் கூறவேண்டியதாவது:

______________ மற்றும் __________________ நீங்கள் இருவரும் விவாகத்தில் இணைவதற்காக தேவனுடைய பிரசன்னத்தில் நின்றுகொண்டிருக்கும் இந்த வேளையில் நான் உங்களிடம் கேட்கவும், சொல்லவும் செய்கிறேன், திருமணம் என்பது நிரந்தரமான ஒரு அர்ப்பணிப்பாகும். உங்களுடைய திருமணமானது, வாழ்நாள் முழுவதும் நிலைத்திருப்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. மரணம் மட்டுமே உங்களைப் பிரிக்கும்.

நீங்கள் இன்று செய்துகொள்ளும் இந்த வாக்குறுதிகள் எந்த மாற்றமும் இல்லாமல் கைக்கொள்ளப்பட்டு, தேவனுடைய சித்தத்தைத் தேடி, அதன்படி செய்ய நினைக்கும்போது, அவருடைய பிரசன்னத்தால் உங்களுடைய வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படும். அவருடைய சமாதானம் உங்களுடைய வீட்டில் இருக்கும்.

இதைத் தொடர்ந்து போதகர் மணமகனைப் பார்த்து:

________________________, பரிசுத்த விவாகத்தில் தேவனின் கட்டளைப்படி இணைந்து வாழ, இந்தப் பெண்ணை உன் மணவாழ்க்கையின் மனைவியாக

ஏற்றுக்கொள்வாயா? நீ அவளிடம் அன்புசெலுத்தி, கௌரவத்தோடு, அவளுக்கு ஆறுதலளித்து நோயிலும், ஆரோக்கியத்திலும், அவளுக்கு ஆறுதலளித்து, மற்றவர்களை விடுத்து, இவளோடு மட்டுமே இணைந்து, நீங்கள் உயிர் வாழும் காலம் முழுவதும் இருப்பாயா?

*பதில்:* இருப்பேன்.

இதைத் தொடர்ந்து போதகர் மணமகளைப் பார்த்து:

__________________________, பரிசுத்த விவாகத்தில் தேவனின் கட்டளைப்படி இணைந்து வாழ, இந்த ஆணை உன் மணவாழ்க்கையின் கணவனாக ஏற்றுக்கொள்வாயா? நீ அவரிடம் அன்புசெலுத்தி, கௌரவத்தோடு, அவருக்கு ஆறுதலளித்து நோயிலும், ஆரோக்கியத்திலும், அவருக்கு ஆறுதலளித்து, மற்றவர்களை விடுத்து, இவரோடு மட்டுமே இணைந்து, நீங்கள் உயிர் வாழும் காலம் முழுவதும் இருப்பாயா?

*பதில்:* இருப்பேன்.

பிறகு போதகர் கேட்க வேண்டியது?

(மணமகள் மற்றும் மணமகனின் பெற்றோர், குடும்பத்தின் உறுப்பினர்கள் மற்றும்/அல்லது தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள்) நீங்கள் இந்த ஐக்கியத்திற்கு உங்களுடைய ஆசீர்வாதத்தைத் தெரிவிப்பீர்களா?

*பதில்* (மணமகள் மற்றும் மணமகனின் பெற்றோர், குடும்பத்தின் உறுப்பினர்கள் மற்றும்/அல்லது தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள்): ஆம், இருப்போம்.

மணமக்கள் இருவரையும் எதிரெதிராக வலது கரங்களைப் பற்றியபடி நிற்க வைத்து போதகர் கீழ்க்கண்ட விவாக வாக்குறுதிகளை வாசிக்க வேண்டும்.

போதகர் வாசிக்கும்போது மணமகன் திரும்பிக் கூறவேண்டியது:

_______________ என்ற நான், _____________________ என்ற உன்னை என் மணவாழ்வின் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன். இந்த நாள் முதல், வாழ்விலும், தாழ்விலும், ஐசுவரியத்திலும், ஏழ்மையிலும், நோயிலும், ஆரோக்கியத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமட்டும், தேவனுடைய பரிசுத்த கட்டளையின்படி உன்மீது அன்புசெலுத்தி, உன்னைப் போஷிப்பேன். என் விசுவாசத்தை உனக்கு வாக்குக் கொடுக்கிறேன்.

போதகர் வாசிக்கும்போது மணமகள் திரும்பிக் கூறவேண்டியது:

_______________ என்ற நான், _____________________ என்ற உம்மை என் மணவாழ்வின் கணவனாக ஏற்றுக்கொள்கிறேன். இந்த நாள் முதல், வாழ்விலும், தாழ்விலும், ஐசுவரியத்திலும், ஏழ்மையிலும், நோயிலும், ஆரோக்கியத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமட்டும், தேவனுடைய பரிசுத்த கட்டளையின்படி உம்மீது அன்புசெலுத்தி, உம்மைப் போஷிப்பேன். என் விசுவாசத்தை உமக்கு வாக்குக் கொடுக்கிறேன்.

விருப்பப்பட்டால், இப்போது தாலி/மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சியை நடத்தலாம். போதகர் மணவாளனின் தோழனிடமிருந்து தாலியை/மோதிரத்தைப் பெற்று மணமகனிடம் அளிக்கிறார். மணமகன் தாலியை/மோதிரத்தை மணமகளுக்கு அணிவிக்கும்போது, போதகர் கூற மணமகன் திரும்பக் கூற வேண்டியது:

இந்தத் தாலியை/மோதிரத்தை நான் என் அன்பின் அடையாளமாகவும், எனது நேர்மைக்கு அச்சாரமாகவும் உனக்கு அளிக்கிறேன்.

மோதிரம் மாற்றவேண்டியிருந்தால், மறுபடியும் இதே முறைமையைப் பின்பற்றவும்.

பின்பு மணமக்கள் முழங்காற்படியிட, போதகர் கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுக்கலாம் அல்லது சுயமாக ஜெபிக்கலாம்:

நித்திய தேவனே, எல்லா மனிதரையும் படைத்துக் காப்பாற்றுபவரே, ஆவிக்குரிய கிருபையை அளிப்பவரே, நித்திய ஜீவனைக் கொடுப்பவரே, உமது நாமத்தில் நாங்கள் இப்போது ஆசீர்வதிக்கும் உமது அடியாராகிய (மணமகனின் பெயர்) மற்றும் (மணமகளின் பெயர்) இந்த மனமக்களை உம்முடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறோம். இந்த நேரத்தில் தானே இவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கைக்கும், உறுதிப்பாட்டிற்கும் ஏற்றபடி உண்மையாய்ச் செயல்படவும், அன்பிலும் சமாதானத்திலும் என்றும் ஒன்றாக நிலைத்துநிற்கவும் இவர்களை ஆசீர்வதித்தருளும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாகக் கேட்கிறோம். ஆமென்.

பிறகு போதகர் கூறவேண்டியது:

பரிசுத்த மண உறவில் ஒன்றாக இணையும்படி இந்த மணமகனும், இந்த மணமகளும் சம்மதித்தபடியாலும், ஆண்டவருக்கு முன்பாகவும், இந்தக் கூட்டத்தாரின் முன்னிலையிலும் அதற்குச் சாட்சிபகர்ந்தபடியாலும், கரங்களை இணைத்ததின்மூலம் அதை அறிவித்தபடியாலும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே இவர்கள் இருவரும் கணவன், மனைவி என்று அறிவிக்கிறேன். தேவன் ஒன்றாக இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன். ஆமென்.

பிறகு போதகர் இந்த ஆசீர்வாதத்தைக் கூற வேண்டும்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய தேவன்தாமே உங்களை ஆசீர்வதித்து, பராமரித்து, காப்பாராக; ஆண்டவர் கிருபையால் உங்கள்மீது தயைகூர்ந்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினாலும், கிருபையினாலும் உங்களை நிரப்புவாராக. இந்த வாழ்க்கையில் ஒன்றாக வாழ்ந்திருந்து, மறுமையிலும் நீங்கள் நித்திய ஜீவனைப் பெறுவீர்களாக.

போதகர் பிறகு சுயமாக ஜெபிக்கலாம் அல்லது ஆசீர்வாத ஜெபத்தை ஏறெடுக்கலாம். **(532.7, 533.2, 534.1, 538.19)**

## 706. அடக்க ஆராதனை

அன்பானவர்களே: மரித்துப்போன நமது அன்புக்குரியவரும், நண்பருமானவருக்கு இறுதி மரியாதையைச் செலுத்தும்படி இன்று இங்கே கூடிவந்திருக்கிறோம். தங்கள் இழப்பினால் துக்கம் கொண்டாடும் குடும்பத்தினருக்கு நாங்கள் குறிப்பாக எங்களது ஆழ்ந்த, மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்தகையதொரு வேளைக்காக ஆண்டவருடைய வார்த்தையைக் கூறும் ஆறுதலான வசனங்களைக் கவனியுங்கள்.

“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்” (யோவான் 14:1–3).

“இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்” (யோவான் 11:25–26).

வேண்டுதல் ஜெபம் (போதகர் சுயமாகவோ அல்லது கீழ்க்கண்டபடியோ ஜெபிக்கலாம்)

எல்லாம் வல்ல தேவனே, எங்கள் பரலோக பிதாவே, உம்மீது நாங்கள் முற்றிலுமாகச் சார்ந்திருக்கிறோம் என்று உணர்ந்து இந்தத் துக்கத்தின் அடைக்கலத்திற்கு வந்திருக்கிறோம். நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதையும், நீர் மரண நிழலையும் கூட காலை ஒளியாக மாற்றக்கூடியவர் என்றும் நாங்கள் அறிவோம். மரியாதையும், தாழ்மையுமுள்ள இருதயங்களோடு உமக்கு முன்பாகக் காத்திருக்க எங்களுக்கு உதவும்.

எங்கள் அடைக்கலமும், பெலனுமாக இருக்கும் எங்கள் தேவனே, துயர காலங்களில் உமது பிரசன்னத்தால் உதவியாக இருப்பவரே, உமது அளவற்ற கருணையை எங்களுக்குத் தந்தருளும், உமது பாதுகாக்கும் கிருபையில், இன்று துக்கம் கொண்டாடுபவர்கள் ஆறுதலைக் கண்டடையவும், சுகமளிக்கும் தைலத்தைப் பெறவும் உதவியருளும்.

இந்த விண்ணப்பங்களை நாங்கள் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஏறெடுக்கிறோம், ஆமென்.

**பாமாலை அல்லது சிறப்பு கீதம்**

**வேத பாடம்:**

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே,

அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக வேலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" (1 பேதுரு 1:3–9).

(பயன்படுத்தக்கூடிய பிற வேத பகுதிகள்: மத்தேயு 5:3–4, 6:8; சங்கீதம் 27:3–5, 11, 13–14; 46:1–6, 10–11).

**பிரசங்கம்**

**பாமாலை அல்லது சிறப்பு கீதம்**

**இறுதி ஜெபம்**

***

கல்லறையின் அருகே...

சபையோர் கூடிவந்த பிறகு, போதகர் கீழ்க்கண்ட வேத பகுதிகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ வாசிக்கலாம்:

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது" (யோபு 19:25–27).

"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்...

"அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1 கொரிந்தியர் 15:51, 52, 54–58).

"பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று" (வெளிப்படுத்தல் 14:13).

இதன்பிறகு போதகர் கீழ்க்கண்ட ஒப்படைப்பு அறிக்கைகளில் பொருத்தமான ஒன்றை வாசிக்க வேண்டும்.

*விசுவாசிகளுக்கு:*

இறந்துபோன நமது அன்புக்குரியவரின் ஆவியானது, தன்னைப் படைத்த ஆண்டவரிடமே திரும்பிச் சென்றுவிட்டப்படியால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம், மரித்தோர் உயிர்த்தெழுதல் மற்றும் வரப்போகும் உலகில் நித்திய ஜீவன் உண்டென்ற நிச்சயமான நம்பிக்கையோடும், நமது ஆண்டவராகிய ஜீவன் உண்டென்ற நிச்சயமான நம்பிக்கையோடும், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது மகிமையான சரீரத்தைப் போன்ற புது சரீரத்தை நமக்கும் தருவார் என்ற

நம்பிக்கையோடும், இவரது/இவளது சரீரத்தை கல்லறைக்கு ஒப்புக்கொடுக்கிறோம். ''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியாவன்கள்.''

*விசுவாசிகள் அல்லாதோருக்கு:*

நாம் தற்போது மரித்துப்போன நமது நண்பரின் சரீரத்தை, அது எதிலிருந்து உருவானதோ அதே மண்ணுக்குள் ஒப்படைக்கக் கூடிவந்துள்ளோம். ஆவியை நாம் கடவுளிடம் விட்டுவிடுகிறோம்; ஏனெனில் சகல உலகத்திற்கும் கருணையுள்ள நியாயாதிபதியாகிய அவர் சரியானதையே செய்வார் என்பதை நாமறிவோம். எஞ்சியிருக்கும் நாம், பரலோக இராஜ்யத்திற்குள் நுழையும் மேலான பாக்கியத்தைப் பெறும்படி, கடவுளைப் பற்றிய பயத்தோடும், தேவன்மீதான அன்போடும் வாழத்தக்கதாக, நமது வாழ்க்கையை மீண்டும் அவருக்கு அர்பணிக்கக்கடவோம்.

*சிறு குழந்தைக்கு:*

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நித்திய ஜீவனைப் பெறத்தக்கதான உறுதியும், நிச்சயமுமான நம்பிக்கையோடு, இந்தக் குழந்தையின் சரீரத்தைக் கல்லறைக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தமது உலக வாழ்க்கையின்போது இயேசுவானவர் சிறு குழந்தைகளைத் தமது கரங்களில் ஏந்தி, அவர்களை ஆசீர்வதித்து, ''பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது'' என்று கூறியுள்ளபடியால், அவர்தாமே இந்த அன்பான குழந்தையை ஏற்றுக்கொள்வாராக.

ஜெபம்

எங்கள் பரலோக பிதாவே, கருணையுள்ள கர்த்தரே, இந்தத் துக்க வேளையில், பிரிவின் வேதனையில் நாங்கள் உம்மையே நோக்கிப் பார்க்கிறோம். துயரம் தாங்க முடியாத இருதயத்தோடிருக்கும் இந்த அன்புக்குரியவர்களை ஆறுதல்படுத்தும், அடுத்து வரும் நாட்களிலும், அவர்களை ஆற்றித் தேற்றி, வழிநடத்துமாறு அவர்களோடிரும். ஆண்டவரே அவர்கள் உம்மில் அன்பு செலுத்தி, உமக்கு ஊழியம்செய்து, மறுமையில் உமது வாக்குத்தத்தங்களின் பரிபூரண நிறைவைப் பெறும்படி அவர்களுக்குக் கிருபையருளும்.

நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். (எபிரெயர் 13:20–21).

## 707. சபை அலுவலர்களைப் பணியமர்த்துதல்

பொருத்தமான பாமாலையைப் பாடியபின்பு, பணியிலமர்த்தப்படவிருப்பமுள்ளவர்கள் பெயர்களையும், அவர்கள் பதவிகளையும் செயலாளர் வாசிக்க வேண்டும். இவர்கள் முன்னே வந்து, போதகரைப் பார்த்தபடி பீடத்தருகே நிற்க வேண்டும். உடன்படிக்கை

அட்டை ஒன்று ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டும். இதன்பிறகு போதகர் கூறவேண்டியது:

கிறிஸ்தவ ஊழியத்தின் குறிப்பிட்ட பிரிவுகளுக்கேற்றபடி, குறிப்பிட்ட ஊழியர்களைப் பிரித்தெடுக்கும் நமது ஆண்டவரின் முறைக்கேற்ப, நாம் இந்த அலுவலர்களை (மற்றும்/ அல்லது ஆசிரியர்களை) பணியிலமர்த்தும்படி இங்கு கூடிவந்துள்ளோம்; இவர்கள் வரும் ஆண்டில் நமது சபைக்காக ஊழியம் செய்யும்படி, ஒழுங்காகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். ஆண்டவர் தமது பரிசுத்த வார்த்தையின்மூலம் நமக்குக் கொடுக்கும் போதனைகளைப் பார்ப்போம்.

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1–2).

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோத்தேயு 2:15).

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடுங்கள்" (கொலோசெயர் 3:16).

"திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்" (கலாத்தியர் 6:6).

பீடத்தண்டை நிற்கும் நீங்கள், சபை மற்றும் துணை அமைப்புகளான நசரேய வாலிபர் குழு, அகில உலக நசரேய அருட்பணி குழு மற்றும் ஓய்வுநாள் பள்ளி ஊழிய நிர்வாகக் குழு ஆகியவைகளின் காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் முக்கியமான தருணத்திற்கு நாம் வந்திருக்கிறோம். நீங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளும் பதவிகளை ஆண்டவருடைய ஊழியத்திற்கான சிறப்பான வாய்ப்புக்களாக எண்ணி, உங்கள் கடமையைச் செய்வதில் நீங்கள் மகிழ்ச்சியையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் காண்பீர்களாக.

உங்களுடைய பொறுப்பு வெறும் சாதாரணமான பொறுப்பு அல்ல. ஏனெனில் சபையின் வளர்ச்சியும் ஆத்துமாக்களின் எதிர்காலமும், உங்கள் கைகளிலேயே இருக்கின்றன. கிறிஸ்தவ குணநலன்களை வளர்ப்பது உங்கள் பொறுப்பாகவும், இரட்சிக்கப்படாதவர்களை இயேசு கிறிஸ்துவுக்குள் அழைத்து வருவது உங்கள் மேலான நோக்கமாகவும் இருக்க வேண்டும். ஆண்டவருடைய மகிமைக்காக நீங்கள்

அவருடைய பணியைச் செய்யும்போது, அவர்தாமே உங்களுக்கு ஞானத்தையும் பெலனையும் அருளுவாராக.

உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அட்டையில் ஒரு உடன்படிக்கை அச்சிடப்பட்டுள்ளது. நாம் அதைச் சேர்ந்து வாசிக்கும்போது, அதை ஒரு சுயமான ஒப்படைப்பாக ஏறெடுப்போம்.

ஊழியர்களின் உடன்படிக்கை

நான் இப்போது பொறுப்பேற்கும் பதவிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள வகையில், சபையானது என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்றபடி கீழ்க்கண்டவாறு உடன்படிக்கை செய்கிறேன்:

நசரேயத் திருச்சபையின் சீரிய குறிக்கோள்கள், மதிப்புநிலை இவற்றிற்கு ஏற்றவாறு, எடுத்துக்காட்டான, சீரிய கிறிஸ்தவ வாழ்க்கை வாழ உறுதி கொடுக்கிறேன்.

ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஜெபத்திற்காகவும், வேத வாசிப்பிற்காகவும் ஒதுக்குவதின்மூலம் எனது சொந்த கிறிஸ்தவ அனுபவத்தை வளர்த்துக் கொள்வேனென்று உறுதி கொடுக்கிறேன்.

தவிர்க்கமுடியாத தடையேதும் இல்லாத பட்சத்தில், ஞாயிறு பள்ளி, ஞாயிறு காலை, மாலை பிரசங்க ஆராதனைகள், வாரநாள் சபை ஜெபக்கூட்டம் இவற்றில் ஒழுங்காகக் கலந்துகொள்ள உறுதி கொடுக்கிறேன்.

நான் தற்போது உறுப்பினராக இருக்கும், அல்லது இனி மேல் உறுப்பினர் தகுதியைப் பெறவிருக்கும் சபை நிர்வாகக் குழுக்கள், கவுன்சில், கமிட்டிகள் இவற்றின் ஒழுங்கான கூட்டங்களில் உண்மையோடு பங்கேற்பேன் என்று உறுதி கொடுக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் என்னால் வரமுடியவில்லையென்றாலும் அல்லது இந்தப் பதவியில் எனது பொறுப்புக்களை நிறைவேற்ற இயலவில்லையென்றாலும் எனது மேல் அலுவலருக்கு உடனடியாக அறிவிப்பேன் என்று உறுதி கொடுக்கிறேன்.

சபைப் பத்திரிக்கைகளையும், எனது கடமைகளை நிறைவேற்றுவதில் எனக்கு உதவி செய்யக்கூடிய பிற நூல்களையும் ஒழுங்காக வாசிப்பேன் என்று உறுதி கொடுக்கிறேன்.

வாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில் தொடர்ந்த சாமானியப் பயிற்சிகளில் சேர்ந்து என்னையும், என் திறமைகளையும் வளர்த்துக் கொள்வேன் என்று உறுதி கொடுக்கிறேன்.

மற்றவர்களின் ஆவிக்குரிய போராட்டங்களில் செயல்பூர்வமான ஆர்வம் காட்டுவதின் மூலமாகவும், சபையின் எல்லா நற்செய்திக் கூட்டங்களிலும் பங்குகொண்டு அவற்றிற்கு ஆதரவளிப்பதின் மூலமாகவும் மற்றவர்களை இயேசு கிறிஸ்துவுக்குள் அழைத்துவர முயலுவேன்.

போதகர் அடுத்தது ஒரு பொருத்தமான ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். ஒப்படைப்பு பற்றிய சிறப்பு கீதமும் பாடப்படலாம். அதன்பிறகு அவர் கூற வேண்டியது:

உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் மூலம் இந்தச் சபையின் பணிகளைச் சரிவரச் செய்து முடிப்பதாக உங்கள் இருதயங்களையும் கரங்களையும், ஒன்றாக ஒப்படைப்பு செய்தபடியால் நீங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்பட்டுள்ள பொறுப்புகளில் நான் தற்போது உங்களை உறுதிப்படுத்துகிறேன். நீங்கள் தற்போது இந்தச் சபையின் அமைப்பிலும், தலைமைத்துவத்திலும் ஒரு உயிர்த்துடிப்புள்ள பங்கு வகிக்கிறீர்கள். நீங்கள் உங்கள் முன்மாதிரியாலும், கற்பனைகளைக் கைக்கொள்ளுவதின் மூலமும், ஊக்கமான உழைப்பாலும் ஆண்டவருடைய திராட்சத் தோட்டத்தில் பயனுள்ள ஊழியக்காரராக இருக்கக்கடவீர்கள்.

சபையார் எழுந்துநிற்கும்படி போதகர் கேட்டுக் கொண்ட பிறகு அவர்களைப் பார்த்து அவர் கூற வேண்டியது:

அடுத்து வரும் ஆண்டுக்கான சபைத் தலைவர்களின் உறுதிமொழிகளையும், அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையையும் நீங்கள் கேட்டீர்கள். ஒரு சபைக்கூட்டமாக, அவர்களுக்கு ஆதரவளிப்பதில் நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் அவர்கள்மீது சுமத்தியுள்ள பொறுப்புகள் பாரமானவை; அவர்களுக்கு உங்கள் உதவியும், ஜெபமும் தேவைப்படுகிறது. நீங்கள் அவர்களுடைய பிரச்சினைகளை உணர்ந்து, அவர்கள் தோல்வியடைந்தது போலக் காணப்பட்டாலும் பொறுத்துக் கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன். அழைக்கப்படும்போது நீங்கள் மகிழ்ச்சியோடு முன்வந்து உதவி செய்வதின்மூலம், நாம் ஒன்றாகப் பணிபுரியும்போது, இழந்துபோனவர்களைக் கிறிஸ்துவுக்குள் வெற்றிகொள்ள நமது சபை பயனுள்ள ஒரு உபகரணமாகக் காணப்படும்.

போதகர் முடிவு ஜெபத்தைச் செய்யலாம் அல்லது சபையார் ஆண்டவருடைய ஜெபத்தை ஒன்றாகக் கூறும்படி செய்யலாம்.

## 708. உள்ளூர் சபையை ஒழுங்குபடுத்துதல்

*மறைமாவட்டக் கண்காணிப்பாளர்:* கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நாம் எல்லோரும் தேவனுடைய இந்த நாளில் அதிகாரப்பூர்வமான இந்த *(பெயர்)* நசரேயத் திருச்சபையை ஒழுங்குபடுத்துவதற்காகக் கூடியிருக்கிறோம். நீங்கள் ஏற்கெனவே ஒரு திருச்சபையாக இருப்பது உண்மைதான். ஆனாலும் நசரேயத் திருச்சபையின் சட்டவிதிகள் மற்றும் சபை அமைப்பின்படி ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு திருச்சபையின் உரிமைகள், சலுகைகள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதின் மூலமாக இந்தச் சபையின் வாழ்க்கை ஒரு புதிய இடத்திற்கு உயரப்போகிறது.

நசரேயர்களின் அகில உலக குடும்பத்தின் சார்பாக, இன்றைய உலகத்தில் தேவனுடைய ராஜ்யம் இருப்பதின் மெய்யான வெளிப்பாடாக நீங்கள் விசுவாசத்தின் சமுதாயமாக இருக்கும்படியாக இருதயத்தோடு இருதயமாக, கையோடு கையாக சேர்ந்து பணியாற்றிய உங்களுடைய தரிசனம், விசுவாசம் மற்றும் இடைவிடாத உழைப்பை நான் பாராட்டுகிறேன். இப்படி செயல்பட்டதின் மூலமாக: ‘‘உலகம்

முழுவதிலும் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குதல்'' என்ற நம்முடைய பொதுவான இலக்கே உங்களுடைய நோக்கமாகவும் இருக்கிறது என்பதை உலக அளவில் காணப்படும் நசரேயக் குடும்பத்தோடு நீங்கள் பகிர்ந்துகொள்கிறீர்கள்.

இந்த இலக்கை நாம் அடைவதற்கு மூன்று மைய மதிப்பீடுகள் நம்மை வழிநடத்துகின்றன:

நாம் கிறிஸ்தவ மக்களாக இருக்கிறோம். உலகளாவிய திருச்சபையின் உறுப்பினர்களான நாம், இயேசு கிறிஸ்துவின் ஆளுகையை எடுத்துரைப்பதிலும், வரலாற்றுப்பூர்வமான திரித்துவத்தின் கட்டளைகளையும், கிறிஸ்தவ விசுவாசத்தின் மதிப்பீடுகளையும் நிச்சயப்படுத்துவதிலும் நிற்கிறோம். வேதாகமமே நமக்கு சத்தியத்திற்கான பிரதான ஆதாரமாக இருக்கிறது. அது கிறிஸ்துவை நமக்கு அறிக்விக்கிறது. அதுபோலவே ''நம்முடைய இரட்சிப்புக்கு அவசியமான எல்லாவற்றையும்'' நமக்குத் தெரிவிக்கிறது.

நாம் பரிசுத்த மக்களாக இருக்கிறோம். தேவனுடைய கிருபையானது வெறுமனே பாவத்திற்கான மன்னிப்பை மட்டுமல்லாது, விசுவாசத்தினால் நம்முடைய இருதயத்தையும் சுத்தப்படுத்துதலைத் தருகிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் இந்தக் கிருபையின் செயலின் மூலமாக நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, இந்த உலகத்தில் கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையை வாழும்படியாக அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் ஊழிய நோக்குள்ள திருச்சபையாக இருக்கிறோம். தேவனுடைய ராஜ்யத்தின் இலக்கான ஒப்புரவாகுதலில் பங்கெடுக்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலமாகவும், கருணையுள்ளம் மற்றும் நீதியின் செயல்களின் மூலமாகவும், இயேசுவைப் போலவே இருக்கும் சீஷர்களை உருவாக்குவதின் மூலமாகவும் நாம் இதைச் செய்கிறோம்.

*மறைமாவட்டக் கண்காணிப்பாளர் போதகரிடம்:* போதகரே, இந்த (பெயர்) நசரேயத் திருச்சபையின் முழு உறுப்பினர்களாக யார் இருப்பார்கள் என்பதை நீங்கள் இப்போது அறிவிப்பீர்களா?

*போதகர்: (மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பெயர்)*, இந்தச் சபையின் பட்டய உறுப்பினர்களை உங்களுக்கு முன்பாக அழைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகளாகிய இவர்கள் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாக நம்முடைய பொதுவான நோக்கத்திற்கு ஒப்புக்கொடுத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிவித்து நான் அவர்களை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

(போதகர் பெயர்களை வாசிப்பார் அல்லது ஒவ்வொரு உறுப்பினரையும் அல்லது குடும்பத்தாரையும் அறிமுகம் செய்துவைப்பார்)

*மறைமாவட்டக் கண்காணிப்பாளர்:* சகோதர சகோரதரிகளே, உங்களுடைய உறுப்பினர் உறுதிமொழியை மறுபடியுமாக உறுதிசெய்யும்படியாக நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் அறிக்கையிடுகிறீரா? அவர் தற்போது உங்களை இரட்சிக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

*பதில்:* ஆம் விசுவாசத்தினால் அறிவேன்.

நசரேயத் திருச்சபையின் ஒப்புக்கொள்ளப்பட்ட விசுவாச அறிக்கையை நீங்கள் மறுபடியுமாக உறுதிசெய்கிறீர்களா?

*பதில்:* ஆம், செய்கிறேன்.

கிறிஸ்தவ பண்புகள் மற்றும் கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கைகளில் கூறப்பட்டிருப்பதைப் போல நசரேயத் திருச்சபையோடு சேர்ந்து தேவனுடைய பணியைச் செய்யவும், அவருடைய ஐக்கியத்தில் இருக்கவும் உங்களையே நீங்கள் உடன்படிக்கைச் செய்கிறீர்களா? தாழ்மையான நடத்தை, பக்தியுள்ள உரையாடல் மற்றும்பரிசுத்தமான சேவை; உங்களுக்குரியதை அர்ப்பணத்தோடு விட்டுக்கொடுத்து; கிருபையை அடிப்படையாகக் கொண்டு உண்மையுள்ளவர்களாகக் கலந்துகொண்டு, எல்லாத் தீயவைகளிலிருந்தும் விலகி, பரிசுத்த இருதயத்தின் பரிபூரணத்தையும், தேவனுக்கு பயந்த பயத்தோடு வாழும் வாழ்க்கையையும் ஆவலோடு தேடி அதன் மூலமாக எல்லாவழிகளிலும் தேவனை மகிமைப்படுத்த முயற்சி செய்வீர்களா?

*பதில்:* ஆம் செய்வேன்.

*மறைமாவட்டக் கண்காணிப்பாளர்:* எனவே, *(பெயர்)* மறைமாவட்ட நசரேயத் திருச்சபையின் கண்காணிப்பாளராக எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி, நான் *(பெயர்)* நசரேயத் திருச்சபையை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறேன். நசரேயத் திருச்சபைக் குழுமத்தின் அகில உலக குடும்பத்திற்கு உங்களை வரவேற்கிறேன். தேவன் தாமே தம்முடைய மேலான இரக்கத்தைக் கொண்டு அவருடைய சித்தத்தை நீங்கள் செய்ததற்காகத் தினமும் உங்களுக்கு எல்லாவற்றிலும் நன்மையைத் தருவாராக. கிறிஸ்துவின் சமாதானம் உங்களோடு இருப்பதாக.

## 709. ஆலய பிரதிஷ்டை

போதகர்: ஆண்டவருடைய கரங்களினால் ஆசீர்வாதங்களைப் பெற்ற நாம், அவருடைய கிருபையினாலும், அவர் அளித்த பெலத்தினாலும், இந்த ஆலயத்தை அவருடைய நாம மகிமைக்காகக் கட்டி முடித்துள்ளோம். தற்போது இந்த ஆலயத்தை அவருடைய இராஜ்யத்தின் பணிக்காக அர்ப்பணிக்கும்படி ஆண்டவருடைய பிரசன்னத்தில் ஒன்றாகக் கூடி வந்துள்ளோம்.

ஒவ்வொரு நன்மையையும், பூரண ஈவையும் அளிக்கும் நமது பிதாவாகிய தேவனின் மகிமைக்காகவும் – நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாம மகிமைக்காகவும் – ஒளி, ஜீவன், வல்லமை இவற்றின் மூலாதாரமாகவும், நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறவராகவும் விளங்கும் பரிசுத்த ஆவியானவரைத் துதிக்கும் வண்ணமாகவும்–

*சபையார்:* நாங்கள் தற்போது, மகிழ்ச்சியுடனும் நன்றியுணர்வுடனும், இந்தக் கட்டிடத்தைத் தாழ்மையோடு அர்ப்பணம் செய்கிறோம்.

*போதகர்:* நாம் தற்போது அனுபவிக்கும் பாரம்பரியத்தை உருவாக்கும்படி, இந்தச் சபைமீது அன்புகூர்ந்து ஊழியம் செய்து, தற்போது ஜெயமுள்ள பரலோகத் திருச்சபையின் பங்குகளாக உள்ள அனைவரையும் நினைவுகூர்ந்து –

*சபையார்:* நன்றியுணர்வோடு இந்தக் கட்டிடத்தை அர்ப்ணம் செய்கிறோம் (கல்வி கட்டிடம், ஐக்கிய மண்டபம் போன்றவை)

*போதகர்:* ஜெபத்தின் மூலமாகவும், பாடல் வழியாகவும் வழிபடுவதற்காகவும், வார்த்தையைப் போதிப்பதற்காகவும், வேதாகமத்தைக் கற்றுக் கொடுப்பதற்காகவும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்காகவும் –

*சபையார்:* நாங்கள் பயபக்தியோடு இந்த ஆண்டவரின் இல்லத்தை அர்ப்பணம் செய்கிறோம்.

*போதகர்:* துக்கம் கொண்டாடுபவர்களுக்கு ஆறுதலாக இருக்கும்படியாகவும், பலவீனர்களைப் பலப்படுத்தும்படியாகவும், சோதிக்கப்படுபவர்களுக்கு உதவியாக இருக்கும்படியாகவும், இதன் சுவர்களுக்கு நடுவே வரும் அனைவருக்கும் நம்பிக்கையையும், தைரியத்தையும் அளிக்கும்படியாகவும் –

*சபையார்:* இந்த உறவின் இல்லத்தையும், ஜெப வீட்டையும் அர்ப்பணம் செய்கிறோம்.

*போதகர்:* பாவத்திலிருந்து இரட்சிப்பை அளிக்கும் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வதற்கும், வேதவசனம் கூறும் பரிசுத்தத்தைப் பரப்பவும், நீதியுள்ள நடக்கைக்கான போதனைகள் கொடுக்கப்படவும், நமது உடன் மக்களின் சேவைக்காகவும்–

*சபையார்:* பயபக்தியோடு இந்தக் கட்டிடத்தை அர்ப்பணம் செய்கிறோம்.

*அனைவரும் சேர்ந்து:* ஆண்டவரின் உடன் ஊழியர்களாக நாம் தற்போது நமது கரங்களையும், இருதயங்களையும் ஒருமுகப்படுத்தி, இந்தக் கட்டிடம் எதற்காக எழுப்பப்பட்டதோ அந்த உன்னத, பரிசுத்த நோக்கங்களுக்காக நம்மை நாமே மீண்டும் புதிதாக அர்ப்பணம் செய்கிறோம். இங்கு ஆண்டவரின் நாமம் மகிமையடையும்படியாகவும், அவருடைய இராஜ்யம் விருத்தியடையும்படியாகவும், நாம் நமது உண்மையுள்ள அர்ப்பணிப்பையும், மெய்யான உக்கிராணத்துவத்தையும், ஊக்கமான ஊழியத்தையும் உறுதி செய்கிறோம். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஆமென்.

## பாகம் IX

# பிரிவு மற்றும் ஊழிய திட்டங்கள்/ அமைப்பு/துணை விதிகள்

அகில உலக நசரேய வாலிபர் குழு
அகில உலக நசரேய அருட்பணி சங்கம்
அகில உலக ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்கள்

## I. நசரேய வாலிபர் குழு

**810. நசரேய வாலிர் குழு பிரிவு**

*"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு"* (1 தீமோத்தேயு 4:12)

**810.1. நம்முடைய ஊழிய நோக்கம்**

நம்முடைய தலைமுறையைக் கிறிஸ்துவில் ஒரு வல்லமைவாய்ந்த வாழ்க்கையை வாழும்படியாக அழைப்பதே நசரேய வாலிபர் குழுவின் ஊழிய நோக்கமாகும்.

**810.2. நம்முடைய உறுப்பினர்கள்**

நாம் கூறிய தரிசனத்தையும், மதிப்பீடுகளையும் பற்றிக்கொள்ளத் தெரிந்தெடுத்து, நசரேய வாலிபர் ஊழியத்தில் பங்குபெறும் அனைவரும் நசரேய வாலிபர் குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

**810.3. நம்முடைய தரிசனம்**

இளம் வாலிபர்கள் திருச்சபையின் மிகவும் முக்கியமான பகுதியாக இருக்கிறார்கள் என்று நசரேயத் திருச்சபை விசுவாசிக்கிறது. இயேசு கிறிஸ்துவோடு வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும்படியான உறவை ஏற்படுத்தும்படியும், கிறிஸ்தவ சேவைக்காக அவர்கள் சீஷர்களாக வளர்வதற்கான வழியை ஏற்படுத்தும்படியும் இளம் வாலிபர்களை வழிநடத்துவதற்காகவே நசரேய வாலிபர் குழு இயங்குகிறது.

**810.4. நம்முடைய மதிப்பீடுகள்**

1. நாம் இளம் வாலிபர்களை மதிக்கிறோம்... அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள்.
2. நாம் வேதாகமத்தை மதிக்கிறோம்... நம்முடைய வாழ்க்கைக்கான தேவனுடைய மாறாத சத்தியமாக இருக்கிறது.
3. நாம் ஜெபத்தை மதிக்கிறோம்... நம்முடைய பரலோகப் பிதாவோடு கொண்டிருக்கும் மிகவும் முக்கியமான செயல்விளைவை ஏற்படுத்தும் தொடர்பாகும்.
4. நாம் திருச்சபையை மதிக்கிறோம்... உலகளாவிய பரிசுத்த விசுவாச சமுதாயமாக இருக்கிறது, கலாச்சாரத்தில் வேறுபட்டிருந்தாலும், கிறிஸ்துவில் ஒன்றாக இருக்கிறது.
5. நாம் ஆராதனையை மதிக்கிறோம்... மிகவும் நெருக்கமான தேவனோடு ஏற்படும் வாழ்க்கையை மாற்றியமைக்கக்கூடிய சந்திப்புகள்.
6. நாம் சீஷத்துவத்தை மதிக்கிறோம்... கிறிஸ்துவைப் போலாகும் வாழ்க்கைமுறை.
7. நாம் சமூகத்தை மதிக்கிறோம்... தேவனோடும் ஒருவருக்கொருவரும் சேரும்படியான உறவுகளைக் கட்டுதல்.
8. நாம் ஊழியத்தை மதிக்கிறோம்... தேவனுடைய கிருபையை நம்முடைய உலகத்திற்கு நீட்டிக்கிறோம்.
9. நாம் சாட்சியை மதிக்கிறோம்... வார்த்தை மூலமாகவும், செயல்களின் மூ லமாகவும் தேவனுடைய அன்பைப் பகிர்தல்.
10. நாம் பரிசுத்தத்தை மதிக்கிறோம்... இது கிருபையின் கிரியையாக இருக்கிறது. இதன் மூலமாக தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் மூலமாக நாம் யாராக இருக்கிறோம் என்பதிலும், நாம் செய்யும் எல்லாவற்றிலும் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் வாழ்க்கையை வாழும்படி இயலச் செய்கிறார்.

இந்த மதிப்பீடுகள் எல்லாம் பரிசுத்த வாழ்க்கையின் பல பரிமானங்களாக இருக்கின்றன. அவை எல்லாம் திருச்சபையின் எல்லா நிலைகளும், NYI யின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும். (இந்த மதிப்பீடுகளைக் குறித்து மேலும் தெரிந்துகொள்ள *நசரேயத் திருச்சபையின் சட்டநூலில்* விசுவாச அறிக்கைகள் பகுதியைப் பாருங்கள்.) இந்த மதிப்பீடுகளை வெளிப்படுத்துவதின் மூலமாக பின்வருவனவற்றை நம்முடைய வழிகாட்டும் கொள்கைகளாகப் பார்க்கிறோம்.

**810.5. நம்முடைய வழிகாட்டும் கொள்கைகள்**

1. NYI வாலிபர்களுக்காகவே இருக்கிறது
   நசரேய வாலிபக் குழுவானது தேவனுடைய ராஜ்யத்தில் ஊழியம் செய்வதற்காகஇளம் வாலிபர்களை வசீகரித்து, ஆயத்தப்படுத்தி, அதிகாரமளிக்கிறது. அதோடு நசரேயத் திருச்சபையோடு அவர்களைச் சேர வைப்பதற்காகவுமே இருக்கிறது.
2. NYI கிறிஸ்துவின் மீது கவனம் செலுத்துகிறது
   நாம் யாராக இருக்கிறோம் என்பதற்கு கிறிஸ்துவே மையமாக இருக்கிறார். நாம் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் அதிகாரத்துவமான ஆதாரமான தேவனுடைய வார்த்தையாக இருக்கிறார், நம்முடைய வாழ்க்கையின் ஒழுங்குமுறையான பரிசுத்தமாக இருக்கிறார்.
3. உள்ளூர் சபையில் வாலிபர்களோடு செய்யப்படும் தொடர்புசார்ந்த ஊழியத்தின் மீதே NYI கட்டப்பட்டிருக்கிறது
   உள்ளூர் திருச்சபையில் இளம் வாலிபர்களுக்குச் செய்யப்படும் ஆக்கப்பூர்வமான ஊழியமானது NYI யின் ஆரோக்கியத்திற்கும், உத்வேகத்திற்கும் முக்கியமாக இருக்கிறது. உறவுகளை உருவாக்குதலும், மறுரூபமாக்கும் ஊழியமுமே நசரேய வாலிப ஊழியத்தின் அடித்தளமாக இருக்கின்றன. அவர்கள் இளம் வாலிபர்களைக் கிறிஸ்துவில் ஆவிக்குரிய முதிர்ச்சியைப் பெறுவதற்கு வழிகாட்டுகிறார்கள்.
4. இளம் தலைவர்களை NYI வளர்த்து, வழிகாட்டுகிறது
   வளர்ந்துவரும் தலைவர்கள் வளருவதற்கான வாய்ப்பையும், அவர்களுடைய வரங்களை வளர்த்துவிடும், ஆதரவளிக்கும் சூழ்நிலையில் பயன்படுத்தவும் NYI வாய்ப்புகளை வழங்குகிறது. இதன் மூலமாக நசரேயத் திருச்சபைக்கு நல்ல பலமான தலைமைத்துவம் கிடைக்கிறது. தலைமைத்துவ பயிற்சி, பொறுப்புணர்ச்சி, மற்றும் மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகள், ஊழியத்தில் மாற்றங்களைச் செய்தல் ஆகியவை NYI யின் முக்கியமான செயல்பாடுகளாக இருக்கின்றன.
5. NYI வழிநடத்த அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது
   ஊழியத்திற்கான பொறுப்புகள் மற்றும் ஒழுங்குமுறை சார்ந்த முடிவுகள் NYI யின் தலைமைத்துவத்திற்குள்ளேயே இருக்க வேண்டும் என்று இதற்குச் சம்பந்தமான வாலிப ஊழியத்தின் தேவையாக இருக்கிறது. இதற்குச் சரியான ஆளுகை செய்யும் பதவிகள், ஒவ்வொரு இடத்திலும் இருக்க வேண்டும். நாம் இந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சியும், சொந்தம் என்று கருதுதலும், ஊழியம் செய்வதற்கான வாஞ்சையும், முடிவுகளை எடுப்பதில் பங்களிப்பது ஆகியவை NYI மூலமாக இளம் வாலிபர்களுக்கு அதிகாரமளிப்பதின் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன.
6. கிறிஸ்துவில் ஐக்கியத்தையும், வேற்றுமையையும் NYI ஏற்றுக்கொண்டிருக்கிறது
   மொழி, நிறம், இனம், கலாச்சாரம், சமுதாய மற்றும் பொருளாதார நிலை மற்றும் பாலினம் ஆகியவற்றில் வேற்றுமைகளும், வேறுபாடுகளும் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டு அதைக் கொண்டாடுவதின்

NYI உறுதியாக இருக்கிறது. நம்முடைய வேறுபாடுகள் நம்முடைய ஐக்கியத்தை இல்லாமல் செய்துவிடவில்லை. அவை நம்முடைய திறனையும், செயல்திறத்தையும் மேம்படுத்துகின்றன. கலாச்சாரத்திற்கு ஏற்ற வழிகளில் இயேசு கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வதே மிகவும் உயர்ந்த முக்கியத்துவத்தைப் பெற வேண்டும்.

7. NYI தொடர்பு நிலைகளையும், கூட்டமைப்புகளையும் உருவாக்குகிறது
NYI யில் காணப்படும் ஒவ்வொரு உறவு நிலையிலும் ஒத்துழைப்பு சூழ்ந்திருக்கிறது. சபைக்குள்ளே தொடர்புகளை ஏற்படுத்துவது இளம் வாலிபர்களை ஊழியம் செய்வதற்காக வளர்ச்சி பெறச் செய்து, ஆயத்தப்படுத்துகிறது. இப்படிப்பட்ட ஒத்துழைப்பு சார்ந்த முயற்சிகளில் NYI உற்சாகமாகப் பங்குபெறுகிறது.

**810.6. நம்முடைய ஊழியத்தின் வடிவமைப்பு**

நசரேய வாலிபர் குழுவின் பிரிவானது நசரேயத் திருச்சபையின் எல்லாப் படிகளிலும் வாலிபர்களுக்கான ஊழியத்தை ஒழுங்குபடுத்தி, திட்டமிட்டு, செயல்படுத்துவதற்கான அடித்தளத்தைக் கொடுக்கிறது. ஊழியத் திட்ட மாதிரிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தி உள்ளூர், மறைமாவட்டம் மற்றும் பிராந்திய NYI குழுக்கள் தங்களுடைய ஊழியச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு இருக்கும் வாலிபர் ஊழிய தேவைகளுக்குப் பொருத்தமாக அதை மாற்றிக்கொள்ளலாம். எல்லாப் படிகளிலும் காணப்படும் ஊழிய திட்டங்கள் NYI பிரிவு மற்றும் *நசரேயத் திருச்சபையின் சட்டநூலோடு* ஒத்திருக்கும் வண்ணமாக இருக்க வேண்டும்.

**810.7. திருத்தங்கள்**

NYI பிரிவுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றால் உலகளாவிய NYI கூட்டமைப்பின் அங்கீகாரத்தின் பெயரில் செயல்படுத்தப்படலாம். அது உலகளாவிய அருட்பணி திட்டத்திற்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.

## A. உள்ளூர் ஊழிய திட்ட வார்ப்பு படிவம்

### <u>ஊழியங்கள்</u>

**810.100 சுவிசேஷம்**

இளம் வாலிபர்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காக NYI பல வகையான தொடர் ஊழியங்களையும், சிறப்பு நிகழ்வுகளையும் செயல்படுத்துகிறது.

**810.101 சீஷத்துவம்**

தனிப்பட்ட அர்ப்பணிப்பு, ஆராதனை, ஐக்கியம், ஊழியம் மற்றும் கிறிஸ்துவிடம் மற்றவர்களை வழிநடத்துதல் போன்ற காரியங்களில் இளம் வாலிபர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கும்படி அவர்களை வழிநடத்தி, சவால் விடுவதற்குத் தேவையான பல வகையான தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் NYI உருவாக்கி செயல்படுத்துகிறது.

**810.102 தலைமைத்துவ வளர்ச்சி**

கிறிஸ்துவுக்காகவும், அவருடைய திருச்சபைக்காகவும் தலைவர்களாக இருக்கும் பல இளம் வாலிபர்களை வழிநடத்தி, ஆயத்தப்படுத்தும் விதமான தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் NYI உருவாக்கி செயல்படுத்துகிறது.

## திருத்தங்கள்

**810.103 ஏற்பாடு**

1. இந்த உள்ளூர் ஊழிய திட்ட வார்ப்பு படிவமானது உள்ளூர் நிலையில் NYI யை ஒழுங்குபடுத்தி, செயல்படுத்தி மற்றும் தலைமைத்துவத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான ஒரு வடிவமைப்பைக் கொடுக்கிறது. உள்ளூர் வாலிபர்கள் ஊழியத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு இந்தத் திட்டத்தை ஒரு உள்ளூர் NYI குழு தனக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அது NYI பிரிவு மற்றும் *நசரேயத் திருச்சபை சட்ட நூலின்* விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
2. இந்த ஊழியத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படாத எந்தப் பகுதியும் உள்ளூர் NYI கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் வருகிறது.

**810.104 செயல்முறை**

1. NYI கூட்டமைப்பானது உள்ளூர் ஊழிய திட்டத்தை ஏற்றவாறு மாற்றி, மறுஆய்வு செய்யும் செயல்முறையை நிறுவி அதைச் செயல்படுத்துகிறது. ஆண்டு கூட்டத்தில் இந்தத் திட்டங்கள் கொண்டு வருவதற்கு முன்பாக இந்தக் கூட்டமைப்பு எடுத்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றங்களை அங்கீகரித்திருக்க வேண்டும்.
2. உள்ளூர் ஊழிய திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றங்கள் NYI ஆண்டு கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக NYI உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
3. கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கும் NYI உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேருடைய வாக்குகளைப் பெற்றால் தான் இந்த மாற்றங்கள் செய்யப்பட முடியும். அவையும் திருச்சபையின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலின் பேரிலேயே கொண்டு வரப்பட வேண்டும்.
4. உள்ளூர் ஊழிய திட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் NYI ஆண்டு கூட்டம் முடிந்து 30 நாட்களுக்குள் செயல்படுத்தப்பட வேண்டும். திருத்தப்பட்ட திட்டமானது செயல்படுத்தப்படுவதற்கு முன்பாக எழுத்துவடிவத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

## உறுப்பினர்கள் மற்றும் ஊழிய கவனம்

**810.105 ஆக்கம் மற்றும் பொறுப்புடைமை**

1. NYI குழுவின் ஊழியங்களில் பங்குகொண்டு, பின்னர் உள்ளூர் குழுவில் சேர்ந்துகொள்பவர்களே NYI உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

2. செயல்பாட்டில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களின் பெயர்களையும் ஒரு பட்டியலாக உள்ளூர் NYI வைத்திருக்கும்.
3. உள்ளூர் NYI அதனுடைய உறுப்பினர்கள், உள்ளூர் சபை நிர்வாகக் குழு மற்றும் போதகருக்கு தன்னுடைய பொறுப்புடைமையைக் கொண்டிருக்கிறது.
4. உள்ளூர் NYI மாதந்தோறும் சபை நிர்வாகக் குழுவிற்கும், ஆண்டு சபை கூடுகைக்கும் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிக்கிறது.

**810.106 ஊழிய கவனம்**

1. பாரம்பரியமாக உள்ளூர் NYI குழுவானது 12 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டவர்கள், கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் இளம் வாலிபர்கள் மீதே தன்னுடைய ஊழிய கவனத்தைச் செலுத்திவருகிறது. ஒரு உள்ளூர் NYI கூட்டமைப்பு போதகர் மற்றும் உள்ளூர் சபை நிர்வாகக் குழுவின் அனுமதியைப் பெற்று ஊழிய கவனத்தை அதற்கேற்ற வகையில் மாற்றிக்கொள்ளலாம்.
2. உள்ளூர் வாலிப ஊழியத்தின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, எடுத்துக்காட்டுவதற்கும், திட்டமிடுதலுக்கும் வசதியாக உள்ளூர் NYI குழு வயது வாரியான பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

## தலைமைத்துவம்

**810.107 அதிகாரிகள்**

1. உள்ளூர் NYI குழுவில் ஒரு தலைவரும், NYI ஆண்டு கூட்டத்தில் உள்ளூர் சபை தேவைக்களுக்கு ஏற்றவாறு ஊழிய பொறுப்புகள் கொடுக்கப்படும் மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுமே அதிகாரிகளாக இருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் நிர்வாகக் குழுவிலே பணியாற்றுவார்கள்.
2. உள்ளூர் NYI அதிகாரிகள் தாங்கள் பணியாற்றும் உள்ளூர் NYI இருக்கும் உள்ளூர் சபையின் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். உள்ளூர் வாலிபர் ஊழியத்தில் உற்சாகமாகச் செயல்பட வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையில் எடுத்துக்காட்டாகவும், ஊழிய நோக்குடனும் இருக்கும் தலைவர்களாக இருக்க வேண்டும்.
3. ஒழுங்குப்படுத்தப்பட்ட NYI இல்லாத சபைகளில் (உள்ளூர் NYI குழு கிடையாது) சபை நிர்வாகக் குழுவின் அனுமதியைப் பெற்று, அந்தச் சபை கிறிஸ்துவுக்காக வாலிபர்களைத் தேர்ந்தெடுக்கத் துவங்குவதற்கும், அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் தேவைகளைச் சந்திப்பதற்காகவும் சபைப் போதகர் ஒரு NYI குழு தலைவரை நியமிக்கலாம்.

**810.108 தேர்தல்**

1. உள்ளூர் NYI உறுப்பினர்களால் ஆண்டுதோறும் ஆண்டு கூட்டத்தில் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியில் அமரும் வரை தங்களுடைய பணிகளைச் செய்வார்கள்.
2. ஒரு நியமன கூட்டமைப்பு NYI அதிகாரிகளை நியமனம் செய்கிறது. இந்த நியமன கூட்டமைப்பு போதகரால் உருவாக்கப்படுகிறது. அதில்

NYI உறுப்பினர்களும், போதகரும், NYI தலைவரும் உறுப்பினர்களாக இருப்பார்கள். எல்லா நியமனங்களும் போதகராலும், சபை நிர்வாகக் குழுவாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். உள்ளூர் NYI தலைவராக நியமனம் செய்யப்படுபவர் தங்களுடைய தேர்தல் நேரத்தில் 15வது பிறந்த நாளை எட்டியிருக்க வேண்டும்.

3. NYI யின் ஆண்டு கூட்டத்தில் பங்கெடுக்கும் NYI உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒரு பதவிக்கு ஒரே ஒரு நியமனம் மட்டுமே இருக்கும் பட்சத்தில், “ஆம்” அல்லது “இல்லை” என்ற இரகசிய வாக்கெடுப்பு பயன்படுத்தப்படும். மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளைப் பெறுவது அங்கிகாரத்தைப் பெற்றுத் தரும். உள்ளூர் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மட்டுமே தலைவர் பதவிக்கு ஓட்டளிக்க முடியும்.
4. NYI கூட்டமைப்பு இப்படிப்பட்ட வாக்கெடுப்பை நியமன கூட்டமைப்பிடம், போதகர் மற்றும் சபை நிர்வாகக் குழுவின் அங்கிகாரத்தைப் பெற்றிருக்கும் பட்சத்தில் ஏற்கெனவே பதவியில் இருக்கும் அதிகாரி மறுபடியுமாக அந்தப் பதவிக்கு “ஆம்” அல்லது “இல்லை” என்ற வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆண்டு NYI கூட்டத்தில் அவர் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற வேண்டும்.
5. ஒரு அதிகாரி அந்தச் சபையிலிருந்து உறுப்பினராக நீங்கும்போதோ, ராஜினாமா செய்யும்போதோ அல்லது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றோ அல்லது சரியாக நடந்துகொள்ளவில்லை என்றோ மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று கூட்டமைப்பினால் நீக்கப்படும்போது காலியிடம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காலியிடம் ஏற்படும்போது ஒரே ஒரு நியமனம் இருக்கும்போது மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளைப் பெற்றும், இரண்டு அல்லது அதற்கும் மேலான நியமனங்கள் இருக்கும்போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றும் NYI கூட்டமைப்பு அந்த இடத்தை நிரப்பும். NYI தலைவரின் பதவிக்கு இந்தக் காலியிடம் ஏற்பட்டால், போதகர், வாலிபர் குழு போதகர் அல்லது அவர் நியமிக்கும் நபர் இந்தத் தேர்தலுக்குத் தலைமை வகிப்பார்.

**810.109 கடமைகள்**

1. NYI தலைவரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
   a. திருச்சபையில் வாலிபர்களுக்கான ஊழியத்திற்கு ஒரு தரிசனத்தை ஏறெடுக்கும்படியாக NYI கூட்டமைப்பிற்குத் தலைவராக இருத்தல்.
   b. NYI கூட்டமைப்போடு சேர்ந்து பணியாற்றி வாலிபர்களுக்கான ஊழியம் வளர்வதற்கான வழிகளை ஏற்படுத்தி, இந்த இளம் வாலிபர்களின் தேவைகளின் மீது இந்த ஊழியம் கவனம் செலுத்தும்படியாகச் செய்தல்.
   c. திருச்சபையின் நிர்வாகக் குழுவில் பணியாற்றி, ஒரு மாதாந்திர அறிக்கையை அதனிடத்தில் சமர்ப்பித்தல். வருடாந்திர வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்பாக NYI தலைவரின் குறைந்தபட்ச வயது என்னவாக

இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யலாம். தலைவர் குறைந்த வயதுள்ளவராக இருந்தால், NYI கூட்டமைப்பால் திருச்சபையின் நிர்வாகக் குழுவில் வேறு மாற்று நபர் பிரதிநிதியாகச் செல்வார். இது நிர்வாகக் குழுவின் அனுமதியின் பெயரில் நடைபெறும்.

d. வருடாந்தர சபைக் கூட்டங்களுக்கு ஊழியத்தைக் குறித்தும், ஊழியத்தின் நிதி நிலையைக் குறித்தும் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

e. உள்ளூர் NYI குழுவின் நிதி அறிக்கையை, NYI கூட்டமைப்பின் அங்கீகாரத்தைப் பெற்று சபை நிர்வாகக் குழுவிடம் சமர்ப்பித்தல்

f. பதவியின் காரணமாக ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய குழுவின் உறுப்பினராகப் பணியாற்றுதல். சபையில் காணப்படும் வாலிபர்களிடத்தில் ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வு/சிறு குழுக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.

g. நசரேய அருட்பணி இயக்கத்தின் தலைவரோடு சேர்ந்து வாலிர்களிடையே அருட்பணியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கப் பணியாற்றுதல்.

h. நசரேய NYI கூட்டமைப்பின் உறுப்பினராகவும், மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராகவும் கலந்துகொள்ளுதல். தலைவரால் கலந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டால், NYI கூட்டமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர், போதகர் மற்றும் சபை நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்று மாற்று பிரதிநிதியாகச் செல்லலாம்.

2. NYI அதிகாரிகளின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:

a. பல்வேறு உள்ளூர் NYI ஊழியங்களுக்குத் தலைவர்களை உருவாக்கி நியமித்தல்.

b. திருச்சபைக்குள்ளும், அதற்கு வெளியேயும் வாலிபர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருத்தல்.

c. உள்ளூர் சபையின் தேவைகளுக்கு ஏற்ப தலைப்புகளையும், வாலிப ஊழிய தேவைகளையும் நிர்ணயித்தல்.

d. பொறுப்புணர்ச்சியையும், செயல்திறனையும் நிருவுவதற்காகப் பின்வரும் கடமைகளைப் பகிர்ந்துகொடுத்தல்:

1. NYI கூட்டமைப்பின் எல்லாக் கூட்டங்களைக் குறித்த சரியான பதிவுகளைக் காத்துக்கொள்ளுதல். உள்ளூர் NYI சம்பந்தமான கடிதம் மற்றும் இதரத் தொடர்புகளைப் பார்த்துக்கொள்ளுதல்.

2. சபையின் நிர்வாகக் குழுவின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு NYI நிதியைக் குறித்தக் கணக்குகளைப் பதிவுசெய்து, அவைகளைப் பிரித்துக் கொடுப்பதும், பெற்றுக்கொள்வதும்.

3. பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் மற்றும் பகிர்ந்துகொடுக்கப்பட்ட தொகை எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு வருடாந்தர பதிவை சபை நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் ஆண்டுதோறும் சமர்ப்பித்தல்.

4. NYI தலைவரோடு சேர்ந்து பணியாற்றி, அங்கீகாரத்திற்காக ஒரு வருடாந்திர நிதி நிலை அறிக்கையைக் கூட்டமைப்பிடமும், சபைக்குழுவின் கூட்டத்திடமும் சமர்ப்பித்தல்.

e. உள்ளூர் NYI குழுவின் மேம்படுத்தும் வகையில், தலைவரோடு சேர்ந்து எல்லா வழிகளிலும் பணியாற்றுதல்

f. NYI கூட்டமைப்பினால் நிர்ணயிக்கப்படும் பிற ஊழியங்களையும் செயல்படுத்துதல்.

**810.110 ஊதியம் கொடுக்கப்படும் பணியாளர்கள்**

1. ஒரு வாலிபர்களுக்கான போதகர் சபையில் நியமிக்கப்படும்போது, சபை நிர்வாகக் குழு மற்றும் NYI கூட்டமைப்போடு ஆலோசனை பெறும் போதகர் NYI வழிநடத்தும் கடமையை வாலிபர்களுக்கான போதகரிடம் ஒப்படைக்கிறார். அப்படிச் செய்யும்போது, அந்தப் போதகர் உள்ளூர் NYI தலைவர் பொதுவாக செய்யும் காரியங்களில் சிலவற்றைச் செய்கிறார். ஆனாலும் NYI தலைவரின் முக்கியத்துவம் மாறாமல் தான் இருக்கிறது. அவரே மிகவும் முக்கியமான தலைமைத்துவத்தையும், ஆதரவையும், உள்ளூர் வாலிப ஊழியத்தின் பிரதிநிதியாகவும் இருக்கிறார். போதகரும், வாலிபர்களுக்கான போதகரும், NYI கூட்டமைப்பும் சேர்ந்து பணியாற்றி இந்த இரண்டு பணியிடங்களுக்குமான கடமைகள் என்னவாக இருக்கும், சபையின் வாலிபர்களுக்கான ஊழியத்தை மேம்படுத்துவதற்கு அவர்கள் இருவரும் சேர்ந்து எப்படிப் பயன்தரும் வகையில் செயலாற்றலாம் என்று நிர்ணயிப்பார்கள்.
2. வாலிபர்களுக்கான போதகர் NYI குழுவின் தலைவராக இருக்க மாட்டார்.
3. வாலிபர்களுக்கான போதகர் தன்னுடைய பதவியின் காரணமாக NYI கூட்டமைப்பின், NYI நிர்வாகக் குழு மற்றும் NYI நியமன கூட்டமைப்பின் உறுப்பினராக இருப்பார்.
4. NYI சம்பந்தமான கடமைகளைச் செய்வதற்குப் போதகருடைய பிரதிநிதியாக வாலிபர்களுக்கான போதகர் செயல்படலாம்.
5. ஒரு சபையானது NYI க்குள் காணப்படும் ஒவ்வொரு வயது வரம்பிற்கும் பணியாற்ற ஒரு நபரைப் பெற்றிருந்தால், அது ஒவ்வொரு பிரிவிற்கும் அதிகாரிகளை நியமிக்கக்கூடும், அவர்கள் பணியாளர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இருப்பார்கள். இந்த அதிகாரிகளிடத்திலிருந்து NYI சபை நிர்வாகக் குழுவிடம் எப்படி பிரதிநிதித்துவம் செய்யப் போகிறார்கள் என்பது முடிவு செய்யப்படும்.

## கூட்டமைப்பு

**810.111 ஆக்கம்**

1. NYI கூட்டமைப்பானது NYI அதிகாரிகள், மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனம் செய்யப்பட்ட வாலிப உறுப்பினர்களையும், தேவைப்படும் ஊழிய தலைவர்களையும், போதகர் மற்றும்/அல்லது வாலிபர்களுக்கான போதகர் ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது. அவர்கள் அனைவரும்

சேர்ந்து உள்ளூர் வாலிபர்களுக்கான ஊழியத்தின் தரிசனத்தைச் செயல்படுத்துவார்கள்.

2. NYI கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உள்ளூர் NYI குழுவின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். உள்ளூர் சபையில் உறுப்பினர்களாக இருப்பது ஊக்குவிக்கப்படுகிறது. NYI கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சபை உறுப்பினர்களாக மாறுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள்.

**810.112 தேர்தல்**

1. NYI நியமன கூட்டமைப்பின் உறுப்பினர்கள் NYI கூட்டமைப்பில் தேர்ந்தெடுக்கப்படும் விதமாக உள்ளூர் NYI உறுப்பினர்களை நியமனம் செய்வார்கள்.
2. இதன்பின்னர் NYI உறுப்பினர்கள் NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களை ஆண்டுதோறும் நடக்கும் NYI கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நியமனங்களிலிருந்து பெரும்பான்மை வாக்கைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்துவார்கள்.
3. ஒரு அதிகாரி அந்தச் சபையிலிருந்து உறுப்பினராக நீங்கும்போதோ, இராஜினாமா செய்யும்போதோ அல்லது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றோ அல்லது சரியாக நடந்துகொள்ளவில்லை என்றோ மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று கூட்டமைப்பினால் நீக்கப்படும்போது காலியிடம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காலியிடம் ஏற்படும்போது ஒரே ஒரு நியமனம் இருக்கும்போது மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளைப் பெற்றும், இரண்டு அல்லது அதற்கும் மேலான நியமனங்கள் இருக்கும்போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றும் NYI கூட்டமைப்பு அந்த இடத்தை நிரப்பும். NYI தலைவரின் பதவிக்கு இந்தக் காலியிடம் ஏற்பட்டால், போதகர், வாலிபர் குழு போதகர் அல்லது அவர் நியமிக்கும் நபர் இந்தத் தேர்தலுக்குத் தலைமை வகிப்பார்.
4. ஒரு சபையானது ஏழுக்கும் குறைவான NYI உறுப்பினர்களைப் பெற்றிருந்தால், போதகர் NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களை நியமனம் செய்வார். இதன் மூலமாக வாலிபர்களுக்கான ஊழியம் வளர்ந்து, கிறிஸ்துவுக்காக இந்த வாலிபர்களைச் சந்திக்கும்படி செயல்பட முடியும்.

**810.113 கடமைகள்**

1. NYI கூட்டமைப்பானது உள்ளூர் சபைக்கு உட்பட்ட வாலிபர்களுக்கான ஊழியத்தைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்துதலுக்கான கடமையைப் பெற்றிருக்கிறது. அது தன்னுடைய அதிகாரிகள் மற்றும் இயக்குனர்களின் மூலமாகக் கிறிஸ்துவுக்காக இளம் வாலிபர்களைச் சந்திக்கும்படியாகவும், அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கும்படியாகவும், உள்ளூர் சபைத் தலைமைத்துவத்தோடு சேர்ந்து ஊழியங்களையும், செயல்களையும் முன்னிறுத்தி செயல்படுத்துகிறார்கள்.
2. NYI கூட்டமைப்பானது உள்ளூர் NYI குழுவின் ஊழிய நோக்கை வரையறுக்கிறது. அது உள்ளூர் வாலிபர்களின் ஊழியத் தேவைக்கு ஏற்றவாறு இருக்கும். ஊழிய இயக்குனர்களுக்கு அதன் அடிப்படையில் பதவிகளையும், வேலைகளையும் நிர்ணயிக்கிறது.

3. NYI கூட்டமைப்பானது ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/சிறு குழுக்கள் ஆகியவற்றின் வாலிபர்களுக்கான பிரிவுகளில் தலைமைத்துவத்தைக் காண்பிக்கிறது. அது வாலிபர்கள் சேர்வதிலும், கலந்துகொள்வதிலும் வளர்ச்சியையும், நியமனத்தையும், வாலிபர்களுக்கான ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/சிறு குழுக்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களுக்குப் பயிற்சியையும் அளிக்கிறது. பயன்படுத்தக்கூடிய பாடத்திட்டம் மற்றும் ஆதாரங்களைப் பரிந்துரை செய்கிறது. இதை அது ஒய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்தின் குழுவோடு சேர்ந்து செய்கிறது.
4. NYI கூட்டமைப்பானது மறைமாவட்ட NYI கூட்டமைப்போடு சேர்ந்து மறைமாவட்ட, பிராந்திய மற்றும் உலகளாவிய NYI ஊழியங்களைத் திருச்சபையில் காணப்படும் இளம் வாலிபர்களுக்கிடையே பரவச் செய்கிறது.
5. NYI கூட்டமைப்பானது உள்ளூர் ஊழியத் திட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்கான செயல்முறையை நிறுவி, அதைத் தெரிவிக்கிறது.

**810.114 குழுக்கள்**

1. NYI நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட NYI அதிகாரிகளும், போதகரும் அல்லது வாலிபர்களுக்கான போதகர்களும் இருப்பார்கள். தேவைப்படும்போது NYI கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வமான பணிகளை இந்த நிர்வாகக் குழு செயல்படுத்தும். நிர்வாகக் குழுவின் எல்லாச் செயல்களும் அந்தக் கூட்டமைப்பின் மீதமிருக்கும் உறுப்பினர்களுக்குச் சொல்லப்படும். அடுத்தக் கூட்டத்தில் அந்த முழு கூட்டமைப்பும் இதற்கான அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும்.
2. NYI கூட்டமைப்பானது வாலிபர்களுக்கான ஊழிய தேவையை அடிப்படையாகக் கொண்டு விசேஷ ஊழியத்தையோ அல்லது வயதுவாரியான பாகுபாட்டைக் கொண்ட குழுக்களையோ ஏற்படுத்த முடியும்.

**810.115 ஊதியம் கொடுக்கப்படும் பணியாளர்கள்**

1. வாலிபர்களுக்கான போதகர் என்ன செய்யவேண்டும் என்பதை சபை நிர்வாகக் குழு மற்றும் NYI கூட்டமைப்போடு சேர்ந்து போதகர் நிர்ணயிப்பார்.
2. NYI கூட்டமைப்பும், வாலிபர்களுக்கான போதகரும் சேர்ந்து, ஒருவருக்கொருவர் இணக்கத்தோடு பணியாற்றுவார்கள்.
3. ஒரு திருச்சபையானது குறிப்பிட்ட வயதுவாரியான பிரிவுகளைப் பார்த்துக்கொள்ளும்படியான ஊதியம் கொடுக்கப்படும் பணியாளர்களைக் கொண்டிருந்தால், ஒவ்வொரு வயதிற்கும் ஏற்றவாறு NYI கூட்டமைப்புகளையோ அல்லது குழுக்களையோ ஏற்படுத்தக்கூடும். இவை பணியாளர்களின் தலைமைத்துவத்தின் கீழ் வருவார்கள். இப்படிப்பட்ட பல குழுக்களுக்கு ஒரு ஒருங்கிணைப்பாளர் கூட்டமைப்பு தேவையா என்று சபை முடிவு செய்யும்.

### கூட்டங்கள்

**810.116 உள்ளூர் NYI கூட்டங்கள்**

1. வாலிபர்களுக்காகச் செயல்பூர்வமான ஊழியத்தை வழங்கும்படியாகப் பல வகையான உள்ளூர் NYI கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
2. உள்ளூர் NYI குழுவானது மறைமாவட்ட, பிராந்திய மற்றும் அகில உலக NYI கூட்டங்களில் பங்குபெற்றும் வாலிபர்களுக்கான ஊழியத்தை இன்னும் மேம்படுத்துகிறது.

**810.117 NYI கூட்டமைப்பின் கூட்டங்கள்**

1. NYI கூட்டமைப்பானது NYI யின் ஊழிய இலக்கு மற்றும் தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக அடிக்கடி சந்தித்துக்கொள்ளும்.
2. இந்தக் கூட்டங்களுக்குத் தலைவரோ அல்லது போதகரோ அழைப்புவிடுக்கலாம்.

**810.118 வருடாந்திரக் கூட்டம்**

1. உள்ளூர் NYI கூட்டங்கள் மறைமாவட்ட NYI சங்கத்தின் சிந்திப்பிற்குப் பிறகு அறுபது நாட்களில் நடைபெற வேண்டும். அது *நசரேயத் திருச்சபையின் சட்டநூலின்* விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
2. NYI அதிகாரிகளும், கூட்டமைப்பின் உறுப்பினர்களும், NYI மறைமாவட்ட சங்கத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களும் இந்த வருடாந்திர NYI கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
3. உள்ளூர் NYI ஊழியத்தின் திட்டமானது NYI வருடாந்திரக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று திருத்தங்களை ஏற்படுத்தலாம்.

## B. மறைமாவட்ட ஊழிய திட்ட வார்ப்பு படிவம்

### ஊழியங்கள்

**810.200 சுவிசேஷம்**

இளம் வாலிபர்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காக மறைமாவட்ட NYI பல வகையான தொடர் ஊழியங்களையும், சிறப்பு நிகழ்வுகளையும் செயல்படுத்துகிறது.

**810.201 சீஷத்துவம்**

தனிப்பட்ட அர்ப்பணிப்பு, ஆராதனை, ஐக்கியம், ஊழியம் மற்றும் கிறிஸ்துவிடம் மற்றவர்களை வழிநடத்துதல் போன்ற காரியங்களில் இளம் வாலிபர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கும்படி அவர்களை வழிநடத்தி, சவால் விடுவதற்குத் தேவையான பல வகையான தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் மறைமாவட்ட NYI உருவாக்கி செயல்படுத்துகிறது.

**810.202 தலைமைத்துவ வளர்ச்சி**

கிறிஸ்துவுக்காகவும், அவருடைய திருச்சபைக்காகவும் தலைவர்களாக இருக்கும் பல இளம் வாலிபர்களை வழிநடத்தி, ஆயத்தப்படுத்தும் விதமாகத் தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் மறைமாவட்ட NYI உருவாக்கி செயல்படுத்துகிறது.

## திருத்தங்கள்

**810.203 ஏற்பாடு**

1. இந்த மறைமாவட்ட ஊழிய திட்ட வார்ப்பு படிவமானது மறைமாவட்ட நிலையில் NYI யை ஒழுங்குபடுத்தி, செயல்படுத்தி மற்றும் தலைமைத்துவத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான ஒரு வடிவமைப்பைக் கொடுக்கிறது. மறைமாவட்ட வாலிபர்கள் ஊழியத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு இந்தத் திட்டத்தை ஒரு மறைமாவட்ட NYI குழு தனக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அது NYI பிரிவு மற்றும் *நசரேயத் திருச்சபை சட்டநூலின்* விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
2. இந்த ஊழியத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படாத எந்தப் பகுதியும் மறைமாவட்ட NYI கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் வருகிறது.

**810.204 செயல்முறை**

1. NYI கூட்டமைப்பானது மறைமாவட்ட ஊழியத் திட்டத்தை ஏற்றவாறு மாற்றி, மறுஆய்வு செய்யும் செயல்முறையை நிறுவி அதைச் செயல்படுத்துகிறது. ஆண்டு கூட்டத்தில் இந்தத் திட்டங்கள் கொண்டு வருவதற்கு முன்பாக இந்தக் கூட்டமைப்பு எடுத்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றங்களை அங்கீகரித்திருக்க வேண்டும்.
2. மறைமாவட்ட ஊழியத் திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றங்கள் NYI ஆண்டு கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக உள்ளூர் NYI குழுக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
3. NYI மறைமாவட்ட சங்கத்தில் கலந்துகொண்டிருக்கும் எல்லாருடைய மூன்றில் இரண்டு பங்கு பேருடைய வாக்குகளைப் பெற்றுத் தான் இந்த மாற்றங்கள் செய்யப்பட முடியும். அவையும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலின் பேரிலேயே கொண்டு வரப்பட வேண்டும்.
4. மறைமாவட்ட ஊழியத் திட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் இந்தச் சங்கக் கூடுகை முடிந்து 60 நாட்களுக்குள் செயல்படுத்தப்பட வேண்டும். திருத்தப்பட்ட திட்டமானது செயல்படுத்தப்படுவதற்கு முன்பாக எழுத்துவடிவத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

## உறுப்பினர்கள் மற்றும் ஊழிய கவனம்

**810.205 ஆக்கம் மற்றும் பொறுப்புடைமை**

1. எல்லா உள்ளூர் NYI குழுக்களும், அந்த மறைமாவட்டத்திற்கு உட்பட்ட NYI உறுப்பினர்களும் மறைமாவட்ட நசரேய வாலிபர் குழுவை உருவாக்குகிறார்கள்.

2. மறைமாவட்ட NYI குழுவானது தன்னுடைய உறுப்பினர்கள், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிற்குப் பொறுப்புள்ளதாக இருக்கிறது.
3. மறைமாவட்ட NYI வருடா வருடம் மறைமாவட்ட NYI சங்கத்திலும், மறைமாவட்ட மாநாட்டிலும் மறைமாவட்ட NYI தலைவரின் மூலமாக அறிக்கையை சமர்ப்பிக்கும்.

**810.206 ஊழிய கவனம்**

1. பாரம்பரியமாக மறைமாவட்ட NYI குழுவானது 12 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டவர்கள், கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் இளம் வாலிபர்கள் மீதே தன்னுடைய ஊழிய கவனத்தைச் செலுத்திவருகிறது. ஒரு மறைமாவட்ட NYI கூட்டமைப்பு மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்று ஊழிய கவனத்தை அதற்கேற்ற வகையில் மாற்றிக்கொள்ளலாம்.
2. மறைமாவட்ட வாலிப ஊழியத்தின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, எடுத்துக்காட்டுவதற்கும், திட்டமிடுதலுக்கும் வசதியாக மறைமாவட்ட NYI குழு வயது வாரியான பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

## தலைமைத்துவம்

**810.207 அதிகாரிகள்**

1. மறைமாவட்ட NYI அதிகாரிகளாகத் தலைவர், துணைத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் இருக்கிறார்கள்.
2. மறைமாவட்ட NYI அதிகாரிகள் தாங்கள் தேர்ந்தெடுக்கப்படும் நேரத்தில் அந்த மறைமாவட்டத்திற்குட்பட்ட உள்ளூர் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். உள்ளூர் மற்றும் மறைமாவட்ட வாலிபர் ஊழியத்தில் உற்சாகமாகச் செயல்பட வேண்டும். தனிப்பட்ட எடுத்துக்காட்டு மற்றும் ஊழியத்திலும் அவர்கள் தலைவர்களாகப் பார்க்கப்பட வேண்டும்.
3. மறைமாவட்ட NYI அதகாரிகள் சம்பளம் இல்லாமல் பணியாற்றுகிறார்கள். மறைமாவட்ட NYI அதிகாரிகளின் நிர்வாகச் செலவுகளுக்கான பணம் மறைமாவட்ட NYI நிதி அறிக்கையின் ஒரு பங்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.
4. ஒழுங்குபடுத்தப்பட்ட NYI இல்லாத மறைமாவட்டங்களில் (மறைமாவட்ட NYI குழு கிடையாது) அந்த உள்ளூர் திருச்சபைகள் கிறிஸ்துவுக்காக வாலிபர்களைக் கண்டடைய துவங்குவதற்கும், அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் தேவைகளைச் சந்திப்பதற்காகவும் அந்த மறைமாவட்டம் உதவுவதற்கு வசதியாக மறைமாவட்டக் கண்காணிப்பாளர் ஒரு NYI குழு தலைவரை நியமிக்கலாம்.

**810.208 தேர்தல்**

1. மறைமாவட்ட NYI அதிகாரிகள், மறைமாவட்ட NYI சங்கத்தின் உறுப்பினர்களால் ஆண்டுதோறும் ஆண்டுக் கூட்டத்தில் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியில் அமரும் வரை தங்களுடைய

பணிகளைச் செய்வார்கள். மறைமாவட்ட NYI நியமன கூட்டமைப்பின் பரிந்துரையின் பேரில், மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற்று, ஒரு அதிகாரி இரண்டு வருடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

2. ஒரு மறைமாவட்ட NYI நியமன குழுவானது மறைமாவட்ட NYI அதிகாரிகளை நியமனம் செய்கிறது. இந்த நியமன குழுவானது மறைமாவட்ட NYI கூட்டமைப்பினால் நியமனம் செய்யப்படுகிறது. அதில் குறைந்தபட்சம் நான்கு மறைமாவட்ட NYI உறுப்பினர்கள் இருப்பார்கள். அதில் மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், மறைமாவட்ட NYI தலைவரும் சேர்ந்திருக்கிறார்கள். எல்லா நியமனங்களும் மறைமாவட்ட NYI கூட்டமைப்பினாலும், மறைமாவட்டக் கண்காணிப்பாளராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. ஆண்டுதோறும் நடக்கும் NYI சங்கத்தில் அதிகாரிகள் எல்லோரும் இரகசிய வாக்கெடுப்பில் பெரும்பான்மையைப் பெறுவதின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒரு பதவிக்கு ஒரே ஒரு நியமனம் மட்டுமே இருக்கும் பட்சத்தில், ‘‘ஆம்’’ அல்லது ‘‘இல்லை’’ என்ற இரகசிய வாக்கெடுப்பு பயன்படுத்தப்படும். மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளைப் பெறுவது அங்கிகாரத்தைப் பெற்றுத் தரும். நியமன குழுவானது பரிந்துரை செய்தால், மறைமாவட்ட NYI கூட்டமைப்பை மறைமாவட்ட NYI செயலாளர் மற்றும் பொருளாளரை நியமிக்க அந்தச் சங்கம் அனுமதியளிக்கலாம்.

4. மறைமாவட்ட NYI கூட்டமைப்பு இப்படிப்பட்ட வாக்கெடுப்பை நியமன கூட்டமைப்பிடம், மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அங்கிகாரத்தைப் பெற்றிருக்கும் பட்சத்தில் ஏற்கெனவே பதவியில் இருக்கும் அதிகாரி மறுபடியுமாக அந்தப் பதவிக்கு ‘‘ஆம்’’ அல்லது ‘‘இல்லை’’ என்ற வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். மறைமாவட்ட NYI கூட்டத்தில் அவர் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற வேண்டும்.

5. ஒரு அதிகாரி அந்தச் சபையிலிருந்து உறுப்பினராக நீங்கும்போதோ, இராஜினாமா செய்யும்போதோ அல்லது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றோ அல்லது சரியாக நடந்துகொள்ளவில்லை என்றோ மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று கூட்டமைப்பினால் நீக்கப்படும்போது காலியிடம் ஏற்படுகிறது. NYI தலைவர் பதவியில் காலியிடம் ஏற்பட்டால், துணைத் தலைவர் அடுத்த மறைமாவட்ட NYI சங்கம் கூடும் வரையிலும் அந்தப் பொறுப்புகளை எடுத்துச் செயல்படுவார். அந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த மற்ற அதிகாரிகளின் பணியிடங்கள் காலியானால், மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது இரண்டு அல்லது அதற்கும் மேலான நியமனங்கள் இருக்கும்போது மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று அந்தக் காலியிடத்தை நிரப்பும்.

**810.209 கடமைகள்**

1. மறைமாவட்ட NYI தலைவரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
   a. மறைவாட்ட NYI க்குத் தேவையான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் கொடுத்தல். NYI உள்ளூர் மற்றும் மறைமாவட்டத் தலைமைத்துவத்தோடு ஒருங்கிணைந்து பணியாற்றுதல்

b. மறைவாட்ட NYI கூட்டமைப்பின் கூட்டங்களைத் தலைமைத்தாங்கி அந்த மறைமாவட்டத்தின் வாலிபர் ஊழியங்களுக்கான தரிசனத்தை எடுத்துரைத்தல்.
c. அந்த மறைமாவட்டத்தின் வாலிபர் ஊழியங்களைச் செயல்படுத்துதல் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு அந்த மறைமாவட்டத்தின் NYI ஊழிய நோக்கத்தை வரையறுப்பதற்கு மறைமாவட்ட NYI கூட்டமைப்போடு பணியாற்றுதல்.
d. மறைமாவட்ட NYI சங்கக் கூடுகையில் தலைமைத்தாங்குதல்
e. மறைமாவட்டத்திற்குள் இருக்கும் எல்லா உள்ளூர் சபைகளிலும் NYI ஊழியம் மேம்படுத்தப்படுவதற்கு உற்சாகமளித்தல்.
f. எல்லா தேவையுள்ள இடங்களில் NYI யைக் குறித்த காரியங்களைப் பேசுதல்.
g. மறைமாவட்ட NYI சங்கத்திடமும், மறைமாவட்ட மாநாட்டிடமும் ஒரு வருடாந்திர அறிக்கையை சமர்ப்பித்தல்
h. மறைமாவட்ட நிதி குழுவிற்கும் (அல்லது அதற்குப் பொருத்தமான வேறு மறைமாவட்டக் குழுவிடமோ), மறைமாவட்ட NYI சங்கத்திற்கும் வருடாந்திர நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல்
i. மறைமாவட்ட மாநாட்டில் தன்னுடைய பதவியின் காரணமாகக் கலந்துகொள்ளுதல்
j. அகில உலக NYI சங்கத்தின் உறுப்பினராக இருத்தல், தலைவர் கலந்துகொள்ள முடியாத நிலையில், மறைமாவட்ட NYI கூட்டமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி, மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் மாற்று ஆளாக செல்லுதல்.
k. பிராந்திய NYI கூட்டமைப்பின் உறுப்பினராக இருத்தல். அது அந்தப் பிராந்திய ஊழிய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தால் மட்டும்.

2. மறைமாவட்ட NYI கூட்டமைப்பின் துணைத் தலைவரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
a. மறைமாவட்டத்தில் செயல்திறன் மிக்க வாலிபர் ஊழியங்களைச் செயல்படுத்தும் விதமாக பிராந்திய NYI கூட்டமைப்பின் தலைவரோடு இணக்கத்தோடு செயல்படுதல்.
b. தலைவர் இல்லாத நேரத்தில் அவருடைய கடமைகளைச் செய்தல்.
c. மறைமாவட்ட NYI கூட்டமைப்பு மற்றும் சங்கம் கொடுக்கும் பிற வேலைகளைச் செய்தல்.
d. மறைமாவட்ட NYI தலைவர் பதவி காலியாக இருந்தால், அவருக்குப் பின்னால் வருபவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணிக்குவரும் வரை அவருடைய பணிகளைச் செய்தல்.

3. செயலாளருடைய கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
a. மறைமாவட்ட NYI கூட்டமை, நிர்வாகக் கூட்டமைப்பு மற்றும் மறைமாவட்ட NYI சங்கம் ஆகிய கூட்டங்களில் நடப்பனவற்றைச் சரியான வகையில் பதிவு செய்தல்.

b. மறைமாவட்ட NYI யில் தொடர்புகள் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளுதல்
c. தேர்ந்தெடுத்தப்பிறகு சீக்கிரத்தில் அகல உலக NYI அலுவலகம் மற்றும் பிராந்திய NYI தலைவருக்கு இங்குத் தேர்வுசெய்யப்பட்ட மறைமாவட்ட NYI அலுவலர்கள் மற்றும் ஊழிய இயக்குனர்களின் பெயர் மற்றும் முகவரியை அனுப்புதல்.
d. மறைமாவட்ட NYI கூட்டமைப்பு மற்றும் சங்கம் கொடுக்கும் பிற வேலைகளைச் செய்தல்.

4. பொருளாளருடைய கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
   a. மறைமாவட்ட NYI நிதியைப் பிரித்துக் கொடுத்தல், பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பதிவு செய்துவைத்தல்.
   b. பெறப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட பணத்தைக்குக் குறித்த ஆண்டு நிதி அறிக்கையை ஆண்டுதோறும் நடக்கும் மறைமாவட்ட NYI சங்கத்தில் சமர்ப்பித்தல்.
   c. தலைவரேடு சேர்ந்து பணியாற்றி அதற்குரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதற்காக நிதி அறிக்கையைத் தயார் செய்தல்.
5. மறைமாவட்ட வாலிபர் ஊழியங்களின் தேவைக்கு ஏற்ப இன்னும் பதவிகள் நியமிக்கப்படலாம்.

**810.210 ஊதியம் பெறும் பணியாளர்கள்**

1. ஒரு வாலிபர்களுக்கான போதகர் மறைமாவட்டத்தில் நியமிக்கப்படும்போது, மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மறைமாவட்ட NYI கூட்டமைப்போடு ஆலோசனை பெறும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் NYI வழிநடத்தும் கடமையை வாலிபர்களுக்கான போதகரிடம் ஒப்படைக்கிறார். அப்படி செய்யும்போது, அந்தப் போதகர் மறைமாவட்ட NYI தலைவர் பொதுவாக செய்யும் காரியங்களில் சிலவற்றைச் செய்கிறார். ஆனாலும் மறைமாவட்ட NYI தலைவரின் முக்கியத்துவம் மாறாமல் தான் இருக்கிறது. அவரே மிகவும் முக்கியமான தலைமைத்துவத்தையும், ஆதரவையும், மறைமாவட்ட வாலிப ஊழியத்தின் பிரதிநிதியாகவும் இருக்கிறார். மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், NYI கூட்டமைப்பும் சேர்ந்து பணியாற்றி இந்த இரண்டு பணியிடங்களுக்குமான கடமைகள் என்னவாக இருக்கும், மறைமாவட்டத்தின் வாலிபர்களுக்கான ஊழியத்தை மேம்படுத்துவதற்கு அவர்கள் இருவரும் சேர்ந்து எப்படிப் பயன்தரும் வகையில் செயலாற்றலாம் என்று நிர்ணயிப்பார்கள்.
2. ஒரு வாலிபர்களுக்கான போதகர் மறைமாவட்ட NYI குழுவின் தலைவராக இருக்க மாட்டார்.
3. வாலிபர்களுக்கான போதகர் தன்னுடைய பதவியின் காரணமாக மறைமாவட்ட NYI கூட்டமைப்பின், NYI நிர்வாகக் குழு மற்றும் மறைமாவட்ட NYI நியமன கூட்டமைப்பின் உறுப்பினராக இருப்பார்.
4. NYI சம்பந்தமான கடமைகளைச் செய்வதற்கு மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் பிரதிநிதியாக வாலிபர்களுக்கான போதகர் செயல்படலாம்.

## கூட்டமைப்பு

### 810.211 ஆக்கம்

1. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது மறைமாவட்ட NYI அதிகாரிகள், மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனம் செய்யப்பட்ட வாலிப உறுப்பினர்களையும், தேவைப்படும் ஊழிய தலைவர்களையும், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும்/அல்லது மறைமாவட்ட வாலிபர்களுக்கான போதகர் ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது. அவர்கள் அனைவரும் சேர்ந்து மறைமாவட்ட வாலிபர்களுக்கான ஊழியத்தின் தரிசனத்தைச் செயல்படுத்துவார்கள்.
2. அந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்கள் மட்டுமே NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களாக இருக்க முடியும்.

### 810.212 தேர்தல்

1. மறைமாவட்ட NYI நியமன கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மறைமாவட்ட NYI கூட்டமைப்பில் தேர்ந்தெடுக்கப்படும் விதமாக மறைமாவட்ட NYI உறுப்பினர்களை நியமனம் செய்வார்கள்.
2. இதன்பின்னர் மறைமாவட்ட NYI சங்கத்தின் உறுப்பினர்கள் மறைமாவட்ட NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நியமனங்களிலிருந்து பெரும்பான்மை வாக்கைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்துவார்கள்.
3. ஒரு அதிகாரி அந்த மறைமாவட்டத்திலிருந்து உறுப்பினராக நீங்கும்போதோ, இராஜினாமா செய்யும்போதோ அல்லது கடமைகளைச் சரியாக செய்யவில்லை என்றோ அல்லது சரியாக நடந்துகொள்ளவில்லை என்றோ மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று கூட்டமைப்பினால் நீக்கப்படும்போது காலியிடம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காலியிடம் ஏற்படும்போது ஒரே ஒரு நியமனம் இருக்கும்போது மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளைப் பெற்றும், இரண்டு அல்லது அதற்கும் மேலான நியமனங்கள் இருக்கும்போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றும் மறைமாவட்ட NYI கூட்டமைப்பு அந்த இடத்தை நிரப்பும்.
4. மறைமாவட்ட ஊழிய இயக்குனர்களை நியமித்துக்கொள்ளும் அதிகாரத்தை நியமன குழுவானது மறைமாவட்ட NYI கூட்டமைப்பிற்குக் கொடுக்கலாம்.

### 810.213 கடமைகள்

1. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது மறைமாவட்டத்திற்கு உட்பட்ட வாலிபர்களுக்கான ஊழியத்தைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்துதலுக்கான கடமையைப் பெற்றிருக்கிறது. அது தன்னுடைய அதிகாரிகள் மற்றும் இயக்குனர்களின் மூலமாகக் கிறிஸ்துவுக்காக இளம் வாலிபர்களைச் சந்திக்கும்படியாகவும், அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கும்படியாகவும், மறைமாவட்டத் தலைமைத்துவத்தோடு சேர்ந்து ஊழியங்களையும், செயல்களையும் முன்னிறுத்தி செயல்படுத்துகிறார்கள்.
2. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது மறைமாவட்ட NYI குழுவின் ஊழிய நோக்கை வரையறுக்கிறது. அது மறைமாவட்ட வாலிபர்களின் ஊழியத்

தேவைக்கு ஏற்றவாறு இருக்கும். மறைமாவட்ட ஊழிய இயக்குனர்களுக்கு அதன் அடிப்படையில் பதவிகளையும், வேலைகளையும் நிர்ணயிக்கிறது.

3. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது இந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் சபைகள் செயல்பூர்வமான வாலிப ஊழியங்களைச் செய்யும் விதமாக அவர்களை உற்சாகப்படுத்தி ஆயத்தப்படுத்துகிறது.
4. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/சிறு குழுக்கள் ஆகியவற்றின் வாலிபர்களுக்கான பிரிவுகளில் தலைமைத்துவத்தைக் காண்பிக்கிறது. அது வாலிபர்கள் சேர்வதிலும், கலந்துகொள்வதிலும் வளர்ச்சியையும், நியமனத்தையும், வாலிபர்களுக்கான ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/சிறு குழுக்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களுக்கு பயிற்சியும் அளிக்கிறது. பயன்படுத்தக்கூடிய பாடத்திட்டம் மற்றும் ஆதாரங்களைப் பரிந்துரை செய்கிறது. இதை அது மறைமாவட்ட ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்தின் குழுவோடு சேர்ந்து செய்கிறது.
5. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது, பிராந்திய மற்றும் அகில உலக NYI ஊழியங்களையும், திட்டங்களையும் மறைமாவட்ட NYI குழுக்களிடத்தில் எடுத்துரைக்கிறது.
6. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது, NYI சங்கத்திடம் NYIயின் ஊழியத்தைக் குறித்த பரிந்துரைகளைச் செய்கிறது. செயல்படுத்தப்படுவதற்கு முன்பாக இந்த பரிந்துரைகளை இந்தச் சங்கம் மறுஆய்வுசெய்யும்.
7. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது உள்ளூர் ஊழிய திட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்கான செயல்முறையை நிறுவி, அதைத் தெரிவிக்கிறது.

**810.214 குழுக்கள்**

1. NYI நிர்வாகக் குழுவானது தேர்ந்தெடுக்கப்பட்ட மறைமாவட்ட NYI அதிகாரிகளையும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரையும் மற்றும்/அல்லது மறைமாவட்ட வாலிபர்களுக்கான போதகரையும் உள்ளடக்கியிருக்கிறது. செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் இந்தக் கூட்டமைப்பின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட விரும்பினால், இது மேலும் இரண்டு மறைமாவட்ட NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களை நிர்வாகக் குழுவில் பணியாற்றும்படியாகப் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு தேர்ந்தெடுக்கும். நிர்வாகக் குழுவின் எல்லாச் செயல்களும் அந்தக் கூட்டமைப்பின் மீதமிருக்கும் உறுப்பினர்களுக்குச் சொல்லப்படும். அடுத்தக் கூட்டத்தில் அந்த முழு கூட்டமைப்பும் இதற்கான அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும்.
2. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது மறைமாவட்டத்தின் வாலிபர்களுக்கான ஊழிய தேவையை அடிப்படையாகக் கொண்டு விசேஷ ஊழியத்தையோ அல்லது வயதுவாரியான பாகுபாட்டைக் கொண்ட குழுக்களையோ ஏற்படுத்த முடியும்.

**810.215 மண்டல வாரியான NYI**

1. மறைமாவட்டத் தலைமைத்துவத்தின் உதவியோடு மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது ஏற்கெனவே இருக்கும் மறைமாவட்ட வடிவமைப்பில் பல வகைப்பட்ட மண்டலங்களாக NYI தலைமைத்துவத்திற்காக அங்கீகரிக்கலாம். இதன் மூலமாக அந்த மறைமாவட்டம் முழுவதும் NYI ஊழியமானது அதிகப்படியான வளர்ச்சியைப் பெறுவதற்காக ஒருங்கிணைக்கலாம்.
2. ஒரு மண்டல NYI கூட்டமைப்பானது அந்த மண்டலத்தைச் சார்ந்த குறிப்பிட்ட ஊழியங்கள் மற்றும் செயல்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கும்படி உருவாக்கப்படலாம்.
3. ஒவ்வொரு மண்டலத்தையும் சார்ந்த தலைவரோ அல்லது பிரதிநிதியோ மறைமாவட்ட NYI கூட்டமைப்பில், மறைமாவட்ட NYI சங்கத்தினால் கூறப்பட்டால் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

**810.216 ஊதியம் கொடுக்கப்படும் பணியாளர்கள்**

1. மறைமாவட்ட வாலிபர்களுக்கான போதகர் என்ன செய்யவேண்டும் என்பதை மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் மறைமாவட்ட NYI கூட்டமைப்போடு சேர்ந்து மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நிர்ணயிப்பார்.
2. மறைமாவட்ட NYI கூட்டமைப்பும், மறைமாவட்ட வாலிபர்களுக்கான போதகரும் சேர்ந்து, ஒருவருக்கொருவர் இணக்கத்தோடு பணியாற்றுவார்கள்.

## கூட்டங்கள்

**810.217 மறைமாவட்ட NYI கூட்டங்கள்**

1. வாலிபர்களுக்காகச் செயல்பூர்வமான ஊழியத்தை வழங்கும்படியாகப் பல வகையான மறைமாவட்ட NYI கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
2. மறைமாவட்ட NYI கூட்டங்கள் உள்ளூர் NYI கூட்டங்களின் ஊழியங்களை மேம்படுத்தி, ஊக்குவிக்கிறது. இதை அவர்கள் மறைமாவட்டம் முழுவதும் இருக்கும் உள்ளூர் NYI கூட்டங்களைச் சந்திப்பதின் மூலமாகச் செயல்பூர்வமான ஊழியத்தை அவர்கள் செய்யும்படி செய்கிறார்கள்.
3. மறைமாவட்ட NYI குழுவானது பிராந்திய மற்றும் அகில உலக NYI கூட்டங்களில் பங்குபெற்றும் வாலிபர்களுக்கான ஊழியத்தை இன்னும் மேம்படுத்துகிறது.

**810.218 மறைமாவட்ட NYI கூட்டமைப்பின் கூட்டங்கள்**

1. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது மறைமாவட்ட NYI யின் ஊழிய இலக்கு மற்றும் தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக அடிக்கடி சந்தித்துக்கொள்ளும்.
2. இந்தக் கூட்டங்களுக்குத் மறைமாவட்ட NYI யின் தலைவரோ அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரோ அழைப்புவிடுக்கலாம்.

**810.219 மறைமாவட்ட NYI சங்கம்**

1. மறைமாவட்டம் முழுவதும் இருக்கும் வாலிபருக்கான ஊழியங்களை மேம்படுத்துவதற்காக ஊக்கமளிக்கும் கூடுகைகள் மற்றும் நிகழ்ச்சிகளை

வருடாந்தர மறைமாவட்ட NYI சங்கம் வழிவகுக்கிறது. அறிக்கைகள் பெறப்படுகின்றன, தலைமைத்துவம் தேர்வுசெய்யப்படுகிறது, NYI யைச் சார்ந்த சட்டரீதியான வேலைகள் இதில் முடிக்கப்படுகின்றன. அகில உலக NYI சங்கத்தின் பிரதிநிதிகளும் NYI அகில உலக ஊழிய திட்டத்தை ஒத்திருக்குமாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

2. மறைமாவட்ட NYI கூட்டமைப்பானது இந்த மறைமாவட்ட NYI யின் சங்கக் கூடுகையை ஏற்பாடு செய்து, மேற்பார்வையும் செய்கிறது. மறைமாவட்ட NYI கூட்டமைப்பு முடிவு செய்யும் இடத்தில், நேரத்தில் இந்தச் சங்கம் கூடுகிறது. இதற்கு மறைமாவட்ட கண்காணிப்பாளர், மறைமாவட்ட மாநாடு நடந்து தொன்னூறு நாட்களுக்குள் அனுமதியளிக்க வேண்டும்.
3. மறைமாவட்ட NYI சங்கத்தில் மறைமாவட்ட NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரும், உள்ளூர் போதகர்களும், NYI யின் பொறுப்பு கொடுக்கப்பட்ட அபிஷேகம் பெற்ற மறைமாவட்ட போதகர்களும், உள்ளூர் NYI யின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள்.
4. மறைமாவட்ட NYI சங்கத்தில் கலந்துகொள்ளும் எல்லா உள்ளூர் NYI பிரதிநிதிகளும் அவர்கள் பிரதிநிதியாக இருக்கும் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
5. மறைமாவட்ட மாநாட்டிற்கு முன்பாக உள்ளூர் போதகரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் உறுப்பினர் எண்ணிக்கைப் பட்டியலின் அடிப்படையில் ஒவ்வொரு திருச்சபையிலிருந்தும் எத்தனை NYI உள்ளூர் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டும் என்பது முடிவுசெய்யப்படும். மறைமாவட்ட NYI சங்கத்தில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் செலுவுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிடுமாறு மறைமாவட்ட NYI யின் தலைமைத்துவம் உள்ளூர் திருச்சபைகளை ஊக்குவிக்கிறது.
6. மறைமாவட்ட NYI சங்கத்தில் கலந்துகொள்ளும் திருச்சபைகளில் 30 மற்றும் 30க்கும் குறைவான NYI உறுப்பினர்களைக் கொண்ட திருச்சபைகள் எத்தனை பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும் என்ற விவரம்:
    a. போதகரும், வாலிபருக்கான போதகரும் அல்லது NYI ஊழியத்தில் பங்குபெறும் முழுநேர ஊதியம் கொடுக்கப்படும் குருத்துவ உறுப்பினர்.
    b. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உள்ளூர் NYI தலைவர்.
    c. நான்கு பேர் வரை கொண்டிருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். அவர்களில் பாதிப்பேர் அந்த மறைமாவட்டத்தால் உருவாக்கப்பட்ட NYI யின் ஊழிய கவனத்திற்குள் இருக்க வேண்டும்.
    d. ஒவ்வொரு அடுத்துவரும் 30 NYI உறுப்பினர்களுக்கும் ஒரு பிரதிநிதி என்று உள்ளூர் சபைகள் சேர்த்துக்கொள்ளலாம். அல்லது முப்பது உறுப்பினர்களின் கடைசி பகுதி (எடுத்துக்காட்டாக, 16–29). அதில் பாதிப்பேர் அந்த மறைமாவட்டத்தால் உருவாக்கப்பட்ட NYI யின் ஊழிய கவனத்திற்குள் இருக்க வேண்டும்.

7. ஒழுங்குப்படுத்தப்படாத NYI இல்லாமல் இருக்கும் உள்ளூர் திருச்சபையின் போதகரோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நசரேயக் கருணையுள்ள ஊழிய மையத்தின் இயக்குனரோ ஒரு பிரதிநிதியை அனுப்பலாம்.

| உறுப்பினர்களின் எண்ணிக்கை | பிரதிநிதிகளின் எண்ணிக்கை* | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பிரதிநிதிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 5—45 | 4 | 136—165 | 8 |
| 46—75 | 5 | 166—195 | 9 |
| 76—105 | 6 | 196—225 | 10 |
| 106—135 | 7 | 226—255 | 11 |

*உள்ளூர் NYI இல்லிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் பதவியின் காரணமாகப் பிரதிநிதிகளாக இருப்பவர்களின் எண்ணிக்கைச் சேர்க்கப்படவில்லை (NYI தலைவர், போதகர், வாலிபருக்கான போதகர், உள்ளூர் சபையிலிருந்து மறைமாவட்ட NYI கூட்டமைப்பின் உறுப்பினர்கள் போன்றவர்கள்)

## C. பிராந்திய ஊழிய திட்ட வார்ப்பு படிவம்

**ஊழியங்கள்**

**810.300 சுவிசேஷம்**

இளம் வாலிபர்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காகப் பிராந்திய NYI பல வகையான தொடர் ஊழியங்களையும், சிறப்பு நிகழ்வுகளையும் செயல்படுத்துகிறது.

**810.301 சீஷத்துவம்**

தனிப்பட்ட அர்ப்பணிப்பு, ஆராதனை, ஐக்கியம், ஊழியம் மற்றும் கிறிஸ்துவிடம் மற்றவர்களை வழிநடத்துதல் போன்ற காரியங்களில் இளம் வாலிபர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கும்படி அவர்களை வழிநடத்தி, சவால் விடுவதற்குத் தேவையான பல வகையான தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் பிராந்திய NYI உருவாக்கிச் செயல்படுத்துகிறது.

**810.302 தலைமைத்துவ வளர்ச்சி**

கிறிஸ்துவுக்காகவும், அவருடைய திருச்சபைக்காகவும் தலைவர்களாக இருக்கும் பல இளம் வாலிபர்களை வழிநடத்தி, ஆயத்தப்படுத்தும் விதமாகத் தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் பிராந்திய NYI உருவாக்கிச் செயல்படுத்துகிறது.

## திருத்தங்கள்

### 810.303 ஏற்பாடு

1. இந்தப் பிராந்திய ஊழிய திட்ட வார்ப்பு படிவமானது பிராந்திய நிலையில் NYI யை ஒழுங்குபடுத்தி, செயல்படுத்தி மற்றும் தலைமைத்துவத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான ஒரு வடிவமைப்பைக் கொடுக்கிறது. பிராந்திய வாலிபர்கள் ஊழியத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு இந்தத் திட்டத்தை ஒரு பிராந்திய NYI குழு தனக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அது NYI பிரிவு மற்றும் *நசரேயத் திருச்சபை சட்டநூலின்* விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
2. இந்த ஊழியத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படாத எந்தப் பகுதியும் பிராந்திய NYI கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் வருகிறது.

### 810.204 செயல்முறை

1. NYI கூட்டமைப்பானது பிராந்திய ஊழிய திட்டத்தை ஏற்றவாறு மாற்றி, மறுஆய்வு செய்யும் செயல்முறையை நிறுவி அதைச் செயல்படுத்துகிறது. ஆண்டு கூட்டத்தில் இந்தத் திட்டங்கள் கொண்டு வருவதற்கு முன்பாக இந்தக் கூட்டமைப்பு எடுத்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றங்களை அங்கீகரித்திருக்க வேண்டும்.
2. பிராந்திய ஊழிய திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றங்கள் பிராந்திய NYI கூட்டம் அகில உலக NYI சங்கத்தில் நடைபெறுவதற்கு முன்பாக மறைமாவட்ட NYI குழுக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
3. NYI பிராந்திய சங்கத்தில் கலந்துகொண்டிருக்கும் எல்லாருடைய மூன்றில் இரண்டு பங்கு பேருடைய வாக்குகளைப் பெற்றுத் தான் இந்த மாற்றங்கள் செய்யப்பட முடியும். அவையும் பிராந்திய இயக்குனர் மற்றும் பிராந்திய ஆலோசனைக் கூட்டமைப்பின் ஒப்புதலின் பேரிலேயே கொண்டு வரப்பட வேண்டும்.
4. பிராந்திய ஊழிய திட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் இந்த அகில உலக NYI சங்கக் கூடுகை முடிந்து 90 நாட்களுக்குள் செயல்படுத்தப்பட வேண்டும். திருத்தப்பட்ட திட்டமானது செயல்படுத்தப்படுவதற்கு முன்பாக எழுத்துவடிவத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

## உறுப்பினர்கள் மற்றும் ஊழிய கவனம்

### 810.305 ஆக்கம் மற்றும் பொறுப்புடைமை

1. எல்லா உள்ளூர் NYI குழுக்களும், மறைமாவட்ட NYI ஊழியங்களும், அந்த பிராந்தியத்திற்கு உட்பட்ட எல்லைகளைச் சேர்ந்த NYI உறுப்பினர்களும் பிராந்திய நசரேய வாலிபர் குழுவை உருவாக்குகிறார்கள்.
2. பிராந்திய NYI குழுவானது தன்னுடைய உறுப்பினர்கள், பிராந்திய இயக்குனர், அகில உலக NYI இயக்குனர், பிராந்திய NYI கூட்டமைப்பு மற்றும் அகில உலக NYI கூட்டமைப்பிற்குப் பொறுப்புள்ளதாக இருக்கிறது.

3. பிராந்திய NYI வருடா வருடம் அகில உலக NYI கூட்டமைப்பில் அறிக்கையை சமர்ப்பிக்கும்.

**810.306 ஊழிய கவனம்**

1. பாரம்பரியமாக பிராந்திய NYI குழுவானது 12 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டவர்கள், கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் இளம் வாலிபர்கள் மீதே தன்னுடைய ஊழிய கவனத்தைச் செலுத்திவருகிறது. ஒரு பிராந்திய NYI கூட்டமைப்பு அந்தப் பிராந்தியத்தின் மறைமாவட்டங்கள் மற்றும் பிராந்திய இயக்குனரின் அனுமதியைப் பெற்று ஊழிய கவனத்தை அதற்கேற்ற வகையில் மாற்றிக்கொள்ளலாம்.
2. பிராந்திய வாலிப ஊழியத்தின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, எடுத்துக்காட்டுவதற்கும், திட்டமிடுதலுக்கும் வசதியாக பிராந்திய NYI குழு வயது வாரியான பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

## தலைமைத்துவம்

**810.307 அதிகாரிகள்**

1. பிராந்திய NYI அதிகாரிகளாகத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் செயலாளர் இருக்கிறார்கள். இந்த அதிகாரிகளும், பிராந்திய வாலிபர் ஊழிய ஒருங்கிணைப்பாளரும் நிர்வாகக் கூட்டமைப்பாக இருக்கிறார்கள்.
2. பிராந்திய NYI அதிகாரிகள் தாங்கள் தேர்ந்தெடுக்கப்படும் நேரத்தில் அந்த மறைமாவட்டத்திற்குட்பட்ட உள்ளூர் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். வாலிபர் ஊழியத்தில் உற்சாகமாகச் செயல்பட வேண்டும். தனிப்பட்ட எடுத்துக்காட்டு மற்றும் ஊழியத்திலும் அவர்கள் தலைவர்களாக பார்க்கப்பட வேண்டும்.
3. பிராந்திய NYI அதிகாரிகள் சம்பளம் இல்லாமல் பணியாற்றுகிறார்கள். பிராந்திய NYI அதிகாரிகளின் நிர்வாகச் செலவுகளுக்கான பணம் பிராந்திய NYI நிதி அறிக்கையின் ஒரு பங்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**810.308 தேர்தல்**

1. பிராந்திய NYI அதிகாரிகள், பிராந்திய NYI சங்கத்தின் உறுப்பினர்களால் அகில உலக NYI கூட்டத்தின் விசேஷக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தப் பிரந்திய அதிகாரிகள் ஒரு அகில உலக NYI சங்கத்தின் துவக்கம் முதல் அடுத்த அகில உலக NYI சங்கத்தின் முடிவுவரை பணியாற்றுவார்கள்.
2. ஒரு பிராந்திய NYI நியமன குழுவானது பிராந்திய NYI அதிகாரிகளை நியமனம் செய்கிறது. இந்த நியமன குழுவானது பிராந்திய NYI கூட்டமைப்பினால் நியமனம் செய்யப்படுகிறது. அதில் குறைந்தபட்சம் நான்கு பிராந்திய NYI உறுப்பினர்கள் இருப்பார்கள். அதில் பிராந்திய இயக்குனரும், பிராந்திய NYI தலைவரும் சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு பதவிக்கும் குறைந்தது இரண்டு பெயர்களாவது பிராந்திய NYI கூட்டத்திடம் சமர்ப்பிக்கப்படும். பிராந்திய NYI கூட்டமைப்பும், பிராந்திய இயக்குனரும் எல்லா நியமனங்களையும் அங்கீகரிக்க வேண்டும்.

3. பிராந்திய NYI கூட்டமைப்பு இப்படிப்பட்ட வாக்கெடுப்பை நியமன கூட்டமைப்பிடம், பிராந்திய இயக்குனர் அங்கிகாரத்தைப் பெற்றிருக்கும் பட்சத்தில் ஏற்கெனவே பதவியில் இருக்கும் அதிகாரி மறுபடியுமாக அந்தப் பதவிக்குப் பிராந்திய NYI கூட்டமைப்பினால் பரிந்துரை செய்யப்படும்போது ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்ற வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். உலக NYI சங்கத்தில் நடைபெறும் பிராந்திய NYI கூட்டத்தில் அவர் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற வேண்டும்.
4. ஒரு அதிகாரி அந்தப் பிராந்தியத்திலிருந்து உறுப்பினராக நீங்கும்போதோ, இராஜினாமா செய்யும்போதோ அல்லது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றோ அல்லது சரியாக நடந்துகொள்ளவில்லை என்றோ மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று பிராந்திய NYI கூட்டமைப்பினால் நீக்கப்படும்போது காலியிடம் ஏற்படுகிறது. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த மற்ற அதிகாரிகளின் பணியிடங்கள் காலியானால், பிராந்திய NYI கூட்டமைப்பானது இரண்டு அல்லது அதற்கும் மேலான நியமனங்கள் இருக்கும்போது மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று அந்தக் காலியிடத்தை நிரப்பும். இது NYI யின் அகில உலக ஊழிய திட்டத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

**810.309 கடமைகள்**

1. பிராந்திய NYI தலைவரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
   a. பிராந்திய NYI க்குத் தேவையான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் கொடுத்தல். NYI அகில உலக மற்றும் பிராந்திய தலைமைத்துவத்தோடு ஒருங்கிணைந்து பணியாற்றுதல்
   b. பிராந்திய NYI கூட்டமைப்பின் கூட்டங்களைத் தலைமைத்தாங்கி அந்த மறைமாவட்டத்தின் வாலிபர் ஊழியங்களுக்கான தரிசனத்தை எடுத்துரைத்தல்.
   c. அந்தப் பிராந்தியத்தின் வாலிபர் ஊழியங்களைச் செயல்படுத்துதல் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு அந்தப் பிராந்திய NYI ஊழிய நோக்கத்தை வரையறுப்பதற்குப் பிராந்திய NYI கூட்டமைப்போடு பணியாற்றுதல்.
   d. பிராந்திய NYI சங்கக் கூடுகையில் அகில உலக NYI கூட்டத்தில் பங்கெடுக்கும்போது தலைமைத்தாங்குதல்.
   e. பிராந்தியத்திற்குள் இருக்கும் எல்லா உள்ளூர் சபைகளின் மற்றும் மறைமாவட்டங்களில் NYI ஊழியம் மேம்படுத்தப்படுவதற்கு உற்சாகமளித்தல்.
   f. எல்லா தேவையுள்ள இடங்களில் பிராந்திய NYI யைக் குறித்த காரியங்களைப் பேசுதல்.
   g. பிராந்திய NYI கூட்டமைப்பிடமும், பிராந்திய இயக்குனரிடமும், பிராந்திய ஆலோசனைக் குழுவிடமும் (தேவைப்படும் இடங்களில்) மற்றும் அகில உலக NYI கூட்டப்பிலும் ஒரு வருடாந்திர அறிக்கையைச் சமர்ப்பித்தல்

h. பிராந்திய NYI கூட்டமைப்பிற்கும், பிராந்திய அலுவலகத்திற்கும் வருடாந்திர நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல்

i. அகில உலக NYI சங்கத்தில் ஒரு பிரதிநிதியாகக் கலந்துகொள்ளுதல்

j. பிராந்திய NYI க்கும், மேல்நிலைக் கல்விக்கான நசரேய கல்வி நிறுவனங்களோடும், அந்தப் பிராந்தியத்தில் தொடர்புநிலை, ஒத்துழைப்பு மற்றும் ஊழிய கூட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ஒரு இடையாளியாகப் பணியாற்றுவது.

2. பிராந்திய NYI அதிகாரிகளின் கடமைகளாவன:

a. பல்வேறு பிராந்திய NYI ஊழியங்களுக்குத் தலைவர்களை உருவாக்கி நியமித்தல்.

b. பிராந்தியத் தேவைகளுக்கு ஏற்ப தலைப்புகளையும், வாலிப ஊழிய தேவைகளையும் நிர்ணயித்தல்.

c. பொறுப்புணர்ச்சியையும், செயல்திறனையும் நிருவுவதற்காகப் பின்வரும் கடமைகளை பகிர்ந்துகொடுத்தல்:

1. பிராந்திய NYI கூட்டமைப்பின் எல்லாக் கூட்டங்களைக் குறித்த சரியான பதிவுகளைக் காத்துக்கொள்ளுதல். பிராந்திய NYI சம்பந்தமான கடித மற்றும் இதர தொடர்புகளைப் பார்த்துக்கொள்ளுதல்.

2. அகில உலக NYI கூட்டமைப்பு, பொது நிர்வாகக் குழு மற்றும் பிராந்திய அலுவலகக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு பிராந்திய NYI நிதியைக் குறித்தக் கணக்குகளைப் பதிவுசெய்து, அவைகளைப் பிரித்துக் கொடுப்பதும், பெற்றுக்கொள்வதும்.

3. பெற்றப்பட்ட பணம் மற்றும் பகிர்ந்துகொடுக்கப்பட்ட தொகை எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு வருடாந்திர பதிவை அகில உலக NYI கூட்டமைப்பு மற்றும் இது தேவைப்படும் அலுவலகங்களுக்குச் சமர்ப்பித்தலில் தலைவருக்கு உதவி செய்தல்.

4. பிராந்திய NYI தலைவரோடு சேர்ந்து பணியாற்றி, அங்கீகாரத்திற்காக ஒரு வருடாந்திர நிதி நிலை அறிக்கையை பிராந்திய NYI கூட்டமைப்பிடமும், பிராந்திய இயக்குனரிடமும் சமர்ப்பித்தல்.

5. அகில உலக NYI அலுவலகத்திடமும், பிராந்திய அலுவலகத்திடமும், பிராந்திய NYI அதிகாரிகளாகவும், ஊழிய இயக்குனர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களையும், விலாசங்களையும் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமனத்திற்குப் பிறகு சீக்கிரத்தில் சமர்ப்பித்தல்.

d. பிராந்திய NYI குழுவின் மேம்படுத்தும் வகையில், தலைவரோடு சேர்ந்து எல்லா வழிகளிலும் பணியாற்றுதல்

e. பிராந்திய NYI கூட்டமைப்பினால் அல்லது பிராந்திய NYI கூட்டத்தினால் நிர்ணயிக்கப்படும் பிற ஊழியங்களையும் செயல்படுத்துதல்.

**810.310 ஊதியம் பெறும் பணியாளர்கள்**

1. ஒரு வாலிபர்களுக்கான போதகர் பிராந்தியத்தில் நியமிக்கப்படும்போது, பிராந்திய ஆலோசனைக் கூட்டமைப்பு மற்றும் பிராந்தியNYI கூட்டமைப்போடு ஆலோசனை பெறும் பிராந்திய இயக்குனர் பிராந்திய NYI வழிநடத்தும் கடமையை வாலிபர்களுக்கான போதகரிடம் ஒப்படைக்கிறார். அப்படி செய்யும்போது, அந்தப் போதகர் பிராந்திய NYI தலைவர் பொதுவாகச் செய்யும் காரியங்களில் சிலவற்றைச் செய்கிறார். ஆனாலும் பிராந்திய NYI தலைவரின் முக்கியத்துவம் மாறாமல் தான் இருக்கிறது. அவரே மிகவும் முக்கியமான தலைமைத்துவத்தையும், ஆதரவையும், பிராந்திய வாலிப ஊழியத்தின் பிரதிநிதியாகவும் இருக்கிறார். பிராந்திய இயக்குனரும், பிராந்திய NYI கூட்டமைப்பும் சேர்ந்து பணியாற்றி இந்த இரண்டு பணியிடங்களுக்குமான கடமைகள் என்னவாக இருக்கும், பிராந்தியத்தின் வாலிபர்களுக்கான ஊழியத்தை மேம்படுத்துவதற்கு அவர்கள் இருவரும் சேர்ந்து எப்படிப் பயன்தரும் வகையில் செயலாற்றலாம் என்று நிர்ணயிப்பார்கள்.
2. ஒரு பிராந்திய வாலிபர்களுக்கான போதகர் பிராந்திய NYI குழுவின் தலைவராக இருக்க மாட்டார்.
3. பிராந்திய வாலிபர்களுக்கான போதகர் தன்னுடைய பதவியின் காரணமாக பிராந்திய NYI கூட்டமைப்பின், NYI நிர்வாகக் குழு மற்றும் பிராந்திய NYI நியமன கூட்டமைப்பின் உறுப்பினராக இருப்பார்.
4. பிராந்திய NYI சம்பந்தமான கடமைகளைச் செய்வதற்கு பிராந்திய இயக்குனரின் பிரதிநிதியாக பிராந்திய வாலிபர்களுக்கான போதகர் செயல்படலாம்.

## கூட்டமைப்பு

**810.311 ஆக்கம்**

1. பிராந்திய NYI கூட்டமைப்பானது பிராந்திய NYI அதிகாரிகள், மற்றும் பிற தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனம் செய்யப்பட்ட வாலிப உறுப்பினர்களையும், தேவைப்படும் ஊழிய தலைவர்களையும், பிராந்திய இயக்குனர் மற்றும் பிராந்திய வாலிபர்களுக்கான போதகர் ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது.
2. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்கள் மட்டுமே பிராந்திய NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களாக இருக்க முடியும்.
3. தேவைப்படும் இடங்களில், பிராந்திய NYI யோடு கூட்ட ஊழியங்களில் ஈடுபடும் நசரேய கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் இந்தப் பிராந்திய NYI கூட்டமைப்பில் சேர்ந்து செயல்படும்.

**810.312 தேர்தல்**

1. பிராந்திய NYI நியமன கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பிராந்திய NYI கூட்டமைப்பில் தேர்ந்தெடுக்கப்படும் விதமாக பிராந்திய NYI உறுப்பினர்களை நியமனம் செய்வார்கள்.

2. இதன்பின்னர் அகில உலக NYI சங்கத்தில், பிராந்திய NYI கூட்டத்தின் உறுப்பினர்கள் பிராந்திய NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நியமனங்களிலிருந்து பெரும்பான்மை வாக்கைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்துவார்கள். பிராந்திய NYI கூட்டமானது பிராந்திய NYI கூட்டமைப்பு பிராந்திய ஊழியத்திற்கான இயக்குனர்களை நியமிக்கும்படியான அதிகாரத்தை அளிக்கும்.
3. ஒரு அதிகாரி அந்தப் பிராந்தியத்திலிருந்து உறுப்பினராக நீங்கும்போதோ, இராஜினாமா செய்யும்போதோ அல்லது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றோ அல்லது சரியாக நடந்துகொள்ளவில்லை என்றோ மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்றுக் கூட்டமைப்பினால் நீக்கப்படும்போது காலியிடம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காலியிடம் ஏற்படும்போது ஒரே ஒரு நியமனம் இருக்கும்போது மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளைப் பெற்றும், இரண்டு அல்லது அதற்கும் மேலான நியமனங்கள் இருக்கும்போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றும் பிராந்திய NYI கூட்டமைப்பு அந்த இடத்தை நிரப்பும். அந்தப் பிராந்தியத்தைச் சார்ந்த மறைமாவட்டத்தின் பிரதிநிதிகளிடையே காலியிடம் ஏற்படும்போது, மறைமாவட்ட ஊழியத்தின் திட்டத்தின்படி அந்தக் காலியிடம் நிரப்பப்படும்.

**810.313 கடமைகள்**

1. பிராந்திய NYI கூட்டமைப்பானது பிராந்தியத்திற்கு உட்பட்ட வாலிபர்களுக்கான ஊழியத்தைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்துதலுக்கான கடமையைப் பெற்றிருக்கிறது. அது தன்னுடைய அதிகாரிகள் மற்றும் இயக்குனர்களின் மூலமாகக் கிறிஸ்துவுக்காக இளம் வாலிபர்களைச் சந்திக்கும்படியாகவும், அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கும்படியாகவும், பிராந்திய தலைமைத்துவத்தோடு சேர்ந்து ஊழியங்களையும், செயல்களையும் முன்னிறுத்தி செயல்படுத்துகிறார்கள்.
2. பிராந்திய NYI கூட்டமைப்பானது பிராந்திய NYI குழுவின் ஊழிய நோக்கை வரையறுக்கிறது. அது பிராந்திய வாலிபர்களின் ஊழியத் தேவைக்கு ஏற்றவாறு இருக்கும். பிராந்திய ஊழிய இயக்குனர்களுக்கு அதன் அடிப்படையில் பதவிகளையும், வேலைகளையும் நிர்ணயிக்கிறது.
3. பிராந்திய NYI கூட்டமைப்பானது இந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த மறைமாவட்டங்கள் செயல்பூர்வமான வாலிப ஊழியங்களைச் செய்யும் விதமாக அவர்களை உற்சாகப்படுத்தி ஆயத்தப்படுத்துகிறது.
4. பிராந்திய NYI கூட்டமைப்பானது ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/ சிறு குழுக்கள் ஆகியவற்றின் வாலிபர்களுக்கான பிரிவுகளில் தலைமைத்துவத்தைக் காண்பிக்கிறது. அது வாலிபர்கள் சேர்வதிலும், கலந்துகொள்வதிலும் வளர்ச்சியையும், நியமனத்தையும், வாலிபர்களுக்கான ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/சிறு குழுக்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கிறது. பயன்படுத்தக்கூடிய பாடத்திட்டம் மற்றும் ஆதாரங்களைப் பரிந்துரை செய்கிறது. இதை அது பிராந்திய ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்தின் குழுவோடு சேர்ந்து செய்கிறது.

5. பிராந்திய NYI கூட்டமைப்பானது, அகில உலக NYI ஊழியங்களையும், திட்டங்களையும் பிராந்திய NYI குழுக்களிடத்தில் எடுத்துரைக்கிறது.
6. பிராந்திய NYI கூட்டமைப்பானது இந்தப் பிராந்தியத்திற்காக வழங்கப்படும் நிதியானது எப்படி NYI நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டமைப்புகளின் மூலமாக செலவுசெய்யப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறது.
7. பிராந்திய NYI கூட்டமைப்பானது அகில உலக NYI சங்கத்தில் இருக்கும் பிராந்திய NYI கூட்டத்தில் NYI ஊழியத்தைக் குறித்த பரிந்துரைகளைச் செய்கிறது. அகில உலக NYI சங்கத்தில் காணப்படும் செயல்திட்டங்கள் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருப்பதற்கு அந்தப் பிராந்தியத்திலிருந்து இரண்டு நபர்களை இந்தக் கூட்டமைப்பானது நியமிக்கிறது. இது அகில உலக ஊழிய திட்டத்தை ஒத்து நடக்கிறது.
8. பிராந்திய NYI கூட்டமைப்பு, பிராந்திய இயக்குனரோடு சேர்ந்து ஆலோசித்து, அகில உலக NYI கூட்டமைப்பில் செயல்படுவதற்காக ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கிறது.
9. பிராந்திய NYI கூட்டமைப்பானது, பிராந்தியத்தின் ஊழியத் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான செயல்முறைகளை ஏற்படுத்தி அதை தெரிவிக்கிறது.

**810.314 குழுக்கள்**

1. NYI நிர்வாகக் குழுவானது தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய NYI அதிகாரிகளையும், பிராந்திய இயக்குனரையும் மற்றும்/அல்லது பிராந்திய வாலிபர்களுக்கான போதகரையும் உள்ளடக்கியிருக்கிறது. முழு கூட்டமைப்பும் சந்தித்து செயல்பட முடியாத நிலையில் இந்த நிர்வாகக் குழுவானது பிராந்திய NYI யின் பணிகளைச் செய்யும். நிர்வாகக் குழுவின் எல்லாச் செயல்களும் அந்தக் கூட்டமைப்பின் மீதமிருக்கும் உறுப்பினர்களுக்குச் சொல்லப்படும். அடுத்தக் கூட்டத்தில் அந்த முழு கூட்டமைப்பும் இதற்கான அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும்.
2. பிராந்திய NYI கூட்டமைப்பானது மறைமாவட்டத்தின் வாலிபர்களுக்கான ஊழிய தேவையை அடிப்படையாகக் கொண்டு விசேஷ ஊழியத்தை ஏற்படுத்த முடியும்.
3. அதிகமான மறைமாவட்டங்களைக் கொண்ட நாட்டில், இந்தப் பிராந்தியமானது ஒரு தேசிய NYI தலைமைத்துவத்தை அந்த நாட்டில் உள்ள வாலிபர் ஊழியங்களைக் கவனிக்கும்படியாக நியமிக்கும்.

**810.315 கள வாரியான NYI**

1. தேவைப்படும் இடங்களில் பிராந்திய தலைமைத்துவத்தின் உதவியோடு பிராந்திய NYI கூட்டமைப்பானது ஏற்கெனவே இருக்கும் பிராந்திய வடிவமைப்பில் பல வகைப்பட்ட களங்களாக NYI தலைமைத்துவத்திற்காக அங்கீகரிக்கலாம். இதன் மூலமாக அந்தப் பிராந்தியம் முழுவதும் NYI ஊழியமானது அதிகப்படியான வளர்ச்சியைப் பெறுவதற்காக ஒருங்கிணைக்கலாம்.

2. ஒரு கள NYI கூட்டமைப்பானது அந்தக் களத்தைச் சார்ந்த குறிப்பிட்ட ஊழியங்கள் மற்றும் செயல்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கும்படி உருவாக்கப்படலாம்.
3. ஒவ்வொரு களத்தையும் சார்ந்த பிரதிநிதியே பிராந்தியNYI கூட்டமைப்பில், பிராந்திய NYI சங்கத்தினால் கூறப்பட்டால் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

**810.216 ஊதியம் கொடுக்கப்படும் பணியாளர்கள்**

1. பிராந்திய வாலிபர்களுக்கான ஒருங்கிணைப்பாளர் என்ன செய்யவேண்டும் என்பதை பிராந்திய ஆலோசனைக் குழு மற்றும் பிராந்திய NYI கூட்டமைப்போடு சேர்ந்து மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நிர்ணயிப்பார்.
2. பிராந்திய NYI கூட்டமைப்பும், பிராந்திய வாலிபர்களுக்கான ஒருங்கிணைப்பாளரும் சேர்ந்து, ஒருவருக்கொருவர் இணக்கத்தோடு பணியாற்றுவார்கள்.

## கூட்டங்கள்

**810.317 பிராந்திய NYI கூட்டங்கள்**

1. வாலிபர்களுக்காகச் செயல்பூர்வமான ஊழியத்தை வழங்கும்படியாகப் பல வகையான பிராந்திய NYI கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
2. பிராந்திய NYI கூட்டங்கள் மறைமாவட்ட NYI கூட்டங்களின் ஊழியங்களை மேம்படுத்தி, ஊக்குவிக்கிறது. இதை அவர்கள் பிராந்தியம் முழுவதும் இருக்கும் உள்ளூர் NYI கூட்டங்களைச் சந்திப்பதின் மூலமாகச் செயல்பூர்வமான ஊழியத்தை அவர்கள் செய்யும்படி செய்கிறார்கள்.
3. பிராந்திய NYI குழுவானது அகில உலக NYI கூட்டங்களில் பங்குபெற்றும் வாலிபர்களுக்கான ஊழியத்தைப் பிராந்தியம் முழுவதிலும் இன்னும் மேம்படுத்துகிறது.

**810.318 பிராந்திய NYI கூட்டமைப்பின் கூட்டங்கள்**

1. பிராந்திய NYI கூட்டமைப்பானது பிராந்திய NYI யின் ஊழிய இலக்கு மற்றும் தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக அடிக்கடி சந்தித்துக்கொள்ளும்.
2. இந்தக் கூட்டங்களைத் பிராந்திய NYI யின் தலைவரோ, பிராந்திய இயக்குனரோ, பிராந்திய வாலிபருக்கான ஒருங்கிணைப்பாளரோ அல்லது அகில உலக NYI இயக்குனரோ அழைப்புவிடுக்கலாம்.

**810.319 பிராந்திய NYI கூட்டம் (சங்கம்)**

1. பிராந்திய NYI கூட்டமானது அகில உலக NYI சங்கத்தின்போது கூடுகிறது. பிராந்தியம் முழுவதும் இருக்கும் வாலிபருக்கான ஊழியங்களை மேம்படுத்துவதற்காக ஊக்கமளிக்கும் கூடுகைகள் மற்றும் நிகழ்ச்சிகளை வருடாந்தர பிராந்திய NYI சங்கம் வழிவகுக்கிறது. அறிக்கைகள் பெறப்படுகின்றன, தலைமைத்துவம் தேர்வுசெய்யப்படுகிறது, NYI யைச் சார்ந்த சட்டரீதியான வேலைகள் இதில் முடிக்கப்படுகின்றன.
2. பிராந்திய NYI கூட்டமைப்பானது, அகில உலக NYI இயக்குனரோடு சேர்ந்து இந்தப் பிராந்திய NYI யின் சங்கக் கூடுகையை ஏற்பாடு செய்து, மேற்பார்வையும் செய்கிறது.

3. பிராந்திய NYI சங்கத்தில் பிராந்திய NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களும், பிராந்திய இயக்குனரும் மற்றும்/அல்லது பிராந்திய வாலிப ஒருங்கிணைப்பாளரும், அகில உலக NYI சங்கத்தில் கலந்துகொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்தியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். இவர்கள் அகில உலக ஊழிய திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
4. இந்தச் சங்கமானது அகில உலக NYI சங்கத்தின் கூடுகையின்போது அகில உலக NYI இயக்குனர் சொல்லும் நேரம் மற்றும் இடத்தில் கூடுகிறது. பிராந்திய NYI கூட்டமைப்பினால் அங்கீகரிக்கப்படும்போது, பிராந்திய இயக்குனர் மற்றும் அகில உலக NYI கூட்டமைப்பானது ஒரு சங்கத்தை தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ அகில உலக NYI சங்கம் நடந்து ஆறு மாதங்களுக்குள் கூடச் செய்யலாம். இது பிராந்திய NYI வேலைகளின் காரணாகப் பெரும்பாலான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த அகில உலக NYI சங்கத்தில் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் சந்திக்க உதவும்.

## D. அகில உலக ஊழிய திட்ட வார்ப்பு படிவம்

### ஊழியங்கள்

**810.400 சுவிசேஷம்**

இளம் வாலிபர்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காக அகில உலக NYI பல வகையான தொடர் ஊழியங்களையும், சிறப்பு நிகழ்வுகளையும் செயல்படுத்துகிறது.

**810.401 சீஷத்துவம்**

தனிப்பட்ட அர்ப்பணிப்பு, ஆராதனை, ஐக்கியம், ஊழியம் மற்றும் கிறிஸ்துவிடம் மற்றவர்களை வழிநடத்துதல் போன்ற காரியங்களில் இளம் வாலிபர்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கும்படி அவர்களை வழிநடத்தி, சவால் விடுவதற்குத் தேவையான பல வகையான தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் அகில உலக NYI உருவாக்கி செயல்படுத்துகிறது.

**810.402 தலைமைத்துவ வளர்ச்சி**

கிறிஸ்துவுக்காகவும், அவருடைய திருச்சபைக்காகவும் தலைவர்களாக இருக்கும் பல இளம் வாலிபர்களை வழிநடத்தி, ஆயத்தப்படுத்தும் விதமான தொடர்ந்து நடைபெறும் ஊழியங்களையும், விசேஷமான நிகழ்வுகளையும் அகில உலக NYI உருவாக்கிச் செயல்படுத்துகிறது.

### திருத்தங்கள்

**810.403 ஏற்பாடு**

1. இந்த அகில உலக ஊழிய திட்ட வார்ப்பு படிவமானது அகில உலக நிலையில் NYI யை ஒழுங்குபடுத்தி, செயல்படுத்தி மற்றும் தலைமைத்துவத்தில்

ஈடுபடுவதற்குத் தேவையான ஒரு வடிவமைப்பைக் கொடுக்கிறது. அகில உலக வாலிபர்கள் ஊழியத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு இந்தத் திட்டத்தை ஒரு அகில உலக NYI குழு தனக்கேற்பவும், அகில உலக ஊழியத் திட்டத்தின் அடிப்படையிலும் மாற்றி பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அது NYI பிரிவு மற்றும் *நசரேயத் திருச்சபை சட்டநூலின்* விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

2. இந்த ஊழியத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படாத எந்தப் பகுதியும் அகில உலக NYI கூட்டமைப்பு மற்றும் NYI இயக்குனரின் அதிகாரத்தின் கீழ் வருகிறது.

**810.403 செயல்முறை**

1. இந்த அகில உலக NYI கூட்டமைப்பானது, NYI இயக்குனரின் ஒத்துழைப்போடு, அகில உலக ஊழியத் திட்டம் மற்றும் அகில உலக நசரேய வாலிபர் பிரிவில் ஏற்படுத்தப்படும் தீர்மானங்களைக் குறித்துச் சமர்ப்பிக்கப்படும் திருத்தங்களை மாற்றும் செயல்முறையை எடுத்துரைக்கிறது.
2. எந்த மறைமாவட்ட NYI கூட்டமைப்போ, பிராந்திய NYI கூட்டமைப்போ, அகில உலக NYI கூட்டமைப்போ அல்லது அகில உலக NYI சங்கத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட ஆறு பிரதிநிதிகள் இந்தத் தீர்மானங்களைச் சமர்ப்பிக்கலாம். இந்தத் தீர்மானங்கள் சரியான வடிவமைப்பிலும், கொடுக்கப்பட்ட தேதிக்குள்ளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. அகில உலக NYI கூட்டமைப்பு அகில உலக NYI சங்கம் கூடும் வருடத்தில் அந்த ஆண்டு கூட்டம் நடைபெறுவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பாக NYI அலுவலகம் இந்தத் தீர்மானங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. இந்தத் தீர்மானங்கள், அகில உலக NYI சங்கம் நடைபெறுவதற்கு முன்பாக எழுத்து வடிவில் அகில உலக NYI கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
5. இந்தத் தீர்மானங்களை முதலில் அகில உலக NYI கூட்டமைப்பும், அகில உலக NYI சங்கத்தைச் சார்ந்த தீர்மானங்கள் கூட்டமும் பார்க்க வேண்டும். இதில் பிராந்திய NYI கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்ட இரண்டு NYI பிரதிநிதிகள் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்துக் கலந்துகொள்வார்கள். பெரும்பான்மைப் பெறும் தீர்மானங்கள், அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று பிறகு சங்கத்தினால் பார்க்கப்படும்.
6. அகில உலக சங்கத்தில் பங்குபெறும் பிரதிநிதிகள் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று இந்தத் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
7. அகில உலக நசரேய பிரிவு மற்றும் அகில உலக ஊழிய திட்டத்தில் ஏற்படுத்தவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட மாற்றங்கள் அகில உலக NYI சங்கம் நடைபெற்று 90 நாட்களுக்குள்ளாகச் செயல்படுத்தப்பட்டுவிட வேண்டும். மாற்றங்கள் செய்யப்பட்ட ஆவணங்கள் செயல்படுத்தப்படுவதற்கு முன்பாக எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.

## உறுப்பினர்கள் மற்றும் ஊழிய கவனம்

### 810.405 ஆக்கம் மற்றும் பொறுப்புடைமை

1. எல்லா உள்ளூர் NYI குழுக்களும், மறைமாவட்ட NYI ஊழியங்களும், பிராந்திய மற்றும் கள NYI குழுக்களும் அகல உலக நசரேய பிரிவாக இருக்கிறார்கள்
2. அகில உலக NYI குழுவானது தன்னுடைய உறுப்பினர்கள், அதிகாரத்தில் இருக்கும் NYI பொதுக் கண்காணிப்பாளர், அகில உலக அருட்பணி இயக்குனர், பொது நிர்வாகக் குழு மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு அகியவற்றிற்கு உள்ளடங்கியிருக்கிறது.
3. அகில உலக NYI வருடா வருடம் பொது நிர்வாகக் குழுவிற்குத் தன்னுடைய அரிக்கையைச் சமர்ப்பிக்கும். அது அகில உலக NYI சங்கம் மற்றும் நசரேயத் திருச்சபையின் பொது மாநாட்டிற்குக் கீழ் இருக்கும்.
4. NYI இயக்குனரே அகில உலக நசரேய வாலிபர் குழுவின் மூலமாக நசரேயத் திருச்சபையின் வாலிப ஊழியங்களின் வளர்ச்சிக்குப் பொதுவான ஒருங்கிணைப்பாளராகவும் மேற்பார்வையாளராகவும் இருக்கிறார்.
5. இந்த உலகம் முழுவதும் காணப்படும் NYI அலுவலகங்கள் நசரேயத் திருச்சபையின் வாலிப ஊழியங்கள் செயல்திறத்தோடு விளங்க வேண்டும் என்பதற்காக அகில உலக NYI கூட்டமைப்போடு சேர்ந்து பணியாற்றுகின்றன.

### 810.406 ஊழிய கவனம்

1. பாரம்பரியமாக பிராந்திய NYI குழுவானது 12 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டவர்கள், கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் இளம் வாலிபர்கள் மீதே தன்னுடைய ஊழிய கவனத்தைச் செலுத்திவருகிறது. பிராந்திய, கள, மறைமாவட்ட மற்றும் உள்ளூர் NYI கூட்டமைப்பு அந்தப் பிராந்தியத்தின் ஊழிய கவனத்தை அதற்கேற்ற வகையில் மாற்றிக்கொள்ளலாம்.
2. அகில உலக வாலிப ஊழியத்தின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, எடுத்துக்காட்டுவதற்கும், திட்டமிடுதலுக்கும் வசதியாக அகில உலக NYI குழு மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கிறது – இளம் வாலிபர், வாலிபர், மற்றும் கல்லூரி/பல்கலைக்கழகம்/இளம் பெரியவர்.

## தலைமைத்துவம்

### 810.407 அதிகாரிகள்

1. அகில உலக NYI அதிகாரிகளாகத் தலைவர், மற்றும் துணைத் தலைவர் இருக்கிறார்கள்.
2. நசரேயத் திருச்சபை நிறுவனத்திலோ அல்லது அதனுடைய வேறு துணை நிறுவனங்களிலோ அல்லது நசரேயத் திருச்சபையிலிருந்து நிதி உதவியைப் பெறும் கல்வி நிறுவனங்களிலிருந்தோ பணிபுரியும் யாரும் அகில உலக NYI தலைவராக முடியாது. மறைமாவட்டங்களிலிருந்தோ அல்லது பிற

நிதிகளிலிருந்து பணம் பெரும் பொதுவான சபையைச் சேர்ந்தவர்களும் இதில் தேர்ந்தெடுக்கப்பட தகுதியில்லாதவர்கள்.

3. அகில உலக NYI அதிகாரிகள் NYI யின் உறுப்பினர்களாகவும், நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் வாலிபர் ஊழியங்களில் உற்சாகமாகக் கலந்துகொள்பவர்களாகவும், தனிப்பட்ட வாழ்க்கையில் மற்றும் ஊழியத்தில் எடுத்துக்காட்டாக இருக்கும் தலைவர்களாகவும், அகில உலக NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும்.
4. அகில உலக NYI அதிகாரிகள் சம்பளம் இல்லாமல் பணியாற்றுகிறார்கள். அகில உலக NYI அதிகாரிகளின் நிர்வாகச் செலவுகளுக்கான பணம் அகில உலக NYI நிதி அறிக்கையின் ஒரு பங்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.
5. அகில உலக NYI அதிகாரி ஒரு முழு பதவிகாலத்திற்கும் அதிகமாகப் பணியாற்றக்கூடாது.

**810.408 தேர்தல்**

1. அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவர் அகில உலக NYI சங்கத்தின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் அதற்கடுத்து வரும் பொது மாநாட்டின் முடிவு வரை அல்லது அவருக்குப் பின் வருபவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பணியில் இருப்பார்.
2. ஒவ்வொரு பிராந்தியமும் அகில உலக NYI சங்கத்தின் பிராந்திய NYI கூட்டத்தில் அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவர் பதவிக்காக ஒரு பெயரை நியமனம் செய்யும்.
3. அகில உலக NYI துணைத் தலைவரின் பதியானது அகில உலக NYI கூட்டமைப்பின் முதல் கூட்டத்திலோ அல்லது பொது மாநாட்டிற்குப் பின்போ தேர்ந்தெடுக்கப்படும். அவர் அடுத்துவரும் பொது மாநாடு முடியும் வரையிலோ அல்லது தனக்குப் பின் வருபவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையிலோ பணியில் இருப்பார்.
4. அகில உலக NYI தலைமைத்துவத்தில் ஒரு காலியிடம் வரும்போது அவர் அந்த உறுப்பினராக இருப்பதிலிருந்து நீங்கும்போதோ, இராஜினாமா செய்யும்போதோ அல்லது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றோ அல்லது சரியாக நடந்துகொள்ளவில்லை என்றோ மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று அகில உலக NYI கூட்டமைப்பினால் நீக்கப்படும்போது காலியிடம் ஏற்படுகிறது. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த அகில உலக NYI அதிகாரிகளின் பணியிடங்கள் காலியானால், அகில உலக NYI கூட்டமைப்பானது அவருக்கு மாற்றானவர்களைத் தேர்ந்தெடுக்கும்.

**810.409 கடமைகள்**

1. அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
   a. அகில உலக NYI சங்கம் மற்றும் அகில உலக NYI கூட்டமைப்பின் கூட்டங்களுக்குத் தலைவராக இருந்து அவைகளை நடத்துதல்
   b. பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினராக NYI க்குப் பிரதிநிதியாக இருத்தல். பொது மாநாட்டின் பிரதிநிதியாக இருத்தல்.

   c. அகில உலக NYI கூட்டமைப்பு மற்றும் சங்கம் கொடுக்கும் பிற வேலைகளையும் கவனித்தல்.

2. அகில உலக NYI கூட்டமைப்பின் துணைத் தலைவரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன:
   a. உலக அளவில் செயல்திறன் மிக்க வாலிபர் ஊழியங்களைச் செயல்படுத்தும் விதமாக அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவரோடு இணக்கத்தோடு செயல்படுதல்.
   b. அகில உலக NYI சங்கம் மற்றும் அகில உலக NYI கூட்டமைப்பின் கூட்டங்களின் செயல்பாடுகள் அனைத்தும் பொது நிர்வாகக் குழுவிடம் ஒப்படைப்பதற்காகச் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கவனித்தல்.
   c. அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவர் இல்லாத நேரத்தில் தேவைப்படும் பதவிகளில் செயல்படுதல், அகில உலக NYI கூட்டமைப்பிற்குத் தலைவராக இருத்தல் மற்றும் மாற்றுப் பிரதிநிதியாகத் தேவைப்படும் குழுக்களில் கலந்துகொள்ளுதல்.
   d. அகில உலக NYI கூட்டமைப்பு மற்றும் சங்கம் கொடுக்கும் பிற வேலைகளைச் செய்தல்.

**810.410 ஊதியம் கொடுக்கப்படும் பணியாளர்கள்**

1. அதிகாரத்தில் இருக்கும் NYI க்கான பொதுக் கண்காணிப்பாளர் மற்றும் பொது நிர்வாகக் குழுவே அகில உலக NYI யின் பொறுப்பை NYI இயக்குனருக்கு அளிக்கின்றன. NYI இயக்குனர் பொதுக் கண்காணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் வருவார்.
2. பொதுக் கண்காணிப்பாளர்களின் குழுவானது, பொது நிர்வாகக் குழுவின் தேர்தல் நெறிகளுக்கு ஏற்ப NYI யின் இயக்குனரைத் தேர்ந்தெடுக்கும்.
3. இந்தப் பதவியில் காலியிடம் ஏற்படும்போது, பின்வரும் வழிகளில் அது நிரப்பப்படுகிறது:
   a. அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் NYI யின் இயக்குனரை நியமனம் செய்கிறார். அவர் இதை பொது NYI கூட்டமைப்பு மற்றும் பொதுக் கண்காணிப்பாளரின் குழுவோடு ஆலோசித்துவிட்டு செய்கிறார்.
   b. ஒரு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அகில உலக NYI கூட்டமைப்பிற்கு பெரும்பான்மை வாக்குகளின் மதிப்பீட்டில் அங்கீகாரத்திற்காக வழங்கப்படுகிறது. இந்தத் தேர்தல் பொதுக் குழுவின் தேர்தல் விதிகளுக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
4. NYI க்குப் பொறுப்பான அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்டப்பிறகு, ஏற்கெனவே பணியில் இருக்கும் NYI இயக்குனர் அகில உலக NYI கூட்டமைப்பில் பொது மாநாட்டிற்குப் பிறகு நடக்கும் முதல் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இது பொது நிர்வாகக் குழுவின் தேர்ந்த நெறிகளுக்கு உட்பட்டது.

5. NYI யின் இயக்குனர் தேர்ந்தெடுக்கப்பட்ட அகில உலக NYI அதிகாரியாகச் செயல்பட முடியாது.
6. NYI இயக்குனர் தன்னுடைய பதவியின் காரணமாக அகில உலக NYI கூட்டமைப்பு, நிர்வாகக் குழு, எல்லாப் பிராந்திய கூட்டமைப்புகள் மற்றும் பிற அகில உலக NYI கூட்டங்களில் நியமிக்கப்படும் விதத்தில் பணியாற்றுகிறார்.

## கூட்டமைப்பு

**810.411 ஆக்கம்**

1. NYI இயக்குனர், அகில உலக NYI கூட்டமைப்பின் தலைவர், மற்றும் ஒவ்வொரு உலக பிராந்தியத்திலிருந்தும் ஒரு பிரதிநிதி ஆகியோர் அந்த அகில உலக NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தப் பிராந்திய பிரதிநிதிகள் ஒவ்வொரு பிராந்தியத்தின் ஊழியத்திட்டத்திற்கு ஏற்றவாறு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
2. அகில உலக NYI கூட்டமைப்பினால் தேவைப்படும் என்று கருதப்படும் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அந்தக் கூட்டமைப்பின் வாக்களிக்காத உறுப்பினர்களாக இருப்பார்கள்.
3. எல்லா அகில உலக NYI கூட்டமைப்பின் உறுப்பினர்களும் NYI யின் உறுப்பினர்களாகவும், நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும்.

**810.412 கடமைகள்**

1. அகில உலக NYI கூட்டமைப்பு, NYI இயக்குனர்கள் மற்றும் NYI பணியாளர்களோடு சேர்ந்து அகில உலக NYI யின் செய்பாடுகளை முன்னிறுத்தி, எல்லா நிலைகளிலும் இருக்கும் NYI யின் வாலிபர் ஊழியங்களை வழிநடத்தவும், ஆதரிக்கவும் ஆதாரங்களை உருவாக்குகிறது. இது NYI க்கான அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளராலும், பொது நிர்வாகக் குழுவாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். NYI ஊழியமானது இளம் வாலிபர்களைக் கிறிஸ்துவுக்காகச் சந்திப்பதற்காகவும், அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளுக்குப் பதிலளிப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அது அதனுடைய NYI இயக்குனர் மற்றும் உலகம் முழுவதும் இருக்கும் NYI தலைமைத்துவத்தினால் செயல்படுத்தப்படுகிறது.
2. அகில உலக NYI கூட்டமைப்பானது செயல்பூர்வமான வாலிப ஊழிய திட்டங்களையும், நிகழ்வுகளையும், ஆதாரங்களையும் பிராந்திய அளவில், உலக NYI யின் நோக்கம் மற்றும் தரிசனத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்குவதற்கான ஒரு வழித்தடமாக இருக்கிறது.
3. அகில உலக NYI கூட்டமைப்பானது பிராந்திய, கள, மறைமாவட்ட மற்றும் உள்ளூர் NYI நிலைகளை NYI பணியாளர்களுக்குக் கூட்டமைப்பின் உருப்பினர்களால் எடுத்துரைக்கும் இடமாக விளங்குகிறது. கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அகில உலக NYI யோடு தங்களுடைய பிராந்திய, கள, மறைமாவட்ட மற்றும் உள்ளூர் திருச்சபைகளிலிருந்து தொடர்பை

ஏற்படுத்துகிறார்கள். இது அகில உலக NYI கூட்டமைப்பு மற்றும் அகில உலக NYI அலுவலகத்தின் சார்பாக நிகழ்கிறது.

4. அகில உலக NYI சங்கத்தின் திட்டமிடுதல் மற்றும் நிர்வாகத்தில் அகில உலக NYI கூட்டமைப்பானது உதவுகிறது.
5. அகில உலக NYI கூட்டமைப்பானது ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/சிறு குழுக்கள் ஆகியவற்றின் வாலிபர்களுக்கான பிரிவுகளில் தலைமைத்துவத்தைக் காண்பிக்கிறது. அது வாலிபர்கள் சேர்வதிலும், கலந்துகொள்வதிலும் வளர்ச்சியையும், நியமனத்தையும், வாலிபர்களுக்கான ஞாயிறு பள்ளி/வேதாகம ஆய்வுகள்/சிறு குழுக்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களுக்கு பயிற்சியும் அளிக்கிறது. பயன்படுத்தக்கூடிய பாடத்திட்டம் மற்றும் ஆதாரங்களைப் பரிந்துரை செய்கிறது. இதை அது ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியத்தின் குழுவோடு சேர்ந்து செய்கிறது.
6. அகில உலக NYI கூட்டமைப்பானது பொது நிர்வாகக் குழுவின் மூலமாகக் கொடுக்கப்படும் NYI அலுவலகத்திற்கான வருடாந்திர நிதி அறிக்கையையும், செலவுகளையும் ஆராய்ந்து பார்க்கிறது.
7. அகில உலக NYI கூட்டமைப்பானது செலவுக்கான நிதியை எங்கு செல்ல வேண்டும் என்று வழிகாட்டி அவைகளை மறுஆய்வு செய்கிறது. இது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் கண்காணிப்பில் நடக்க வேண்டும்.

**810.413 குழுக்கள்**

1. நிர்வாகக் குழுவானது தேர்ந்தெடுக்கப்பட்ட அகில உலக NYI அதிகாரிகளையும், NYI இயக்குனரையும் உள்ளடக்கியிருக்கிறது. முழு கூட்டமைப்பும் சந்தித்து செயல்பட முடியாத நிலையில் இந்த நிர்வாகக் குழுவானது அகில உலக NYI யின் பணிகளைச் செய்யும். நிர்வாகக் குழுவின் எல்லாச் செயல்களும் அந்தக் கூட்டமைப்பின் மீதமிருக்கும் உறுப்பினர்களுக்குச் சொல்லப்படும். அடுத்தக் கூட்டத்தில் அந்த முழு கூட்டமைப்பும் இதற்கான அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும்.
2. அகில உலக NYI கூட்டமைப்பானது மறைமாவட்டத்தின் வாலிபர்களுக்கான ஊழிய தேவையை அடிப்படையாகக் கொண்டு விசேஷ ஊழியத்தை ஏற்படுத்த முடியும்.

**810.414 ஊதியம் கொடுக்கப்படும் பணியாளர்கள்**

1. NYI இயக்குனர் அகில உலக அருட்பணி இயக்குனர் மற்றும் பொதுக் கண்காணிப்பாளர்களின் குழுவின் கண்காணிப்பின் கீழ் வருகிறார். அகில உலக NYI கூட்டமைப்பானது NYI க்கான அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளின் கடமைகளில் சில மாறுதல்களைச் செய்வதற்காக பரிந்துரை செய்யும்.
2. NYI யின் இயக்குனர், அகில உலக NYI கூட்டமைப்போடு ஆலோசசித்து, அகில உலக NYI அலுவலகப் பணியாளர்களின் பொறுப்புகளை நியமிக்கிறார். அகில உலக NYI கூட்டமைப்பும், அகில உலக NYI அலுவலகப் பணியாளர்களும் இணக்கத்தோடு செயல்படுவார்கள்.

## கூட்டங்கள்

**810.415 அகில உலக NYI கூட்டங்கள்**

1. அகில உலக NYI ஊழியமானது இளம் வாலிபர்களுக்குச் செயல்பூர்வமான ஊழியத்தை வழங்கும் நோக்கத்தில் ஆராதனை செய்யவும், போதிக்கவும், பயிற்சியளிக்கவும், ஐக்கியத்திற்காவும் மற்றும் சுவிசேஷத்தைப் பரப்புவதற்காகவும் பல கூட்டங்களை நடத்தும். அகில உலக NYI தலைமைத்துவமானது பிராந்திய, கள, மறைமாவட்ட மற்றும் உள்ளூர் NYI தலைமைத்துவத்தோடு சேர்ந்து உலக அளவில் இந்த ஊழியத்திற்கான திட்டத்தைத் தீட்டுகிறது. அந்தத் திட்டமானது குறிப்பிட்ட குழுக்கள், பல பிராந்தியங்கள் போன்றவற்றைக் குறிவைப்பதாக இருக்கின்றது. இதன் காரணமாக நசரேயத் திருச்சபையின் இளம் வாலிபருக்கான ஊழியமானது சிறப்பாகச் செயல்பட முடியும்.
2. அகில உலக NYI தலைவர்களும் பணியாளர்களும் எல்லா நிலைகளில் காணப்படும் NYI யோடு இந்த ஊழியத்தின் செயல்பூர்வமான முன்னேற்றத்திற்காகப் பணியாற்றுகிறார்கள்.

**810.416 அகில உலக NYI கூட்டமைப்பின் கூட்டங்கள்**

1. அகில உலக NYI கூட்டமைப்பானது NYI யின் நோக்கத்தையும், தரிசனத்தையும் முன்னேற்றுவதற்காக ஆண்டுதோறும் சந்திக்கிறது. இந்தக் கூட்டமானது பொது நிர்வாகக் குழுவின் ஆண்டுக் கூட்டத்தோடு தொடர்பிருக்கும்படியாக நடத்தப்படுகிறது.
2. அகில உலக NYI அதிகாரிகள் அல்லது NYI இயக்குனர் தேவைப்படும்போது விசேஷமானக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கலாம். இதை NYI க்கான அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரோடு கலந்தாலோசித்துச் செய்ய வேண்டும்.

**810.417 அகில உலக NYI சங்கம்**

1. அகில உலக NYI சங்கமானது இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் வாலிபர் ஊழியங்களை மேம்படுத்துவதற்கான உத்வேகத்தை அளிக்கும் கூட்டங்களை நடத்துகிறது. அறிக்கைகள் பெறப்படுகின்றன, தலைமைத்துவம் தேர்வுசெய்யப்படுகிறது, NYI யைச் சார்ந்த சட்டரீதியான வேலைகள் இதில் முடிக்கப்படுகின்றன. இவை எல்லாம் அகில உலக NYI சங்கத்தில் நடைபெறுகிறது.
2. பொதுக் கண்காணிப்பாளர்களின் குழுவானது இந்தச் சங்கத்தின் நீளம் மற்றும் அது துவங்கும் நேரத்தையும் நிர்ணயிக்கிறது. அது அகில உலக NYI கூட்டமைப்பானது பொது மாநாடு நிகழ்ச்சி கூட்டமைப்பின் பரிந்துரைகளைப் பெற்றுச் செய்கிறது. அகில உலக NYI அதிகாரிகள் மற்றும் NYI இயக்குனர் இதனுடைய கூட்டங்களை மேற்பார்வை செய்வார்கள். இதை அவர்கள் அகில உலக NYI கூட்டமைப்பின் உதவியோடு செய்கிறார்கள்.
3. அகில உலக சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் நசரேயத் திருச்சபை மற்றும் NYI யின் உறுப்பினர்களாகவும், இந்தச் சங்கம் நடைபெறும் நேரத்தில்

12 வயதாகவோ அல்லது அதற்கும் மேலோ இருக்க வேண்டும். அதோடு ஒவ்வொரு மறைமாவட்டத்தின் NYI பிரதிநிதியும், இந்தச் சங்கத்தில் தான் பிரதிநிதியாக இருக்கும் மறைமாவட்டத்தில் வசிக்க வேண்டும்.

4. அகில உலக NYI சங்கத்தில் அகில உலக NYI கூட்டமைப்பு, NYI இயக்குனர், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகப் பிராந்திய அதிகாரிகள் (மூன்றுக்கும் அதிகம் கிடையாது), பிராந்திய, கள, தேசிய மற்றும் மறைமாவட்ட வாலிபர் ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் மறைமாவட்ட NYI பிரதிநிதிகள் பின்வருமாறு:

a. ஆயிரம் அல்லது அதற்கும் குறைவான NYI உறுப்பினர்களைக் கொண்ட மறைமாவட்டங்கள் பின்வரும் பிரதிநிதிகளை அனுப்பலாம்:

(1) அகில உலக NYI சங்கத்தின் நேரத்தில் பணியில் இருக்கும் மறைமாவட்ட NYI தலைவர்.

(2) NYI தலைமைத்துவத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு குருத்துவ பிரதிநிதி. அவர் நியமிக்கப்பட்ட அபிஷேகம் பெற்ற போதகராகவோ, டீக்கனாராகவோ அல்லது மறைமாவட்டத்தால் உரிமம் பெற்ற போதகராகவோ இருக்கலாம்.

(3) அகில உலக NYI சங்கம் நடக்கும் நேரத்தில் 23 வயதிற்கும் அதிகமாக இருக்கும் ஒரு சாமானிய பிரதிநிதி, அவர் NYI யில் செயல்படுகிறவராக இருக்க வேண்டும்.

(4) ஒரு வாலிப பிரதிநிதி, அவருடைய வயது அகில உலக NYI சங்கம் நடைபெறும் நேரத்தில் 12லிருந்து 23க்குள் இருக்க வேண்டும். அவரும் NYI யில் செயல்படுகிறவராக இருக்க வேண்டும்.

b. இதோடு சேர்த்து, ஒரு மறைமாவட்டமானது கூடுதலாக ஒரு குருத்துவ பிரதிநிதி, சாமானிய பிரதிநிதி மற்றும் வாலிபர் பிரதிநிதியை அகில உலக NYI சங்கத்தின் நேரத்தில் 12 முதல் 23 வயதிற்குள் இருப்பவர்களாக ஒவ்வொரு கூடுதல் 1500 NYI உறுப்பினர்களின் சார்பில் அனுப்பலாம். இதில் கடைசி பகுதி 751–1499 உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

c. மறைமாவட்டத்திலிருந்து செல்லும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அந்த மறைமாவட்டத்தின் NYI உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொருத்து இருக்கும். அது அகில உலக NYI சங்கத்தின் கூடுகைக்கு முன்னால் NYI உறுப்பினர்களைக் குறித்து மறைமாவட்ட மாநாட்டில் கொடுக்கப்பட்ட அறிக்கையிலிருந்து எடுக்கப்பட வேண்டும்.

d. எல்லா மறைமாவட்ட பிரதிநிதிகளும் மறைமாவட்ட NYI சங்கத்தின்போது இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பெரும்பான்மையைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இது அகில உலக NYI சங்கம் நடந்து 18 மாதங்களுக்கு உள்ளாகவோ அல்லது விசா மற்றும் பிற பயணப் பிரச்சினைகள் இருக்கும் நாடுகளிலிருந்து என்றால் 24 மாதங்களுக்கு உள்ளாகவோ செய்யப்பட்டிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பிறகு மாற்று பிரதிநிதிகளும் மற்றொரு வாக்கெடுப்பின் மூலமாக முதலாம்

மாற்று பிரதிநிதி, இரண்டாம் மாற்று பிரதிநிதி என்று வாக்குகளைப் பெற்றதன் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படுவார்கள். அகில உலக NYI சங்கத்தின் வருடத்தில் மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் இந்தப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கப்பட வேண்டும்.

e. ஒவ்வொரு நசரேய பல்கலைக்கழகம் அல்லது இறையியல் பள்ளியின் மாணவர்களின் தலைவர் ஒரு பிரதிநிதியாக இருப்பார். அவர் அவருடைய நிறுவனமானது NYI யோடு கொண்டிருக்கும் கூட்டணியை நினைவுபடுத்தும் விதத்தில் வருகிறார். அவரால் வரமுடியாவிட்டால், மாணவர்களின் அரசாங்கம் தேர்ந்தெடுக்கும் மாற்று பிரதிநிதி கலந்துகொள்ளலாம்.

5. ஒழுங்குபடுத்தப்பட்ட NYI இல்லாத மறைமாவட்டங்களில் (மறைமாவட்ட NYI சங்கம் இல்லாத இடங்களில்), அகில உலக NYI சங்கத்தில் செல்லும் பிரதிநிதி NYI உறுப்பினர்களிலிருந்து மறைமாவட்ட மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்பட்டு செல்வார். இந்தச் சங்கம் கூடுவதற்கு முன்பாகப் பிரதிநிதி யாராவது விலகினால், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவானது அதற்குத் தகுதியான பிரதிநிதியை நியமிக்க வேண்டும்.

6. அகில உலக NYI சங்கத்தின் கூட்டமைப்பானது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் அகில உலக NYI சங்கத்தில் வாக்குகளைச் செலுத்துவதற்கு ஆயத்தப்படுத்துவதற்குத் தயாராக இருக்கும். இந்த வாக்களிப்பானது சங்கத்தின் பணி கூட்டமைப்பு நிர்ணயித்திருக்கும் செயல்முறைகளின் மூலமாக நடக்க வேண்டும்.

7. அகில உலக NYI சங்கத்தின்போது ஒவ்வொரு பிராந்தியத்திற்குமான கூட்டம் நடைபெறும். அதில் பிராந்திய NYI கூட்டமைப்பு, பிராந்திய இயக்குனர், பிராந்திய வாலிப ஒருங்கிணைப்பாளர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மறைமாவட்ட NYI பிரதிநிதிகள் அந்தப் பிராந்தியத்திலிருந்து கலந்துகொள்வார்கள்.

| உறுப்பினர்களின் எண்ணிக்கை | பிரதிநிதிகளின் எண்ணிக்கை* | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பிரதிநிதிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 4–1750 | 3 | 4751–6250 | 12 |
| 1751–3250 | 6 | 6251–7750 | 15 |
| 3251–4750 | 9 | 7751–9250 | 18 |

*மறைமாவட்ட NYI இல்லிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் பதவியின் காரணமாகப் பிரதிநிதிகளாக இருப்பவர்களின் எண்ணிக்கைச் சேர்க்கப்படவில்லை (மறைமாவட்ட NYI தலைவர், பிராந்திய NYI தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அகில உலக அதிகாரிகள் போன்றவர்கள்)

# II. நசரேய அருட்பணி சங்கம்

## 811. அகில உலக நசரேய அருட்பணி சங்கம்

## சபை முறைமை

## கோட்பாடு 1. பெயர்

இந்த ஒழுங்கமைப்பின் பெயர் நசரேயத் திருச்சபையின் நசரேய அருட்பணி சங்கம் (NMI) என்று அழைக்கப்படும்.

## கோட்பாடு 2. நோக்கம்

நசரேயத் திருச்சபையை அருட்பணிக்காகத் திரட்டுவதே இந்த ஒழுங்கமைப்பின் நோக்கமாகும். இதை 1) ஜெபித்தல், 2) கொடுத்தல், 3) கற்பித்தல் மற்றும் 4) சிறுவர்கள் மற்றும் வாலிபர்களை ஈடுபடச் செய்வதின் மூலமாகச் செய்யலாம்.

## கோட்பாடு 3. வடிவமைப்பு

**பகுதி 1: உள்ளூர்**

உள்ளூர் நசரேய அருட்பணி சங்கமானது (NMI) உள்ளூர் சபையின் ஒரு அமைப்பாக இருக்கும். அது போதகர் மற்றும் சபை நிர்வாகக்குழுவோடு இணக்கத்தோடு உள்ளூர் NMI கூட்டமைப்பின் மூலமாகச் செயல்படும்.

**பகுதி 2: மறைமாவட்டம்**

மறைமாவட்ட NMI கூட்டமைப்பின் தலைவர்கள் மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் பிற மறைமாவட்டம் சார்ந்த தலைவர்களோடு சேர்ந்து பணியாற்றுவார்கள்.

அந்த மறைமாவட்டத்திற்குள் இருக்கும் எல்லா உள்ளூர் NMI ஒழுங்கமைப்புகளும் மறைமாவட்ட NMI யாக இருக்கும்.

**பகுதி 3: அகில உலக**

அகில உலக NMI கூட்டமைப்பின் தலைவர்களாக இருப்பவர்கள் அகில உலக அருட்பணி அலுவலகம், பொதுக் குழுவின் அகில உலக அருட்பணி கூட்டம் மற்றும் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரோடு சேர்ந்து பணியாற்றுவார்கள்.

எல்லா மறைமாவட்ட மற்றும் உள்ளூர் NMI ஒழுங்கமைப்புகள் அகில உலக NMI யாக இருக்கும்.

## கோட்பாடு 4. உறுப்பினர்கள்

### பகுதி 1: உறுப்பினர்கள்

நசரேயத் திருச்சபையின் உறுப்பினராக இருந்து நசரேய அருட்பணி இயக்கத்திற்கு ஆதரவளிப்பவர் அந்த உள்ளூர் சபையின் NMI உறுப்பினராக இருப்பார்.

வாக்களிப்பது மற்றும் பணிபுரிவது ஆகியவை 15 மற்றும் அதற்கும் மேலான வயதை உடைய உறுப்பினர்களுக்கு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் குழுக்களுக்குப் பொருந்தாது.

இந்த அமைப்பு முறைமையில் வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் ஒழிய, "உறுப்பினர்கள்" என்பதற்கு திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்கும் NMI உறுப்பினர்கள் என்று அர்த்தம்.

### பகுதி 2: துணை உறுப்பினர்கள்

நசரேயத் திருச்சபையின் உறுப்பினராக இல்லாமல், NMI யின் நோக்கத்திற்கு ஆதரவளிப்பவர் NMI யின் துணை உறுப்பினராகக் கருதப்படலாம்.

## கோட்பாடு 5. கூட்டமைப்புகள் மற்றும் அதிகாரிகள்

### பகுதி 1: உள்ளூர் கூட்டமைப்பு

### A. நோக்கம்

உள்ளூர் கூட்டமைப்பானது இந்த NMI ஒழுங்கமைப்பின் நோக்கமான நசரேயத் திருச்சபையை அருட்பணிக்காக திரட்டுவது என்பதை பரப்பும். இதை 1) ஜெபித்தல், 2) கொடுத்தல், 3) கற்பித்தல் மற்றும் 4) உள்ளூர் சிறுவர்கள் மற்றும் வாலிபர்களை ஈடுபடச் செய்வதின் மூலமாகச் செய்யலாம்.

### B. ஆக்கம்

1. NMI கூட்டமைப்பானது ஒரு தலைவரையும், அதிகாரிகள் அல்லது கூட்டமைப்பு உறுப்பினர்களையும் தலைவர், போதகர் ஆகியோரின் முடிவின்படி அந்தச் சபையின் தேவை மற்றும் அளவிற்கேற்ப முடிவு செய்யப்படும்.
2. ஒரு உள்ளூர் NMI யானது தலைவர்கள், முதன்மை போதகர் (பதவியின் காரணமாக வருவது) மற்றும் உள்ளூர் NMI கூட்டமைப்பின் முடிவின்படி இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவைக் கொண்டிருக்கும்.
3. இந்தக் கூட்டமைப்பைச் சேர்ந்த கூடுதல் உறுப்பினர்கள் NMI யைச் சேர்ந்த குறிப்பிட்ட பகுதிகளுக்குப் பொறுப்பாக இருப்பார்கள். அவர்களுடைய பணிகள் வெறுமனே ஜெபித்தல், கொடுத்தல், கற்பித்தல் மற்றும் சிறுவர்கள் மற்றும் வாலிபர்களை இதில் ஈடுபடச் செய்தலோடு நின்றுவிடாது.

4. ஒரு கூட்டமைப்பு உறுப்பினர் ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளைக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரே ஒரு வாக்கு மட்டுமே செலுத்த முடியும்.
5. ஒரு மறைமாவட்டத்தின் NMI கூட்டமைப்பின் உறுப்பினர் உள்ளூர் கூட்டமைப்பின் உறுப்பினராகப் பதவியின் காரணமாக வந்துவிடுவார். இது உள்ளூர் கூட்டமைப்பினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## C. நியமனங்கள்

உள்ளூர் கூட்டமைப்பானது சபையின் நியமன குழுவையும் தான் ஒரு நியமன குழுவின் தேவ இருக்கிறதா என்பதை உள்ளூர் கூட்டமைப்பிற்கு சரியான நபர்கள் இருக்கிறார்களா என்பதைக் கண்டறியும் செயல்முறையின் ஒரு பங்காகப் பார்க்கும். நியமன குழுவானது பயன்படுத்தப்படும் என்றால், இந்த நியமன குழுவானது உள்ளூர் கூட்டமைப்பின் ஒப்புதலோடு தலைவரால் நியமிக்கப்படும்.

1. தலைவர்
    a. சபையின் ஆண்டு முடிவின் இறுதியில் உள்ளூர் கூட்டமைப்பானது ஒரு நியமனக் குழுவிடம் சில பெயர்களைப் பரிந்துரை செய்யும். அவர்கள் தலைவர் பதவிக்கான நியமனங்களைச் சபை நிர்வாகக் குழுவின் அனுமதியோடு சமர்ப்பிப்பார்கள்.
    b. ஒன்று அல்லது இரண்டு சபை ஆண்டுகள் பணியாற்றும்படியாக, ஒரு தலைவர் புதிதாகவோ அல்லது மறுபடியுமோ அங்கிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையை இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பெற்று தேர்ந்தெடுக்கப்படுவார். NMI கூட்டமைப்பும் போதகரும் சேர்ந்த அந்த பணிக்காலம் என்ன என்பதை முடிவு செய்வார்கள்.
    c. ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர் “ஆம்” அல்லது “இல்லை” என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட தேர்தல் போதகர் மற்றும் சபை நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளூர் கூட்டமைப்பினால் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.
    d. இதற்கு மாறாக, ஒழுங்குப்படுத்தப்படாத திருச்சபையில், ஒழுங்குப்படுத்தப்பட்டு 5 வருடங்களே ஆகியிருக்கிறது அல்லது 35 பேருக்கும் குறைவான உறுப்பினர்களே இருக்கிறார்கள் என்ற நிலையில் தலைவர் பதவிக்கு போதகரே சபை நிர்வாகக் குழுவோடு விவாதித்து, ஆதரவு பெற்று ஒருவரை நியமனம் செய்வார்.
2. கூட்டமைப்பு
    a. அப்போது இருக்கும் தலைவரின் பரிந்துரையின் பேரில், முதன்மைப் போதகர், உள்ளூர் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஒப்புதலைப் பெற்று தலைவரல்லாத மீதமிருக்கும் கூட்டமைப்பினர் NMI உறுப்பினர்கள் அனைவரும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் வரிசையின் அடிப்பையில் அல்லது சபையின் ஆண்டு கூட்டத்தில் அல்லது சபை

நிர்வாக் குழுவின் ஒப்புதலைப் பெற்று தலைவராலும், போதகராலும் நியமனம் செய்யப்படுவார்கள்.

b. இவர்களின் பணிக்காலம் ஒன்று அல்லது இரண்டு வருடங்களாக இருக்கும். அல்லது அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் NMI கூட்டமைப்பின் பரிந்துரையின் பேரில் தேர்ந்தெடுக்கப்படும் வரையிலோ அல்லது நியமனம் செய்யப்படும் வரையிலோ பணியில் இருக்கலாம். NMI கூட்டமைப்பு இல்லாத நிலையில் சபை நிர்வாகக் குழுவும், போதகரும் அதைச் செய்வார்கள்.

c. இந்தத் தலைவர்கள் தேர்தல் முடிந்தபிறகு புதிய சபை ஆண்டின் முதல் நாளிலிருந்து தங்களுடைய பணியை ஆரம்பிப்பார்கள்.

d. சபையானது, சபைக்கும் NMI க்கும் ஒரே பொருளாளரை வைத்திருந்தால், அந்த நபரே உள்ளூர் NMI கூட்டமைப்பின் பொருளாளராக இருப்பார். அவர்கள் நேரடியாக வரும் உறுப்பினர்களின் எல்லா உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றிருப்பார். இவற்றில் மாற்றங்களை உள்ளூர் கூட்டமைப்பினால் செய்யமுடியும்.

3. மறைமாவட்ட சங்கத்தின் பிரதிநிதிகள்

a. ஆண்டு கூட்டத்தில் வாக்குகளைப் பெரும் வரிசையின் அடிப்பையில் பிரதிநிதிகளும், அவர்களுடைய மாற்று நபர்களும் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

b. தேர்தல் வைக்கமுடியாத நிலை இருந்தால், தேர்தல் உள்ளூர் கூட்டமைப்பினால் செய்யப்படும். ஆனால் அது இல்லையென்றால், சபை நிர்வாகக் குழுவானது ஓட்டுகளின் தரவரிசைப்படி தேர்ந்தெடுத்துவிடும். கோட்பாடு 6, பகுதி 3.A.3 என்பதைப் பார்த்து எத்தனை பிரதிநிதிகள் என்பதைத் தெரிந்துகெள்ளுங்கள்.

4. காலியிடங்கள்

a. தலைவர்: உள்ளூர் கூட்டமைப்பானது பெயர்களை சபை நிர்வாகக் குழுவிடம் பரிந்துரை செய்யும். அவர்கள் ஒன்று அல்லது இரண்டு பெயர்களை நியமனம் செய்வார்கள். தேர்தல் இரகசியமாகவும், NMI உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கைப் பெற்றும் இருக்கும். இந்தத் தேர்தல் நடக்கும் கூட்டம் சட்டநூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிகளின்படி நடக்க வேண்டும். மாறாக, NMI கூட்டமைப்பே இல்லாத சபையில், சபை நிர்வாகக் குழுவானது பெரும்பான்மை ஓட்டினால் நடத்தப்படும் தேர்தலின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை நியமிக்கும்.

b. கூட்டமைப்பின் பிற உறுப்பினர்கள்: NMI கூட்டமைப்போ அல்லது அது இல்லாத பட்சத்தில் சபை நிர்வாகக் குழுவோ நியமனத்தின் மூலமாகக் காலியிடத்தை நிரப்பும்.

### D. கூட்டமைப்பு உறுப்பினர்களின் கடமைகள்

1. தலைவர்
   a. உள்ளூர் சபையில் NMI யின் பணிகளை நிர்வகித்து செயல்படுத்துகிறார்.
   b. NMI யின் எல்லாக் கூட்டங்களையும், சிறப்பானக் கூடுகைகளையும் நடத்துவார்.
   c. தேவைக்கு ஏற்பட NMI உறுப்பினர்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய பணிகளைக் கொடுப்பார்.
   d. பதவியின் காரணமாக சபை நிர்வாகக் குழு, ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழிய குழு, மறைமாவட்ட NMI சங்கம் மற்றும் மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினராக இருப்பார்.
   e. வேலையைக் குறித்த விளக்கங்களில் மற்ற பணிகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன.
   க. உள்ளூர் தலைவருடைய துணை சபை நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருந்தால் அல்லது துணையானவர் சபையின் போதகராக இருந்தால், உள்ளூர் NMI தலைவர் சபை நிர்வாகக் குழுவில் பணியாற்றுவதில்லை என்று முடிவு செய்தால், NMI கூட்டமைப்பினால் கண்டுபிடிக்கப்படும் ஒரு NMI பிரதிநிதி சபை நிர்வாகக் குழுவில் தலைவரின் இடத்தில் அவருடைய எல்லா சலுகைகள் மற்றும் உரிமைகளைக் கொண்டு செயல்படும்படி அதிகாரமளிக்கப்படுகிறது.
2. நிர்வாகக் குழு
   a. கூட்டமைப்பின் கூட்டங்களுக்கு இடையே பணிகளைச் செய்ய வைக்கும்.

### பகுதி 2: மறைமாவட்ட கூட்டமைப்பு

## A. நோக்கம்

மறைமாவட்ட கூட்டமைப்பானது இந்த NMI ஒழுங்கமைப்பின் நோக்கமான நசரேயத் திருச்சபையை அருட்பணிக்காக திரட்டுவது என்பதைப் பரப்பும். இதை 1) ஜெபித்தல், 2) கொடுத்தல், 3) கற்பித்தல் மற்றும் 4) மறைமாவட்ட சிறுவர்கள் மற்றும் வாலிபர்களை ஈடுபடச் செய்வதின் மூலமாகச் செய்யலாம்.

## B. ஆக்கம்

1. படி 3 சார்ந்த மறைமாவட்டங்களில், இந்தக் கூட்டமைப்பானது நான்கு அதிகாரிகளைப் பெற்றிருக்கும்: தலைவர், துணைத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் (NMI அதிகாரிகள்). இவர்களோடு சேர்த்து அந்த மறைமாவட்டத்தின் அளவு மற்றும் தேவையின் அடிப்படையில் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

2. கூட்டமைப்பின் உறுப்பினர் ஒன்றிற்கும் மேற்பட்ட பதவியில் இருக்கலாம் ஆனால் அவர் ஒரே ஒரு வாக்கை மட்டுமே செலுத்த முடியும்.
3. நிர்வாகக் குழுவில் தலைவரும் பிற NMI அதிகாரிகளும் இருப்பார்கள். வேண்டுமென்றால், குறைந்தது மூன்று கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மறைமாவட்ட கூட்டமைப்பினால் தேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது நியமிக்கப்படலாம். அவர்களுடைய பணிக்காலம் ஒரு சங்க வருடம் அல்லது அவர்களுக்குப் பின் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை. இந்த நிர்வாகக் குழுவில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் பதவியின் காரணமாக இருக்கும் உறுப்பினராக இருப்பார்.
4. படி 1 மற்றும் படி 3 மறைமாவட்டங்களைக் குறித்த குறிப்புகளுக்கு பகுதி 2.C.3 கீழே பாருங்கள்.

## C. நியமனம், தேர்தல், பணியில் அமர்த்தப்படுதல் மற்றும் காலியிடங்கள்

1. நியமனங்கள்: இந்தக் கூட்டமைப்பு 5 உறுப்பினர்களுக்கும் குறையாத NMI உறுப்பினர்களைக் கொண்ட கூட்டத்தால் நியமிக்கப்படும். எல்லா நியமனங்களும் NMI உறுப்பினர்களாக ஒரு நசரேயத் திருச்சபை உள்ளூர் சபையில் இருப்பவர்களாக இருக்க வேண்டும்.

a. மறைமாவட்ட நிர்வாகக் குழுவானது இந்த நியமன குழுவை நியமித்து, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கூட்டமைப்பின் உறுப்பினர்களை நிர்ணயிக்கும்.

b. மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இந்தக் கூட்டமைப்பின் தலைவராக இருப்பார். அவரே மறைமாவட்டத் தலைவரின் நியமனத்தைக் கொடுப்பார். மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற்றப்பின்பு மறைமாவட்ட NMI தலைவர் பிற உறுப்பினர்களின் நியமனங்களுக்கான தலைவராக இருப்பார்.

2. தேர்தல்: ஆண்டு மறைமாவட்ட சங்கக்கூடுகையில் தலைவரும் அவரோடு கூட குறைந்தது மூன்று உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்த மூன்று கூடுதல் உறுப்பினர்களும் துணைத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளராக இருப்பார்கள். மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற்று மறைமாவட்ட NMI கூட்டமைப்பானது இவர்கள் எவ்வாளவு காலம் பணியாற்ற வேண்டும் என்பதை நிர்ணயம் செய்யும். அது ஒன்று அல்லது இரண்டு சங்க ஆண்டுகளாக இருக்கலாம் அல்லது அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்வரை இருக்கலாம். ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்திருந்தால், அவர் மறைமாவட்ட சங்கக்கூடுகை முடிந்து 30 நாட்களுக்குள் தன்னுடைய பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு சங்க வருடம் என்பது ஒரு மறைமாவட்ட சங்கக்கூடுகையின் முடிவிலிருந்து அடுத்த மறைமாவட்ட சங்கக்கூடுகையின் முடிவுவரையானதாகும். இந்த உறுப்பினர்கள் நான்கு பேரும் கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவாக இருப்பார்கள். மூன்று அல்லது அதற்கும்

மேற்பட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது பணியில் அமர்த்தப்படலாம். அது மறைமாவட்ட கூட்டமைப்பினால் செய்யப்படும்.

a. தலைவர்

1) நியமனக் குழுவானது தலைவருடைய பதவிக்கு ஒன்று அல்லது இரண்டுபேர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்வார்கள். சில நேரங்களில் மறைமாவட்ட கூட்டமைப்பானது ஏற்கெனவே இருக்கும் தலைவரை இன்னொரு பணிக்காலம் பணியாற்றும்படி "ஆம்" அல்லது "இல்லை" என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கலாம்.

2) ஏற்கெனவே பணியில் இருக்கும் நியமனங்கள் மறுபடியுமாக தேர்ந்தெடுக்கப்படலாம். இதற்கு இரகசியமாக ஆம்/இல்லை என்ற வாக்கெடுப்பு நடத்தப்படும். இது மறைமாவட்ட கூட்டமைப்பினால் பரிந்துரை செய்யப்பட்டு, மறைமாவட்டக் கண்காணிப்பாளரால் அங்கிகரிக்கப்பட வேண்டும். மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படுபவர் ஆம்/இல்லை என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுக்களைப் பெற வேண்டும்.

3) தலைவரின் பதவிக்கு ஒரே ஒரு பெயர் மற்றும் நியமனம் செய்யப்பட்டிருந்தால் அங்கிருக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுக்களைப் பெற்றிருக்கவேண்டும். இரண்டு நபர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் பெரும்பான்மைப் பார்க்கப்பட வேண்டும். பணிக்காலம் ஒன்று அல்லது இரண்டு சங்க ஆண்டுகளாகும் அல்லது அவர்களுக்கு அடுத்து வரும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் பணியாற்ற வேண்டும். மறைமாவட்ட NMI கூட்டமைப்பும், மறைமாவட்டக் கண்காணிப்பாளரும் பணிக்காலம் எவ்வளவாக இருக்க வேண்டும் என்பதைப் பரிந்துரை செய்வார்கள்.

4) இரண்டு மறைமாவட்டங்கள் சேர்க்கப்படும்போது, அந்த இரண்டு பணியில் இருக்கும் தலைவர்களும், இணைத் தலைவர்களாகப் பணியாற்றுவார்கள். மறைமாவட்ட சங்கத்தினால் இரண்டு இணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டே வருவார்கள். மறைமாவட்ட நிர்வாகக் குழுவானது, மறைமாவட்ட ஆலோசனைக் குழுவோடு சேர்ந்து ஒரே ஒருவரை நியமித்தால் போதும் என்ற முடிவை எடுக்கும்வரை தொடரும். இரண்டு இணைத் தலைவர்களும் ஒரே ஒப்புமையோடு வழிநடத்துவார்கள். மனஸ்தாபம் ஏற்படும் நிலையில், சமாதானம் ஏற்படாவிட்டால், மறைமாவட்ட நிர்வாகக் குழுவின் வாக்கெடுப்பின் மூலமாக அந்தக் காரியத்தின் முடிவு எடுக்கப்படும். NMI கூட்டமைப்புக் கலந்துகொள்ளும் மறைமாவட்ட மாநாடு, மறைமாவட்ட கூட்டங்கள் மற்றும் அகில உலக மறைமாவட்ட சங்கத்தில் ஒரே ஒரு இணைத் தலைவர் மட்டுமே கலந்துகொள்வார். அவர்யார் என்பது மறைமாவட்ட நிர்வாகக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

b. பின்வரும் வழிகளில் ஒரு வழியைக் கொண்டு துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

1) நியமனக் குழுவானது துணைத் தலைவருடைய பதவிக்கு ஒன்று அல்லது இரண்டுபேர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்வார்கள். சில நேரங்களில் மறைமாவட்ட கூட்டமைப்பானது ஏற்கெனவே இருக்கும் தலைவரை இன்னொரு பணிக்காலம் பணியாற்றும்படி ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கலாம்.

2) முழு கூட்டமைப்பிற்கும், கூட்டமைப்பின் குறிப்பிட்ட பதவிகள் கூட்டமைப்பினால் தீர்மானம் செய்யப்படும்.

3) இணை தலைவர்கள் இருக்கும் மறைமாவட்டத்தில், துணைத் தலைவருக்கான தேவையில்லை.

c. செயலாளர் மற்றும் பொருளாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பின்வரும் வழிகளில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:

1) நியமனக் குழுவானது செயலாளர் அல்லது பொருளாளர் பதவிக்கு ஒன்று அல்லது இரண்டுபேர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்வார்கள். சில நேரங்களில் மறைமாவட்ட கூட்டமைப்பானது ஏற்கெனவே இருக்கும் தலைவரை இன்னொரு பணிக்காலம் பணியாற்றும்படி ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கலாம். அல்லது

2) மறைமாவட்டமானது, மறைமாவட்டத்திற்கும் NMI க்கும் ஒரே பொருளாளரை வைத்திருந்தால், அந்த நபரே மறைமாவட்டத்தின் NMI கூட்டமைப்பின் பொருளாளராக இருப்பார். அவர்கள் NMI கூட்டமைப்பில் பதவியின் காரணமாகச் சேர்ந்துவிடுவார்கள். அவர்கள் நேரடியாக வரும் உறுப்பினர்களின் எல்லா உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றிருப்பார். இவற்றில் மாற்றங்களை உள்ளூர் கூட்டமைப்பினால் செய்யமுடியும்.

d. கூடுதல் கூட்டமைப்பு உறுப்பினர்கள்: கூட்டமைப்பைச் சேர்ந்த பிற உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரோடு சேர்த்து ஒன்று அல்லது இரண்டு சங்க ஆண்டுகள் பணியாற்றும்படியாக இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். அவர்களுடைய பொறுப்புகள் கூட்டமைப்பினால் முடிவு செய்யப்படும். நியமன குழு மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளர் இருவரும் சேர்ந்து பணிக்காலம் ஒன்று அல்லது இரண்டு வருடங்களாக இருக்கலாம் என்று முடிவு செய்யலாம். அதற்கு மாறாகக் கூட்டமைப்பின் மற்ற உறுப்பினர்கள் நிர்வாகக் குழுவாலோ அல்லது மறைமாவட்ட கூட்டமைப்பினாலோ எல்லா உரிமைகளையும், தகுதிகளையும் பெற்று நியமிக்கப்படலாம்.

e. வாலிபர்களுக்கான பிரதிநிதிக்கான நியமனங்கள் மறைமாவட்ட நசரேய வாலிபருக்கான குழுவிடமிருந்து பெறப்படலாம்.

3. பயோனீர், படி1 மற்றும் படி2 மறைமாவட்டங்கள்: பயோனீர் படி 1 மற்றும் படி 2 மறைமாவட்டங்களில் ஒரு மறைமாவட்டத் தலைவர் மறைமாவட்ட NMI சங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்படலாம். ஒருவேளை சங்கமே இல்லையென்றால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மறைமாவட்ட NMI தலைவரை நியமிப்பார். அவர் அந்த மறைமாவட்டத்தில் NMI யின் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்வார். தலைவர் தனியாகப் பணியாற்றலாம் அல்லது மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு சேர்ந்து அந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த சபை உறுப்பினர்களைத் தலைவருக்குத் துணையாக இருக்க செய்யலாம்.

4. காலியிடங்கள்

a. தலைவர்: நிர்வாகக் குழுவானது ஒன்று அல்லது இரண்டு பெயர்களை நியமனம் செய்யும். அங்குப் பங்குபெற்றிருக்கும் மறைமாவட்ட கூட்டமைப்பின் பெரும்பான்மை ஓட்டை இரகசிய வாக்குமுறையின் மூலமாகப் பெறுவதே தேர்தல் முறையாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் அடுத்த மறைமாவட்ட சங்கம் முடிவடையும் வரையிலோ அல்லது அடுத்து வருபவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையிலோ பணியாற்றுவார்.

b. கூட்டமைப்பின் பிற உறுப்பினர்கள்: நிர்வாகக் குழுவோ அல்லது மறைமாவட்ட கூட்டமைப்போ சேர்ந்து பணியில் அமர்த்துவதின் மூலமாகக் காலியிடங்களை நிரப்பலாம். புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அடுத்த மறைமாவட்ட சங்கம் முடிவடையும் வரையில் பணியில் இருப்பார்கள் அல்லது அவர்களுக்குப் பின்னால் வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் பணியில் இருப்பார்கள்.

c. ஒரே பொருளாளர்: மறைமாவட்டமானது ஒரே பொருளாளரை மறைமாவட்டத்திற்கும் NMI கூட்டமைப்பிற்கும் கொண்டிருந்தால், அந்தக் காலியிடமானது மறைமாவட்ட ஆலோசனைக் குழுவினால் நிரப்பப்படும்.

## D. கூட்டமைப்பு உறுப்பினர்களின் கடமைகள்

1. தலைவர்

a. அந்த மறைமாவட்டத்தில் NMI யின் நோக்கம் நிறைவேறும்படியாக மறைமாவட்ட கூட்டமைப்பின் செயல்பாடுகளை வழிநடத்தி, செயல்படுத்துதல்

b. மறைமாவட்ட கூட்டமைப்பு, நிர்வாகக்குழு மற்றும் மறைமாவட்ட சங்கத்தின் கூட்டங்களை வழிநடத்துதல்

c. மறைமாவட்ட நிதி குழு அனுமதியளிப்பதற்காக ஆண்டு நிதிநிலை அறிக்கையை உருவாக்குதல்.

d. மறைமாவட்ட NMI சங்கம் மற்றும் அகில உலக NMI கூட்டமைப்பின் பிராந்திய பிரதிநிதியிடம் ஆண்டுதோறும் ஒரு எழுதப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல். தேவைப்படும் நேரத்தில் அகில உலக அருட்பணி பிராந்தியங்களுக்கான NMI ஒருங்கிணைப்பாளரிடமும் சமர்ப்பித்தல்.

e. கூட்டமைப்பின் மற்ற உறுப்பினர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் பணிகளைப் பிரித்துக் கொடுத்தல்.

f. மறைமாவட்ட கூட்டமைப்பில் பதவியின் காரணமாக நேரடி உறுப்பினராக இருத்தல். இதைச் *சட்டநூல்* விதி 239லிருந்து அறிந்துகொள்ளலாம்.

g. வேலையைக் குறித்த வர்ணனையில் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளைச் செய்தல்.

2. துணைத் தலைவர்

a. தலைவர் இல்லாத இடத்தில் அவருடைய பணிகள் அனைத்தையும் செய்தல்

b. மறைமாவட்ட NMI கூட்டமைப்பு சொல்லும் இடங்களில் பணியாற்றுதல்

c. வேலையைக் குறித்த வர்ணனையில் கொடுக்கப்பட்டிருக்கும் பிற வேலைகளைச் செய்தல் அல்லது தேவைக்கு ஏற்ப மறைமாவட்ட தலைவர் சொல்லும் வேலைகளைச் செய்தல்.

3. செயலாளர்

a. எல்லாக் கூட்டங்களுக்குமான பொழிப்புகளைப் பதிவு செய்தல்

b. தலைவர் கேட்கும்போது பின்வரும் காரியங்களில் உதவியாக இருத்தல்

1) உள்ளூர் NMI தலைவர்களுக்கு அறிக்கைக்கான படிவங்களை ஆண்டுதோறும் அனுப்புதல்.

2) புள்ளிவிவரங்களைக் கொண்ட பதிவுகளை உருவாக்கி, மறைமாவட்ட தலைவர், அகில உலக NMI இயக்குனர், அகில உலக கூட்டமைப்பின் பிரதிநிதி மற்றும் தேவைப்படும் இடங்களில் அகில உலக அருட்பணி பிராந்தியங்களின் NMI ஒருங்கிணைப்பாளரிடம் சமர்ப்பித்தல்.

c. வேலையைக் குறித்த வர்ணனையில் கொடுக்கப்பட்டிருக்கும் பிற வேலைகளைச் செய்தல் அல்லது தேவைக்கு ஏற்ப மறைமாவட்ட தலைவர் சொல்லும் வேலைகளைச் செய்தல்.

4. பொருளாளர்

a. சேர்க்கப்படும் நிதி மற்றும் செலவிடப்படும் நிதிக்கான சரியான கணக்கு வழக்குகளை வைத்திருத்தல்

b. குறிக்கப்பட்டிருக்கும் பொருளாளர்களிடம் பணத்தைச் சரியாக அனுப்புதல்

c. மறைமாவட்ட கூட்டமைப்பிற்கு பிரிவுகளைக்கொண்ட அறிக்கையை அடிக்கடி சமர்ப்பித்தல் மற்றும் மறைமாவட்ட சங்கத்திற்கு ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தல்.

d. மறைமாவட்ட NMI பொருளாளரின் புத்தகங்கள் தணிக்கை செய்யப்படும் படியாகக் குறிக்கப்பட்டிருக்கும் மறைமாவட்ட அதிகாரியிடம் சமர்ப்பித்தல்.

e. வேலையைக் குறித்த வர்ணனையில் கொடுக்கப்பட்டிருக்கும் பிற வேலைகளைச் செய்தல் அல்லது தேவைக்கு ஏற்ப மறைமாவட்ட தலைவர் சொல்லும் வேலைகளைச் செய்தல்.

5. நிர்வாக கூட்டமைப்பு
   a. கூடுதல் மறைமாவட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களைத் தேவைக்கேற்பவும், காலியிடங்களை நிரப்பவும் நியமித்தல்.
   b. கூட்டமைப்பின் கூட்டங்களுக்கு இடையே பணிகளைச் சரிவர செய்யப்படுவதை உறுதி செய்தல்
   c. ஆண்டு சங்கங்களுக்கு இடையே தலைவர் பதவிக்கு காலியிடம் வரும்போது ஒன்று அல்லது இரண்டு பேர்களின்பெயர்களை நியமனம் செய்தல்.
6. கூட்டமைப்பின் பிற உறுப்பினர்கள்
   a. மறைமாவட்ட தலைவர் மற்றும் மறைமாவட்ட கூட்டமைப்பு கேட்டுக்கொள்ளும் பணிகளைச் செய்தல்.

## பகுதி 3: அகில உலக கூட்டமைப்பு

## A. நோக்கம்

அகில உலக கூட்டமைப்பானது இந்த NMI ஒழுங்கமைப்பின் நோக்கமான நசரேயத் திருச்சபையை அருட்பணிக்காகத் திரட்டுவது என்பதைப் பரப்பும். இதை 1) ஜெபித்தல், 2) கொடுத்தல், 3) கற்பித்தல் மற்றும் 4) சிறுவர்கள் மற்றும் வாலிபர்களை இந்தச் சபைப்பிரிவு முழுவதிலும் பிராந்தியங்கள், களங்கள், மறைமாவட்டங்கள் மற்றும் உள்ளூர் சபைகளின் கூட்டமைப்பின் மூலமாகச் செய்யலாம்.

## B. ஆக்கம்

1. அகில உலக NMI கூட்டமைப்பானது அகில உலக NMI தலைவர், அகில உலக NMI இயக்குனர், நசரேயத் திருச்சபையின் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்து ஒரு பிரதிநிதி மற்றும் அகில உலக அருட்பணியின் இயக்குனர்.
2. அகில உலக NMI நிர்வாகக் குழுவானது அகில உலக NMI தலைவர், அகில உலக NMI இயக்குனர், அகில உலக NMI துணைத் தலைவர், அகில உலக NMI செயலாளர், மற்றொரு கூட்டமைப்பு உறுப்பினர் மற்றும் அகில உலக அருட்பணியின் இயக்குனர் ஆகியோரை உள்ளடக்கியிருக்கிறது.

## C. நியமனங்கள், தேர்தல்கள் மற்றும் காலியிடங்கள்

1. அகில உலக NMI இயக்குனரின் நியமனங்கள் மற்றும் தேர்தல்
   a. அகில உலக NMI நிர்வாகக் குழு மற்றும் அதிகாரத்தில் உள்ள பொதுக் காண்காணிப்பாளர் ஆகியோர் அகில உலக NMI இயக்குனரின் பதவிக்கு ஏற்றவாறு இருக்கும் நபர்களைத் தேடும் தேடுதல் கூட்டமாக இருப்பார்கள். இரண்டு சாத்தியமான விண்ணப்பத்தாரர்கள் பொது

நிர்வாகச் சபையைச் சேர்ந்த அகில உலக அருட்பணி கூட்டமைப்பிடம் சமர்ப்பிக்கப்படும்

b. பொது நிர்வாகச் சபையைச் சார்ந்த அகில உலக அருட்பணி கூட்டமானது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரோடு சேர்ந்து, சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பெயர்களைப் பார்த்து, கடைசியில் இரண்டு பெயர்கள் மட்டுமே பொதுக் கண்காணிப்பாளர்களின் குழு தேர்ந்தெடுக்கும்படியாக பரிந்துரை செய்யும்.

c. பொது நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அகில உலக அருட்பணி கூட்டமைப்பானது சமர்ப்பிற்கும் பெயர்களில் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பொதுக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழுவானது அகில உலக NMI இயக்குனரைத் தேர்ந்தெடுக்கும்.

2. அகில உலக NMI தலைவரின் நியமனங்கள் மற்றும் தேர்தல்

a. நியமன குழுவானது 6,7, அல்லது 8 நபர்களைக் கொண்டு, அகில உலக NMI இயக்குனரைத் தலைவராகக் கொண்டிருக்கும். இந்தக் குழுவானது கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பில் இல்லாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அவர்கள் அகில உலக NMI யின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். அவர்களை நிர்வாகக் குழுவானது பணியில் அமர்த்தும்.

b. அகில உலகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி இந்தக் குழுவானது ஒன்று அல்லது இரண்டு பேர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்யும். இந்த நியமனங்கள் பொதுக் கண்காணிப்பாளர்களின் செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்கள் பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது.

c. இந்த நியமனங்களிலிருந்து அகில உலக NMI சங்கமானது ஒரு அகில உலக NMI தலைவரைப் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக ஒன்று அல்லது இரண்டு நியமனங்கள் இருக்கும்போது தேர்ந்தெடுக்கும். ஒரே ஒரு நியமனம் மட்டும் இருந்தால் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுக்கள் பெற வேண்டும்.

d. அகில உலக தலைவர் நான்கு ஆண்டுகள் பணியில் இருப்பார். ஒரு பொது மாநாடு முடிந்து அடுத்த பொது மாநாடு முடியும் வரையிலும், அல்லது அவருக்கு அடுத்தவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் பணியில் இருப்பார்.

e. அகில உலக தலைவர் மூன்று முறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றலாம். ஒரு பணிக்காலம் என்பது நான்கு ஆண்டுகள். அகில உலக தலைவரின் பதவியில் ஏற்படும் காலியிடத்தை நிரப்புவதற்காக ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்படும்போது, அவர் மூன்று முழு பணிக்காலங்கள் பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

3. கூட்டமைப்பின் உறுப்பினர்களின் நியமனங்கள் மற்றும் தேர்தல்

a. ஒவ்வொரு மறைமாவட்ட NMI கூட்டமைப்பானது ஒன்று அல்லது இரண்டு பெயர்களை அகில உலக NMI அலுவலகத்தில்

தன்னுடைய பிராந்தியத்திலிருந்து பிராந்தியத்தின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக நியமனம் செய்யும்.

1) இந்த நபர்கள் அவர்கள் பிரதிநிதியாக வந்திருக்கும் பிராந்தியத்தின் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாகவும், அந்த இடத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

2) சபை உறுப்பினராக இருக்கும் பிராந்தியத்திலிருந்து வேறு பிராந்தியத்தில் வீடு இருப்பவர்கள் இந்த நியமனத்தில் பங்குபெற முடியாது.

3) பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் நியமனத்திற்குத் தகுதி பெற்றவர்கள் கிடையாது.

b. நியமனத்தில் உள்ள பெயர்களிலிருந்து இரகசிய வாக்கெடுப்பின் இரண்டு பெயர்கள் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் என்று அகில உலக NMI சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்படும். அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற இரண்டு பேர் நியமனம் செய்யப்பட்டவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனாலும் இந்த இரண்டு பேரும் ஒரே மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது. இப்படி நடக்கும்போது, இரண்டாவது நிலையில் இருப்பவர் அடுத்து இருக்கும் மூன்றாவது ஆனால் வேறு மறைமாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கும் நபர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

c. கூட்டத்தில் இருக்கும் பிராந்தியமானது அகில உலக கூட்டமைப்பில் தன்னுடைய பிரதிநிதியாக இருக்கும்படி ஒரு நபரைப் பெரும்பான்மை வாக்கின் மூலமாகத் தேர்ந்தெடுக்கும்.

d. கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நான்கு ஆண்டு காலம் பணியில் இருப்பார்கள். பொது மாநாட்டின் முடிவிலிருந்து, அடுத்த பொது மாநாட்டின் முடிவுவரை இருக்கும் அல்லது அந்தப் பதவிக்கான அடுத்த நபர் தேர்ந்தெடுக்கப்படும்வரை இருப்பார்கள்.

e. தொடர்ந்து மூன்று முறை முழு பணிக்காலமும் அவர்கள் பணியாற்றலாம். ஒரு பணிக்காலம் என்பது நான்கு வருடங்களைக் கொண்டது. ஒரு நபர் அகில உலக கூட்டமைப்பின் உறுப்பினர் காலியிடத்தை நிரப்பும்படியாக இருக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டால், அந்த நபர் தொடர்ந்து மூன்று முறை முழு பணிக்காலமும் இருப்பதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறார். ஒரு முழு பணிக்காலமும் பணியாற்றாவிட்டாலும், பணியாற்றுவதற்காக அடுத்த முறையும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

4. அகில உலக NMI நிர்வாகக் குழுவின் நியமனங்கள் மற்றும் தேர்தல்

a. அகில உலக NMI கூட்டமைப்பானது பொது மாநாடு துவங்குவதற்கு முன்பாக முதல் சந்திப்பைக் கூட்டி, ஒரு துணைத் தலைவர், செயலாளர் மற்றும் கூடுதலாக அகில உலக NMI நிர்வாகக் குழுவிற்கு ஒரு உறுப்பினர் என்று நியமித்துத் தேர்ந்தெடுத்துவிடும்.

b. தேர்தல் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அங்கிருப்பவர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதின் மூலமாக வெற்றி கணக்கெடுக்கப்படும்.

5. பொது நிர்வாகக் குழுவிற்கு NMI பிரதிநிதியை நியமனம் செய்தல் மற்றும் தேர்தல்

a. அகில உலக NMI கூட்டமைப்பானது அதைச் சேர்ந்த ஒரு உறுப்பினரை நசரேயத் திருச்சபையின் பொது நிர்வாகக் குழுவில் NMI யின் பிரதிநிதியாக இருக்கும்படியாக நியமனம் செய்யும்.

b. பொது மாநாடு இந்த NMI பிரதிநிதியை இரகசிய வாக்கெடுப்பின் மூ லமாக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கும்.

6. காலியிடங்கள்

a. அகில உலக NMI தலைவருடைய பதவில் அகில உலக NMI சங்கங்களுக்கு இடையே காலியிடம் ஏற்பட்டால், புதிய அகில உலக தலைவர் அகில உலக கூட்டமைப்பின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று நிர்வாகக் குழுவினால் தேர்தெடுக்கப்பட்ட நியமனவாதிகளிலிருந்து அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரோடு கலந்தாலோசித்து தேர்ந்தெடுக்கப்படுவார். அடுத்த பொது மாநாடு முடியும் வரையிலும் இந்த நபர் அகில உலக தலைவருடைய பணிகளைச் செய்வார்.

b. அகில உலக NMI நிர்வாகக் குழுவில் அகில உலக NMI சங்கங்களுக்கு இடையே காலியிடம் ஏற்படும்போது, அகிலு உலக கூட்டமைப்பானது ஒன்று அல்லது இரண்டு பேரை நியமனம் செய்யும். அந்தக் காலியிடமானது அகில உலக NMI கூட்டமைப்பின் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகப் பெரும்பான்மை வாக்கைப் பெற்று நிரப்பப்படும்.

c. அகில உலக NMI கூட்டமைப்பில் அகில உலக NMI சங்கங்களுக்கு இடையே காலியிடம் ஏற்படும்போது, அந்தப் பிராந்தியத்தைச் சார்ந்த ஒவ்வொரு மறைமாவட்ட நிர்வாகக் குழுவும் அந்தப் பகுதியிலிருந்து ஒருவருடைய பெயரை அகில உலக NMI நிர்வாகக் குழுவிடம் கொடுக்கக் கேட்கப்படும். இந்தப் பெயர்களிலிருந்து, நிர்வாகக் குழுவானது இரண்டு பெயர்களை நியமனம் செய்யும். பின்னர் இந்தக் காலியிடமானது அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த NMI மறைமாவட்ட தலைவர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும். ஒரு காலியிடத்தை நிரப்புவதற்கு தேர்தல் வைக்கவேண்டும் என்ற முடிவானது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஆலோசனையோடு அகில உலக NMI நிர்வாகக் கூட்டத்தினால் முடிவு செய்யப்படும்.

d. அகில உலக NMI இயக்குனரின் பதவியில் காலியிடம் ஏற்படும்போது, அகில உலக இயக்குனருக்குப் பின்பற்றப்படும் அதே செயல்முறைதான் இங்கும் செயல்படுத்தப்பட வேண்டும் (பார்க்க கோட்பாடு 5, பகுதி 3.C.1).

e. பொது நிர்வாகக் குழுவிற்கான NMI பிரதிநிதியின் பணியிடத்தில் காலியிடம் ஏற்படும்போது, அகில உலக NMI நிர்வாகக்குழுவானது அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஆலோசனையைக் கேட்டு, பொது மறைமாவட்டக் கண்காணிப்பாளர்களின் குழுவின் அங்கீகாரத்தை வாங்கி ஒருவரை நியமனம் செய்யும். அகில உலக NMI கூட்டமைப்பானது அந்தப் பொது நிர்வாகக் குழுவின் பிரதிநிதியைப் பெரும்பான்மை ஓட்டுக்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கும்.

## D. கடமைகள்

1. அகில உலக தலைவர்
   a. அகில உலக கூட்டமைப்பு, நிர்வாகக் குழு மற்றும் அகில உலக NMI சங்கத்தின் கூட்டங்களுக்குத் தலைவராக இருப்பார்.
   b. பொது மாநாட்டில் பதவியின் காரணமாக உறுப்பினராக இருத்தல்.
   c. தேவைக்கு ஏற்ப கூட்டமைப்பின் பிற உறுப்பினர்களுக்குப் பணிகளைப் பகிர்ந்தளித்தல்.
   d. வேலையைக் குறித்த வர்ணணையில் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு பணிகளையும் செய்வார்.
2. துணைத் தலைவர்
   a. தலைவர் இல்லாத நேரத்தில் தலைவரின் கடமைகளைச் செய்வார்.
   b. வேலையைக் குறித்த வர்ணனையில் கொடுக்கப்பட்டிருக்கும் பணிகளையும் அல்லது அகில உலக தலைவரால் தேவைக்கு ஏற்ப கொடுக்கப்படும் வேலைகளையும் செய்வார்.
3. நிர்வாகக் குழு: கூட்டமைப்பின் கூட்டங்களுக்கு இடையே பணியைச் சரியாக நடக்க செய்கிறது.
4. அகில உலக கூட்டமைப்பின் உறுப்பினர்
   a. அகில உலக NMI தலைவரோடும் மற்றும் அகில உலக NMI இயக்குனரோடும் சேர்ந்து NMI யின் நோக்கத்தை நிறைவேற்ற முற்படுதல்.
   b. அவர் பிரதிநிதியாக இருக்கும் பிராந்தியத்தில் NMI யை ஊக்குவித்தல்.
   c. ஒவ்வொரு அகில உலக NMI கூட்டமைப்பின் கூடுகையிலும் அந்தப் பிராந்தியத்தின் NMI பணியைக் குறித்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.
   d. பிராந்திய பிரதிநிதித்துவம் சார்பாகப் பொது மாநாடு செயல்படுத்தியிருக்கும் சட்ட திருத்தங்களைச் செயல்படுத்துதல்.
   e. வேலையைக் குறித்த வர்ணனையில் கொடுக்கப்பட்டிருக்கும் பணிகளையும் அல்லது அகில உலக தலைவரால் தேவைக்கு ஏற்ப கொடுக்கப்படும் வேலைகளைச் செய்வார்.
5. அகில உலக இயக்குனர்
   a. NMI யின் நிர்வாக அதிகாரியாகச் செயல்படுகிறார்.

b. அகில உலக கூட்டமைப்பின் ஒத்துழைப்போடு இந்த உலகம் முழுவதும் இருக்கும் மறைமாவட்டங்களில் NMI குறித்த ஆர்வத்தைத் தூண்டி ஊழியத்தை மேம்படுத்துகிறார்.
c. NMI யின் கைப்பிரதியையும், அமைப்பு முறைமையையும் அர்த்தம் காணுகிறார்.
d. அகில உலக NMI அலுவலகத்தின் பணியாளர்கள் மற்றும் பணிகளை இயக்குகிறார்.
e. எல்லா NMI பதிப்புகளுக்கும் தலைமைப் பதிப்பாசிரியராக இருக்கிறார்.
f. அகில உலக கூட்டமைப்பு, அகில உலக அருட்பணி கூட்டமைப்பு மற்றும் பொது நிர்வாகக் குழுவிற்கு ஆண்டுதோறும் நிதி மற்றும் புள்ளியியல் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறார்.
g. அகில உலக தலைவரோடு சேர்ந்து, அகில உலக கூட்டமைப்போடு கூட்டணி அமைத்து அகில உலக சங்கத்தை ஒழுங்குப்படுத்தி அதனுடைய நிகழ்ச்சிகளை இயக்குகிறார்.
h. அகில உலக சங்கத்தின் அறிக்கையை, நிதி மற்றும் புள்ளியியல், அகில உலக அருட்பணி அலுவலகத்தின் மூலமாகப் பொது மாநாட்டிற்காக ஒரு சுருக்கமான வகையில் ஏற்படுத்துகிறார்.
i. பொது மாநாட்டில் தன்னுடைய பதவியின் காரணமாக உறுப்பினராக இருக்கிறார்.
j. வேலையைக்குறித்த வர்ணணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மற்ற பணிகளையும் செய்கிறார்.

## கோட்பாடு 6. கூட்டங்கள்

### பகுதி 1: மின்னணு கூட்டங்கள் மற்றும் தொடர்பு

### A. கூட்டங்கள்

எல்லா NMI சங்கங்கள், கூட்டமைப்புகள், கூட்டங்கள், துணை கூட்டங்கள் மற்றும் செயற்குழுக்கள் அவர்களுடைய உறுப்பினர்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பேசுவது கேட்டு, எல்லோரும் கூட்டத்தில் கலந்துகொள்ள முடிந்தால், தொலைபேசி மூலமாகவோ அல்லது பிற மின்னணு தொடர்பு சாதனங்களின் வழியாக சந்தித்துக்கொள்வதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

### B. தொடர்பு

1. உறுப்பினர்கள் வேறு விதமாகக் கூறினால் ஒழிய, இந்த அமைப்பு முறைமையின் எல்லாத் தொடர்புகளும் மின்னணு வாயிலாகவே அனுப்பப்பட வேண்டும்.

## பகுதி 2: உள்ளூர் செயல்கள் மற்றும் கூட்டங்கள்

### A. தொடர்ந்து நிகழும் செயல்கள்

1. அருட்ப்பணிகளைக் குறித்த தகவல்களை அறிந்துகொள்ளவும், ஊக்கத்திற்காகவும், ஜெபத்திற்காகவும் தொடர்ந்து பல அருட்பணி செயல்கள் மாதந்தோறும் நடந்துகொண்டே இருக்கும்.
2. இந்தச் செயல்கள் கூட்டங்களாகவோ, அருட்பணி ஆராதனைகளாகவோ, அருட்பணி பிரசங்கிமார், அருட்பணியைக் குறித்த பாடங்கள், அருட்பணி செயல்முறைகள் மற்றும் நிகழ்வுகள், அருட்பணியின் முக்கிய நிகழ்வுகள், NMI எடுத்துக்காட்ட விரும்பும் காரியங்கள் ஆகிவையாக இருக்கலாம்.
3. போதகர், NMI தலைவர் மற்றும் கூட்டமைப்பானது உள்ளூர் சபையில் அருட்பணி கல்வி மற்றும் பங்களிப்புகளைஇணக்கத்தோடு திட்டமிடுவார்கள்.
4. சபைகளை நிலைநிறுத்துதல், மற்றும் சபை சார்ந்த ஊழியங்களில் அந்தச் சபையின் மறைமாவட்டத்தால் நியமிக்கப்பட்ட தலைவர் அந்த உள்ளூர் சபையில் அருட்பணி கல்வியும், பங்களிப்பும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று ஊக்கமளிக்கப்படுகிறார்கள்.

### B. ஆண்டு கூட்டம்

1. மறைமாவட்ட சங்கக் கூடுகைக்கு 30 நாட்களுக்கு முன்னதாகவே ஆண்டு கூட்டம் நடத்தப்பட்டுவிட வேண்டும்.
2. உள்ளூர் கூட்டமைப்பில் வாக்களித்தல் மற்றும் தேர்தல் ஆகியவை 15 மற்றும் அதற்கும் மேல் இருக்கும் NMI உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

### C. கூட்டமைப்பின் கூட்டம்

1. உள்ளூர் கூட்டமைப்பானது ஒரு ஆண்டிற்குக் குறைந்தது நான்கு முறையாவது சந்திக்க வேண்டும். அவர்கள் திட்டமிட, அறிக்கையிட, மதிப்பீடு செய்ய, தகவல்களைப் பரிமாறிக்கொள்ள, ஊக்குவிக்க மற்றும் உள்ளூர் ஒழுங்கமைப்பின் பணிகளைச் செய்ய சந்திக்கிறார்கள். அதோடு சேர்த்து, விசேஷமான கூட்டங்களை தலைவர் கூட்டலாம். கூட்டமைப்பு உறுப்பினர்களின் பெரும்பாலானவர்கள் ஒரு கூட்டமாக இருப்பார்கள்.

## பகுதி 3: மறைமாவட்ட கூட்டங்கள்

### A. சங்கம்

1. ஆண்டுதோறும், ஜெபிக்க, தகவல்களைப் பரிமாறிக்கொள்ள, திட்டங்களைச் சமர்ப்பிக்க மற்றும் இந்த ஒழுங்குமுறையைச் சார்ந்த பணிகளைச் செய்வதற்கு ஒரு சங்கம் நடைபெறும்.

2. இந்தச் சங்கம் நடைபெறும் நேரம் மற்றும் இடத்தை மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் ஆலோசனையோடு மறைமாவட்ட கூட்டமைப்பு முடிவு செய்யும்.
3. உறுப்பினர்கள்
    a. அந்தந்த மறைமாவட்டத்தின் உறுப்பினர்கள் மட்டுமே பதவியின் நிமித்தமாக உறுப்பினர்களாகவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகவோ இருப்பார்கள்.
    b. பதவியின் நிமித்தமாக இந்தச் சங்கத்தில் மறைமாவட்ட NMI கூட்டமைப்பு, மறைமாவட்டக் கண்காணிப்பாளர், பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் மற்றும் உள்ளூர் திருச்சபைகளின் முழுநேர ஊதியம் வாங்கும் துணை போதகர்கள் இருப்பார்கள். மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் சாமானிய உறுப்பினர்கள், முடியப்போகும் மாநாடு வருடத்திற்கான உள்ளூர் NMI தலைவர்கள் மற்றும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் NMI தலைவர்கள் அல்லது அவர் கலந்துகொள்ள முடியவில்லையென்றால் துணைத் தலைவர்கள். அகில உலக NMI கூட்டமைப்பின் உறுப்பினர், ஓய்வுபெற்ற ஆனால் பொறுப்பைப் பெற்றிருக்கும் ஊழியர்கள், ஓய்வுபெற்ற அருட்பணியாளர்கள், அந்த ஊரில் அருட்பணியில் ஈடுபட்டிருக்கும் அருட்பணியாளர்கள், அருட்பணியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள், அந்த மறைமாவட்டத்தில் தங்களுடைய உறுப்பினர் உரிமையை வைத்திருக்கும் முன்னாள் மறைமாவட்ட தலைவர்கள்.
    c. ஒவ்வொரு உள்ளூர் சபை அல்லது சபை சார்ந்த அருட்பணிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், NMI உறுப்பினர்களாக இருப்பார்கள் (15 வயது மற்றும் அதற்கும் மேல் இருக்க வேண்டும்). தேர்ந்தெடுக்கக்கூடிய அதிகப்படியான பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது பின்வரும் கணக்கின்படி கணக்கிடப்படுகிறது: 25 உறுப்பினர்கள் அல்லது அதற்கும் கீழ் இருக்கும் உள்ளூர் NMI லிருந்து இரண்டு பிரதிநிதிகள், ஒவ்வொரு கூடுதல் 25 உறுப்பினருக்கும் கூடுதலாக ஒரு பிரதிநிதி அல்லது அதிகப்படியான பகுதி மீதமிருப்பவருக்கு ஒன்று. உறுப்பினர் சேர்க்கை என்பது உள்ளூர் NMI ஆண்டு கூட்டத்தில் தேர்தல் நடைபெறும்போது சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் கணக்கிடப்படும்.
4. அங்கு பங்குபெறும் பிரதிநிதிகள் ஒரு கூட்டமாக இருப்பார்கள்.

## B. கூட்டமைப்பு

1. மறைமாவட்ட கூட்டமைப்பானது வருடத்திற்கு இரண்டு முறையாவது சந்தித்து ஆண்டுதோறும் நிகழும் மறைமாவட்ட சங்கத்திற்கு இடையேயான பணிகளை முடித்துக்கொள்ளும். அதோடு சேர்த்து, விசேஷமான கூட்டங்களையும் தலைவர் கூட்டுவார். கூட்டமைப்பு உறுப்பினர்களின் பெரும்பாலானவர்கள் ஒரு கூட்டமாக இருப்பார்கள்.

## பகுதி 4: பொதுக் கூட்டங்கள்

### A. சங்கம்

1. பொது மாநாட்டிற்கு முன்பாக அகில உலக நசரேய அருட்பணி இயக்கத்தின் சங்கக்கூடுகை நடைபெறும். இதில் ஜெபிக்க, தகவல்களைப் பரிமாறிக்கொள்ள, திட்டங்களைச் சமர்ப்பிக்க மற்றும் இந்த ஒழுங்குமுறையைச் சார்ந்த பணிகளைச் செய்வது நடைபெறும். கலந்துகொண்டவர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களே கூட்டமாகக் கருதப்படுவார்கள்.
2. இந்தச் சங்கக் கூடுகை நடைபெறும் இடமும் நேரமும் அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளரின் ஆலோசனையோடு அகில உலக கூட்டமைப்பானது முடிவு செய்யும். அகில உலக கூட்டமைப்பானது இடத்தை உறுதி செய்யும்.
3. உறுப்பினர்கள்
    a. அகில உலக சங்கத்தில் பதவியின் காரணமாக நேரடியாகக் கலந்துகொள்பவர்கள் அகில உலக கூட்டமைப்பின் உறுப்பினர்கள், மறைமாவட்ட NMI தலைவர்கள். அந்த மறைமாவட்டத்தின் ஒழுங்குமுறையின் நிலை என்னவாக இருந்தாலும் பரவாயில்லை அல்லது மறைமாவட்ட தலைவரால் கலந்துகொள்ள முடியவில்லையென்றால், மறைமாவட்டத்தின் துணைத் தலைவர் எல்லா உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பெற்று கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்.
    b. அகில உலக சங்கத்திற்கான பிரதிநிதிகள் மற்றும் மாற்று நபர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக மறைமாவட்ட சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாற்று நபர்கள் தனியாக ஒரு இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். அல்லது மறைமாவட்ட கூட்டமைப்பின் பரிந்துரையின் பேரில் பிரதிநிதிகளைப் போன்ற அதே வாக்கெடுப்பைப் பெறலாம். பிரதிநிதிகளும், மாற்று நபர்களும் மறைமாவட்ட கூட்டமைப்பின் பரிந்துரையின் பேரில் மறைமவட்ட சங்கத்தின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று வரிசைப் படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (எத்தனை பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் நடைபெறும் நேரத்தைக் குறித்து தெரிந்துகொள்ள 3.C. பாருங்கள்).
    c. அகில உலக NMI சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பின்வரும் கணக்கின்படி கணக்கிடப்படுகிறார்கள்: ஒவ்வொரு படி 3 மற்றும் 2 மறைமாவட்டங்களிருந்தும் 1000 அல்லது அதற்கும் குறைவான NMI உறுப்பினர்களைக் கொண்ட துணை உறுப்பினர்கள் சேர்க்காமல் மறைமாவட்டத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் வர வேண்டும். ஒவ்வொரு 700 உறுப்பினருக்கும் 1 கூடுதல் பிரதிநிதி சேர்க்கப்படலாம். அல்லது 700இல் பெரிய பகுதியாக இருக்க வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல் நடக்கும்

மறைமாவட்ட சங்கத்தில் கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் கணக்கிடப்படும். மறைமாவட்ட NMI நியமன குழுவானது இந்தப் பிரதிநிதிகளை நியமிக்கும். (மறைமாவட்ட படிகளைக் குறித்துப் புரிந்துகொள்ள, பார்க்க சட்டநூல் விதி 200.2.). மறைமாவட்ட NMI கூட்டமைப்பானது எத்தனை பேர் மாற்று பிரதிநிதிகளாக மறைமாவட்ட சங்கம் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதை முடிவு செய்யும்.

d. ஒவ்வொரு அகில உலக பகுதி 50 அல்லது அதற்கும் குறைவான எண்ணிக்கைக்கு ஒரு அகில உலக நியமிக்கப்பட்ட அருட்பணி பிரதிநிதி. 51க்கும் மேற்பட்ட அகில உலக பகுதிகளைக் கொண்ட பகுதிகளிலிருந்து இரண்டு அருட்பணி பிரதிநிதிகள் வரலாம். அல்லது இன்னும் அதிகமான அகில உலக அருட்பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, அகில உலக NMI இயக்குனரின் அலுவலகத்திலிருந்து இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

e. அகில உலக சங்கம் நடைபெற்று 16 மாதங்களுக்கு உள்ளாகவோ அல்லது பயணம் செய்ய விசா எளிதில் கிடைக்காத இடங்களில் 24 மாதங்களுக்குள்ளோ பிரதிநிதிகள் மறைமாவட்ட சங்கத்தின் மூலமாக இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

f. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அகில உலக சங்கம் நடைபெறும் நேரத்தில் தேர்தல் நடைபெற்றபோது இருந்த மறைமாவட்டத்தில்தான் தங்கியிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அந்த மறைமாவட்டத்திலிருந்து சென்றுவிட்டால், முன்னாள் மறைமாவட்டத்திற்குப் பிரதிநிதியாகச் செல்லும் சிலாக்கியத்தை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். சபை உறுப்பினராக இருக்கும் சபையின் மறைமாவட்டத்தில் இல்லாமல் வேறு மறைமாவட்டத்தில் வீடு இருந்தாலும் அந்தப் பிரதிநிதிக்கு இது பொருந்தாது.

g. மறைமாவட்ட தலைவர், மறைமாவட்ட துணைத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுப் பிரதிநிதி அல்லது நியமிக்கப்பட்ட மாற்றுப் பிரதிநிதி ஆகியோர் அகில உலக சங்கத்தில் கலந்துகொள்ள முடியாமல் போனால், இந்த உண்மை அகில உலக சங்கத்திற்கு முன்பாக நடைபெறும் மறைமாவட்ட சங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டால், மாற்று பிரதிநிதிகளை மறைமாவட்ட NMI கூட்டமைப்போ அல்லது மறைமாவட்ட கூட்டமைப்பில்லையென்றால், மறைமாவட்ட தலைவர் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற்று தேர்ந்தெடுக்கலாம்.

## B. கூட்டமைப்பின் கூட்டங்கள்

அகில உலக NMI கூட்டமைப்பானது இந்த நாலு வருடங்களில் வருடாவருடம் சந்திக்க வேண்டும். அங்கு அந்த ஒழுங்கமைப்பின் பணிகள் செய்யப்படும். அந்த அலுவலகத்தில் இருக்கும் பெரும்பான்மையான உறுப்பினர்களே கூட்டமாக இருப்பார்கள்.

# கோட்பாடு 7. நிதி

## பகுதி 1: உள்ளூர் சபைகளால் திரட்டப்படுவது

### A. உலக அருட்பணி நிதி

1. உலக அருட்பணி நிதிக்காகத் (WEF) திரட்டப்படும் தொகையானது பொது பொருளாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. உலக அருட்பணி நிதியானது பின்வரும் கணக்கை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது: ஒவ்வொரு சபையும் தங்களுடைய சம்பாத்தியத்திலிருந்து 5.5 சதவீதத்தைக் கொடுக்க வேண்டும்.
3. சபைகள் இந்த உலக அருட்பணி நிதியைப் பல வழிகளில் செலுத்தலாம், விசுவாச வாக்கு, ஈஸ்டர், நன்றி காணிக்கை, தொடர்ந்து செலுத்தப்படும் WEF நிதி, ஜெபம் மற்றும் உபவாச காணிக்கைகள்.

### B. அனுமதியளிக்கப்பட்ட அருட்பணி விசேஷ காணிக்கை

1. உலக அருட்பணி நிதியில்லாமலும், அதோடு சேர்த்தும் அனுமதியளிக்கப்பட்ட அருட்பணி விசேஷ காணிக்கை வழங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.
2. அகில உலக நசரேய அருட்பணி சென்டரில் அதற்குரிய நபர்களினால் கூடுதல் அனுமதியளிக்கப்பட்ட அருட்பணி விசேஷ காணிக்கை வழங்குவதற்கான அங்கீகாரம் கொடுக்கப்படும்.
3. அகில உலக NMI கூட்டமைப்பானது NMI மூலமாக அகில உலக நிலையில் திரட்டப்படும் எல்லா அனுமதியளிக்கப்பட்ட அருட்பணி விசேஷ காணிக்கைகளை அங்கீகரிக்கிறது.

### C. விசேஷமான நிதிகள்

உள்ளூர் அல்லது மறைமாவட்ட சபையினால் பெறப்பட்ட உலக அருட்பணி நிதி மற்றும் அனுமதியளிக்கப்பட்ட அருட்பணி விசேஷ காணிக்கை ஆகியவை நசரேய அருட்பணிக்கு அல்லாமல் வேறு எந்த உள்ளூர் அல்லது மறைமாவட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது.

### D. உள்ளூர் செலவுகள்

உள்ளூர் சபையில் NMI செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியை உள்ளூர் சபை நிர்வாகக் குழுவானது நிர்ணயிக்க வேண்டும். அதில் உள்ளூர் தலைமைத்துவம் செய்யும் செலவுகளைத் திரும்பக் கொடுப்பதும் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

## பகுதி 2: மறைமாவட்டத்தினால் திரட்டப்படுவது

மறைமாவட்ட நிதி கூட்டமைப்பானது அந்த மறைமாவட்டத்தில் NMI செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யும்.

அதில் மறைமாவட்ட தலைமைத்துவம் செய்யும் செலவுகளைத் திரும்பக் கொடுப்பதும் உள்ளடங்கியிருக்கும்.

**பகுதி 3: சம்பளம்**

NMI ஊழியம் என்பது ஒரு சபையினால் அன்பின் காரணமாகச் செய்யப்பட வேண்டும். எந்த நிலையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது – உள்ளூர், மறைமாவட்ட, அகில உலக இயக்குனருக்கு மட்டும் சம்பளம் வழங்கப்படும். அவர் நசரேயத் திருச்சபையின் குழுமத்தினால் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

உள்ளூர், மறைமாவட்ட, அகில உலகம் என்று எல்லா நிலையில் இருக்கும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் செய்யும் செலவுகள் அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

## கோட்பாடு 8. கொள்கைகள் மற்றும் செயல்முறைகள்

அகில உலக NMI கூட்டமைப்பானது NMI அமைப்பு முறைமை மற்றும் கையேட்டில் சேர்த்துக்கொள்வதற்காகக் கூடுதல் கொள்கைகளையும் செயல்முறைகளையும் உருவாக்கும்.

## கோட்பாடு 9. அரசாங்க அதிகாரம்

Robert's Rules of Order Newly Revised என்னும் புத்தகத்தின் தற்போதைய பதிப்பில் காணப்படும் விதிகள் சட்டத்தோடோ, நசரேயத் திருச்சபையின் கோட்பாடுகளோடோ, NMI அமைப்பு முறைமையிலோ மற்றும் வேறு எந்த NMI விதிகளோடும் வேறுபடாத வகையில் அவை கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதுவே இந்த ஒழுங்கமைப்பை ஆளுகை செய்யும்.

## கோட்பாடு 10. திருத்தங்கள்

NMI யின் அமைப்பு முறைமையானது அகில உலக நசரேய அருட்பணி இயக்கத்தின் சங்கத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று மாற்றங்களைச் செய்யலாம்.

# III. அகில உலக ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்கள்

## 812. அகில உலக ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் குழு

## துணை விதிகள்

## ஊழிய இலக்கு

பிராதன கட்டளையை சிறுபிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் பெரியவர்களிடம் கொண்டு சென்று வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களாக இந்த உலகத்தில் அவர்களை ஆயத்தப்படுத்துவதே அகில உலக ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் இலக்காகும்.

## நோக்கம்

அகில உலக ஓய்வுநாள் பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்களின் நோக்கம் பின்வருமாறு இருக்கிறது:

A. ஜெபத்தைக் கொண்ட மக்களைப் போலவும், வார்த்தையில் செயல்படுகிறவர்களைப் போலவும் இருந்து கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குதல்.

B. சந்திக்கப்படாத மக்களிடம் வேண்டுமென்றே உறவை வளர்த்து, அவர்கள் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களாக்கி, அவர்களைக் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்க செய்தால்.

C. சிறுபிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் பெரியவர்களுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதித்தல். இதன் மூலமாக அவர்கள் இரட்சிக்கப்பட்டு, முழுமையாக பரிசுத்தமாக்கப்பட்டு, கிறிஸ்தவ அனுபவத்தில் முதிர்ச்சியைப் பெற்று அனுபவிப்பார்கள். இது மனதுருக்கம், சுவிசேஷம், கிறிஸ்தவ கல்வி மற்றும் சீஷர்களை உருவாக்கும் வாழ்க்கையை விளைவாகக் கொடுக்கும்.

D. உண்மையுள்ளவர்களாக ஓய்வுநாள் பள்ளி/வேதாகம ஆய்வு/சிறிய குழுக்கள் மற்றும் பிற சீஷர்களை உருவாக்கும் ஊழியங்களில் பங்கெடுக்கும்படியாக எல்லோரையும் ஊக்குவித்தல்.

## கோட்பாடு 1. SDMI உறுப்பினர்கள்

### பொறுப்புகளின் பட்டியல்

ஒவ்வொரு சபையும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த சந்திக்கப்படாத மக்களைச் சந்திக்கவேண்டும் என்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு SDMI ஊழியமும் ஒரு பொறுப்புகளைக் கொண்ட பட்டியலைப் பெற்றிருக்க வேண்டும். பொறுப்புகளின் பட்டியலில் இருப்பவர்களின் பெயர் மற்றும் தொடர்புகொள்ளும் தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு நபர் இந்தப் பொறுப்புகளைக்

கொண்ட பட்டியலில் சேர்க்கப்பட்டப்பிறகு, உள்ளூர் சபையானது அந்த நபருக்கு ஊழியம் செய்யும்படியான படிகளை எடுத்து, அவரை அந்தத் திருச்சபையின் ஐக்கியத்திற்குள் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு ஊழியத்தின் ஆசிரியர்கள்/ தலைவர்கள் தொடர்ந்து தொடர்பு இருக்கும்படியும், குழு உறுப்பினர்களுக்கும் அந்தப் பொறுப்புகளின் பட்டியலில் இருக்கும் நபர்களுக்கும் இடையே தொடர்பு இருக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

SDMI பொறுப்புகளின் பட்டியலில் இருக்கும் தனிப்பட்ட நபர்கள் அனைவரும் ஆண்டுதோறும் நிகழும் போதகரின் அறிக்கையில் இடம்பெற்றிருக்க வேண்டும். இந்தப் பொறுப்புகளின் பட்டியல் எல்லா வயது வரம்பையும் உள்ளடக்கியிருக்கிறது. அதில் ஓய்வுநாள் பள்ளி, சீஷத்துவ கூட்டங்கள், வேதாகம ஆய்வுகள் மற்றும் எல்லா SDMI ஊழியங்களும் உள்ளடங்கியிருக்கின்றன.

### பகுதி 1. பின்வரும் ஊழியங்களில் பங்குபெறுபவர்கள் இந்தப் பொறுப்புகளின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

a. தொட்டில் அழைப்பு: நான்கு வயதிற்கும் கீழ் இருக்கும் பிள்ளைகள், தங்களுடைய பெற்றோரோடு சேர்ந்து எந்த SDMI ஊழியங்களிலும் கலந்துகொள்ளும் நிலையில் அவர்கள் தொட்டில் அழைப்பின் பொறுப்புகளின் பட்டியலில் சேர்க்கப்படலாம்.

b. வீட்டுப்பிரிவு: SDMI ஊழியத்தில் கலந்துகொள்ளமுடியாமல் உடல்ரீதியாகவோ அல்லது வேலையின் நிமித்தமாகவோ தடைபெற்றிருப்பவர்கள் இந்த வீட்டுப் பிரிவில் வருவார்கள். அவர்கள் இந்தப் பொறுப்புகளின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

c. மருத்துவமனையில் இருக்கும்/மருத்துவர்களின் பாதுகாப்பில் இருப்பவர்கள்: அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்தில் தொடர்ந்து பங்குபெறும் யாராவது இப்படிப்பட்ட இடங்களில் இருந்தால்.

d. சபைசார்ந்த ஊழியம்: உள்ளூர் சபை அல்லது மறைமாவட்டத்தால் ஆதரவளிக்கப்படும் எந்தக் குழுவும், வாரத்திற்கு ஒரு முறை குறைந்தது அரைமணி நேரமாவது சந்தித்து, வேதாகமக் கொள்கைகள் மற்றும் அல்லது அனுமதிக்கப்பட்ட பாடத்திட்டத்தைப் படித்து, ஒழுங்குப்படுத்தப்பட்ட உள்ளூர் நசரேயத் திருச்சபையாவதை இலக்காகக் கொண்டிருத்தல்.

c. பாலர்கல்வி/பள்ளி: நசரேயத் திருச்சபையால் ஆதரவளிக்கப்படும் அல்லது நடத்தப்படும் பாலர்கல்வி/பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் குழு.

f. பிள்ளைகளின் வளர்ச்சி மையங்கள்: உள்ளூர் நசரேயத் திருச்சபையினால் ஆதரவளிக்கப்பட்டு அல்லது நடத்தப்படுவது.

### பகுதி 2. பெயர்களை நீக்குதல்

அந்தப் பெயரை நீக்குவது போதகரின் அனுமதியின் பெயரில் மட்டுமே நடக்க வேண்டும். பெயர் நீக்கப்படக்கூடிய காரணங்கள்:

a. அந்த நபர் ஊரைவிட்டுச் சென்றுவிட்டால்.

b. மற்றொரு ஓய்வுநாள் பள்ளி வகுப்பு, சீஷத்துவ குழு அல்லது சபையில் சேர்ந்திருந்தால்.
c. தன்னுடைய பெயரை நீக்கவேண்டும் என்று கேட்டிருந்தால்.
d. மரித்திருந்தால்.

## கோட்பாடு 2. வருகைப் பதிவேடு

உள்ளூர் திருச்சபையின் SDMI வருகைப் பதிவிட்டில் எத்தனைப் பேர் வருகிறார்கள் என்பதை எண்ணி அதைச் சமர்ப்பிப்பது கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்கும்படியாக அந்தத் திருச்சபை எவ்வளவு முயற்சி எடுக்கிறது என்பதை அளந்துபார்ப்பதற்குத்தான். எல்லா SDMI முயற்சிகளும் அதில் பங்குபெறுபவர் கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களாகும்படி, சபையின் உறுப்பினராகும்படி மற்றும் சீஷர்களை உருவாக்குபவராக ஆகும்படி செய்ய வேண்டும்.

SDMI வருகைப்பதிவேடானது ஓய்வுநாள் பள்ளி வகுப்புகளையும், சீஷத்துவ குழுக்களையும் உள்ளடக்கியிருக்கிறது. இந்தப் பிரிவுகள் தனித்தனியாக உள்ளூர் சபையினால் எண்ணப்பட வேண்டும். அதற்காக வழிமுறைகள் கோட்பாடு 1. பகுதி 1 இல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிராந்திய SDMI அலுவலகமானது பொறுப்புகளின் பட்டியல் மற்றும் சராசரியாக ஒரு வாரத்தில் SDMI வருகைப் பதிவேட்டில் வரும் எண்ணிக்கை ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் தேவைப்படுகிறது. அந்தப் பிரிவிற்குள் SDMI எப்படிப்பட்ட வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்பதைச் சரியாகப் பதிவு செய்யவே இது தேவைப்படுகிறது.

### பகுதி 1. வரையறைகள் மற்றும் அறிக்கைகள்

எல்லா சீஷத்துவ குழுக்களின் வருகைப் பதிவேடுகளும் வேதாகமத்தை ஆய்வு செய்து அதை கிறிஸ்துவைப் போலாகுவதில் வேதாகம கொள்கைகளைச் செயல்படுத்துகிறவர்களாகக் கணக்கிடப்பட வேண்டும்.

a. பெரும்பாலான சபைகளில், ஓய்வுநாள் பள்ளி/ வேதாகம ஆய்வு வகுப்புகள் ஒரு வருடத்திற்கு 52 என்று இருக்கும். அது அறிவிக்கப்பட வேண்டும். மறைமாவட்ட SDMI கூட்டமைப்பானது, மறைமாவட்டக் கண்காணிப்பாளரோடு சேர்ந்து, இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் அதனுடைய நேரம் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.
b. உள்ளூர் சபையானது ஒன்றிற்கும் மேற்பட்ட சீஷத்துவ ஊழிய குழுவைப் பெற்றிருக்கும்போது வாராந்திர வருகைப் பதிவேட்டு கணக்கைச் சேர்த்து ஒரு ஆண்டிற்கான சராசரியாக போதகரின் அறிக்கையில் சமர்ப்பிக்க வேண்டும்.
c. சீஷத்துவ ஊழியங்கள் ஒரு சபை ஆண்டில் எப்போதுவேண்டுமானாலும் துவங்கி எப்போதுவேண்டுமானாலும் முடியலாம் என்பதால், வருடாந்திர சராசரியானது, பெறப்பட்ட எண்களின் கூட்டலை, கலந்துகொண்ட வாரங்களைக் கொண்டு வகுத்துவிட வேண்டும்.

## கோட்பாடு 3. உள்ளூர் SDMI நிர்வாகக் குழு

உள்ளூர் SDMI நிர்வாகக் குழுவின் பொறுப்புகள் *சட்டநூலின்* விதிகள் 145–145.10 வரை வரையறுக்கப்பட்டிருக்கின்றன:

1. ஒரு SDMI நிர்வாகக் குழுவை உருவாக்குவதற்குப் போதகரோடும், உள்ளூர் சபை நிர்வாகக் குழுவோடும் சேர்ந்து பணியாற்றுதல்.
2. உள்ளூர் சபையில் சீஷத்துவத்திற்கான யுக்திகள் நிறைந்த திட்டத்தை உருவாக்கி அதைச் செயல்படுத்துவதற்கு போதகரோடு செயல்படுதல். அந்த யுக்திகள் திருச்சபையின் யுக்திகளோடும்/நோக்கங்களோடும் ஒத்துப்போவதாகவும், நசரேயத் திருச்சபையின் மறைமாவட்ட தரிசனம் மற்றும் இலக்கோடு இணக்கமாகவும் இருக்க வேண்டும்.
3. நசரேயத் திருச்சபையின் வெளியீட்டாளர்கள் கொடுத்திருப்பதைப் போல அதனுடைய இறையியல் மற்றும் இலக்கோடு ஒத்துப்போகும் நிலையில் பாடத்திட்டங்களை ஆராய்ந்து, உருவாக்கி, மேம்படுத்துதல். கட்டாய சீஷத்துவம், சபையின் முன்னேற்றத்திற்காக எல்லா சபை உறுப்பினர்களுக்கும் தலைமைத்துவ பயிற்சி, எல்லா வயது வரம்பையும் சேர்ந்த ஊழியங்களில் ஈடுபடும் ஊழிய பணியாளர்களுக்குப் பயிற்சி மற்றும் விசேஷ செயல்திட்டங்களை ஒருங்கிணைத்து, செயல்படுத்துதல்.
4. ஆண்டு கூட்டத்தில் தற்போதைய நிலையில் உள்ளூர் சபையின் கல்வி மற்றும் சீஷத்துவ ஊழியங்கள்/செயல்திட்டங்கள் எப்படியிருக்கின்றன என்பதை அறிவித்து, அவற்றின் விளைவுகளைத் தெளிவாக விளக்குதல்.
5. உள்ளூர் SDMI ஊழியங்கள் பயன்படுத்தும் விதமாக நசரேயத் திருச்சபையின் இறையியல் கோட்பாடுகள் மற்றும் இலக்கோடு ஒத்துப்போகும் பாடத்திட்டங்களை அங்கீகரித்தல்.

## கோட்பாடு 4. ஓய்வுநாள் பள்ளி வகுப்புகள் மற்றும் பிரிவுகள்

**பகுதி 1:** வயது அல்லது பள்ளியில் படிக்கும் வகுப்புகளின் அடிப்படையில் ஓய்வுநாள் பள்ளியானது வகுப்புகளாகப் பிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் பிரிக்கப்படலாம். பெரியவர்களுக்கு நடத்தப்படும் வகுப்புகள் அவர்களுடைய பொதுவான ஆர்வம், அருட்பணி, தலைப்பு போன்றவற்றால் பிரிக்கப்பட வேண்டும். தேவைப்படும் இடங்களில் எல்லாத் தலைமுறைகளையும் சேர்ந்தவர்கள் பங்குபெறும் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

**பகுதி 2:** சிறுபிள்ளைகள், வாலிபர்கள் அல்லது பெரியவர்கள் வயது வரம்பில் நடத்தப்படும் வகுப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தால், வயது வாரியாக ஒழுங்குபடுத்துதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அது உள்ளூர் SDMI நிர்வாகக் குழு நியமித்திருக்கும் கண்காணிப்பாளரின் உதவியோடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**பகுதி 3:** ஒவ்வொரு பிரிவின் கண்காணிப்பாளரின் கடமைகள் உள்ளூர் SDMI நிர்வாகக் குழுவினால் உருவாக்கப்படும். சில கடமைகள் SDMI கையேட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## கோட்பாடு 5. SDMI ஊழியங்களின் ஆசிரியர்கள் மற்றும் தலைவர்கள்

**பகுதி 1:** எல்லா வயதினருக்கும் ஓய்வுநாள் பள்ளி, சிறு குழுக்கள், திருமண ஊழியங்கள், ஆண்கள் ஊழியங்கள், பெண்கள் ஊழியங்கள், சிறுபிள்ளைகள் ஊழியங்கள், விடுமுறை வேதாகமப் பள்ளி, ஆர்வம்சார்ந்த குழுக்கள் போன்றவை SDMI ஊழியங்களில் காணப்படுகின்றன. இந்த ஊழிய/பிரிவின் கண்காணிப்பாளர் மற்றும் ஆசிரியர்கள்/தலைவர்கள் வருடா வருடம் *சட்டநூல்* விதி எண் 145.8இன்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**பகுதி 2:** SDMI நிர்வாகக் குழுவானது போதகரின் ஆலோசனையைப் பெற்று சரியான கோட்பாடுகளைப் போதிக்காமை, மோசமான நடத்தை அல்லது கடமையைச் சரியாகச் செய்யாத நிலையில் போதகர் அந்த இடத்தைக் காலியிடமாக அறிவிக்கலாம்.

**பகுதி 3:** எல்லா ஆசிரியர்கள்/தலைவர்கள் மற்றும் மாற்று நபர்கள் ஜெபத்தின் மனிதர்களாகவும், தேவனுடைய வார்த்தையில் ஈடுபடுகிறவர்களாகவும், வேண்டுமென்ற கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களாக இருந்து, அப்படியே மற்றவர்களையும் செய்ய விரும்புகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

## கோட்பாடு 6. SDMI ஊழியங்களின் தலைமைத்துவத்தின் கடமைகள்

பகுதி 1: உள்ளூர் SDMI கண்காணிப்பாளர் ஒவ்வொரு வருடமும் *சட்டநூலில்* கொடுக்கப்பட்டிருக்கும் விதி எண்கள் 113.10–133.11 மற்றும் 127படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். SDMI கண்காணிப்பாளரின் கடமைகள் பின்வருமாறு இருக்கின்றன.

a. போதகரின் கண்காணிப்பின் கீழ் SDMI ஒருங்கிணைத்தல்.
b. ஊழிய தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களைச் சந்திக்கும்படி தொடர்ந்து கூட்டங்களை ஆயத்தம் செய்தல்.
c. தற்காலத்திய மற்றும் எதிர்காலத்தில் வரக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
d. வருடா வருடம், ஆராய்ந்து, முன்னேற்றி, SDMI நிர்வாகக் குழுவில் ஒரு சீஷத்துவ யுக்தியை பொறுப்புகளின் பட்டியலில் காணப்படும் நபர்களைச் சந்திப்பதற்காக செயல்படுத்துதல்.
e. கொடுக்கப்பட்டிருக்கும் மண்டல, மறைமாவட்ட அல்லது கள அலுவலகத்திற்குத் தொடர்ந்து SDMI குறித்த புள்ளிவிவரங்களை அளித்துக்கொண்டே இருத்தல்.

f. உள்ளூர், மண்டல, மறைமாவட்ட, கள, பிராந்திய மற்றும் அகில உலக SDMI கூடுகைகளில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையை ஊக்குவித்தல்.

**பகுதி 2:** வயதுவாரியான இயக்குனர்களின் கடமைகள் *சட்டநூலில்* 147–147.9 மற்றும் 149.2 ஆகிய விதிகளில் காணப்படுகின்றன.

**பகுதி 3:** SDMI நிர்வாகக் குழுவானது SDMI பதிவுகளைப் பார்த்துக்கொள்ளும்படியாக ஒரு நபரை நியமனம் செய்யும். அவர் பொறுப்புகளின் பட்டியல், வருகைப் பதிவேடு, சந்திக்க வருபவர்கள் மற்றும் SDMI ஊழியங்களுக்குத் தேவைப்படும் பிற புள்ளிவிவரங்களைப் பதிவு செய்வார்.

**பகுதி 4:** தேவைப்படும் இடங்களில் SDMI நிர்வாகக் குழுவானது ஒவ்வொரு வாரமும் SDMI க்காக சேகரிக்கப்படும் நிதியின் கணக்கையும், நிர்வாகக் குழுவின் வழிகாட்டுதலின் பெயரில் செலவிடப்படும் நிதியை அங்கீகரித்து கணக்கிடுவதற்காக ஒரு பொருளாளரை நியமிக்கலாம். SDMI நிர்வாகக் குழுவிற்கு மாதாமாதம் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

**பகுதி 5:** SDMI ஊழியங்களில் பயன்படுத்தப்படும் எல்லாப் பாடத்திட்டம் மற்றும் பிற ஆதாரங்கள் SDMI நிர்வாகக் குழுவால் அல்லது கண்காணிப்பாளர் மற்றும் போதகரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## கோட்பாடு 7. SDMI நிர்வாகம் மற்றும் மேற்பார்வை

**பகுதி 1:** SDMI போதகரின் அக்கறையின் கீழ் இருக்கிறது. அது சபை நிர்வாகக் குழுவிற்குப் பொறுப்பாக இருக்கிறது. SDMI நிர்வாகக் குழுவின் பொது மேற்பார்வையில் இருக்கிறது. கண்காணிப்பாளர் மற்றும் வயதுவாரி இயக்குனர்களின் தலைமைத்துவத்திற்குக் கீழ் இருக்கிறது.

**பகுதி 2:** கிறிஸ்தவ கல்விப் பிரிவிற்குப் பணியில் அமர்த்தப்பட்ட இயக்குனரைப் பெற்றிருக்கும் சபையானது அவரே SDMI கண்காணிப்பாளருடைய கடமைகளையும் செய்யவேண்டும் என்று நினைத்தால் உள்ளூர் சபை நிர்வாகக் குழுவில் SDMI சார்பாக ஒரு பிரதிநிதியாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்ற ஒரு சாமானியரைச் சபை நியமிக்க வேண்டும். SDMI தலைமைத்துவத்திற்கு உள்ளூர் சாமானிய தலைவர்களைப் பயிற்சி செய்து அவர்களுக்கு வேண்டிய ஆதாரங்களைக் கொடுக்கும்படி நாங்கள் எல்லோரையும் ஊக்குவிக்கிறோம்.

**பகுதி 3:** சிறுவர், வாலிபர் அல்லது பெரியவர் குழுவிற்கு ஒரு போதகர்/தலைவர்/இயக்குனர் போன்றவர்களைத் திருச்சபையானது நியமிக்கும்போது, சபை நிர்வாகக்குழுவின் ஆலோசனையைப் பெற்று போதகர், SDMI நிர்வாகக் குழு மற்றும் அல்லது NYI கூட்டமைப்பு எல்லாம் சேர்ந்து சிறுவர்கள், வாலிபர்கள் மற்றும் பெரியவர்களுக்கான ஊழியங்களை வயதுவாரியான பணியாளரிடம் ஒப்படைக்கின்றன. அப்படிச் செய்யும்போது, சிறுவர்கள், வாலிபர் அல்லது பெரியவர்களின் ஊழியங்களைச் செய்யும் அந்தப் பணியாளர், உள்ளூர் சிறுவர் ஊழியங்களின் இயக்குனர், NYI தலைவர், அல்லது பெரியவர் ஊழியத்தின்

இயக்குனர் ஆகியோரின் சில கடமைகளையும் ஏற்றுச் செய்வார். ஆனாலும் உள்ளூர் சிறுவர் ஊழியங்களின் இயக்குனர், NYI தலைவர், அல்லது பெரியவர் ஊழியத்தின் இயக்குனர் ஆகியோரின் பங்களிப்பானது மிகவும் முக்கியமான சாமானிய தலைமைத்துவம், ஆதரவு மற்றும் உள்ளூர் வயதுவாரி ஊழியங்களின் பிரதிநிதித்துவத்திற்கு இன்றியமையாததாக இருக்கிறது. போதகரும் வயதுவாரி ஊழியத்தின் பணியாளரும் SDMI நிர்வாகக் குழு மற்றும் NYI கூட்டமைப்பின் ஆலோசனையைப் பெற்று இந்த மூன்று சாமானிய பதவிகளுக்குமான கடமைகளை நிர்ணயம் செய்வார்கள்.

## கோட்பாடு 8. SDMI சங்கங்கள்

### பகுதி 1: மறைமாவட்ட SDMI சங்கம்

ஒவ்வொரு மறைமாவட்டமும் வருடாவருடம் SDMI சங்கக் கூடுகையைத் திட்டமிடுவது மிகவும் முக்கியமாகும். அதன் மூலமாக ஊக்கம், உற்சாகம், பயிற்சி போன்றவைக் கிடைக்கும். அதோடு அறிக்கைகளின் பணிகள் மற்றும் தேர்தல் நடைபெறும். ஒவ்வொரு சங்கத்தின் கூடுகையிலும், ஓய்வுநாள் பள்ளி மற்றும் சிறு குழு சீஷத்துவ ஊழியங்களை மேம்படுத்துவதே பிரதானமாகப் பேசப்பட வேண்டும்.

a. பதவியின் காரணமாக மறைமாவட்ட SDMI சங்கத்தில் கலந்துகொள்பவர்கள்: மறைமாவட்டக் கண்காணிப்பாளர், எல்லா போதகர்கள், பொறுப்பு கொடுக்கப்பட்ட அபிஷேகம் பெற்ற போதகர்கள், பொறுப்பு கொடுக்கப்பட்ட மறைமாவட்ட உரிமம் பெற்ற போதகர்கள், ஓய்வுபெற்ற ஆனால் பொறுப்பில் இருக்கும் போதகர்கள், முழு நேர உதவியாளர்கள், மறைமாவட்ட SDMI தலைவர், சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் ஊழியத்தின் மறைமாவட்ட இயக்குனர்கள், மறைமாவட்ட NYI தலைவர், மறைமாவட்ட NMI தலைவர், மறைமாவட்ட SDMI செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மறைமாவட்ட ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த சாமானிய மக்கள், அந்த மறைமாவட்டத்தில் உறுப்பினராக இருக்கும் முழு நேர கிறிஸ்தவ கல்வி பேராசிரியர்கள், மற்றும் கள, பிராந்திய மற்றும் அகில உலக SDMI அதிகாரிகள்.

b. மேலே பட்டியலிடப்பட்டிருக்கும் பிரதிநிதிகளோடு சேர்த்து, இந்த ஆண்டுக் கூடுகையில் ஒவ்வொரு உள்ளூர் சபையும் கூடுதல் SDMI பிரதிநிதிகளை இந்தச் சங்கத்தில் கலந்துகொள்வதற்காக தேர்ந்தெடுக்கும். இது உள்ளூர் SDMI ஊழியங்களில் காணப்படும் அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் தலைவர்களின் 25 சதவீதத்தின் எண்ணிக்கையாக இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டால், மாற்று பிரதிநிதிகள் அவர்கள் பெற்றிருக்கும் வாக்கு எண்ணிக்கையின் வரிசையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

c. மறைமாவட்ட SDMI நிர்வாகக் குழுவானது ஒரு நியமன குழுவை நிறுவிய மறைமாவட்ட SDMI தலைவர் மற்றும் கூடுதலாகத் தேவைப்படும் மூன்று உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக இரண்டு மடங்கானவர்களை

நியமனம் செய்யும். இவர்கள் மறைமாவட்ட SDMI சங்கத்தில் வாக்குகளின் எண்ணிக்கை வரிசையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த நியமனர்கள் நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அவர்கள் SDMI ஊழியங்களில் ஏதாவது ஒன்றில் பங்குபெறுகிறவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் வயதுவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் (சிறுபிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் பெரியவர்களுக்கான ஆசிரியர்கள்/பணியாளர்கள்).

d. மறைமாவட்ட SDMI சங்கத்திற்கான பிரதிநிதிகள் மறைமாவட்ட SDMI தலைவரைத் தேர்வு செய்யலாம் (சட்டநூல் 242). மறைமாவட்ட SDMI நிர்வாகக் குழுவின் மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அகில உலக SDMI சங்கத்தின் பிரதிநிதிகளையும் தேர்வு செய்யலாம்.

## பகுதி 2: அகில உலக SDMI சங்கம்

ஒவ்வொரு பொது மாநாடோடு சேர்த்து SDMI யானது ஒரு அகில உலக சங்கக்கூடுகையைக் கொண்டிருக்கும். அதில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட இடங்களில் இந்த உலகம் முழுவதும் பிரதிநிதிகள் கூடுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் (மற்றும் விருந்தாளிகள்) ஊக்கம், உற்சாகம், பயிற்சி போன்றவைகள் கிடைக்கும் நோக்கத்தோடு சந்தித்துக் கொள்வார்கள். SDMI யின் நோக்கங்களை அகில உலக அளவில் நிறைவேற்றுவதே இவர்களுடைய பிரதான நோக்கமாகும்.

இந்த அகில உலக சங்கமானது பிராந்திய வாரியான கலந்தாலோசிக்கும் இடங்களையும் கொண்டிருக்கும். அதில் பிராந்திய SDMI கூட்டமைப்பு, பிராந்திய இயக்குனர், பிராந்திய SDMI ஒருங்கிணைப்பாளர் மற்றும் அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மறைமாவட்ட SDMI பிரதிநிதிகளும் இருப்பார்கள். இந்தப் கலந்தாலோசிக்கும் இடங்களைப் பொது நிர்வாகக் குழுவில் ஒரு SDMI பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றுவதற்காகக் கூடியிருக்கிறார்கள். அகில உலக SDMI கூட்டமைப்பு மற்றும் அகில உலக SDMI இயக்குனர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டவர்களிலிருந்து ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்து அதை அங்கீகாரத்திற்காகப் பொது மாநாட்டிற்கு அனுப்புவார்கள் (சட்டநூல் 332.6).

a. அகில உலக SDMI சங்கத்திற்குப் பதவியின்காரணமாக நேரடியாகக் கலந்துகொள்பவர்கள்: மறைமாவட்டக் கண்காணிப்பாளர்கள், மறைமாவட்ட SDMI தலைவர்கள், சிறுவர் மற்றும் பெரியவர் ஊழியங்களின் மறைமாவட்ட இயக்குனர்கள், SDMI பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள், SDMI கள ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அகில உலக SDMI அலுவலகத்தின் இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள். அதோடு சேர்த்து நசரேயக் கல்லூரி, இறையியல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் கிறிஸ்தவ கல்வியின் பேராசிரியர்களாக இருப்பவர்களும் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளலாம்.

b. நேரடியாகப் பங்குகொள்பவர்களோடு சேர்த்து, ஒவ்வொரு மறைமாவட்டமும் நான்கு கூடுதல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் அல்லது அந்த மறைமாவட்டத்தில் ஒழுங்குப்படுத்தப்பட்ட சபைகளின் எண்ணிக்கையில்

பத்து சதவீதமாக இருக்கும். மேலே கூறப்பட்டுள்ள இரண்டில் எது பெரியதோ அது எடுத்துக்கொள்ளப்படும்.

c. அகில உலக SDMI சங்கத்தின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் பின்வரும் வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

1. நியமனக் குழுவில் மறைமாவட்டக் கண்காணிப்பாளர், மறைமாவட்ட SDMI தலைவர் மற்றும் மறைமாவட்ட SDMI நிர்வாகக் குழுவால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் இருக்க வேண்டும். தேர்வாக வேண்டிய எண்ணிக்கையிலிருந்து அவர்கள் மூன்று மடங்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.
2. மறைமாவட்ட SDMI சங்கமானது SDMI ஊழியங்களின் எண்ணிக்கைக்கு இணையான பிரதிநிதிகளையும், மாற்றுப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கும் (வாலிபர்களுக்கான ஆசிரியர்கள்/பணியாளர்கள் உட்பட). தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் தற்போது பணியாற்றுபவர்களாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்று பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் பதவியின் காரணமாக நேரடியாக வரவிருக்கும் அதிகாரிகளுக்கான மாற்று பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அகில உலக நசரேய அருட்பணி சங்கம் அல்லது அகில உலக நசரேய வாலிபர்களுக்கான சங்கத்தில் பங்குபெறுபவர்கள் இங்குத் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. ஏனென்றால் இந்த மூன்று சங்கங்களும் ஒன்றுபோலவே நிகழும்.
3. பொது மாநாடு கூடி 16 மாதங்களில் அல்லது பயண விசா பெறுவதற்குக் கடினமான நாடுகளில் 24 மாதங்களிலும் மறைமாவட்ட SDMI சங்கத்தில் இந்தப் பிரதிநிதிகள் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. கூடுமான வரை சாமானியர்கள் மற்றும் போதகர்களின் எண்ணிக்கைச் சமமாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். 50 சதவீதம் சாமானியர்கள் மற்றும் 50 சதவீதம் பொறுப்பில் இருக்கும் போதகர்கள், மூப்பர்கள், டீக்கன்மார்கள் அல்லது உரிமம் பெற்ற போதகர்கள். இதனுடைய மொத்த எண்ணிக்கை சமமாக வராவிட்டால், கூடுதலாகச் சேர்க்கப்படும் நபர் சாமானியராக இருப்பார்.
5. மறைமாவட்ட SDMI தலைவர்கள் இதற்கு முன்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அகல உலக SDMI சங்கக்கூடுகையின்போது பணியில் இருப்பவர்கள் இந்தச் சங்கத்தின் நேரடி உறுப்பினர்களாக இருப்பார்கள்.
6. SDMI சங்கத்தில் கலந்துகொள்ளும் எல்லாத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நேரடி உறுப்பினர்கள் அகில உலக SDMI சங்கத்தின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிக்கத் தகுதியானவர்களாக இருக்கிறார்கள்.
7. இந்தத் தேர்தலுக்கு எண்ணிக்கை வாரியான வரிசைப்படுத்துதல் சரியாக இருக்கும்.
8. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியால் அகில உலக SDMI சங்கத்தில் கலந்துகொள்ள முடியாவிட்டால், மாற்றுப் பிரதிநிதிகள் ஓட்டுக்களைப் பெற்ற வரிசையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் மாற்றுப் பிரதிநிதிகள்

கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டால், மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் மறைமாவட்ட ஆலோசனைக் குழு ஆகியோர் காலியிடங்களை நிரப்பும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

9. அகில உலக SDMI சங்கம் துவங்கப்பட்டப்பிறகு ஒவ்வொரு பிரதிநிதியும், தான் இருக்கும் மறைமாவட்டத்தின் உள்ளூர் நசரேயத் திருச்சபையின் பிரதிநிதியாக இருப்பார்கள்.
10. இந்தச் சங்கத்தில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் மறைமாவட்டத்திலிருந்து நிதி உதவியைப் பெற வேண்டும். இந்த உதவி மறைமாவட்டத்திலிருந்து NMI மற்றும் NYI க்கு கொடுக்கப்படும் நிதியை ஒத்ததாக இருக்க வேண்டும்.
11. அகில உலக SDMI சங்கத்தில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்கான தேர்தல் மறைமாவட்ட SDMI சங்கத்தில் நடைபெறாவிட்டால், மறைமாவட்ட மாநாடு அதில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்.

## கோட்பாடு 9. அகில உலக SDMI கூட்டமைப்பு

### பகுதி 1: நோக்கம்

பிராந்திய, கள, மறைமாவட்ட மற்றும் உள்ளூர் SDMI தலைவர்களோடு சேர்ந்து அகில உலக யுக்திகளைத் தொடர்புபடுத்தி செயல்பூர்வமான சீஷர்களை உருவாக்குவதை உருவாக்குவதற்காக SDMI செயல்திட்டத்தை முழுமையாக முன்னேற்றமடையச் செய்தல்.

### பகுதி 2: ஆக்கம்

a. அகில உலக SDMI கூட்டமைப்பு வருடத்திற்கு ஒருமுறையாவது நேரிலோ அல்லது மின்னணு சாதனங்களின் உதவியின் மூலமாகவோ சந்திக்கும். அதில் பிராந்திய SDMI ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அகில உலக SDMI இயக்குனர் கலந்துகொள்வார்கள். இதில் அகில உலக SDMI இயக்குனர் தலைவராக இருப்பார்.
b. பிராந்திய SDMI ஒருங்கிணைப்பாளர்கள் அந்தந்தப் பிராந்தியத்தின் இயக்குனர்களால் அகில உலக SDMI இயக்குனரின் ஆலோசனையின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### பகுதி 3: பிராந்திய SDMI ஒருங்கிணைப்பாளர்களின் கடமைகள் பின்வருமாறு:

a. தங்களுடைய பிராந்தியத்தில் SDMI நோக்கத்தின் பிரதிநிதியாகவும், அதை மேம்படுத்துகிறவர்களாகவும் இருத்தல்.
b. சபையின் பிராந்திய தரிசனத்தோடு ஒத்திருக்கும் யுக்திகளையும் ஆயுதங்களையும் செயல்படுத்துவதற்கு தரிசனம் மற்றும் உந்துதலை அளித்தல்.
c. பிராந்திய, கள மற்றும் மறைமாவட்ட அளவில் சீஷத்துவ தலைமைத்துவ பயிற்சி முயற்சிகளை ஆராய்ந்து, உருவாக்கி, வளர்த்து, ஒருங்கிணைத்து

மற்றும் பின்தொடர்ந்து அவைகளின் மேம்பாட்டிற்காக கிறிஸ்துவைப் போன்ற சீஷர்களை உருவாக்குவதற்காக சபையின் எல்லா ஊழியங்களையும் தொடர்புபடுத்துதல்.

d. ஆண்டுதோறும் நடக்கும் அகில உலக SDMI கூட்டமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டு, அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

e. SDMI பொது நிர்வாகக் குழு பிரதிநிதிகளாகத் தங்களுடைய பிராந்தியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்களை அகில உலக SDMI கூட்டமைப்பிற்குக் கொண்டு வருதல். இந்தக் கூட்டமைப்பானது பொது மாநாட்டிற்கு SDMI பிரதிநிதியாகப் பொது நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும்படியாக ஒரு பெயரைக் கொடுக்கும் (சட்டநூல் 332.6).

## கோட்பாடு 10. திருத்தங்கள்

இந்தத் துணை விதிகள் பங்குபெற்றிருக்கும் பொது நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இதில் மாற்றங்கள் செய்யப்படலாம்.

# பாகம் X

# படிவங்கள்

உள்ளூர் திருச்சபை
மறைமாவட்ட மாநாடு
குற்றச்சாட்டுகளைக் குறித்த ஆதாரங்கள்

## I. உள்ளூர் திருச்சபை

**குறிப்பு: பின்வரும் படிவங்கள் தேவைப்படும்போது உள்ளூர் திருச்சபையினால் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படலாம்.**

### 813. உள்ளூர் போதகரின் அனுமதி

______________ ஆகிய இவர் நசரேயத் திருச்சபையில் உள்ளூர் போதகராக இருப்பதற்கு ஒரு வருடங்கள் அனுமதியைப் பெறுகிறார். (அவர்/அவள்)______________ ஆவி மற்றும் பழக்கவழக்கங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷமாகும் பட்சத்தில் மற்றும் (அவர்/அவள்)____________________ போதனைகள் கூறப்பட்டிருக்கும் திருச்சபையினால் கருதப்படும் பரிசுத்த வேதாகமத்தின் கோட்பாடுகளோடு ஒத்திருக்க வேண்டும்.

______________________, நசரேயத் திருச்சபையின் சபை செயற்குழுக் கூட்டத்தின் கட்டளையின் படி.

______________, என்ற இடத்தில், ____________________ நாளில் ,______________(வருடத்தில்).

______________________________________________

(தலைமை அதிகாரி)

______________________________________________

(செயலாளர்)

## 814. மறைமாவட்ட மாநாட்டிற்குப் பரிந்துரை செய்தல்

(மறைமாவட்ட உரிமம் பெற்ற போதகர்களுக்காக வருடா வருடம் பூர்த்தி செய்ய வேண்டியது)

*(தேவையான ஒன்றைக் குறிக்கவும்.)*

☐ ________________________ திருச்சபை நிர்வாகக் குழு

☐ மறைமாவட்ட ஆலோசனைக் குழு (*சட்டநூல்* 225.13) ____________ ____________ (குருத்துவ அனுமதி சான்று குழுவில்) மறைமாவட்ட மாநாட்டிற்குப் பின்வரும் பதவிக்குப் பரிந்துரை செய்கிறது:

☐ **மறைமாவட்ட போதகரின் அனுமதி**

☐ **மறைமாவட்ட போதகரின் அனுமதியைப் புதுப்பித்தல்**

☐ **பெண் டீக்கன்மாரின் அனுமதியைப் புதுப்பித்தல்**

☐ **கிறிஸ்தவ கல்வி இயக்குனரின் அனுமதியைப் புதுப்பித்தல் ஊழியப் பங்களிப்பு சான்றிதழ்** (*சட்டநூல்* 503–528)

☐ **CED – கிறிஸ்தவ கல்வி ஊழியர்** (உள்ளூர் சபையின் பள்ளியில் நியமிக்கப்பட்டிருக்கும் போதகர்கள்)

☐ **EDU – கல்வி** (நசரேயத் திருச்சபையைச் சேர்ந்த ஏதாவது ஒரு கல்வி நிறுவனத்தில் நிர்வாக அலுவலகத்திலோ அல்லது கல்வி கற்பிக்கும் பணியாளராகவோ பணியாற்றுதல்)

☐ **EVR – நற்செய்தியாளர், பதிவுசெய்யப்பட்டவர்** (பயணம் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலைத் தன்னுடைய பிரதான ஊழியமாகக் கொண்டிருத்தல், எழுப்புதல்கள் மற்றும் சுவிசேஷத்தை அந்த இடத்தில் பரப்புதல்)

☐ **GA – பொது வேலை, ஊழியம்** (பொதுச் செயற்குழுவால் உலகளாவிய ஊழிய குழுவின் மூலமாக சபையின் ஊழியராக நியமிக்கப்பட்டிருக்கிறார்

☐ **GA – பொது வேலை, இதரப் பணிகள்** (பொதுவான திருச்சபையில் செயலாற்றும்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்)

☐ **PAS – போதகர்**

☐ **PSV - FT – குருத்துவ சேவை முழுநேரம்**

☐ **PSV - PT – குருத்துவ சேவை பகுதிநேரம்** (துணைப் போதகர், சபைக்குச் சம்பந்தமான குருத்துவ சேவைகளைச் செய்துகொண்டிருக்கிறார், ஆளுகைசெய்யும், அனுமதியளிக்கும், உதவியளிக்கும் பிரிவுகளின் ஒப்புதலின்பேரில் குறிப்பிட்ட ஊழியப் பிரிவுகளில் பணியாற்றுகிறார்.)

☐ **SER – பாடல் நற்செய்தியாளர், பதிவு செய்யப்பட்டவர்** (இசையின் மூலமாக தன்னுடைய சுவிசேஷ ஊழியத்தின் பெரும்பான்மையான பகுதியைச் செலவிடுகிறார். இசையே அவருடைய பிரதான பணியாக இருக்கிறது)

☐ **SPC – சிறப்புப் பணி/ மற்ற சபைகளையும் சார்ந்தவர்கள்** (செயல்பட்டுக்கொண்டிக்கிறவர்கள், வேறு ஏதாவது வழியில் சொல்லப்பட்டால் ஒழிய, இவர்களுடைய செயல்பாடுகளை மறைமாவட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பெயரில் மறைமாவட்ட மாநாடு அங்கீகரிக்கும். இந்தப் பதவியில் பணியாற்றும் நபர்கள் நசரேயத் திருச்சபையோடு உறவைக் கைக்கொண்டிருக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்கள் நசரேயத் திருச்சபையோடு தாங்கள் கொண்டிருக்கும் தொடர்பைக் குறித்து மறைமாவட்ட ஆலோசனைக் குழுவிற்கு ஆண்டுதோறும் எழுத்துப்பூர்வமான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்).

☐ **STU – மாணவர்**

☐ U – பணி எதுவும் கொடுக்கப்படவில்லை

அபிஷேகம் பெறுவதற்கான குறைந்தபட்ச தகுதி எதுவாக இருக்கிறது என்பதையும் (*சட்டநூல்*, 533.3, 534.3), சம்பளம் பெறும் அல்லது பெறாத உறவுகளை உருவாக்குவது எப்படி என்பதையும் (*சட்டநூல்*, 159–159.3) மறுஆய்வு செய்யுங்கள். இது அந்த நபரின் ஊழிய வரலாற்றை எடுத்துரைப்பதற்கும், தொடர்ந்து கைக்கொள்வதற்கும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

ஊழிய பணியான PSV - FT அல்லது PSV - PT என்பது வருகிற வருடத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது என்றால், அது மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் எழுத்துப்பூர்வமான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறதா(129.27; 159–159.2)?

☐ ஆம்

☐ இல்லை

____________________________________________________________

____________________________________________________________

ஊழியப் பணியான "STU" அல்லது "U" என்று மேலே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல இருந்தால், சபை நிர்வாகக் குழு மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் அனுமதியைப் பெற்றபிறகு அந்த நபருடனான பணி சம்பந்தமான உறவுகள் எப்படியிருக்கும்.

____________________________________________________________

____________________________________________________________

________________________ இந்தப் பதவியை வகிப்பதற்கான எல்லாத் தகுதிநிலைகளையும் பூர்த்திசெய்திருக்கிறார் என்று நாங்கள் சான்றிதழ் அளிக்கிறோம்.

இந்தக் குழுவின் வாக்கெடுப்பின்படி ________________ (தேதி) மற்றும் மறைமாவட்டக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வமான அனுமதி கடிதத்தின்படி ________________ (தேதி).

____________________________________________________________

(தலைமை அதிகாரி)

____________________________________________________________

(செயலாளர்)

குறிப்பீடு

☐ அறிவிக்கப்பட்டது

☐ நிலைப்பாடு

குறிப்பு: அனுமதியளித்தலுக்கான பரிந்துரையையும், அந்தத் தனிப்பட்ட நபருடைய ஊழியப் பணிக்குச் சான்றழிப்பதையும் குறித்துவிடுங்கள்.

## 815. பாராட்டுச் சான்றிதழ்

__________________ நசரேயத் திருச்சபையின் உறுப்பினரான ______________________ இந்தச் சான்றிதழ் அளிக்கப்படுகிறவருடைய கிறிஸ்தவ நம்பிக்கை பாராட்டப்படுகிறது என்று சான்றிதழ் அளிக்கிறோம்.

______________________________________________________________________

போதகர்

தேதி________________, ____________________________ (வருடம்)

குறிப்பு: பாராட்டுப் பத்திரம் கொடுக்கப்பட்டவுடன், இந்தப் பத்திரத்தைக் கொடுக்கும் உள்ளூர் திருச்சபையில் அவர் கொண்டிருக்கும் உறுப்பினர் நிலை உடனடியாக நீக்கப்பட்டுவிடும்.

## 816. விடுவிப்புக் கடிதம்

_____________________________ இந்நாள் வரை _______________ இருக்கும் நசரேயத் திருச்சபையின் உறுப்பினராக இருந்திருக்கிறார் எனவே இப்போது_____________________________(அவர்/அவள்) விடுவிப்புக் கடிதம் கொடுக்கப்படுகிறது ____________________________________________ என்று சான்றிதழ் அளிக்கப்படுகிறது.

______________________________________________________________________

போதகர்

தேதி________________, ____________________________ (வருடம்)

குறிப்பு: விடுவிப்புக் கடிதம் கொடுக்கப்பட்டவுடன் அவருடைய உறுப்பினர் நிலை உடனடியாக நீக்கப்பட்டுவிடும் (112.2)

## 817. உறுப்பினர்கள் இடமாற்றம் அடைவது

_____________ இந்நாள் வரை ________________ இருக்கும் நசரேயத் திருச்சபையின் உறுப்பினராக இருந்திருக்கிறார் எனவே இப்போது அவர்/அவள்__________ மறைமாவட்டத்தில் இருக்கும் ____________ நசரேயத் திருச்சபைக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார்.

இந்த இடமாற்றத்தைப் பெற்றுக்கொள்ளும் சபையானது அதை ஏற்றுக்கொண்டு பதிலளிக்கும்போது இந்த உள்ளூர் சபையில் இருக்கும் உறுப்பினர் நிலை முடிந்துவிடும்.

____________________________________________________________

போதகர்

____________________________________________________________

விலாசம்

தேதி_________________, ______________________________ (வருடம்)

குறிப்பு: இடமாற்ற சான்றிதழ் மூன்று மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் (111)

## 818. உறுப்பினர்கள் இடமாற்றம் அடைவது

_______________________ என்பவர் __________________ இருக்கும் நசரேயத் திருச்சபையின் உறுப்பினராக ________________________ நாள், ______________________ (வருடம்) ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார் என்று சான்றிதழ் அளிக்கப்படுகிறது ________________________________________________________

போதகர்

____________________________________________________________

விலாசம்

## II. மறைமாவட்ட மாநாடு

**819.** அதிகாரப்பூர்வமான படிவங்களைப் பொதுச் செயலாளர், 17001 Prairie Star Parkway, Lenexa, KS 66220, USA என்ற விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## III. குற்றச்சாட்டுகளைக் குறித்த ஆதாரங்கள்

**பகுதி 1. சபை உறுப்பினரின் மீது விசாரணை**

**பகுதி 2. அபிஷேகம் பண்ணப்பட்ட போதகரின் மீது விசாரணை**

**பகுதி 3. உரிமம் பெற்ற போதகரின் மீது விசாரணை**

**820.** குற்றச்சாட்டுகளைக் குறித்த ரசீதுகள் பொதுச் செயலாளர், 17001 Prairie Star Parkway, Lenexa, KS என்ற விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பாகம் XI

# பிற்சேர்க்கை

பொது அதிகாரிகள்
நிர்வாகக் குழுக்கள், கூட்டமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள்
நிர்வாகக் கொள்கைகள்
தற்காலத்திய நடத்தை மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகள்

## I. பொது அதிகாரிகள்

### 900. பொதுக் கண்காணிப்பாளர்கள்

யூஜினியோ ஆர். டுவார்ட்டி
கஸ்டவோ ஏ. கிராக்கர்
டேவிட் டபிள்யூ. கிரேவ்ஸ்
பிலிமாவோ எம். சாம்போ
டேவிட் ஏ. பூசிக்
கார்லா டி. சன்பர்க்

#### 900.1. ஓய்வுபெற்ற பொதுக் கண்காணிப்பாளர்கள்

யூஜீன் எல். ஸ்டே, ஓய்வுபெற்ற
ஜெரால்ட் டி. ஜாண்சன், ஓய்வுபெற்ற
டோனால்டு டி. ஓவென்ஸ், ஓய்வுபெற்ற
ஜிம் எல். பாண்ட், ஓய்வுபெற்ற
டபிள்யூ. டால்மாட்ஜ் ஜாண்சன், ஓய்வுபெற்ற
ஜேம்ஸ் எச். டீல், ஓய்வுபெற்ற
பால் ஜி. கன்னிங்ஹாம், ஓய்வுபெற்ற

நீனா ஜி. கன்டர், ஓய்வுபெற்ற
ஜெசி சி. மிட்டென்டார்ப், ஓய்வுபெற்ற
ஸ்டான் ஏ. டோலர், ஓய்வுபெற்ற
ஜெர்ரி டி. போர்ட்டர், ஓய்வுபெற்ற
ஜே. கே. வாரிக், ஓய்வுபெற்ற

**900.2. பொதுச் செயலாளர்**
டேவிட் பி. வில்சன்

**900.3. பொது பொருளாளர்**
கீத் பி. காக்ஸ்
நசரேயத் திருச்சபை
அகில உலக ஊழிய மையம்
17001 PRAIRIE STAR PARKWAY
LENEXA, KS 66220, USA

# II. நிர்வாகக் குழுக்கள், கூட்டமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள்

## 901. பொது நிர்வாகக் குழு

சபையின் பிராந்திய வாரியான உறுப்பினர்கள்

| **போதகர்** | **சாமானியர்** |
|---|---|
| *ஆப்பிரிக்க பிராந்தியம்* | |
| ஆர்சினோ ஜெரேமியாஸ் மன்ஜாட்டே | சிபாங்கைல் குமெட்சி |
| சாலமன் டிலோவு | பென்ஜமின் லாங்கா |
| ஸ்டான்லி உஷ்சி | ஏன்ஜெலா எம். பரைரா பி. டி. வி. மொரினோ |
| *ஆசிய–பசிபிக் பிராந்தியம்* | |
| கபுவா முவாரார் | லியோனிலா டோமென் |
| மின்–காயூ ஷின் | ஜூவாங் வான் லீ |
| *கனடா பிராந்தியம்* | |
| டி. இயான் பிலிட்ஸ்பாட்ரிக் | டேவிட் டபிள்யூ. பால்க் |
| மத்திய அமெரிக்க பிராந்தியம் | |
| ரான் பிளேக் | ஜூடி எச். ஓவென்ஸ் |
| *கிழக்கு மத்திய அமெரிக்க பிராந்தியம்* | |
| டி. ஜெப்பிரி குன்செல்மான் | கார்சன் கேசில்மேன் |
| கிழக்கு அமெரிக்க பிராந்தியம் | |

| | |
|---|---|
| சாமுவேல் வாசெல் | லாரி போலிங்கர் |

*யுரேசியா பிராந்தியம்*

| | |
|---|---|
| சஞ்சய் காவாலி | டேவிட் டே |
| டேவிட் மான்கோமெரி | வினய் காவாலி |
| மேரி கார் | கிறிஸ்டேப் நிக் |

*மீசோ அமெரிக்க பிராந்தியம்*

| | |
|---|---|
| எலியாஸ் பென்டான்சோஸ் | கார்மென் எல். சீகோ டி அகோஸ்டா |
| வாலியர் பியரி | ஆபிரகாம் பொர்னான்டஸ் காமேஸ் |
| ஆன்டோனி செயின்ட் லூயி | லினோ இ. உரிசார் கார்சியா |

*வட மத்திய அமெரிக்க பிராந்தியம்*

| | |
|---|---|
| ஜிம் பாண்ட் | லாரி மெக்இன்டயர் |

*வடமேற்கு அமெரிக்க பிராந்தியம்*

| | |
|---|---|
| ரான்டால் ஜெ. கிராக்கர் | ஜோயல் கே. பியர்சால் |

*தென் அமெரிக்க பிராந்தியம்*

| | |
|---|---|
| அடால்பொர்டோ ஹெரிரா குவெல்லோ | கிளாடியா ஆரியாஸ் |
| பொர்னாண்டோ ஆலிவெரியா | ஜேகப் ரிவரா மெதினா |
| அமாடு டைக்செரா | எமர்சன் நாடால் |

*தென் மத்திய அமெரிக்க பிராந்தியம்*

| | |
|---|---|
| டெரி சி. ரோலாண்ட் | செரில் குரோச் |

*தென்கிழக்கு அமெரிக்க பிராந்தியம்*

| | |
|---|---|
| லாரி டி. டென்னிஸ் | மைக்கேல் டி. ஜாண்சன் |
| டுவய்ட் எம். கண்டர் ஐஐ | டென்னில் மோர் |

*தென்மேற்கு அமெரிக்க பிராந்தியம்*

| | |
|---|---|
| ரான் பெனிபில் | டானியேல் ஸ்பேட் |

*கல்வி*

| | |
|---|---|
| ஜாண் போலிங் | பாப் புரேவர் |

*அகில உலக நசரேய அருட்பணி இயக்கம்*

பிலிப் வீட்ஹெரில்

*அகில உலக நசரேய வாலிபர் குழு*

எடில் டாக்சிரா

*அகில உலக ஞாயிறு பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியம்*

மிலன் பாட்வாரி

## 902. பொது மேல்முறையீட்டு நீதிமன்றம்

ஹான்ஸ்–கன்டர் மேன், *தலைவர்*
டி. இயான் பிலிட்ஸ்பாட்ரிக்
பிரயன் போவெல்
ஜேநைன் மெட்காப், *செயலாளர்*
டானா வில்சன்

## 903. அகில உலக நசரேய வாலிபக் கூட்டமைப்பு

காரி ஹார்ட்கே, *நசரேய அகில உலக வாலிபக் கூட்டமைப்பின் இயக்குனர்*
எடில் டாக்சிரா, *கூட்டமைப்பின் தலைவர்*
டோனால்டு மில்லர், ஆப்பிரிக்கா
ஜானரி சுயாட் டி கோடாய், ஆசிய–பசிபிக்
டிகோ லோபெஸ், யுரேசியா
மில்டன் கிரே, மீசோஅமெரிக்கா
கிறிஸ்டியானோ மால்டா, தென் அமெரிக்கா
ஜஸ்டின் பிக்காட், அமெரிக்கா/கனடா

## 904. நசரேய அருட்பணி இயக்க அகில உலகக் கூட்டமைப்பு

லோலா பிரிக்கி, *அகில உலக இயக்குனர்*
பிலிப் வெதரில், *அதிபர்*
டேவிட் டி கோகர், ஆப்பிரிக்க பிராந்தியம்
பாலின் ஷெப்பர்ட், ஆசிய–பசிபிக் பிராந்தியம்
பென்னி உரி, கனடா பிராந்தியம்
கார்லா போவெட், மத்திய அமெரிக்க பிராந்தியம்
காதி பெல்லி, கிழக்கு மத்திய அமெரிக்க பிராந்தியம்
ஷாரன் கெஸ்லர், கிழக்கு அமெரிக்க பிராந்தியம்
காதி டாரண்ட், யுரேசியா பிராந்தியம்
பிளான்கோ காம்போஸ், மீசோ அமெரிக்க பிராந்தியம்
ராண்டா ரோட்ஸ், வடக்கு மத்திய அமெரிக்க பிராந்தியம்
டெப்ரா ஓல்கெர், வடமேற்கு அமெரிக்க பிராந்தியம்
ஆன்டானியோ கார்லோஸ், தென் அமெரிக்க பிராந்தியம்
மேரி யூனியன், தென் மத்திய அமெரிக்க பிராந்தியம்
டெரிசா ஹாட்ஜ், தென்கிழக்கு அமெரிக்க பிராந்தியம்
மார்தா லண்ட்குவிஸ்ட், தென்மேற்கு அமெரிக்க பிராந்தியம்
வெர்னி வார்ட், அகில உலக அருட்பணி இயக்குனர்
அதிகாரத்தில் இருக்கும் பொதுக் கண்காணிப்பாளர் (ஆலோசனையாளர்)

## 905. நசரேய மேல்நிலைக் கல்வி நிறுவனங்கள்

அகில உலக நசரேய மேல்நிலைக் கல்விக் குழு

### *ஆப்பிரிக்க பிராந்தியம்*

ஆப்பிரிக்க நசரேய பல்கலைக்கழகம்
நைரோபி, கென்யா – கிழக்கு ஆப்பிரிக்கா
கிழக்கு ஆப்பிரிக்க நசரேய வேதாகமக் கல்லூரி
நைரோபி, கென்யா – கிழக்குப் பகுதிகள்
நசரேய இறையியல் கல்லூரி
ஹனிடியூ, தென் ஆப்பிரிக்கா – தெற்குப் பகுதிகள்
மத்திய ஆப்பிரிக்காவின் நசரேய இறையியல் கல்லூரி
மலாவி, மத்திய ஆப்பிரிக்கா – தென் கிழக்குப் பகுதி
நசரேய இறையியல் இன்ஸ்டியூட்
மத்திய மற்றும் மேற்குப் பகுதிகள்
செமினரி நசரேய டி காபோ வெர்டி
சான்டியாகோ, கேப் வெர்டி
செமினரி நசரேய எம் மொகாம்பிகு
மபூடோ, மொகாம்பிகு – லூசுபோன் பகுதி
தெற்கு ஆப்பிரிக்க நசரேய பல்கலைக்கழகம்
மான்சினி, சுவாசிலாந்து – தெற்கு ஆப்பிரிக்கா

### *ஆசிய–பசிபிக் பிராந்தியம்*

ஆசிய–பசிபிக் இறையியல் செமினரி
ரிசால், பிலிப்பைன்ஸ்
இந்தோனேசியா நசரேய இறையியல் கல்லூரி
யோக்யாகார்டா, இந்தோனேசியா
ஜப்பான் நசரேய இறையியல் செமினரி
டோக்கியோ, ஜப்பான்
கொரியா நசரேய பல்கலைக்கழகம்
சூங் நாம், கொரியா
மெலினேசியா நசரேய வேதாகமக் கல்லூரி
மவுண்ட் ஹாகன், பபுவா நியூ குனியா
மெலினேசியா நசரேய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
மவுண்ட் ஹாகன், பபுவா நியூ குனியா
நசரேய செவிலியர் கல்லூரி
மவுண்ட் ஹாகன், பபுவா நியூ குனியா
நசரேய இறையியல் கல்லூரி
தார்ன்டான்ட்ஸ், குயின்ஸ்லாந்து, ஆஸ்திரேலியா
பிலிப்பைன் நசரேய வேதாகமக் கல்லூரி

பகுவா சிட்டி, பிலிப்பைன்ஸ்
தென் பசிபிக் நசரேய இறையியல் கல்லூரி
சுவா, பிஜி
தென்கிழக்கு ஆசிய நசரேய வேதாகமக் கல்லூரி
பாங்காக், தாய்லாந்து
தாய்வான் நசரேய இறையியல் கல்லூரி
பெட்டோ, தாய்வான்
விசயன் நசரேய வேதாகமக் கல்லூரி,
செபு சிட்டி, பிலிப்பைன்ஸ்

*யுரேசியா பிராந்தியம்*

கிழக்கு மெடிட்டரேனியன் நசரேய வேதாகமக் கல்லூரி
காராக், யோர்தான் – கிழக்கு மெடிட்டரேனியன் பகுதிகள்
ஐரோப்பிய நசரேய கல்லூரி
ஐரோப்பா மற்றும் யூரேசியா பகுதிகள்
நசரேய செவிலியர் பயிற்சிக் கல்லூரி
வாசிம், மகாராஷ்ட்ரா, இந்தியா
நசரேய இறையியல் கல்லூரி – மான்செஸ்டர்
மான்செஸ்டர், இங்கிலாந்து
தெற்கு ஆசியா நசரேய வேதாகமக் கல்லூரி
பெங்களூரு, இந்தியா – இந்தியா மற்றும் தெற்கு ஆசியா

*மீசோ அமெரிக்க பிராந்தியம்*

கரீபிய நசரேய கல்லூரி
சான்டா குரூஸ் – ட்ரினிடாட் – ஆங்கில, டச்சு மற்றும் பிரஞ்சு அண்டிலிசு
இன்ஸ்டிடுட் பிப்லிகோ நசரேனோ
கோபான், ஆல்டா வெராபாஸ், கோட்டமாலா – வடக்கு கோட்டமாலா
செமினரி தியாலஜி டி லாஸ் அமெரிக்காஸ்
பிடியான்–வில்லி, ஹைடி – ஹைடி நாடு
செமினரியோ நசரேனோ டி லாஸ் அமெரிக்காஸ்
சான் ஜேஸ், கொஸ்டா ரிக்கா – லத்தீன் அமெரிக்கா மற்றும் மத்தியப் பகுதிகள்
செமினரியா நசரேய டாமினிக்கானோ
சான்டோ டாமிங்கோ, டாமினிக்கன் குடியரசு – டாமினிக்கன் குடியரசு
செமினரியா நசரேய மெக்சிகானோ
மெக்சிகோ சிட்டி டி. எப்., மெக்சிகோ – மெக்சிகோ வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள்
செமினரியா டியாலோஜிகோ நசரேய
கோடிமாலா சிட்டி, கோடிமாலா – மத்திய அமெரிக்க பகுதி
செமினரியா டியாலோஜிகோ நசரேய கியூபானோ

லா லிசா, லா ஹபானா, கியூபா – கியூபா நாடு
பாக்குல்டாட் நசரேய டோ பிராசில்
சா பவுலோ, பிரேசில் – பிரேசில் நாடு
செமினரியா பிப்ளிகோ நசரேய சிலி
சான்டியாகோ, சிலி – சிலி நாடு
செமினரியா நசரேய பொலிவியானோ
லா பாஸ், பொலீவியா – பொலீவியா நாடு
செமினரியா டியாலோஜிகோ நசரேய டெல் கொனோ சுர்
பியூனோஸ் ஆரிஸ், அர்ஜெண்டீனா – தெற்கு கோன் பகுதிகள்
செமினரியா டியாலோஜிகோ நசரேய டெல் பெரு
சிக்லயோ, பெரு – பெரு நாடு
செமினரியா டியாலோஜிகோ நசரேய டோ பிரேசில்
சா பவுலோ, பிரேசில் – பிரேசில் நாடு
செமினரியா டியாலோஜிகோ நசரேய சூடாஅமெரிக்கானோ
குவிட்டோ, ஈக்குவடார் – வடக்கு ஆண்டிய பகுதி

*அமெரிக்கா/ கனடா பிராந்தியம்*

அம்புரோஸ் பல்கலைக்கழக கல்லூரி
கிளர்கரி, ஆல்பெர்டா, கனடா
கிழக்கு நசரேய கல்லூரி
குவின்சி, மசாசுசெட்ஸ், அமெரிக்கா
மத்திய அமெரிக்க நசரேய பல்கலைக்கழகம்
ஒலாதே, கான்சாஸ், அமெரிக்கா
மவுண்ட் வெர்னான் நசரேய பல்கலைக்கழகம்
மவுண்ட் வெர்னான், ஒஹாயோ, அமெரிக்கா
நசரேய வேதாகமக் கல்லூரி
லெனிக்சா, கான்சால், அமெரிக்கா
நசரேய இறையியல் செமினரி
கான்சாஸ் சிட்டி, மிசவுரி, அமெரிக்கா
வடமேற்கு நசரேய பல்கலைக்கழகம்
நாம்பா, ஐடாகோ, அமெரிக்கா
ஆலிவெட் நசரேய பல்கலைக்கழகம்
போர்பனியாஸ், இல்லியானோஸ், அமெரிக்கா
பாயிண்ட் லோமா நசரேய பல்கலைக்கழகம்
சான் டியாகோ, காலிபோர்னியா, அமெரிக்கா
தெற்கு நசரேய பல்கலைக்கழகம்
பெத்தானி, ஓக்லஹோமா, அமெரிக்கா
டிரிவாக்கோ நசரேய பல்கலைக்கழகம்
நாஷ்வில், டென்னிஸ்ஸி, அமெரிக்கா

## III. நிர்வாகக் கொள்கைகள்

**906. வருடாந்திர நிதி.** வருடாந்திர நிதியை அளித்தவர்கள் இறந்துபோன பின்பு அந்த நிதி சட்டபூர்வமான மதிப்புள்ள சொத்தாக ஆகும் வரையில், பொது நிர்வாகக் குழுவோ அல்லது திருச்சபையின் எந்த நிறுவனமுமோ அந்த நிதியைப் பயன்படுத்தக் கூடாது. இத்தகைய கொடைகள், தேசிய நீதிமன்றங்களால் நம்பிக்கை நிதியாக ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் கவனத்தோடு முதலீடு செய்யப்படவேண்டும். (2017).

**907. கடன்.** கடன்களுக்காக எந்த ஒரு நிறுவனமும் தானமாகப் பெறப்படும் உறுதிமொழிகளைப் பயன்படுத்தக்கூடாது. (2017).

**908. வேதாகம சங்கங்கள்**

**1. ஒப்புக்கொள்ளப்பட்ட வேதாகம சங்கங்கள்**

நசரேயத் திருச்சபையானது வேதாகமம் தேவனுடைய எழுத்துமூலமான வெளிப்பாடு என்பதைக் குறிப்பாக வலியுறுத்துகிறது; புதியவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த வேதாகமமே நற்பயன் விளைவிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். வேதாகமப் பிரதிகளுக்கான தேவை எப்போதுமே அதிகரித்துக் கொண்டிருக்கிறபடியால், நாம் கீழ்க்கண்டவாறு தீர்வுகளைக் காண்கிறோம்.

முதலாவதாக, பொதுச் சபையானது, உலகமெங்கும் ஐக்கிய வேதாகம சங்கங்களால் செய்யப்படும் பணிகளுக்கு மனப்பூர்வமான ஒப்புதல் அளிக்கிறது. இந்தப் பணிகளில் அக்கறைக் காட்டுகிறது.

இரண்டாவதாக, கிறிஸ்தவ மக்களின் வாழ்க்கையில் வேதாகமங்களுக்குரிய முக்கியமான இடத்தை வலியுறுத்தும்படி கொண்டாடப்படும் அகில உலக வேதாகம ஞாயிறு அனுசரிக்கப்படுவதை ஆமோதிக்கிறது.

**2. வேதாகம சங்கங்களுக்கான காணிக்கை**

*தீர்வுகாணப்பட்டுவிட்டது*, இந்த முக்கியமான காரியத்தை அறிவிக்கும்படி ஒரு குறிப்பிட்ட வேளையாக, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தின் இரண்டாம் ஞாயிறு அனுசரிக்கப்பட வேண்டும் என்று நசரேயத் திருச்சபை தீர்மானம் செய்கிறது. அவ்வேளையில் ஒவ்வொரு நாடும் அதனுடைய வேதாகம சங்களுக்காகக் காணிக்கையைச் சேகரிக்கும். தேர்ந்தெடுக்கப்படும் வேதாகம சங்கமானது உலகளாவிய ஐக்கியமாகிய வேதாகம சங்கங்களின் முழு அல்லது துணை உறுப்பினராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உறுப்பினர் சங்கம் இல்லாத பட்சத்தில் மறைமாவட்டத்தால் முடிவெடுக்கப்படும் வேதாகம சங்கம் கருத்தில் கொள்ளப்படும். நம்முடைய எல்லாத் திருச்சபைகளும் இதில் பங்கெடுக்கும்படியாக விசேஷமான முயற்சி செய்ய வேண்டும். தங்களுடைய நாட்டின் வேதாகம சங்கங்களுக்கு தங்களுடைய காணிக்கைகளை எப்படி அனுப்பவேண்டும் என்பதைக் குறித்த விதிமுறைகளைப் பெறுவதற்காக எல்லா சபைகளும் தங்களுடைய மறைமாவட்ட அலுவலகத்தைத் தொடர்புகொள்ள வேண்டும்.

**909. சட்டநூல் பதிப்பு பற்றிய தீர்மானம்.** தீர்வுகாணப்பட்டுவிட்டது என்று குறித்துக்கொள்ளுங்கள். பொதுக் கண்காணிப்பாளர் நிர்வாகக் குழுவானது

*சட்டநூல்* பதிப்புக் குழு ஒன்றை நியமித்து அதற்கு அதிகாரமளிக்கும். இந்தக் குழுவானது *சட்டநூலில்* செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றிய இருபத்தி ஒன்பதாவது பொது மாநாட்டின் செயல்பாட்டுப் பதிவேடுகளில் காணப்படும் வேறுபட்ட அறிக்கைகளை ஒருமுகப்படுத்தி *சட்டநூல்* பதிப்புக் குழுவானது தற்போது இருக்கும் *சட்டநூலில்* மாற்றங்களைச் செய்யும். அர்த்தம் மாறாதவாறு பார்த்துக்கொள்வார்கள். அர்த்தம் மாறாமல் சரியான மொழியில் அவர்கள் பதிப்பு சம்பந்தமான மாற்றங்களைச் செய்வார்கள்.

குழப்பமான சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்குப் பதிலாக, எளிதாகப் புரியக்கூடிய சொற்களையும், சொற்றொடர்களையும் சேர்க்கவும், இருபத்தி ஒன்பதாம் பொது மாநாட்டின் தீர்மானங்களுக்கேற்ப அதிகாரங்கள், பத்திகள், பகுதிகள் மற்றும் சட்டநூலின் பிற பிரிவுகளில் எண்களைத் திருத்தியமைக்கவும், இருபத்தி ஒன்பதாம் பொது மாநாட்டின் தீர்மானங்களுக்கேற்ப பொருள் அட்டவணையைத் தயார் செய்யவும் *சட்டநூல்* பதிப்புக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

*சட்டநூலின்* எல்லா மொழிபெயர்ப்புகளையும் மேற்பார்வை செய்வது சட்டநூல் பதிப்புக் குழுவின் கடமை என்றும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது (2017).

**910. சட்டநூல் பிற்சேர்க்கை மறுஆய்வு.** பிற்சேர்க்கையில் காணப்படும் மூன்று மற்றும் நான்காம் பகுதிகளில் இருக்கும் குறிப்புகள் (விதிகள் 906–933) மூன்று நான்காண்டுகால அளவுகளாக அப்படியே காணப்பட்டால், குறிப்பு கமிட்டி இதுபற்றி பொது மாநாட்டில் தீர்மானம் செய்யப்பட வேண்டும் என்று பொதுமாநாட்டின் சம்பந்தப்பட்ட குழுவுக்கு குறிப்பை அனுப்ப வேண்டும். (2013)

**911. குழுக்களின் காலம்.** ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு சிறப்புக் குழு, வேறு ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டால், அடுத்துவரும் பொது மாநாட்டின்போது தாமாகவே கலைக்கப்படும். (2017)

**912. பொது மாநாட்டு அலுவல்கள்** (2017 பொது மாநாட்டு கையேட்டிலிருந்து)

## தீர்மானங்களும் மனுக்களும்

**விதி 14.** பொது மாநாட்டிற்கு தீர்மானங்களைச் சமர்ப்பித்தல். மறைமாவட்ட மாநாடுகள், மறைமாவட்ட மாநாட்டின் அதிகாரம் பெற்ற ஒரு குழு, பிராந்திய கவுன்சில்கள், பொது நிர்வாகக் குழு அல்லது அதனுடைய அங்கீகரிக்கப்பட்ட பிரிவுகள், பொது மாநாட்டின் அலுவல் நிர்வாகக் குழுக்கள் அல்லது பணி மையங்கள், அகில உலக நசரேய அருட்பணி கூட்டமைப்பு, அகில உலக நசரேய வாலிபக் கூட்டமைப்பு அல்லது பொது மாநாட்டைச் சேர்ந்த ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தீர்மானங்களையும் மனுக்களையும் கீழ்க்கண்ட விதிகளுக்கேற்ப பொது மாநாட்டில் பரிசீலனை செய்வதற்காக சமர்ப்பிக்கலாம்.

அ) பொதுச் செயலாளரிடமிருந்து பெறப்படும் அதிகாரபூர்வமான படிவங்களில், தட்டச்சு செய்யப்பட்டு தீர்மானங்களும், மனுக்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ) சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு தீர்மானம் மற்றும் மனுவிலும், அதன் தலைப்புப் பொருள், சமர்ப்பிக்கும் குழு அல்லது பிரதிநிதிகளின் பெயர் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இ) செயல்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்களை நிறைவேற்ற செலவுகள் ஏற்படும் என்றால் அந்தச் செயலைச் செய்வதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்ற மதிப்பைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஈ) *சட்டநூலில்* மாற்றங்களுக்காகக் கொடுக்கப்படும் முன்மொழிதல்கள் எழுத்துமூலமாக அளிக்கப்பட வேண்டும். மாற்றப்பட வேண்டிய சட்டநூல் பத்தி மற்றும் பிரிவு பற்றிய விவரமும், மாற்றப்பட வேண்டிய வாசகங்களும் கொடுக்கப்பட வேண்டும்.

உ) இந்தத் தீர்மானங்களும், மனுக்களும் பொது மாநாடு கூட்டப்படுவதற்கு **முன்பாக டிசம்பர் 1**ஆம் தேதிக்குள்ளாக பொதுச் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவை எண் குறிக்கப்பட்டு, விதி 24 மற்றும் சட்டநூல் விதி 305.1இன் படி குறிப்புக் குழுவுக்கு அனுப்பப்படும்.

ஊ) *சட்டநூலில்* சேர்க்கப்படவேண்டாத தீர்மானங்களில் எந்த நிறுவனம் இதற்குரிய சட்டத்தை இயற்றவேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

**விதி 15, காலந்தாழ்த்திய தீர்மானங்களும், மனுக்களும்.** தீர்மானங்கள், மனுக்கள் மற்றும் பிற காரியங்கள் சட்ட குழு ஆய்வு செய்வதற்காகப் பொதுச் செயலாளரிடம் ஜூன் 1ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பொது மாநாடு கூடுவதற்கு முன்பாகக் கூடும் உலகலாவிய கூடுகைகளின் தீர்மானங்களும் இங்கு பரிசீலனை செய்யப்படும்.

**விதி 16. சட்டநூலில் மாற்றங்கள்.** பொது மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்மானங்கள், மற்ற *சட்டநூல்* அம்சங்களோடு ஒன்றுபடுத்தப்படுவதற்காக *சட்டநூல்* பதிப்புக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

**913. வரலாற்றுப்பூர்வமான இடங்கள்.** மறைமாவட்டமும், பிராந்திய குழுக்களும் தங்களுடைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வரலாற்றுப்பூர்வமான முக்கியத்துவத்தைப் பெறுவதாக சில இடங்களைக் குறிப்பார்கள். ஒரு இடம் வரலாற்றுப்பூர்வமான முக்கியத்துவத்தைப் பெற்று வரலாற்றுப்பூர்வமான இடம் என்று பிரிக்கப்படுவதற்கு அதற்கு குறைந்தது 50 வருடங்களாவது கடந்திருக்க வேண்டும். ஒரு வரலாற்றுப்பூர்வமான இடம் என்பது அப்படிப்பட்ட பட்டத்தைப் பெறுவதற்கு ஆதி கட்டிடங்களையோ அல்லது வேறு கட்டுமானங்களையோ பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. மாநாட்டின் செயலாளர் புதியதாக பட்டமளிக்கப்பட்டிருக்கும் வரலாற்றுப்பூர்வமான இடங்களைக் குறித்து பொதுச் செயலாளரிடம் அறிக்கைக் கொடுப்பார். அதில் எடுக்கப்பட்ட செயல்பாடுகள், அந்த இடத்தைக் குறித்த தகவல்கள் மற்றும் அந்த இடத்தின் முக்கியத்துவம் ஆகியவைக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

மறைமாவட்ட மற்றும் பிராந்திய குழுக்கள் தங்களுடைய குழுக்களில் முக்கியத்துவம் பெறும் வரலாற்றுப்பூர்வமான இடங்களைக் குறிக்கும்படியாகப் பொது நிர்வாகக் குழுவிடம் கேட்கலாம். ஏற்கெனவே குறிக்கப்பட்ட வரலாற்றுப்பூர்வமான

இடங்களே இதற்கு நியமனம் செய்யப்பட வேண்டும். பொதுக் கண்காணிப்பாளர்களோ அல்லது இந்த நியமனங்களை ஆராய்ந்துப் பார்ப்பதற்காகவே நியமிக்கப்படும் குழுவோ அந்த இடம் பொது மாநாட்டில் கருதப்படுவதற்கு முன்பாக அந்த நியமனத்தைக் குறித்து நன்றாக ஆராய வேண்டும்.

பொதுச் செயலாளர் இப்படிப்பட்ட வரலாற்றுப்பூர்வமான இடங்களைக் குறித்த பதிவேட்டை வைத்து, அவைகளைச் சரியான வழியில் வெளிப்படுத்துவார் (விதி 327.2). (2009).

## IV. தற்காலத்திய நடத்தை மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகள்

**914. உடல் உறுப்புக்களைத் தானம் செய்தல்.** தனிப்பட்ட முறையில் எதிர்ப்பில்லாத உறுப்பினர்கள் உடல் உறுப்புத் தானம்/பெறுதலை உயில் மற்றும் காப்பு நிறுவனங்களின் மூலமாகச் செயல்படுத்தும்படி நசரேயத் திருச்சபை ஊக்குவிக்கிறது.

மேலும், உடல் உறுப்புக்களைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்களுக்கு, குணநலன் மற்றும் நீதிசார்ந்த நியாயமான முறையில் இவை விநியோகம் செய்யப்பட வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். (2013)

**915. சாதிப்பாகுபாடுகள்.** எல்லா இனத்து மக்கள்மீதும் கிறிஸ்தவ கருணை காட்டப்படவேண்டும் என்ற தனது வரலாற்றுப்பூர்வமான நிலையை நசரேயத் திருச்சபை மீண்டும் வலியுறுத்துகிறது. தேவனே எல்லா மனிதர்களையும் படைத்தவர் என்றும், அனைத்து மனிதர்களும் ஒரே இரத்தத்தில் படைக்கப்பட்டவர்கள் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

கல்வி வாய்ப்புகள், பொது வசதிகள், இவற்றில் சமமான அணுகுமுறையும், ஒருவரின் திறனுக்கேற்ப, எந்த வித பணி மற்றும் பொருளாதாரப் பாகுபாடுமின்றி சமமான வாய்ப்புகளும், வாக்களிக்கக்கூடிய உரிமையும், இனம், நிறம், மொழி பாகுபாடின்றி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அளிக்கப்பட்டு, சட்டத்திற்கு முன்னர் அனைவரும் சமமாகக் கருதப்பட வேண்டும்.

இன சகிப்புத்தன்மையையும், ஒற்றுமையையும் வளர்க்கக்கூடிய கல்வித் திட்டங்களைத் தொடரும்படியும், வலுப்படுத்தும்படியும் எங்குமுள்ள நமது சபைகளை நாம் வற்புறுத்துகிறோம். நமது மக்களின் செய்கைகளுக்கு எபிரெயர் 12:14 வேத வசனமே வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று நாம் உணர்கிறோம். சபை மற்றும் சமுதாயத்தின் செயல்பாடுகளில் முழுமையான பங்கெடுப்பு இருக்கவேண்டுமென்ற கிறிஸ்தவ இலட்சியத்தை அடைவதற்கு முதற்படியாக, நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும், மற்ற இனத்தார்மீதான தங்கள் சுய அணுகுமுறை பற்றியும், செயல்பாடு பற்றியும் தாழ்மையோடு தங்களைத் தாங்களே சோதித்துக்கொள்ள வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம்.

நீதியான வாழ்க்கைக்கு இருதயத்திலும், வாழ்க்கையிலும் பரிசுத்தமாக இருப்பதே அடிப்படை என்று நமது நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறோம். இயேசு கிறிஸ்துவுக்குத் தம்மை முழுமையாக ஒப்படைப்பதின்மூலம் மனிதர்களின்

இருதயங்கள் மாற்றமடையும்போது, இனக் குழுக்களிடையே கிறிஸ்தவ காருண்யம் ஏற்படும் என்று நாம் விசுவாசிக்கிறோம்; ஆண்டவரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் நேசிப்பதிலும், அயலாரை நம்மைப்போல நேசிப்பதிலும் மெய்யான கிறிஸ்தவ அம்சம் அடங்கியிருக்கிறது என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

எனவே, நாம் சாதி மற்றும் இனம் சம்பந்தமான எந்த ஒரு வேற்றுமையையும், தள்ளிவைத்தலையும், அடிமைப்படுத்துதலையும், அல்லது ஒடுக்குதலையும் நாம் கண்டிக்கிறோம். அவை தேவனுக்கு எதிராகவும், நம்முடைய சக மனிதர்களுக்கு எதிராகவும் செய்யப்படும் மிகவும் மோசமான பாவமாக நாம் கருதுகிறோம். இந்த உலகத்தில் காணப்படும் எந்த வடிவத்திலான பாகுபாட்டினையும் குறிதது புலம்புகிறோம். மனந்திரும்புதல், ஒப்புரவாகுதல் மற்றும் வேதாகமரீதியான நீதியின் மூலமாக அதை எதிர்க்க முற்படுகிறோம். கடந்த காலத்திலும், தற்காலத்திலும் இனத்தைக் குறித்த பாவத்தைச் செய்வதற்கு தெரிந்தோ தெரியாமலோ நாம் நடந்துகொண்ட காரியங்களைக் குறித்து மனந்திரும்புகிறோம். அறிக்கையிட்டும், புலம்பியும் நாம் மன்னிப்பையும் ஒப்புரவாகுதலையும் கேட்கிறோம்.

மேலும், சாதி மற்றும் இனம் சம்பந்தமான அவமானம் மற்றும் ஒடுக்குதலுக்கு தனிப்பட்ட, நிறுவனம் சார்ந்த, மற்றும் வடிவமைப்பு சார்ந்த தவறான அபிப்பிராயத்தை எதிர்த்து, அதிலிருந்து மீண்டு வரும் மனித போராட்டத்தைக் காட்டிலும் வேறு ஒப்புரவாகுதல் இல்லை. தவறான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கும் எல்லா செயல்கள் மற்றும் வடிவமைப்புகளை நீக்கி, மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதலை ஏற்படச் செய்யும் வாய்ப்புகளைத் தேடி, சிறுபாண்மையாக ஒதுக்கப்பட்டிருப்பவர்களை மேம்படுத்துவதற்குச் செயல்களைச் செய்ய வேண்டும் என்று எல்லா இடங்களிலும் இருக்கும் நசரேயர்களை நாங்கள் அழைக்கிறோம். (2017).

**916. பலவீனரைக் கஷ்டப்படுத்துதல்.** நசரேயத் திருச்சபையானது எந்த வயதிலும், எந்த பாலினமாக இருந்தாலும், ஒருவர் கஷ்டப்படுத்தப்படுதலை வெறுக்கிறது. தனது வெளியீடுகள் மூலமாகவும், பொருத்தமான கல்விப் போதனைகளை அளிப்பதன் மூலமாகவும் பொது மக்கள் இதைக் குறித்து இன்னும் அதிகமாக விழிப்புணர்வு பெற உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

நசரேயத் திருச்சபையானது தன்னுடைய பாரம்பரியத்தை மறுபடியுமாக உறுதி செய்து, சபையின் அதிகாரத்தில் செயல்படுகிறவர்கள் பாலியல்ரீதியான மற்றும் வேறு வகையான கஷ்டப்படுத்துதலை பலவீனருக்குச் செய்திருக்கக் கூடாது என்கிறது. நசரேயத் திருச்சபையின் அதிகாரம் அல்லது நம்பிக்கையான பதவிகளில் மனிதர்களை வைக்கும்போது, முந்தைய நடத்தையானது எதிர்காலத்தில் அவர் எப்படி நடந்துகொள்வார் என்பதற்கு முன்மாதிரியாக இருக்கிறது என்று கருதுகிறது. முந்தைய நிலையில் வகித்த நம்பிக்கைக்குரிய அல்லது அதிகாரத்திற்குரிய பதவியில் பாலியல்ரீதியான தவறுகளையோ அல்லது வேறு விதத்தில் பலவீனரைக் கஷ்டப்படுத்தியிருந்தாலோ எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தவறான நடத்தை நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராவிட்டால் அவர்களை அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுப்பதில்லை. வெறுமனே மனவருத்தத்தை மட்டும் கொண்டிருப்பதின் மூலமாக எதிர்காலத்தில் தவறான நடத்தையில் ஈடுபட

மாட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது. இப்படி மனவருந்துவதோடு சேர்த்து போதுமான காலம் நடத்தையில் மாறுதலோடு வாழ்ந்து காண்பித்து அந்தத் தவறு மறுபடியுமாக எதிர்காலத்தில் நடப்பது சாத்தியமில்லை என்பதை நிரூபித்திருக்க வேண்டும். (2009).

**917. ஏழைகளுக்கு நமது பொறுப்பு.** இயேசு தமது சீடர்கள் இந்த உலகத்தின் எளியவர்களோடு சிறப்பான உறவு வைத்திருக்க வேண்டுமென்று கட்டளையிட்டார் என்று திருச்சபை விசுவாசிக்கிறது. முதலாவதாக, கிறிஸ்துவின் சபையானது தன்னைத் தானே எளிமையுள்ளதாகவும், செல்வம் மற்றும் டாம்பீகத்தில் ஈடுபாடு கொள்ளாததாகவும், காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும், இரண்டாவதாக, எளியவர்களைக் கவனித்தல், அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் அளித்தல் இவற்றில் அக்கறை கொள்ள வேண்டும் என்றும் திருச்சபை விசுவாசிக்கிறது. கடவுள் எளியவர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும், தமக்காகப் பேசமுடியாத நிலையில் சமுதாயத்தின் அங்கமாக இருப்பவர்களையும் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு உதவுகிறார் என்பதை வேதாகமம் முழுவதிலும், இயேசுவின் எடுத்துக்காட்டான வாழ்க்கையிலும் காண்கிறோம். இதைப் போலவே, நாமும் வசதியான நிலையிலிருந்துகொண்டு வெறுமனே தர்மம் செய்து கொள்வதைப்போலின்றி, எளியவர்களை இனங்கண்டுகொண்டு அவர்களோடு உறவுகொள்ள வேண்டுமென்பதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர வேண்டும். எளியவர்களுக்கான கருணை ஊழியம் என்பது தர்மச் செயல்கள் மட்டுமின்றி அவர்களுக்கு வாய்ப்புகளும், சமத்துவம், நீதியும், கிடைக்கப் போராடுவதும்கூட என்று நாம் கருதுகிறோம். அன்பின் மூலம் செயல்படும் விசுவாசத்தை நாடும் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையின் மிகத் தேவையான அம்சம், எளியவர்களுக்கான கிறிஸ்தவ பொறுப்பே என்று நாம் விசுவாசிக்கிறோம்.

இறுதியாக, எளியவர்களுக்கான ஊழியம் என்பது கிறிஸ்தவ பரிசுத்தத்தின் பிரிக்கமுடியாத ஒரு அம்சம் என்றே நாம் கருதுகிறோம். ஏனென்றால், அது ஒரு கிறிஸ்தவனை அவனது சொந்த தனிப்பட்டபூரணத்துவ நிலைக்கு மேலாக ஒரு நீதியான, சமநிலையான சமுதாயத்தையும், உலகத்தையும் உருவாக்க அவனை வழிநடத்துகிறது. பரிசுத்தமானது விசுவாசிகளை நமது உலக மக்களின் பரிதாபகரமான பொருளாதாரத் தேவைகளிலிருந்து தனித்திருக்கச் செய்யாமல், தமது பொருட்களை அத்தகைய தேவைகள் சந்திக்கப்படும்படி அளிக்குமாறும், மற்றவர்களின் தேவைகளுக்கேற்ப தமது தேவைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் செய்கிறது. (2013)

(யாத்திராகமம் 23:11; உபாகமம் 15:7; சங்கீதம் 41:1; 82:3; நீதிமொழிகள் 19:17; 21:13; 22:9; எரேமியா 22:16; மத்தேயு 19:21; லூக்கா 12:33; அப்போஸ்தலர் 20:35; 2 கொரிந்தியர் 9:6; கலாத்தியர் 2:10)

**918. பாலின பெயர்களைக் குறிக்கும் மொழி.** மனிதர்களைக் குறிக்கும்போது அவர்களுடைய பாலினத்தையும் சேர்த்து குறிக்கும் மொழியைப் பயன்படுத்தும்படியாக நசரேயத் திருச்சபையானது உறுதிப்படுத்தி, ஊக்கமளிக்கிறது. விதி எண் 501இல் கொடுக்கப்பட்டிருக்கும் பாலின சமத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் சட்டநூல்

உட்பட எல்லா வெளியீடுகளிலும், பொது இடங்களில் பயன்படுத்தப்படும் மொழியிலும் இந்த அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட வேண்டும். வேதாகமரீதியான மேற்கோள்கள் அல்லது தேவனைக் குறிக்கும் எந்த இடங்களிலும் இப்படிப்பட்ட மொழி மாற்றங்கள் செயல்படுத்தப்படக்கூடாது.

**919. திருச்சபையும், மனித சுதந்திரமும்.** நமது மேன்மையான சீர்த்திருத்த சபை பாரம்பரியம், புரிந்துகொள்ளப்பட்டு, காக்கப்படவேண்டும் என்ற கரிசனையோடு, தேவனின் படைப்பில் மனிதனின் மாண்பும், அவனது சுய மனச்சாட்சியின் பரிசுத்தமும் பற்றிய வேதாகமக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே அரசியல் மற்றும் சமய சுதந்திரம் அமைத்துள்ளது என்பதை நாம் நமது மக்களுக்கு நினைவூட்டுகிறோம். இந்த வேதாகமக் கொள்கைகளை ஆதரிக்கும் வகையில் நமது மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுக்க வேண்டும் என்றும், இந்த விலைமதிப்பற்ற சுதந்திரத்திற்கு விரோதமான அச்சுறுத்தல்கள் பற்றி எப்போதுமே விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் நாம் நமது மக்களுக்கு ஊக்கமளிக்கிறோம்.

இந்த சுதந்திரங்கள் எப்போதுமே பாதிக்கப்படும் நிலையிலிருப்பதால், இந்தக் கொள்கைகளை நம்பக்கூடியவர்களும் பொது நம்பிக்கையைப் பொருத்தவரையில் தேவனுக்கும், தங்களைத் தேர்ந்தெடுக்கும் தொகுதியினருக்கும் மட்டுமே கடமைப்பட்டவர்களுமான, நல்ல நபர்கள் அரசின் அனைத்து மட்டங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகிறோம். சிறப்பான சலுகைகளை நாடும் எந்தச் சமயக் குழுவினராலும் இந்தக் கொள்கைகள் மீறப்படுவதை நாம் எதிர்க்கிறோம். அரசியல் மற்றும் சமுதாயக் கட்டுப்பாடுகளின் காரணமாக இப்படிப்பட்ட சுதந்திரத்தை மறுக்கப்பட்ட சகோதர, சகோதரிகளோடு நாம் ஒருமைப்பாடோடு நிற்கிறோம்.

தீர்க்கத்தரிசனக் கண்ணோட்டத்தோடு செயல்படுவதும், ''நீதி ஜனத்தை உயர்த்தும்'' (நீதிமொழிகள் 14:34) என்பதை எப்போதுமே மக்களுக்கு நினைவூட்டுவதும் சபையின் கடமைகள் என்று நாம் விசுவாசிக்கிறோம். (2017)

**920. மனித சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் பிரகடனப்படுத்துதல்.** நசரேயர்களாகிய நாம், பரிசுத்தம், பரிபூரணம் மற்றும் மறுசீரமைக்கும் வாழ்க்கையை வாழ்வதற்காகத் தெய்வீக அழைப்பைப் பற்றிக்கொண்டிருக்கிறோம். இதில் எல்லாக் காரியங்களும், மனிதர்களும் தேவனோடு ஒப்புரவாகியிருக்கிறார்கள். இதற்குப் பதிலாக, பரிசுத்த ஆவியானவர் சிறுபாண்மையினருக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், உடைந்துபோனவர்களுக்கும், காயப்பட்டிருப்பவர்களுக்கும், சுதந்திரத்தைக் கொண்டு வருகிறார். அநீதிகளுக்கு நீதியைக் கொண்டு வருகிறார். பாவத்தினால் உண்டாக்கப்படும் சுயநலமான தாக்கங்களை இல்லாமல் செய்கிறார். இவை எல்லாம் தேவனுடைய ஆளுகையின்போது மறுசீரமைக்கப்படும்வரை இவைகளைச் செய்கிறார்.

நம்முடைய வெஸ்லிய பரிசுத்த பாரம்பரியம் மற்றும் பண்புகளோடு ஒத்திருக்கும் வகையில், தற்காலத்திய அடிமைத்தனம், சட்டவிரோதமான அல்லது கட்டாயப்படுத்தப்படும் வேலை, மற்றும் மனிதர்களையும், சரீரங்களையும் கடத்துதலை எதிர்க்கிறோம்.

இந்த உறுதிப்பாடுகளை நினைவில் கொண்டு,

சர்வதேச நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்கள் மற்றும் சபையார் அனைவரும் பின்வரும் காரியங்களைச் செய்வார்கள் என்று உறுதிபடுத்துகிறோம்:

1. பரிசுத்த மக்களாகிய நாம், நீதியைப் பின்தொடரும் நம்முடைய தேடுதலில், நம்முடைய முந்தைய காலத்தில் நாம் செய்த நியாயமில்லாத காரியங்களுக்காக மனந்திரும்பி, நம்முடைய தற்காலத்தைச் சரிசெய்து, நியாயமான எதிர்காலத்தை உருவாக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்கிறோம்.
2. மற்றவர்களை ஒடுக்குபவர்களை நியாயந்தீர்த்தல்;
3. சட்டவிரோதமான அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட வேலை, உடல் உறுப்புகள் திருடப்படுதல் மற்றும் பாலியல்ரீதியான அடிமைத்தனத்தில் பிடிபட்டிருப்பவர்களுக்கு கருணையுள்ளம் கொண்ட அக்கறையை வழங்குதல் (இதோடு சேர்த்து நமக்கு இன்னும் தெரியாமல் இருக்கும் வேறு விதமான ஒடுக்குதல்களையும் சேர்த்து).
4. ஒடுக்கப்பட்டவர்களின் குரல்களைத் தொடர்ந்து கேட்டு அவர்களுக்காகப் பேச வேண்டும்;
5. அநியாயத்தை எதிர்த்து, அது ஏற்படும் காரணங்களுக்கு எதிராகத் தாழ்மையோடு பணியாற்றுதல்;
6. சுதந்திரத்தை நோக்கிச் சேர்ந்து பயணிப்பதைத் தடுத்துக் கட்டிப்போடும் காரியத்திற்கு எதிராக நம்முடைய சகோதர சகோதரிகளோடு ஒருமைப்பாடோடு செயல்படுவது;
7. பலவீனர்களாக இருக்கிறவர்களிடத்தில் பக்தியுள்ள பழக்கவழக்கங்களான மீட்பு, மறுசீரமைப்பு, சுகமளித்தல் மற்றும் சுதந்திரத்தின் மூலமாக வாருங்கள் (1 யோவான் 3:8).

நம்முடைய வெஸ்லிய–பரிசுத்த கிறிஸ்தவ பாரம்பரியத்தில் கட்டப்பட்டதும், பரிசுத்தத்திற்காக அழைக்கப்பட்டதுமானதில், நாம் பின்வரும் உறுதிகளை எடுக்கிறோம்:

1. நீதி, ஒப்புரவாகுதல் மற்றும் சுதந்திரத்தைத் தேடிச் செல்வது என்பது தேவனுடைய பரிசுத்தம் மக்களில் வெளிப்படுவதின் அடையாளமாக இருக்கிறது என்று நாம் உறுதிபடுத்துகிறோம். நாம் நம்மையும், நம்முடைய சபையின் ஆதாரங்களையும் கொண்டு அடிமைத்தனம், கடத்தல் மற்றும் ஒடுக்குதலுக்கு எதிராகப் பணியாற்றுவதற்கு ஒப்புக்கொடுக்கிறோம். அதோடு இதற்கு நம்பிக்கையோடு மாற்றைக் கொடுக்கும் காரணத்தோடு செயல்படும் தொடர்புநிலைகள், உரையாடல்கள் மற்றும் செயல்பாடுகளில் பங்குபெறவும் ஒப்புக்கொடுக்கிறோம்.
2. திருச்சபைகள் தேவனுடைய ஆளுகை இன்னும் அதிகமாக வெளிப்படுவதற்கு ஏற்றவாறு தேவனுடைய பரிசுத்த அன்பின் உந்துதலுக்கு உண்மையுள்ளவர்களாக பதில் சொல்ல வேண்டும் என்று உறுதிபடுத்துகிறோம். நாம் உண்மையுள்ள விசுவாசிகளாக நம்முடைய எண்ணம், வார்த்தை மற்றும் செயல்களில், பொருளாதாரீதியாகவும், அரசியல், சுயநலம் மற்றும் தீயக் கட்டுப்பாடுகள் மற்றும் மனிதர்களின்

காரணமாக ஒடுக்கப்பட்ட, சிறையில் அடைக்கப்பட்ட, கடத்தப்பட்ட மற்றும் துன்புறுத்தப்பட்டவர்களின் குரல்களைக் கேட்கும் பரிசுத்த தேவனுக்கு இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

3. நியாயத்தோடு நடந்துகொள்ளுதல் என்பது நம்மைச் சுற்றியிருப்பவர்களைக் கருணையுள்ளத்தோடு பார்த்துக்கொள்வது, மற்றும் அநீதியைச் சுட்டிக்காட்டுவது மற்றும் அதை உருவாக்கும் அதிகாரங்களை எதிர்ப்பது போன்றவையே ஆகும். நியாயமாக நடந்துகொள்வது மற்றும் அன்புள்ள இரக்கத்தோடு இருப்பதன் காரணமாக தேவனுடைய மக்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் முன்பும், இன்றைய காலகட்டத்தின் கொள்கைகள் முன்பும் பிரச்சினையில் ஆழ்த்தியிருக்கிறது. சமமாக நடத்தப்படுதல், ஒருவருக்கொருவர் இருக்கும் வேறுபாடுகளைச் சகித்துக்கொள்ளுதல், அல்லது ஒடுக்கப்பட்டவர், ஒடுக்கப்படுத்துபவர் இருவரின் நிலைகளையும் மாற்றுவது போன்றவற்றிற்கும் அப்பால் இருக்கவேண்டும் என்று தேவனுடைய நீதி நம்மை அழைக்கிறது. இயேசுவின் எடுத்துக்காட்டின் மூலமாக நாம் நீதிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இதன் மூலமாக நாம் மற்றவர்களுக்காக நம்மையே விட்டுத்தரும் மனதைப் பெற்றிருக்கிறோம்.

4. கிறிஸ்தவ நீதி என்பது தனிப்பட்ட மற்றும் சமுதாயம் சார்ந்த அறிக்கையிடுதல், மனந்திரும்புதல் மற்றும் மன்னிப்பு ஆகியவற்றைத் தேவையான படிகளாகக் கொண்டிருக்கிறது என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம்.

5. நாம் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் நீதிக்கும், நம்பிக்கையான பழக்கவழக்கங்களுக்கும் ஆதரவளிக்கிறவர்களாக வாங்குகிறவர்களாக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறோம். இதன்மூலமாக கிறிஸ்துவின் மனதுருக்கம் நிறைந்த நம்பிக்கையையும், அவர் எல்லா மக்களின் மீதும் கொண்டிருந்த அன்பையும் வெளிப்படுத்துகிறோம். மனிதர்கள் வாழமுடியாத சூழ்நிலைகளை உருவாக்கும் நிலைப்பாடுகளை நாம் நம்மை அடையாளப்படுத்திக்கொள்கிறோம். கேட்கப்படாதவர்களுக்காக நாம் பேசுகிறோம், பலவீனமானவர்களின் பக்கத்தில் மீட்பு, சீரமைப்பு மற்றும் சுதந்திரத்தை வழங்கும் பழக்கவழக்கங்களைக் கொடுத்து நடக்கிறோம்.

6. ஒடுக்குதலுக்கும், அநீதிக்கும் நம்பிக்கையுள்ள மாற்றைக் கொடுக்கக்கூடிய மக்களாக இருக்கும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம். பரிசுத்த வாழ்க்கையிலும், நோக்கத்தோடும், செயல்படுத்துதலோடும் நீதியை மக்களுக்கும், சூழ்நிலைகளுக்கும், நிலைப்பாடுகளுக்கும், தேசங்களுக்கும் கொண்டுவருவதிலும் நாம் பரிசுத்த தேவனை வெளிப்படுத்துகிறோம். நாம் எல்லோரும் பாடுகளை அனுபவிக்காவிட்டாலும், கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் எல்லாவற்றையும் சீரமைக்கும் மீட்பின் நிறுவனத்தில் தேவனுடைய பரிசுத்தத்தைச் சுகமளிக்கும் வகையில் கொண்டு கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறோம்.

7. எல்லோரும் சேர்ந்து பணியாற்றும் ஒரு தொடர்புநிலையாக நாம் ஆழமாகச் சிந்தித்து, முழுமையாகப் பணியாற்றி, உள்ளூர் மற்றும் அகில உலகத்தில் சேர்ந்து செயல்பட வேண்டும் என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம். தற்காலத்திய அடிமைத்தனத்திற்குப் பின்னணியில் மிகவும் கடினமான பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே இதற்குப் பல வகையான தீர்வுகள் காணப்பட வேண்டும்.

கிறிஸ்தவ சமுதாயத்தில் நாம் யாராக இருக்கிறோம் என்பதலிருந்து இது புறப்பட்டு, நாம் செய்யும் காரியங்களில் இயற்கையாகவே வந்துவிடும்.

எனவே நாம் பின்வருவனவற்றை உறுதிமொழியாக எடுத்துக்கொள்கிறோம்:

1. தனியாகவும், சேர்ந்தும், தனிநபர்களாகவும், நிறுவனங்களாகவும், நம்முடைய வெஸ்லிய பரிசுத்த அடையாளத்திற்கு ஒப்பாக இருக்கும்படியாகவும், மனதுருக்கத்தோடு ஊழியம் செய்து, ஒடுக்கப்படும் நடைமுறைகளுக்கு சவால் விடுதல்.
2. செயல்பூர்வமான, ஞானமான, நிலையான செயலைச் செய்வதற்கு ஆதரவளித்து, ஊக்கப்படுத்தி, ஆதாரப்படுத்தி, திட்டமிட்டு, சேர்ந்து செயல்படுதல்.
3. கிறிஸ்துவை மையத்தில் வைத்திருக்கும் ஆராதிக்கும் சமூகமாக, ஆவியானவரின் வல்லமையை நம்பிக்கையின் செயல்பாடாக உள்ஏற்றப்பட்டு பணியாற்றுதல்.
4. ஆழமாகச் சிந்தித்து, சிறப்பாக ஜெபித்து, தைரியமாகச் செயல்படுதல்.

இதற்காகவே நாம் தேவனுடைய ராஜ்யம் "பரலோகத்தில் இருப்பதைப்போல பூமிலேயும்" வரும்வரை வாழ்ந்து பாடுபடுவோம். (2017)

**921. சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்களின் மதிப்பு.** ஒவ்வொரு கிறிஸ்தவனும் "ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற" (நீதிமொழிகள் 31:8) இருக்க வேண்டும் என்று வேதாகமம் கட்டளையிடுகிறது. நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் தேவனுடைய கிருபையைக் குறித்து தெரிவிக்க வேண்டும் என்று ஷெமா (உபாகமம் 6:4–7; 11:19) நம்மை வலியுறுத்துகிறது. சங்கீதம் 78:4 இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது, "பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்" இயேசுவானவரும் லூக்கா 18:16இல் இதை உறுதிப்படுத்துகிறார் "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவைகளைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது."

வேதாகம பார்வைக்கு பதில் கொடுக்கும் விதமாக, சிறுபிள்ளைகள் தேவனுக்கு முக்கியமானவர்களாகவும், அவருடைய ராஜ்யத்தில் முக்கியத்துவம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நசரேயத் திருச்சபை ஒப்புக்கொள்கிறது. நம்முடைய பிள்ளைகளை நேசித்து, வழிநடத்தி, பாதுகாத்து, நிலைநிறுத்தி, வழிநடத்தி, அவர்களுக்காகப் பரிந்துபேச வேண்டும் என்று தேவன் நம்மை வழிநடத்துகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். இரட்சிப்பு, பரிசுத்தம், மற்றும் சீஷத்துவம் ஆகியவை சிறுபிள்ளைகளின் வாழ்க்கையில் சாத்தியமானவையாகவும், தவிர்க்கமுடியாதவையாகவும் இருக்கின்றன. சிறு பிள்ளைகள் வெறுமனே வழியாக மட்டும் இல்லாமல், அவர்களும் கிறிஸ்துவின் சரீரத்தில் முழுமையாகப் பங்குபெறுகிறவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் கண்டிருக்கிறோம். சிறுபிள்ளைகள் பயிற்சியில் இருக்கும் சீஷர்களாக இருக்கிறார்கள். அவர்கள் காத்திருக்கும் சீஷர்கள் கிடையாது.

எனவே சிறுபிள்ளைகளுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் முழுமையானதும், மனமாற்றத்தை விளைவிப்பதுமான ஊழியமே எல்லா உள்ளூர் சபைகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பின்வரும் காரியங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்:

- செயல்பூர்வமான மற்றும் அதிகாரமளிக்கும் ஊழியங்களைப் பிள்ளைகளுக்கு வழங்குதல் – சரீரப்பிரகாரமாகவும், சிந்தனையிலும், உணர்ச்சிப்பூர்வமாகவும், சமூகரீதியாகவும் மற்றும் ஆவிக்குரியரீதியாகவும்.
- தற்காலத்தில் சிறுபிள்ளைகளைப் பாதிக்கும் சமூக நீதி சார்ந்த பிரச்சினைகளில் கிறிஸ்தவ நிலைப்பாட்டை வலியுறுத்துதல்
- ஊழியம் மற்றும் விசுவாச சமுதாயத்தின் ஊழியத்தில் சிறுபிள்ளைகளைத் தொடர்புபடுத்துதல்
- சிறுபிள்ளைகளைச் சீஷராக்குதல் மற்றும் மற்றவர்களைச் சீஷராக்கும்படியாக அவர்களுக்குப் பயிற்சியளித்தல்
- தங்களுடைய பிள்ளைகளிடத்தில் ஆவிக்குரியரீதியான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குப் பெற்றோரை ஆயத்தப்படுத்துதல்.

திருச்சபையின் கல்வி நிறுவனங்கள் (வேதாகம பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இறையியல் கல்லூரிகள்) மாணவர்களைத் தலைமைத்துவத்திற்காக ஆயத்தப்படுத்துகிற காரணத்தால் அவை சிறுபிள்ளைகளின் மதிப்பின் தரிசனம் மற்றும் இலக்கைச் செயல்படுத்துவதில் முக்கியமான பங்களிக்கின்றன. அவை உள்ளூர் சபை மற்றும் குடும்பங்களோடு சேர்ந்து அடுத்தத் தலைமுறை சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்களை வளர்ப்பதில் போதகர் மற்றும் சாதாரண மக்களை ஆயத்தப்படுத்துவதைக் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்கள் வேதாகமரீதியாகவும், இறையியல்ரீதியாகவும் கற்றுத்தேர்ந்து, சுவிசேஷத்தை அறிவித்தல், சீஷராக்குதல் மற்றும் தங்களுடைய சமுதாயத்தை மாற்றுவதில் காணப்படும் தெரிந்த மற்றும் தெரியாத சவால்களைச் சந்திக்க வைக்கிறார்கள். தலைமுறைகள் கலந்த விசுவாச சமுதாயத்தில் சிறுபிள்ளைகளும், வாலிபர்களும் அன்பு செலுத்தப்பட்டு, மதிக்கப்படவேண்டும் என்று நசரேயத் திருச்சபை தரிசிக்கிறது. இங்கு இவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. அவர்கள் திருச்சபையின் குடும்பத்திற்குள் பல வகையான வழிகளிலும், செயல்முறைகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அங்கு அவர்களுக்கு அவர்களுடைய வயது, வளர்ச்சி, திறன் மற்றும் ஆவிக்குரிய ஈவுகளுக்கு ஏற்றவாறு மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறது. (2009)

**922. போரும் இராணுவ சேவையும்.** உலகம் சமாதானமாக இருக்க வேண்டும் என்பதே இலட்சிய நிலையென்று நசரேயத் திருச்சபை விசுவாசிக்கிறது. உலகத்தின் நாடுகளெங்கும் சமாதானம் நிலவ கிறிஸ்தவ சபையானது தனது செல்வாக்கின் மூலம் எல்லா வழிவகைகளையும் தேடுவதும், சமாதானத்தின் செய்தியைப் பிரகடனப்படுத்த சபையானது தனது அனைத்து அமைப்புக்களையும் பயன்படுத்துவதும், சபையின் பரிபூரணக் கடமையென்று நசரேயத் திருச்சபை விசுவாசிக்கிறது. ஆனாலும்,

இந்த கிறிஸ்தவ இலட்சியங்களுக்கு விரோதமாக, தீய சக்திகளும், தத்துவங்களும் தொடர்ந்து போராடும் ஒரு உலகில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதையும், ஒரு நாடானது தனது இலட்சியங்களையும், தனது சுதந்திரத்தையும், தனது நிலையையும் காத்துக்கொள்ள போராடும்படி தூண்டும் அகில உலக நெருக்கடிகள் உருவாகக்கூடும் என்பதையும் நாம் உணர்கிறோம்.

இவ்வாறு சமாதானம் நிலவும்படி செய்யக் கடமைப்பட்டுள்ள வேளையில், நசரேயத் திருச்சபையானது ஒரு கிறிஸ்தவனின் தலையாயக் கடமை ஆண்டவருக்குரியதே என்பதை அங்கீகரிக்கிறது. எனவே போர்மூளும் அபாயம் நேரிடும்போது இராணுவ சேவையில் பங்கு பெறுவது பற்றி, தனது உறுப்பினர்களின் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்த திருச்சபை முயலவில்லை; ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்திற்கும், கிறிஸ்தவ வாழ்க்கை முறைக்கும் ஏற்ற வகையில் ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் ஒரு குடிமகன் என்ற முறையில் தனது சொந்த நாட்டுக்காகச் சேவை செய்யக் கடமைப்பட்டுள்ளான் என்பதையும் திருச்சபை விசுவாசிக்கிறது.

கிறிஸ்தவ போதனைகள் மற்றும் பூமியில் சமாதானம் பற்றிய கிறிஸ்தவ வாஞ்சையின் விளைவாக நமது உறுப்பினர்களிடையே, இராணுவ சேவையின்சில குறிப்பிட்ட வகைகளுக்கு மனச்சாட்சிபூர்வமாக மறுப்புத் தெரிவிக்கும் தனிப்பட்ட நபர்களும் இருக்கிறார்கள் என்பதையும் நாம் அங்கீகரிக்கிறோம். எனவே அங்கீகரிக்கப்பட்ட அகிம்சை சமய அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு, இராணுவ சேவை சம்பந்தமாக வழங்கப்படும் விதிவிலக்குகளும், மறுபரிசீலனைகளும், நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்களிடையேயுள்ள மனச்சாட்சிபூர்வமான மறுப்பாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென நசரேயத் திருச்சபை உரிமை கொண்டாடுகிறது.

நசரேயத் திருச்சபையானது, அதன் பொதுச் செயலாளர் மூலம் ஒரு பதிவேட்டைத் தயார்நிலையில் வைத்துள்ளது. நசரேயத் திருச்சபையின் உறுப்பினர்கள் என்று தங்களை நிரூபிக்கக்கூடியவர்கள், மனப்பூர்வமான மறுப்பாளர்களாக தமது கருத்துக்களை இப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். (2017)

**923. சிருஷ்டிப்பு.** வேதாகமரீதியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் சிருஷ்டிப்பைக் குறித்த காரியங்களை நசரேயத் திருச்சபை விசுவாசிக்கிறது (“ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்” – ஆதியாகமம் 1:1). அறிவியல்பூர்வமாக சிருஷ்டிப்பின் பண்புகள் எப்படியிருக்கின்றன என்று கூறப்படும் விளக்கங்களை நாம் கேட்க விரும்புகிறோம் ஆனால் தேவனைச் சிருஷ்டிகராக இல்லாமல் இந்தப் பிரபஞ்சத்தின் துவக்கம் மற்றும் மனுக்குலத்தின் துவக்கத்தைக் குறித்துக் கூறும் எந்த அர்த்தம்காணுதலையும் நாம் எதிர்க்கிறோம் (எபிரெயர் 11:3). (1,5.1,7) (2017)

**924. சிருஷ்டிப்பைப் பாதுகாத்தல்.** தேவனுடைய சிருஷ்டிப்பை நாம் ஆழமாக பாராட்டி, அவருடைய கிரியைகளைப் பாதுகாப்பதற்கு உக்கிராணத்துவமான பண்புகளை வெளிப்படுத்தப் பாடுபட வேண்டும் என்று நாம் விசுவாசிக்கிறோம். நம்மைச் சுற்றியிருப்பவைகளின் மதிப்பைக் காத்துக்கொள்ளும் பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு, அதைச் செய்வதற்கான

தனிப்பட்ட மற்றும் சமுதாயரீதியான பொறுப்புகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். (2009) (ஆதியாகமம் 2:15, சங்கீதம் 8:3–9; 19:1–4; 148)

**925. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திற்கு நிரூபணம்.** மறுபிறப்பிற்கும், பரிசுத்த ஆவியானவரின் உள்ளான நிறைவினால் தொடர்ந்து நடைபெறும் பணிகளான இருதய சுத்திகரிப்பிற்கும், முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் பரிசுத்த ஆவியானவரே சாட்சியாக இருக்கிறார் என்று நசரேயத் திருச்சபை விசுவாசிக்கிறது.

முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியானவரின் உள்ளான நிறைவு, ஜென்ம பாவத்திலிருந்து இருதயமானது விசுவாசத்தினால் சுத்திகரிக்கப்படுதல் இவற்றிற்கு அப்போஸ்தலர் 15:8–9 வசனங்களே வேதாகம ஆதாரமாக இருக்கின்றன என்று நாம் உறுதிப்படுத்துகிறோம்: "இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்தஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்: விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்." பரிசுத்த ஜீவியத்தில் காணப்படும் ஆவியின் கனிகள்மூலம் இந்த சுத்திகரிக்கப்பட்ட தன்மை வெளிப்படுகிறது. "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலாத்தியர் 5:22–24).

ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுவதற்கு அடையாளமாக சிறப்பான அல்லது சரீரப்பிரகாரமான நிரூபணம் உண்டு என்றோ ஒரு "ஜெபிக்கும் பாஷை" உண்டு என்றோ கூறுவது வேதாகமத்திற்கும், திருச்சபையின் வரலாற்று நிலைக்கும் விரோதமானது. (2009)

**926. ஆபாச இலக்கியங்கள்.** ஆபாச இலக்கியம் நமது சமுதாயத்தின் நலனையே பாழாக்கிவரும் ஒரு தீமையாகும். மனுக்குலத்தின் மாண்பைக் கீழ்த்தரமாக்குவதும், மணவாழ்வின் பரிசுத்தம் மற்றும் பாலுணர்வின் மேன்மை பற்றிய வேதாகமக் கருத்துக்களுக்கு விரோதமுமான நூல்களையும், படங்களையும் நாம் வெறுத்து ஒதுக்க வேண்டும்.

நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் விசுவாசிக்கிறோம். ஆனால் ஆபாச இலக்கியங்கள் ஆண், பெண், குழந்தைகள் இவர்களின் சுயமரியாதையைக் குலைக்கின்றன; அவர்களை இழிவுபடுத்துகின்றன. பேராசையின் அடிப்படையிலேயே இவை தயாரித்து விற்கப்படுகின்றன; குடும்ப வாழ்க்கைக்கு விரோதமான இவை பல பலாத்கார குற்றங்களுக்கு வழிவகுக்கின்றன; மனதில் நச்சூட்டுகின்றன; சரீரத்தைப் பாழ்படுத்துகின்றன.

தேவனைப் படைத்தவராகவும், மீட்பவராகவும் மகிமைப்படுத்தும் பொருட்டு, எல்லாச் சட்டபூர்வமான வழிகளிலும் ஆபாச இலக்கியங்களை எதிர்க்க

முயலுவதையும், இதில் ஈடுபட்டுள்ளவர்களைக் கிறிஸ்துவுக்குள் அழைத்துவர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுவதையும் நாம் வற்புறுத்துகிறோம். (2009)

**927. ஆடை அணிவதில் கிறிஸ்தவ கண்ணியம்.** பொது இடங்களில் கண்ணியம் குறைந்த ஆடைகளை அணிவது இப்போது அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்பதைக் கவனித்து, கிறிஸ்தவ கருத்தான கண்ணியமானது பரிசுத்தத்தின் வெளிப்பாடாக இருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறோம். பொது இடங்களில் கிறிஸ்தவ கண்ணியத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றும் உந்துதல் அளிக்கிறோம். (2017)

**928. உடல்நலம்.** பரிசுத்த ஆவியானவரின் மறுரூபமாக்கும் வல்லமையைக் கொண்டு எல்லா விசுவாசிகளும் ஆரோக்கியம் மற்றும் முழுமையைச் சமமாகக் கையாள வேண்டும் என்று வேத வசனங்கள் நம்மை அழைக்கின்றன. பெருந்தீனி என்பது உடல், சமுதாயம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கைக் கெட்டுப்போகும் அளவிற்கு உணவு உண்ணும் பழக்கமாக இருக்கிறது. பரம்பரையாகவும், கலாச்சார கட்டுப்பாடுகள் அல்லது சரீரப்பிரகாரமான பாதிப்புகளின் காரணமாக உடல் பருமன் ஏற்படும் என்றாலும், பெருந்தீனி என்பது மற்றொரு பக்கத்தில் தேவனுடைய நல்ல சிருஷ்டிப்பை உண்டு அழிக்கும் வாழ்க்கையாகவும் பார்க்கப்படுகிறது: மனிதர்கள் மற்றும் சமுதாயத்தைப் பாதிக்கும் உணவு, ஆதாரங்கள் மற்றும் உறவுகள். பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கும் நம்முடைய சரீரத்தின் ஆரோக்கியத்தையும் நலத்தையும் காத்துக்கொள்வதும், தேவன் கொடுக்கும் எல்லா ஆதாரங்கள் மற்றும் உறவுகளைக் கொண்டு கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தைச் செய்படுத்துவதின் அழைப்பாகக் கருதப்படுகிறது. (2009)

(நீதிமொழிகள் 23:19–21; மத்தேயு 11:19; 23:25; 1 கொரிந்தியர் 9:27; கலாத்தியர் 5:23; பிலிப்பியர் 3:19; தீத்து 1:8; 2:12; எபிரெயர் 12:16; 2 பேதுரு 1:6)

**929. பொருட்களை வீணாக்குதல்.** பொருட்களை வீணாக்கும் ஒரு சமுதாயத் தீமையாகக் காணப்படுவதால், நசரேயத் திருச்சபை தொடர்ந்து அதைத் தீவிரமாக எதிர்த்து வருகிறது. பொருட்களை வீணாக்குவது பற்றிய போதனையிலும், இது கிறிஸ்தவ அனுபவத்திற்கும் பரிசுத்த வாழ்க்கைக்கும் தகாததென்று பிரகடனம் செய்வதிலும், சபை உறுப்பினர்கள் வெளிப்படையான, தீவிரமாக பங்கேற்க வேண்டுமென்று ஊக்குவிக்கிறோம். (2013)

**930. மதுவை ஒரு சமூகப் பழக்கமாக்குவதை எதிர்த்தல்.** மது அருந்துவதை ஒரு சமூகப் பழக்கமாகக் கருதுவதை ஒழிப்பதற்கு நசரேயத் திருச்சபை தனது ஆதரவை அளிக்கிறது. பொது, தொழில், வணிக, தொழில்நுட்ப, சமூக, தனிப்பட்ட நிறுவனங்களும், அமைப்புகளும், 'மதுக் கலாச்சாரம்' என்ற பெயரில் சமுதாயத்தில் மது அருந்துவது ஏற்றுக்கொள்ளப்படுவதை ஊக்குவிக்கும் விளம்பரங்களுக்கு எதிராக, மதுவை ஒரு சமூகப் பழக்கமாக்குவதை எதிர்க்கும்படி நாம் அவர்களை ஊக்குவிக்கிறோம். (2013)

**931. புகையிலையைப் பயன்படுத்துவதும் விளம்பரம் செய்வதும்.** புகையிலையைப் பயன்படுத்துவது ஆரோக்கியத்திற்குக் கேடு என்றும், அது ஒரு சமுதாய தீமை

என்றும் தனது சபையினர் பிரகடனம் செய்ய வேண்டும் என்று நசரேயத் திருச்சபை வற்புறுத்துகிறது. வரலாற்றுப்பூர்வமான நமது இந்தக் கொள்கை நாம் நமது சரீரத்தைப் பரிசுத்த ஆவியானவருக்கேற்ற ஆலயமாகக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற கடவுளின் வார்த்தையின் கட்டளையின் அடிப்படையில் அமைந்துள்ளது (1 கொரிந்தியர் 3:16–17; 6:19–20).

எந்த வகையிலும் புகையிலையைப் பயன்படுத்துவதற்கு எதிரான நமது கொள்கைக்கு மருத்துவ கண்டுபிடிப்புகள் ஆதரவளிக்கின்றன; உலகமெங்குமுள்ள அநேக சமுதாய, அரசு மற்றும் சுகாதார அமைப்புகளும் இதையே வலியுறுத்துகின்றன. இது ஒரு கடுமையான ஆரோக்கியக் கேடு என்றும், இதைப் பயன்படுத்துவதால் சரீரத்தில் அநேக பயங்கரமான மற்றும் நிரந்தரமான தீய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றும் செயல்முறையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

புகையிலை மற்றும் அதைப்போன்றே தீமையான மது இவைபற்றிய விளம்பரங்களுக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். இந்த விளம்பரங்கள் இள வயதினரின் மனதைப் பெரிதும் பாதிக்கின்றன என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். எனவே பத்திரிக்கைகள், வெளி விளம்பரங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சியில், புகையிலை, மது பற்றிய விளம்பரங்கள் தடைசெய்யப்பட வேண்டும் என்பதை நாம் ஆமோதிக்கிறோம். (2013)

**932. எச்ஐவி/ எயிட்ஸ்.** 1981ஆம் ஆண்டு துவங்கி நம்முடைய உலகமானது எச்ஐவி/எயிட்ஸ் என்று அழைக்கப்படும் ஒரு கொடிய நோயினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை நினைத்து, கிறிஸ்தவ கருணையுள்ளத்தோடு இந்த நோயைக் குறித்து இன்னும் அதிகத் தகவல்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் பாதிக்கப்பட்டவர்களிடம் தம்முடைய அன்பையும், அக்கறையையும் தெரியப்படுத்த ஒரு வழியை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புவார். (2013)

**933. சமூக வலைதளங்களின் பயன்பாடு.** முதலாவதும் முக்கியமானதுமாக, நாம் இந்தப் பகிரும் கருத்துக்கள் மரியாதையுள்ளவையாக இருக்க வேண்டும். எல்லா தனிப்பட்ட உறவுகளிலும் காணப்படுவதைப்போல, நாம் சமூக வலைதளங்களில் காணப்படும் கருத்துக்கள் நாம் வாழும் பரிசுத்த இருதயத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும் என்று நாம் விசுவாசிக்கிறோம். கிறிஸ்து மற்றும் அவருடைய திருச்சபையின் வெளிப்பாடாகவே சமூக வலைதளங்களில் தங்களுடைய செயல்கள் இருக்கின்றன என்பதை போதகர்களும், சாமானியர்களும் உணர வேண்டும். அது தங்களுடைய சமுதாயத்தில் தாங்கள் கொண்டிருக்கும் ஊழியத்தை எப்படிப் பாதிக்கிறது என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும். நம்முடைய செயல்கள் ஜீவனை அளிப்பதாகவும், உறுதியளிப்பதாகவும், எல்லா மனிதர்களையும் உயர்த்துவதற்கேதுவானதாகவும் இருக்க வேண்டும். (2017)

(நீதிமொழிகள் 15:4, 15:28, 16:24; பிரசங்கி 5:2–4; மத்தேயு 15:11; கலாத்தியர் 5:13–15; எபேசியர் 4:29; கொலோசெயர் 4:62; 2 தீமோத்தேயு 2:16; யாக்கோபு 3:1–13)

# விசேஷ திருத்தங்களின் அட்டவணை

*2017 பொது மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட மாற்றங்கள் இங்கே எண்களின் வரிசையில் அட்டவணைப் படுத்தப்பட்டிருக்கின்றன.*

| | |
|---|---|
| **முன்னுரை** | |
| | ஊழிய நோக்கம் |
| | மைய மதிப்பீடுகள் மற்றும் |
| | நசரேயத் திருச்சபையின் பண்புநலன்கள் |
| **அமைப்பு முறைமை** | |
| 7 | தொடர்ந்துவரும் கிருபை |
| 8 | மனந்திரும்புதல் |
| 9.2–9.3 | மறுபிறப்பு மற்றும் புத்திர சுவீகாரம் |
| 12 | ஞானஸ்நானம் |
| 13 | கர்த்தருடைய திருவிருந்து |
| 14 | தெய்வீக சுகமளித்தல் |
| 24 | மறைமாவட்ட மாநாடு எல்லைகள் |
| 25 | அமைப்பு |
| | பொது சபை |
| | பிரதிநிதிகள் |
| **25.3.** | பொது மாநாடு கூட்டம் |
| **25.4.** | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பொதுக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை |
| 26 | அமைப்பு முறைமையில் திருத்தங்கள் |
| 27 | விசுவாசக் கோட்பாடுகளில் திருத்தங்கள் |
| **கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த உடன்படிக்கை** | |
| **28.1.** | அடிப்படை கிறிஸ்தவ நல்லொழுக்கம் |
| **29.6.** | போதை தரும் கஞ்சா, மாத்திரைகள், மற்றும் புகையிலை |
| 31 | மனித வாழ்க்கையில் பாலுணர்வு மற்றும் திருமணம் |
| **32.5.** | ஊழிய பிரிவுகளுக்குப் பொறுப்பு வகித்தல் |
| **உள்ளூர் சபை ஆளுகை முறைமை** | |
| 104, 104.2 | சபை சொத்து குறித்த தடைகள் |
| 109.2, 112 | உள்ளூர் திருச்சபை உறுப்பினர் பதிவுகள் |
| 115.6 | குருத்துவ ஆதரவளிப்பது சம்பந்தமான மாற்று திட்டங்கள் |
| 116 | போதகர்கள் மற்றும் உதவி போதகர்களுக்கு பேரு கால விடுமுறை |
| 121–121.1 | துணைப் போதகர்கள் |
| 123.1 | சபை/குருத்துவ மறுஆய்வு |
| 123.4–123.5 | வழக்கமான சபை/குருத்துவ மறுஆய்வு |

| | |
|---|---|
| 125.1–125.3 | விசேஷித்த சபை/குருத்துவ மறுஆய்வு |
| 127 | உள்ளூர் சபை நிர்வாகக் குழு உறுப்பினர்கள் |
| 128 | உள்ளூர் சபை நிர்வாகக் குழு கூட்டங்கள் |
| 129.8 | போதகர் பெறும் ஊதியம் மற்றும் பயன்கள் |
| 130 | உலக சுவிசேஷ நிதியைத் திரட்டுதல் மற்றும் செலவிடுதல் |
| 153.1 | அங்கீகரிக்கப்பட்ட அருட்பணி விசேஷ நிதி |
| 154.2–154.3 | பிற விசேஷமான காணிக்கைகள் |
| **மறைமாவட்ட ஆளுகை முறைமை** | |
| 201 | மறைமாவட்ட மாநாட்டின் உறுப்பினர்கள் |
| 204 | மறைமாவட்டக் கூடுகைகள் |
| 205.15 | மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் உறுப்பினர்கள் |
| 205.17 | மறைமாவட்ட ஊழிய குழு தேர்ந்தெடுக்கப்படுதலும், ஒழுங்குப்படுத்தப்படுதலும் |
| 210 | மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் கடமைகள் |
| 211.5 | நடத்தப்பட்ட சபை/குருத்துவ மறுஆய்வுகளின் அறிக்கை |
| 211.20 | மீட்புக் குழுவை நியமித்தல் |
| 211.22 | மறைமாவட்டக் கண்காணிப்பாளரின் கடமை – நிதி இலக்கை அடையும்படி உள்ளூர் சபைகளுக்கு ஊக்கமளித்தல் |
| 217 | மறைமாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் அவருடைய குடும்பத்தின் நிதி பொறுப்புடைமை |
| 225.5 | குருத்துவ தவறான நடத்தையில் சம்பந்தப்பட்டிருக்கும் போதகர், குடும்பம் மற்றும் சபைக்கு ஏற்ற ஒரு திட்டத்தை உருவாக்குதல் |
| 225.7 | மறைமாவட்ட ஆலோசனைக் குழுவை உருவாக்குதல் |
| 229 | மறைமாவட்ட குருத்துவ அனுமதிச் சான்றுக் குழுவின் உறுப்பினர்கள் |
| 231.8 | ஒரு போதகரின் ஓய்வுறவு |
| 245.3–245.4 | மறைமாவட்டத்தில் ஊதியம் பெறும் துணைப் போதகர்கள் |
| **பொது ஆளுகை முறைமை** | |
| 301 | பொது மாநாட்டின் உறுப்பினர்கள் |
| 301.1 | பொது மாநாட்டின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக் கணக்கு |
| 301.4 | பொது மாநாட்டின் பிரதிநிதியாகப் பணியாற்ற முடியாத ஓய்வுபெற்ற போதகர் |
| 305.2 | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பொதுக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை |
| 306 | பொதுக் கண்காணிப்பாளர்களின் கடமை |

| | |
|---|---|
| 317.10 | உள்ளூர் திருச்சபைகள் உலக சுவிசேஷ நிதியைத் திரட்டுதலில் இலக்கு மற்றும் கடமைகள் |
| 326.1 | பொதுச் செயலாளரின் கடமை |
| 333.4 | பொது நிர்வாகக் குழுவில் அகில உலக NMI பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல் |
| 333.5 | பொது நிர்வாகக் குழுவில் அகில உலக SDMI பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல் |
| 334 | பொது நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பணிக்காலத்தைக் குறித்தக் கட்டுப்பாடுகள் |
| 335 | பொது நிர்வாகக் குழுவின் கடமைகள் |
| 335.4 | பொது நிர்வாகக் குழுக் கூட்டங்கள் |
| 335.6–335.7 | உலக சுவிசேஷ நிதி செயல்முறை, நிதி இலக்குகள் மற்றும் கடமைகள் |
| 338 | நசரேயத் திருச்சபை நிறுவனத்தின் துணை நிறுவனங்கள் |
| 339 | நசரேய புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் நோக்கம் |
| 344.2 | அகில உலக நசரேய NMI இயக்குனரை நியமித்தல் மற்றும் தேர்ந்தெடுத்தல் |

**ஊழியம் மற்றும் கிறிஸ்தவ சேவை**

| | |
|---|---|
| 500 | போதகரின் அழைப்பு மற்றும் தகுதி நிலைகள் |
| 502 | அபிஷேகம் பெறுதலின் இறையியல் கோட்பாடு |
| 503.1 | சாமானியர்களின் ஊழியம் |
| 507 | சாப்லெய்ன் |
| 513 | அருட்பணியாளர் |
| 515.4 | கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் என்னும் சாக்கிரமெந்துகளைக் கொடுத்தல் |
| 516.9 | மறைமாவட்ட ஊழிய நிதியை அனுப்புதல் |
| 518 | போதகர் மற்றும் அவருடைய குடும்பத்தின் நிதி பொறுப்புடைமை |
| 525 | தாய் சபையோடு இணைக்கப்பட்ட சபையின் போதகர் |
| 528–528.2 | சிறப்பு ஊழியம் |
| 531.1 | உள்ளூர் உரிமம் பெற்ற போதகர்களின் பின்னணியைச் சோதித்தல் |
| 532.1–532.2 | மறைமாவட்ட உரிமம் பெற்ற போதகர்களின் கல்வித் தேவை |
| 532.4 | அபிஷேகம் பெற விரும்பாத மறைமாவட்ட உரிமம் பெற்ற போதகர்களின் கல்வித் தேவை |
| 532.7 | பொறுப்புக் கொடுக்கப்பட்ட மறைமாவட்ட உரிமம் பெற்ற போதகர்களின் சலுகைகள் |

| | |
|---|---|
| 532.8 | மறைமாவட்ட உரிமம்பெற்ற போதகர்களின் ஆண்டு அறிக்கை |
| 535 | நசரேயத் திருச்சபையோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ள விருப்பமுள்ள, வேறு சுவிசேஷ சபைப் பிரிவுகளைச் சேர்ந்த அபிஷேகம் பெற்ற போதகர்கள், தங்கள் அபிஷேகச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதிகள் |
| 536.2 | ஓய்வுபெற்ற போதகர்கள் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதிலிருந்து விடுவிக்கப்படுதல் |
| 538–540.12 | சான்றிதழ் வரையறை மற்றும் செயல்முறைகள் |
| **நீதி நிர்வாகம்** | |
| 601.2 | தவறாக நடத்தப்படுதல் குறித்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தல் |
| 603–603.2 | சபையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் மற்றும் ஒப்புரவாகுதல் |
| 605.3 | சிறுபிள்ளைகளிடம் பாலியல்ரீதியாகத் தவறாக நடக்கும் சாமானியர்களின் மீதுள்ள கட்டுப்பாடுகள் |
| 616.1 | விசாரணைக்காகத் தயாராகுவதற்கு ஆகும் செலவுகள் |
| 616.2 | சாமானியன் அல்லது போதகர் மேல்முறையீடு செய்யக்கூடிய உச்சநீதிமன்றம் |
| **சாக்கிரமெந்துகள் மற்றும் வழிபாட்டு முறைமை** | |
| 700 | கர்த்தருடைய இராப்போஜனம் |
| 701 | விசுவாசிகளின் ஞானஸ்நானம் |
| 704 | சபை உறுப்பினர்களை வரவேற்றல் |
| 705 | திருமணம் |
| **பிற்சேர்க்கை** | |
| 907 | கடன் |
| 908 | வேதாகமச் சங்கங்கள் |
| 915 | பாகுபாடுகள் |
| 919 | திருச்சபையும் மனிதச் சுதந்திரமும் |
| 920 | மனிதச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் பிரகடனப்படுத்துதல் |
| 923 | சிருஷ்டிப்பு |
| 933 | சமூக வலைதளங்களின் பயன்பாடு |

## நீக்கப்பட்ட பத்திகளின் அட்டவணை

36–99, 160–199, 247–299, 308–313, 347–399, 404–499,
541–599, 617–699, 710–799, 800–809, 821–899, 934–999